தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1993 அக்டோபர் 26, செவ்வாய்க்கிழமை.

ஐப்பசி 10, ஸ்ரீமுக— திருவள்ளுவர் ஆண்டு 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''.

இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளியனவாம். சொல்லியபடி செய்து முடித்தல் தான் அரியனவாம்.

1. வினாக்கள்— விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 1, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு நிதியமைச்சர்.

I—

ஏக்கல்நத்தத்தில் வாக்குச்சாவடி.

* 20472— திரு. கே. முனிவெங்கடப்பன்:

மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், கிருட்டினகிரி ஒன்றியம், நாரனப்பல்லி ஊராட்சி மலைமேல் உள்ள ஏக்கல்நத்தம் கிராம மக்கள் 7 கி.மீ. நடந்துவந்து நாரலப்பல்லியில் வாக்கு அளிக்க வேண்டியிருப்பதால், அங்கேயே வாக்குச்சாவடி அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தர்மபுரி மாவட்டம் பின் தங்கிய மாவட்டமாக இருந்து வந்தது. இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி ஏற்ற பிறகு, பின் தங்கிய மாவட்டமாக இருக்கின்ற அந்த மாவட்டம், பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும், கல்வியில் முன்னேற வேண்டும் என்பதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, தனி கவனம் செலுத்தி இன்றைக்கு அந்த தர்மபுரி மாவட்டத்திற்கு பல தொழிற்சாலைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு மேலாக பல கல்லூரிகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஏறக்குறைய 51 ஆரம்ப பள்ளிகளைக் கொடுத்திருக்கிறார்கள். 6 உயர்நிலைப் பள்ளிகளைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி வாக்குச்சாவடி ஆரம்பிப்பது பற்றியது.

திரு. கே. முனிவெங்கடப்பன் : அந்த அளவிற்கு பல வகைகளில் கல்வி நிலையை வளர்ச்சியடையச் செய்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், மிகவும் பின் தங்கிய மாவட்டமாக இருக்கின்ற தர்மபுரியில், கிருட்டினகிரி தொகுதியிலே அந்த ஏக்கல்நத்தம் என்ற கிராமமானது, மலை மேலே இருக்கின்ற கிராமமாகும். அங்கேயிருந்து வாக்குச்சாவடிக்கு வர வேண்டுமென்றால், 7 கிலோ மீட்டர் நடந்து வர வேண்டும். சாதாரணமாக தள்ளாத வயதில் இருக்கின்ற பெரியோர்கள் அத்தனை தூரத்தைக் கடந்து வருவது என்பது சாதாரண காரியமல்ல. அதற்கு மேலாக அங்கே சாலை வசதி போடுவதற்கும் முடியாத அளவிற்கு மிகக் குறுகிய அளவிற்கு 'ஷார்ப்பாக' இருக்கின்ற ஒரு மலைப்பகுதியாகும். ஆகவே அங்கேயே வாக்குச்சாவடியை அமைத்தால் அங்கேயிருக்கின்ற வாக்காளப் பெருமக்களுக்கு ஏதுவாக இருக்கும். ஆகவே வருங்காலத்தில் அது பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதற்கும், அங்கே கல்வி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, மேம்பாட்டு வளர்ச்சிகளைச் செய்வதற்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தமே இல்லை. ஆனால் இந்த வினா கல்நத்தம் என்கின்ற ஊரிலே வாக்குச்சாவடி வைப்பதைப் பற்றி. ஏக்கல் நத்தம் என்ற ஊரிலே மொத்த வாக்காளர்கள் 348 பேர் தான் இருக்கிறார்கள். மேற்கொண்டும் அந்த ஊருக்குச் செல்வதற்குப் போதுமான வசதிகள் இல்லை. வசதி இல்லை

1993 அக்டோபர் 26]

என்பது மட்டுமல்லாமல், ஜீப் போன்ற கார்கள் எல்லாம் அங்கே செல்வதற்கு வசதிகள் இல்லை. அப்படியே சென்றாலும்கூட, அங்கே அரசாங்கக் கட்டிடம் என்ற வகையில் சாவடி வைப்பதற்கு ஒரு இடமும் அங்கேயில்லை. ஆக இப்படிப்பட்ட காரணங்களினாலே பஸ்ஸிலே போவது என்றாலும், பக்கத்திலே இருக்கின்ற ஒரு கிராமத்திலே போய் இறங்கி, 4 கிலோ மீட்டர் நடக்க வேண்டும். ஆனாலும்கூட, அந்த இடத்திலே வைக்கவேண்டுமென்று சொன்னால், இந்த வசதிகள் எல்லாம் வந்தால்தான் செய்ய முடியும். அதற்கான சாலை வசதிகள் போன்றவைகளைச் செய்வதற்கான முயற்சிகளிலே ஈடுபடலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்ததற்குப் பிறகு, சாலை வசதி இருந்து, போக்குவரத்து சரியாக ஆனாலும்கூட, அங்கே கட்டிட வசதி மற்றவைகள் எல்லாம் ஏற்படுதல் வேண்டும். அப்படியே ஏற்பட்டு, அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகினாலும், தேர்தல் ஆணையம் தேர்தல் சாவடிகள் வைப்பது குறித்து, என்ன வழிமுறைகள் கூறுகின்றது என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது வந்ததற்குப் பிறகு இந்தச் சாவடிகள் எல்லாம் அமைப்பதற்கான முறைகள் மேற்கொள்ளப்படும். அப்படியே ஏக்கல் நத்தத்தில் ஒரு சாவடி வைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டாலும், தேர்தல் ஆணையத்தினுடைய அனுமதி பெற்றுத்தான் வைக்க வேண்டி வரும். அதற்கான முயற்சிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்த அடிப்படை வசதிகளை எல்லாம் செய்து தருகின்ற சூழ்நிலையும் ஏற்பட வேண்டும். குறைந்தது ஒரு சாவடிக்கு 700 வாக்காளர்களாவது இருக்க வேண்டுமென்று இப்போது தேர்தல் ஆணையம் விதிமுறைகள் வைத்திருக்கிறது. வருங்காலத்திலே என்ன வழிமுறைகள் தருகின்றது என்பதைப் பொறுத்து, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 2, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு சட்ட அமைச்சர்.

2—

திருச்சி, கோயமுத்தூர், மதுரை நகரங்களுக்கு மக்கள் நீதிமன்றத்தை Lok Adalat விரிவுபடுத்துதல்.

* 17493—திருமதி. கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு விபத்துக்களில் பாதிக்கப்படுவோருக்கு நஷ்டஈடு அளிப்பதற்கான பிரச்சினைகளில் நீதிமன்றத்திற்குச் செல்லாமல் அதற்குமுன்பே தீர்வு காணும் மக்கள் நீதிமன்றம் (Lok Adalat திருச்சி, கோவை, மதுரை உள்ளிட்ட பிற நகரங்களுக்கும் விரிவு படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈட்டுறுதி செய்யப்பட்ட வண்டிகள் சம்பந்தமான மோட்டார் விபத்தில் ஏற்படும் காயங்கள் தொடர்பான உரிமைக் கோரிக்கை களை, நீதிமன்றங்களுக்குச் செல்வதற்குமுன் தீர்க்கப்படுவதற்கான திட்டத்தை தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து, சென்னை மற்றும் செங்கல்பட்டு—டாக்டர் எம்.ஜி.ஆர். மாவட்டங்களில் பரீட் சார்த்த முறையில் செயற்படுத்தி வருகிறது.—இத்திட்டத்தை இதர மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தும் செயற்குறிப்பு, தமிழ் நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவிடம் தற் பொழுது இல்லை.

முற்பகல் 10-05

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பான வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காணும் பொருட்டு நீதிமன்றத்திற்கு செல்வதற்கு முன்பாக, லோக் அதாலத் என்கிற மக்கள் நீதிமன்றத்திற்கு சென்று உடனடியாக அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் விதத்தில், சென்னையிலும் செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்திலும் அந்த மக்கள் நீதிமன்றம் இருப்பதாக, செயல்படுவதாக மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களுடைய நலன்களையும் கருதி, இந்த மக்கள் நீதிமன்றம், திருச்சி, கோவை, மதுரை ஆகிய இடங்களுக்கும் விரிவு படுத்தப்பட வேண்டும். அது இந்த வருடம் இயலவில்லை என்றாலும், அடுத்த வருடத்திலாவது அவைகளை விரிவு செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புவதைப் போலத்தான், சென்னை, செங்கற் பட்டு—டாக்டர் எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் மட்டும் அல்ல, தமிழகத்தில் எங்கும் இது போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் விரும்புகிறார்கள். அந்த நோக்கத்தோடு தான் அண்மையில் Tamil Nadu State Legal Aid and Advisory Board என்ற அமைப்பினுடைய சட்ட திட்ட திருத்தங்களில் ஒரு மாறுதலை கொண்டு வர வேண்டும் என்று அரசு யோசித்து, அதற்கு அனுப்பியது. The Chairman of the Tamil Nadu State Legal Aid and Advisory Board is His Excelency the Governor of Tamil Nadu.

அதனுடைய தலைமை மேதகு ஆளுநர்.

1993 அக்டோபர் 26]

The Chief Justice, High Court, Madras is the Patron-in-chief. The Minister for Law and court, Government of Tamil Nadu, is a patron.

சட்ட அமைச்சரும் தலைமை நீதிபதியும் அதனுடைய, பேட்ர்னாக இருக்கிறார்கள். இந்த அமைப்பு 1977வது ஆண்டு கவர்னருடைய ஆட்சியின் போது, தி.மு.க. ஆட்சி அகற்றப்பட்டு கவர்னருடைய ஆட்சி வந்தபோது, இந்த லீகல் எய்ட் போர்டு உருவாக்கப்பட்டது. போர்டினுடைய சட்டமும் உருவாக்கப்பட்டது. அந்தச் சட்டத்தின்படி இன்றைய நிலையில், அரசாங்கத்திலிருந்து பணம் கொடுக்கின்ற ஒரு பணி மட்டுமே இருக்கிறது. ஒரு கோடி ரூபாயை இதற்காக கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அந்தப் பணம் எப்படி செலவு செய்யப்படுகிறது, அல்லது அதனுடைய சட்ட திட்டங்கள் என்ன என்று கேட்பதற்கு அதனுடைய சட்ட திட்டத்திலே இடம் இல்லை. effective participation of the Government நேரிடையாக ஆக்கபூர்வமாக செயல்பட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல அந்த வழக்குகளை எல்லாம் பிரிவு செய்யக்கூடிய, அந்த ஆலோசனைகளை சொல்லக்கூடிய அதிகாரம் effectiv d participation and Effective Control — இன்றைக்கு தமிழக அரசுக்கு இல்லாத காரணத்தாலே, இரண்டு மாதங்களுக்கு முன்பு ஆழ்ந்து யோசித்து மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு ஒரு தீர்மானத்தை மாண்புமிகு கவர்னருடைய தலைமையிலே நடைபெற்ற அந்தக் கூட்டத்திற்கு கொண்டு போனபோது அதற்கு அங்கே ஆட்சேபணையும் தெரிவிக்கப்பட்டது. அது, d fer செய்யப்பட்டிருக்கிறது. விரைவிலே மீண்டும் கவர்னர் அந்தக் கூட்டத்தை கூட்டுகிற நேரத்தில், இது போன்ற சில குறைகள் இந்தச் சட்டத்திலே இருக்கிறது என்று சொல்லி அவைகளையெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

முற்பகல் 10,

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மோட்டார் வாகன விபத்துக்களால் ஏற்படும் அந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்காக நீதிமன்றத்திற்கு செல்வதற்கு முன் மக்கள் நீதிமன்றத்திற்குச் செல்லுகின்ற அந்த வேளையிலே அந்த மக்கள் நீதிமன்றத்தில் எத்தனைக் காலத்தில் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுகிறது ? இந்த மக்கள் நீதிமன்றத்திலும் கிட்டத்தட்ட ஒரு வருடம் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாமல் இருப்பதாக அறிகிறோம். எனவே இவற்றிற்கும் விரைவில் தீர்வு காண்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நீதிமன்றம் லோக் அதாலத் என்பது அந்த வழக்குகளிலே சம்பந்தப்பட்டவர்கள்

மன இசைவோடு தீர்வு காணுகின்ற ஒரு முறையாகும். இதனை சட்டம் கட்டுப்படுத்த முடியாது. பாதிக்கப்பட்டவர்கள் இரண்டு பேரும் இசைந்து ஒரு முடிவுக்கு வர கன்சிலியேஷன் எஃபர்ட் தான் இதைச் செய்ய முடியுமே தவிர இப்படித்தான் நடக்க வேண்டும் என்று லோக் அதாலத் சொல்ல முடியாது என்ற காரணத்தினாலேதான் இது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொல்கின்ற போது சென்னையிலும், எம்.ஜி.ஆர். செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் இந்த லோக் அதாலத் செயல்படுவதாக குறிப்பிட்டார்கள். வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் கூட கடந்த 7 ஆண்டு காலத்திற்கு முன்னாலேயே இதுபோன்ற லோக் அதாலத் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, அவ்வப்போது லீகல் எய்டு மூலமாக பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறார்கள். லோக் அதாலத் மூலமாக காம்ப்ரமைஸ்ஸாக ஆகி ஒரு டிக்ரி கொடுத்து அதற்கான செயல்பாடுகள் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இப்போதெல்லாம் இந்த விபத்துக்களிலே, 7, 8 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த விபத்துக்கள் கூட இன்னும் ஜட்ஜ்மெண்ட் ஆகாமல் இழுபறியில் இருந்துகொண்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு போகாமல் இருக்கிறது. ஆகவே, லீகல் எய்டு நினைத்தால் இப்போது கூட மாவட்டங்களில் ஆங்காங்கு லோக் அதாலத் மீட்டிங்கிலே ரிடையர்டு ஜட்ஜை வைத்துக்கொண்டும், இருக்கக் கூடிய ஜட்ஜ்களை வைத்துக் கொண்டும் செயல்படுத்துகிறார்கள். அந்த முறையிலே இதை செயல்படுத்த அரசு முன் வருமா? ஆனால் ஏற்கனவே எஃபக்ட்டிவ் கன்ட்ரோல் இல்லை., எஃபக்ட்டிவ் ரெப்ரெசன்டேசன் இல்லை என்று சொன்னார்கள், அதை மாற்றுவதற்காக தகுந்த சட்டமுன்வடிவை இந்த அவையிலே கொண்டுவர அமைச்சர் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:

Tamil Nadu State Legal Aid Advisory Board

என்பது ரிஜிஸ்ட்டர்டு சொசைட்டி எனவே அங்கு தான் இந்த பொது உறுப்பினர்களை வைத்துக்கொண்டு திருத்தங்களைக் கொண்டுவர முடியுமே தவிர இந்த மாமன்றத்திற்கு அந்த அதிகாரம் இல்லை என்ற காரணத்தினாலே அங்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அநேகமாக மேதகு ஆளுநர் அவர்கள் துரிதமாக அதனை கூட்டி இதற்கு ஒரு தீர்வு காண்பார் என்று மனதார நான் நம்புகிறேன்.

1993 அக்டோபர் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 3 திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்,

நில அளவை மேம்பாட்டுத் திட்டம்.

3—

*11097—திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1982-ல் நடந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டம் Tamll Nadu Servey and Boundaries Act 1923. சட்டம் அடிப்படையில் நடத்தப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் நில அளவைக் கட்டணம் அச்சட்ட விதிமுறைப்படி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நில அளவை மற்றும் எல்லைகள் சட்டம் 1923-இல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின்படி நில அளவைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1923ஆம் ஆண்டைய நில அளவை எல்லைகள் சட்டத்திலே கூறியுள்ளபடி 1982ஆம் ஆண்டிலே நில அளவு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் 1923ஆம் ஆண்டு சட்டப்படி நடைபெற்ற அந்த நில அளவையிலே கிராமங்களிலே முன்கூட்டியே டாம்-டாம் முன்பே போடப்பட்டு கிராம அதிகாரிகளிடத்திலே நிலத்தின் உரிமையாளர் தங்களுக்குள்ள ஆவணங்களைக் காண்பித்து கிராம அதிகாரிகள் முன்னிலையில் சர்வே அதிகாரிகள் வந்து நிலத்தை அளந்து கல்லுக்கான கூலி கிராம பணியாளர்களுக்கான கூலி இவை போன்றவற்றையெல்லாம் நிர்ணயித்து அவர்கள் கட்டணம் வசூல் செய்தார்கள். ஆனால் 1982ஆம் ஆண்டிலே நடைபெற்ற அப்-டேடிங் சர்வேயிலே முறைப்படி கிராம அதிகாரிகள் அதிலே இல்லாமல் ரெவின்யூ இலாக்கா சம்பந்தம் இல்லாமல் சர்வே இலாக்கா மட்டும் அந்த நில அளவை செய்து பல தவறுகள் அதிலே ஏற்பட்டிருக்கின்றன. அந்த வரி விதிப்பு கூட 31— 12— 1983 முடிய

சர்வே கணக்குகள் முடிக்கப்பட்ட கிராமங்களுக்கு 100% சர்சார்ஜும் 1—1—1984 முதல் கணக்குகள் சரி செய்யப்பட்ட கிராமங்களுக்கு 300% சர்சார்ஜும் என்று வரி விதிக்கும் முறையில் பல தவறுகளும் சர்வே செய்வதில் பல தவறுகளும் நடந்து இருக்கின்றன. எனவே, அந்த முறைப்படி தவறு வருவதால் அந்த சர்வே முறையை மாற்றி அந்த 1923 ஆம் ஆண்டு சட்டப்படி ஒரு புதிய சர்வேவுக்கு அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபோது 2 முறையைச் சொன்னார்கள். பண வசூல் செய்வதில் தவறு நடந்து விட்டது என்று சொன்னார்கள். அடுத்து, 1923 ஆம் ஆண்டு சட்டப்படி சர்வே செய்யப்படுமா என்று கேட்டார்கள். ஆனால் சர்வே செய்த பிறகு 5 முறை ஜமாபந்தி நடந்திருக்கிறது. 5 முறை ஜமாபந்தி நடந்திருக்கிறது என்றால், அங்கே இருக்கிற விவசாயிகள் தங்களுடைய குறைகளைப் போய் சொல்லி நிவர்த்தி பெறவேண்டும் என்பதற்காகத்தான். 5 முறை ஜமாபந்தி நடந்திருக்கிறது என்றால் அங்கே அதிகமான குறைகள் வரவில்லை என்று தான் அர்த்தம். அப்படி இருந்தாலும் கூட 28—1—1992ல் தமிழக முதலமைச்சருடைய உத்தரவுப்படி ஒரு ஸ்பெஷல் டிரைவ், ஒரு சிறப்பு முயற்சியாக இதைச் செய்ய வேண்டும் என்பதற்காக எங்காவது தவறு நடந்து இருக்கும். என்றால் 1923 ஆம் ஆண்டு முறையை விட இபபோது என்ன செய்கிறோம் என்றால் எல்லா ஊர்களிலும் தண்டோரா, டாம், டாம் போட்டு எல்லோரையும் கூட்டிவைத்து அந்த ஊரிலுள்ள கட்சிக்கு அப்பாற்பட்ட பெரியவர்களின் முன்னிலையில் கூட்டி வைத்து இந்த ஊருக்கு நில அளவைக்கு இந்த நாள் வருகிறோம்; நீங்கள் எல்லாம் உங்களுடைய நிலத்தைக் காண்பிக்க வேண்டும்; யாருடைய நிலம் என்று காண்பிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். நேரிடையாக நான் பலயிடங்களில் இது நடக்கிறதா, நடக்கிறதா என்று பார்த்தேன். அதிலும் தவறு வந்தாலும் கூட இப்போது ஸ்பெஷல் டிரைவ் சிறப்பு ஆய்வு செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு உத்தரவுப் போட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, அதுவும் ஒவ்வொரு குறு வட்டத்திலும், பிர்க்காவிலும் 5, 5 கிராமத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வருவாய் குறு வட்ட ஆட்சிய 5 கிராமங்களைப் போய்ப்பார்க்க வேண்டும்; மண்டல துணை வட்டாட்சியர் 5 கிராமங்களைப் போய்ப்பார்க்க வேண்டும் வட்ட ஆட்சியர் 5 கிராமங்களைப் போய்ப் பார்க்க வேண்டும் ; கோட்டாட்சியர் 5 கிராமங்களைப் போய்ப் பார்க்க வேண்டும்; மாவட்ட வருவாய் அதிகாரி 5 கிராமங்களைப் போய்ப் பார்க்க

1993 அக்டோபர் 26]

வேண்டும், மாவட்ட ஆட்சியர் 5 கிராமங்களைப் போய்ப் பார்க்க வேண்டும். இப்படியெல்லாம் பார்க்க வேண்டும் என்று இன்றைக்குச் சொல்லியிருக்கிறோம், தவறு நடந்தால் அதை சரி செய்ய சொல்லியிருக்கிறோம். அப்படி இருந்தாலும் கூட பல முறை செய்திகள் மூலமாக நான் சொல்லியிருக்கிறேன், எங்கெங்கே தவறு நடந்திருக்கிறது, எங்கெங்கே குறைபாடு இருக்கிறது, அதை நீங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் கொடுங்கள், அவர்கள் சரி செய்து கொடுப்பார்கள் என்று. இல்லாவிட்டால் என்னிடத்தில் கொடுங்கள் நான் நேரிடையாகப் பார்க்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். விவசாயிகளுக்கு எந்தவிதமான கஷ்டமும், தொல்லையும் வரக்கூடாது என்பதற்காக இந்த அரசு முனைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே வரி வசூலைப் பற்றிச் சொன்னார்கள், அங்கே நிலத்தை அளப்பதற்கு ஆகும் செலவு, போடுகிற கல், கல்லினுடைய கூலி, 1923-ல் ஒரு கல்லினுடைய விலை காலணா இருந்திருக்கும் அல்லது அரையணா இருந்திருக்கும் அப்போது இருந்த அந்த லாங்குவேஜில் நான் சொல்கிறேன். ஆனால் இன்றைக்கு கல்லினுடைய விலை கூடி இருந்திருக்கும். ஆகவே, இன்றைக்குள்ள கல் விலைக்கு வாங்கியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் மிகவும் சிரமப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டும், நிலத்தினுடைய உரிமையை அவர்கள் நல்ல முறையில் பராமரிக்கும் பொருட்டும் தமிழக அரசு இப்போது பட்டா பாஸ் புத்தக முறையை அமலாக்கி வருகிறது. அதை விவசாயிகள் ஒரு வரப்பிரசாதமாக வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த பட்டா பாஸ் புத்தகம் கொடுக்கிறபோது அந்த கிராம அதிகாரிகள் அந்த அப் டேட்டிங் சர்வே என்று 1982 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட அதன்படி கொடுக்கிறார்களா அல்லது அவர்களுக்கு ஏற்கனவே இருக்கிற நில அளவைக்கான உரிமையின்படி உள்ள ஆவணங்களின் அடிப்படையில் கொடுக்கிறார்களா என்று இல்லாமல் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதிரியாக அதை அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அப் டேட்டிங் சர்வேயில் ஒரு மாதிரியும், விவசாயிகளுக்கு இருக்கின்ற உரிமை ஆவணங்களில் ஒரு மாதிரியுமாக இருக்கின்ற இடத்தில் அவர்களை இப்போது அலைக்கழித்துக் கொண்டிருக்கின்ற அந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அப்டேட்டிங் சர்வே மற்றும் ஆவணங்கள் சம்பந்தமான முறையான ஆய்வுகளைச் செய்து இந்த பட்டா பாஸ் புஸ்தகம் வழங்குவதிலே மீண்டும் விவசாயிகள் கோர்ட்டுக்கு அலையக்கூடிய நிலைமைகள் உரு

வாகாத வண்ணம், அதை அவசரப் படுத்தாமல் நல்ல முறையிலே பரிசீலித்து அந்த பட்டா பாஸ் புஸ்தகங்களை வழங்குவாரே யானால், நிச்சயமாக அது விவசாயிகளுக்கு எதிர்காலத்திலே தலைமுறை தலைமுறையாக ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இதிலே உள்ள இரண்டு முறையில் எந்த முறையைக் கடைபிடித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த பட்டா பாஸ் புஸ்தகத்தை கொடுக்கச் சொல்லி யிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஒன்றைச் செய்தால் அதை நன்றாகச் செய்ய வேண்டும் என்று நினைக்கக் கூடிய அரசு. அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிக்க இந்த அரசு விரும்ப வில்லை. அதை எண்ணித்தான் நிலவுடைமை உரிமைப் பதி வேட்டைக் கொடுக்கிறபோது எல்லோரிடத்திலும் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். இந்த அரசு தெளிவாகச் சொல்லி இருக் கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு ஊரில் 100 பட்டாதாரர்கள் இருக்கிறார்கள். 100 பட்டாதாரர்களுக்கு கொடுத்துவிட வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. 100 பட்டாதாரர்களுக்கும் நீங்கள் இந்த பாரத்தைக் கொடுங்கள். பதிவு பண்ணிக் கொடுப்பார்கள். அதைக் கொடுத்த பிறகு அது சரியா இல்லையா என்பது தெரியாமல் உடனே பட்டா பாஸ் புஸ்தகத்தில் எழுதக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். அரசுக்குச் செலவு அதிகமாக வந்தாலும் சரி, காலதாமத மானாலும் சரி, இதை எழுதக்கூடாது என்று சொல்லி இருக் கிறேன். நகலை எழுதி அந்த ஊரிலே எல்லோருடைய பார்வைக்கு வைத்து விடுவது ; நகலை எழுதி அந்த ஊர் கிராம அதிகாரிகள் வைத்து விட்டாலும் கூட, அதிலே எது எது சரி என்று சொன் னாலும், 100இல் 20 தவறு வந்துவிட்டது. 80இல் தவறு வர வில்லை என்றாலும் கூட நான் அந்த 80-ஐயும் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். இன்னமும் நன்றாக இருக்க வேண்டு மென்பதற்காக, கன்பர்மேஷன் சரியாகச் செய்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்லியிருக்கிறோம். 100-இல் 80 தவறு இல்லை என்றாலும், 80 பட்டாவை கொடுக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு அதில் 50-ஐ கொடுத்து விடுங்கள், 50-ஐ கொடுத்துவிட்டால் அதை வாங்கிப் பார்ப்பார்கள். அதைக் கொடுத்துவிட்டு, அடுத்த கிராமத்தில் 50 கொடுங்கள். அதே மாதிரி அடுத்த கிராமத்தில் 50 கொடுங்கள் 50 பர்சன்ட் கொடுங்கள். அப்படி ஒரு 10 கிராமங்களுக்குக் கொடுத்துவிட்டால். முதலில் கொடுத்த கிராமங்களில் ஏதாவது தவறு நடந்தால் அதை அவர்கள் சொல்லுவார்கள். மீண்டு அந்த தவறு ஏற்படாமல் திருத்துவதற்கும் மேலும் கொடுக்க

[1993 அக்டோபர் 26]

போவதை ஒழுங்காகக் கொடுப்பதற்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென்பதற்காக இதை மிகவும் கவனமாக, தவறு இல்லாமல் செய்வதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொள்கிறது. எங்கெங்கே எப்பொழுது தவறு நடந்தாலும் எல்லோருமே சட்டமன்ற உறுப்பினர்களானாலும் சரி, தனிப்பட்டவர்களானாலும் சரி, பட்டாதாரர்களாக இருந்தாலும் சரி, நிலம் இல்லாதவர்களாக இருந்தாலும் சரி, அதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனுக்குடன் சரி செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு உணவு அமைச்சர்.

4—

இடையன்குடிகாட்டு நியாயவிலை கடையைப் பிரித்து சேந்தன்மங்கலத்தில் மற்றொன்றை ஏற்படுத்துதல்

*16749— திரு. ஆர். தங்கராஜ்:

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, இடையன்குடிகாட்டில் இயங்கும் நியாயவிலை கடையைப் பிரித்து சேந்தன்மங்கலத்தில் மற்றொன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) எனவே அடுத்த வினா எழவில்லை.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று சொல்லிவிட்டார்கள். திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் தாலுகா, இடையன்குடிகாட்டு கிராமத்தில் இருக்கின்ற நியாய விலைக் கடைக்குச் சென்று சேந்தமங்கலம், சிலுப்பனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 3,000 மக்களுக்கு மேல் இருக்கின்ற அந்த கிராம மக்கள் தங்களுடைய அத்தியாவசியப் பொருள்களை வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். இடையன்குடிகாட்டிலிருந்து சேந்தன்மங்கலம், சிலுப்பனூர் ஆகிய கிராமங்கள் 5 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கின்றன. அப்படி இருக்கின்ற

சூழ்நிலையில் அந்தப் பக்கத்தில் சரியான சாலை வசதி இல்லை. எனவே, அங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களெல்லாம் தங்களுடைய அத்தியாவசியப் பொருள்களை வாங்கவேண்டுமென்றால், அவர்கள் அவர்களுடைய ஒரு நாளைய வேலையைக் கெடுத்துக் கொண்டுதான், அவர்களுடைய அத்தியாவசியப் பொருள்களை வாங்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றார்கள். எனவே, இவர்களுடைய அவசியத்தை உணர்ந்து சுமார் 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருக்கின்ற அந்தப் பகுதியில் அவசியம் ஒரு நியாய விலைக் கடையைத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

<u>மாண்புமிகு திரு. இராம வீரப்பன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிற இடையன்குடிகாடு என்ற கிராமப் பகுதியில், தளவாய்கடலூர் என்கிற கிராமத்தின் பெயராலே ஒரு நியாய விலைக் கடை அங்கே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்ததைப் போன்று, மக்கள் தொகை எவ்வளவு என்று இங்கே தெரியவில்லை. ஆனால், அங்கே இருக்கிற குடும்ப அட்டைகள் மூன்று கிராமங்களுக்கும் சேர்ந்து 507 இருக்கின்றன. அதிலே, இடையன்குடிகாடு 180 ; சிலுப்பனூர் 200 ; சேந்தன்மங்கலம் 127. சுமார் 1,000 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாயவிலைக் கடை என்று அரசு தீர்மானித்து இன்றைக்குத் தமிழகம் முழுவதும் சுமார் 21,985 நியாயவிலைக்கடைகள் இருக்கின்றன. இவை தவிர பகுதி நேரக் கடைகளாக 903 இருக்கின்றன. இவை தவிர நடமாடும் கடைகள் என்று 11 இருக்கின்றன. ஆனால், 500 குடும்பக் கார்டுகளுக்கும் குறைவாக, நியாய விலைக் கடைகளை நடத்துவதே அரசுக்கு மிகுந்த நெருக்கடியையும், பொருளாதாரச் சுமையையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற, இடையன்குடிகாடு, கடையிலேயிருந்து சமீபத்தில்—22-7-1993 இல் மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் சிலுப்பனூர் கிராமத்திற்காக 200 குடும்ப அட்டைகளைக் கொண்ட அந்தக் கிராமத்திற்குப் பகுதிநேரக் கடையை அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். இவர்கள் சொல்லுகின்ற சேந்தன்மங்கலம் என்கிற அந்தக் கிராமத்தில் 127 கார்டுகள் தான் இருக்கிறது. ஆகவே, 127 கார்டுகளுக்கு ஒரு தனிக்கடை ஏற்படுத்துவது என்பது இயலாது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொலை தூரத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே குறிப்பிட்டிருக்கிற இந்தக் குறிப்பில் 3 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 3 கிலோ மீட்டா

1993 அக்டோபர் 26]

தூரத்திற்குள்ளே கடைகள் இருக்கலாம் என்பது விதி. ஆகவே தான், மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கேள்விக்கு ''இல்லை' என்று பதில் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தன்மங்கலம் கிராமத்தில் சரியான சாலை வசதி இல்லை. அந்த ஒரு நிலைமையைக் கணத்திற்கொண்டு அரசு சேந்தன்மங்கலம் கிராமத்தில் ஒரு பகுதி நேரக் கடையையாவது அமைப்பதற்கு முன்வருமா என்பதை இந்த நேரத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பகுதிநேரக் கடை என்பதற்கும் அங்கே இருக்கிற பொதுமக்கள் இலவசமாக அந்தக் கடையை நடத்துவதற்கு இடம் வழங்க வேண்டும். அதற்குப் பிறகு இந்தக் குறிப்பிட்ட கடையிலேயிருந்துதான் பகுதிநேர நேரத்திற்கு 3 நாட்கள் அந்த அலுவலர்கள் அங்கே சென்று வழங்க வேண்டும். அதற்குத் தனியாகச் சம்பளம் தர இயலாது என்பது அரசு நிர்ணயித்திருக்கிற விதி. ஆகவே இந்தச் சூழ்நிலையில், 127 அட்டைகளுக்குப் பகுதி நேரக கடையை அங்கே தொடங்க வேண்டுமானால் இந்த அடிப்படை வசதிகள் வேண்டும். இவை தவிர, இப்படிப் பிரித்துவிட்டால் இடையன்குடி காட்டிலே 180 அட்டைகளுக்குத்தான் கடை இருக்கும். 180 அட்டைகளுக்காக ஒரு கடை நடத்த இயலாது. ஆகவே, அடிப்படைக் கடையையே நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டு விடும். ஆகவேதான், இந்தப் பகுதிநேரக் கடை திறக்க இயலாது என்று இப்பொழுது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள், நடக்க முடியவில்லை, சாலை மோசமாக இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசில் சாலைகள் மிக்க நன்றாகப் போடப்பட்டு வருகின்றன என்பது தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நீங்கள், மக்கள் சென்று வாங்குவதற்குச் சாலைகள் வசதி இல்லை என்று சொன்னால், பகுதிநேரக் கடை நடத்துவதற்கு அங்கேயிருந்து வாகனங்கள்தான் வந்தாக வேண்டும். அதிலே எப்படி வாகனம் வரும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள்தான் சொல்லவேண்டும். ஆகவே எந்தவகையிலே பார்த்தாலும். 127 அட்டைகளுக்காக ஒரு பகுதிநேரக் கடை திறப்பது என்பது இயலாத காரியம். எதிர்காலத்திலே வேண்டுமானால் அதை பரிசிலிக்கக்கூடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 5. திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

5—

மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் ஆஞ்சியோ கார்டியோகிராம் கருவி செயல்படாமல் உள்ளது.

*10382— திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் வைக்கப் பட்டுள்ள ஆஞ்சியோ கார்டியோகிராம் கருவி செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அக் கருவியை இயக்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் உள்ள கருவி பழுது ஏதும் இல்லாமல் செயல்படும் நிலையில் உள்ளது.

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆஞ்சியோ கார்டியோகிராம் கருவி இருதய நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு இருதயத்தையும் அதைச் சுற்றியுள்ள இரத்தக் குழாயையும் சோதிப்பதற்காகப் பயன்பட்டு வருகிறது. சில காலமாக அது இயங்குவதற்கு அந்த மருத்துவர்கள் பயிற்சியில்லாத காரணத்தாலே அது பழுதுபட்டு இருந்தது. இப்பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள், அது நன்றாக, சரியாகச் செயல்படுகிறது என்று சொல்வதைக்கேட்டு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் அந்தக் கருவிகளை இயக்க அவர்களுக்குச் சரியான பயிற்சி இல்லாத காரணத்தினால் அடிக்கடி அவை செயல்படாத நிலைமை ஏற்படுகிறது மருத்துவர்கள் அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்த அவர்களுக்கு பயிற்சி அளிக்க அரசு முன்வருமா, எங்கே பயிற்சி அளிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பயிற்சி பெற்றவர்கள் தற்போது இருக்கிறார்கள். ஏற்கனவே அந்தத் துறையிலே மட்டும்

1993 அக்டோபர் 26]

இதுபோல கருவிகள் நான்கு வைக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் இவற்றோடு உபகருவிகளும் வைக்கப்படடிருக்கின்றன அங்கே மொத்தமாக 'இன்-பேஷன்ட்'-ஆக கடந்த ஆண்டு மட்டும் 1,224 பேர் பயனடைந்திருக்கிறார்கள். 'அவுட்-பேஷன்ட்'-ஆக ஏறத்தாழ 19,331 பேர் பயனடைந்திருக்கிறார்கள். இந்தக் குறிப்பிட்ட கருவியிலே மட்டும் 244 பேர் பயனடைந்திருக்கிறார்கள். எனவே அங்கே பயிற்சி பெற்றவர்கள் இருந்து அந்தக் கருவிகளை ஒழுங்காக இயக்கி வருகிறார்கள்; அங்கே தொய்வு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ், சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆஞ்சியோ கார்டியோகிராம் நல்ல முறையிலே செயல்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள், கார்டியோகிராம் கத்திட்டர் மற்றும் கார்டியோகிராம் கேஸட் போன்றவை அங்கு இல்லாததினால் அந்தக் கருவி சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. அதுமட்டுமல்ல; தமிழகத்திலேயே நவீனமயமான இந்த ஆஞ்சியோ கார்டியோகிராம் மதுரையிலேதான் இயங்குகிறது. அவ்வாறு விலையுயர்ந்த ஆஞ்சியோ கார்டியோகிராம் இருந்தும்கூட 'கார்டியாலஜிஸ்ட்' திறமையாக கருவிகளைப் பயன்படுத்தாதக் காரணத்தினால் அக்கருவிகள் உள்ள இடத்திற்கு திறமையான 'கார்டியாலஜிஸ்ட்' ஒருவரை அனுப்பி அக்கருவிகளைப் பயன்படுத்த பயிற்சி அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் ஏற்கெனவே சொன்னேன். அங்கே இருப்பவர்கள் முறையாக பயிற்சி பெற்றிருக்கிறார்கள். பயிற்சி பெற்றவர்கள் இருந்துதான் அத்தனை நோயாளிகளுக்கும் அங்கே அவர்கள் 'ட்ரீட்மென்ட்' கொடுத்துவருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குத் தேவையான உபகருவிகள் வாங்குவதிலே பிரச்சினை இருக்கிறது என்று சொன்னார்கள். அதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. நேற்று கூட தொலைபேசியிலே அங்கே இருக்கிற மருத்துவர்களைத் தொடர்புகொண்டு நான் கேட்டபோது அவர்களுக்குத் தேவையான அத்தனையும் அவர்களிடத்தில் இருப்பதாகவும் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்தார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றக் கூட்டம் முடிந்து போகிறபோது வேண்டுமானால் போய் பார்த்துவிட்டு நிலைமையை என்னிடம் தெரிவித்தால் சிறப்பாக இருக்கும்.

[1993 அக்டோபர் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 6 திரு. ஆர். பி. பரமசிவம், திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

6—

தமிழ்நாட்டில் இயற்கை மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துதல்.

*17447—திரு. ஆர். பி. பரமசிவம் :
திரு. கா. பூ. முனுசாமி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு இயற்கை மருத்துவக் கல்லூரி (N turopathy College) (5 வருடப் படிப்பு) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) தமிழ்நாட்டில் இயற்கை நல மருத்துவர்களை (N turopthy Doctors) ஊக்குவிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) ஆம்.

(இ) எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் இயற்கை முறைப் பிரிவுகளைச் செயல்படுத்த ரூ. 32.22 இலட்சம் செலவிட வழிவகை செய்யப் பட்டுள்ளது.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உணவே மருந்து, மருந்தே உணவு' என்னும் கோட்பாட்டின் அடிப்படையில், இயற்கை முறை மருத்துவத்தின் மூலம், அதாவது பழங்கள், பச்சைக் காய்கறிகள், இலைச் சாறுகள் ஆகிய இயற்கை உணவுகளின் மூலமும், வாழையிலைக் குளியல், மண் குளியல் மூலமும் பெரும்பாலான வியாதிகளை நீக்க முடியும் என்று நிரூபித்து வருகிறார்கள். இன்றுகூட, சென்னையிலும் மற்றும் கோவையிலும் தனியார் இயற்கை

மருத்துவ நிலையங்களை வைத்து, சிறப்பான முறையில் அவற்றைச் செயல்படுத்தி, நீக்க முடியாத வியாதிகளை நீக்கி வருகிறார்கள். நம்முடைய அண்டை மாநிலமான கர்னாடகா வில்கூட, தர்மஸ்தலா என்ற திருக்கோயில், தனது சொந்த முயற்சியில் குறைந்த செலவில், இயற்கை மருத்துவக் கல்லூரியை நடத்திவருகிறது. எனவே, இந்த 'நேச்சுரோபதி காலேஜ்'— இயற்கை மருத்துவக் கல்லூரியை அரசு மறுபரிசீலனை செய்து, ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே 'இல்லை' என்று சொல்லவில்லை. எனவே, மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதற்கான ஒரு கருத்துருவை ஏற்கனவே தெரிவித்து இருக்கிறார்கள். இப்போது அதற்கான ஒரு திட்டம் கொடுக்கப்பட்டு, அந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை இருக்கிறது. பாளையங்கோட்டையிலே ஏற்கனவே உள்ள நம்முடைய சித்த மருத்துவக் கல்லூரியில் இதற்காக ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தலாம் என்ற ஒரு திட்டம் இப்போது அரசினுடைய பரிசீலனையில் தீவிரமாக இருந்து கொண்டிருக்கிறது. விரைவாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை மருத்துவக் கல்லூரி, நாற்பது வயது கடந்தவர்களுக்கு மிகவும் அவசியமாக இருந்துகொண்டிருக்கிறது. காரணம், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, பெங்களூரில் 'ஜின்டால்' இயற்கை மருத்துவமனையும் ஆந்திரத்திலும், கோவையிலும், ஏன் தர்மபுரி மாவட்டத்தில் கூட இரண்டாண்டுகளுக்கு முன்பாக தளியின் அருகில் இது போன்ற இயற்கை மருத்துவமனையை நிறுவி, பலபேர் அங்கே நல்லமுறையில் வைத்தியம் பெற்று, பயனடைந்து வருகிறார்கள். அதன் அடிப்படையில், இந்த இயற்கை மருத்துவக் கல்லூரி உருவாவதற்கு தட்பவெட்ப சூழ்நிலையும் மிக அவசியம் தேவைப்படுகிறது.

தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை தட்பவெட்ப நிலைகளும் தர்மபுரி மாவட்டத்திலே ஒருங்கே அமைந்திருக்கின்றன. காரணம், ஊட்டியிலே இருக்கின்ற தட்பவெட்ப நிலையைப் பார்க்கின்றபொழுது அது தளியிலே இருக்கின்றது. அதே போல கொடைக்கானலிலே இருக்கின்ற தட்பவெட்ப நிலையைப் பார்க்கின்றபொழுது அது தெங்கனிக்கோட்டையிலே இருக்கிறது. சென்னையிலே இருக்கின்ற தட்பவெட்ப நிலையைப் பார்க்கின்ற பொழுது அது தர்மபுரி நகரத்திலே இருக்கின்றது. இப்படி அத்தனை தட்பவெட்ப நிலைகளும் ஒருங்கே அமைந்

திருக்கிற வகையில் இன்று இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தத்து எடுத்துக்கொண்ட தர்மபுரி மாவட்டம் அமைந்திருக்கின்ற காரணத்தினால், இந்த இயற்கை மருத்துவக் கல்லூரியை மற்ற இடங்களிலே அமைப்பதைவிட தர்மபுரி மாவட்டத்திலே, அத்தனை கல்லூரிகளையும் வழங்கிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றிகூறும் முகத்தான், இக்கல்லூரியையும் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்பவெட்ப நிலை இந்தக் கல்லூரிக்கு அவசியமானதா என்று எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு ஊரிலேயும் இருக்கின்ற தட்பவெட்ப நிலையைப் பற்றிச் சொன்னார்கள். ஒரே ஊரிலே இந்தமாதிரி நிலை இருக்கிறதா என்றால் இல்லை. எனவே, இதற்கு இப்பொழுது தேவையே அடிப்படை வசதி. அந்த அடிப்படை வசதி ஏற்கனவே பாளையங்கோட்டையிலே இருக்கின்ற காரணத்தினால் செலவு இல்லாமல், அரசாங்கத்திற்கு இருக்கின்ற நிதிப் பிரச்சினைக்கு இடையிலே சுமையை ஏற்றாமல், இந்தக் காரியத்தைச் செய்ய முடியும் என்பதற்காகச் சொல்லப்பட்டதேயொழிய, தனியாக தர்மபுரி மாவட்டத்திலே அக்கல்லூரியை அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை. மேலும் மாணவர்கள் படிப்பதற்காகச் செல்லுகிறார்கள். நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கின்றபொழுது, அவர்களுக்கு எந்தவிதமான இடத்தில் சிகிச்சை அளித்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறார்களோ, அந்த இடத்தை மருத்துவர்கள் தேடிக்கொள்வார்கள். எனவே படிக்க வைப்பதற்காக அனுப்புகிற அமைக்கப்படுகிற இடத்தைப் பற்றி மட்டும்தான் நாம் யோசித்துக் கொண்டு இருக்கின்றோம். எனவே, பாளையங்கோட்டையிலே அந்த வசதி இருக்கின்ற காரணத்தினால் அங்கே வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, திரு. செ.து. வரதராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

7—

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் சமூகக் கூடங்கள் அமைத்தல்.

*16440—திரு. செ. து. வரதராஜன்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்: கீழ்க்கா ணு வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் சமூகக் கூடங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத் துறை அமைச்சர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தலைவி, புரட்சித் தலைவியி னுடைய ஆட்சியில் போக்குவரத்துக் கழகங்கள் செம்மையாகவும் சிறப்பாகவும் நடைபெறுகின்றது. போக்குவரத்துக் கழ கங்கள் பல சமூகப் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த சமூகக் கூடங்களைக் கட்டுவதனால் ஏழை எளிய மக்களுக்கும், போக்குவரத்துக் கழகங்களின் பணியாளர் களுக்கும் உதவியாக இருக்கும். ஆகவே, அரசு இதை சீக்கிரம் பரிசிலித்து முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகம், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், ஆகியவற்றில் சமூக நலக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. சமூக நலக் கூடங்கள கட்டுவதற்கு, இராணி மங்கம்மாள் போக்கு வரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மருது பாண்டியன் போக்குவரத்துக் கழகம், தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகம், திருவள்ளுவர் போக்குவரததுக் கழகம் ஆகியவற்றில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தநதை பெரியார் போக்குவரத்துக் கழகம், மற்றும் தங்கத் தலைவர் புரட்சித் தலைவருடைய போக்குவரத்துக் கழகத்திலும், இதுபோன்று சமூகக் கூடங்கள் கட்டுவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி வசதிக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 8, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

8—

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவச அனுமதி அட்டைகள் வழங்கல்.

*17162—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் யார் யாருக்கு பேருந்துகளில் இலவசமாகச் செல்ல அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன ?

(ஆ) இதற்காக அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு இழப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு.கே.ஏ.செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கும் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர்த்து) சுதந்திரப் போராட்ட வீரர்கள், எல்லைப்போராட்ட வீரர்கள், மொழிக் காவலர்களுக்கும் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் உள்ளிட்டு), பார்வையற்றோருக்கும், 20 வயதிற்குட்பட்ட உடல் ஊனமுற்றவர், காது கேளாதோருக்கும், மனநிலை குன்றியோருக்கும் ஒரு துணையுடனும் இலவச பயணச் சலுகை வழங்கப்படுகிறது. மேலும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகை நிருபர்களுக்கும் இலவச பயணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இச்சலுகைகளுக்கான வருவாய் இழப்பினை சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு செலுத்தி வருகிறது. ஆனால், பத்திரிகை நிருபர்களுக்கு வழங்கப்பட்டுவரும் இலவச பயணச் சலுகைக்கான இழப்பீட்டுத் தொகை, பொது நன்மையைக் கருதி சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகங்களே ஏற்கிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களில், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குக் குடும்பப் பென்ஷன் கொடுத்து புரட்சியை ஏற்படுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவியின் ஆட்சியில் தொடர்ந்து நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிற போக்குவரத்துக் கழகங்களை இலாபத்தில் இயக்குவதற்காக, அரசு மானியம் பெறாத இலவசப் பயணத் திட்டத்தை முறைப்படுத்தி,

1993 அக்டோபர் 26]

போக்குவரத்துக் கழகங்கள் இலாபத்தில் இயங்குவதற்கு அமைச்சர் அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சலுகைகள் தவிர்க்கப்படலாமே என்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இது சமுதாயத்திலே ஏற்கப்படாத ஒன்றாக இருக்கிறது. இருந்தாலும் கூட, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு 20—8—1992இல் உடல் ஊனமுற்றோர், காது கேளாதோர் கல்லூரிக்கும் பயிற்சி மையங்களுக்கும் செல்வதற்காக, இரு முறை செல்வதற்காக ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே, இறையுள்ளம் கொண்ட முதலமைச்சர் ஆட்சியில் இது போன்ற சலுகைகள் அரசிடமிருந்து தந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலே, நீங்கள் சொல்வதைப் போல அதைத் தவிர்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச பஸ் பாஸ்கள் கொடுப்பதால்தான் போக்குவரத்துக் கழகங்களுக்கு நஷ்டம் ஏற்படுகின்றது என்ற எண்ணம் மக்களிடையே இருக்கின்றது. ஆனால், எவ்வளவு இலவச பஸ் பாஸ்கள் கொடுக்கப்படுகின்றனவோ அதற்கு அரசு, மானியம் தருகின்றது. ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும், அவ்வாறு இருந்தும்கூட போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்திலே இயங்குகின்றன. ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும், பஸ் பாஸ் தருவதால், ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ஏற்படும் இழப்புத் தொகை எவ்வளவு? அதைச் சரிக்கட்டுவதற்கு, போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் இயங்காமல் இருப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ஒரு தனிக் கேள்வி போட்டால் அதற்கு விளக்கங்கள் தர முடியும். மாண்புமிகு உறுப்பினர் போக்குவரத்துக் கழகத்திற்கு நஷ்டம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று ஒரு கேள்வியை எழுப்பினார். போக்குவரத்துக் கழகங்கள் இலாபம் ஈட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசு அவற்றை உருவாக்கவில்லை. ஏழை எளிய மக்கள், கிராமப்புறங்களிலே இருக்கிற மக்கள், அதுவும் சமுதாயத்திலே அடித்தளத்திலே இருக்கிற மக்களுக்காக, ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு இடத்திற்கும் பேருந்துகளை இயக்க வேண்டு

மென்று, இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றிலே இன்றைக்கு உருவாக்கிய பெருமை நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசுக்குத்தான். புரட்சித் தலைவி அரசுதான் செய்திருக்கிறதே தவிர, எந்த அரசும் செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக நாம் எடுத்துக்கொண்டால் இன்றையதினம் பல்வேறு கிராமங்களிலே பேருந்துகளை இயக்குகின்றபோது, அந்தப் பேருந்துகள் அந்தக் கிராமங்களுக்குச் செல்கிறபோது, ஏறத்தாழ அதை நாங்கள் ஆய்வு செய்கின்ற நேரத்தில், 24 நாட்கள் தொடர்ந்து அந்தக் கிராமத்திற்குச் சென்று திரும்பினாலும் கூட, ஒருவர் கூட அந்தப் பேருந்திலே பயணம் செய்யாத 6, 7 கிராமங்கள் அப்படியிருக்கின்றன. அதுபோன்ற கிராமங்களுக்கு நாம் பேருந்துகளை நிறுத்தினால், போராட்டங்கள் ஏற்படுகின்ற காரணத்தினாலே அதைத் தொடர்ந்து நாம் இயக்கிக்கொண்டிருக்கிறோம். நஷ்டம், இலாபம் என்கிற நோக்கத்தோடு அல்ல, மக்களுக்குப் பணியாற்றுகின்ற நல்ல அரசாக, இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியாக திகழ்ந்து கொண்டிருக்கிற நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதைத் தொடர்ந்து செய்து கொண்டுதான் இருக்க வேண்டுமே தவிர, வேறு வழியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் தங்களுடைய பணிக்காலத்திலே அந்தப் போக்குவரத்துக் கழகத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்டவர்கள். அவர்களுக்குப் பேருந்திலே இலவசமாக செல்ல அனுமதி அட்டை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 6 ஆண்டுகளுக்கு அவர்கள் ஓய்வு பெற்ற பிறகும் கூட இலவச பஸ் பாஸ்கள் வழங்கி அவர்கள் அதிலே பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. தா. செழியன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

9—

கிருஷ்ணாபுரத்தில் நூற்பாலை அமைத்தல்

* 19797—திரு. தா. செழியன்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

(அ) பெரம்பலூர் தொகுதி, கிருஷ்ணாபுரத்தில் நூற்பாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. தா. செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியாகிய பெரம்பலூரினுடைய மையப் பகுதியில் அமைந்துள்ளது இந்த கிருஷ்ணாபுரம் என்கிற ஊர். ஏறத்தாழ 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பருத்தி பயிர் செய்யப்படுகிறது. எனவே விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக இந்த விவசாயப் பயிரையே நம்பியிருப்பதால் இங்கே அவசியம் ஒரு நூற்பாலையை ஏற்படுத்தித் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : திருச்சி மாவட்டம், கரூரில் திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஒன்று 25 ஆயிரம் கதிர்களுடன் செயல்பட்டு வருகிறது. இது மட்டுமல்லாமல் தமிழகத்தில் இன்னும் 17 நூற்பாலைகள் இருக்கின்றன. இவைகளில் 13.52 இலட்சம் கிலோ கிராம் சிட்டா நூலும், 11.52 இலட்சம் கிலோ கிராம் கோன் நூலும் ஒரு மாதத்தில் உற்பத்தி ஆகிறது. தற்போது நூல் உற்பத்தியில் தமிழகம் உபரி உள்ள மாநிலமாக இருக்கிற காரணத்தால் இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. தா. செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலை ஏற்படுவதன் மூலம் சுற்று வட்டாரத்தில் உள்ள 30 கிராமங்கள் பயன்படுகின்றன. ஆய்தறியும் அறிஞர்களினுடைய அறிவுப் பெட்டகம், மரகத மாளிகையின் மாணிக்கப் பெட்டகம், ஏழைகள் ஏற்றம் பெற வாட்டம் போக்கிட, அவர்களைத் தேடிச் சென்று நல் வாழ்வுத் திட்டங்களை நின்பொற்கரங்களால் அள்ளித் தந்திடும் ஏற்றமிகு ஏந்தலே, தங்களுடைய பொற்கால ஆட்சியில், கிருஷ்ணாபுரத்தில் ஒரு நூற்பாலை அடுத்த நிதியாண்டிலாவது ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1993 அக்டோபர் 26

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் ஏற்கெனவே ஒரு நூற்பாலை இருக்கிறது. அதனால் இது இயலாது என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 10, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

10—

தும்மலப்பட்டி பெரிய ஓடைத் திட்டம்.

*9757—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வத்தலக்குண்டு யூனியன், தும்மலப்பட்டி அருகில் உள்ள பெரிய ஓடைத் திட்டம் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தும்மலப்பட்டி பெரிய ஓடையில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) சில தொழில் நுட்பக் குறைபாடுகளைக் களையும் பொருட்டு தல அதிகாரிகளுக்கு அந்தத் திட்டம் அனுப்பப் பட்டுள்ளது. குறைகளைக் களைந்து இறுதியாக்கம் செய்து நில நிர்வாக ஆணையரின் ஒத்திசைவைப் பெற்றதற்குப் பின்னால் அந்தத் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டைப் பகுதியைப் போன்ற வறண்ட பகுதிகளிலே மழைக்காலத்திலேயாவது வீணாகின்ற தண்ணீரைத் தேக்கி வைக்க வேண்டுமென்று நானும் என் தொகுதி மக்களும் விரும்புகிறோம். அப்படி இருக்கும்போது இதிலே காலதாமதம் செய்யாமல், இது ஒரு சிறிய திட்டம்

1993 அக்டோபர் 26]

தான், கடந்த பத்தாண்டு காலமாக இந்தச் சிறிய திட்டம் மேலே போகிறது, கீழே வருகிறது என்ற நிலைமை இருந்து கொண்டிருப்பதை மாற்றி, சற்று துரித நடவடிக்கை எடுத்து விரைவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்ப தற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், களவாய்ப்பட்டி கிராமம், தும்மலப்பட்டி அருகே பெரிய ஓடையின் குறுக்கே கண்மாய் கட்டப்படுகின்ற திட்டத்திற்கு ரூ. 38.40 இலட்சம் மதிப் பீடாகத் தயாரித்திருக்கிறது. இதற்கு ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்திசைவு கிடைக்கவில்லை. அந்த ஒத்திசைவைப் பெறுவதற்காக மீண்டும் தல அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே தெரிவித்தன.தப் போல மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்திசைவு கிடைத்த தற்குப் பின்னாலே நில நிர்வாக ஆணையரின் ஒத்திசைவும் பெறப்பட்டு, அதன் பின்னால் அரசுக்கு வரும்போது அது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு 38.40 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு தயாரித்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்து விரைவிலே அவருடைய ஒத்திசைவை அனுப்பி வைப்பதற்கு நாங்களும் நடவடிக்கை எடுக்கிறோம். இதுபோன்று மலைப் பகுதிகளிலே எங்கெங்கே எல்லாம் இருக்கிறதோ அங்கே எல்லாம் பெய்யக்கூடிய மழைத் தண்ணீரை தேக்கி வைக்க வேண்டும். இல்லை என்றால் எங்கெங்கேயோ சென்று ஏழை விவசாயிகளு டைய நிலத்திலே மணல் அடித்து அந்த நிலத்தை மூடிவிடுகிறது. அப்படிப்பட்ட இடங்களை மாநிலம் முழுவதும் சர்வே செய்து, அதன் மூலமாக மழைத் தண்ணீர் வீணாவதைத் தடுக்க, சின்னச் சின்ன 'செக்-டேம்' அதாவது சிறிய சிறிய குட்டைகள் அமைக்கும் திட்டத்தை தயார்செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக ஏற்கெனவே பொதுப்பணித் துறையில் தலைமைப்பொறி யாளர் (மைனர் இரிகேஷன்) என்பவர் இருக்கிறார். இது போன்ற சிறிய கண்மாய்களை அமைப்பதற்கு பல்வேறு

ஆய்வுகளைச் செய்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் '2 ஸ்கீம்' என்று சொல்லப்படுகிற பகுதி-2 திட்டத்தின் கீழ் முன்னுரிமை கொடுத்து, எங்கே எந்த அளவுக்குத் தண்ணீரை தேக்கமுடியும் என்பதை ஆராய்ந்து, சிறு கண்மாய்களையும் குளங்களையும் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுபோன்று எந்த எந்தப் பகுதிகளிலே இருக்கிறது என்பதை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்ததை, எந்த அளவுக்குத் தண்ணீரைத் தேக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதை அரசுக்குத் தெரிவித்தால், அரசு அதுபற்றி பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 11, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

11—

பொது மக்கள் பயனுக்காக ஒதுக்கப்படும் மனைகளை வீட்டு மனைகளாக பயன்படுத்துவதை தடுத்தல்.

*9975—செல்வி எல். சுலோசனா :

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலத்தை வீட்டுமனைப் பிரிவுகளாகப் பிரித்து விற்பதற்காக அனுமதி அளிக்கும் போது, பொது மக்கள் பயனுக்காக ஒதுக்கப்படும் இடத்தையும் வீட்டுமனையாகவே பயன்படுத்தப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பொதுவாக, பொது மக்கள் பயன் படுத்துவதற்காக ஒதுக்கப்படுகின்ற இடங்களை வீட்டுமனைகளாகப் பயன்படுத்த அரசு அனுமதி அளிப்பது கிடையாது. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது பயன்களுக்காக ஒதுக்கப்படுகின்ற இடங்களில் கட்டப்படும் வீடுகளுககு மின்னிணைப்பு, குடிநீர் குழாய்

1993 அக்டோபர் 26]

இணைப்பு ஆகியவை கொடுக்கக் கூடாடாது என்ற நிலைமையை ஏற்படுத்தி, அதன் மூலம் இத்தகைய தவறுகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி அளிக்காத நிலையில் இதுபோன்ற கேள்விக்கு இடம் இருக்காது. அப்படி மீறி அவர்கள் வீட்டு மனைகளாகப் பிரித்தால் அந்த வீட்டு மனைக்கான அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்கள் பயனுக்காக ஒதுக்கப்படும் இடத்தை நூலகத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்படும் இடங்களிலே சமூதாயக் கூடம், திருமண மண்டபம், நூலகம் போன்றவற்றை, அந்த வீட்டுமனைகளைப் பிரித்து அங்கீகாரம் பெற்றவர்கள் அமைத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற இடங்களை வீட்டு மனைகளாக்க அனுமதிக்கப்படுவதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆனால் எம்.எம்.டி.ஏ.-ல் அந்த ஓராண்டு காலத்திற்குள் எந்தக் காரணத்திற்காகப் பொது இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அது நிறைவேற்றப்படவில்லை என்றால் அந்த இடத்தை வீட்டு மனைகளாக்கி வீடுகள் கட்டிக் கொள்ளலாம் என்கிற ஒரு துணை விதி இருப்பதாக நான் அறிகிறேன். அந்த விதி சரி தானா? அப்படி நடைபெறுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசு அனுமதி அளிப்பது கிடையாது. ஆனால் அதேநேரத்தில் அந்தக் குறிப்பிட்ட இடங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்தால் அந்த மனை அங்கீகாரம் பெற்றவர்கள், இதற்கான 'ஓப்பன் ஸ்பேஸ் ரிசர்வேஷன்' 10 சதவீதத்திற்கு மேலே இருக்கிறது என்று காட்டி, அதனை நிரூபித்து அனுமதி கேட்டால் அதை சென்னை பெருநகர்

வளர்ச்சிக் குழுமம் பரிசீலித்து, பரிசீலனைக்குப் பின் அங்கே பொது உபயோகத்திற்கான போதுமான இடங்கள் இருப்பது தெரிய வந்தால் அதற்குப் பிறகு அனுமதி அளிப்பது சட்டத்திற்கு உட்பட்டு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 12, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

12—

புரசைவாக்கம் தொகுதி ஓட்டேரி குடிசைவாழ் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா.

*10021—திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புரசைவாக்கம் தொகுதி ஓட்டேரி பகுதியில் பல ஆண்டு காலமாக குடிசை வீடுகளில் வாழ்ந்து வரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா இதுநாள் வரை வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பட்டா வழங்க குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வாரியத்தினுடைய விதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 30, 40 ஆண்டுகளாக சென்னை நகரில் ஓட்டேரி பகுதி பள்ளப் பகுதியாக இருக்கிறது. பல வருடங்களாகக் குடிசைகளைக் கட்டி அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் குடிசைகளை எல்லாம் சிமெண்ட் ஓடுகள் போட்ட வீடுகளாக மாற்றினார்கள். அந்தத் திட்டம் என்ன ஆனது? மீண்டும் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா? அல்லது 30 ஆண்டுகளாகப் பட்டா இல்லாமல் வாழ்ந்து கொண்டு இருக்கிற ஏழை, பாமர, அரிசன மக்களுக்குப் பட்டா வழங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

1993 அக்டோபர் 26]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்டம், புரசை, பெரம்பூர் வட்டம், ஓட்டேரி பகுதியில் திடீர் நகர், சிவசண்முகபுரம் '-ஏ'' பிளாக், மற்றும் 'பி'' பிளாக், ஓட்டேரி நல்லாங்கரை, ப்ருக்ளின் ரோடு ஆகிய பகுதிகளில் குடிசைப் பகுதிகள் அமைந்திருக்கின் றன. இந்தக் குடிசைப் பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேம்பாட்டுப் பணிகளைச் செய்து முடித்துள்ளது. குறிப் பாக திடீர் நகர்ப் பகுதியில் மொத்தமுள்ள 102 மனைகளிலே 55 மனைகளைக் குடியிருப்புக்காக ஒதுக்கீடு செய்து குத்தகை மற்றும் ஒப்பந்தப் பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதைப் போல சிவசண்முகபுரம் பகுதியில் மொத்தமுள்ள 734 மனைகளில் 438 மனைகள் குடியிருப்போருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு குத்தகை மற்றும் ஒப்பந்தப் பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் மீதி உள்ளவர்களுக்கு, அவர்கள் குடிசைப் பகுதி மாற்று வாரிய விதிகளுக்கு உட்பட்டு நிலக்கிரயம் முதலியன செலுத்த முன் வராத காரணத்தால் இன்னும் அவர்களுக்கு மனைகள் ஒதுக்கீடு செய்ய உத்தரவிடப்படவில்லை. மேற்கூறிய குடிசைப் பகுதியைச் சேர்ந்த நிலங்கள் சம்பந்தப்பட்ட துறையிட மிருந்து வாரியத்திற்கு மாற்றம் செய்யப்பட்டவுடன் மனை ஒதுக்கீடுதாரர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்கப்படும். அதைப் போல நல்லாங்கரை பகுதியில் இருக்கிறவர்கள் கரை ஓரங்களில் இருக்கிற காரணத்தாலே அந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்குப் பட்டா வழங்க இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்

13—

துறையூரில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை.

*19102—திரு. வி. ரவிச்சந்திரன்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதியில் துறையூர் நகரில் சிட்கோ மூலமாக தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா வுக்கு பதில் சொல்வதற்கு முன்பு எங்களுடைய இதய தெய்வம்

டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய உளங்கனிந்த நன்றியை வணக்கத்தோடு தெரிவித்துக்கொண்டு வினாவுக்கு விடை அளிக்கிறேன்.

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் இல்லை என்று சொன்னதில்லை. இருந்த போதும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். அடுத்த ஆண்டாவது உப்பிலியாபுரம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது துறையூர் நகரில் தொழிற்பேட்டை அமைக்க சிட்கோவிடம் எந்தத் திட்டமும் இல்லை. எனினும் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இல்லை என்ற சொல்லுக்கு இடமில்லை என்பதை முழுமையாக செய்து காட்டியிருக்கிறோம். அந்த அடிப்படையிலே குறைந்தபட்சம் 10 தொழில் முனைவோர் தகுந்த தொழில் திட்டங்களுடன் 25 விழுக்காடு தொகையுடனே முன்வருவார்களானால், தகுந்த நிலத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் உதவியுடன் கையகப்படுத்தி தொழிற்பேட்டை ஒன்றினை நிறுவ சிட்கோ தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளும் என்ற உறுதியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 14, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

14—

குன்னத்தூர் ஊராட்சிப் பள்ளிகளில் சத்துணவுக்கூடம் கட்ட நடவடிக்கை

*21538—டாக்டர் மு. சீனியம்மாள் :
மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, குன்னத்தூர் ஊராட்சி பள்ளிகளில் சத்துணவுக்கூடம் கட்ட அரசு ஆவண செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் கட்டப்படும்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதியிலுள்ள குன்னத்தூரில் சத்துணவு கூடம் கட்டித்தர இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா. ஆனால் ஏழையின் சிரிப்பிலே வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன் என்று ஏழைகளின் சிரிப்பை அர்த்தமாக்கியவர் எங்களது நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு அவினாசி தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்து கோவை மாவட்டத்தில் இந்தச் சத்துணவுக் கூடங்களை கட்டித் தர தொழில் அதிபர்கள் முன்வந்ததை நாங்கள் அறிகிறோம். அப்படியானால், எத்தனை தொழில் அதிபர்கள் இந்த கட்டிடங்களைக் கட்டித் தந்திருக்கிறார்கள். அவினாசி தொகுதியில் மட்டுமல்ல, ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள், நீங்கள் குன்னத்தூரில் சத்துணவுக்கூடம் கட்டுவது பற்றி கேள்வி கேட்டுள்ளீர்கள். கோவை மாவட்டம் முழுவதும் எத்தனை தொழில் அதிபர்கள் முன்வந்தார்கள் என்கின்ற கேள்விக்குப் பதில் கிடைக்காது. அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னத்தூரில் கட்டியிருக்கின்ற கட்டடம் எவ்வளவு கட்டப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னத்தூரில் ஊராட்சி பள்ளியில் சத்துணவுக்கூடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள். அரசு ஆவன செய்து அதற்கு சமையல் அறை கட்டுவதற்கு 25 ஆயிரம் ரூபாயை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 1991-92ல் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பின்னால், 147 குழந்தைகள் நல மையங்களும், 336 பள்ளி மையங்களும், 1992-93-ல் 53 குழந்தைகள் நல மையங்களும், 84 பள்ளி சத்

துணவு மையங்களும், 15 லட்சம் ரூபாயில் தொழில் அதிபர்களால் தத்து எடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுக் கூடங்களை கட்டித் தருவதாக கூறிய அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுவதோடு, ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம் மற்ற மாவட்டங்களில் அமல் படுத்தியதுபோல் கோவை மாவட்டத்தில் இந்தச் சத்துணவு மையங்களில் அமல்படுத்தப்படுமா என்பது பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த ஆண்டு கோவை மாவட்டம் எடுக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு அந்தப் பணி நடந்து கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 15, திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

15—

அனைத்து கல்வி நிலையங்களிலும் பெற்றோர் ஆசிரியர் கழகம்.

*10280—திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெற்றோர் ஆசிரியர் கழகம் அனைத்துக் கல்வி நிலையங்களிலும் உள்ளனவா ?

(ஆ) பெற்றோர் ஆசிரியர் கழகங்களுக்கு கல்வி பே நணையை மேற்பார்வையிடும் அதிகாரம் வழங்கப்படுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கையாக்கி இந்த வினாவுக்கு விடை அளிக்கிறேன்.

(அ) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்து பள்ளிகளிலும் பெற்றோர் ஆசிரியர் கழகம் அமையவேண்டுமென்று

1993 அக்டோபர் 26]

ஆணையிட்டிருக்கிறார்கள். இதை கருத்திற் கொண்டு இதுவரை தமிழகத்திலே இருக்கின்ற 40,905 பள்ளிகளில் 29,376 பள்ளிகளில் பெற்றோர்-ஆசிரியர் கழகம் தொடங்கப்பட்டு செயல்படுகிறது. மீதம் இருக்கிற 11,529 பள்ளிகளிலே ஜனவரி 1994-குள் அனைத்துப் பள்ளிகளிலேயும் தொடங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) கல்வி போதனையை மேற்பார்வையிடும் அதிகாரம் அரசு கல்வித் துறைக்கு மட்டுமே இருக்கிறது.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் உறுப்பினராக இருப்பதற்கு தகுதி பெறுவதற்கு ஏதாவது ஒரு வகுப்பில் அந்த உறுப்பினருடைய குழந்தை படிக்க வேண்டுமென்பதாகும். ஆனால் தற்போது நிறைய பள்ளிகளில் அதை நடைமுறைப் படுத்தவில்லை என்பதையும் முக்கிய பிரமுகர் என்று சொல்லிக் கொண்டு பள்ளியின் நிர்வாகத்தில் தலையிடுவதையும் அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அறியும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் கழகம், கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பார்வையிடும்போது, தங்களுடைய குழந்தைகளின் கல்வித் தரம் தெரிவதற்கும், ஆசிரியர்களின் குறைகளை அறிவதற்கும், பள்ளியின் வசதிகளை நிறைவு செய்வதற்கும் பயனாக இருக்கும். ஆகவே, பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் கல்வி போதனைய மேற்பார்வையிடுவதற்கு அதிகாரம் இல்லையென்றாலும், மாதம் ஒரு முறையாவது பள்ளியின் நிர்வாகத்துடன் பேசுவதற்கும் அவசியம் கூட்டம் ஒன்றை கூட்ட ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி போதனையை மேம்படுத்த ஆசிரியர்கள் கருத்தரங்குகள் நடத்துவது, பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளின் கல்வி வளர்ச்சி, பள்ளியின் முன்னேற்றம், பெற்றோர் ஆசிரியர்களிடையே நட்புறவை வளர்த்

தல், கல்வி பயிற்றுவித்தலில் மேம்பாடு காண ஆலோசனை வழங்குதல் ஆகியவற்றில் பெற்றோர் ஆசிரியர் கழகம் உதவி வருகிறது. மாதம் ஒரு கூட்டம் என்று நடத்துவது இயலாது என்பதால் குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு கூட்டமாவது பொதுக் குழுவாக கூட்ட வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் இயங்கி வரும் பள்ளிகளிலே அந்தப் பதிவேடுகள் எல்லாம் சரியான முறையிலே நிர்வகிக்கப்படாமல், அந்த உறுப்பினர்கள் பெயர்கள்கூட திரும்பவும் ரெஜிஸ்டர் செய்யப்படாமல், அந்த ஆவணங்கள் எல்லாம் சரியான முறையிலே பராமரிக்கப்படாத நிலையிலே இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட நிகழ்வுகளின் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுவாக எல்லா பள்ளிகளிலும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் பதிவேடுகள் முறையாக பேணப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கற்பகம் இளங்கோ.

திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்க் குலத்தின் தனிப் பெரும் தலைவியாக திகழ்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் ஆட்சிக் காலத்தில்தான் ஒன்று முதல் ஐந்து வரை உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் முழுக்க முழுக்க பெண் ஆசிரியைகளே பணிபுரியும் காலக்கட்டமாகவும், அன்னை ஆசிரியர் கழகம் அமைத்த காலமாகவும் திகழ்கின்றது. எனவே, இந்தச் சூழ்நிலையில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் அன்னை ஆசிரியர் கழக நிர்வாகிகளாக செயல்பட சமூக அந்தஸ்தை மட்டுமே தகுதியாக கொள்ளமல் ஓரளவு கல்வித் தகுதியும் நிர்ணயிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகத் அரிய விரும்புகிறேன்.

1993 அக்டோபர் 26]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் அன்னை ஆசிரியர் கழகத்தில், அந்தந்தப் பள்ளிகளில் பயிலுகின்ற மாணவ மாணவியரின் பெற்றோர்களே இடம் பெற வேண்டும் என்று இருப்பதால், கல்வித் தகுதியை நிச்சயமாக, உறுதியாக, அமுல்படுத்துவது இயலாத காரியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண் 16, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

16—

பட்டயக் கல்வி (Diploma) படித்தவர்கள் பெயருக்கு முன்னால் தாங்கள் படித்த பட்டயக் கல்வியைப் போடுதல்.

*11033—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொறியியல் பட்டம் பெற்றவர்கள்போல பட்டயக் கல்வி (Diploma) படித்தவர்களும் தங்கள் பெயருக்கு முன்னால் தாங்கள் படித்த பட்டயக் கல்வியைப் போட்டால் அரசு அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக ஆணை எதுவும் தேவையில்லை என்றும், தொடர்புடைய நபர்களின் பொறுப்பிற்கே விட்டுவிடலாம் என்றும், இந்த அரசு கருதுகிறது.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஈ., எம்.டெக். படித்தப் பட்டதாரிகள் கூட தங்கள் பெயருக்கு முன்னால் என்ஜினியர் என்று போடுவதில்லை ஆனால் டிப்ளமோ படித்தவர்கள் தங்கள் பெயருக்கு முன்னால் என்ஜினியர் என்று போட்டுக் கொண்டு, லெட்டர்பேடிலும் அதைப் போட்டு செயல்படுகிறார்கள். எனவே, அரசு, என்ஜினியரிங் பட்டம் படித்தவர்கள் மட்டும்தான் என்ஜினியர் என்று போட்டுக் கொள்ள வேண்டும், டிப்ளமோ படித்தவர்கள் போடக்கூடாது என்று ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பட்டம் பெற்றவர்கள், தமது துறைகளில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பெற்றவர்கள், சிறப்பு முனைவர் பட்டம் பெற்றவர்கள் ஆகியோர் தங்கள் பெயருக்கு முன்னால் டாக்டர் என்று போடுவது வழக்கத்தில் இருந்து வருகிறது. தமிழ்நாடு பொறியாளர் சங்க உறுப்பினர்கள்—என்ஜினியர்ஸ் அசோசியேஷன்— தங்கள் பெயருக்கு முன்னால் ஈ.ஆர். என்று போட்டுக் கொள்வதும் வழக்கத்தில் இருந்து வருகிறது. இவை எல்லாம் பட்டங்கள். ஆனால் டிப்ளமோ என்பது பட்டம் அல்ல. அது பட்டயம். ஆகவே, அப்படி போட்டுக் கொள்வது முறையல்ல. இது குறித்து அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிப்ளமோ படித்து என்ஜினியர்களாக இருந்தவர்கள்-ஹைவேசில் என்ஜினியர்களாக இருந்து பிறகு அரசால் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள்—பணி நீக்கம் செய்யப்பட்ட பிறகும் தங்கள் லெட்டர்பேடில் என்ஜினியர் என்று தங்கள் பெயருக்கு முன்னால் போட்டுக் கொண்டு செயல்பட்டால் அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ஜினியர் என்று சொல்வது அந்தப் பதவியைக் குறிக்காமல், அந்தப் பட்டத்தைக் குறிப்பதாக இருந்தால் அவர்கள் போட்டுக் கொள்வதிலே தவறு இல்லையென்று அரசு கருதுகிறது.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 17, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

17—

ஆவடி நகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி

*524—திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி நகராட்சிப் பெண்கள் உயர் நிலைப் பள்ளிக்குத் தேவையான கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1993 அக்டோபர் 26]

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி நகரியத்திலே இருக்கின்ற உயர் நிலைப்பள்ளியில் சுமார் 1500 மாணவர்கள் படிக்கிறார்கள். இருபதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே கட்டிடமே இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அரசு முயற்சி செய்து, அந்தப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி நகரியத்தினால் 13 தொடக்கப் பள்ளிகளும், 5 நடுநிலைப் பள்ளிகளும், ஒரு உயர்நிலைப் பள்ளியும் இருபாலரும் பயில்கின்ற பள்ளிகள் பராமரிக்கப்படுகின்றன. நகரியத்தால் பெண்கள் உயர்நிலைப் பள்ளி என்று தனியாக எதுவும் பராமரிக்கப்படவில்லை. எனவே பராமரிப்பு வேலைகள் மட்டுமே நகரியத்தால் மேற்கொள்ளப்படுகிறது. புதிதாகக் கட்டிடம் கட்டித் தரும் பணி எதுவும் நகரியத்தால் மேற்கொள்ளப்படவில்லை. ஆவடி நகரியம், பட்டாபிராம் சத்திரம் பகுதியில் ஆண், பெண் இருபாலரும் படிக்கும் ஒரு பள்ளியை பராமரித்து வருகிறது. மேற்படி பள்ளியின் ஒரு கட்டிடத்தின் கூரையை மாற்றி கல்நார் கூரை அமைக்க ரூ. 80,000 மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறன.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 80,000 ரூபாய் மதிப்பீட்டிலே கூரை அமைப்பதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறதென்று சொன்னார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பணி இன்னும் நடைபெற ஆரம்பிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, ஆவடி நகரியத்திலே இது தவிர 2 பள்ளிகள் இருக்கின்றன. 10 ஏக்கர் பரப்பளவிலும், 5 ஏக்கர் பரப்பளவிலும் ஒரு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியும், ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் இருக்கிறன. அந்த இடங்களுக்குப் பட்டா கொடுக்காத காரணத்தால் இன்றைக்குப் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களின் மூலமாகக் கட்டிடம் கட்ட முடியாத ஒரு நிலை இருக்கிறது. அருள்கூர்ந்து அந்த இடத்திற்கு, அதாவது ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கும், பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கும் பட்டா கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி காமராசர் நகர் பகுதியில் ஒரு அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அரசின் கல்வித் துறைக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. அது நகரியத்தைச் சார்ந்தது அல்ல. நகரியத்தைச் சார்ந்திருக்கின்ற எந்தப் பள்ளிக் கட்டிடமாக இருந்தாலும், உறுப்பினர் அவர்கள் கூறி இருக்கின்ற குறைபாடுகள் விரைவில் களையப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 18. திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

நாகப்பட்டினம் சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

*10198—திரு. ஆர். கோடிமாரி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை நகர் முழுவதும் தண்ணீர் போதிய அளவுக்குக் கிடைக்காது, தாய்மார்கள் அவதிப்படுகின்றனர். நாகை நகரத்தில் தண்ணீர் என்பது எட்டாத கனியாக இருக்கிறது. தாய்க் குலத்தின் தெய்வமாகிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் சி. எஸ். ஐ. மேல்நிலைப்பள்ளி அருகில் ஒரு மேல்நிலைத் தண்ணீர் தொட்டி அமைத்தால் எங்கள் நாகை

நகர் முழுவதும் தண்ணீர் பஞ்சம் இருக்காது. ஆகவே அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டில் அமைத்துத் தர ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை சி.எஸ். ஐ. மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. ஆனால் தற்போதைக்கு நாகப்பட்டினத்தில் நடைமுறையில் இருக்கும் குடிநீர்த் திட்டம் 1914-ல் வகுக்கப்பட்டதாகும். இந்தத் திட்டம் நிமிடத்திற்கு 3400 லிட்டர் குடிநீர் பெறும் வகையில் அன்றைய காலக்கட்டத்தில் வகுக்கப்பட்டிருந்தது. அதைப்போல அபிவிருத்தித் திட்டமென்று 1962-லே ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவிலே தற்போது கொடுக்கின்ற குடிநீர் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால் இன்றைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நாகப்பட்டினம் நகராட்சியின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அபிவிருத்தித் திட்டமாக ரூ. 85 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 12 ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து நீர் எடுக்கப்பட்டு, 3 மேல்நிலைத் தொட்டிகள் கட்டி, குழாய்கள் மூலம் வழங்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்து, இந்த 3 மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகளும் சால்மன் டார்க், வெளிப்பாளையம், நாகூரிலுள்ள வண்டிப்பேட்டை ஆகிய 3 இடங்களில் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியது போன்று நாகை சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளியின் அருகில் அந்த மேல்நிலைத் தொட்டியை அமைத்தால் அங்கே மேட்டுப் பகுதியிலிருந்து தண்ணீர் வரவேண்டிய இடங்களுக்கெல்லாம் செல்லும். நாகூரிலும், அமைச்சர் கூறியதைப் போன்று இன்னொரு இடத்திலும் அமைத்துத் தருவதற்கு அவ்வளவு சாத்தியக்கூறு இருந்தாலும் இல்லாவிட்டாலும், அந்த அளவுக்குத் தண்ணீர் கிடைக்காத நிலை இருப்பதால், அந்தப் பகுதியில் மொத்தம் 13 வார்டுகள் இருக்கின்றன. அந்த 13 வார்டு மக்களும் பயன்பெறும் வகையில் சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் அதை அமைத்தால் அந்த மேட்டுப் பகுதிகளுக்கும் தண்ணீர் ஏறும் என்கின்ற நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே தயவுசெய்து அமைச்சர் அவர்கள் இதய தெய்வத்தின் ஆட்சியில் எப்படியாவது செய்து கொடுத்தால் நாகை நகர மக்கள் செழிப்புடன் வாழ வசதியாக இருக்கும் என்று சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூடுதல் அபிவிருத்தித் திட்டத்தின் வாயிலாக நாகப்பட்டினத்தில் மூன்று இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெளிவுபடுத்தியிருந்தேன். சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளி அருகில் என்று சொல்கிறபோது, அந்த மூன்று இடங்களில் ஒன்று, சாலமன் பார்க்கிலும், வெளிப்பாளையம் என்ற இடத்திலும், நாகூரில் இருக்கிற வண்டிப்பேட்டை என்ற இடத்திலும் ஆகும். சாலமன் பார்க் என்று சொல்லப்படுகின்ற இடம், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கின்ற அந்த சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளி என்ற இடத்திலிருந்து 200 மீட்டர் தொலைவில் தான் உள்ளது. ஆகவே, அந்த இடமே போதுமானதாக இருப்பதாக நிபுணர்கள் கருதுவதால், அந்த இடத்தையே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தேர்வு செய்திருக்கிறது. உறுப்பினர் கூறியிருக்கின்ற கருத்தின் மீது அறிக்கை பெறப்பட்டு, சாத்தியக்கூறு இருப்பின், மாற்றியமைக்கக் கூடிய நிலை நல்லவையாக அமையும் என்று சொன்னால், அதையும் அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 19, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

தீண்டாமை ஒழிய பொது விருந்துகள் (Inter-Caste Dinner) நடத்த ஊக்குவித்தல்.

19—

* 11867—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தீண்டாமை தமிழ்நாட்டில் அடியோடு ஒழிய பொது விருந்துகளுக்கு (Inter-Caste Dinner) ஊக்கம் அளிக்க விழிப்புணர்ச்சி முகாம் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவத்தையும் சமுதாய மறுமலர்ச்சியையும் நீரூற்றி வளர்த்து வருகின்ற நல்லெண்ணம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில், தீண்டாமை ஒழிப்பிற்காகக் கடன்களும் மானியங்களும் தங்கப் பதக்கங்களும் பட்டயங்களும் கொடுப்பதைப் பாராட்டி, அதே நேரத்தில் அண்ணல் அம்பேத்கார் அவர்கள் சொன்னதைப் போல, என்றைக்கு மேல்சாதிக்காரர்கள் கீழ்ச்சாதிக்காரர்கள் வீட்டுக்கு விருந்துக்கு வருகிறார்களோ, அதேபோல் மேல்சாதிக்காரர்கள் வீட்டுக்கு என்றைக்கு கீழ்ச்சாதிக்காரர்களை விருந்துக்கு அழைக்கின்ற மனப்பான்மை வருகிறதோ அன்றைக்குத்தான் நமது நாட்டில் தீண்டாமை முற்றிலும் ஒழிக்கப்படும் என்று சொல்கிற அந்தக் கோட்பாடுப்படி, அந்த நாள் இந்த நாள்தான் என்று சொல்கிற அளவுக்கு நம்முடைய அரசு திட்டங்களைச் செயல்படுத்துமா? அவ்வாறு செயல்படுத்தும் என்றால் அது எவ்வகை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி எங்கள் இதயதெய்வம் அவர்கள், ஆதிதிராவிட மக்களுடைய ஏற்றத் தாழ்வைப் போக்கவேண்டுமென்ற உன்னத நோக்கோடுதான் ஆதிதிராவிட சமுதாய மக்கள் பொருளாதாரத்தில் உயரவேண்டும் என்பதற்காகத் தொழிற்பேட்டைகளும், ஆதிதிராவிட சமுதாய மாணவர்கள் கல்வித் தரத்தில் உயர்ந்தால்தான் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காகத் தனிக்கவனம் செலுத்தி, ஆதிதிராவிட மாணவ மாணவியர்கள் இந்தத் துறை உண்டான காலந்தொட்டு ஏற்படாத வளர்ச்சியாக புரட்சித்தலைவி இதயதெய்வம் காலத்தில்தான் பத்தாம் வகுப்பில், அதாவது எஸ்.எஸ்.எல். சி. யில் 70 விழுக்காடும், பிளஸ் 2-ல் அதாவது பன்னிரண்டாம் வகுப்பில் 62 விழுக்காடும் எட்டியிருக்கிறது என்று சொன்னால், இதுவே ஆதிதிராவிட மக்களின் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்குக் கருத்துருவாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களும் தொழிலதிபர்களாக வரவேண்டும் என்று, சமுதாயத்தில் அந்தஸ்து பெற வேண்டுமென்று, திட்டங்களைத் தீட்டிய நமது ஆட்சியில், கிராமப்புறங்களில் - நகர்புறங்களில் ஓரளவுக்கு தீண்டாமை ஒழிப்பு ஏற்பட்டிருக்கிறது என்றாலும், அதே நேரத்தில் கிராமப்புறங்களில் அதுபோன்றக் குறைகள் இருக்கின்ற காரணத்தால், அங்கே சாதிச்சண்டைகள் போன்றவை வருகின்ற காரணத்தால், அங்கே சட்டம் ஒழுங்கைக் காப்பதற்காகவும்

சமத்துவத்தையும், சமுதாய மறுமலர்ச்சியையும் பேணிக் காக்கின்ற வகையிலும், கிராமப் புறங்களில் இத்திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்தில் இருக்கின்ற ஆதி திராவிடர் குழந்தைகள் கல்வித் தரத்தில் முன்னுக்கு வர வேண்டுமென்பதற்காக ஒரு ஆய்வு நடத்த அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆதிதிராவிட குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டும். அதுபோல ஆதிதிராவிட சமுதாய மக்களுக்குக் குடிநீர், சாலை வசதி, மின் விளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென்று அக்கறை கொண்டு, மிகத் தீவிரமாக இந்த அரசு செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 20, திரு. பி. வி. இராஜேந்திரன். மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

20—

வெள்ளப் பள்ளத்தில் மீன்பிடித் துறைமுகம் மற்றும் வழிகாட்டி விளக்கு வசதி ஏற்படுத்துதல்.

* 21195—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வேதாரண்யம் தொகுதி, வெள்ளப்பள்ளம் கிராமத்தில் மீன்பிடி துறைமுகம், வழிகாட்டி விளக்கு வசதியை மீனளத் துறை மூலம் ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1993 அக்டோபர் 26]

(அ) மற்றும் (ஆ): வேதாரண்யம் தொகுதி, வெள்ளப்பள்ளம் கிராமத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்க தொழில் ரீதியில் சாத்தியக்கூறுகள் இல்லை. வெள்ளப்பள்ளம் அருகே 1 கிலோ மீட்டர் தூரத்தில் வானமாதேவி என்னுமிடத்தில் வழிகாட்டி விளக்கு அமைக்கப்பட்டுள்ளதால் வெள்ளப்பள்ளத்தில் மற்றுமொரு வழிகாட்டி விளக்கு அமைத்திடத் தேவையில்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ நண்பன் என்று கூறிக்கொள்ளும் இந்த அரசு, 1991-92 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 8-லே, வெள்ளப்பள்ளத்தில் ஒரு 'ஷோர் ஃபெசிலிட்டி' அமைப்பதற்கான ஒரு கருத்துரு இருக்கிறது என்று சொல்லி இருக்கிறது; 1992-93 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 9-ல் "Revised proposal will be sent to Government of India for consideration for providing such facilities at Poompuhar and Vellapallam in Thanjavur district and Kodumunai and Vellavilai in Kanniyakumari district." என்று சொல்லி இருக்கிறது. மீண்டும் இந்த ஆண்டு, 1993-94 ஆம் ஆண்டில் கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 10-ல் சென்ட்ரல் கவர்ன்மென்ட் 30.01 இலட்சத்திற்கு அட்மினிஸ்ட்ரேடிவ் சேங்ஷன் வழங்கி விட்டதாகவே சொல்லி இருக்கிறது.** என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் எழுப்பக் கூடாது. (குறுக்கீடு) இல்லை. இப்போது அமைச்சர் தெரிவித்த கருத்தில் ஏதாவது முரண்பாடு இருக்கிறது என்று சொன்னால், அதைக் குறிப்பிடலாம்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை,** Budget discussion போது அப்போதே நீங்கள் தெரிவித்திருக்கலாம். இப்போது நீங்கள் கேள்வி நேரத்தில் அமைச்சர் தெரிவித்த கருத்துக்கு....

திரு. பி. வி. இராஜேந்திரன் : அவர் சொன்னபோது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின் போது அதை எழுப்ப முடியாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : இதை எப்படி நீக்குகிறீர்கள்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

HON'BLE MR. SPEAKER: It is not relevant to the answer given by the Hon. Minister here.

THIRU P.V. RAJENDRAN: **

HON'BLE MR. SPEAKER: No Contradictions. You can raise it in some other way but not during the Question Hour.

THIRU P.V. RAJENDRAN: This has been presented by the Hon. Minister in the House.

HON'BLE MR. SPEAKER: But that cannot be discussed during the Question Hour அதனால் வேண்டாம். வேறுவிதமாக இதை நீங்கள் எழுப்பலாமே தவிர, கேள்வி நேரத்தின் போது எழுப்ப முடியாது.

THIRU P.V. RAJENDRAN: Here only I can elicit some information from the Minister.

HON'BLE MR. SPEAKER: During Question Hour. எழுப்ப முடியாது என்று இருக்கிறது. ஆகவே, During Question Hour இதைப் போன்ற பிரச்சினைகளை எழுப்ப முடியாது.

THIRU P.V. RAJENDRAN: How can I elicit information.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து வேண்டாம். மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் கேள்வி கேட்கின்ற போது குற்றச்சாட்டு கூடாது என்று இருக்கிறது. 1991-லே நடைபெற்றது, நடைபெற்றதா என்று கேளுங்கள், இல்லையா என்று கேளுங்கள்; 1991-லே நடைபெற்றதா, இல்லையா என்று கேளுங்கள். ஆனால், குற்றச்சாட்டுச் சொல்லாமல், ''இப்படிச் சொல்லப்பட்டு இருக்கிறதே, அது நிறைவேற்றப்பட்டதா?'' என்று வேண்டுமானால் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி நீங்கள் கேளுங்கள். அது தான் அமைச்சர் விளக்கம். ஏற்கனவே கொள்கை விளக்கக் குறிப்பில் நீங்கள் இவ்வாறு தெரிவித்து இருக்கிறீர்கள். அது இப்போது எந்த நிலையிலே இருக்கிறது என்று வேண்டுமானால் கேளுங்கள். கேள்வியை அந்த மாதிரி மாற்றிக் கொள்ளலாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து 3 ஆண்டுகளாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில், 1992—93 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 9-லும், 1993—94 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 10-லும், 1991-92 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 8-லும் வெள்ளப் பள்ளத்திற்கு ஷோர் பெசிலிட்டீஸ் உண்டு என்று சொல்லி இருக்கிறார்கள். மத்திய அரசுக்கும் தன்னுடைய ரிவைஸ்டு எஸ்டிமேட்டை அனுப்பி 30.01 லட்சத்துக்கு அட்மினிஸ்ட்ரேடிவ் சேங்க்ஷன் வாங்கி இருப்பதாகவும் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், தற்போது அவர்கள் அளித்து இருக்கின்ற விளக்கத்தில் வெள்ளப்பள்ளத்திற்கு அப்படி ஒரு திட்டம் இல்லை என்று சொல்லுகிறார்கள். இதற்கு மேல் விளக்கத்தை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :- மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 500 கடற்கரை கிராமங்களும் எல்லா அடிப்படை வசதிகளையும் பெற வேண்டும் என்பது நமது புரட்சித் தலைவி இதய தெய்வம் டாக்டர் தமிழக முதல்வர் அவர்களுடைய விருப்பம் ஆகும். அந்த அடிப்படையிலே தான் கடந்த எந்த ஒரு காலத்திலும் எந்த ஒரு அரசும் சிந்தித்திராத வகையிலே, ஒரு தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையிலே இந்த 500 கிராமங்களிலும் சாலை வசதி, குடிநீர் வசதி, தங்குதள வசதி, சமுதாயக் கூடங்கள், அங்கு வசிக்கின்ற மக்களுக்கு வீடுகள் போன்ற இன்னும் அனைத்து வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. அத்தோடு மட்டுமல்லாமல், சில கிராமங்களிலே இந்த அடிப்படை வசதிகளை உடனடியாகப் பெற வேண்டும் என்பதற்காக 50 சதவீதம் நமது தமிழக அரசினுடைய உதவிக்கு அட்மினிஸ்ரேட்டிவ் அப்ரூவல் கொடுத்து, மீதி 50 சதவீதம் மத்திய அரசினுடைய உதவியைக் கோரி இருக்கின்றோம். அந்தச் சில கிராமங்களில் தான், அங்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறிய வெள்ளப்பள்ளம் என்ற இடம் வருகின்றது. நாங்கள் அட்மினிஸ்ரேட்டிங் அப்ரூவல் கேட்டு மத்திய அரசினுடைய உதவியை கோரி இருக்கிறோம். ஆனால் மத்திய அரசு இதுவரையில் அட்மினிஸ்ரேட்டிவ் அப்ரூவல் கொடுக்கவில்லை என்ற செய்தியை வருத்தத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் :- அடுத்த துணைக் கேள்வி.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அட்மினிஸ்ரேட்டிவ் சாங்ஷன் தரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார். அவர் இந்த அவையிலே 1993–94 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பை தமிழிலே வாசித்ததாகப் பதிவு செய்யச் சொல்லி, பதிவு செய்யப்பட்ட அவருடைய அறிக்கையில் பக்கம் 10, நான்காவது பாராவில் ரூ. 30.01 இலட்சத்திற்கு இந்திய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது என்றே சொல்லியிருக்கிறார். இப்போது இப்படிச் சொன்னால்—இப்படிப்பட்ட பதில்கள் எங்களை திருப்திபடுத்துமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிற்குத் தான் நான் சொல்ல வந்தேன். ஏற்கனவே போடப்பட்டிருந்த அந்த மதிப்பீட்டிற்கு திருத்திய மதிப்பீடு கோரி, அதற்கு அந்த ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிற்கு அப்ரூவல் கொடுக்கவில்லை என்று தான் சொல்ல வந்தேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிற்கு அட்மினிஸ்ட்ரேட்டிவ சாங்ஷன் வரவில்லை என்று சொல்கிறார். (குறுக்கீடு) இல்லை. அவர், நாங்கள் ரிவைஸ்ட் எஸ்டிமேட் அனுப்பி இருந்தோம்; அதற்கு இன்னும் அட்மினிஸ்ட்ரேட்டிவ் சாங்ஷன் வரவில்லை என்று தான் சொல்கிறார்.

உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடா வினாக்கள் *

(முதல் பட்டியல்)

1—

சேலத்தில் குடும்ப நல நீதிமன்றம் அமைத்தல்.

வினா எண் 11899—திரு. எஸ். ஆர். ஜெய்ராமன் மற்றும் டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலத்தில் குடும்ப நல நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

* 1 முதல் 18 பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

(அ) சேலத்தில் குடும்ப நல நீதிமன்றம் அமைக்கும் செயற் குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

2—

ஆலங்குடி வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண் 16268—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டத்தை இரண்டாகப் பிரித்து கறம்பக்குடியை மையமாகக் கொண்டு தனி தாலுக்காவாக அறிவிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3—

வேதாரண்யம் ஒன்றியத்தில் கூடுதல் ஆசிரியர்கள் நியமித்தல்.

வினா எண் 5346—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாணை எண் 250, கல்வி, நாள் 29—2—1964-ன் படி, பள்ளிகளில் மாணவர்களின் விகிதாச்சாரப்படி ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், வேதாரண்யம் ஒன்றியத்தில் உள்ள ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியர்கள் மிகவும் குறைவாக உள்ள தால் இந்த விகிதாச்சாரப்படி 200-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): இயலாததாகும்.

4—

இராஜக்காமங்கலம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண் 8913—திரு. ஆ. பாலையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, இராஜக்காமங்கலம் உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த அரசு அனுமதி வழங்குமா?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

குளச்சல்தொகுதி, இராஜாக்காமங்கலம் அரசினர் உயர் நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த 29-5-1992ல் நடைபெற்ற உயர்மட்டக் குழுக் கூட்டத்தின் தேர்வுக்கு வைக்கப் பட்டது. ஆனால், இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கிட அக்குழுவினால் தெரிவு செய்யப்படவில்லையாதலால் இதனை மேல்நிலைப் பள்ளியாக 1992-93 ஆம் ஆண்டில் உயர்த்த இயலவில்லை.

*விடை—13—4—1993 ஆம் நாளிட்டது.

**விடை—16—5—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

5—

தமிழகத்தில் கல்வித் தரத்தினை உயர்த்திட நடவடிக்கை.

வினா எண் 9916—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அரசுப் பள்ளிகளில் கல்வித் தரம் மிகவும் பின்தங்கியுள்ளதற்கான காரணங்களை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கல்வித் தரத்தினை உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) அரசுப் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6—

பள்ளிப் பதிவேட்டில் மாணவரின் சாதியை குறிக்காமல் இருக்க நடவடிக்கை.

வினா எண் 10062—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாணவர்களைப் பள்ளிகளில் சேர்க்கும்போது ஆசிரியர்கள், மாணவரின் சாதியை பள்ளிப் பதிவேட்டில் குறிக்காமல் இருக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :
இடைநிலைப் பள்ளிச் சான்றிதழ் மற்றும் மாற்றல் சான்றிதழ் ஆகியவற்றில் ''சாதி இல்லை'' ''சமயம் இல்லை'' என்று குறிப்பிடவோ, அந்த இருபத்திகளுக்கும் எதிராக இடத்தைக் காலியாக விடவோ எவரும் விரும்பினால், அவ்வாறே செய்யும் உரிமை பெற்றோர்களுக்கு அளிக்கப்படுகிறது. இந்நிலையில், மாணவர்களைப் பள்ளிகளில் சேர்க்கும் போது அவர்களின் சாதி பெயரை பள்ளிப் பதிவேட்டில் குறிக்காமல் இருக்க புதிய நடைமுறை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*விடை 14—9—1992 ஆம் நாளிட்டது.

**விடை—29—3—1993 ஆம் நாளிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1993 அக்டோபர் 26

7—

அரசு நிகழ்ச்சிகளில் கடவுள் வணக்கப் பாடலைத் தேர்ந்தெடுத்தல்.

வினா எண் 10072—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

அரசு நிகழ்ச்சிகளில் பாடுவதற்கு எல்லா சமயத்தைச் சார்ந்தவர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு கடவுள் வணக்கப் பாடலைத் தேர்ந்தெடுக்க அரசு முன் வருமா?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இப்போது பாடப்பட்டு வரும் தமிழ்த்தாய் வாழ்த்தினை அனைத்துச் சமயங்களுக்கும் பொருநிலை மொழி வாழ்த்தாகப் பொருந்துவதாகவே கொள்ளலாம். தமிழ் மொழியைத் தெய்வமாகக் கருதி வணங்குவதும் நமது மரபு. ஆதலால் வேறு ஒரு பாடலைத் கருதிப் பார்க்கின்ற தேவை எதுவும் எழவில்லை என்று அரசு கருதுகிறது.

8—

தனியார் கல்லூரிகளில் முறைகேடுகள் நடக்காமலிருக்க சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட கண்காணிப்புக் குழு அமைத்தல்.

வினா எண் 10371—திரு. கே. செல்வராஜ் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) தனியார் கல்லூரிகளில் முறைகேடுகள் நடக்காமல் இருக்க சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட கண்காணிப்புக் குழு மாநில-மாவட்ட அளவில் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நியமிக்கப்படும்?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) இது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) பதிலளிக்கும் நிலை எழவில்லை.

*விடை—14—12—1992 ஆம் நாளிட்டது.

**விடை—12—2—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

9—

திருவான்மியூரிலிருந்து ஈஞ்சம்பாக்கம் வரையிலுள்ள பகுதியில் உயர்நிலைப்பள்ளி துவக்குதல்.

வினா எண் 10914—திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு கல்விஅமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்குவிடையளிப்பாரா—

திருவான்மியூரிலிருந்து ஈஞ்சம்பாக்கம் வரையுள்ள பகுதியில் உயர்நிலைப்பள்ளி துவக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

?விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

திருவான்மியூரிலிருந்து ஈஞ்சம்பாக்கம் வரையுள்ள பகுதியில் உயர்நிலைப்பள்ளி துவக்க முன்மொழிவுகள் முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் பெறப்பட்டால், அப் பகுதியில் உயர்நிலைப் பள்ளி தேவை அடிப்படையில், இதர நிபந்தனைகள் பூர்த்தி செய்யும் பட்சத்தில் பரிசீலிக்கப்படும்.

10—

அரசு மானிய உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவப்படி வழங்கல்.

வினா எண் 11014—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் மருத்துவப்படி 1—6—1988 முதல் அரசு மானிய உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அரசு ஊழியர்களுக்கு மருத்துவப்படியாக மாதந்தோறும் ரூ. 15 வழங்கப்படுகிறது. இந்தச் சலுகையினை அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நீட்டித்து அரசாணை (நிலை) எண். 530 கல்வித்

*விடை—29—3—1993 ஆம் நாளிட்டது.

**விடை—1—4—1993 ஆம் நாளிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

துறை, நாள் 11—4—90-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையின்படி 1—4—90 முதல் மேற்படி சலுகையினை உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் பணியாளர்களும் பெற்று வருகின்றனர். இச்சலுகையை முன் தேதியிட்டு 1—6—1988 முதல் மாதந்தோறும் வழங்க இயலாது.

11—

பனஞ்சேரியில் புதிதாக ஓராசிரியர் பள்ளித் தொடங்குதல்.

வினா எண் 11482—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வலப் பெருமான்காடு ஊராட்சி பனஞ்சேரியில் 1992–93-ல் புதிதாக ஓராசிரியர் பள்ளித் தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

''ஏதும் இல்லை''.

12—

திருவோணம் ஊராட்சி ஒன்றியம், அதம்பை தெற்கில் தொடக்கப் பள்ளி தொடங்குதல்.

வினா எண் 11606—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஊராட்சி ஒன்றியம், அதம்பை தெற்கில் 1992–93-ல் தொடக்கப்பள்ளி தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

செயற் குறிப்பு ஏதும் இல்லை.

*விடை—2—4—1993 ஆம் நாளிட்டது.

**விடை—27—3—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

13—

துவக்கப்பள்ளிகளில் 6ஆம் வகுப்பு, 7ஆம் வகுப்புத் துவங்கிட அனுமதி அளித்தல்.

வினா எண் 12134—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வரும் கல்வி ஆண்டில் துவக்கப்பள்ளிகளில் 6ஆம் வகுப்பு 7ஆம் வகுப்பு துவங்கிட அனுமதி அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை. ஆனால் இவ்வாண்டில் 58 பஞ்சாயத்து யூனியன் துவக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

14—

புதுக்கோட்டையிலுள்ள அரசு கலைக் கல்லூரி, பெண்கள் கலைக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வீடுகட்டிக் கொடுத்தல்.

வினா எண் 12724—திரு சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் இருக்கும் அரசு கலைக் கல்லூரி, பெண்கள் கலைக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு தனியாக வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இல்லை

15—

கட்டயன்காடு தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் 13211—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, கட்டயன்காடு தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்கவும் போதிய தளவாட சாமான்கள் வழங்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை-8—1—1993ஆம் நாளிட்டது.

**விடை-3—11—1992ஆம் நாளிட்டது.

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

ஏதும் இல்லை.

16—

பூவானம் தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்கள் நியமித்தல்.

வினா எண் 13218—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பூவானம் தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

ஏதும் இல்லை

17—

செருபாலக்கோடு தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்கள் நியமித்தல்.

வினா எண் 13222—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி செருபாலக்கோடு தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்கள் நியமனம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

***விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

ஏதும் இல்லை.

* விடை-13—4—1992ஆம் நாளிட்டது.

** விடை-13—4—1993ஆம் நாளிட்டது.

*** விடை-13—4—1993ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

18—

கரம்பக்காடு தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்கள் நியமித்தல்.

வினா எண். 13223—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, கரம்பக்காடு தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை.

19—

புதுப்பட்டினம் தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்கள் நியமித்தல்.

வினா எண் 13226—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, புதுப்பட்டினம் தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை.

20—

காயாவூர் தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்கள் நியமித்தல்.

வினா எண் 13229—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, காயாவூர் தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

* விடை—13—4—1993ஆம் நாளிட்டது.

** விடை—13—4—1993ஆம் நாளிட்டது.

* விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இல்லை.

21—

பேராவூரணி, ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பெண்கள் மேல் நிலைப்பள்ளி, இடையாத்தி ஆகிய இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு மேஜை நாற்காலிகள் வழங்கல்.

வினா எண் 14199—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஆண்கள் மேல் நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளிகட்கும், இடையாத்தி, ஏனாதிக்கரம்பை, பைங்கால் ஆகிய இடங்களில் உயர் நிலைப் பள்ளிகளுக்கு மேஜை நாற்காலிகள் தளவாடச் சாமான்கள் போதிய அளவு வழங்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

** விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஆண்கள் மேல் நிலைப்பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளிகட்கும் இடையாத்தி, ஏனாதிக்கரம்பை, பைங்கால் ஆகிய இடங்களில் உயர் நிலைப் பள்ளிகட்கும் மேஜை, நாற்காலி போன்ற தளவாடச் சாமான்கள் போதிய அளவு வழங்க 1992-93-ல் செயற்குறிப்பு ஏதுமில்லை. மேலும், புதிய தளவாடச் சாமான்கள் வாங்க தடை ஆணை வழங்கப்பட்டுள்ளது.

22—

பெருமகளூர், மேல்நிலைப்பள்ளிக்கு தளவாடச் சாமான்கள், கட்டிட வசதி, ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குதல்.

வினா எண் 15848—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவா சத்திரம் ஒன்றியம், பெருமகளூர் மேல்நிலைப்பள்ளிக்கு தளவாட சாமான்கள், கட்டிட வசதி, ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் 1992-93-ல் செயற் குறிப்பு உள்ளதா?

* விடை—13—4—1993ஆம் நாளிட்டது.

** விடை—18—3—1993ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

அரசின் நிதி நெருக்கடி காரணமாக பள்ளிகளுக்கு புதிய தளவாட சாமான்கள் வாங்குவதற்கு பொதுத் தடை உள்ளது. நடப்பு நிதியாண்டில் அரசு உயர்நிலை மேல்நிலைப்பள்ளிகளுக்கு கட்டிடம் கட்ட அரசாணை வழங்கப்பட்டுவிட்ட நிலையில் இப்பள்ளிக்கு கட்டிடம் கட்டும் கருத்துரு வரும் நிதியாண்டில், நிதிநிலைமைக்கேற்ப, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அரசின் நிதிநிலையினைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் மிகக் குறைந்த ஆசிரியர் பணியிடங்களை அனுமதித்து வரப்படுகிறது. அப்பணியிடங்கள் அனைத்தும் எல்லா முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. அப்பணியிடங்களால் எல்லா பள்ளிகளும் உடனடித் தேவையை பூர்த்தி செய்ய இயலுவதில்லை.

23—

ஓசூர் மருத்துவமனையில் அவசரச் சிகிச்சைப் பிரிவு தொடங்குதல்.

வினா எண் 9026—திரு கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓசூர் மருத்துவமனையில் ஒரு அவசர சிகிச்சைப் (Accident Casuality) பிரிவு தொடங்க அரசு ஆவண செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு க. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

ஓசூர் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்குவது பற்றிய கருத்துரு நிதி நிலைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும்.

24—

திருநின்றவூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 9514—திரு டி. சுதர்சனம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநின்றவூர் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

*விடை-29 – 3 - 1993 ஆம் நாளிட்டது.

விடை—

மாண்புமிகு திரு. க. முத்துசாமி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ; பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத்தைத் சேர்ந்த திருநின்றவூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு இனிவரும் காலத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும்போது நிதிநிலைக் கேற்ப பரிசீலிக்கப்படும்.

25—

பெத்தநாயக்கனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 9971—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆனைமலை ஒன்றியம். பெத்தநாயக்கனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையம் 28—12—1988 முதல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாக ஆனைமலை ஒன்றியத்தில் செயல்பட்டு வருகின்றது.

25—

அரசு மருத்துவமனையில் பணிபுரியும் அடிப்படை ஊழியர்களுக் சீருடைகள், பதவி உயர்வு கொடுத்தல்.

வினா எண் 9980—திரு. கே. செல்வராஜ் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனையில் பணிபுரியும் அடிப்படை ஊழியர்களுக்கு சீருடைகள், பணியில் அடிப்படை பதவி உயர்வு வாரிசு அடிப்படையில் வேலை வாய்ப்பு செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

ஆ, ஆம் எனில், விவரம் என்ன

[1993 அக்டோபர் 26

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை மைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) அரசு மருத்துவமனையில் பணிபுரியும் அனைத்து அடிப்படை ஊழியர்களுக்கும் சீருடைகள் வழங்கப்படுகின்றன. அடிதளப்பணியாளர்களுக்கு அவர்களுடைய கல்வித் தகுதி, மற்றும் பணி முதுநிலைப்படி செவிலியர் உதவியாளர் அலுவலக உதவியாளர் மற்றும் பதிவுரு எழுத்தர் ஆகிய பதவிகளில் பணி புரிய அவர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் அடிப்படை பணியாளர்களின் குடும்பத்தாருக்கு வாரிசு அடிப்படையில் வேலைவாய்ப்பு கொடுக்க அரசு விதிகளில் இட மில்லை. பணியில் இருக்கும்போது இறந்துபோன அரசு ஊழி யர்களின் வாரிசுதாரர்களுக்கு மட்டுமே கருணை அடிப்படையில் பணி வழங்குவது நடைமுறையில் இருந்து வருகிறது.

27—

ஊட்டி தலைமை மருத்துவமனைக்கு போதிய மருத்துவர்கள் செவியர்கள் மருத்துவ கருவிகள், கட்டிட வசதி மற்றும், சுகாதார வசதி செய்தல்.

வினா எண் 10124—திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டி தலைமை மருத்துவமனைக்கு போதிய மருத்துவர்களும், செவிலியர்களும், மருத்துவக் கருவிகளும், கட்டிட வசதியும் சுகாதார வசதியும் செய்யும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஊட்டி தலைமை மருத்துவமனைக்கு மேற்கொண்டு மருத்துவர்களும், செவிலியர்களும், மருத்துவக் கருவிகளும், கட்டிட வசதியும் சுகாதார வசதியும் செய்யும் செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

28—

பெருங்களூரில் இயங்கும் ஆரம்ப சுகாதார மகப்பேறு பிரிவை விரிவுபடுத்துதல்.

வினா எண் 10216—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதியில் பெருங்களூரில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறு பிரிவை விரிவுபடுத்தவும் மற்றும் ஒரு பெண் மருத்துவர் நியமிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

புதுக்கோட்டை தொகுதியில் பெருங்களூரில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு பிரிவை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. டி.ஜி.ஓ. படிப்பு பயின்ற பெண் மருத்துவர் ஒருவர் பெருங்களூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

29—

சென்னை நகரில் மலேரியா காய்ச்சலைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 10324—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலேரியா காய்ச்சல் நமது மாநிலத்தில் சராசரி அளவைவிட சென்னை நகரில் அதிகமாக உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) சென்னை மாநகரில் மலேரியா முறை காய்ச்சல் அதிகமாக உள்ளதை அரசு அறியும்.

1993 அக்டோபர் 26]

(ஆ) வீடுகளில் சுத்தமாக தண்ணீர் உள்ள கிணறுகள் மேல்நிலை, கீழ்நிலை தொட்டிகள் மூடப்படாத காரணத்தால் கொசுக்கள் அதிக அளவு உற்பத்தியாகின்றன. இந்நீர்நிலைகளை விஞ்ஞான முறையில் மூடி பாதுகாக்க சென்னை மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்பணிக்கு மாநகராட்சி ஒப்பந்தகாரர்களை அமர்த்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் சென்னையில் மாநகராட்சிக்கு உட்பட்ட வீடுகளில் உள்ள 31,135 நீர்நிலைகளை விஞ்ஞான முறையில் மூடி பாதுகாக்க உரிமையாளர்களுக்கு தாக்கீது கொடுக்கப்பட்டுள்ளது. புதிதாக கட்டப்படும் வீடுகளில் நீர் நிலைகளை விஞ்ஞான முறையில் கட்டாயமாக மூடுவதற்கு சட்டம் கொண்டுவர சென்னை மாநகராட்சி கருதியுள்ளது. மேலும் சென்னை மாநகரில் மலேரியா முறை காய்ச்சல் அதிகமாக உள்ள பகுதிகளில் தீவிர கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு அதிக தொழிலாளர்களை அந்த இடங்களில் பணியில் அமர்த்தி கொசு மற்றும் கொசு புழுக்கள் உற்பத்தியாகும் இடங்களில் பூச்சிக் கொல்லி மருந்து தெளித்து சிறப்பு பணி நடைபெற்று வருகிறது. மற்றும் கொசு அதிகம் உற்பத்தியாகும் இடங்களில் இயந்திரங்கள் மூலமாக கொசு ஒழிப்பு புகை பரப்பி கொசுவினை ஒழிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

30—

வலையங்குளத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 10355—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

மதுரை தெற்கு தாலூகா வலையங்குளத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிதாக கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ;

தேவையான நிலம் கையகப்படுத்திய பின்னர், வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப கட்டிடம் கட்டும் திட்டம் பரிசீலிக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

31—

வாரியங்காவல் கிராமத்தில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 10597—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் வாரியங்காவல் கிராமத்தில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதியில் வாரியங் காவல் கிராமத்தில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட சுமார் 4.99 ஏக்கர் புறம்போக்கு நிலம் வருவாய் துறையிடமிருந்து மருத்துவத் துறைக்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப் பட்ட பின்னர் வரும் ஆண்டுகளில் அரசின் நிதி ஆதாரங் களைப் பொறுத்து பரிசீலிக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

32—

தமிழ்நாட்டில் தோல் பதனிடுவோர்களால் ஏற்படும் நிலத்தடி நீர் மாற்றத்தை தடுத்தல்.

வினா எண் 10816—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் தோல் பதனிடுவோர்களால் ஏற்படும் நிலத்தடி நீர் மாற்றத்தை தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

நிலத்தடி நீர் மாசுபடாமல் இருக்க தமிழ்நாட்டிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் செயல்முறைக் கழிவு நீரினை சுத்திகரிப்பு செய்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடைந்த பிறகு வெளியேற்ற வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

33—

மருந்துகளில் கலப்படத்தைத் தடுக்கும் சிறப்புத் திட்டம்.

வினா எண் 10823—திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருந்துகளில் கலப்படத்தைத் தடுக்கும் சிறப்புத் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மருந்து மற்றும் அழகுசாதன பொருள் சட்டத்தின் கீழ் மருந்து கலப்படம் செய்வோரின்மீது மாநில மருந்துக் கட்டுப்பாடு துறையினரால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மருந்துகள் தயாரிக்கும் இடங்கள், விற்பனை நிலையங்கள், அரசு, தனியார் மருத்துவ நிலையங்கள் மற்றும் மருந்து விநியோகிக்கும் இடங்களில், மருந்து பட்டப்படிப்பு பெற்ற மருந்து ஆய்வாளர்கள் அடிக்கடி ஆய்வு செய்து, மாதிரிகள் பகுப்பாய்வுக்கு அனுப்பி பரிசோதித்து வருகின்றனர். தமிழ்நாடு மருந்துக் கட்டுப்பாடு இயக்குநரின் கீழ் புலனாய்வுப் பிரிவு ஒன்று, ஒரு துணை மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் மற்றும் மூன்று மருந்து ஆய்வாளர்களைக் கொண்டு வாகன வசதியுடன் இயங்கிவருகிறது. மருந்து

கலப்படம் செய்வோரின்மீதும் மற்றும் மருந்துக் கட்டுப்பாடு சட்டத்தை மீறுவோர்மீதும் மாநிலத்தில் உள்ள மற்ற மருந்து ஆய்வாளர்கள் உதவியுடன் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

34—

பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் உடல் தோற்றப்பொலிவு அறுவை சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல்.

வினா எண் 11770— திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெரியார் அரசு புறநகர் மருத்துவ மனையில் உடல் தோற்றப்பொலிவு அறுவை சிகிச்சைப்பிரிவு (பிளாஸ்டிக் சர்ஜரி) பிரிவை ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆமெனில், அதன் விவரமென்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு ஏதும் இல்லை.

35—

சென்னை பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் புற்று நோய்த் தடுப்பு சிகிச்சைப் பிரிவு தொடங்குதல்.

வினா எண் 11772— திரு. ப. ரங்கநாதன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் புற்றுநோய் தடுப்பு சிகிச்சை பிரிவைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் புற்றுநோய் தடுப்பு சிகிச்சைப் பிரிவைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

36—

அரசு புறநகர் மருத்துவமனையில் காசநோய் தடுப்பு சிகிச்சைப் பிரிவு துவங்குதல்.

வினா எண் 11773—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் காசநோய் தடுப்பு சிகிச்சைப் பிரிவை துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இம்மருத்துவமனையில் காசநோய் பிரிவு, சேத்துப்பட்டு டி. பி. சென்டரிலிருந்து ஐ. சி. எம். ஆர். மருத்துவர்களால் ஞாயிற்றுக்கிழமை தவிர, மற்ற நாட்களில் நடத்தப்படுகிறது. காசநோய் பிரிவு தனியாக அனுமதிக்க செயற்குறிப்பு இல்லை.

37—

திருவொற்றியூர், மணலி மற்றும் எண்ணூர் பகுதிகளில் சுற்றுச் சூழலை பாதுகாக்க மாசு கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை.

வினா எண் 11845—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர், மணலி மற்றும் எண்ணூர் பதிகளில் சுற்றுச் சூழலை பாதுகாக்க மாசு கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுக்குமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): திருவொற்றியூர், மணலி மற்றும் எண்ணூர் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளி வரும் கழிவு நீரினை சுத்திகரிப்பு செய்ய வழி வகைகள் செய்யப் பட்டுள்ளன.

38—

ஆனைக்குப்பத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 15655—டாக்டர் சு. கோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி நன்னிலம் ஒன்றியம் ஆனைக் குப்பத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தற்போது இல்லை. இனி வரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமைகளைப் பொறுத்தும் தேவைகளின் அடிப்படையிலும் பரிசீலிக்கப்படும்.

39—

கண்ணக்கன்காடு கிராமத்திற்கு மருத்துவ வசதி செய்தல்.

வினா எண் 15739—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினா வுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதியில் கண்ணக்கன்காடு கிராமத்திற்கு மருத்துவ வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே ஜனத் தொகைக்கு ஏற்ப ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதால் மேலும் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கண்ணக்கன்காடு கிராமத்தில் அமைப்பதற்குச் சாத்தியமில்லை.

40—

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் Gem என்று அழைக்கப்படும் திட்டம் அறிமுகப் படுத்துதல்.

வினா எண் 16014—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் Gem Global environmental Maintenance) என்று அழைக்கப்படும் திட்டம் 1992-93ல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப் படவிருக்கும் பணிகள் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியமும் இணைந்து செயற்படுத்தப்படும் இந்தத் திட்டத்தில் காவேரி நதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. காவேரி நதியின் நீர் மாதிரிகள் மாதம் ஒரு முறை சேகரிக்கப்பட்டு, பரிசோதிக்கப்படுவதின் மூலம் காவேரி நீரின் தன்மையினை கண்காணிக்கப் பயன்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

41—

தொலை தூரம் செல்லும் பஸ்களில் படுக்கை வசதி செய்தல்.

வினா எண் 9104—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொலை தூரம் செல்லும் பஸ்களில் படுக்கை வசதி கொண்ட பஸ்களும் விட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

42—

சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பேருந்துகளில் இருக்கைகள் ஒதுக்குதல்.

வினா எண் 9553—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அரசின் அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் உடனடியாகப் பயணம் செய்ய மிக முக்கியப் பிரமுகர்கள் இருக்கைகள் ஒதுக்கித் தர அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அமுல்படுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் ;

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் தொலை தூரப் பேருந்துகள் அனைத்திலும் சட்டமன்ற உறுப்பினர்கள் பயணம் செய்வதற்கென்று இரண்டு இருக்கைகள் ஏற்கெனவே ஒதுக்கப்

பட்டுள்ளன. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து களைப் பொறுத்தவரையில் இருக்கைகள் 3, 4, 5 மற்றும் 6 ஆகியவற்றை மறுக்கக் கூடும் என்ற நிபந்தனையுடன் பதிவு செய்தல் (RAC) என்ற வழிமுறையைப் பின்பற்றி பயணி களுக்கு ஒதுக்கலாம் என்று நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப் பட்டுள்ளார்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

43—

சுப்பையாபுரம் (சம்பங்குளம்) கிராமத்திற்கு பஸ் வசதி.

வினா எண் 10959— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை—கட்டபொம்மன் மாவட்டம். ஆலங்குளம் ஒன்றி யத்திலுள்ள சுப்பையாபுரம் (சம்பங்குளம்) கிராமத்திற்கு பஸ் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

44—

சென்னையில் ஆட்டோக்களில் மீட்டர் போடாமல் மொத்தமாக ஒரு தொகையை கொடுக்கக் கோருவதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 11039— திரு. நா. சா. பழனிசாமி : மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் ஆட்டோக்களில் மீட்டர் போடாமல் மொத்தமாக ஒரு தொகை கொடுக்க பயணிகளை நிர்பந்திப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

சென்னையில் ஆட்டோக்களில் மீட்டர் போட்டுத்தான் ஓட்ட வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. மேலும் முறைகேடுகளாக நடப்பவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆட்டோ ரிக்ஷாக்கள் இது குறித்து சோதனை செய்யப்பட்டு தணிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது. சமீபகாலமாக சோதனைகளும் தணிக்கையும் அதி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

45—

தமிழக அரசு போக்குவரத்துத் துறை மூலம் பார்சல் சர்வீஸ் பிரிவு நடத்துதல்.

வினா எண் 11553—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழக அரசு போக்குவரத்துத் துறை மூல[பார்சல் சர்வீஸ் பிரிவு நடத்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

46—

கோயம்புத்தூர் நகரில் பகல் நேரங்களில் வரும் லாரிகளைத் தடுத்து போக்குவரத்து நெரிசலைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 11596—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

(அ) கோயம்புத்தூர் நகரில் பகல் நேரங்களில் வரும் லாரிகளை தடுத்துப் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) லாரிகள் மீறி வந்தால் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) தற்பொழுது கோவை நகரில் பகல் நேரங்களில் காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும் மாலை 3 மணி முதல் 8 மணி வரையிலும் சில முக்கிய வீதிகளில் லாரிகள் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) போக்குவரத்துக் காவலர்களை நியமித்தும், அறிவிப்பு பலகைகள் நிறுவியும், லாரி போக்குவரத்துக் கட்டுப்படுத்தப்படுகிறது. மீறி வரும் லாரி ஓட்டுநர்கள் மீது போக்கு வரத்து விதிகள் மீறிய குற்றங்களுக்காக காவல் துறையினரால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

47—

தமிழ்நாட்டில் கல்வி நிலையங்கள் உள்ள பகுதிகளுக்கு சிறு பேருந்துகள் விடுதல்.

வினா எண் 11793—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் கல்வி நிலையங்கள் உள்ள பகுதிகளுக்கு காலைநேர கூட்ட நெரிசலைத் தவிர்க்கவும், மகளிர், குழந்தைகள் உடனடியாக தடையில்லாமல் பயணம் செய்யவும் சிறு பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

48—

கல்லூரி செல்லும் மாணவர்களுக்கு தனிப் பேருந்துகள் விடுதல்

வினா எண் 11794—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கல்லூரிகள் வரை செல்ல வசதியாக கல்லூரி உள்ள பகுதிகளுக்கு மாணவர்களுக்கென தனிப் பேருந்துகள் விட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) கல்லூரி மாணவர்களுக்கென தனிப் பேருந்துகளும், சிறப்புப் பேருந்துகளும் கல்லூரி வரை, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் தேவையான அளவிற்கு இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

49—

ஆம்னி பேருந்துகளின் மீதான வரியை மேலும் உயர்த்துதல்.

வினா எண் 12430—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆம்னி பேருந்துகளின் மீதான வரியை மேலும் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

50—

தமிழ்நாட்டில் செயற்கைப் பட்டு தயாரிக்கும் தொழிற்சாலையை அரசு மூலம் நிறுவுதல்.

வினா எண் 15040—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் செயற்கைப் பட்டு நூல் தயாரிக்கும் தொழிற்சாலையை அரசு மூலம் புதிதாக நிறுவும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

51—

கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு, அருவிக்கரை ஆகிய இரண்டு அணைக்கட்டுகளையும் உயர்த்திக்கட்டுதல்.

வினா எண் 11803—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திற்பரப்பு, அருவிக்கரை ஆகிய இரண்டு அணைக்கட்டுகளையும் 5 அடி உயர்த்தி நீரைத் தேக்கி விவசாயத்திற்கு பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1993 அக்டோபர் 26

52—

பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள பெரியபாலத்தை விரிவுபடுத்தல்.

வினா எண் 11824—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

கோயம்புத்தூர் மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையில் பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள பெரிய பாலத்தை விரிவு படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தற்போது இப்பாலத்தை விரிவு படுத்த இயலாது.

53—

வனபத்தி காளியம்மன் கோயில் அருகில் பாலம் கட்டுதல்.

வினா எண் 11825—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி ஆற்றின் குறுக்கே நெல்லித் துறை கிராமத்திற்குச் செல்ல வனபத்தி காளியம்மன் கோயில் அருகில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மைய அரசின் அனுமதியின் பின்னரே இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

1993 அக்டோபர் 26]

54—

பென்னாறு குறுக்கே பாலம் கட்டுதல்.

வினா எண் 11874—திரு. கே.ஏ. மனோகரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

ஒசூர்—முத்தாளி சாலையில் கி.மீ. 3/4 மற்றும் 6/2 பென்னாறு குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தற்போது இல்லை.

55—

நகர்ப்புற விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கல்.

வினா எண் 12254—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

நகர்ப்புற விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தற்பொழுது அனைத்து விவசாயிகளுக்கும் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுவதால் இவ்வினா எழவில்லை.

56—

மாவட்டந்தோறும் மின்சாரம் உற்பத்தி நிலையங்கள் தொடங்குதல்.

வினா எண் 12257—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் மின்சார உற்பத்தி நிலையங்கள் தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை

57—

பட்டுக்கோட்டை துணை மின் நிலையத்தில் 110கி வாட் சக்தி கொண்ட மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 12261—திரு. ஆர். சிங்காரம : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பட்டுக்கோட்டை துணை மின் நிலையத்தில் 110 கி. வாட் சக்தி கொண்ட மின் நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்

(ஆ) துணை மின் நிலையம் அமைக்க தகுதியான இடம் தற்போது தேர்வு செய்யப்படுகிறது. தகுதியான இடம் தேர்வு செய்யப்பட்டதும் துணை மின் நிலையம் நிறுவும் பணிகள் துவங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

58—

கோவை இராமநாதபுரத்தில் மாநகராட்சிக்காகப் பொதுப் பணித்துறையினரால் கட்டப்பட்ட பள்ளிக் கூடம் பழுதடைந்துள்ள நிலையிலுள்ளது

வினா எண் 14246—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையில் உள்ள இராமநாதபுரத்தில் மாநகராட்சிக்காகப் பொதுப் பணித்துறையினரால் கட்டப்பட்ட ஓர் பள்ளிக் கூடம் ஒரு முறை கூட பயன்படுத்த முடியாத அளவுக்குப் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

ஆம்.

59—

என். ஆர். ஈ. பி. திட்டத்தின் கீழ் அண்ணா மாவட்டத்தில் பயன்பெற்றோர்.

வினா எண் 6342—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) என். ஆர். ஈ.பி. திட்டத்தின் கீழ் கடந்த 3 ஆண்டுகளில் அளித்த நிதி உதவியிலிருந்து அண்ணா மாவட்டத்திற்கு அரசு வழங்கிய தொகை எவ்வளவு ?

(ஆ) அந்த நிதி உதவியுடன் மேற்படி காலத்தில் அண்ணா மாவட்டத்தில் எங்கெங்கு என்னென்ன பணிகள் செயல்படுத்தப்பட்டன ?

(இ) அவற்றினால் வேலை வாய்ப்பு பெற்றோர் மேற்படி காலத்தில் ஆண்டு வாரியாக ஆண், பெண்கள் எண்ணிக்கை விவரம் என்ன ?

* விடை—

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :</u>

(அ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் 1989-90 முதல் நடை முறையில் இல்லை. ஆனால், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் 1989—90 முதல் செயலாக்கத்தில் உள்ளது. மேற்படி திட்டத்தின்கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திற்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது :—

	(ரூபாய். இலட்சம்)
1989—90	827.68
1990—91	765.26
1991—92	738.52

<u>(ஆ) செயல்படுத்தப்பட்ட பணிகள் விவரம் :</u>

வரிசை எண்ணும் பணிகள் விவரமும்.	1989—90.	1990—91.	1991—92.
(1)	(2)	(3)	(4)
1. ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகள்.	1,500	2,100	1,960
2. ஜீவன்தாரா கிணறுகள்	64	..	111

* விடை—10—3—1993 ஆம்-நாளிட்டது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

வரிசை எண்ணும் பணிகள் விவரமும்.	1989–90.	1990–91.	1991–92.
(1)	(2)	(3)	(4)
3. பாசனக் குளங்கள்	353	45	37
4. கசிவு நீர்க்குட்டைகள்	..	..	57
5. பள்ளிக் கட்டிடங்கள்	4	24	22
6. ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள்.	28	74	..
7. சத்துணவு மையக் கட்டிடங்கள்.	..	..	27
8. சாலைகள் ..	..	264.2 கி.மீ.	117,74 கி.மீ.
9. ஊராட்சி பணிகள்	692	795	308

(இ) ஆண்கள், பெண்கள் எவ்வளவு பேர் வேலை வாய்ப்பு பெற்றனர் என்பதற்கான விவரங்கள் பெறப்பட வில்லை, ஆனால் கீழ்க்கண்டவாறு மனித சக்தி நாட்கள் உரு வாக்கப்பட்டுள்ளன—

1989–90 .. 38.392 இலட்சம்.

1990–91 .. 31.222 இலட்சம்.

1991–92 .. 35.936 இலட்சம்.

60—

மரக்காவலசை ஆதிதிராவிடர்களுக்கான மயானச் சாலையை கப்பிச் சாலையாகமாற்றுதல்.

வினா எண் 6560—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

53—302—11

தஞ்சை மாவட்டம், சேது பாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் மரக்காவலசை ஆதிதிராவிடர்களுக்கு மயனாச் சாலையை கப்பிச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் மரக்காவலசை ஆதி திராவிடர்களுக்கு மயானச் சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தர போதிய நிதி வசதி இல்லாததால் செயற் குறிப்பேதும் தற்போது இல்லை.

61—

மேட்டூர் நகரத்தில் புதிய விரிவான பேருந்து நிலையம் அமைத்தல்.

வினா எண். 9254—திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மேட்டூர் தொகுதியில் மேட்டூர் நகரத்தில் புதிய விரிவன பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செயுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—

மாண்புமிகு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மேட்டூர் நகரத்தில் புதிய பேருந்து நிலையம் ரூ. 25.00 இலட்சம் செலவில் அமைப்பதற்கு ஒப்புதல் மற்றும் தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

*விடை—10—3—1993 ஆம் நாளிட்டது.

**விடை—27—1—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

62—

கோட்டைக்காடு அருகில் ஓடும் வெள்ளாற்றில் ஒரு பெரிய ஆழ்குழாய்க்கிணறு அமைத்தல்.

வினா எண் 9837—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆண்டிமடம் தொகுதி செந்துறை ஒன்றியம் கோட்டைக்காடு அருகில் ஓடும் வெள்ளாற்றில் ஒருபெரிய ஆழ் குழாய் கிணறு அமைத்து கூட்டுக் குடி நீர் திட்டம் ஏற்படுத்த அரசின் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயற்படுத்தப்படும்?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

63—

ஒசூர் கெலவரபள்ளி கூட்டுக் குடிநீர் திட்டம்.

வினா எண் 10321—திரு. கே.ஏ. மனோகரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூர் கெலவரப்பள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

(ஆ) இத்திட்டம் விரைவில் செயல்பட ஆவன செய்யுமா

*விடை—4–1–1993 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இத்திட்டத்திற்கான பணிகள் துவக்கப்பட்டு தொடர்ந்து பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

(ஆ) 1993–94 ஆம் ஆண்டுக்குள் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு செயலுக்கு கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

64—

கோவை மாநகராட்சி தனி அதிகாரி மற்றும் இணையாளர் பதவிக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமித்தல்.

வினா எண் 10368—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் பதவிக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) கோவை மாநகராட்சி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் பதவிகளில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான் உள்ளனர்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*விடை—

*விடை— 1–9–199 ஆம் நாளிட்டது

8—9—1992 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

65—

ஆண்டி மடம் கிராமத்திற்கு கொள்ளிடத்திலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம்.

வினா எண். 10608—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் ஆண்டிமடம் கிராமத்திற்கு கொள்ளிடத்தில் இருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், கொள்ளிடத்தில் இருந்து குடி தண்ணீர் கொண்டு வர எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

* விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

66—

கணியம்பாடி காலனியில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல்.

வினா எண். 10923—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கணியம்பாடி காலனியில் குடி நீர் ஆதாரம் இன்மையால் அப்பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும் ?

*விடை 28–12–1992 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் கணியம் பாடி காலனிக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(b) Irregul ities at the Edaicode Agriculture Prim ry B nk in Kanyakuma i D strict.

67—

வினா எண் 81313—திரு. மா சுந்தரதாஸ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether the Government are aware of the irregul rittes to the Edaicode Agriculture Primary B nk Kanyakumari District and the detail of the action taken thereon

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

(அ) ஆம். தற்பொழுது தெரிய வந்துள்ளது.

(ஆ) இடைக்கோடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு 9-10-1990 முதல் 28.7.1991 வரை பொறுப்பிலிருந்த காலத்தில் கடன் வழங்கியதில் மற்றும் பணி நியமனம் செய்ததில் முறைகேடுகள் நடந்துள்ளன. இது தொடர்பாக 1983 ஆம் ஆண்டு தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 82-ன் கீழ் ஆய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*விடை 6—11—1992 ஆம் நாளிட்டது.

**விடை (18—3—1993 ஆம் நாளிட்டது).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

68—

கூட்டுறவு நிலவள வங்கிகளில் நில மேம்பாட்டுக் கடன்கோரி விண்ணப்பித்தல்.

வினா எண் 8478 திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு நிலவள வங்களில் நில மேப்பாட்டு கடன் கோரி விண்ணப்பித்து உடனடியாக கடன் கிடைக்காமல் தாமதம் ஆவது பற்றி அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(ஆ) நத்தம் தொகுதியில் இப்படிக் கடன் கோரி கடந்த மூன்று ஆண்டுகளில் விண்ணப்பித்தோர் மற்றும் கடன் பெற்றோர் எண்ணிக்கை எவ்வளவு?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

(அ) அப்படிப்பட்ட முறையீடுகள் ஏதும் வரவில்லை.

(ஆ) நத்தம் தொகுதியில் நில மேம்பாட்டுக் கடனாக புதிய கிணறு வெட்டுவது, பழைய கிணறு ஆழப்படுத்துதல், நிலச் சீர்திருத்தம், பைப் லைன் அமைத்தல் மற்றும் பம்ப் செட் அமைத்தல் ஆகியவற்றிற்கு கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கியுள்ள கடன் விவரம் கீழை தரப்பட்டுள்ளது.

வருடம்.		விண்ணப்பித்தோர்	அனுமதிக்கப்ப பட்டோர்	வழங்கப் பட்டதொகை (ரூபாய் இலட்சத்தில்)
(1)		(2)	(3)	(4)
1989–90	..	8	4	0.77
1990-91	..	9	4	0.93
	மொத்தஉ	17	8	1.70
1991—92	.	(விண்ணப்பங்கள் இல்லை)		

விடை—19—4—1993 ஆம் நாளிட்டது.

69—

சங்ககிரியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்.

வினா எண் 10109—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சங்ககிரியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :—

(அ) சங்ககிரியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் சாத்திய கூறுகள் தற்பொழுது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

70—

வால்பாறையில் பால் பதனிடும் நிலையம் தொடங்குதல்

வினா எண் 10338—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பறையில் பால் பதனிடும் நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

வால்பாறை பகுதியில் பால் பதனிடும் நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் மற்றும் தேவை இல்லை.

*6.11.1992 ஆம் நாளிட்டது.

**28.8.1992 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

71—

கூட்டுறவுச் சங்க கடன்களை ஈடுகட்ட மாநிலம் முழுவதும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு நிதி உதவி அளித்தல்.

வினா எண் 10756— திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1990 ஆம் ஆண்டு விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்க கடன்களை ஈடுகட்ட மாநிலம் முழுவதும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு இன்னும் நிதி உதவி அளிக்கவில்லையா?

(ஆ) ஆம் எனில், அரசு அளிக்க வேண்டிய தொகை எவ்வளவு?

(இ) காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ), (ஆ) மற்றும் (இ): 1990 ஆம் ஆண்டு வேளாண்மை கடன் நிவாரணத் திட்டத்தின்படி ஆகும் செலவு ரூபாய் 284.818 கோடியாகும். இதை மைய, மாநில அரசுகள் சரிசமமாக 50 : 50 என்ற விகிதத்தில் ஏற்க வேண்டும். மாநில அரசின் பங்கிற்கான தொகையை மைய அரசு கடனாக வழங்கும். இதுவரை இத்திட்டத்திற்காக ரூபாய் 253.406 கோடி அளிக்கப்பட்டது. அது கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு விட்டது. இதில் மைய அரசு ரூபாய் 119.203 கோடி மான்யமாகவும், ரூபாய் 134.203 கோடி மாநில அரசின் பங்காக கடனாகவும் ஆக மொத்தம் ரூபாய் 253.406 கோடி அளித்துள்ளது. மீதி ரூபாய் 31.412 கோடி கூட்டுறவுச் சங்கங்களுக்குக் திருப்பி அளிக்கப்பட வேண்டும்.

72—

சிறு விவசாயிகளுக்கு, விவசாயத் தேவைகளுக்காக அரசு வழங்கும் கடன் உதவியை வட்டியின்றி வழங்கல்.

வினா எண் 11188— திரு. எம். ஆண்டிஅம்பலம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

* 13–4–1993ஆம் நாளிட்டது.

ஒரு ஏக்கர் மற்றும் அதற்குக் குறைவான நிலப் பரப்புள்ள சிறு விவசாயிகளுக்குத் தங்கள் விவசாயத் தேவைகளுக்காக அரசு வழங்கும் கடன் உதவியை வட்டியின்றி வழங்க அரசு ஆவன செய்யுமா?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

கடன் உதவியை வட்டியின்றி வழங்க இயலாது.

73—

நீலகிரி மாவட்ட கிராமப்புறங்களிலுள்ள நியாய விலைக் கடைகளில் பச்சரிசிக்குப் பதிலாக புழுங்கல் அரிசி வழங்கல்.

வினா எண் 11687— திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்ட கிராமப்புறங்களில் உள்ள நியாய விலைக் கடைகளில் பச்சரிசிக்குப் பதிலாக புழுங்கல் அரிசியை வழங்க அரசு ஆவன செய்யுமா?

** விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

தற்பொழுது குடும்ப அட்டை ஒன்றுக்கு பெரியவர்களுக்கு 4 கிலோ அரிசி வீதமும், சிறியவர்களுக்கு 2 கிலோ அரிசி வீதமும் அதிகபட்சமாக 12 கிலோ அரிசி மாதமொன்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் கிராமப் பகுதி உள்பட எல்லா பகுதிகளுக்கும் மேற்குறிப்பிட்டுள்ள அளவுகளில் 8 கிலோ புழுங்கல் அரிசியும், 4 கிலோ பச்சரிசியும் வழங்கப்பட்டு வருகிறது- புழுங்கல் அரிசி கையிருப்பு சீராக அபிவிருத்தி அடைந்தால் பச்சரிசிக்குப் பதிலாக புழுங்கலரிசி வழங்க அரசு ஆவன செய்யும்.

* 20–1–1993 ஆம் நாளிட்டது.

** 23–11–1992 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

74—

மல்லிபட்டினத்தில் பால் வழங்கும் சங்கம் அமைத்தல்.

வினா எண் 12794—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதியில் உள்ள மல்லிபட்டினத்தில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, மல்லிப்பட்டினம் கிராமத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்ட ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், கடற்பகுதியாக உள்ளதினால் இயங்காமல் தற்போது கலைக்கப்பட்டுள்ளதால் இப்பகுதியில் மீண்டும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க வாய்ப்பில்லை.

75—

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு வங்கிகளில் பணி இடங்களை நிரப்புதல்.

வினா எண் 14706—திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள அநேக கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள பணி இடங்களை நிரப்பி அந்த வங்கிகள் சிறப்பாக செயல்பட அரசு வழி வகை செய்யுமா?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள பணியிடங்கள் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின்படி அவ்வப்போது நிரப்பப்படுகின்றன.

* 18–3–1993 ஆம் நாளிட்டது.

** 10–3–1993 ஆம் நாளிட்டது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

76—

பரமக்குடியில் இராமநாதபுர கூட்டுறவு வங்கி கட்டுவதற்கு இடம் தேர்வு செய்தல்.

வினா எண் 15141—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் இராமநாதபுர கூட்டுறவு வங்கி கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு கட்டப்படும்?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

77—

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்றோர்.

வினா எண் 16334—திரு. சு. மூர்த்தி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் எத்தனை பேர் பயிர்க்கடன் பெற்றுள்ளனர்?

(ஆ) அதில் ஆதிதிராவிடர் எத்தனை பேர் ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் 1—4—1992 முதல் 28—2—1993 வரை பயிர்க்கடன் பெற்ற நபர்கள் 57,978 ஆவர்.

(ஆ) அதில் ஆதி திராவிடர்கள் 8,533 ஆவர்.

* 13–4–1993 ஆம் நாளிட்டது.

**13–4–1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

78—

விவசாயிகளுக்கு ஓய்வூதியத் திட்டம் தொடங்கி, ஓய்வூதியம் வழங்கல்.

வினா எண் 13499—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு, விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் தொடங்கி, ஓய்வூதியம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

இல்லை.

79—

சென்னை மிருகவதை தடுப்புச் சங்கம்.

Question No. 1774—Thiru M. Sundaradoss ;

Will the Honourable Minister for Agriculture be pleased to state—

(*a*) Whether the SPCA at Madras have apprehended a number of persons for parading animals in the Madras city streets for their personal gain during 1991 and

(*b*) the details thereof.

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) இரண்டு நபர்கள்

(ஆ) சென்னை நகரத் தெருக்களில் மிருகங்களைத் தன் சொந்த ஆதாயத்திற்காகப் பயன்படுத்திய குற்றத்திற்காக இரண்டு நபர்கள் மீது சென்னை விலங்குவதை தடுப்புச் சங்கம் வழக்கு தொடர்ந்து தண்டிக்கப்பட்டு அபராதத் தொகை வசூலிக்கப்பட்டது.

80—

இராயப்பனார் கிராமத்தில் கோழி வளர்ப்பு விளக்கப்பண்ணை

வினா எண் 10304—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சின்னசேலம் தொகுதியில், இராயப்பனார் கிராமத்தில் கோழி வளர்ப்பு விளக்கப்பண்ணை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மைய அரசால் வறட்சிப் பகுதி என அறிவிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே வறட்சிக்கு இலக்காகும் பகுதிக்கான திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தென்னாற்காடு மாவட்டத்தில் எந்தவொரு ஊராட்சி ஒன்றியமும் வறட்சிக்குள்ளாகும் பகுதி என அறிவிக்கப்படவில்லை. எனவே, இராயப்பனார் கிராமத்தில், வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்பு விளக்கப்பண்ணை ஏற்படுத்த வாய்ப்பு இல்லை.

81—

விவசாயிகள் செம்மறி ஆடுகள் வளர்க்க அரசு கடன் வழங்குதல்

வினா எண் 10506—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு செம்மறி ஆடுகள் வளர்க்க அரசு கடன் உதவி மான்ய உதவியுடன் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) விவசாயிகள் செம்மறி ஆடுகள் வளர்க்க அரசின் மான்ய உதவியுடன் வங்கிகள் மூலம் கடன்கள் பெற கால்நடை பராமரிப்புத் துறை ஆவன செய்கின்றது. தனியாக அரசுக் கடன் உதவி ஏதும் வழங்கப்படுவதில்லை.

(ஆ) சிறப்பு மத்திய உதவித் திட்டம், சிறப்பு கால்நடை பெருக்குத் திட்டம் மற்றும் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் விவசாயிகள் மான்ய உதவியுடன் ஆடு வளர்ப்புக்குக் கடன்கள் பெற கால்நடை பராமரிப்புத் துறை ஆவன செய்கின்றது.

82—

கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர்களை நியமித்தல்

வினா எண் 10929—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) அவ்வப்போது காலியாகும் மண்டல இணை இயக்குநர் பதவிகளை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

[1993 அக்டோபர் 26

83—

தமிழ்நாட்டில் கால்நடை செயற்கைமுறை இனவிருத்தி நிலைய அலுவலகம் கொண்டு வருதல்.

வினா எண். 10931—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்த கால்நடை செயற்கைமுறை இனவிருத்தி நிலைய அலுவலகம் மீண்டும் செயல்முறைக்கு கொண்டுவர அரசு நடவடிக்கைகள் எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : கால்நடை செயற்கைமுறை இன விருத்தி பணிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி துணை இயக்குநர் மூலம் சீரிய முறையில் செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருவதால், கால்நடை செயற்கைமுறை இனவிருத்தி நிலையங்களைத் தனியே மீண்டும் அமைக்கும் அவசியம் ஏற்படவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

84—

கொண்டிகுளத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்குதல்.

வினா எண் 11355—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் கொண்டிகுளத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கொண்டிகுளத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்க தற்பொழுது செயற்குறிப்பு ஏதுமில்லை.

85—

கோவில்வாழ்க்கையில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

வினா எண் 12713—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, கோவில்வாழ்க்கையில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) தற்போது செயற்குறிப்பு இல்லை.

(ஆ) வரும் ஆண்டுகளில் ஆண்டிமடம் தொகுதி, கோவில் வாழ்க்கையில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இருப்பின் தகுதியின் அடிப்படையில் மேற்கண்ட கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

86—

வடரெங்கத்தில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

வினா எண் 12753—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் உள்ள வடரெங்கத்தில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சீர்காழி தொகுதியிலுள்ள வடரெங்கத்தில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இருப்பின் தகுதியின் அடிப்படையில் இனிவரும் ஆண்டுகளில் கால்நடை மருந்தகம் மேற்கண்ட கிராமத்தில் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

87—

பரமக்குடி தாலூகாவில் ஏற்பட்ட வெள்ளத்தினால் ஆடுகளுக்கு சேதம் மற்றும் காணை நோயைத் தடுத்தல்.

வினா எண் 16714—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தாலூகாவில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தினால் ஆடுகளுக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டது?

(ஆ) காணை நோயைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) வெள்ளத்தினால் ஆடுகளுக்கு எந்தவித சேதமுமில்லை.

(ஆ) காணை நோயைத் தடுக்க தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. இவ்வருடம் 11,873 காணை நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

1993 அக்டோபர் 26]

88—

நகர்ப்புறத்தில் கட்டப்படும் வீடுகளுக்கு ஒதுக்கப்படும் தொகையை அதிகரித்தல்.

வினா எண் 14865—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்களின் சார்பில் நகர்ப்புறத்தில் கட்டப்படும் வீடுகளுக்கு ஒதுக்கப்படும் தொகையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : கூட்டுறவுச் சங்கங்கள் சார்பில் நகர்ப்புறத்தில் கட்டப்படும் வீடுகளுக்கு ஒதுக்கப்படும் தொகையை அதிகரித்து அரசு (நிலை) எண். 866, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 16—12—1992இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

89—

பரமக்குடி கிராம வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கத்தில் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்குக் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

வினா எண் 15188—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி கிராம வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத்தில் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

ஹட்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்படும் நிதி உதவி தேவைக்கேற்ப போதுமானதாக இல்லாததால், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்குக் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க இயலாது.

90—

பெண்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் விதவைகள், உடல் ஊனமுற்றோர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோருக்கு இடம் ஒதுக்குதல்.

வினா எண் 9953—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெண்களுக்கு வேலை வாய்ப்பில் 30 சதவீதம் அறிவிக்கப்பட்டுள்ளதில் ஒரு குறிப்பிட்ட சதவீதம், விதவைகள், உடல் ஊனமுற்றவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோருக்கு ஒதுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

அரசு வேலை வாய்ப்பில் உடல் ஊனமுற்றவர்களுக்கு 3 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

91—

மூளை வளர்ச்சிக் குன்றிய இளம் பெண்களை திருமணம் செய்து கொள்ள முன்வரும் இளைஞர்களுக்குச் சலுகைகள் அளித்தல்.

வினா எண் 10023—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மூளை வளர்ச்சிக் குன்றிய இளம் பெண்களை திருமணம் செய்து கொள்ள முன்வரும் இளைஞர்களுக்கு ஏதேனும் சலுகைகள் அல்லது உதவித் தொகை கொடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

இல்லை.

92—

ஆவடியில் உள்ள சத்துணவுக் கூடங்களைப் புதுப்பித்தல்

வினா எண் 10260— திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடியில் உள்ள சத்துணவுக் கூடங்களைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சிடா ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படும் மையங்களில், 42 மையக்கட்டிடங்கள் பழுதுபார்க்க ரூ. 9,85,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆவடி நகரியத்தால் வேலை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

93—

கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்தல்.

வினா எண் 11413— திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கலப்புத் திருமணத் தம்பதியருக்கு கல்வி, அரசு வேலை வாய்ப்புக்களில் 5 முதல் 10 சதவிகிதம் தனியாக இட ஒதுக்கீடு அளிக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

கலப்புத் திருமணத் தம்பதியருக்கு தற்போது, கல்வி, அரசு வேலைவாய்ப்புக்களில் முன்னுரிமை, அளிக்கப்படுகிறது. தனியாக இட ஒதுக்கீடு அளிக்க இயலுமா என்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

94—

சத்துணவு அளிக்கும் திட்டத்திற்கு டாக்டர் புரட்சித் தலைவியின் வளச்சத்துணவுத் திட்டம் என்று பெயர் சூட்டல்.

வினா எண் 11894—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

6 மாதம் முதல் 3 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கும் திட்டத்திற்கு டாக்டர் புரட்சித் தலைவியின் வளச் சத்துணவுத் திட்டம் என்று பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :

மத்திய அரசுடனும் உலக வங்கியுடனும் தொடர்பு கொண்டு பரிசீலிக்கப்படும்.

95—

உளுத்தூர் கிராமத்தில் சத்துணவு மையம் அமைத்தல்

வினா எண் 12770—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், உளுந்தூர் கிராமத்தில் சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா '

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தேவையான இடங்களிலெல்லாம் ஆவன செய்ய, நன்கொடைகளையும், அரசு ஏற்கெனவே ஒதுக்கியுள்ள தொகைகளையும் பயன்படுத்திக் கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

96—

மேல் செங்காட்டுப்பட்டியிலிருந்து ஓடைகாட்டுப்புலியூர் வரை ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தார்ச்சாலை அமைத்தல்.

வினா எண் 9478—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தலைவாசல் தொகுதி, பச்சமலை ஊராட்சி மேல் செங்காட்டுப்பட்டியிலிருந்து ஓடைகாட்டுப்புதூர் வரை ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தார்ச்சாலை அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) :

சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதி, பச்சை மலை ஊராட்சி, மேல் செங்காட்டுப்பட்டியிலிருந்து ஓடைக்காட்டுப் புதூர் வரை ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1983ஆம் ஆண்டில் தார்ச்சாலை அமைக்கப் பட்டு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையிடம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டது. மேற்கண்ட சாலையை எதிர்வரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைக்கேற்ப சிறப்பு பராமரிப்பு மூலமோ அல்லது ஆண்டுப் பராமரிப்பு நிதியிலிருந்தோ கட்டம் கட்டமாகச் சீர் செய்யும் பணியை நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை மூலம் மேற்கொள்வது குறித்துப் பரிசீலிக்கப் படும்.

97—

மீனவர் காலனி வீடுகளை மீனளத்துறையே நேரடிப் பொறுப்பில் கட்டுதல்.

வினா எண் 14415—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களின் காலனி வீடுகளை மீனளத்துறையே நேரடிப் பொறுப்பில் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மீனவர் இலவச வீடுகட்டும் திட்டத்தின்கீழ் 1992–93ஆம் ஆண்டில் 2,000 வீடுகள் 28 கிராமங்களில் கட்டி வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வீடுகள் கட்டுமானப் பணியினை மீனளத்துறையில் உள்ள மீன்பிடி துறைமுக வட்டத்தின் பொறியியல் பிரிவின் பொறுப்பிலேயே செயல்படுத்திடவும் அரசு ஆணையிட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

98—

ஓசூர் கெலவரப்பள்ளி அணைப்பகுதியில் Tiger prawn வளர்க்கத் திட்டம்.

வினா எண் 17019—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் கெலவரப்பள்ளி அணைப்பகுதியில் தீவிர மீன் வளர்ப்புத் திட்டமான (Tiger prawn) வளர்க்க தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் திட்டம் ஏதாகிலும் தயாரித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. ப. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

99—

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் டான்சி நட்டத்தில் இயங்கி வருவதால் அங்கு பணியாளர்களை குறைக்கும் நடவடிக்கை

வினா எண் 9746—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் டான்சி நட்டத்தில் இயங்கி வருவதால் அங்கு பணியாளர்களைக் குறைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அவ்வாறு பணிநீக்கம் செய்யவிருக்கும் பணியாளர்களை வேறுஅரசுத்துறைநிறுவனங்களில் பணியமர்த்த தமிழ்நாடு சிட்டு நிதிக் கழகத்தின் பணியாளர்களுக்கு அரசாணை வெளியிட்டது போல் டான்சி பணியாளர்களுக்கும் வெளியிட அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில்துறை அமைச்சர் :

(அ) ஆம். தன்னிச்சை ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் பணியாளர்கள் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது.

(ஆ) பணியாளர்களை பணி நீக்கம் செய்ய தற்போது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

100—

புனித ஹஜ்யாத்திரை மேற்கொள்ளும் பயணிகள் நலன் கருதி ஹஜ்கமிட்டி கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 11827—திரு. எம். எம். எஸ். அபுல் ஹசன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புனித ஹஜ் யாத்திரை மேற்கொள்ளும் பயணிகள் நலன் கருதி ஹஜ் கமிட்டி கட்டிடம் கட்டுவதற்கு அரசு இடம் வழங்குமா ?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்டும் பணி எப்பொழுது தொடங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) நிலம் ஒதுக்கீடு கிடைத்ததும், தேவையான நிதி உதவி மற்றும் கட்டட வரைபட அனுமதி பெற்று கட்டடப் பணி துவங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

(இரண்டாம் பட்டியல்)

தர்மபுரி மாவட்டம் தென்கனிக் கோட்டையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் துவக்கம்.

வினா எண் 11905—திரு. மு, வெங்கடராம ரெட்டி: மாண்புமிகு சட்டததுறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

Whether the Government will open new Court of District Munsiff of Denkanikottai in Dharmapuri District ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர்:

கடந்த 27—3—1993 முதல் தர்மபுரி மாவட்டம் தென் கனிக்கோட்டையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் துவக்கப் பெற்றுள்ளது.

2—

ஆண்டிமடம் தொகுதி செந்துறையை தனி தாலுக்காவாக பிரிக்கும் திட்டம்.

வினா எண் 16134—திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறையை தனி தாலுக்காவாக பிரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இக்கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

3—

உயர்கல்வியைக் குறிக்கோள் இல்லாமல் பயிலும் மாணவ மாணவிகளுக்கு அறிவுரை வழங்கும் திட்டம்.

வினா எண் 9489—திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மிகுந்த பொருட் செலவில் பயிற்றுவிக்கப்படும் உயர்ந்த விஞ்ஞானக் கல்வியை திட்டவட்டமான குறிக்கோள் இல்லாமல் மாணவ மாணவிகள் கற்க விரும்பினால், அவர்கட்குத் தக்க அறிவுரை வழங்கி வேறு கலைத் துறையில் உள்ள பாடங்களைப் படித்துப் பட்டம் பெற அறிவுரை வழங்கப்படுமா?

* விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இல்லை.

4—

தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பணிக்கு சிறும்பான்மை பள்ளிகளில் பணி மூப்பு அடிப்படையில் நியமனம்.

வினா எண் 10512—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மானியம் பெறும் சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பதவிகள் பணி மூப்பு அடிப்படையில் நிரப்பாத நிலை இருக்கிறதாக அரசுக்கு முறையீடுகள் ஏதேனும் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில் அவற்றின் மீது அரசு எடுத்த நடவடிக்கை விவரம் என்ன?

** விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) அரசு மானியம் பெறுகின்ற சிறும்பான்மையினர் நடத்தும் சிறும்பான்மைப் பள்ளிகள் தமிழ்நாடு சிறும்பான்மை விதிகள் 1977 இல் வரையறுக்கப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. மேற்படி விதிகளில் ஆசிரியர்கள் மற்

*விடை—11—12—1992 ஆம் நாளிட்டது

**விடை—16—2—1993 ஆம் நாளிட்டது

1993 அக்டோபர் 26]

றும் தலைமையாசிரியர் நியமனங்கள் பணி மூப்பு அடிப்படையில் தான் செய்யப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்படவில்லை. மேலும் இவ்விதிகளில் ஆசிரியர்களுக்கு பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு மறுக்கப்பட்டால் மேலும் முறையீடு செய்வதற்கான விதிகளும் வரையறுக்கப்படவில்லை. எனவே, சிறும்பான்மை பள்ளிகளில் பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு மறுக்கப்பட்டாலும் துறை தலையிட இயலாத சூழ்நிலை உள்ளது.

(ஆ) மேலே கூறப்பட்டுள்ள சூழ்நிலையில் இக்கேள்விக்கு இடமில்லை.

5—

திருச்சியில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்கும் திட்டம்

வினா எண் 10582—டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

1992-93 ஆம் ஆண்டில் திருச்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்க உயர்த்தும் கருத்துரு ஏதும் அரசின் உயர்மட்டக் குழுவின் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை.

6—

மாநகராட்சி மற்றும் நகராட்சி பள்ளிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம், பணிக்கொடை, ஈட்டுத் தொகை பெறுவதில் காலதாமதம்.

வினா எண் 10834—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற பிறகு ஓய்வூதியம் பணிக்கொடை ஈட்டுத் தொகை ஆகியவற்றை பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாக அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

7—

மேல்நிலைப்பள்ளி வரை தொழிற்கல்வியை செயல்படுத்தும் திட்டம்.

வினா எண் 10836—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ப்ளஸ் டு வகுப்பு வரை தொழிற்கல்வி பிரிவை வெற்றிகரமாக மேலும் செயல்படுத்துவதற்கு வழிமுறை, ஆலோசனைகளுக்கு உயர்மட்டக்குழு ஏதேனும் அரசு அமைத்துள்ளதா ?

(ஆ) தொழிற்கல்வியை சிறப்புற செயல்படுத்த அரசு உலக வங்கியிடம் உதவி கோரியுள்ளதா ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

8—

அரசு பள்ளிகளில் பணிபுரிவோரின் ஓய்வுபெறும் வயதை 60 ஆக உயர்த்தும் திட்டம்.

வினா எண் 10838—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசின்கீழ் பணிபுரியும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது 60 ஆக உயர்த்த திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

*4–3–1993 ஆம் நாளிட்டது.

**16–2–1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்.

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

9—

பள்ளிக்கல்வியில் 9-ம் வகுப்பு மாணவ, மாணவியருக்கும் இலவசக் கல்வி.

வினா எண் 10842—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா

பள்ளிக் கல்வியில் 9 ஆம் வகுப்பு மாணவ, மாணவியரும் இலவசக் கல்வி சலுகைகளை பெறுவதற்கு வழிவகை செய்ய அரசு முன்வருமா ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

10—

பெருந்தோட்டத்திலுள்ள நடுநிலைப்பள்ளிக்கு ஆசிரியர் நியமிக்க நடவடிக்கை.

வினா எண் 10996—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் உள்ள பெருந்தோட்டத்தில் இருக்கும் நடுநிலைப் பள்ளிக்கு ஆசிரியர் நியமிக்க எப்போது அரசு நடவடிக்கை எடுக்கும்.

***விடை

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இவ்வூரில் நடுநிலைப் பள்ளி இல்லை.

*7—12—1992 ஆம் நாளிட்டது.)

**20-4-1993 ஆம் நாளிட்டது.

11—

பட்டுக்கோட்டை ஒன்றியம் கொண்டி குளத்தில் தொடக்கப் பள்ளி தொடங்கத் திட்டம்.

வினா எண் 11354—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கொண்டிகுளத்தில் ஓர் தொடக்கப்பள்ளி தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

*விடை

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் ;

இல்லை.

12—

பிறதுறை அலுவலர்கள் பள்ளியைப் பார்வையிட்டு ஆய்வுசெய்யும் முறை.

வினா எண் 12130—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்வித்துறை அல்லாத பிறதுறை அலுவலர்களும் பள்ளியைப் பார்வையிட்டு ஆய்வு செய்யும் முறையை ரத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

*15–4–1993 ஆம் நாளிட்டது.

**12–3–1993 ஆம் நாளிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

13—

ஆண்டிமடம் தொகுதி கோவில்— வாழ்க்கையில் ஓர் அரசினர் உயர் நிலைப்பள்ளி அமைக்கும் திட்டம்.

வினா எண் 12714—திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, கோவில் வாழ்க்கையில் இரு அரசினர் உயர்நிலைப்பள்ளி அமைத்துத்தர 1992-93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இல்லை.

14—

புதுக்கோட்டை தொகுதி கந்தவர்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 12735—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, கந்தவர்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் தனியாக அறிவியல் ஆய்வுக்கூடம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

***விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

ஒரு வகுப்பறையுடன் கூடிய அறிவியல் ஆய்வகம் இப்பள்ளியில் ஏற்கனவே உள்ளதால் தற்போதுள்ள நிதிநிலையில் தனியாக அறிவியல் ஆய்வகம் புதிதாக அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**விடை—12-3-1993 ஆம் நாளிட்டது.

***விடை—15-2-1993 ஆம் நாளிட்டது

15 —

சேரன் மகாதேவி—வீரவநல்லூர் பாரதியார் மேல் நிலைப்பள்ளி யில் அறிவியல் கூடததை விரிவாக்கம் செய்தல்.

வினா எண் 12856—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பாரதியார் அரசு மேல்நிலைப்பள்ளியில் 1990–91 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப் பட்டு இதுவரை விஞ்ஞானப் பிரிவுக்குரிய சாதனங்கள் வழங்கப் படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விஞ்ஞான சாதனங்கள் எப்பொழுது வழங்கப்படும் ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) அரசு அறியும்.

(ஆ) சிட்கோ மூலம் பொருட்கள் வழங்க துரித நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

16—

சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பாரதியார் அரசு மேல்நிலைப் பள்ளியில் முதுகலைத் தமிழ் ஆசிரியர் நியமனம்.

வினா எண் 12860—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பாரதியார் அரசு மேல்நிலைப்பள்ளியில் முதுநிலைத் தமிழாசிரியர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

வேறு பள்ளியிலிருந்து திரும்பப் பெறப்பட்ட முதுகலை ஆசிரியர் பணியிடம் ஒன்றை வீரவநல்லூர் அரசினர் மேல்நிலை

*விடை–19–3–1993 ஆம் நாளிட்டது.

**விடை–30–3–1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

பள்ளிக்கு 1—3—1993 இல் பள்ளிக் கல்வி இயக்குநர் ஒதுக்கீடு செய்துள்ளார். அப்பணியிடத்தில் நேரடி நியமனம் மூலம் முதுகலை தமிழ்மொழி ஆசிரியர் ஒருவர் நியமனம் செய்யப் பட்டுள்ளார்.

17—

பேராவூரணி தொகுதி—ஆலடிக்காடு தொடக்கப் பள்ளிக்குத் தேவையான ஆசிரியர்களை நியமிக்கும் திட்டம்.

வினா எண் 13221—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, ஆலடிக்காடு தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

ஏதும் இல்லை.

18—

அழகியநாயகிபுரம் தொடக்கப்பள்ளிக்குத் தேவையான ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் 13224—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, அழகிய நாயகிபுரம் தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

ஏதும் இல்லை.

*விடை–13–3–1993 ஆம் நாளிட்டது.

**விடை–21–4–1993 ஆம் நாளிட்டது.

19—

மன்னம்பந்தல் பஞ்சாயத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண் 14195—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம், மன்னம் பந்தல் பஞ்சாயத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த 1992–93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

ஏதும் இல்லை.

20—

பேராவூரணி தொகுதி—மணக்காடு ஊராட்சி பாங்கராங் கொல்லையில் தொடக்கப்பள்ளி துவங்கத் திட்டம்.

வினா எண் 14221—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மணக்காடு ஊராட்சி பாங்கராங்கொல்லையில் தொடக்கப்பள்ளி 1992—93-ல் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

ஏதும் இல்லை.

*விடை—22–4–1993 ஆம் நாளிட்டது.

*விடை—21–4–1993 ஆம் நாவிட்டது.

1993 அக்டோபர் 26]

21—

பரமக்குடி ஒன்றியம்— பார்த்திபனூரில் மாணவியர் மேல் நிலைப்பள்ளி ஆரம்பிக்கும் திட்டம்.

வினா எண் 15714— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஒன்றியம், பார்த்திபனூரில் மாணவியர் மேல்நிலைப்பள்ளி ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு தொடங்கப்படும் ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) 1992–93-ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஒன்றியம், பார்த்திபனூரில் மாணவியர் மேல்நிலைப் பள்ளி ஆரம்பிக்க கருத்துருக்கள் ஏதும் அரசின் உயர்மட்டக்குழு பரிசீலனைக்குள் பெறப்படவில்லை.

(ஆ) தற்போது எழவில்லை.

22—

பரமக்குடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம்.

வினா எண் 15746ஏ— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதா ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் எஸ். அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

ஆம்.

*19–3–1993 ஆம் நாளிட்டது.

**15–4–1993 ஆம் நாளிட்டது.

23—

வானூர் தொகுதி உப்பு வேலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிட வசதி.

வினா எண் 3762— திரு. எசெ. ஆறுமுகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதியில் வானூர் வட்டத்தில் உப்பு வேலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

வானூர் தொகுதி வானூர் வட்டத்தில் உப்பு வேலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்ட இது வரையிலும் யாரும் தேவையான நிலம் கொடுக்க முன் வரவில்லை தேவையான நிலம் கிடைக்கப்பெற்றதும் நிரந்தர கட்டிடம் கட்ட அரசு தக்கநடவடிக்கை எடுக்கும்.

24—

ஆனைமலை ஒன்றியம், பெத்தநாயக்கனூர் மற்றும் கம்பாள பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 5329— டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆனைமலை ஒன்றியம், பெத்தநாயக்கனூர் மற்றும் கம்பாளபட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆனைமலை ஒன்றியம் பெத்தநாயக்கனூர் கிராமத்தில் ஏற்கனவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. அந்த ஒன்றியத்தின் ஜனத்தொகைக்கேற்ப ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதால் மேலும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை கம்பாளபட்டி கிராமத்தில் அமைப்பதற்கு சாத்தியமில்லை.

25—

சென்னை பெரியார் நகரில் மருத்துவமனையில் செரிமான நலப் பிரிவு துவங்கும் திட்டம்.

வினா எண் 11774— திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெரியார் நகரில் உள்ள புறநகர் மருத்துவமனையில் செரிமான நலப் பிரிவு துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): செரிமான நலப்பிரிவு துவங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

26—

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளை வசதிபடுத்தும் திட்டம்.

வினா எண் 11836— திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1993 அக்டோபர் 2

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மருத்துவ மனைகளை சீர்படுத்தவும் மருந்துகள் சரியாக கிடைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்

(ஆ) அனைத்து மாவட்ட சுகாதாரப் பணி இணை இயக்குநர்களுக்கும் மருத்துவமனையின் நிர்வாகம், பராமரிப்பு மற்றும் மருந்துகள் சரியாக கிடைப்பது குறித்தும் அரசு அறிவுரை வழங்கி உள்ளது. பேணுகையும் பராமரிப்பும் என்ற தலைப்பில் மருத்துவமனைகளுக்காக ரூ. 3.43 கோடி ரூபாயை மருத்துவப் பிரிவுக்கென பழுதுபார்க்கும் வேலை களுக்கு அரசு ஒதுக்கியுள்ளது. 1991–92-ஆம் ஆண்டில் நின்றுபோன வேலைகளை 1992–93-ஆம் ஆண்டில் முடிக்க அரசு நிதித்துறை அறிவுரையும் வழங்கியுள்ளயுது.

27—

சென்னை பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவ மனையில் குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசி போடும் திட்டம்.

வினா எண் 11848—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெரியார் நகர், அரசு புறநகர் மருத்துவ மனையில் குழந்தைகளுக்கு தினமும் முத்தடுப்பு ஊசி போடும் பிரிவை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : குழந்தை மருத்துவப் பிரிவில் முத் தடுப்பு ஊசி வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய இரண்டு நாட்களில் போடப்பட்டு வருகிறது. எனவே, இதற்கென தனிப் பிரிவு தொடங்க வேண்டிய அவசியம் இல்லை.

1993 அக்டோபர் 26]

28—

சென்னை— பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் இரத்த நாள அறுவை சிகிச்சை பிரிவைத் தொடங்கும் திட்டம்.

வினா எண் 11850— திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகர், அரசு புறநகர் மருத்துவமனையில் இரத்த நாள அறுவை சிகிச்சை பிரிவை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

29—

சென்னை-பெரியார் நகர் அரசு மருத்துவ மனையில் ஆய்வுக் கூடப் பரிசோதனை வசதிகள் செய்யத் திட்டம்.

வினா எண் 11853—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை - பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் ஆய்வுக்கூட பரிசோதனை வசதிகள் செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): இம்மருத்துவமனை புறநகர் மருத்துவமனையாதலால், ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.

30—

புதுக்கோட்டை—திருக்கோகர்ணம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவர் மற்றும் கூடுதலாக ஒரு மருத்துவர் நியமனம் செய்ய திட்டம்.

வினா எண் 12740—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை-திருக்கோகர்ணம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவர் மற்றும் கூடுதலாக ஒரு மருத்துவரையும் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தற்போது இந்த மருத்துவமனையில் பணிபுரிந்து வரும் பெண் மருத்துவருக்கு பதிலாக மகப்பேறு பட்டப்படிப்பு படித்தப்பெண் மருத்துவர் கிடைத்தவுடன் நியமனம் செய்யப் படும். இது தவிர கூடுதலாக மருத்துவரை நியமிக்கும் செயற் குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

31—

கோவையில் மேலும் ஓர் அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

வினா எண் 12832—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையில் மேலும் ஒரு அரசு மருத்துவமனை கட்ட அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

கோவையில் மேலும் ஒரு அரசு மருத்துவமனைக் கட்டுவது தொடர்பான கருத்துரு தற்போது ஏதுமில்லை.

1993 அக்டோபர் 26]

32—

பேராவூரணி தொகுதி—மானியக்காடு கிராமத்தில் பிரதம சுகாதார நிலையம் தொடங்கும் திட்டம்.

வினா எண் 13487—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, மானியக்காடு கிராமத்தில் பிரதம சுகாதார நிலையம் தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

33—

திண்டிவனம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு தொடங்கும் திட்டம்.

வினா எண் 13824—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் அரசு மருத்துவமனையில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்க, அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

திண்டிவனம் மருத்துவமனையில் விபத்து அவசர சிகிச்சை பிரிவு தொடங்க தற்பொழுது செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

34—

திண்டிவனம்—அரசு மருத்துவமனையில் செயல்படாமல் உள்ள எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவை மீண்டும் செயல்படுத்த திட்டம்.

வினா எண் 13825—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் அரசு மருத்துவமனையில் ஐந்து ஆண்டுகளாக செயல்படாமல் உள்ள எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவை மீண்டும் செயல்படச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

திண்டிவனம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள எலும்பு முறிவு சிறப்பு சிகிச்சைப் பிரிவு 9-8-1982-ல் துவக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது

35—

திருத்துறைப் பூண்டி தொகுதி—கொற்கையிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிட வசதி

வினா எண் 14183—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கொற்கையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிட வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

திருத்துறைப்பூண்டி தொகுதி, கொற்கையில உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1993 அக்டோபர் 26]

36—

டேனிடா திட்டம்—தருமபுரி மாவட்டத்தில் கட்டிடப் பணிகள் தொடங்க அரசு நடவடிக்கை.

வினா எண் 14475—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டேனிடா (DANIDA) திட்டத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகளில் கட்டிடப் பணிகள் தொடங்க அரசு திட்டம் தீட்டியுள்ளது?

(ஆ) எவ்வளவு ஆண்டுகளில் முடிவடையும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) டேனிடா திட்டத்தை தருமபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதேமில்லத் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த திட்டம் மத்திய அரசினால் பரிந்துரை செய்யப்பட்டு டென்மார்க் அரசுக்கு அனுப்பி, அவர்கள் ஒப்புதல் அளித்தவுடன் இந்த திட்டம் மூன்று மாவட்டங்களுக்கும் விரிவுபடுததப்படும். அதன் பிறகு மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத்தில் வாடகை கட்டிடத்தில் இயங்கும் துணை சுகாதார நிலையங்கள் அனைத்திற்கும் சொந்த கட்டிடம் கட்ட வகை செய்யப்படும்.

(ஆ) இக்கருத்துரு மத்திய அரசினாலும், டென்மார்க் அரசினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒப்புதல் அளிக்கப் பட்ட பிறகுதான் இந்தத் திட்டத்தை செயல்படுத்த எவ் வளவு ஆண்டுகள் பிடிக்கும் என்பது தெரியும்.

37—

நடமாடும் மருத்துவமனை கிராமங்களில் செயல்படுத்த திட்டம்

வினா எண். 15224— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம மக்கள் மருத்துவ வசதி பெற எல்லா கிராமங் களுக்கும் நடமாடும் மருத்துவமனை அமைத்து செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இந்த மாநிலத்தில் நடமாடும் சுகாதார குழுக்களை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை. கேள்வி எழாது.

38—

வேலைவாய்ப்பு—சித்த மருத்துவப் பட்டம், பட்ட மேற் படிப்பு படித்தவர்களுக்கு வேலை அளிக்கும் திட்டம்.

வினா எண். 16007—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் சித்த மருத்துவம் பட்டப்படிப்பு பட்ட மேற்படிப்பு படித்து வேலையில்லாமல் இருப்போர் எண்ணிக்கை 1992–93-ல் எவ்வளவு ?

(ஆ) இவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இதுவரை 1992–93 ஆம் ஆண்டு கணக்கின்படி தமிழ் நாட்டில் சித்த மருத்துவ பட்டப்படிப்பு (பி.எஸ்.எம்.எஸ்.) படித்து வேலையில்லாமல் இருப்போர் எண்ணிக்கை சுமாராக 422 ஆகும். மேலும் சித்த மருத்துவ பட்டமேற்படிப்பு (எம்.டி. சித்தா) படித்து வேலையில்லாமல் இருப்போர் எண்ணிக்கை சுமாராக 13 இருக்கும்.

(ஆ) இவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் (1992–97-ல்) 100 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவை ஏற்படுத்த வழிவகை செய்யப் பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

39—

பட்டுக்கோட்டை கோட்ட காசநோய்க் கழகத்தை விரிவுபடுத்தும் திட்டம்.

வினா எண் 16012— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகரில் இயங்கி வரும் கோட்ட காச நோய்க் கழகத்தை மேலும் விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

இல்லை.

40—

அரசு தாலுகா மருத்துவ மனைகளுக்கு ஆம்புலன்ஸ் வசதி)

வினா எண் 16185— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எல்லா தாலுக்கா மருத்துவ மனைகளுக்கும் ஆம்புலன்ஸ் வசதி செய்து கொடுக்க 1992–93-ல் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

தற்சமயம் அனைத்து 50—க்கு மேற்பட்ட படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ மனைகளுக்கு ஒன்று அல்லது இரண்டு ஆம்புலன்ஸ் வேன்கள், நிதி நிலையை பொறுத்து வழங்கப் பட்டுள்ளது. மேற்சொன்ன எல்லா தாலுக்கா மருத்துவமனை களுக்கும் இரண்டு ஆம்புலன்ஸ் வேன்கள் வசதி செய்யப்பட்டபின் 50 படுக்கைகளுக்கு கீழுள்ள மருத்துவ மனைகளுக்கு ஆம்புலன்ஸ் வசதி செய்ய நிதி வசதியைப் பொறுத்து அரசு ஆவன செய்யும்.

41—

கோயம்புத்தூர்—பம்பாய் சொகுசுப் பேருந்து விடத்திட்டம்.

வினா எண் 11816— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரிலிருந்து பம்பாய்க்கு சொகுசு பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

42—

பேருந்துக் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை.

வினா எண் 12514—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சமீபத்தில் உயர்த்தப்பட்ட நகரப் பேருந்துக் கட்டணம் மற்றும் வெளியூர் பேருந்துக் கட்டணம் ஆகியவற்றைக் குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

இல்லை.

43—

பட்டுக்கோட்டையிலிருந்து ராசியன்காடு வழியாக சுந்தரநாயகிபுரம் வரை நகரப் பேருந்து மீண்டும் ஓடுவதற்குத் திட்டம்.

வினா எண் 13043—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து ராசியன்காடு வழியாக சுந்தர நாயகிபுரம் வரை ஓடிக் கொண்டிருந்த நகரப் பேருந்தை மீண்டும் விட 1992–93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

இல்லை.

44—

ஏரிகளை சமூகநலக் காடுகளாக மாற்றுவதை நிறுத்தும் திட்டம்.

வினா எண் 14430—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏரிகளை சமூகநலக் காடு வளர்ப்பு பகுதிகளாக மாற்றுவதை நிறுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

இல்லை.

45—

திசையன்விளையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கும் திட்டம்.

வினா எண் 14603—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி, திசையன்விளையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

ஆம்.

[1993 அக்டோபர் 26

46—

ஆலங்குளத்தில் கட்டபொம்மன் போக்குவரததுக் கழகத்தின் பணிமனை அமைக்க நடவடிக்கை.

வினா எண் 15100—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சா:

பரிசீலிக்கப்படும்.

47—

தமிழகத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு மகாத்மா காந்தியின் பெயர் சூட்ட அரசு நடவடிக்கை.

வினா எண் 15648—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஏதாவதொரு போக்குவரத்துக் கழகத்திற்கு மகாத்மா காந்தி பெயர் சூட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மகாத்மா காந்தியின் பெயர் வணக்கத்திற்குரியதாகும். தனித்தன்மை வாய்ந்த நிறுவனத்திற்கு அன்னார் பெயரினை சூட்டுதல் சிறப்பாகும். சின்னம் மற்றும் பெயர் (தவறாக பயன்படுத்துவதை தடை செய்தல்) சட்டம், 1950-ன்படி வணிக் நிறுவனங்களுக்கு மகாத்மா காந்தி பெயர் சூட்டுதல் தடை செய்யப்பட்டுள்ளது என்பதால் புதிய போக்குவரத்துக் கழகத்திற்கு மகாத்மா காந்தி பெயரிட இயலாது.

1993 அக்டோபர் 26]

48—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் பயணம் செய்வோர் எண்ணிக்கை அதிகரிக்க நடவடிக்கை.

வினா எண் 17014—திரு. கே.ஏ. மனோகரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் தற்போது பயணம் செய்பவர் எண்ணிக்கை குறைந்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை குறையவில்லை. மாறாகக் கூடியுள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

49—

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தனியார் விளம்பரம்.

வினா எண் 17029—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பேருந்துகளில் தனியார் நிறுவனங்கள் கட்டணம் செலுத்தி விளம்பரம் செய்ய அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

50—

கழுவன்திட்டையிலிருந்து ஞாறன்விளை வழியாகச் செல்லும் பழுதடைந்த சாலையைப் பராமரிக்கத் திட்டம்.

வினா எண் 10901—திரு. ரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவட்டார் தொகுதி, கழுவன்திட்டையிலிருந்து ஞாறன்விளை கடவு - திக்குறிச்சி வழியாக சிதறால் செல்லும் சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர் செய்ய அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சீர் செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

51—

கடையாலு மூட்டிற்கும் களியலுக்கும் கோதையாறுக்குக் குறுக்கே உள்ள உடைந்த பாலத்தை செப்பனிடத் திட்டம்.

வினா எண் 11265—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை கோதையாறு ரோட்டில் கடையாலு மூட்டிற்கும் களியலுக்கும் இடையில் காணப்படுகின்ற பாலம் உடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், புதுப் பாலம் உடனடியாகக் கட்ட அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திட்டம் ஏதும் இல்லை.

1993 அக்டோபர் 26]

52—

கோயம்புத்தூர் — சங்களூர் பள்ளத்தில் கரையோரப் பகுதியில் வெள்ளத் தடுப்புகளை அமைக்கத் திட்டம்.

வினா எண் 11421—திரு. வி.கே. லட்சுமணன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்களூர் பள்ளத்தில் 11 கி.மீ. தூரத்திற்கு கரையோரப் பகுதியில் வெள்ளத் தடுப்புகளை அமைக்க ரூ. 13 கோடியே 20 லட்சத்தில் தயார் செய்யப்பட்ட திட்டத்திற்கு எப்போது அனுமதி வழங்கப்படும் ?

(ஆ) அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) கோயம்புத்தூர்-சங்களூர் பள்ளம் ஆற்றில் வெள்ளத் தடுப்பு பணிக்கான முன்னோடி அறிக்கை தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் அரசுக்கு அனுப்பப்பட்டது. இது குறித்து பரிசீலித்த பின், இந்தப் பணிக்கான விரிவான மதிப்பீடு ஒன்றை அனுப்பும்படி தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார். இதன் பிறகு தலைமைப் பொறியாளர்(பாசனம்) அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தற்சமயம் தலைமை பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அவர்களால் விரிவான ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது,

(ஆ) அரசின் நிர்வாக ஒப்புதலுக்குப் பின் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்,

53—

மின் உற்பத்தியில் தனியார் கம்பெனிகள்,

வினா எண் 11424—திரு, கே செல்வராஜ் : மாண்புமிகு. பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் கம்பெனிகள் மின்சாரம் தயாரிக்க முன் வந்தால் உடனடியாக அனுமதி தர அரசிடம் திட்டம் ஏதேனுமுண்டா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன். பொதுப்பணித்துறை அமைச்சர் :

ஆம்.

54—

ஒசூர் வட்டம் — மின் அழுத்தக் குறைவை நீக்க நடவடிக்கை

வினா எண் 11593— திரு. கே.ஏ. மனோகரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூர் வட்டம், குளகிரி, பேரிகை மற்றும் பக்கத்தில் உள்ள சில கிராமங்களில் மின் அழுத்தம் குறைவாக உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) குளகிரிப் பகுதியில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மின் அழுத்த நிலை சீர் செய்யப்பட்டு விட்டது. இப்பகுதியில் தற்பொழுது மின் அழுத்தம் சீராக உள்ளது. பேரிகைப் பகுதியில் உள்ள முதுக்குறுக்கு, தேரிகம் ஆகிய கிராமங்களில் மின் அழுத்தக் குறைவு நிலை இருந்து வருகிறது. இதனைச் சீர் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

55—

ஊட்டி-மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையில் வாகன விபத்துக்களைத் தவிர்க்க நடவடிக்கை.

வினா எண் 11686— திரு. எச்.எம். ராஜு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டி-மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையில் உள்ள 14 வளைவுகளில் ஏற்படும் வாகன விபத்துக்களைத் தவிர்க்க அரசு சிறப்புத் திட்டம் வகுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இந்த 14 வளைவுகளில் ஏற்படும் வாகன விபத்துக்களை தவிர்க்க அரசிடம் தனியாக சிறப்புத் திட்டம் ஏதும் இல்லை. மொத்தமுள்ள 14 வளைவுகளில் 4 வளைவுகளில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெறுகின்றன. வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப எஞ்சியுள்ள 10 வளைவுகளையும் மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

56—

நீலகிரி மாவட்டம் — சக்தி வாய்ந்த ட்ரான்ஸ்பார்மர்கள் அமைக்கும் திட்டம்.

வினா எண் 11688—திரு. எச்.எம். ராஜு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தற்போது உள்ள மக்கள் தொகை பெருக்கம் வீடுகள் அதிகரிப்பு இவைகளை கணக்கில் கொண்டு அதிக சக்தி வாய்ந்த ட்ரான்ஸ்பார்மர்கள் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் 250 கே.வி.ஏ. திறன் கொண்ட ஐந்து பகிர்மான மின் மாற்றிகளும், 100 கே.வி.ஏ. திறன் கொண்ட எட்டு பகிர்மான மின் மாற்றிகளும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

57—

பொதுப்பணித்துறை — தனியார் மூலம் கட்டப்படும் கட்டிடம் மோசமான நிலையிலிருந்தால் அரசு நடவடிக்கை.

வினா எண் 11798—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித்துறை மூலம் கட்டப்படும் கட்டிடம் தனியார் வசம் ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டு, கட்டிடம் கட்டி அது மோசமான நிலையில் இருந்தால் அந்த

நஷ்டத் தொகையை ஒப்பந்ததாரரிடம் வசூலிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) அவ்வாறு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இது குறித்து நெறி முறைகள் வகுக்கப்பட்டு கடை பிடிக்கப்பட்டு வருகின்றன.

58—

கீதக்குறிச்சி சாலையில் பள்ளிக்கோட்டான் கால்வாயின் குறுக்கே பாலம் அமைத்தல்.

வினா எண் 14840—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், கீதக்குறிச்சி சாலையில் பள்ளிக்கோட்டான் கால்வாயின் குறுக்கே ஒரு பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

59—

புவனகிரி ஊராட்சி ஒன்றியம்— மிராசூர் ஆதிதிராவிடர் பகுதியில் கிராமிய மருந்தகம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 9208—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மிராசூர் ஆதி திராவிடர் பகுதியில் கிராமிய மருந்தகம் அமைத்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1993 அக்டோபர் 26]

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மிராகூர் ஆதி திராவிடர் பகுதியில் கிராமிய மருந்தகம் அமைக்க திட்டம் இல்லை.

60—

போளூர் — படவேடு ரேணுகாம்பாள் கோயில் அருகில் ஆற்றில் கிணறு அமைக்கும் திட்டம்.

வினா எண். 10927— திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் படவேடு ரேணுகாம்பாள் கோயில் அருகில் செல்லும் ஆற்றில் குடி நீருக்காக ஒரு கிணறு அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைக்கப்படும் ?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வரும் நிதியாண்டில் (1993–94) நிதிநிலையை முன்னிட்டு திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

61—

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்— ஆலங்குளம் ஒன்றியம் தங்கம்மாள் புரத்தில் கைப்பம்பு போடும் திட்டம்.

வினா எண் 10961— திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை கட்டபொம்மன் மாவட்ட ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள தங்கம்மாள்புர மக்கள் குடிநீர் பிரச்சினையை தீர்க்க கைப்பம்பு போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

*விடை— 10–3–1993 ஆம் நாளிட்டது.

**விடை— 6–11–1992 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இந்த ஆண்டு (1992) வறட்சி நிவாரணப் பணியின் கீழ் ஒரு கையிறைப்பான் அமைக்கப்பட்டுள்ளது.

62—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்—த. மறவக்காடு ஊராட்சி கட்டிடம் கட்டுவதற்குத் திட்டம்.

வினா எண் 12375—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், த, மறவக்காடு ஊராட்சி கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

* விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், த. மறவக்காடு உள்ளாட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை.

63—

ஆண்டி மடம் தொகுதி—நெட்டலக் குறிச்சியில் அடிக்கனா குட்டையை சீர் செய்ய அரசு நடவடிக்கை.

வினா எண் 12439—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, நெட்டலக்குறிச்சியில் உள்ள அடிக்கனா குட்டையை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, அதன் கூரைகளை கட்டிக் கொடுக்கவும் அதற்கு படித்துறை கட்டிக் கொடுக்கவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

*விடை—25-11-1992 ஆம் நாளிட்டது.

**விடை—9—3—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26)

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆண்டிமடம் தொகுதி, நெட்டலக்குறிச்சியில் உள்ள அடிக்கனா குட்டையை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, அதன் கூரைகளை கட்டிக் கொடுக்கவும் அதற்கு படித்துறை கட்டிக் கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

64—

ஒசூர் கூட்டுக்குடிநீர் திட்டம் அரசு எடுத்த நடவடிக்கை.

வினா எண் 12539— திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் (Kelavarpalli Sipcot) பணிகள் துவங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டப் பணிகள் தொடங்கும்?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஒசூர் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் பணிகள் 1991-92 ஆம் நிதியாண்டில் துவக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

65—

கோவை மாநகராட்சி— இராமநாதபுரம் மற்றும் புலியகுளத்திலுள்ள பள்ளிகளின் வசதியைப் பெருக்கத் திட்டம்.

வினா எண் 12830— திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*விடை— 10— 3— 1993 ஆம் நாளிட்டது.

**விடை— 19— 10— 1992 ஆம் நாளிட்டது.

கோவை மாநகராட்சியில் இராமநாதபுரத்தில் உள்ள ஆண்கள் மேல்நிலைப்பள்ளியும், புலியகுளத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியும் எப்பொழுது சீர் செய்யப்படும்?

* விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கோவை மாநகராட்சியில் இராமநாதபுரத்தில் உள்ள ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, புலியகுளத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிகளை பழுது பார்க்க 1993—94 ஆம் ஆண்டில் கோவை மாநகராட்சியால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி பள்ளிகள் பழுது பார்க்கப்படும்.

66—

தலைவாசல் தொகுதி—தம்மம்பட்டி பேரூராட்சிக்கு குடிநீர் வசதி பெரப்பஞ்சோலையிலிருந்து செயல்படுத்த திட்டம்.

வினா எண் 14645—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, தம்மம்பட்டி பேரூராட்சிக்கு பெரப்பஞ்சோலையிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டத்தை அரசு செயல்படுத்த ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) தலைவாசல் தொகுதி, தம்மம்பட்டி பேரூராட்சிக்கு பெரப்பஞ்சோலையிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*விடை—28—1—1992 ஆம் நாளிட்டது.

**விடை—11—3—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

67—

கிராமப்புறம்—பால் உற்பத்தி சங்க ஊழியர்களை பால்வளத் துறை ஊழியராக்கும் திட்டம்.

வினா எண் 10447—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற பால் உற்பத்தியாளர் சங்க ஊழியர்களை பால் பெருக்குத் துறையே எடுத்துக் கொண்டு ஊதியம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

* விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

68—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவுப் பால் ஒன்றியம் தொடங்குதல்.

வினா எண் 10810—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு பால் ஒன்றியம் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு தொடங்கப்படும்?

* விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தனியாக கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*விடை—1-11-1992 ஆம் நாளிட்டது.

**விடை—6-11-1992 ஆம் நாளிட்டது.

69—

கிராம பால் சேகரிப்பு நிலையம்—பால் உற்பத்தியாளருக்கு பசும் பாலில் 10 சதவீதம் வெளியில் விற்பனை செய்வதை 20 சதவீதம் அதிகரிக்கும் திட்டம்.

வினா எண் 10839—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம பால் சேகரிப்பு நிலையங்களுக்கு சப்ளை செய்யும் பால் உற்பத்தியாளருக்கு பசும்பாலில் 10 சதம் அளவிற்குத் தான் வெளியில் விற்பனை செய்யலாம் என்று நிர்ணயம் விதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிர்ணயம் 20 சதவீதம் என்ற அளவிற்கு உயர்த்த அரசு முன் வருமா'

* விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) ஆம். மக்களின் உண்மையான பால் தேவை பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில் மட்டுமே உள்ளூர் விற்பனை மொத்த பால் உற்பத்தியில் 10 சதவீதத்திற்கு அதிகமாக கூடாது என வழிமுறை (Guide line ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு நிர்வாக அறிவுரையே தவிர ஆணையல்ல.

(ஆ) 20 சதவீதம் என்று உயர்த்தத் தேவையில்லை.

70—

பால் விநியோகம்—வேன்கள் மூலம் வீடுகளுக்கு வழங்கும் திட்டம்

வினா எண் 11145—திரு. கே. செல்வர்ராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் விநியோக முறையை வேன்கள் மூலம் நேர அட்டவணைப்படி வீடுகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

** விடை—20–1–1993 ஆம் நாளிட்டது ?

1993 அக்டோபர் 26]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பால் விநியோக முறையை வேன்கள் மூலம் வீடுகளுக்கு வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை?

71—

தஞ்சாவூர் மாவட்டத்தில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற் சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 12558—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினா விற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்ட பால் வழங்கும் ஒன்றியத்தின் மூலம் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட் டுறவுத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டத்தில் பால் பவுடர் தயாரிக்கும் அள வுக்கு உபரியாக பால் இல்லாததால், அங்கு ஒரு தொழிற்சாலை அமைக்கும் வாய்ப்பு இல்லை

72—

பேராவூரணி தொகுதி, ருத்ரசிந்தாமணி பால் வழங்கு சங்கத்திற்கு கூடுதல் மாடுகள் வாங்க கடன் வழங்கும் திட்டம்.

வினா எண் 12797—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினா விற்கு விடையளிப்பாரா—

'பேராவூரணி தொகுதி, ருத்ரசிந்தாமணியில் இயங்கிக் கொண்டிருக்கும் பால் வழங்கு சங்கத்திற்கு மேற்கொண்டு மாடு கள் வாங்க கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

* விடை—1–3–1993 ஆம் நாளிட்டது

** விடை—18–12–1992 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, ருத்ரசிந்தாமணியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் ஏதும் செயல்படவில்லை இக் கிராமத்தில் மாடுகள் வாங்க கடன் வழங்குதல் குறித்த பிரேரணை ஏதும் இல்லை''.

73—

பேராவூரணி தொகுதி, திருவத்தேவன் கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு உரக் கிடங்கை பழுதுபார்க்கும் திட்டம்.

வினா எண் 13596—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவா சத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு (உரக்கிடங்கு) 1992க93-ல் பழுது பார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

** விடை -

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

திருவத்தேவன் கிராமத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு (உரக்கிடங்கு) பழுது பார்த்துக் கொடுக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

74—

கூட்டுறவு நிலவள வங்கி மூலம் வேளாண்மையை வளப்படுத்த கடன் வழங்கும் திட்டம்.

வினா எண் 16010—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

* விடை—13-4-1993 ஆம் நாளிட்டது.

** விடை—19-3-1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

கூட்டுறவு நிலவள வங்கியில் கிணறு வெட்டுதல், கிணற்றை ஆழப்படுத்துதல், பம்ப்செட், நிலத்தை சீர்திருத்தம் செய்தல், டிராக்டர் வாங்குதல் ஆகியவற்றிற்கு கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

இம்மாநிலத்தில் உள்ள நிலவள வங்கிகள் மேற்கூறிய காரணங்களுக்காக நீண்ட காலக் கடன்களை ஏற்கனவே வழங்கி வருகின்றன.

75—

கூட்டுறவு நிலவள வங்கி—விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்யத் திட்டம்.

வினா எண் 16011—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நிலவள வங்கிக் கடன்களை (டிராக்டர்நீங்கலாக) தள்ளுபடி செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

இல்லை.

76—

பரமக்குடி கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அலுவலகக் கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா எண் 16085—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*விடை—27—4—1993 ஆம் நாளிட்டது.

**விடை—27—4—1993 ஆம் நாளிட்டது.

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அலுவலகக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

77—

தொழிலாளர்கள் ஓய்வூதியம், இதர வைப்பு நிதிகள் உடனடியாக கிடைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 10644—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர்கள் ஓய்வு பெற்றவுடன் குறிப்பிட்ட கால நிர்ணய அளவிற்குள் அவர்களுடைய பணிக் கொடை, வைப்பு நிதி, பி. எப். போன்றவற்றிற்கான தொகைகளைப் பெறுவதற்கு காலதாமதம் ஆவதாக அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி , தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம். பணிக்கொடைத் தொகையை 30 தினங்களுக்குள் தொழிலாளர்களுக்கு வழங்காதது குறித்து, 1972 ஆம் ஆண்டு பணிக் கொடைப் பட்டுவாடாச் சட்டத்தின்கீழ் அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் மேல் முறையீட்டு அலுவலர்கள் முன்னிலையில் புகார் மனுக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன.

*விடை—27—4—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

ஓய்வு பெற்ற ஊழியர்களிடமிருந்து வைப்பு நிதி (பி.எப்) தொடர்பாக அரசிற்கு அனுப்பப்படும் புகார் மனுக்கள் உரிய மேல் நடவடிக்கைக்கென வட்டார வைப்பு நிதி ஆணையருக்கு அனுப்பப்படுகிறது.

(ஆ) 1—1—1991 முதல் 31—12—1991 வரை மற்றும் 1—1—1992 முதல் 30—6—1992 வரை உள்ள காலங்களில், 1972 ஆம் ஆண்டு பணிக்கொடை பட்டுவாடாச் சட்டத்தின்கீழ் அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் மேல் முறையீட்டு அலுவலர்களின் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட, அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் தீர்ப்பளிக்கப்பட்ட தொகை ஆகிய விபரங்கள் அட்டவணை செய்யப்பட்டு இத்துடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1972 ஆம் ஆண்டு பணிக்கொடைப் பட்டுவாடாச் சட்ட கட்டுப்பாட்டு அதிகாரிகள் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்ட மனுக்களின் விவரம் :

	1—1—1991 முதல் 31—12—1991 வரை	1—1—1992 முதல் 30—6—1992 வரை.
(1)	(2)	(3)
முந்தைய ஆண்டு நிலுவை ..	650	452
பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை.	1,355	705
தீர்ப்பளிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை.	1,553	799
	ரூபாய்.	ரூபாய்.
தீர்ப்பளிக்கப்பட்ட தொகை	20,81,515.65	62,10,711.29

1972 ஆம் ஆண்டு பணிக் கொடை பட்டுவாடாச் சட்ட மேல் முறையீட்டு அதிகாரிகள் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்ட மனுக்களின் விவரம் :

	1—1—1991 முதல் 31—12—1991 வரை.	1—1—1992 முதல் 30—6—1992 வரை.
(1)	(2)	(3)
முந்தைய ஆண்டு நிலுவை ..	21	438
பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை.	598	146

[1993 அக்டோபர் 26

தீர்ப்பு வழங்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை.	181	473
	ரூபாய்.	ரூபாய்.
தீர்ப்பளிக்கப்பட்ட தொகை ...	1,55,611.30	33,862.10

ஓய்வுபெற்ற ஊழியர்களிடமிருந்து வைப்பு நிதி (பி.எப்.) தொடர்பாக அரசிற்கு அனுப்பப்படும் புகார் மனுக்கள் உரிய மேல் நடவடிக்கைக்கென வட்டார வைப்பு நிதி ஆணையருக்கு அனுப்பப்படும் தருணங்களில் வட்டார வைப்பு நிதி ஆணையர் குறைகளைக் களைவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு குறைகளைத் தீர்த்து வைக்கிறார். இன்றைய தேதியில் மாநில அரசிடமிருந்து வட்டார பொது வைப்பு நிதி ஆணையருக்கு அனுப்பப்பட்ட புகார் மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

78—

சுகவாடி மற்றும் கனிகொண்டபள்ளி பகுதியில் கால்நடை பராமரிப்பு மருந்தகம் அமைக்கும் திட்டம்.

வினா எண். 9169—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியான சுகவாடி மற்றும் கனிகொண்டபள்ளி பகுதியில் கால்நடை பராமரிப்பு மருந்தகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

79—

கரும்பு விளைச்சலில் நவீன முறையைப் பயன்படுத்த திட்டம்.

வினா எண். 11821—திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு விளைச்சலை 6 மாத காலத்தில் செய்யும் வகையில் ஏதேனும் நவீன முறை அரசிடம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) கரும்பு விளைச்சலை ஆறு மாத காலத்தில் செய்யும் வகையில் நவீன கரும்பு வகை ஏதும் இதுவரை ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

80—

சிறு விவசாயிகளுக்கு தார்ப்பாய்கள் மானிய விலையில் விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை.

வினா எண் 13497—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர், நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டங்களில் உள்ள சிறு விவசாயிகளுக்கு தார்ப்பாய்கள் மானிய விலையில் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

ஆம். 50 சதவீதம் மானிய விலையில் அதிகபட்ச மானியமாக ரூபாய் 1,000 வீதம் சிறு / குறு விவசாயிகளுக்கு தானிய சேமிப்பு கலன்கள் / தார்ப்பாய்கள் விநியோகம் செய்ய தேவை குறித்து இவ்விரண்டு மாவட்டங்களையும் கேட்கப் பட்டுள்ளது. தேவை பெறப்பட்டவுடன் விநியோகம் செய்ய தக்க நடவடிக்கை நடப்பு ஆண்டிலேயே எடுக்கப்படும்.

81—

பேராவூரணியில் வேளாண்மை பற்றி பயிற்சி நிலையம் துவங்க திட்டம்.

வினா எண். 13498—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியில் வேளாண்மை பயிற்சி நிலையம் ஒன்று துவங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

இல்லை.

82—

சிறு விவசாயிகள் விவசாயத் தொழில் செய்யும்போது இறந்தால் உதவித்தொகை வழங்கத் திட்டம்

வினா எண் 13500—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு / குறு விவசாயிகள் விவசாயத் தொழில் செய்யும் போது இறந்தால் உதவித் தொகை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

சிறு / குறு விவசாயிகள் விவசாயத் தொழில் செய்யும் போது இறந்தால் ரூ 10,000 நஷ்ட ஈடு வழங்குவதற்கு அரசாணை (நிலை) எண் 581, தொழிலாளர் துறை, நாள் 19—3—1985-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

83—

ஒசூரில் குளிரூட்டும் நிலையம் (Cold storage) கட்டும் திட்டம்.

வினா எண் 14519—திரு. கே ஏ. மனோகரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூர் நகரில் விவசாயிகளுக்காக வேளாண்மைத் துறையின் மூலம் ஒரு குளிரூட்டும் நிலையம் (Cold storage) கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1993 அக்டோபர் 26]

விடை —

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) 1992–93 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்காக தோட்டக் கலைத் துறை மூலம் ஓசூர் நகரில் குளிரூட்டும் நிலையம் கட்டும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

84—

ஓசூர்—கால்நடை பண்ணையில் பணிகளுக்கு தெலுங்கு பேசுவோருக்கும் இடம் தர திட்டம்.

வினா எண் 14685—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூர் கால்நடைப் பண்ணையில் கோழி வளர்ப்புப் பயிற்சியில் பங்கு பெற தமிழில் எழுதப் படிக்கத் தெரிய வேண்டும் என்றிருப்பதால் அங்குள்ள தெலுங்கு மொழி பேசும் மக்கள் பயன் அடைய முடியாதிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களும் பயன்பெறச் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) கோழி வளர்ச்சி பயிற்சி சம்பந்தமாக ஓசூரில் தெலுங்கு மொழி பேசும் மக்களிடமிருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

85—

காலகத்தில் கால்நடை மருந்தகம் துவங்க திட்டம்.

வினா எண். 15318—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, காலகத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, காலகத்தில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த சாத்தியக் கூறுகள் இருப்பின், தகுதியின் அடிப்படையில், வரும் ஆண்டுகளில் மேற்கண்ட கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

86—

காமராஜர் மாவட்டம், விருதுநகர் மார்க்கட் கமிட்டியில் உளுந்து பயிருக்கு வரி (Cess) வசூலிக்கும் குறை.

வினா எண் 17574—திரு. சஞ்சய் இராமசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜர் மாவட்டம், விருதுநகர் மார்க்கட் கமிட்டியில் மட்டும் உளுந்து பயிருக்கு வரி (Cess) வசூலிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், வரி நீக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மார்க்கட் கட்டணத்தை நீக்கும் நோக்கம் அரசுக்கு கிடையாது.

87—

சங்ககிரி வட்டம், கூட்டுறவு சங்கம் கடன் பெற்ற உறுப்பினர்களுக்கு வீட்டுப் பத்திரங்களை திரும்ப கொடுக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 11647—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

(அ) சங்ககிரி வட்டம், வீடுகட்டுவோர் கூட்டுறவு சங்கம் எண் 67-ல் கடன் பெற்று வீடு கட்டியவர்களுடைய வீட்டுப் பத்திரங்கள் பல வருடங்கள் ஆகியும் திரும்ப கொடுக்காததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றைத் திருப்பிக் கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : அரசு ஆணை (நிலை) எண் 17, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 5—1—1992-ன் படி கிராம கூட்டுறவு வீட்டுவசதி திட்டத்தினால் 31—3—1990 வரை பயனடைந்தவர்கள் 31—3—1991-க்கு முன்பு கடன் தொகையில் 25 சதவீதம் செலுத்தினால் மீதமுள்ள 75 சதவீத கடனும் மற்றும் வட்டியும் தள்ளுபடி செய்யப்படும். இவ்வாறு கடன் தொகையில் 25 சதவீதம் திருப்பி செலுத்தியவர்களுடைய வீட்டு பத்திரங்கள் அவர்களுக்குத் திரும்ப கொடுக்கப்பட்டுள்ளன

88—

கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வீட்டுமனை வாங்கியவர்கள் உரிய காலத்திற்குள் வீடு கட்ட அரசு நடவடிக்கை.

வினா எண் 14103—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்கத்தின் மூலம் வீடுகட்ட வீட்டுமனை வாங்கிய மூன்று வருடத்திற்குள் வீடு கட்டத் தவறினால் மீண்டும் அந்த மனையை அரசோ அல்லது சங்கமோ எடுத்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

சங்கத்தின் மூலம் வீடு கட்ட உறுப்பினர்களுக்கு மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகளுக்குள். வீடு கட்டுமானப் பணியினைத் துவங்கி ஐந்தாண்டுகளுக்குள் வீடு கட்டி முடித்திடத் தவறினால் மனையைத் திருப்பி எடுத்துக் கொள்ள சங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

89—

வளையமாதேவி கிராமத்தில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 12780—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், வளையமாதேவி கிராமத்திற்கு சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டத்தின் கீழ் கூடுதல் சத்துணவு மையங்கள் தேவைக்கேற்ப துவக்குவது பரிசீலிக்கப்படும்.

90—

தேவண்ணக் கவுண்டனூர் பஞ்சாயத்து, மட்டம்பட்டி ஆதிதிராவிடர் குடியிருப்பில் குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 14403—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி, தேவண்ணக் கவுண்டனூர் பஞ்சாயத்து, மட்டம்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்பு தெற்குவளவில் ஒரு குழந்தைகள் காப்பகம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்பமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

சங்ககிரி வட்டம், தேவண்ணக் கவுண்டனூர் பஞ்சாயத்து மட்டம்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்பு தெற்கு வளவில் பயன் அடையும் குழந்தைகள் எண்ணிக்கை 25-க்கும் குறைவாக இருப்பதால் புதியதாக துணை மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்,

1993 அக்டோபர் 26]

91—

திருச்சிற்றம்பலம் ஊராட்சி, வலச்சேரி காட்டில் பாலர் பள்ளி ஏற்படுத்தும் திட்டம்.

வினா எண் 14599—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, வலச்சேரி காட்டில் 1992—93-ல் பாலர் பள்ளி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

இது குறித்து செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் இல்லை,

92—

பூம்புகார் தொகுதி—சமூக நலத்துறை மூலம் தொழிற் பயிற்சி ஏற்படுத்த திட்டம்.

வினா எண் 15780 —திரு. எம். பூராசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் சமூக நலத்துறையின் மூலம் தொழிற் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) இல்லை,

(ஆ) கேள்விக்கு இடமில்லை

93—

புரசைவாக்கம் தொகுதி சத்துணவுக் கூடங்களில் பயன்படுத்தப்படும் பாத்திரங்களை மாற்றி புதியன வழங்கும் திட்டம்

வினா எண் 16315—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(அ) புரசைவாக்கம் தொகுதியில் இயங்கும் சத்துணவுக் கூடங்களில் பயன்படுத்தப்படும் பாத்திரங்களை மாற்றி புதிதாக வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஏற்கனவே வழங்கப்பட்ட பாத்திரங்கள் நல்ல நிலையில் உள்ளதால், புதிய பாத்திரங்கள் வாங்கும் செயற்குறிப்பு இப்போதைக்கு இல்லை.

94—

உடல் ஊனமுற்றோர் வாரியம் அமைத்தல்.

வினா எண் 16345—திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றவர்களுக்கென தனி வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): 1971-ல் அமைக்கப்பட்ட இந்த வாரியம் சரிவர இயங்கவில்லை எனினும், தற்போது ஊனமுற்றோர் நலனுக்கென தனித்துறை தோற்றுவிக்கப்பட்ட நிலையில் இந்த வாரியத்தை எவ்வாறு சீர்திருத்தி அமைப்பது என்பது பரிசீலிக்கப்படும்.

95—

சத்துணவுக் கூடங்களை பழுது பார்க்க முன்வரும் தனியார்களுக்கு வருமான வரி விலக்கு.

வினா எண் 16577—திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவுக் கூடங்களை பொது மக்கள் பழுதுபார்க்க முன்வந்தால் அவர்களுக்கு வருமான வரி விலக்களிக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

இது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

96—

ஆண்டிமடம்—வீட்டுமனைகள் மலைவாழ் மக்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை.

வினா எண் 12709—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஆண்டிமடம் தொகுதி, வெளிச்சங்குடியில் உள்ள மலை வாழ் மக்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

இவர்களுக்கு வீட்டுமனைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சியர் அளவில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியரது அறிக்கை வரப்பெற்றதும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

97—

பிற்பட்டோர் சீர்மரபினர் நலன்களைக் கவனிக்க தனி அதிகாரிகள் நியமனம்.

வினா எண் 11017—திரு. எம். ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மிகவும் பிற்பட்டோர், சீர்மரபினர் நலன்களைக் கவனிக்க மாவட்டந்தோறும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல அதிகாரியை நியமிக்க அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தற்போது புதிய பணியிடங்கள் ஏற்படுத்த தடையாணை அமுலில் இருப்பதாலும், மேலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் துறைக்கென்று மாவட்ட அலுவலகங்கள் ஏற்படுத்துவதால் ஆண்டுதோறும் தொடர் செலவினம் அதிக அளவில் ஏற்படும் என்பதாலும், தனியாக மாவட்ட மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல அலுவலர்களுக்கு தக்க வேலைப் பளு இராது என்பதாலும், இத்துறைக்கென்று தனியாக மாவட்ட அலுவலகங்கள் ஏற்படுத்த அவசியம் இல்லை என அரசு கருதுகிறது.

98—

பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு இலவச தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டம்.

வினா எண் 11018— திரு. எம். ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு இலவச தொகுப்பு வீடுகள் வழங்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு (நரிக்குறவர் நீங்கலாக) இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை. சீர்மரபினருக்கும் நரிக்குறவர்களுக்கும் இலவச தொகுப்பு வீடுகள் அரசு கட்டித்தரும் திட்டம் தற்போதைக்கு நிதிப்பற்றாக்குறை காரணமாக செயல்படுத்தப்படவில்லை.

99—

மாவட்டந்தோறும் மண்பாண்டத் தொழில் பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 11019— திரு. எம். ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

(அ) கிராம கைத்தொழிலான மண்பாண்டத் தொழிலை நவீனப்படுத்தவும் மேலும் அபிவிருத்தி செய்யவும் மாவட்டந் தோறும் மண்பாண்டத் தொழில் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) மண்பாண்டத் தொழில் அபிவிருத்திக்காக மாநில அளவில் 18 வயது முதல் 25 வயது வரையுள்ள இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு மண்டல மண்பாண்ட பயிற்சி நிலையம் (Regional Pottery Training Centre) ஒன்று செங்கை—எம்.ஜி.ஆர். மாவட்ட செவ்வாப் பேட்டையில் உள்ளது. மாவட்டம் தோறும் மண் பாண்டத் தொழில் பயிற்சி அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசிலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

100—

ராதாபுரம் தொகுதி பனைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம்.

வினா எண் 13806—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராதாபுரம் தொகுதி, திசையன்விளை, பனக்குடி அதைச் சுற்றி உள்ள கிராமங்களில் வாழும் பனைத் தொழிலாளர்களுக்கு அரசு வீடு கட்டித்தர முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

[1993 அக்டோபர் 26

(மூன்றாம் பட்டியல்)

1—

சென்னையில் புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களின் போது வி.எச்.எப். மற்றும் எச்.எப்.டி. பயன் படுத்தும் திட்டம்.

வினா எண் 11727—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களின் போது தொலை பேசி, தந்தி ஆகியவைகள் பாதிக்கப்படுவதால் வி.எச்.எப். மற்றும் எச்.எப். டிரான்ஸ் மீட்டர்களைப் பயன்படுத்தி நிவாரணப் பணிகளுக்கு உதவ ஒரு எமர்ஜென்ட் திட்டம் வருவாய்த் துறை மூலம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் சென்னை உள்ளிட்ட 23 மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் ரூ. 53.00 இலட்சம் செலவில் நிரந்தரமாக ஒயர்லெஸ் செட் அமைக்க வேண்டி 1995—2000 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யக் கோரும் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

2—

பள்ளத்தூர் ஊராட்சி, ஆண்டிக்காடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்.

வினா எண் 6780—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஊராட்சி, ஆண்டிக்காடு தொடக்கப்பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையைத் தவிர்க்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

'இல்லை.'

3—

பூவாலை பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை வகுப்புகள் கொண்டு வருதல்.

வினா எண் 7795—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பூவாலையில் உள்ள பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை உள்ளதை எட்டாம் வகுப்பு வரை கொண்டு வர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இது குறித்த கோரிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

4—

ஓதியத்தூர் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண் 8812—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், செங்கவல்லி ஒன்றியம், ஓதியத்தூர் தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை 29—4—1993 ஆம் நாளிட்டது.

**விடை 21—4—1993—ஆம் நாளிட்டது.

[1993 அக்டோபர் 26

***விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : கல்வி அமைச்சர் :

ஏதும் இல்லை.

5—

செல்லப்பன் பேட்டை அல்லது கோட்டரப்பட்டி பகுதியில் நடுநிலைப் பள்ளியைத் துவக்குதல்.

வினா எண் 11237— திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதியிலுள்ள செல்லப்பன் பேட்டை அல்லது கோட்டரப்பட்டி பகுதியில் நடுநிலைப் பள்ளி துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

* விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஏதும் இல்லை.

6—

மஞ்சூர் உயர்நிலைப் பள்ளி கட்டிடத்திற்கு ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட நடவடிக்கை.

வினா எண் 11374—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, மஞ்சூர் உயர்நிலைப் பள்ளியில் கட்டிடம் கட்டி ஆஸ்பெஸ்டாஸ் கூரை போடாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

***விடை 22—4—1993 ஆம் நாளிட்டது.

*விடை—22— 4— 1993 ஆம் நாளிட்டது.

** விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மஞ்சூர் அரசு உயர் நிலைப் பள்ளிக்கு ஆஸ்பெஸ்டாஸ் கூரை, பரமக்குடி பொதுப் பணித் துறையினரால் சிறப்புத் திட்டத்தின் கீழ் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

7—

சேந்தமங்களத்தில் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்குதல்

வினா எண் 12863—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி சேந்தமங்களம் கிராமத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

8—

ஆவணம் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்

வினா எண் 13215—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி ஆவணம் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் 1992–93-ல் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

** விடை—7—4—1993 ஆம் நாளிட்டது.

*விடை—28—1—1993 ஆம் நாளிட்டது.

** விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற் குறிப்பு ஏதுமில்லை

9—

காலகம் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்.

வினா எண் 13216—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, காலகம் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் 1992–93-ல் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*** விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

10—

பேராவூரணி ஆண்கள் மேல் நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்.

வினா எண் 13217—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஆண்கள் மேல் நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் 1992–93 ஆம் ஆண்டில் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

** விடை—18—3—1993 ஆம் நாளிட்டது.
*** விடை—18—3—1993 ஆம் நாளிட்டது

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை. எனினும் வரும் நிதியாண்டில் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசால் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து நிதி வசதிக்கேற்ப பேராவூரணி ஆண்கள் மேல் நிலைப் பள்ளி, பள்ளிக் கல்வி இயக்குநரால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11—

சென்னையில் விஞ்ஞான கண்காட்சி நிறுவுதல்.

வினா எண் 13298— திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் விஞ்ஞானக் கண்காட்சி நிறுவ அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஏற்கெனவே சென்னையில் 1983-ல் நிறுவப்பட்டுள்ள தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்பவியல் மையத்தில் அறிவியல் கண்காட்சி பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. அறிவியல் கோளரங்கம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

*விடை—15—3—1993 ஆம் நாளிட்டது.

**விடை—23—2—1993 ஆம் நாளிட்டது.

12—

ஸ்ரீரங்க நாராயணபுரம் துவக்கப்பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர் களை நியமித்தல்.

வினா எண் 13795— திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்ககாணும் வினாவுக்கு விடையளிப் பாரா—

ராதாபுரம் (திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம்) தொகுதி செட்டிக்குளம் பஞ்சாயத்து ஸ்ரீரங்க நாராயண புரம் துவக்கப்பள்ளிக்கு கூடுதலாக ஆசிரியரை நியமிப் பதற்கு அரசு முன்வருமா ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

13—

பல்கலைக் கழகங்களுக்கு ஒரே மாதிரியான பல்கலைக் கழகச் சட்டம்.

வினா எண் 13816— திரு. வி.கே. லட்சுமணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஒரே மாதிரியான நோக்கமுடைய பல்கலைக் கழகங்களுக்கு ஒரே மாதிரியான பல்கலைக் கழகச் சட்டம் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வரைவு சட்ட முன் வடிவு தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மீது இறுதி முடிவு எடுக்கப்பட்டவுடன் பேரவை முன் அறிமுகம் செய்யப்படும்.

* விடை—25—2—1993 ஆம் நாளிட்டது.

**விடை—4—1—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

14—

பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு தமிழ் நாட்டில் ஓர் மண்டல மையம்.

வினா எண் 13818—திரு. ஆர். சுப்புரத்தினம் மற்றும் திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்கலைக்கழக மானியக் குழுவிற்குத் தமிழ்நாட்டில் ஒரு மண்டல மையம் (Regional Centre) ஏற்படுத்த வேண்டுமென மைய அரசை தமிழக அரசு வலியுறுத்தி உள்ளதா?

(அ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?

* விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இது குறித்து பல்கலைக் கழக மானியக் குழு இறுதி முடிவு எடுக்கவில்லை என்றும் அவ்வாறு முடிவு செய்யும் போது இவ்வரசின் கோரிக்கையை கவனத்தில் கொள்ளும் என தெரிவித்து உள்ளது.

15—

பெருமகளூர் மேல் நிலைப் பள்ளிக்கு தளவாட சாமான்கள் வழங்குதல்.

வினா எண் 14205—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், பெருமகளூர் மேல் நிலைப் பள்ளிக்கு தளவாடச் சாமான்கள் 1992—93ஆம் ஆண்டில் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

** விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவா சத்திரம் ஒன்றியம் பெருமகளூர் மேல்நிலைப் பள்ளிக்கு தளவாட சாமான்கள் 1992–93–ல் வழங்குவது சார்ந்த செயற்குறிப்பு ஏதுமில்லை. மேலும் புதிய தள்வாடங்கள் வாங்குவதற்கு தடையாணை வழங்கப்பட்டுள்ளது.

* விடை—28—1—1993 ஆம் நாளிட்டது.

** விடை—15—1—1993 ஆம் நாளிட்டது.

16—

காலகம் உயர்நிலைப் பள்ளிக்கு போதிய இடம் பெறவும் தளவாடங்கள் வழங்கவும் நடவடிக்கை.

வினா எண் 142218—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூராணி ஒன்றியம், காலகம் உயர் நிலைப் பள்ளிக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் போக்கவும் பள்ளிக்கு கட்டிடம் கட்ட பத்மநாப சுவாமி கோவில் நிலத்தை குத்தகைக்கு பெற்றுத் தரவும், பள்ளிக்கு தளவாட சாமான்கள் வழங்கவும், 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?
*

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(1) அரசால் ஒவ்வொரு ஆண்டும் மிகக் குறைந்த பணியிடங்களே அனுமதித்து வரப்படுகின்றன. அப்பணியிடங்கள் அனைத்தும் எல்லா முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன. எனினும் எல்லா பள்ளிகளிலும் உடனடி தேவையைப் பூர்த்தி செய்ய இயலவில்லை. மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கைக்கேற்ப தேவைப்படும் பணியிடங்கள் அரசால் அனுமதிக்கப்பட்டால் இப்பள்ளியின் தேவையையும் விதிகளின்படி பரிசிலனை செய்யப்படும்.

(2) இப்பள்ளிக்குச் சொந்த நிலமில்லை. பள்ளி தில்லை காளியம்மன் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் இயங்கி வருகிறது. அத்திமநாத சுவாமி கோவிலுக்குச் சொந்தமான இடத்தை தனி நபர் ஒருவர் தேவஸ்தானம் மூலமாக 99 வருடத்திற்கு குத்தகைக்கு எடுத்துள்ளர்.

(3) அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு பள்ளிகளுக்குத் தளவாட சாமான்கள் வாங்க பொதுத்தடை நடைமுறையில் உள்ளது.

17—

காலகம் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்ட பத்மநாப சாமி கோவில் இடத்தை குத்தகைக்குப் பெற நடவடிக்கை.

வினா எண் 14579—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

* விடை— 20-3-1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் கட்ட பத்மநாபசாமி கோவில் இடத்தை குத்தகைக்குப் பெற்றுத்தர 1992-93 ஆம் ஆண்டில் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

* விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

செயற்குறிப்பு ஏதுமில்லை.

18—

ஆலங்குளம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்துதல்.

வினா எண் 15266—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

** விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

1992-93 ஆம் ஆண்டில் ஆலங்குளம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்திக் கொடுக்க கருத்துருக்கள் ஏதும் அரசின் உயர்மட்டக்குழு பரிசீலனைக்கு பெறப்படவில்லை.

19—

ப்ளஸ் 1 படிக்கும் மாணவர்களுக்கு அரசுத் தேர்வு.

வினா எண் 15284—திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மேல் நிலைப் பள்ளிகளில் ப்ளஸ் 1 படிக்கும் மாணவர்களுக்கு அரசுத் தேர்வு நடத்தப்படுமா?

* விடை—7-4-1993 ஆம் நாளிட்டது.

** விடை—19-3-1993 ஆம் நாளிட்டது.

*** விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

மேல் நிலைப் பள்ளிகளில் ப்ளஸ் 1 படிக்கும் மாணவர்களுக்கு அரசுத் தேர்வு ஏதும் நடத்தப்படுவதில்லை.

20—

பரமக்குடி, சத்திரக்குடி பார்த்திபனூர் அரசு பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிட வசதி.

வினா எண் 15696—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, அரசினர் உயர்நிலைப் பள்ளி, சத்திரக்குடி, அரசினர் உயர்நிலைப்பள்ளி, பார்த்திபனூர் ஆகிய பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடங்கள் கட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

* விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

வரும் நிதியாண்டுகளில் கிடைக்கும் நிதி வசதிக்கேற்ப இப்பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடம் கட்டும் கருத்துரு பள்ளிக் கல்வி இயக்குநரால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

21—

அடிப்படை வசதிகளற்ற தனியார் கல்லூரிகளை அரசே எடுத்து நடத்த நடவடிக்கை.

வினா எண் 16029—திரு. கே. செல்வராஜ்; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடிப்படை வசதி இல்லாத, தனியார் நடத்தும் கல்லூரிகளைத் தடை செய்து, அரசே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்று நடத்தப்படும் ?

* விடை—8—4—1993 ஆம் நாளிட்டது.

*** விடை—20-2-1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தனியார் கல்லூரிகள் தொடங்க அடிப்படை வசதிகள் இருந்தால்தான் அனுமதியளிக்கப்படுகிறது. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

22—

இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக பாலிடெக்னிக்குகள் ஏற்படுத்துதல்.

வினா எண் 16830—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை தனியார் மற்றும் அரசு பாலிடெக்னிக்குகள் உள்ளன?

(ஆ) மேலும் புதிதாக ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) தனியார் மற்றும் அரசு பாலிடெக்னிக்குகள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இல்லை. ஆனால், அரசு மானியம் பெறும் பாலிடெக்னிக் ஒன்று மட்டும் உள்ளது.

(ஆ) அரசு பாலிடெக்னிக் ஏற்படுத்த தற்சமயம் அரசிடம் திட்டம் இல்லை.

23—

திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி மருத்துவமனையை நவீனப்படுத்துதல்.

வினா எண் 448—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சிகளில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைகளில் போதிய இட வசதியோடு படுக்கை வசதிகளை அதிகரிக்கக் கோரியும், மருத்துவமனையை நவீனப்படுத்தவும் கோரிக்கைகள் அரசுக்கு வந்து உள்ளதா?

*விடை—22—4—1993 ஆம் நாளிட்டது.

** விடை—2—4—1993 ஆம் நாளிட்டது.

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருவையாறு அரசு மருத்துவமனை விரிவாக்கத்திற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

(ஆ) திருவையாறு அரசு மருத்துவமனையை, தாலூகா மருத்துவமனையாக மாற்றி அரசு ஆணை எண் 1550, நாள் 12—12—1991–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இம் மருத்துவமனைக்கு எக்ஸ்ரே, அறுவை சிகிச்சை, சோதனை அரங்குகள் மற்றும் பிணவறை ஆகியவைகளுக்குக் கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. திருக்காட்டுப்பள்ளி மருத்துவமனையைப் பொறுத்தமட்டில், இம் மருத்துவமனையை விரிவாக்குவதற்கு நிலம் தேவைப்படுகிறது. இதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கான கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆய்வில் உள்ளது.

24—

வாலாஜாபாத் அரசினர் மருத்துவமனையை மேலும் விரிவு படுத்துதல்.

வினா எண் 1758—திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 31 படுக்கைகள் கொண்ட வாலாஜாபாத் அரசினர் மருத்துவமனையை மேலும் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

செங்கை—எம். ஜி. ஆர். மாவட்டம், வாலாஜபாத்தில் அரசு மருத்துவமனை இல்லை. கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்தான் இயங்கி வருகிறது. தற்போது இந்நிலையத்தை விரிவாக்கும் செயற்குறிப்புகள் ஏதும் பரிசீலனையில் இல்லை.

1993 அக்டோபர் 26]

25—

நாகை-காயிதே மில்லத் மாவட்ட தலைமை மருத்துவமனையில் இருதய சிகிச்சைப் பிரிவு துவக்குதல்.

வினா எண் 5447—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிதாக அமையவிருக்கும் காயிதே மில்லத் மாவட்ட தலைநகரில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் இருதய சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

இருதய சிகிச்சைப் பிரிவு செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

26—

நீலகிரி மாவட்டத்தில் டைஃபாயிடு, மலேரியா நோய்களைத் தடுக்க தடுப்பூசி போட நடவடிக்கை.

வினா எண் 10827—திரு. எச். எம். ராஜு :மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் டைபாஃயிட், மலேரியா போன்ற நோய்களைத் தடுக்க தடுப்பூசி போட அரசால் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

1992 மார்ச்சு திங்களில் இம்மாவட்டத்தில் செட்டி மற்றும் அதிகாரரெட்டி ஆரம்ப சுகாதர நிலையத்தைச் சார்ந்த சில சிற்றூர்களில் டைஃபாயிட் நோய் பரவியது. பாதிக்கப்பட்ட இடங்களில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், இந்நோய் மேலும் பரவா வண்ணம், 4,185 நபர்களுக்கு டைஃபாயிட் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் மலேரியா நோய் மற்ற இடங்களிலிருந்து

பரவியதுதான். இந்நோய்க்கு காரணமான கொசு உற்பத்தியை தடுக்க ஊட்டி ஏரியில் வாட்டர்ஜயாசிந்த் என்ற களைக் கொல்லிகளை தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது தற்சமயம் மலேரியா நோயைத் தடுக்க தடுப்பூசி போடுவதில்லை.

27—

கோவைமருத்துவக் கல்லூரியை கோவை அரசு கலைக் கல்லூரி இருக்கும் இடத்திற்கு மாற்ற நடவடிக்கை.

வினா எண் 10863—திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரியை கோவை அரசு கலைக் கல்லூரி இருக்கும் இடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : கோவை மருத்துவக் கல்லூரியை அரசினர் கலைக் கல்லூரி அருகே மாற்றும் செயற் குறிப்பு ஏதும அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

28—

சென்னை பல் மருத்துவமனை மற்றும் கல்லூரிக்கு பல மாடி கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 10913—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பல் மருத்துவமனை மற்றும் கல்லூரிக்கு புதிய பல மாடி கட்டிடம் (multi storied building) கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிடம் கட்டி முடிக்கப்படும்?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : 14–3—1990 நாளிட்ட அரசாணை எண் 466-ல் சென்னை பல் மருத்துவமனைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பிற்காக புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு ரூபாய் 44,50 இலட்சங்கள் வழங்கி ஆணை இடப்பட்டு கட்டிட வேலைகள் 1993 ஆம் ஆண்டு மே திங்களுக்குள் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

29—

தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் பணிபுரிந்த சித்த மருத்துவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டது.

வினா எண் 10928—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனையில் பணிபுரிந்த 45 சித்த மருத்துவ டாக்டர்கள் பணியிலிருந்து நீக்கப்பட்டார்களா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) 43 சித்த மருத்துவ டாக்டர்கள் மட்டும் பணியில் இருந்து நீக்கப்பட்டனர்.

(ஆ) இம்மாநிலத்தில் சித்த மருத்துவம் விரிவான முறையில் அறிமுகம் செய்யப்பட்டபோது பல மருத்துவ நிலையங்களில் சித்தா பிரிவுகள் துவங்கப்பெற்று பல உதவி மருத்துவ அலுவலர் பணியிடங்கள் அரசால் ஒப்பளிக்கப்பட்டன. மேற்படி உதவி மருத்துவர் நியமனம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வுக்கு உள்ளிட்டது என்றாலும் அவசர நிலை கருதி வேலை வாய்ப்பகம் மூலம் அனுப்பப்பட்ட நபர்கள் உதவி மருத்துவர் அலுவலர்களாக அரசால் தற்காலிகமாக நியமனம்

செய்யப்பட்டனர், பிறகு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட உதவி மருத்துவர்களை பணியமர்த்தும் பொருட்டு தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட 43 உதவி மருத்துவ அலுவலர்கள் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். (ousted from service)

30—

மருந்துக் கடைகளில் போலி மருந்துகள் விற்பனையைத் தடுத்தல்.

வினா எண் 11080—திரு. கே. கந்தசாமி; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருந்துக் கடைகளில் போலி மருந்துகள் விற்பதைத் தடுக்கும் வகையில் நடமாடும் மருந்து சோதனைக் கூடம் (Mobile Testing Unit) ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு, சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) நடமாடும் மருந்து சோதனை கூடம் ஏற்படுத்துவது என்பது நடைமுறைக்கு இயலாது,

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை,

31—

கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நீரிழிவு காசநோய் பிரிவுகளை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை,

வினா எண் 11277—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள நீரழிவு காசநோய் பிரிவுகளை வேறு இடத்தில் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு சு.முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இப்பிரிவுகளை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க அவசியம் தற்போது ஏற்படவில்லை,

1993 அக்டோபர் 26]

32—

பெரியார் நகர் புறநகர் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகளை அதிகப்படுத்துதல்

வினா எண் 11299—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் நகர் புறநகர் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகளை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையில் தற்போதுள்ள படுக்கைகள் போதுமானதாக உள்ளன.

33—

சென்னை பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் நாய்க்கடி மற்றும் பாம்புக் கடிக்கு ஊசிபோடும் பிரிவுகளைத் தொடங்குதல்.

வினா எண் 11302—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெரியார் நகர், அரசு புறநகர் மருத்துவமனையில் நாய்க்கடி மற்றும் பாம்புக்கடிக்கு ஊசி போடும் பிரிவை தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பிரிவு 24 மணி நேரமும் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பெரியார் நகர், புறநகர் மருத்துவமனையில் இயங்கிவரும் பொது ஊசி போடும் பிரிவி

லேயே, பாம்புக்கடி மற்றும் நாய்க்கடிக்கு ஊசி போடப் பட்டு வருகிறது. எனவே இதற்காக தனியாக பிரிவு ஏற் படுத்த அவசியம் இல்லை.

34—

சென்னை பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் தீவிர இருதய சிகிச்சைப் பிரிவு தொடங்குதல்.

வினா எண் 11304—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகர், அரசு புறநகர் மருத் துவமனையில் தீவிர இருதய சிகிச்சை கவனிப்புப் பிரிவை தொடங்கும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

35—

சென்னை பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனை யில் மகப்பேறு மருத்துவப் பிரிவு தொடங்குதல்.

வினா எண் 11306—திரு. ப. ரங்கநாதன் : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை, பெரியார் நகர், அரசு புறநகர் மருத் துவ மனையில் மகப்பேறு மருத்துவப்பிரிவு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

[1993 அக்டோபர் 26

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவ மனையில் மகப்பேறு மருத்துவப் பிரிவு ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

36—

சென்னை பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவ மனையில் குழந்தைகள் நல மருத்துவ சிகிச்சைப் பிரிவு தொடங்குதல்.

வினா எண் 11307—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெரியார் நகர், அரசு புறநகர் மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவ சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : குழந்தைகள் நல சிகிச்சைப் பிரிவு ஏற்கனவே உள்ளது.

37—

சென்னை பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையில் காலரா நோய் கண்காணிப்புப் பிரிவு தொடங்குதல்.

வினா எண் 11308—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெரியார் நகர், அரசு புறநகர் மருத்துவமனையில் காலரா நோய் கண்காணிப்புப் பிரிவு தொடங்கும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : காலரா நோய் கண்காணிப்புப் பிரிவு அரசு பொது மருத்துவமனைகளில் தனியே கிடையாது. காலரா போன்ற தொற்று நோய்க்கு தனியே மருத்துவ மனை தண்டையார்பேட்டையில் இயங்கி வருகிறது. எனவே பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையில் காலரா நோய் கண்காணிப்புப் பிரிவு தொடங்கும் அவசியம் இல்லை.

38—

நடுவிக்கோட்டை கொண்டிக்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாக மாற்றுதல்.

வினா எண் 11356—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை கொண்டிக்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாக மாற்ற அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை கொண்டிக்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாக மாற்ற அரசிடம் செயற் குறிப்பு ஏதுமில்லை.

39—

சென்னை பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவு தொடங்குதல்.

வினா எண் 11851—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகரில் உள்ள அரசு புறநகர் மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவு ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : எழும்பூரில் கண் மருத்துவமனை தனியே இயங்கி வருவதாலும், ஸ்டான்லி போன்ற மருத்துவ மனைகளில் கண் மருத்துவப் பிரிவு இருப்பதாலும் பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவு ஆரம்பிக்கும் அவசியம் இல்லை. எனினும் பொது மருத்துவ மனையிலிருந்து கண் சிறப்பு மருத்துவரை அனுப்பி கண்நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

40—

விபத்து மற்றும் அவசரப் பிரிவுகளை மற்ற மருத்துவமனைகளில் ஏற்படுத்துதல்.

வினா எண் 15229—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மருத்துவமனையில் உள்ளது போல் விபத்து மற்றும் அவசரப் பிரிவுகளை தேவைக்கேற்ப மேலும் சில மருத்துவ மனைகளில் ஏற்படுத்த அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

கடலூர் தலைமை மருத்துவமனையில் உள்ளது போல் விபத்து மற்றும்அவசர பிரிவுகளை தேவைக்கேற்ப மேலும் சில மருத்துவமனைகளில் ஏற்படுத்த செயற் குறிப்பு அரசிடம் தற்சமயம் இல்லை.

41—

நன்னிலம் மற்றும் பேரளம் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் நியமனம்.

வினா எண் 17393—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் மற்றும் பேரளம் அரசு மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): நன்னிலம்அரசு மருத்துவ மனைக்கு புறநோயாளிகள் மற்றும் உள் நோயாளிகள் வருகையின்படி தற்போது அனுமதிக்கப்பட்ட ஐந்து உதவி மருத்துவர் பணியிடங்கள் போதுமானதாகும். எனவே தற்போது கூடுதல் பணியிடம் உருவாக்குவதற்கு தேவையில்லை. விதிகளின் படி, தற்போது பேரளம் ஆரம்ப நல நிலையத்திற்கு 3 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் அரசால் அனுமதிக்கப் பட்டுள்ளன. எனவே கூடுதல் உதவி மருத்துவர் பணியிடங்கள் உருவாக்கத் தேவையில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

42—

காட்டுப் பகுதியிலுள்ள நீரூற்றுக்களை குடிநீர்த் திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளுதல்.

வினா எண் 10828—திரு.எச்.எம். ராஜு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் வன இலாகாவிற்கு சொந்தமான காட்டுப் பகுதிகளில் நீர் ஊற்றுக்களில் இருந்து குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வனத் துறைக்குச் சொந்தமான காட்டுப் பகுதிகளிலுள்ள நீர் ஊற்றுக்களை பஞ்சாயத்து மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற அமைப்புக்கள் கண்டு அறிந்து தெரிவித்தால் வனப்பாது காப்புச் சட்டத்தின்படி மத்திய அரசின் அனுமதியுடன் குடிநீர் வசதி செய்து தர ஆவன செய்யப்படும்.

43—

வனத்துறையில் பதவி உயர்வுகள் தாமதமாதல்.

வினா எண் 11012—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் துறையில் பாரஸ்ட் கார்டு பாரஸ்டர் ரேஞ்சராக நியமிக்கப்படுவோர் பதவி உயர்வு பெற கால தாமதம் ஆவது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு இதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வனத் துறையில் பொதுவாக வனக் காப்பாளர் (Forest Guard) வனவர் (Forester) மற்றும் சரகர்களுக்கு (Ranger) அவ்வப்போது ஏற்படும் பணி காலியிடங்களுக்கு ஏற்ப கால தாமதம் இல்லாமலே நடைமுறையிலுள்ள விகிதாச்சாரப்படி பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

44—

தமிழ்நாட்டில் மூங்கில் வளர்ச்சி.

வினா எண் 11222— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மூங்கில் வளர்ச்சிக் கழகம் (Bomboo Corporation) அமைக்க அரசு பரிசிலனை செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

45—

வறட்சியால் பாதிக்கப்படும் காடுகளை செயற்கை மழை மூலம் காப்பாற்றுதல்.

வினா எண் 12805— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட காடுகளை செயற்கை மழை மூலம் அழிவினின்றி காப்பாற்றும் திட்டத்தை செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

இல்லை.

46—

வனத்துறை மூலம் வளர்க்கப்பட்ட யூக்கலிப்டஸ் மரங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு விற்க நடவடிக்கை.

வினா எண் 12814—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வனத்துறை மூலமாக வளர்க்கப்பட்டுள்ள யூக்கலிப்டஸ் மரங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு குறைந்த விலைக்கு விற்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

47—

மேற்குத் தொடர்ச்சி மலையில் நறுமணச் செடிகளை Lemone Grass பயிரிடுதல்.

வினா எண் 14434—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மேற்குத் தொடர்ச்சி மலையில் நறுமணச் செடிகளை (Lemone Grass) பயிரிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

மேற்குத் தொடர்ச்சி மலையில் நறுமணச் செடிகள் (Lemone Grass) பயிரிடும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

48—

வனத்துறைக்குச் சொந்தமான இடங்களில் காடுகள் வளர்க்க பணியாளர்கள் நியமனம் செய்தல்.

வினா எண் 14440— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வனத்துறைக்குச் சொந்தமான இடங்களில் மரம் வைத்து வளர்த்து காடாக்க பணியாளர்களை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

வனத்துறை, அரசுக்கு சொந்தமான நிலங்களிலும் தனியார் நிலங்களிலும் சேர்த்து காடு வளர்ப்புப் பணியை தீவிரமாக செயற்படுத்தி வருகின்றது. இதற்குத் தேவைப் படும் பணியாளர் பணியிடங்கள் அவ்வப்போது தோற்று விக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

49—

கீரிப்பாறை ரப்பர் கழகத்தில் மருத்துவமனை ஒன்று ஏற்படுத்தல்.

வினா எண் 17476—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீரிப்பாறைப் பகுதியில் ரப்பர் கழகத்தில் 50 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

1993 அக்டோபர் 26]

50—

பெருஞ்சாணி அணையில் தூர் எடுக்க நடவடிக்கை.

வினா எண் 10046—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதியில் பெருஞ்சாணி அணை பல ஆண்டுகளாக தூர் எடுக்காமல் அதன் கொள்ளளவு குறைந்து வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : அணைகளில் உள்ள தூரை வாருவது மிகவும் அதிகமான செலவினை ஏற்படுத்தும் என்பதால், பொருளாதார அடிப்படையில் இது சாத்தியமானது அல்ல.

51—

முல்லையாற்றில் உடைப்பு ஏற்பட்டு நஞ்சை நிலங்கள் பாதிப்புக்குள்ளாவதை தடுக்க நடவடிக்கை.

வினா எண் 9225—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்கா மழைக் காலங்களில் முல்லையாற்றில் உடைப்பு ஏற்பட்டு கடமக்கோடு, திக்குறிச்சி போன்ற பகுதிகளில் உள்ள நஞ்சை நிலங்கள் மணலால் மூடப்படுவது அரசிற்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதை நிரந்தரமாகத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டது.

52—

நெடுஞ்சாலை துறையைச் சார்ந்த சாலைகளிலுள்ள பள்ளங்களை அடைக்க நடவடிக்கை.

வினா எண் 10169—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எல்லா நெடுஞ்சாலைத் துறை சம்பந்தப்பட்ட தார் சாலைகளிலும் தற்காலிக கூலித் தொழிலாளர் மூலம் இரு மாதத்திற்கு ஒரு தடவை சாலைகளிலுள்ள பள்ளங்களை அடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

தற்போது சிறப்பு பராமரிப்பு நிதித் திட்டத்தின்கீழ் மிகவும் பழுதடைந்துள்ள சாலை சீராக பேருந்து வாகனப் போக்குவரத்துக்கு ஏற்ப தயாரிக்கப்படுவதனால், தற்காலிக கூலித் தொழிலாளர்களைக் கொண்டு இரண்டு மாதங்களுக்கு ஓர் முறை வீதம் பள்ளங்களை நிரவல் செய்யவேண்டிய அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

53—

நாகப்பட்டினத்தில் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்ட நடவடிக்கை.

வினா எண் 10195—திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் தொகுதி, நாகபட்டினத்தில் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச்சுவர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

54—

புதிய சட்டமன்ற விடுதி அருகே கூவம் ஆற்றில் துர்நாற்றம் ஏற்படுவதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 10222—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய சட்டமன்ற விடுதிக்கு அருகே காற்று வீசும் போது, கூவம் ஆற்றிலிருந்து மிகவும் துர்நாற்றம் ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்

(அ) ஆம்.

(ஆ) கூவம் ஆற்றின் முகத்துவாரத்தில் ஏற்படும் மண் தடைகள் இயந்திரங்கள் மூலம் அகற்றப்படுகின்றன. இதனால் தாழ்வான கடல் அலைகளின் (Low tide) போது, கூவத்தில் உள்ள சாக்கடை நீர் கடலுக்கும், உயர் கடல் அலையின்போது (High tide) கடல் நீர் கூவம் ஆற்றிற்கும் வருவதால் துர் நாற்றத்தின் வீரியம் பெருமளவில் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த மண் தடைகள் அகற்றும் பணியை, பெரிய அளவில் மேற்கொள்ள ரூ. 13 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சென்னை மாநகராட்சியின் மேலொப்பத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியின் மேலொப்பம் பெறப்பட்டவுடன், அரசு பொது பணித்துறையின் மதிப்பீடு ஆட்சி ஒப்புதல் பெற்று, பணி முழு வேகத்தில் மேற்கொள்ளப்படும். தற்பொழுது புல்டோசர் கொண்டும், ஆட்கள் மூலமும், கூவம் ஆற்றின் முகத்துவாரத்தில் ஏற்படும் அடைப்புகள் அவ்வப்பொழுது அகற்றப்பட்டு வருகின்றன.

55—

நகராட்சி தெருவிளக்குகளுக்கு மேம்பாட்டு கட்டணம் வசூலித்தல்.

வினா எண் 10253—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிகளில் தெருவிளக்கு அமைக்க ஒரு தெரு விளக்குக்கு மின்சார வாரியம் எவ்வளவு தொகை வசூலிக்கிறது?

(ஆ) வசூலிக்கப்படும் தொகை நகராட்சிகளுக்கு இடையே மாறுபடுகிறதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) நகராட்சிகளில் தெருவிளக்கு அமைக்க ஒரு தெரு விளக்கிற்கு ரூ, 300 (ரூபாய் முன்னூறு மட்டுமே) மேம்பாட்டுக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

(ஆ) இவ்வாறு வசூலிக்கப்படும் தொகையில் நகராட்சி களுக்கிடையே மாறுபாடு கிடையாது.

56—

மாட்டுச்சாணத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம்.

வினா எண் 14835—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாட்டுச்சாணத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1993 அக்டோபர் 26]

57—

தளவாய் ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண் 9831—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் தளவாய் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆண்டிமடம் தொகுதியில் தளவாய் ஊராட்சியை, இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

58—

நாட்ராம் பாளையம்-ஒகேனக்கல்லை இணைக்கும் சாலை அமைக்க திட்டம்.

வினா எண் 10026—திரு. மு. வெங்கடராம ரெட்டி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாட்டாரம்பாளையம்-ஒகேனக்கல்லை இணைக்கும் சாலை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு. உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தர்மபுரி மாவட்டம். நாட்ராம்பாளையம் - ஒகேனக்கல்லை இணைக்கும் சாலை அமைப்பதற்கு தோராயமாக ரூ. 100 லட்சங்கள் தேவைப்படும். தற்போதுள்ள நிதிப் பற்றாக்குறையின் காரணமாக. இப்பணியை எடுத்துச் செய்யும் செயற்குறிப்பு தற்போது இல்லை

*விடை—10-3-1993ஆம் நாளிட்டது.

**விடை—24-12-1992ஆம் நாளிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

59—

தாயார் தோப்பு வழியாக ராஜபாண்டி-வி.கே. புதூர் செல்லும் சாலையின் குறுக்கே பாலம் அமைத்தல்

வினா எண் 10173—திரு. எஸ், எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம். கீழ்ப்பாவூர் ஒன்றியத்தில் தாயார் தோப்பு வழியாக. ராஜபாண்டி-வி கே புதூர் செல்ல சிற்றாற்றின் குறுக்கே இணைப்பு பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நெல்லை கட்ட. பொம்மன் மாவட்டம். கீழ்ப்பாவூர் ஒன்றியத்தில் தாயார் தோப்புவழியாக ராஜபாண்டி-வி. கே. புதூர் செல்லும் சாலையில் குறுக்கு பாலம் கட்ட ரூ. 15.00 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. போதிய நிதி ஆதாரமின்மை காரணமாக தற்போது இதுபற்றி செயற்குறிப்புபேது மில்லை.

60—

சுப்புலாபுரம் சங்கரலிங்கபுரம் பாலம் கட்டுதல்

வினா எண் 10248—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி சுப்புலாபுரம். சங்கரலிங்கபுரம் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் வாசுதேவநல்லூர் தொகுதி சுப்புலாபுரம் சங்கரலிங்கபுரம் பாலம் கட்ட

*விடை—12-2-1993ஆம் நாளிட்டது

**விடை—19-2-1993ஆம் நாளிட்டது

ரூ. 20.00 இலட்சம் தேவைப்படும். நிதி ஆதாரமின்மையால் தற்போது இப்பணியை எடுத்துச் செய்வதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

61—

மூலச்சி ஊராட்சி நெசவாளர் காலனி குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி.

வினா எண் 11000—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி ஒன்றியம். மூலச்சி ஊராட்சி நெசவாளர் காலனி புதிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம் மூலச்சி ஊராட்சி நெசவாளர் காலனி புதிய குடியிருப்புகளுக்கு என நடப்பு நிதி ஆண்டில் (1992-93) புதியதாய் குடிநீர் வழங்கும் திட்டம் ஏதுமில்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

62—

ஆணைக்காரன் சத்திரம், கோபால சமுத்திரம் ஊராட்சிகளை இணைத்தல்.

வினா எண் 11842—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி ஆணைக்காரன் சத்திரம் பேரூராட்சியையும் கோபாலசமுத்திரம் ஊராட்சியையும் இணைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

*விடை—24-12-1992ஆம் நாளிட்டது.

(ஆ) ஆம் எனில், எப்போது ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், சீர்காழி தொகுதியிலுள்ள ஆணைக்காரன் சத்திரம் பேரூராட்சியையும், கோபாலசமுத்திரம் ஊராட்சியையும் இணைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

63—

நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களை உள்ளாட்சி துறையிலேயே பணியமர்த்தல்.

வினா எண் 12259—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் உதவிப் பொறியாளர்கள் / இளநிலைப் பொறியாளர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் பணியமர்த்தப்படுவதை மாற்றி உள்ளாட்சித் துறையிலேயே ஒரு பிரிவு ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆம். அரசின் ஆய்வில் உள்ளது.

64—

தாந்தி அம்மன் கோயில் குளத்தை ஆழப்படுத்தி அகலப்படுத்துதல்

வினா எண் 14658—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, பெரிய கிருஷ்ணாபுரம் பஞ்சாயத்தில் இருக்கும் தாந்தி அம்மன் கோயில் குளத்தை உலக வங்கியின் நிதியுதவி பெற்று ஆழப்படுத்தி, அகலப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

*விடை—5-1-1993ஆம் நாளிட்டது.

**விடை—10-3-1993ஆம் நாளிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆண்டிமடம் தொகுதி, பெரிய கிருஷ்ணாபுரம் தாந்தி அம்மன் கோயில் குளம் தற்போது நீர் நிரம்பி உள்ளது. எனவே மேற்படி குளத்தை ஆழப்படுத்தி அகலப்படுத்திட அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

65—

நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நிர்வாக சீரமைப்பில் 9-ஏ அறிவிப்புக் கொடுத்தல்.

வினா எண் 7471—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நிர்வாகச் சீரமைப்பில் 9-ஏ, அறிவிப்பு கொடுக்கப்படுகிறதா ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

ஆம்.

9-ஏ, அறிவிப்பு தொழிற் தகராறு சட்டம் 1947-ன் நான்காவது அட்டவணையின் கீழ் வரும் இனங்களை மாற்றும்போது பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டியதாகும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்தவரையில் கீழ்க் கண்ட இனங்களில் இந்த 9ஏ-ன்கீழான அறிவிப்பு கொடுக்கப் பட்டுள்ளது.

(அ) கழகத்தில் ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து அதிகாரம் (Chapter) கட்டளை விதி (Regulation) 4-(பி) 4(சி), இ 11 (!!)-ம் மற்றும் அதிகாரம் 111-ல் விதி 18(பி) விதிகள் ஆகியவையும் திருத்த முடிவு செய்து தொழிற் தகராறு சட்டம் பிரிவு 9ஏ-ன்படி அறிவிப்பு வழங்கப்பட்டது. இதனை ஆட்சேபித்து தொழிற் சங்கம் கொடுத்த வேலை நிறுத்த அறிவிப்பு சமரச நடவடிக்கையில் உள்ளது.

*விடை—10-3-1993ஆம் நாளிட்டது.

**விடை—12-2-1993ஆம் நாளிட்டது.

[1993 அக்டோபர் 26

(ஆ) தகுதிகாண் பருவத்திற்கான (Probation) கட்டளை விதி 18-ஐ(Regulation) திருத்துவதற்கான ஓர் 9ஏ, அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனை ஆட்சேபித்து கொடுக்கப் பட்ட வேலை நிறுத்த அறிவிப்பு குறித்த சமரச நடவடிக்கை நிலுவையில் உள்ளது.

(இ) அதிகாரம் (Chapter) 7-ல் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் குறித்த கட்டளை விதி 6 திருத்தம் செய்ய ஓர் 9ஏ, அறிவிப்பு கொடுக்கப்பட்டிருந்தது. இதனை ஆட்சேபித்து கொடுக்கப்பட்ட வேலை நிறுத்த அறிவிப்பு குறித்து சமரச நடவடிக்கை நிலுவையில் உள்ளது.

(ஈ) அதிகாரம் 11 கட்டளை விதி 28 திருத்தம் குறித்து தொழிற் தகராறு சட்டம், பிரிவு 9ஏ, கீழ் அறிவிப்பு கொடுக்கப் பட்டிருந்தது. இதனை ஆட்சேபித்து கொடுக்கப்பட்ட வேலை நிறுத்த அறிவிப்பு குறித்து சமரச நடவடிக்கை நிலுவையில் உள்ளது.

66—

பேராவூரணியில் பால் பதனிடும் நிலையம் தொடங்குதல்.

வினா எண் 12560—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியில் பால் பதனிடும் நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

இல்லை.

செருவாவீடுதியில் பால் வழங்கும் சங்கம்.

வினா எண் 12784—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, செருவாவீடுதியில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—18-12-1992ஆம் நாளிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, செருவாவிடுதியில் ஏற்கனவே ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருவதால் மேற்படி பகுதியில் புதிதாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை. எனவே, பேராவூரணி தொகுதி செருவாவிடுதியில் பால் கூட்டுறவு சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

68—

தமிழகத்தில் மூன்றாம் பால் பெருக்குத் திட்டம்.

வினா எண் 12851—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 3-வது பால் பெருக்குத் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(ஆ) ஆம்.

(ஆ) மூன்றாம் பால் பெருக்குத் திட்டம் 13 மாவட்டங்களில் ரூ. 68.19 கோடி செலவில் தேசிய பால் வள வாரியத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

69—

கணேசபுரம் அமுதம் அங்காடிக்கு நிலையான கட்டிடம்.

வினா எண் 12915—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

*விடை—28-4-1993ஆம் நாளிட்டது.

**விடை—24-12-1992ஆம் நாளிட்டது.

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கணேசபுரம் அமுதம் அங்காடிக்கு 1992-93-ல் நிலையான கட்டிடமும் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அமுதம் நியாயவிலை அங்காடியோ அல்லது கிராம அங்காடியோ இயங்கவில்லை. அனைத்து அங்காடிகளும் கூட்டுறவுத் துறையின் மூலமாகவே செயல்பட்டு வருகின்றன. மேலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் மாநிலத்திலுள்ள எந்த ஒரு அமுதம் அங்காடிக்கும் நிலையான கட்டிடம் கட்டும் செயற்குறிப்பும் அரசிடம் தற்சமயம் இல்லை.

70—

ஊத்துமலை பகுதியில் பால் பதனிடும் தொழிற்சாலை

வினா எண் 14418—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, ஊத்துமலை அருகில் பால் பதனிடும் தொழிற்சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

இல்லை.

*விடை—6-4-1993 ஆம் நாளிட்டது

**விடை—23-2-1993 ஆம் நாளிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

71—

ஒட்டங்காடு, திருச்சிற்றம்பலம், அதிராமபட்டினம், பெருமகளூர் ஆகிய இடங்களில் பால் பதனிடும் தொழிற்சாலை அமைத்தல்.

வினா எண் 14419— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, ஒட்டங்காடு, திருச்சிற்றம்பலம் அதிராமபட்டினம், பெருமகளூர் ஆகிய இடங்களில் அரசு பால் பதனிடும் தொழிற்சாலைகள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதியில் உள்ள ஒட்டங்காடு, திருச்சி, சிற்றம்பலம், அதிராமபட்டினம் மற்றும் பெருமகளூர் ஆகிய இடங்களில் அரசு பால் பதனிடும் தொழிற்சாலைகள் தனித் தனியாக தொடங்கும் அளவுக்கு மேற்படி பகுதிகள் பால் பெருக்கம் உள்ளவை அல்ல. எனவே, இது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

72—

உடைய நாட்டில் பால் பதனிடும் தொழிற்சாலை.

வினா எண் 14424— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி உடைய நாட்டில் அரசு பால் பதனிடும் தொழிற்சாலையை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

பேராவூரணியிலிருந்து சுமார் 27 கி. மீ. தொலைவில் தற்போது செயல்பட்டு வரும் பட்டுக்கோட்டை பால் குளிர் பதன நிலையத்தை முழுமையாக பயன்படுத்தும் அளவிற்கு

* விடை—10—3—1993 ஆம் நாளிட்டது.

** விடை—10—3—1993 ஆம் நாளிட்டது.

போதுமான அளவு பால் வராத நிலையில், பேராவூரணி தொகுதி உடையநாட்டில் தனியே ஒரு பால் குளிர்பதன நிலையம் தொடங்க வாய்ப்பில்லை. எனவே, இது பற்றிய செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

73—

பரமக்குடியில் நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு.

வினா எண் 14738—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குக் கட்டிடம் கட்ட அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எடுத்த நடவடிக்கை என்ன ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்கா கமுதக்குடி கிராமத்தில் 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவுக்கு ஒரு கிடங்கு கட்டிடம் கட்ட 19.90 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

74—

பரமக்குடி தாலுக்காவில் தொடக்க கூட்டுறவு வங்கிகள்.

வினா எண் 15417—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தாலுக்காவில் உள்ள தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் எத்தனை ?

(ஆ) இதன் மூலம் வழங்கிய நகைக் கடன்கள் எவ்வளவு ?

(இ) சொந்தக் கட்டிடங்கள் இல்லாத தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் எத்தனை ?

*விடை— 22—2— 1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

* விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) 23.

(ஆ) கடந்த 3 ஆண்டுகளில் பரமக்குடி தாலுக்காவில் உள்ள தொடக்க கூட்டுறவு வங்கிகள் வழங்கிய நகைக்கடன் விவரம் பின்வருமாறு :—

	1990–91		1991–92	
	(ரூபாய் இலட்சத்தில்.)			
(1)	(2)	(3)	(4)	(5)
	எண்	தொகை.	எண்	தொகை.
நகைக்கடன் ..	5,822	135,90	6,103	175.10
நிலுவை ..	7,193	178.24	8,120	224.1

	1992–93 (31—1—1993 வரை) (ரூபாய் இலட்சத்தில்)	
	எண்	தொகை.
(1)	(6)	(7)
நகைக்கடன்	4,210	121.49
நிலுவை	8,791	279.98

(இ) இல்லை.

75—

இராமநாதபுரம் மாவட்டம் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு லாரிகள் வழங்குதல்.

வினா எண் 15755— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு விநியோகப் பொருள்களை ஏற்றிச் செல்ல லாரிகள் வாங்கப்பட்டுள்ளதா ?

* விடை—27—4—1993 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மண்டலத்திற்கு புதிய லாரி வாங்குவதற்காக கருத்துரு தற்போது ஏதும் இல்லை. பொது விநியோகத்திற்கான பொருட்களை ஏற்றிச் செல்ல பிற மண்டலங்களில் நடைமுறையில் உள்ளபடி தனியார் லாரிகளை வாடகைக்கு வைத்துக்கொள்ள உத்தரவிடப் பட்டுள்ளது.

76—

பால் சேகரிப்பு குழு பணிக்கு ஒன்றியங்களுக்கு வழங்கியுள்ள மானியங்கள்.

வினா எண் 16002—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பால் சேகரிப்புக் குழுப் பணிக்கு 1992-93-ல் ஒன்றியங்களுக்கு வழங்கியுள்ள அரசு மானியங்கள் எவ்வளவு ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

நடப்பு நிதியாண்டில் (1992-93-ல்) பால்சேகரிப்புக் குழுப் பணிக்கு அரசு மானியங்கள் ஏதும் ஒன்றியங்களுக்கு வழங்கப் படவில்லை.

77—

கூட்டுறவு வங்கி அலுவலர்களையும் அரசு அலுவலர்களாக்கும் செயற்குறிப்பு.

வினா எண் 17337—திரு. ஆர் சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

*விடை—18—3—1993 ஆம் நாளிட்டது.

**விடை—26—3—1993 ஆம் நாளிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

கூட்டுறவு சம்பந்தப்பட்ட வங்கி அலுவலர்களையும், ஊழியர்களையும் அரசு அலுவலர்களாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

* விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

கூட்டுறவு வங்கி அலுவலர்களையும் ஊழியர்களையும் அரசு அலுவலர்களாக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

78—

நீலகிரி மாவட்டத்தில் ஜாம் பேக்டரி நிறுவுதல்.

வினா எண். 11112—திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாவகைப் பழங்களும் அதிக அளவில் கிடைக்கும் நீலகிரி மாவட்டத்தில் ஒரு ஜாம் பேக்டரி நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

79—

வேளாண்மைப் பொறியியல் பட்டம் படித்து வேலையின்றி இருக்கும் பட்டதாரிகளுக்கு கிராம குடிநீர் வழங்கல் திட்டத்தில் வேலை வாய்ப்பளித்தல்.

வினா எண் 11536—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைப் பொறியியல் படித்து வேலை வாய்ப்பின்றி இருப்போர் எண்ணிக்கை எவ்வளவு ?

* விடை—27—4—1993 ஆம் நாளிட்டது.

(ஆ) கிராமக் குடிநீர் வழங்கல் திட்டங்களில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என அரசு உறுதி ஏதேனும் அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அவர்கள் பணிகளில் அமர்த்தப்படுகின்றனர் ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) வேலை வாய்ப்பகங்களில் 31—10—1992 வரை பதிவு செய்துள்ள வேளாண்மை பொறியியல் பட்டதாரிகள் எண்ணிக்கை 355 ஆகும்.

(ஆ) மற்றும் (இ) : வேளாண் பொறியியல் பட்டம் பெற்று வேலை வாய்ப்பின்றி இருப்பவர்களை வேளாண் பொறியியல் துறையிலேயே பணியமர்த்துவதற்கான சாத்தியக் கூறுகளை அரசு பரிசிலனை செய்து வருகிறது.

80—

தனியார் நர்சரி மூலம் விற்கப்படும் செடிகளின் விலைகளை விலை நிர்ணயம் செய்ய அரசு நடவடிக்கை.

வினா எண் 11778—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

"தனியார் நர்சரி" மூலம் விற்கப்படும் நாற்றுகள், பழச் செடிகள், குரோட்டன்ஸ், தென்னங்கன்றுகளின் தரம், அதன்விலை ஆகியவற்றை நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

இல்லை.

1993 அக்டோபர் 26]

81—

தலைவாரியில் அணை கட்டும் பணி தொடங்கப் படாமல் உள்ளது.

வினா எண் 11812—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில், அரவம்பட்டி கிராமத்தின் அருகில் தலைவாரியில் அணைக்கட்டும் பணி தொடங்கப்படாமல் உள்ளது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

விடை—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில், அரவம்பட்டி கிராமத்தின் அருகே தலைவாரியின் குறுக்கே அணைக்கட்டும் பணியினை கைவிட அரசு முடிவு செய்துவிட்டது.

(ஆ) இப்பணியைக் கைவிட அரசு முடிவு செய்துவிட்டதால் இக்கேள்வி எழவில்லை.

82—

பேராவூரணி தொகுதியில் தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்.

வினா எண் 13504—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதியில், தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் அரசு தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

விடை—

இல்லை.

[1993 அக்டோபர் 26

83—

இராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாய நிலங்களில் காட்டு வேலன் மரங்கள் வளர்த்தல்.

வினா எண் 15902— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாய நிலங்களில் காட்டு கருவேலமரம் வளர்க்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், உணவு உற்பத்தி பாதிப்பதை தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) ஆம் அறியும்.

(ஆ) இராமநாதபுரம் மிகவும் சொற்பமழைப் பகுதியாய் இருப்பதால் வறட்சி காரணமாக விவசாய நிலங்கள் தரிசாய் விடப்படுவதுண்டு. அப்படிப்பட்ட நிலங்களில் காட்டுக் கருவேல மரங்கள் ஆங்காங்கே தானாகவே முளைக்கின்றன. இவைகள் வறட்சியைத் தாங்கி வளரும் குணமுடையது. விவசாயிகள் இயற்கையாய் வளரும் அம்மரங்களை கன்றிலேயே வெட்டி விடாமல் வளரவிட்டு முதிர்ந்த கட்டத்தில் விறகாகவும், கரி தயாரித்து விற்பனைக்காகவும் பயன்படுத்துகின்றனர். அதனால், அந்த விவசாயிகள் ஓரளவு வருமானம் பெறுகிறார்கள்.

84—

தரமான ஜிங்க் சல்பேட் கிடைக்க நடவடிக்கை

வினா எண் 17022—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத்திற்குப் பயன்படும் தரமான ஜிங்க் சல்பேட் கிடைக்காததால் போலிகள் நிறைய விற்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தரமான ஜிங்க் சல்பேட் கிடைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) போலி ஜிங்க் சல்பேட் விற்கப்படுவதாக எதுவும் அரசுக்கு தகவல்கள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

85—

வினா எண் 17326—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether farm Machineries and Testing Institute is to be set up in this State;

(b) If so, the details thereof; and

(c) Whether this scheme is to be aided by the Central Government, and if so, the details thereof.

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மைய அரசு எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் பண்ணை கருவிகள் பயிற்சி மற்றும் ஆய்வு மையம் ஒன்றை இம்மாநிலத்தில் அமைக்க முன் வந்துள்ளது.

(இ) இத்திட்டம் மத்திய அரசின் உதவியுடன் செயல் படுத்தப்படும். இம்மையம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அமைக்கப்படும். இதன் முழு செலவையும் மைய அரசு ஏற்றுக் கொள்ளும்.

86—

வேளாண்மை அலுவலர்களுக்கு சம வேலை, சம ஊதியம் அளிக்க நடவடிக்கை.

வினா எண் 17554—திரு. உ. பலராமன் மற்றும் டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1993 அக்டோபர் 26

(அ) தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தின் தீர்ப்பின்படி துணை வேளாண்மை அலுவலர்களுக்கு சமவேலை, சம ஊதியம் அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) நிதிநிலை அறிக்கையில் சுமார் இரண்டாயிரம் பதவி குறைப்பு செய்துள்ளதை ரத்து செய்யவும அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) துணை வேளாண்மை அலுவலர்களுக்கு, வேளாண்மை அலுவலர்களுக்கு இணையாக ஊதியம் வழங்க வேண்டுமென்று தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயம் ஆணை வழங்கியுள்ளது. இவ்வாணையை எதிர்த்து இவ்வரசு டெல்லி உச்ச நீதிமன்றத்தில் வழங்கப்படவிருக்கும் உத்தரவிற்கிணங்க இப்பொருள் பற்றி அரசு முடிவெடுக்கும்.

(ஆ) இத்துறையில் பதவி குறைப்பு செய்து ஆணை ஏதும் வெளியிடப்படவில்லை. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

87—

பச்சனம்பட்டி ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க நடவடிக்கை.

வினா எண் 10269—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், பச்சனம்பட்டி ஆதிதிராவிடர் பலர் கடன் பெறாத நிலையிலும் அவர்களது வீட்டுமனைப பட்டாக்களை தமிழ்நாடு வீட்டுவசதி கூட்டுறவு இணையம் திருப்பித் தராமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மனைப்பட்டாக்களை திருப்பித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும்நகர்ப் புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், பச்சனம்பட்டி கிராமத்தில் ஆதிதிராவிடர் உறுப்பினர்களுக்கு வீடு கட்ட சேலம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கடன் தொகையை பெற்றுக் கொள்ள முன்வராததால் அவர்களது வீட்டுமனைப் பட்டாக்களை மற்றும் பத்திரங்கள் அவர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டுவிட்டன.

1993 அக்டோபர் 26]

88—

வீடுகட்டும் கூட்டுறவு சங்க கடன்கள் வழங்கும்போது தவறுகள் ஏற்படுவதைத் தடுக்க கண்காணிப்பு குழு.

வினா எண். 11284—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு சங்கங்கள் மூலம் கோயம்புத்தூரில் வீடு கட்ட கடன் வசதி செய்து கொடுக்கும்போது அதில் தவறுகள் நடக்காமல் தடுக்க கண்காணிப்புக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர் புறப் வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) கூட்டுறவு சங்கம் மூலம் கோயம்புத்தூரில் வீடு கட்ட கடன் வசதி செய்து கொடுக்கும்போது அதில் தவறுகள் நடக்காமல் தடுக்க கண்காணிப்புக் குழு அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

89—

நேதாஜி நகரில் போர்வெல் அமைத்தல்.

வினா எண் 12668—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம் அதம்பை (தெ)-ஐச் சேர்ந்த நேதாஜி நகருக்கு ஒரு போர்வெல் அமைத்துத் தர 1992—93 ஆம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

ஒரு ஆழ்துளைக் கிணறு இப்பகுதிக்கு அமைத்துக்கொடுக்க வரும் நிதியாண்டில் நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

90—

ஓய்வூதியம் பெறுவோர் இறந்தால் அடக்கம் செய்ய அரசு நிதி உதவி.

வினா எண் 16668— திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒய்வு ஊதியம் பெறும் முதியோர் மற்றும் விதவைகள் இறந்தால் அவர்களை அடக்கம் செய்ய அரசு நிதியுதவி செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

சமூக நலத் துறை மூலம் நிதியுதவி செய்யாவிட்டாலும் மற்ற துறைகள் மூலம் நிதியுதவி செய்யப்பட்டு வருகிறது.

91—

புதுக்கோட்டை தொகுதியிலுள்ள சத்துணவு கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை.

வினா எண் 16674— திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் நிறைய இடங்களில் சத்துணவுக் கூடங்களுக்குக் கட்டிடங்கள் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை எப்போது எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தேவையான இடங்களில் கட்டிடங்களை கட்டிக் கொள்ள மக்களிடமிருந்து பெறும் நன்கொடையையும்,

அரசு ஏற்கனவே ஒதுக்கியுள்ள தொகைகளையும் பயன்படுத்திக் கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்.

92—

ஒசூரில் பணிபுரியும் மகளிருக்கு இல்லம் (Hostel) ஏற்படுத்துதல்.

வினா எண் 17017— திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூரில் பணிபுரியும் மகளிருக்காக அரசு ஓர் இல்லம் ஏற்படுத்தத் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

(அ) தர்மபுரி மாவட்டம் ஒசூரில் ஏற்கெனவே ஒரு பணி புரியும் பெண்கள் தங்கும் விடுதி இயங்கி வருகிறது. புதிதாக கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

93—

கலப்பு திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு அரசு வேலைகளில் முன்னுரிமை.

வினா எண் 17192— திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

சம்பந்தப்பட்ட துறைகளுடன் சமூக நலத் துறை ஆலோசனை நடத்தி வருகிறது. வேறு முன்னுரிமை விதிகளுக்கு முரண் ஏற்படாத வண்ணம் இந்த முன்னுரிமை ஏற்படுத்தப் பட இயலுமா என்பது ஆலோசனையில் இருந்து வருகிறது.

[1993 அக்டோபர் 26

94—

ஓசூரில் உழைக்கும் மகளிர் தங்கும் விடுதி கட்டுதல்.

வினா எண் 17501—திரு. கே.ஏ. மனோகரன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓசூரில் ஒரு உழைக்கும் மகளிர் தங்கும் விடுதி (Working Womens Hostel) கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

தர்மபுரி மாவட்டம் ஓசூரில் ஏற்கெனவே ஒரு பணி புரியும் பெண்கள் தங்கும் விடுதி இயங்கி வருகிறது. புதிதாக கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

95—

சேலத்தில் புனர்வாழ்வு இல்லம் அமைத்தல்.

வினா எண் 19187—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் ஆதரவற்ற பெண்களுக்கு புனர் வாழ்வு இல்லம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) சேலத்தில் ஏற்கெனவே இத்தகைய சேவை இல்லம் ஒன்று இயங்கி வருகிறது. ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லமும் இயங்கி வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1993 அக்டோபர் 26]

96—

தொட்டில் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்.

வினா எண் 19692— திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அறிவித்த தொட்டில் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டப்படி தமிழகம் முழுவதும் எத்தனை குழந்தைகள் தமிழகத்தில் தொட்டிலில் போடப்பட்டுள்ளன ?

(ஆ) அவர்களை காக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து உள்ளது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

(அ) 52 குழந்தைகள்.

(ஆ) இந்த குழந்தைகள் அரசு மற்றும் அரசு ஆதரவு பெற்ற காப்பகங்களில் பராமரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

97—

கல்வி, மற்றும் வேலை வாய்ப்புகளில் பிற்பட்டோர் உரிய ஒதுக்கீடு பெற கண்காணிப்புக் குழு அமைத்தல்.

வினா எண் 11227—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் மிகவும் பிற்படுத்தப் பட்ட மக்களுக்கான ஒதுக்கீடு உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படுகிறதா என்று கண்காணிக்க மாநில அளவில் ''கண் காணிப்புக் குழு'' அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

இது பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

98—

ஆங்கில மொழி வழி பயிலும் பிற்பட்ட மாணவர்களுக்கு வருமான வரம்பின்றி கட்டணச் சலுகை வழங்குதல்.

வினா எண் 14493—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் ஆங்கில மொழி வழி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர் களுக்கு வருமான வரம்பின்றி கல்விக் கட்டணச் சலுகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்க்கு உதவித் தொகை வழங்கப்படும் எந்தத் திட்டங்களிலும் வருமான வரம்பு கடைபிடிக்காமல் சலுகைகள் வழங்கப்படுவதில்லை என்பதால் அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் ஆங்கில மொழி வழி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு வருமான வரம்பின்றி கல்விக் கட்டண சலுகை வழங்க தற்பொழுது செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

99—

முருகானந்தபுரம் பனைத் தொழிலாளர்களுக்கு பனைத் தொழிலாளர்களுக்கான கடன் வழங்க நடவடிக்கை.

வினா எண் 13812—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராதாபுரம் தொகுதி, ஆத்தங்கரை பள்ளிவாசலுக்கு அருகில் உள்ள முருகானந்தபுரம் பனைத் தொழிலாளர்களுக்கு பனைத் தொழிலாளர்க்கான கடன் வழங்கிட அரசு முன்வருமா ?

1993 அக்டோபர் 26]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஆரம்ப பனை வெல்லக் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள தகுதியுடைய பனைத் தொழிலாளர்களுக்கு மூலதனக் கடன், முதலீட்டுக் கடன் மற்றும் பனைத் தொழிற் கருவிகள் வழங்குவதற்கான கடன்கள் வழங்கப்படுகின்றன.

100—

தென்னை நார் கழிவுத் தூள்களிலிருந்து காகிதம் தயாரிக்க திட்டம்.

வினா எண் 14667—திரு. கா.பூ. முனுசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில், தென்னை நார் கழிவுத் துகள்கள் பயன்படாமல் உள்ளதால் காகிதக் கூழாக பயன்படுத்தி ஆக்கப்பூர்வமாக உபயோகப்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1—

நான்காம் பட்டியல்.

காயாவூரில மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 12683—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, காயாவூரில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, காயாவூரில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக் கருத்துரு பெறப் பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2—

பாதரங்கோட்டையில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 12684—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பாதரங்கோட்டையில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, பாதரங்கோட்டையில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த

கால்நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3—

கொண்டிகுளத்தில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 12685—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கொண்டிகுளத்தில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, கொண்டிகுளத்தில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால்நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4—

மணக்காட்டில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 12687—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, மணக்காட்டில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, மணக்காட்டில மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இச் கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப்பட்டி களைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5—

முதுகாட்டில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்

வினா எண் 12688—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமி வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, முதுகா ட்டில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, முதுகாட்டில் மாடு அடைக் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசி இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கா நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத் அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆ யர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக் கருத்துரு பெ பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளை பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1993 அக்டோபர் 26]

6—

கட்டுமாவடியில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 12689—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கட்டுமாவடியில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, கட்டுமாவடியில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அடைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால நடைப் பட்டிகளையும் பழுதுபார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்ட வுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7—

செந்தில் பட்டிணத்தில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 12690—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, செந்தில் பட்டிணத்தில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, செந்தில்பட்டிணத்தில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த

கால்நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

வீரியங்கோட்டையில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 12695—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, வீரியங்கோட்டையில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, வீரியங்கோட்டையில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால்நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

பண்ணை வயலில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 12696—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பண்ணை வயலில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பண்ணை வயலில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப் பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளை பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10—

குறிச்சியில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 12699—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப் பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, குறிச்சி யில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, குறிச்சியில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்ட வுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11—

ஊமத்த நாட்டில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 12700—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி ஊமத்த நாட்டில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, ஊமத்தநாட்டில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுதுபார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

உடைய நாட்டில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 12701—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, உடைய நாட்டில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, உடையநாட்டில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால்

1993 அக்டோபர் 26]

நடைப் பட்டிகளையும் பழுதுபார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் நிர்வாக வருவாய் ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13—

முதுகாட்டில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 12702—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, முதுகாட்டில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, முதுகாட்டில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கால்நடைப் பட்டிகளையும் பழுதுபார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதி நிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14—

சேந்தமங்கலத்தில் நியாய விலைக்கடை அமைத்தல்.

வினா எண் 13024—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, சேந்தமங்கலத்தில் நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

ஆண்டிமடம் தொகுதி, சன்னாசி நல்லூர் முதன்மை வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் 536 குடும்ப அட்டைகளுடன் தளவாய் கூடலூரில் நியாய விலைக்கடை இயங்கி வருகிறது. சேந்தமங்கலத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்களும் இக் கடையில் அத்தியாவசியப் பண்டங்கள் பெற்று வருகின்றனர். இக்கிராமத்தில் 144 குடும்ப அட்டைகளே உள்ளன. மிகக் குறைந்த அளவு கார்டுகளுடன் தனியாக நியாயவிலைக் கடை அமைத்தால் மேற்படி கூட்டுறவு வங்கியின் நிதிநிலை மிகவும் பாதிக்கப்படும். ஆகவே, சேந்தமங்கலம் கிராமத்தில் நியாய விலைக் கடை திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

15—

சிவகாமிபுரத்தில் நியாய விலைக் கடை அமைத்தல்.

வினா எண் 14167—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராதாபுரம் தொகுதி, பணக்குடி பஞ்சாயத்து, சிவகாமி புரம் மக்களுக்கு அங்கேயே ரேஷன் வாங்க வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

இராதாபுரம் தொகுதி, பணக்குடி பஞ்சாயத்து, சிவகாமி புரம் மக்கள் இராதாபுரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தினால் நடத்தப்படும் பணக்குடி எண் 2 கடையில் தற்போது இன்றி யமையாப் பொருட்களை பெற்று வருகிறார்கள். இக்கடையில் 934 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் சிவகாமிபுரம் கிரா மத்தில் உள்ள 260 குடும்ப அட்டைகளும் அடங்கும். பணக்குடி கடைக்கும் சிவகாமிபுரத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1 கிலோ மீட்டர் ஆகும். எனவே, சிவகாமிபுரம் கிராமத்தில் தனியாக நியாயவிலைக் கடை அமைக்க இதர விதிமுறைகள் படியும் சாத்தியக்கூறுகள் இல்லை.

1993 அக்டோபர் 26]

16—

தமிழ்நாட்டில் போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடித்தல்.

வினா எண் 16306—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள போலி குடும்ப அட்டைகளை களையும் பொருட்டு எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கையின் விளைவாக 1—1—1991 முதல் 29—2—1992 வரை எத்தனை போலி அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன ?

(ஆ) மாவட்ட வாரியாக ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் உள்ள போலி குடும்ப அட்டைகளை களையும் பொருட்டு எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கையின் விளைவாக 1—1—1991 முதல் 29—2—1992 முடிய கண்டுபிடிக்கப்பட்ட போலி குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 6,30,393 ஆகும்.

(ஆ) களையப்பட்ட போலி குடும்ப அட்டைகள் :

வரிசை எண்ணும், மாவட்டத்தின் பெயரும்.	1991.	1992.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1 செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்.	14,887	1,276	16,163
2 தென் ஆற்காடு	44,640	8,982	53,622
3 வட ஆற்காடு-அம்பேத்கார்.	31,036	8,255	39,291
4 திருவண்ணாமலை-சம்புவராயர்.	18,070	625	18,695
5 தர்மபுரி	27,481	2,834	30,315
6 கோயம்புத்தூர்	41,119	7,225	48,344

(1)	(2)	(3)	(4)
7 பெரியார்	24,525	6,780	31,305
8 நீலகிரி	6,318	..	6,318
9 தஞ்சாவூர்	43,289	569	43,858
10 திருச்சி	54,216	21,316	75,532
11 புதுக்கோட்டை	3,352	5,281	8,633
12 மதுரை	27,007	4,499	31,506
13 திண்டுக்கல்-அண்ணா	11,076	9,977	21,053
14 சேலம்	49,899	8,225	58,124
15 இராமநாதபுரம்	11,036	79	11,115
16 பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர்.	6,604	3,355	9,959
17 காமராசர்	15,950	1,768	17,710
18 திருநெல்வேலி-கட்டபொம்மன்.	15,488	6,612	22,100
19 கன்னியாகுமரி	5,156	439	5,595
20 சிதம்பரனார்	10,200	3,617	13,817
21 துணை ஆணையர் (ந) தெற்கு, சென்னை.	33,287	2,197	35,484
22 துணை ஆணையர் (ந) வடக்கு, சென்னை.	29,021	1,612	30,733
23 நாகப்பட்டினம்-காயிதே மில்லத்.	..	1,113	1,113
மொத்தம் ...	5,23,757	1,06,636	6,30,393

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

1993 அக்டோபர் 26]

17—

பத்தமடை சுகாதார நிலையத்தில் பணியாற்றும் அனைத்து அலுவலர்களுக்கு குடியிருப்பு வசதி.

வினா எண் 8019—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி பத்தமடை சுகாதார நிலையத்தில் ஆண், பெண் மருத்துவர்கள், செவிலியர் மற்றும் சுகாதார ஊழியர்கள் தங்குவதற்கு வீடுகள், சுகாதார நிலையத்தைச் சுற்றி சுவர் எழுப்பும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் செயற்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பத்தமடை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் போதுமான குடியிருப்பு வசதிகள் உள்ளன. தற்போது அரசுக் கட்டிடங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட தடை நடைமுறையில் உள்ளதால் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

18—

மணவயலில் சுகாதார நிலையத்திற்கு கட்டிட வசதி.

வினா எண் 13463—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மணவயலில் இயங்கிவரும் பிரதம சுகாதார நிலையத்திற்குக் கட்டிட வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மணவயலில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏதும் இயங்கவில்லை என்பதால் இக்கேள்விக்கு இடமில்லை.

19—

மேட்டுப்பாளையத்திலிருந்து கன்னியாகுமரிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுதல்.

வினா எண் 8569—செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையத்திலிருந்து கன்னியாகுமரிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மூலம் புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

மேட்டுப்பாளையத்திலிருந்து கன்னியாகுமரிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுவது குறித்து பரிசீலனையில் இல்லை.

20—

தனியார் துறையினர் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்க சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள தடையை நீக்க நடவடிக்கை.

வினா எண் 8946—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டத்தில் சிறுமலை உட்பட எந்தெந்த பகுதிகளில் கூடுதல் பேருந்துகளை இயக்க ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுத்தும் அந்த வழித் தடங்களில் ஏற்கெனவே இயங்கும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் உயர்நீதிமன்றத்தில் பெறப்பட்ட தடையால் கூடுதல் பேருந்துகள் இயங்க முடியாத நிலை உள்ளன ?

1993 அக்டோபர் 26]

(ஆ) இந்த நீதிமன்றத் தடையை நீக்க அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) தனியார் துறையினர் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட வழித்தடங்களுக்கு மட்டும் சென்னை உயர் நீதிமன்றத்தில் தடை பெற்றுள்ளனர்:

1. திண்டுக்கல்-சிறுமலைப்புதூர்
2. திண்டுக்கல்-வி.எஸ். கோட்டை மற்றும்
3. திண்டுக்கல்-கே. அய்யாபட்டி.

(ஆ) சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையில் உள்ளது. தடையை நீக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

21—

சென்னைக்கு வந்துசெல்லும் பேருந்துகள் பூந்தமல்லியில் நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல வசதி செய்தல்.

வினா எண் 9913—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கு வந்து செல்லும் பேருந்துகள் பூந்தமல்லியில் நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல வசதியில்லாமல் நடு ரோட்டிலேயே பயணிகளை ஏற்றிச் செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்து நின்று செல்ல வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பயணிகள் வசதிக்காக பூந்தமல்லியில் இரண்டு பேருந்து நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையிலிருந்து பூந்தமல்லி வரை இயக்கப்படும் எல்லா பல்ல

வன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் இப்பேருந்து நிலையங்களில் நின்று பயணிகளை ஏற்றிச் செல்கின்றன. இந்த பேருந்துகள் நடுரோட்டில் நின்று பயணிகளை ஏற்ற வேண்டிய அவசியம் இல்லை. பூந்தமல்லிக்கு அப்பாலுள்ள பகுதிகளான திருமழிசை, வெள்ளவேடு, ஆண்டர்சன் பேட்டை, தண்டரை, படுர்மேடு, மேப்பூர், நேமம் ஆகிய பகுதிகளிலிருந்து பூந்தமல்லியை நோக்கி வரும் பேருந்துகள் சாலை அமைப்பு குறுகலாகவும், ஆங்காங்கே சாலைகளிலே கடைகளும் மற்ற வாகனங்களும் தடைபட்டு நிற்கின்ற காரணத்தால் பேருந்துகள் சில நேரங்களில் சாலையிலே நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதை முடிந்த வரையில் தடுப்பதற்காக பல்லவன் போக்குவரத்துக் கழகம். போக்குவரத்து ஆய்வாளர்களையும், ஓட்டுநர் பயிற்சி ஆசிரியர்களையும் நியமித்து இதைத் தவிர்த்து வருகின்றது.

22—

சிவகாமிபுரம் 15 எம். நகரப்பேருந்து, மெயின் ரோட்டிலிருந்து ஊருக்குச் சென்று வர அரசு நடவடிக்கை.

வினா எண் 14150— திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, பணகுடி பஞ்சாயத்து, சிவசாமிபுரம் 15எம் நகரப் பேருந்து மெயின் ரோட்டிலிருந்து ஊருக்குள் சென்று வர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

சிவகாமிபுரம் கிராமம், நாகர்கோவில்–திருநெல்வேலி நெடுஞ்சாலையில் காவல்கிணறு விலக்குக்கும், பணகுடிக்கும் இடையில் அமைந்துள்ளது. இந்த கிராமம், காவல்கிணறு விலக்கிலிருந்து மூன்றாவது கி.மீ. தூரத்தில் பிரிந்து செல்லும் மெட்டல் ரோட்டில் மேற்காக செல்லும் குறுகலான சாலையில் 0.6 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இந்த சாலை பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. பேருந்து வசதி பெற்றுள்ள பிரதான சாலையிலிருந்து 0.6 கி.மீ. தூரத்தில் உள்ள இந்த கிராமத்தை பேருந்து வசதியற்றதாக அரசு விதிப்படி கருத இயலவில்லை. எனவே, தடம் எண் 15எம் பேருந்தை தட மாற்றம் செய்து ஊருக்குள் செல்ல வகை செய்ய இயலவில்லை,

1993 அக்டோபர் 26]

23—

மானியம் ஆடூர் கிராமத்திற்கு நகரப் பேருந்து விடுதல்.

வினா எண் 15872— திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம், தீரன் சின்னமலை பணிமனையில் இருந்து நகரப் பேருந்து ஒன்று மானியம் ஆடூர் கிராமம் வரையில் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஜெயங்கொண்டம்—மானியம் ஆடூர் வழி கங்கை கொண்ட சோழபுரம், குறுக்கு ரோடு, மீன்சுருட்டி, காட்டுமன்னார்குடி நத்தமலை வழித்தடத்தின் மொத்த நீளம் 31.0 கி.மீ. ஆகும். இதில் மானியம் ஆடூர் பிரிவு சாலையிலிருந்து மானியம் ஆடூர் கிராமம் வரை உள்ள சுமார் 2.0 கி.மீ. தூரம் பேருந்து வசதி பெறாத பகுதியாகும். காட்டுமன்னார்குடி—சேத்தியாத்தோப்பு மெயின்சாலையிலிருந்து மானியம் ஆடூர் பிரிவு சாலையில் சிறு வாகனங்கள் கூட திருப்ப இயலாதவாறு மிகவும் குறுகலாக உள்ளது. அதனால், மானியம் ஆடூர் பிரிவு சாலையில் பேருந்தை திருப்ப இயலாது. எனவே, மானியம் ஆடூர் கிராமம் நகரப் பேருந்து இயக்க இயலாது.

24—

பவானி செல்லும் பேருந்தை சுண்ணாம்புக் கரட்டூர், வட்டபரப்பான்காடு, கைகோலப்பாளையம் வரை நீட்டித்தல்.

வினா எண் 15916—டாக்டர் வே. சரோஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

எடப்பாடியிலிருந்து காவேரிபட்டி வழியாக பவானி செல்லும் பேருந்தை சுண்ணாம்புக் கரட்டூர் வட்டப்பரப்பான் காடு, கைகோலப்பாளையம் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தட நீட்டிப்பு கோரிக்கையில் கேட்கப்பட்ட தடத்தின் நீளம் 35·6 கி. மீ. ஆகும். ஆகவே, மோட்டார் வாகன விதிப்படி 30.0 கி.மீ-க்கு மிகைப்பட்ட தடத்தில் நகரப் பேருந்தை தட நீட்டிப்பு செய்ய வகையில்லை. மேலும், சுண்ணாம்பு கரட்டூர் மற்றும் கைகோலப்பாளையம் முதலிய ஊர்கள் தற்போது எடப்பாடியிலிருந்து குமாரபாளையம் வழி வட்ராம்பாளையம், பெரமச்சிப்பாளையம் தடத்தில் இயக்கப்படும் பேருந்து மூலம் தினசரி 6 நடைகள் பேருந்து வசதி பெற்று வருகின்றன. மற்றொரு ஊரான வட்டபரப்பான்காடுக்கு செல்லும் தடத்தில் 0.5 கி.மீ தூரம் வாய்க்கால் கரையின் மீது அமைந்த மிகச் குறுகிய மண் தடமாகும். இது பேருந்து இயக்கத்திற்கு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால், இதில் பேருந்து இயக்க வகையில்லை.

25—

தமிழகத்திலுள்ள நலிவடைந்த கூட்டுறவுச் சங்க நெசவாளர்களின் துயர் துடைக்க நடவடிக்கை.

வினா எண் 8798—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் எத்தனை ?

(ஆ) அச்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களின் துயர் துடைக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) 30.

(ஆ) தற்பொழுது மேற்படி 30 நலிவடைந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 6,868 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களின் துயர் துடைக்க அரசு பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. நலிவடைந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை இலாபத்தில் இயங்கும் சங்கங்களுடன் இணைத்து உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு நல்கி வருகிறது. சில இடங்களில் இச்சங்கங்களை உடனே புதுப்பித்து நடத்திட இயலாவிடில் இவற்றினை அருகாமையில் உள்ள தீவிர கைத்தறி வளர்ச்

சித் திட்டத்துடன் இணைந்து உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து தொழிலும், கூலியும் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

26—

கைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிலுள்ள தனி அலுவலர்களுக்கு அரசு சம்பளம் கொடுத்தல்.

வினா எண் 16409—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் உள்ள தனி அலுவலர்களுக்கு அரசு சம்பளம் கொடுக்க பரிந்துரைகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த முடிவு என்ன?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாட்டில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருவதால், அனைத்து சங்கங்களுக்கும் தனி அலுவலர்களை நியமித்து அரசே அவர்களுக்கு ஊதியம் கொடுப்பது சாத்தியமில்லை.

27—

உதகை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கேத்தியிலுள்ள சாந்தூரில் பாலம் அமைத்தல்.

வினா எண் 13654—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கேத்தியிலுள்ள சாந்தூரில் பாலம் ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

டி—53-302—30

[1993 அக்டோபர் 26

28—

கோவை நகரில் குடிசை மாற்று வாரியத்திடமும், குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து மனைப்பிரிவு பராமரிப்புக்காக மாநகராட்சியிடம் ஒப்படைத்தல்

வினா எண் 8912—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகரில் குடிசைமாற்று வாரியத்திடமும், குடிநீர் வடிகால் வாரியத்திடமும் உள்ள சில வீடுகள், மனைக்கட்டுகளும் பராமரிப்புக்காக மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படாததால், அந்தப் பகுதிகளில் சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதால், அவைகளை உடனே ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

கோவை மாநகரில் 29 குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அக்குடிசைப் பகுதிகளில் மனைகள் அமைந்துள்ளன. மேற்கண்ட 29 குடிசைப் பகுதிகளில் 7 திட்டப் பகுதிகள் கோவை மாநகராட்சியின் வசம் பராமரிப்புக்கென ஒப்படைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 22 திட்டப் பகுதிகளை மாநகராட்சியின் வசம் ஒப்படைப்பதற்குத் துரிதமான நடவடிக்கைகளை குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டு வருகிறது. குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து மனைப்பிரிவு அல்லது குடிசைப்பகுதியினை கோவை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்க கோரிக்கை ஏதும் அம்மாநகராட்சி பெறவில்லை.

29—

பேராவூரணி ஒன்றியம், அஞ்சூரணிக்காடு, தென்னங்குடி வடக்கு ஆகிய கிராமங்களுக்கு சமுதாயக்களம் அமைத்தல்

வினா எண் 15492—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், அஞ்சூரணிக்காடு, தென்னங்குடி வடக்கு, தென்னங்குடி தெற்கு, சீவன்குறிச்சி, பழைய நகரம், மாவுடுகுறிச்சி, எழுத்தனிவயல், சானா

கரை ஆண்டாகோட்டை, படப்பனார்வயல் ஆகிய கிராமங்களில் நெல் அறுவடைக் காலங்களில் பயன்படுத்த சமுதாயக்களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

மேற்கண்ட கிராமங்களில் சமுதாயக் களங்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

30—

பேராவூரணி ஒன்றியத்தில் பட்டத்தூரணி. பனஞ்சேரி ஆகிய கிராமங்களுக்கு சமுதாயக் களம் அமைத்தல்.

வினா எண் 15493—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பட்டத்தூரணி, பனஞ்சேரி, வலப்பிரமன்காடு, ஆவணம், அம்மையாண்டி, செங்கமங்கலம், மணவயல், மேட்டுவயல், துறவிக்காடும் வலைக்காடு, கலிகு புலிக்காடு ஆகிய கிராமங்களில் நெல் அறுவடைக் காலங்களில் பயன்படுத்த சமுதாயக் களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

மேற்கண்ட கிராமங்களில் சமுதாயக் களங்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

31—

பேராவூரணி ஒன்றியத்தில் கிராமங்களில் நெல் அறுவடைக் காலங்களில் பயன்படுத்த சமுதாயக் களம் அமைத்தல்.

வினா எண் 15494—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், நரியன் காடு, மானியக்காடு, தொக்காளிக்காடு, மகிழங்கோட்டை, ராஜாமடம், கீழத்தோட்டம், ஏரிப்புறக்கரை, மழவேனிற்காடு ஆகிய கிராமங்களில் நெல் அறுவடைக் காலங்களில் பயன்படுத்த சமுதாயக்களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

மேற்கண்ட கிராமங்களில் சமுதாயக் களங்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

32—

The total cost incurred for bringing women from the Bombay red Light areas.

வினா எண் 7940—திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

The total cost incurred by the Government for bringing women from the Bombay red light areas along with their children during 1990 ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

1990 மே மாதம் காவல் துறை அலுவலர்கள் பம்பாய் சிகப்பு விளக்கு பகுதிக்குச் சென்று 820 பெண்களை சென்னைக்கு அழைத்துவந்தனர். பம்பாய் சென்று வர மொத்தம் ரூ. 12,250 பயணப்படி செலவாயிற்று.

1993 அக்டோபர் 26]

33—

Check the incidence of the birth of Illegitimate Children

வினா எண் 8310—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

The steps taken to check the incidence of the birth of illegtimate children in this State

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :

தவறான முறையில் குழந்தைகளைப் பெறும் நிகழ்ச்சிகளை கண்காணிப்பது சமுதாயத்தில் பெண்களின் நிலையை பாதிக்கின்ற ஒரு சிக்கலான சமுதாய பிரச்சினையாகும். இது குறித்து மகளிரின் நலனிலும் முன்னேற்றத்திலும் ஈடுபாடு கொண்டுள்ள தொண்டு நிறுவனங்கள் பாதிக்கப்பட்டவர்களின் அடையாளத்தை போதுமான கவனம் செலுத்தி பாதுகாத்து வருகின்றன. மேலும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளை உடைய தாய்மார்கள் ஆகியோர் மீது தனிக் கவனம் செலுத்திப் பாதுகாப்பதிலும் பயிற்சியளிக்கப்படுகிறது. இவ்வாறு பெண்கள் தற்கால வாழ்க்கையில் தங்களை எதிர்நோக்குகின்ற சவால்களை சமாளிப்பதற்கும், ஆண்களின் ஆதிக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் தகுதி உள்ளவர்களாக தங்களைத் தயார் படுத்திக் கொள்கின்றனர். பெண்கள் தங்களைத் தாங்களே நன்முறையில் பாதுகாத்துக் கொள்ள இயலும் வகையில் கல்வியறிவைப் பெற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கைகள் யாவும் பெண்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கி, இம்மாநிலத்தில் தவறான வழியில் குழந்தைகள் பிறப்பதை மறைமுகமாகத் தடுக்கிறது.

34—

அண்ணா மாவட்டத்தில் ஊராட்சிகள் அனைத்திலும் உள்ள தையல் பயிற்சி அளிக்கும் பயிற்றுனர்களின் எண்ணிக்கை.

வினா எண் 8939—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டத்தில் ஊராட்சிகள் அனைத்திலும் உள்ள தையல் பயிற்சி அளிக்கும் பயிற்றுனர்களின் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) நத்தம் தொகுதி உட்பட ஏனைய தொகுதிகளிலும் உள்ள மலைவாழ் மக்களுக்கு தையற்கலைப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) 19.

(ஆ) மலைவாழ் பழங்குடி மக்களுக்கு உரிய மான்யம் மைய அரசால் உதவிகள் அளிக்கப்பட்டால், சமூக நலத் துறை மூலம் தையற்கலைப் பயிற்சி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

35—

வண்டுராயன்பட்டு ஆதி திராவிட காலனிக்குச் சத்துணவுக் கூடம் கட்டுதல்.

வினா எண் 12873—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி ஒன்றியம், வண்டுராயன்பட்டு ஆதிதிராவிட காலனிக்குச் சத்துணவுக்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி ஒன்றியம், வண்டுராயன்பட்டு ஆதிதிராவிடர் காலனியில் குழந்தைகள் நல மையத்திற்கு 1989-90 இல் தனி கட்டிடம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், இம்மையத்திற்குத் தேவையான சமையற்கூடம் கட்டப்பட்டு வருகிறது.

36—

ஈச்சன்விடுதியில் சத்துணவுக் கூடம் கட்டுதல்

வினா எண் 13449—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, ஈச்சன்விடுதியில் சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, ஈச்சன்விடுதியில் சத்துணவுக் கூடம் கட்டித்தரும் செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

37—

ஆண்டிமடம் தொகுதியில் வல்லத்தில் சத்துணவுக்கூடம் கட்டுதல்.

வினா எண். 13775—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, வல்லத்தில் ஒரு சத்துணவுக்கூடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

ஆண்டிமடம் தொகுதி, வல்லத்தில் 1993–94ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் (ம) சிறப்பு தன்னிறைவுத் திட்டம் மூலம் முன்னுரிமை அளித்து சத்துணவுக் கூடம் கட்ட தேவையான பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

38—

ஏ. பி. நாடானூர் ஊராட்சியில் புரட்சித் தலைவர் சத்துணவு திட்டத்தின்கீழ் சமுதாய நலக் கட்டிடம் அமைத்தல்

வினா எண் 14564—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

கடையம் ஒன்றியம், ஏ. பி. நாடானூர் ஊராட்சி புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சமுதாய நலக் கட்டிடம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

கடையம் ஊராட்சி ஒன்றியம் ஏ. பி. நாடானூர் கிராமத்தில் 1992–93ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சமுதாய நலக் கட்டிடம் கட்டும் பணி எடுக்கப்பட்டு, பணி முடியும் தருவாயில் உள்ளது.

39—

பால்கணபதியாபுரம் கிராமத்திற்கு பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண் 15102—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றிய, பால்கணபதியாபுரம் கிராமத்திற்கு பாலர் பள்ளி அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் முழுமையும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் செயலாக்கத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. அம்மாவட்டத்தில் ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றியம், பால்கணபதியாபுரம் கிராமத்திற்கு மேற்படி திட்டத்தின் கீழ் தேவையிருப்பின் ஒரு மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

40—

மதிய சத்துணவுடன் சனி, ஞாயிறன்று புரதச்சத்து உணவை அளித்தல்.

வினா எண் 16456—திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மதிய சத்துணவுடன் சனி, ஞாயிறன்று சிறப்பாக கார்போஹைட்டிரேட் மற்றும் புரதச்சத்து உணவை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

இப்போதிருக்கும் முறையோடு கூடுதல் சக்தி வழங்குவது ஆலோசனையில் இருக்கிறது.

41—

சத்துணவுத் திட்டங்களை புதுப்பிக்க உலக வங்கியிடமிருந்து தமிழக அரசு நிதி உதவி பெறுதல்.

வினா எண் 16537—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவுத் திட்டங்களைப் புதுப்பித்த உலக வங்கியிடமிருந்து தமிழக அரசுக்கு ஏதேனும் நிதி உதவி பெறப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : 1991ஆம் ஆண்டு ஜனவரி முதல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் 2 உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1991–92 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக ஐந்து கட்டங்களில் ரூ 321,34 கோடி செலவில் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டம், தமிழ் நாட்டில் 18 மாவட்டங்களில் 316 வட்டாரங்களில் செயல்படுத்தப்படும்.

42—

உடையநாடு உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 13190—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு, உயர்நிலைப்பள்ளியில் இடவசதி பற்றாக்குறையாக இருப்பதனால் 1992–93இல் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரிய . பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

43—

களத்தூர் உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்

வினா எண். 13204—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, களத்தூர் உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக்கொடுக்க 1992–93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

44—

பெருமகளூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 13205—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பெருமகளூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் 1992–93இல் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

993 அக்டோபர் 26]

45—

சித்துக்காடு உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 13207—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி, தொகுதி சித்துக்காடு உயர்நிலைப்பள்ளிக்கு 1992–93இல் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

46—

பொறியியல் கல்விக்கான நுழைவுத் தேர்வு முடிவுகள் மற்ற கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நுழைவுத் தேர்வு வெளியிடும் முன்னரே அறிவித்தல்.

வினா எண் 14257—திரு. உ. பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பொறியியல் கல்விக்கான நுழைவுத் தேர்வு முடிவுகள் மற்ற கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை முடிந்தபின் வெளிவருவதால், அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்குக் கல்லூரிகளில் இடம் கிடைக்காத நிலையைத் தவிர்க்க மற்ற கல்லூரிகளின் மாணவர் சேர்க்கை நுழைவுத் தேர்வு முடிவுகள் வெளியிடும் முன்னரே அறிவிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தொழிற் பட்டப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வுகள் தற்பொழுது சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், பொறியியற் பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கை முடிவுகள் மருத்துவம் விவசாயம் தொழிற் பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கை முடிவுகளுக்கு முன்னரே வெளியிடப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

47—

பேரளம் அரசு மேல்நிலைப்பள்ளிக்குப் போதுமான கட்டிட வசதிகள்.

வினா எண் 15649—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, பேரளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் போதுமான கட்டிட வசதிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வரும் நிதியாண்டுகளில் பேரளம் அரசு மேல்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டும் கருத்துரு பள்ளிக்கல்வி இயக்குநரால், நிதி வசதிக்கேற்ப, பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

48

வாழ்குடி அரசு உயர் நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 15668—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், வாழ்குடி அரசு உயர்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): 1993–94 ஆம் நிதியாண்டில் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட அரசால் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வாழ்குடி அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்டும் கருத்துரு, நிதி வசதிக்கேற்ப பள்ளிக் கல்வி இயக்குநரால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

993 அக்டோபர் 26]

49—

சிவலச்சேரி கிராமம் ஆதி திராவிடர் காலனியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 2930—திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், சிவலச்சேரி கிராமம் ஆதி திராவிடர் காலனியில் குடிநீர் வழங்க அங்கு ஆழ் குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

இல்லை. ஆண்டிமடம் ஒன்றியம், அழகாபுரம் ஊராட்சி சிவலச்சேரி கிராமத்தில் 1984 ஆம் ஆண்டு 15,000 லிட்டர் கொள்ளளவு நீர்த் தேக்கத் தொட்டி கட்டி ஆதி திராவிடர் காலனியில் ஒரு பொதுக் குழாய் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற மறு ஆய்வின்போது முழுவதுமாக குடிநீர் வழங்கப்பட்ட கிராமமாக வகைப்படுத்தப்படுகிறது.

50—

நகராட்சிப் பகுதிகளில் பன்றி வளர்ப்பதைத் தடை செய்தல்.

வினா எண் 3558—திரு. தேனி பன்னீர்செல்வம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிப் பகுதிகளில் பன்றி வளர்ப்பதை தடை செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) நகராட்சிப் பகுதிகளில் பொதுமக்கள் பன்றிகளை வளர்ப்பதைத் தடை செய்ய சட்டத்தில் வழிவகை இல்லை. எனவே இதனைத் தடுக்க இயலாது.

(ஆ) ஆனால் அனுமதியில்லாமல் வளர்க்கும் பன்றிகள் தெருக்களில் அலைந்து திரிந்து சுகாதாரக் கேடு விளைவித்து நோய்களை உண்டாக்கினால் மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற்று அப்பன்றிகளைச் சுட்டு அழிக்க நகராட்சிகளில் அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

51—

கொடியம்பாளையம் கடற்கரை தீவு கிராமத்தை பழையாறு பகுதியோடு இணைத்து வண்டி போக்குவரத்து பாலம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 3573—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொடியம்பாளையம் கடற்கரை தீவு கிராமத்தை பழையாறு முதல் தென்னாற்காடு மாவட்டம், காரைமேடு என்ற பகுதியோடு இணைத்து வண்டிப் போக்குவரத்துப் பாலம் அமைக்கும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, கொடியம்பாளையம் கடற்கரை தீவு கிராமத்தை பழையாறு முதல் தென்னாற்காடு மாவட்டம், காரைமேடு என்ற பகுதியோடு இணைத்து வண்டிப போக்குவரத்துப் பாலம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

52—

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு.

வினா எண் 3722—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மானியமாகவும், உதவி நிதியாகவும் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 1990–91 ஆம் நிதி யாண்டிற்கு ரூ. 95 லட்சம் மானியமாகவும், ரூ. 150 லட்சம் உதவி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(ஆ) இந்த ஒதுக்கீடு ஏற்கெனவே வழங்கப்பட்டு மாநக ராட்சியால் பெறப்பட்டு விட்டது.

53—

தச்சக்காடு கிராமத்திற்கு பள்ளிக்கூட கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 4132—செல்வி சோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) புவனகிரி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், தச்சக்காடு கிராமத்திற்கு மேலும் ஒரு பள்ளிக்கூட கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தச்சக்காடு கிராமத்தில் பள்ளிக்கட்டி டம் கட்ட நடப்பாண்டில் பரிசீலனை செய்யப்படும்.

54 —

புரசைவாக்கம் தொகுதியில் பல இடங்களில் கழிவுநீர் செல்ல வழிவகை செய்தல்.

வினா எண் 4553—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை புரசைவாக்கம், தொகுதியில் பல இடங்களில் கழிவுநீர் செல்ல வழிவகை செய்யப்படாததால் அவ்விடங்களில் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) அக்குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சென்னை புரசைவாக்கம் தொகுதிக்குட்பட்ட 12 கோட்டங்களில் மொத்தம் 783 தெருக்கள் உள்ளன. இவற்றில் 697 தெருக்களில் ஏற்கனவே கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் 56 தெருக்களுக்கு கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கும் பணிக்கான மதிப்பீடு தயாரிக்கும் நிலையில் உள்ளது. எஞ்சிய 30 தெருக்களில் 15 தெருக்கள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் உள் அடங்கிய தெருக்களாகும். இவைகள் அவ்வாரியத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 15 தெருக்கள் தாழ்வான பகுதியில் உள்ளதால் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்க இயலாது. விரிவான ஆய்வுக்குப் பின் தொழில்நுட்ப சாத்தியக்கூறு இருப்பின் கழிவுநீர் குழாய்கள் அமைக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, தற்போது புரசைவாக்கம் தொகுதியில் கழிவுநீர் தேங்கிய நிலையினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படவில்லை.

55 —

சிவந்திபுரம் ஊராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்திற்கு அரசு நிதி ஒதுக்குதல்.

வினா எண் 6297—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியப்பகுதி, சிவந்திபுரம் ஊராட்சிக்கு 1990–91 ஆம் ஆண்டுகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்திற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

சட்டமன்றம் LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): அம்பாசமுத்திரம் 'ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிவந்திபுரம் 'ஊராட்சியில் 9 கையிறைப்பான்கள் உள்ளன. சிவந்திபுரம் குடிநீர் திட்டத்திற்கு 1990–91-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆனால் சிவந்திபுரம் குடிநீர் திட்டத்திற்கு 1991–92-ல் ரூ. 3.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1992–93-ல் ரூ. 15.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நிலுவையிலுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

56—

வடக்கு பிச்சவரத்தில் உப்பளூற்றுக்குக் குறுக்கே பாலம் அமைத்தல்.

வினா எண் 7605—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வடக்கு பிச்சவரத்தில் உப்பளூற்றுக் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வடக்கு உப்பளூற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

டி—53-302—32

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

57—

தேவக்கோட்டை நகராட்சியின் விரிவாக்கப் பகுதிகளில் புதிய நகர் வடிவில் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 7813—திரு. மா. சா. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், தேவக்கோட்டை நகராட்சியின் விரிவாக்கப் பகுதிகளில் நகர பிளான் அனுமதியில்லாமல் வீடுகள் கட்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடை செய்து புதிய நகர் வடிவில் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்டவாறு குறிப்பிட்ட கட்டிடம் ஏதும் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை. இருப்பினும் அனுமதி இன்றி தேவக்கோட்டை நகராட்சியில் விரிவாக்கப் பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு வரைபட அனுமதி பெற்றுக் கொள்ளும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிப்புகள் வழங்கி தேவக்கோட்டை நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

58—

தாமரைப்பாளையத்தில் அரசுக்கு உரிய மருத்துவமனை சந்தை போன்ற இடங்களுக்கு உரிய நிலத்தை தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்க அரசு நடவடிக்கை.

வினா எண் 8930—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி ஒன்றியம், தாமரைப்பாளையத்தில் அரசுக்கு உரிய மருத்துவமனை, சந்தை போன்ற இடங்களுக்கு உரிய நிலத்தை தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தாமரைப்பாளையத்தில் அரசு மருத்துவமனைக்கு சொந்தமான ரி. ச. 22/2-ல் 2.06.5 ஹெக்டேர் நிலம் உள்ளது. இது சுகாதாரத்துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்ட நிலமாகும். அதைப் போன்று வாரச்சந்தை நடைபெற்று வரும். ரி. ச. 64-ல் 0.61.0 ஹெக்டேர் சாலைப் புறம்போக்கு இடம், நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடமாகும். எனவே, மேற்படி இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை சம்பந்தப்பட்ட சுகாதாரத்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையினரால் அகற்றிட தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெரியார் மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

59—

செங்கம்பாளையம் சமத்தூர் இடையிலுள்ள பாலாற்றில் பாலம் கட்டுதல்.

வினா எண் 10738—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆனைமலை ஒன்றியம், செங்கம்பாளையம், சமத்தூர் இடையிலுள்ள பாலாற்றில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): கோவை மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், செங்கைபாளையம் சமத்தூர் இடையிலுள்ள பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு தோராயமாக ரூ. 60.00 இலட்சம் தேவைப்படுகிறது. தற்போதுள்ள நிதிப் பற்றாக்குறை காரணமாக இது பற்றிய செயற்குறிப்பேதுமில்லை.

60—

திக்கடி ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகளுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 11473—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், திக்கடி ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகளுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. 1991-92ஆம் ஆண்டு வறட்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் ஒரு கையிறைப்பான் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேலும் ஒரு ஆழ்துளைக்கிணறு அமைக்கும் திட்டம் இல்லை.

61—

ஒட்டங்காடு சிறிய தெற்கு காட்டில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 11614—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு சிறிய தெற்குக் காட்டில் மேற்கு கடைசியில் 1992–93-ல் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. இது 200 மக்கட் தொகை கொண்ட ஒரு சிறு பகுதியாகும். இங்கு சின்னமேலக்காடு கிராம குடிநீர்த் திட்டத்திலிருந்து ஒரு குடிநீர் மேடை மூலம் குடிநீர் அளிக்கப்படுகிறது

62—

கள்ளம்பட்டி சி. எம். பி. ஆற்றுக்கரை ஓரத்தில் ஆழ் குழாய்க்கிணறு அமைத்தல்.

வினா எண் 11625—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கள்ளம்பட்டி சி. எம். பி. ஆற்றுக்கரை ஓரத்தில் 1992-93-ல் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் திட்ட செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இல்லை.

63—

நிலக்கொல்லைக் காலனிக்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 11626—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புளிக்காடு ஊராட்சி நிலக்கொல்லைக் காலனிக்கு 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அல்லது ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி , உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை, இக்காலனி நவக்கொல்லைக் கிராமத்தின் ஒரு பகுதியாகும். தற்போது நவக்கொல்லையில் உள்ள 5,000 லிட்டர் தரைமட்டத் தொட்டியிலிருந்து மக்கள் நீர் எடுத்து வருகிறார்கள்.

நடுவக்குறிச்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 11629—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவக்குறிச்சியில் 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

இல்லை. தற்போது இக்கிராமத்தில் ஒரு கையிறைப்பான் திட்டம் உள்ளது.

65—

குறவன் கொல்லையில் மயானக்கொட்டகை அமைத்தல்.

வினா எண் 11979—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, குருவிக்கரம்பை ஊராட்சி, குறவன் கொல்லையில் 1992-93-ல் மயானக் கொட்டகை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்.

பேராவூரணி தொகுதி, குருவிக்கரம்பை ஊராட்சியில், 1991-92 ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திலேயே குறவன் கொல்லையில் ரூ. 11,000 மதிப்பீட்டில் மயானக்கொட்டகை கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

1993 அக்டோபர் 26]

66—

அதம்பை (தெற்கு)யைச் சேர்ந்த நேதாஜி நகருக்கு ஒரு போர்வெல் அமைத்தல்.

வினா எண் 12014—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெற்கு) யைச் சேர்ந்த நேதாஜி நகருக்கு 1992-93ல் ஒரு போர்வெல் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

67—

சேந்தமங்கலம் கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 12477—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, சேந்தமங்கலம் கிராமத்தில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேந்தமங்கலம் கிராமம் குடிநீர் திட்டத்திற்கு வெள்ளாற்றில் முறையான நிலத்தடி நீர் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. நீர் ஆதாரம் கிடைத்தவுடன் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 1993–94-ம் ஆண்டில் பயனுக்கு கொண்டு வரப்படும்.

68—

மேலமூங்கிலடி கிராமத்திற்குக் குடிநீர் வசதி.

வினா எண் 12868—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம் மேலமூங்கிலடி கிராமத்திற்குக் குடிநீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை. இங்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு மூன்று பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மலும் இங்கு குறைந்த ஆழமுள்ள கையிறைப்பான் ஒன்றும் உள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

69—

மேலக்கொள்ளுக்காட்டிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 12967—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (வ) ஊராட்சி மேலக்கொள்ளுக் காட்டிற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க 1992-93-ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம், இக்கிராமத்திற்கு 1991—92-ல் ஒரு ஆழ்துளைக் கிணறு அமுலாக்கப்பட்டது. இக்குழாயிலிருந்து வரும் குடிநீர் குடிப்பதற்கு உகந்தது அல்ல. எனவே, ஒரு மின்விசைத் திட்டம் இந்த ஆண்டு அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக உள்ளது.

70—

மாவடுகுறிச்சியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்தல்.

வினா எண் 12979—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் மாவடு குறிச்சியில் உள்ள பழுதுபட்ட மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டியை 1992–93-க்குள் பழுது பார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. மாவடுகுறிச்சியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி 1992–93ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. அது நல்ல நிலையில் இயங்கி வருவதால் அதை பழுது பார்க்கும் உத்தேசம் இல்லை.

71—

நவக்கொல்லைக்காடு காலனிக்கு மேல்நிலை நீரித்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 13434—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புலிக்காடு பஞ்சாயத்து நவக்கொல்லைக்காடு, காலனிக்கு 1992-93-ல் ஒரு மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

72—

காயாவூர் மேற்கில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 13435—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் மேற்கில் 1992-93-ல் ஒரு மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. காயாவூர் தெற்குப் பகுதிக்கு காயாவூர் குடிநீர்த் திட்டத்திலிருந்து 2 பொது மேடைக் குழாய் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டுகளில் மேலும் ஒரு ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுக்க முன்னுரிமைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

1993 அக்டோபர் 26]

73—

பாதரங்கோட்டை (தெற்கு) ஆதிதிராவிடர் தெருவிலுள்ள ஆழ்குழாய்க் கிணற்றைச் சுத்தம் செய்தல்.

வினா எண் 13444—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெற்கு) ஆதிதிராவிடர் தெருவிலுள்ள ஆழ்குழாய்க் கிணற்றில் குடிப்பதற்கேற்ற தண்ணீர் வராததால் அதை சுத்தம் செய்துதர 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

74—

சுந்தரராஜபுரம் ஆதிதிராவிடர்களுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 14021—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், பன்னவயல் ஊராட்சி சுந்தரராஜபுரம் ஆதிதிராவிடர்களுக்கு ஆழ்குழாய்க் கிணறு (Borewell) அமைத்துத்தர 1992-93-ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. சுந்தரராஜபுரம் கிராமத்திற்கு ஒரு விசை பம்பு திட்டம் அமைத்து கொடுக்கப்பட்டு சுமார் 100 அரிஜனங்கள் வாழும் பகுதிக்கு 2 பொதுக்குழாய் மேடைகள் அமைக்கப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. வாரிய விதிமுறைகள்படி தற்போதைய மக்கட் தொகைக்கு 2 பொதுக் குழாய் மேடைகள் போதுமானது.

75—

லெட்சுமியூரில் புதிய குடிநீர் மேல்நிலைத்தொட்டி அமைத்தல்

வினா எண் 14566—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி லெட்சுமியூரில் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க புதிய குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

76—

மணல் காட்டானூருக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 14567—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி மணல் காட்டானூருக்கு குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி. உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சியைச் சார்ந்த மணல் காட்டானூர் குடியிருப்பில் 2 கையிறைப்பான்கள் உள்ளன. இக்குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வசதி செய்யும் திட்டம் இந்த நிதி ஆண்டில் நிதி நிலைக்கேற்ப எடுத்துக் கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

77—

ஆ. திருமலாபுரம் பஞ்சாயத்து மேல்நிலை தண்ணீர் தொட்டியை பழுதுபார்த்து புதுப்பித்தல்.

வினா எண் 14575—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

ராதாபுரம் தொகுதி ஆ. திருமலாபுரம் பஞ்சாயத்து மேல்நிலை தண்ணீர் தொட்டியைப் பழுதுபார்த்து புதுப்பித்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இராமநாதபுரம் தொகுதி, வள்ளியூர் ஒன்றியத்தைச் சார்ந்த ஆ. திருமலாபுரம் குடியிருப்பில் 2 கையிறைப் பான்கள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. இந்த நிதியாண்டு 1992–93-ல் இக்கிராமத்திற்கு புதிதாக நீராதாரம் தோற்றுவிக்கப்பட்டு, பழைய மேல்நிலைத்தொட்டியில் குடிநீர் கொண்டு செல்லப்பட்டு பகிர்மானம் செய்வதற்கான வேலைகள் முடிக்கப்பட்டு, ஊராட்சியிடம், 15–3–1993 அன்று பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேல்நிலைத் தொட்டி நல்ல உறுதியுடனும், பழுது இன்றியும் உள்ளது.

78—

ஒட்டக்காரம் நெசவாளர் குடியிருப்பில் குடிநீர் வசதி.

வினா எண் 14647— திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, ஆ. திருமலாபுரம் பஞ்சாயத்து ஒட்டக்காரம் நெசவாளர் குடுயிருப்பில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ராதாபுரம் தொகுதி, வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், ஆ. திருமலாபுரம் ஊராட்சியைச் சேர்ந்த ஒட்டக்காரன் குடியிருப்பு கிராமத்தின் இரண்டு அடிபம்புகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. இக்கிராமத்திற்கு மேலும் குடிநீர்த் திட்டம் அமைக்க நடப்பு நிதியாண்டில் திட்டம் எதுவும் இல்லை.

79.—

உக்கிரன்கோட்டை செட்டியார் தெருவில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 15212—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றியம், உக்கிரன்கோட்டை செட்டியார் தெருவில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியத்தைச் சார்ந்த உக்கிரன் கோட்டை கிராமத்தில் மூன்று கைபிறைப்பான்களும், ஊராட்சி ஒன்றியத்தினால் அமைக்கப்பட்ட திறந்த வெளிக் கிணற்றை ஆதாரமாகக் கொண்ட மின்விசைத் திட்டம் ஒன்றும் உள்ளது. சங்கரன் கோவில் ஆலங்குளம் மற்றும் பல வழியோரக் குடியிருப்புகளுக்கு உலக வங்கி குடிநீர்த் திட்டத்தில் இக்கிராமம் சேர்க்கப்பட்டுள்ளது. 1993—94-ம் ஆண்டு இறுதிக்குள் இத்திட்டத்தை முடித்து மக்கள் பயனுக்கு கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

993 அக்டோபர் 26]

80—

குறிச்சிகுளம் ஆதிதிராவிடர் மக்களுக்கு ஒரு ஆழ்க்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 15151— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், குறிச்சிகுளம் ஆதிதிராவிடர் மக்களின் குடிநீர் வசதிக்காக ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

குறிச்சிகுளம் ஆதிதிராவிடர் மக்களுக்கு 1991-ஆம் ஆண்டில் அதிவிரைவுத் திட்டத்தின் (Crash Programme) கீழ் ஓர் ஆழ்குழாய் கிணறும், 1976-ம் ஆண்டில் ஒரு ஆழ்குழாய் கிணறும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஓர் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் 14 பொது நல்லிகளுடன் செயல்பட்டு வருகின்றது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விசைப்பம்பு, கைப்பம்பு திட்டங்கள் செயலில் உள்ளதால் நடப்பு நிதியாண்டில் குறிச்சிகுளம் கிராமத்திற்கு வேறு குடிநீர்த்திட்டம் அமைக்க திட்டம் ஏதுமில்லை.

81—

மானூர் ஆதிதிராவிடர் காலனியில் குடிநீர்க்குழாய் அமைத்தல்.

வினா எண் 15252— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், மானூர் ஆதிதிராவிடர் காலனியில் குடிநீர்க் குழாய் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மானூர் ஆதிதிராவிடர் காலனி என தனிக் கிராமமாக இல்லை. மானூர் கிராமத்தின் மக்கள்தொகை 1,704. இதில் ஆதிதிராவிடர் 550 ஆகும். இக்கிராமம் முழுவதற்கும் சேர்த்து ஒரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்து குடிநீர் வழங்க மின்விசை திட்டம் ஒன்று செயல்படுத்த நடப்பு ஆண்டு திட்டப்பட்டியலில் திட்டமிடப்பட்டுள்ளது. நீராதாரம் தோற்றுவிக்கப்பட்டபின் திட்டப்பணிகள் எடுக்கப்பட்டு, 1993—94 ஆம் ஆண்டு இறுதிக்குள் பயனுக்கு கொண்டு வரப்படும்.

82—

இத்திகுளம் கிராம சமுதாயக் கிணற்றை ஆழப்படுத்தி மேல்நிலைத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 15275—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மானூர் ஒன்றியம்,இத்திகுளம் கிராம சமுதாயக் கிணற்றை ஆழப்படுத்தி மேல்நிலைத் தொட்டி அமைத்து சித்தன்பச்சேரி கிராமத்தையும் சேர்த்து கூட்டுக்குடிநீர் திட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மானூர் ஊராட்சி ஒன்றியம், இத்திகுளம் கிராமத்தில் ஒரு கையினறப்பான் உள்ளது. மாற்று நீராதாரத் திட்டத்தின் கீழ் (compensatory 1992—93) ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க திட்டம் ஏதும் இல்லை. வரும் ஆண்டில் குடிநீர் திட்டம் அளிக்க பரிசீலனை செய்யப்படும். சித்தன்பச்சேரி கிராமத்தில் ஒரு கையினறப்பான் உள்ளது. இக்கிராமத்திற்கு குடிநீர் வழங்க திட்டம் ஏதும் இல்லை. எனினும், வரும் ஆண்டில் மேற்கூறிய இத்திகுளம் கிராமத்தோடு சேர்த்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் அளிக்க பரிசீலனை செய்யப்படும்.

1993 அக்டோபர் 26]

83—

நாரணம்மாள்புரம் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் பாலகணபதியாபுரம் கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கல்.

வினா எண் 15372—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், பாலகணபதியாபுரம் கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, நாரணம்மாள்புரம் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆலங்குளம் தொகுதி, மானூர் ஊராட்சி ஒன்றியம், நாரணம் மாள்புரம் குடிநீர்த் திட்டத்திலிருந்து பாலகணபதியா புரம், பாப்பையாபுரம் கிராமங்களுக்கு குடிநீர் வழங்க திட்டம் உள்ளது. விரைவில் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்படும்.

84—

தெற்குபட்டி கிராமம் மற்றும் உக்கிரன்கோட்டை வடக்குத் தெருவிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 15375—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், தெற்குபட்டி கிராமத்திலும், உக்கிரன்கோட்டை வடக்குத் தெருவிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தெற்குபட்டி கிராமத்திற்கு 1992—93 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மின்விசைத் திட்டம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. 1993—94 ஆம் ஆண்டு இறுதிக்குள் திட்டப் பணிகளை முடிக்க ஆவன செய்யப்படும். உக்கிரன் கோட்டை கிராமத்தில் ஒரு மின்விசைத் திட்டமும் மூன்று கையிறைப்பான்களும் செயல்பட்டு வருகின்றன. சங்கரன் கோவில் ஆலங்குளம் மற்றும் வழியோரக் குடியிருப்புகளுக்கான உலக வங்கி குடிநீர்த் திட்டத்தில் இக்கிராமம் சேர்க்கப் பட்டுள்ளது. 1993--94 ஆம் ஆண்டு இறுதிக்குள் இத்திட்டத்தை முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

85—

பரமக்குடி நகராட்சியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கும் பகுதிகள்.

வினா எண் 15705—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் எந்த எந்த பகுதிகளுக்கு இவற்றின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது ?

(ஆ) பொன்னையாபுரம் பகுதிகளுக்கு எங்கிருந்து குடிநீர் வழங்கப்படுகிறது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) (1) பாரதி பார்க் (2) காட்டுப் பரமக்குடி, (3) மஞ்சள் பட்டினம், (4) எமனேஸ்வரம், நேருஜி மைதானம், (5) எமனேஸ்வரம் நீர் நிலையம் (அ) பஸ் நிலையப் (ஆ) பெருமாள் கோவில் (இ) பட்டல் சாலை (6) முத்தாலம்மன் கோவில் படித்துறை, (7) கள்ளிக்கோட்டை ஆகிய ஏழு இடங்களுக்கும் அதனைச் சார்ந்த பகுதிகளுக்கும் குடிநீர் ங்கப்பட்டு வருகிறது.

1993 அக்டோபர் 26]

(ஆ) பொன்னையாபுரம் பகுதிக்கு பாரதி பார்க் என்ற இடத்திலிருந்து 55 இலட்சம் லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிலிருந்து குடிநீர் வழங்கப்படுகிறது.

86—

பரமக்குடி நகராட்சியில் அனுமதி பெறாமல் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களின் மீது நகராட்சி எடுத்துள்ள நடவடிக்கை

வினா எண் 16647—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் அனுமதி பெறாமல் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் எத்தனை ?

(ஆ) இது குறித்து நகராட்சி எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி உள்ளாட்சி துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி நகராட்சியில் 1989 ஆம் ஆண்டு முதல் 31-12-1992 வரை அனுமதிபெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை 283.

(ஆ) மேற்கண்ட 283 கட்டுமானங்களுக்கும் அறிவிப்புகள் அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டதின்பேரில் 42 கட்டுமானங்களுக்கு கட்டிட விண்ணப்பங்கள் வரப்பெற்று வரன்முறைப் படுத்தப்பட்டுள்ளது. 119 கட்டுமானங்களின் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள எல்லா கட்டுமானங்களுக்கும் அறிவிப்பு வழங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

87—

பரமக்குடி நகராட்சிக்கு குடிநீர் வழங்கல்.

வினா எண் 16695—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சியில் குடிநீர் குழாய் பதிக்கப்பட்டு பல ஆண்டுகளாக தண்ணீர் வராமல் இருக்கும் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பருவமழை பொய்த்ததன் காரணமாக வைகை ஆற்றில் நீர்வரத்து குறைந்ததால் பரமக்குடி நகராட்சியின் கிழக்குப் பகுதிகளுக்கு போதிய அளவு குடிநீர் வழங்க இயலாமல் இருந்தது. வைகை ஆற்றில் தற்சமயம் நீரோட்டம் உள்ளதால் சுமார் 25,000 மக்கள் தொகை கொண்ட கிழக்குப் பகுதி மற்றும் மேடான பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், மணிநகர், எம்.ஜி.ஆர். நகர் போன்ற குடிநீர் வசதி இல்லாத பகுதிகளில் ஆழ்துளைக் கிணறு மூலம் குடிநீர் வழங்கப் பட்டு வருகிறது. பரமக்குடி நகராட்சியில் தற்போளைதய மக்கள் தொகை 72,105. தினசரி வழங்கப்படும் நீரின் அளவு 33.00 இலட்சம் லிட்டர்கள்.

88—

சீர்காழியில் புதியதாகக் கட்டப்பட்டுவரும் பேருந்து நிலையக் கட்டுமானப் பணியைத் துரிதப்படுத்துதல்.

வினா எண் 16745—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழியில் புதியதாகக் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையக் கட்டுமானப் பணியைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு.டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சீர்காழியில் புதிய பேருந்து நிலையத்தில் நிலை-1 மற்றும் நிலை-2 கட்டுமானப் பணிகள் பூர்த்தியடையும் தருவாயில் உள்ளன. மேற்படி பேருந்து நிலையத்திற்கான சுற்றுச்சுவர் கட்டும்பணி, தார்சாலை அமைக்கும் பணி, வடிகால் மற்றும் இதர அடிப்படை வசதிகள் அமைக்கும் பணி ஆகியவற்றிற்கு ரூ. 12.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ரூ. 9.67 லட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளைத் துரிதமாக முடித்து பேருந்து நிலையத்தினை உடன் செயல் பாட்டுக்குக் கொண்டுவர இப்பணியினை எடுத்துச் செய்துவரும் பொதுப் பணித்துறையின் செயற்பொறியாளருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

89—

இராமநாதன் குப்பத்தில் மயானப்பாதை அமைத்தல்.

வினா எண் 6834—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள இராமநாதன் குப்பத்தில் மயானம், மயானப்பாதை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் வட்டம், இராமநாதன் குப்பம் கிராமத்தில் ஆதிதிராவிடர்கள் எவரும் வசிக்கவில்லை. எனவே மேற்படி கிராம ஆதிதிராவிடர்களுக்கு மயானம் மற்றும் மயானப்பாதை வசதி செய்து தருவது தொடர்பான வினாவிற்கு இடமில்லை.

90—

அசுரப்பேட்டையிலுள்ள ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 10122—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி அசுரப்பேட்டையிலுள்ள ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டவும் மற்றும் பிற வசதிகள் ஏற்படுத்தவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) இயக்குநரின் பரிந்துரையில் உள்ளது.

(ஆ) தேவைக்கேற்பவும், நிதி நிலைமைக்கேற்பவும் வரும் ஆண்டுகளில் இது பற்றி ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

91—

கார்காவயல் ஆதிதிராவிடர் தெருவிலுள்ள தொடக்கப்பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 14580—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கார்காவயல் ஆதிதிராவிடர் தெருவில் உள்ள தொடக்கப் பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடங்கள் கட்டித்தர 1992—93ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

இல்லை.

1993 அக்டோபர் 26]

92—

இராமநாதபுரம் மாவட்டத்தில் பட்டு வளர்ச்சித் துறையின் கீழ் நிலமற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு வாங்கப்பட்ட நிலங்கள்.

வினா எண் 15201—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பட்டு வளர்ச்சித் துறையின் கீழ் நிலமற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு வாங்கப்பட்ட நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(ஆ) இதனால் பயன்பெற்ற ஆதிதிராவிட மக்கள் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர்கள் பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலமற்ற ஆதிதிராவிடர் பயனாளிகளுக்காக பரமக்குடி மற்றும் முதுகுளத்தூர் ஆகிய ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு ஒன்றியத்திலும் 100 பயனாளிகள் பயன் பெறும் வகையில் தகுதி வாய்ந்த 100 ஏக்கர் நிலம் வாங்க நிலத்தேர்வு நடந்து வருகின்றன.

93—

குறியாமங்கலம் காலனியில் பழுது அடைந்துள்ள கோவிலை புதுப்பித்தல்.

வினா எண் 4042—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குறியாமங்கலம் காலனியில் பழுது அடைந்துள்ள கோவிலைப் புதுப்பித்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இப்பொருள் பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

94—

அந்தியூர் தொகுதியில் அறநிலையத் துறை மூலம் இந்துக் கோவில்களை கட்டுதல்.

வினா எண் 4956—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் அறநிலையத் துறை மூலம் இந்துக் கோயில்களை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் என்றால், எப்போது கோயில் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும் ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் அறநிலையத் துறை மூலம் இந்து கோயில்களை கட்டித்தர செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

95—

சோளிங்கபுரம் அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி மலைக்கு இழுவை ரயில் அமைக்கும் திட்டம்.

வினா எண் 5953—திரு. ஏ. எம். முனிரத்தினம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

சோளிங்கபுரம் அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி மலைக்கு இழுவை ரயில் (Winch) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

96—

சின்னமலையிலுள்ள சிதம்பரரேஸ்வரன் கோயிலை அரசுடைமையாக்குதல் மற்றும் பராமரித்தல்.

வினா எண் 6617—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னமலையிலுள்ள சிதம்பரரேஸ்வரர் (வேதாரண்யம்) தேவஸ்தானக் கோயிலை அரசுடைமையாக்கவும், இக்கோயிலை பராமரிக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இக்கோயில் ஏற்கனவே இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் கொண்டுவரப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

[1993 அக்டோபர் 26

97—

பனங்குளம் ஐயனார் கோவிலை சீரமைத்து திருப்பணி செய்தல்.

வினா எண் 6704— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குளக்குடி ஊராட்சி பனங்குளம் ஐயனார் கோவிலை சீரமைத்து, திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இப்பொருள் பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

98—

தமிழகத்தின் பல்வேறு திருக்கோவில்களிலும் சிலைகள் மற்றும் நகைகள் களவு போவதும் சிலைகள் உடைக்கப் படுவதுமான நிகழ்ச்சிகளை தொடரா வண்ணம் இருக்க நடவடிக்கை.

வினா எண் 9262— திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் பல்வேறு திருக்கோயில்களிலும் சிலைகள் மற்றும் நகைகள் களவு போவதும் சிலைகள உடைக்கப் படுவதுமான நிகழ்ச்சிகள் சமீப நாட்களில் அதிகரித்திருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபோன்ற நிகழ்வுகள் தொடரா வண்ணம் இருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

1993 அக்டோபர் 26]

(ஆ) இதுபோன்ற நிகழ்வுகள் தொடராவண்ணம் இருக்க தற்போது ஆயிரம் இரண்டாம் நிலைக் காவலர்கள், 3000 முன்னாள் படை வீரர்களைக் கொண்டு, கோவில் பாதுகாப்புப் படை தனியே அமைக்க, அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், எல்லா திருக்கோயில்களிலும் விக்கிரகங்கள் பாதுகாப்பிற்கு மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க கீழ்க்கண்டவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன :

(1) 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த உற்சவ விக்கிரகங்களை தொல்பொருள் ஆய்வுத்துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(2) அனைத்து விக்கிரகங்களின் பாதுகாப்பை முன்னிட்டு புகைப்படமெடுத்து போட்டோ ஆல்பம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் களவு போன சிலைகளை அடையாளம் காட்டி திரும்பப் பெறுவது சுலபம்.

(3) உற்சவத் திருமேனிகள் வைக்கப்படும் அறைக்கு இரும்புக் கதவுகள் அமைத்து பூட்டப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.

(4) இரவுக் காவலர்கள் நியமிக்கப்பட்டு டெல்டேல் கடிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(5) குளிர்சாதன வசதியுடன் திருவாரூரில் சிலைகள் பாதுகாப்பு மையம் அமைக்கப்பட்டு 1917 விக்கிரகங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மேலும் திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் இத்தகைய மையங்களைக் கூடுதலாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

99—

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்கள்.

வினா எண் 15168—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்கள் எத்தனை ?

(ஆ) ரூ.5 இலட்சத்திற்கும் அதிக வருமானம், 1 இலட்சம் முதல் 5 இலட்சம் வரை வருமானம். 1 இலட்சத்திற்கும் குறையான வருமானம் உள்ள கோயில்கள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்கள் .. 33,325

(ஆ) ரூ. 5 இலட்சத்திற்கும் அதிக வருமானம் உள்ள கோயில்கள் 108

ரூ. 1 இலட்சம் முதல் 5 இலட்சம் வரை வருமானம் உள்ள கோயில்கள் .. 250

ரூ. 1 இலட்சத்திற்கும் குறைவாக வருமானம் உள்ள கோயில்கள் 32,967

33,325

100—

திருமுல்லைவாசலில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதி அமைத்தல்.

வினா எண். 15482— திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் திருமுல்லைவாசலில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

தற்சமயம் இல்லை.

1993 அக்டோபர் 26]

(ஐந்தாம் பட்டியல்).

1—

காவல் நிலையங்களில் பதிவு செய்த இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை.

வினா எண் 1006—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் காவல் நிலையங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ள இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை மாவட்டம் வாரியாக எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் :

அகதி முகாம்களுக்கு வெளியே இருந்து வரும் இலங்கைத் தமிழர்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்வதற்காக, அரசு வெளியிட்ட பொது அறிவிப்பிற்கிணங்க 28—6—1991 முதல் 1–10–1992 வரை தமிழ்நாட்டில் மொத்தம் 27,868 நபர்கள் தங்கள் பெயர், விலாசம், தொழில் ஆகிய விபரங்களைக் காவல் நிலையங்களில் பதிவு செய்து கொண்டுள்ளனர். அவர்களின் விபரம் மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

இணைப்பு 1.

TOTAL NUMBER OF SRILANKANS REGISTERED THEIR NAMES AT POLICE STATION.

District.	Number of Srilankans.	Men.	Women	Children.
(1)	(2)	(3)	(4)	(5)
1. Madras City	4,511	1,939	1,802	770
2. Chengai-Anna (E) ..	4,918	2.308	1,832	778
3. Chengai-Anna (W) ..	1,076	529	429	118
4. South Arcot	332	127	122	83
5. Villupuram	405	184	139	82

(1)	(2)	(3)	(4)	(5)
6. North Arcot	1,306	515	487	304
7. Tiruvannamalai Sambuvarayar.	18	8	10	..
8 Salem	405	175	158	72
9. Dharmapuri	174	74	56	44
10. Trichy	5,438	2,165	2,271	1,002
11. Thanjavur (W) ..	1,290	530	477	283
12. Thanjavur (E)	318	141	109	68
13. Pudukkottai	293	157	109	27
14. Madurai City ..	1,184	462	466	256
15. Madurai Rural ..	1,054	414	395	245
16. Dindigul	77	31	30	16
17. Ramanathapuram ..	232	150	43	39
18. Pasumpon Thevar Thirumagan. ..	166	71	67	28
19. Kamarajar	140	68	54	18
20. Tirunelveli-Kattabomman	455	169	178	108
21. Kanyakumari ..	733	267	257	209
22. Coimbatore City ..	866	414	301	151
23. Coimbatore Rural ..	816	307	266	243
24. Periyar	186	80	63	43
25. Nilgiris	576	338	183	55
26. Chidambaranar ..	218	102	67	49
Male			11,725	
Female			10,371	
Children			5,091	
Total			27,187	

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

Serial number and district.	Number of Srilankans Tamils voluntarily registered their names before 1st October 1992.
(1)	(2)
1. Dindigul-Anna	1
2. Thanjavur	1
3. The Nilgiris	..
4. Periyar	4
5. Madurai City	35
6. Chengai-M.G.R.	125
7. Chidambaranar	5
8. Madras City	100
9. Coimbatore City	103
10. Dharmapuri	..
11. Ramanathapuram	3
12. Tiruvannamalai-Sambuvarayar	58
13. Pudukkottai	..
14. Kamarajar	1
15. Nagapattinam Quaide-Milleth	11
16. Cuddalore	16
17. Pasumpon Muthuramalingam	—
18. Kanyakumari	4
19. Tiruchirappalli	181

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)
20. Madurai Rural	24
21. Tirunelveli-Kattabomman	—
22. Coimbatore Rural	—
23. North Arcot-Ambedkar	2
24. Villupuram	—
25. Salem	7
Total ..	681

2—

தமிழ்நாட்டில் அந்நியரின் ஊடுருவலைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 4530—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அந்நியரின் ஊடுருவலைத் தடுக்க தமிழக மக்களைப் பற்றிய குறிப்பை கம்யூட்டரில் பதிவு செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் :

இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து எடுத்துள்ள பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளின் காரணமாக அந்நியரின் ஊடுருவல் கிட்டத்தட்ட தடுக்கப்பட்டுள்ளது. அந்நியரின் ஊடுருவலை முழுமையாக கட்டுப்படுத்தி ஊடுருவலே இல்லை என்ற நிலைமை தோற்றுவிப்பதே இவ்வரசின் குறிக்கோளாக உள்ள நிலையில், அதற்காக மக்களைப் பற்றிய விவரங்கள் கம்யூட்டர் மூலம் பதிவு செய்யும் கருத்து எதுவும் இவ்வரசின் பரிசீலனையில் இல்லை.

துணை வினாக்களுக்காக கீழ்க்கண்ட விவரங்கள் வழங்கப்படுகின்றன :—

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அந்நியரின் ஊடுருவல் இலங்கைத் தீவிலிருந்து மட்டுமே பெருவாரியாக இருந்து கொண்டிருந்தது. இதனைத் தடுத்து நிறுத்துவதைத் தலையாய பணியாக ஏற்றுக் கொண்டு இவ்வரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இது வரை நல்ல பயனை அளித்துள்ளன. கட்டுப்படுத்தப்பட்டுவிட்ட இப்பிரச்சினை அதிக அளவில் இல்லையென்ற நிலைமையில் இதைத் தடுப்பதற்கென்று மக்களைப் பற்றிய விவரங்களைச் கம்யூட்டரில் பதிவு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும், அத்தகைய பதிவு செய்தல் சாதாரணமான முறையில் நிறைவேற்றக் கூடியதும் அல்ல. மிகுந்த பணச் செலவையும் உழைப்பையும் உள்ளடக்கியது.

3—

BLOWING UP OF PAMBAN BRIDGE.

Question No. 2060—Thiru M. Sundaradoss : Will the Hon'ble the Chief Minister be please to state—

(*a*) Whether the report have reached the State Government and State Police about the blowing up of the Pamban Bridge at Rameswaram in recent times.

(*b*) the details thereof and

(*c*) the details of precautions taken in this regard ?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 1991 ஜூலையில் ''எல்.டி.டி.இ.'' பேரில் அநாமதேயக் கடிதம் வந்தது உண்மை. இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது என்ற முடிவை மாநில அரசு கைவிடா விட்டால் பாம்பன் பாலத்தைத் தகர்ப்போம் என்ற வாசகங்கள் அக்கடிதத்தில் அடங்கியிருந்தன.

(இ) இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கையாளுவதில் உள்ள அணுகு முறைக்கு இந்த அரசு ஒரு புதிய முக்கியத்துவத்தை அளித்து வருகிறது. இம்மாநிலத்தில் இலங்கை போராளிகளின் நடவடிக்கைகளை முற்றிலுமாக அகற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கடற்கரையோர பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள காவல் துறை அதிகாரிகள், புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் ஆகியோருடனும், உள்ளூர் கடற்படைத் தலைவர், கடலோரக் காவல் படைத் தலைவர் ஆகியோருடனும் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளார். இக்கூட்டங்களில் மாண்புமிகு முதல்வர் இப்போதுள்ள நிலைமையை கருத்தில் கொண்டு நடுக் கடலிலும், கடலோரத்திலும் கண்காணிப்புப் பணியை உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டார். அதில் முக்கியமான இடங்களில் 34 சோதனைச் சாவடிகள் செயல்பட்டு வருவதுடன், மத்திய ரிசர்வ் காவல் படை, தமிழ்நாடு ஆயுதந்தாங்கிய காவல் படை ஆகியவற்றைச் சேர்ந்த 10 கம்பெனி காவலர்கள் ரோந்துப் பணி மேற்கொள்வதுடன், கடற்படை, கடலோரக் காவல் படை ஆகியவையும் தீவிரமாக ரோந்துப் பணி மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது மீனவர் வேடத்தில் கடத்தல்காரர்களும், போராளிகளும் நடமாடுவதற்கான வாய்ப்பை அகற்றும் பொருட்டு கடற்படை, கடலோரக் காவல் படை ஆகியவற்றின் உன்னிப்பான கண்காணிப்பின் கீழ் மீன்பிடித்தல் பணி முறைப்படுத்தப்படுகிறது. இலங்கைக்கு எரி பொருளைக் கடத்தல் செய்யும் வாய்ப்பைத் தடுக்கும் பொருட்டு பெட்ரோல்/டீசல் பெரும் அளவில் வழங்கும் முறை அனுமதிக்கப்படுவதில்லை. ஆழமற்ற கடலோரப் பகுதிகளில் ரோந்துப் பணியை மேற்கொள்ள ஏதுவாகத் தட்டையான அடிப்பாகத்தைக் கொண்ட படகுகள், மோட்டார் பொருத்தப்பட்ட படகுகள் ஆகியன கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளன. போராளிகளின் மறைவிடங்கள் அனைத்தும் மிகத் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இலங்கைத் தமிழ் போராளிகளின் நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமென்று தீர்மானித்துள்ள மாநில அரசு, பல்வேறு தீவிரமான உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பாதுகாப்பு கருதி அவற்றை விரிவாகக் கூற இயலாது.

4—

அந்தியூர் ஒன்றியத்தைச் சார்ந்த ஊர்களிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் பட்டா வழங்குதல்.

வினா எண் 4891—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

(அ) அந்தியூர் தொகுதியிலுள்ள வேதகாரன்குட்டை, குருவாதபுரம், குள்ளிகூட்டான்காடு என்ற அந்தியூர் ஒன்றியத்தைச் சார்ந்த ஊர்களிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் பட்டா வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பட்டா வழங்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): அந்தியூர் தொகுதியிலுள்ள வேதகாரன் குட்டை, குருவாதபுரம், குள்ளிகூட்டான்காடு ஆகிய மூன்று கிராமங்களும் முறையே தடை செய்யப்பட்ட குட்டை, மந்தைவெளி மற்றும் வாரிப் புறம்போக்கில் அமைந்துள்ளதால் மேற்படி பகுதியில் குடியிருக்கும் நபர்களுக்கு பட்டா வழங்க இயலாது.

5—

வல்லவன்பட்டினத்தில் குடி இருப்பவர்களுக்கு குடிமனை பட்டா வழங்குதல்.

வினா எண் 6876—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி வல்லவனபட்டினத்தில் குடி இருப்பவர்களுக்கு குடிமனை பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், திருவத்தேவன் கிராமத்தை சேர்ந்த வல்லவன்பட்டினத்தில் புல எண். 338/6பி மற்றும் 339-இல் சிலர் குடியிருந்து வருகிறார்கள். இந்த நிலம் திரு. சுல்தான் அப்துல்காதர் மரைக்காயர் மற்றும் 3 நபர்களுக்கு சொந்தமான பட்டா நிலம். இந்த பட்டாதாரர்களுக்கும் வீடு கட்டிக்கொண்டு குடியிருப்பவர்களுக்கும் நிலத்தின் உரிமை குறித்து சிவில் நீதி மன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது.

இந்த வழக்கின் தீர்ப்பைப் பொறுத்துதான் மேல் நடவடிக்கை எடுத்திட இயலும். மேலும் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட தகுதியான புறம்போக்கு நிலங்கள் வேறு ஏதுமில்லை. எனவே, வல்லவன்பட்டினத்தில் குடியிருப்பவர் களுக்குக் குடிமனைப் பட்டா வழங்கிட அரசிடம் செயற்குறிப் பேதுமில்லை.

6—

சுப்பம்மாள் சத்திர ஏழை மக்களுக்கு குடி பட்டா.

வினா எண் 6889—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் திருவத்தேவன் ஊராட்சி சுப்பம்மாள் சத்திரத்தில் உள்ள ஏழை களுக்கு குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டத்தைச் சேர்ந்த திருவத்தேவன் கிராமத்தில் புல எண். 336/2சி-ன் திட்ட விஸ்தீரணம் 1.17.0 ஹெக்டேர் பட்டா புஞ்சை நில மாகும். இந்த நிலம் பட்டா எண். 672-இல் சுப்பம்மாள் சத் திரம் மற்றும் இரண்டு நபர்கள் பெயரால் பட்டா தாக்கல் ஆகி யுள்ளது. இதில் 13 குடும்பத்தினர் வீடு கட்டிக்கொண்டு வசித்து வருகிறார்கள். இந்த சுப்பம்மாள் சத்திரத்திற்கும் மற்றும் இரு தனி நபர்களுக்கும் சொந்தமான பட்டா நிலமானதால் மேற்படி நிலத்தில் வீட்டு மனைப் பட்டா வழங்க இயலாது. வேறு தகுதியான புறம்போக்கு நிலங்களும் இக்கிராமத்தில் ஏதுமில்லை. எனவே, திருவத்தேவன் ஊராட்சி சுப்பம்மாள் சத்திரத்தில் உள்ள ஏழைகளுக்கு குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

7—

மாவடு குறிச்சி ஊராட்சி கீழ்க்காணும் மக்களுக்கு குடிமனை பட்டா வழங்குதல்.

வினா எண் 7254—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மாவடு குறிச்சி ஊராட்சி கீழ்க்காட்டில் குடியிருப்பவர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், மாவடு குறிச்சி கிராமத்தில் பேராவூரணி—பட்டுக்கோட்டை மெயின் ரோட்டில் இருபுறமும் சுமார் 10 குடும்பத்தினர் மாவடு குறிச்சி கிராமம் புல எண் 267/1ஏ மற்றும் 1பி-இல் நாடியம் மடத்திற்கு சொந்தமான பட்டா புஞ்சை நிலத்தில் குடிசைகள் போட்டுக் கொண்டு ஆக்கிரமணம் செய்துள்ளார்கள். மடத்திற்கு சொந்தமான பட்டா நிலத்தில் இலவசமாக வீட்டு மனை ஒப்படை வழங்க இயலாது. மேலும் இவர்களுக்கு வீட்டுமனை வழங்க தகுதியான புறம்போக்கு அல்லது நத்தம் நிலம் ஏதும் இல்லை. எனவே, பேராவூரணி வட்டம், மாவடுகுறிச்சி ஊராட்சி கீழ்க்காட்டில் குடியிருப்பவர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

8—

ஒட்டன்சத்திரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம்.

வினா எண் 7752—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டத்தில் எந்தெந்த தாலுக்காக்களை இரண்டாகப் பிரிக்க அரசு உத்தேசித்துள்ளது ?

(ஆ) எப்போது அவை பிரித்தமைக்கப்படவிருக்கின்றன?

(இ) அப்படி பிரித்தமைக்கப்படும்போது புதிதாக அமைக்கப்படும் தாலுகாவின் தலைநகர், கோட்டாட்சி அலுவலகம், வருவாய் அலுவலகம் ஆகியவை தாலுகாவின் மையப் பகுதியில் அமையும் வகையில் அரசு செயல்படுத்துமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) பழனி வட்டத்திலுள்ள ஒட்டன்சத்திரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை மட்டும் அரசின் ஆய்வில் தற்போது உள்ளது?

(ஆ) ஆய்வுக்குப்பின் அரசின் நிதி வசதிகளுக்கேற்ப முடிவு செய்யப்படும்.

(இ) ஆய்வுக்குப்பின் புதிய வட்டம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கும்பொழுது இதுபற்றியும் முடிவு செய்யப்படும்.

9—

மேட்டூர் 1 முதல் 60 வரை வார்டு வீடுகளுக்கு பட்டா வழங்குதல்.

வினா எண் 9256—திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் மேட்டூர் நகரியத்தில் 1 முதல் 60 வரை வார்டுகளில் உள்ள வீடுகளுக்கு 25 ஆண்டுகளாகப் பட்டா வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): மேட்டூர் நகரியத்தில் ஆட்சேபணையாக உள்ள நிலங்களிலும் மனைப்பிரிவு அங்கீகாரம் செய்யப்படாத நிலங்களிலும் பொதுமக்கள் குடியிருந்து வருவதால் மேற்படி ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த சில சட்டங்களையும், விதிகளையும், தளர்த்துவது பற்றி ஆய்வு செய்த பின்னர் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10—

சார்வாய், சார்வாய் புதூர் ஊராட்சிகளை தனித்தனி வருவாய் கிராமங்களாக அறிவித்தல்.

வினா எண் 10660—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதியில் சார்வாய், சார்வாய் புதூர் என்று தனித்தனி ஊராட்சிகள் இருப்பது போல், அவைகளைத் தனித்தனி வருவாய் கிராமங்களாக அறிவிக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இக்கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

11—

கோவை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்தல்.

வினா எண் 14458—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வறட்சி மாவட்டமாக அறிவித்து தனிப்பட்ட ஆணைகள் ஏதும் இதுவரை வழங்கப்படவில்லை. வறட்சி, வெள்ளம் அல்லது புயல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளிடமிருந்து பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு விலக்கு கோரி மனுக்கள் வரப்பெற்றால் சம்பந்தப்பட்ட வருவாய் அதிகாரிகள் பாதிப்புக்குட்பட்ட

நிலங்ளை நேரில் பார்வையிட்ட பின்னர், வரிவிலக்கு மற்றும் தொடர்பான நிவாரணங்களை அளிக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. மேலும், கடந்த 1398, 1399, 1400, 1401 மற்றும் 1402 ஆகிய ஐந்து பசலிகளிலும் கோவை மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க விதத்தில் வறட்சி நிலை காணப்படவில்லை.

12 —

பார்த்திபனூரில் பத்திரப்பதிவு அலுவலகம் ஏற்படுத்துதல்.

வினா எண் 15405-ஏ —டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பார்த்திபனூரில் பத்திரப் பதிவு அலுவலகம் ஏற்படுத்த அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

இல்லை.

13 —

கறம்பக்குடி சார்பதிவாளர் அலுவலகக் கட்டிடத்தை பழுது பார்க்க நடவடிக்கை.

வினா எண் 16666 —திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆலங்குடி தொகுதி கறம்பக்குடியில் இயங்கும், சார்பதிவாளர் அலுவலக பழுதடைந்த கட்டிடத்தைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

கறம்பக்குடி சார்பதிவக சிறப்பு மராமத்துப் பணிக்கு ரூ. 1,90,000-க்கு மதிப்பீடு 18 —3 —1993-ல் தலைமைப் பொறியாளருக்கு பணி மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது.

1993 அக்டோபர் 26]

14—

சத்திரக்குடி சார்பதிவாளர் அலுவலகக் கட்டிடத்தை மராமத்து செய்தல்.

வினா எண் 16817—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி சத்திரக்குடியில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டிடத்தை மராமத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) அரசுக்குச் சொந்தமான இடம் இருந்தும் 1987-ல் இருந்து வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதை மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) சத்திரக்குடியில் போகனூர் சார்பதிவகம் இயங்குகிறது. அரசு கட்டிடம் பழுதுற்ற நிலையில் உள்ளதால் 1987 முதல் தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. பொதுப் பணித்துறையினரிடம் உரிய மதிப்பீடு பெற்று பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) அரசு கட்டிட மராமத்துப் பணி முடிவுற்றதும், அலுவலகம் அரசு கட்டிடத்தில் மாற்றப்படும்.

15—

கறம்பக்குடியை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுக்கா அமைத்தல்.

வினா எண் 17141—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியை தலைமையிடமாகக் கொண்டு தாலுக்கா அமைக்கும் பணி எந்நிலையில் உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

கறம்பக்குடியை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

16—

தென்னாற்காடு மாவட்டத்திற்கு திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சியின் பெயர்

வினா எண் 19736—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சியின் பெயர் வைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

தென்னாற்காடு மாவட்டத்தை பிரித்தமைத்து விழுப்புரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஏற்படுத்தப்படும் புதிய மாவட்டத்திற்கு ''விழுப்புரம்—இராமசாமி படையாச்சியார் மாவட்டம்'' என பெயர் சூட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

17—

பாளையங்கோட்டைத் தொகுதியில் கொசுத் தொல்லை

வினா எண் 1313—திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டைத் தொகுதியில் கொசுத் தொல்லை அதிகமாக உள்ளது குறித்து அரசுக்கு புகார் வந்ததா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) பாளையங்கோட்டை தொகுதியில் கொசுத் தொல்லைப் பற்றி இதுவரையில் எந்தவித புகாரும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

18—

சென்னை மாநகராட்சியில் கொசு ஒழித்தல்

வினா எண் 6326— திரு. எம். ஆண்டி. அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியில் கொசு ஒழிப்புத் திட்டத்தின்கீழ் உள்ள ஊழியர் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) ஆண்டுதோறும் கொசு ஒழிப்பு திட்டத்திற்காக எவ்வளவு கொசு ஒழிப்பு மருந்துகள் வாங்கப்படுகின்றன?

(இ) அவை முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்பது எவ்வகையில் கண்காணிக்கப்படுகிறது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) தொழிலாளர் நிலையில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 1,215. மேற்பார்வை நிலையில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 223.

(ஆ) 1991–92 இல் வாங்கப்பட்ட கொசு ஒழிப்பு மருந்தின் அளவு கீழ்வருமாறு :—

பைடெக்ஸ்	..	1,000 லிட்டர்.
அபேட் ..	...	70 லிட்டர்.
அதற்கான செலவு	—	ரூ. 7.54 இலட்சங்கள்.

(இ) பூச்சிகொல்லி மருந்துகள் சுகாதார ஆய்வாளர் முன்னிலையில் கலக்கப்பட்டு மலேரியா உதவியாளர், மலேரியா ஆய்வாளர், தலைமை மஸ்தூர் போன்ற மேற்பார்வையாளர்களின் முன்னிலையில் மருந்து தெளிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியை உதவி பூச்சியியல் வல்லுனர், முதுநிலை பூச்சியல் வல்லுனர், உதவி சுகாதார அலுவலர் மூலமாக குறுக்கு ஆய்வு செய்யப்படுகிறது.

19—

புதுக்கோட்டை தலைமை மருத்துவமனை கழிப்பிடங்களை சரிவர பராமரித்தல்.

வினா எண் 12547—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டை தலைமை மருத்துவமனையில் உள்ள 42, 41 வார்டுகளில் மாடியில் உள்ள கழிப்பிடங்கள் பராமரிக்கப்படாமல் இருப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை உடன் சீரமைக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) புதுக்கோட்டை தலைமை மருத்துவமனையில் உள்ள வார்டு எண். 41 மற்றும் 42-ல் சுகாதாரம் நன்கு பராமரிக்கப்படுகிறது. மேலும் மருத்துவமனை சுகாதார பராமரிப்பைக் கண்காணிக்க, வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் மருத்துவ கண்காணிப்பாளரும் மருத்துவமனை மருத்துவ அதிகாரியும் மருத்துவமனையைச் சுற்றிப் பார்க்கின்றனர். எனவே பொருளாதார ஒழுங்கினத்திற்கு தற்சமயம் இடமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

20—

பல்லவன் போக்குவரத்துக்கழகம் நஷ்டத்தில் இயங்குவது.

வினா எண் 4274—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் தற்சமயம் லாபத்தில் இயங்குகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) தற்சமயம் பல்லவன் போக்குவரத்துக் கழகம் லாபத்தில் இயங்கவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

21—

அதிசயபுரம் வழியாக வி. கே. புதூர் அச்சங்குட்டம் நகரப் பேருந்து இயக்குதல்.

வினா எண் 10223—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை—கட்டபொம்மன் மாவட்டம், இராஜகோபாலப் பேரி அதிசயபுரம் வழியாக வி.கே. புதூர்— அச்சங்குட்டம் நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

நெல்லை—கட்டபொம்மன் மாவட்டம், இராஜகோபாலப் பேரி, அதிசயபுரம் வழியாக வி.கே. புதூர் — அச்சங்குட்டம் நகரப் பேருந்து உடனடியாக விடும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை. மேலும் வி.கே. புதூர் அச்சங்குட்டம்

தடத்தில் பேருந்து வசதி அற்ற கிராமம் எதுவும் இல்லை. மேலும் இராஜகோபாலபேரி, அதிசயபுரம் வழியாக தற்போது நாளொன்றுக்கு 3 பேருந்துகள் 24 சுற்றுக்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

22—

மயிலாடுதுறை— கருப்பூர் பேராவூர் நகரப் பேருந்தை மீண்டும் இயக்குதல்.

வினா எண் 11531— திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறையிலிருந்து கருப்பூர் பேராவூருக்கு முன்பு சென்று கொண்டிருந்த 5 ஆம் எண் நகரப் பேருந்தை மீண்டும் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

மயிலாடுதுறை, கருப்பூர், பேராவூர் தடத்தில் பேருந்து இயக்க தனியாருக்கு அனுமதி உள்ளது. தனியார் துறையினர் குறிப்பிட்ட தடத்தில் இயக்க நடவடிக்கை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே இத்தடத்தில் சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குவது என்பது இயலாததாகும்.

23—

கொடுமுடியிலிருந்து சென்னைக்கு நேரடி துரிதப் பேருந்து விடுதல்.

வினா எண் 12114—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடுமுடியிலிருந்து சென்னைக்கு நேரடி துரிதப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : கொடுமுடியிலிருந்து சென்னைக்கு நேரடி துரித பேருந்து இயக்கும் திட்டமெதுவும் தற்போது இல்லை.

24—

புதுக்கோட்டை—வடகாடு நகர பேருந்தை கீரமங்கலம் வரை நீட்டித்தல்.

வினா எண் 13632—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது புதுக்கோட்டையிலிருந்து வடகாடு செல்லும் நகரப் பேருந்தை கீரமங்கலம் வரை நீட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை—கீரமங்கலம் வழி, வடகாடு வழித் தடத்தின் நீளம் 42.4 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தின் அனைத்துப் பகுதிகளும் பேருந்து வசதி பெற்றவையாகும். வழித்தடத்தின் நீளம் அனுமதிக்கப்பட்ட 30.0 கி.மீ. காட்டிலும் அதிகமாக இருப்பதால் புதுக்கோட்டையிலிருந்து வட்காடு வரை இயங்கி வரும் நகரப் பேருந்தை கீரமங்கலம் வரை நீட்டிக்க இயலாது.

25—

பரமக்குடியில் மண்டல போக்குவரத்து துணை அலுவலகம்.

வினா எண் 16541—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் மண்டல போக்குவரத்துத் துணை அலுவலகம் ஆரம்பிக்க அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

26—

தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் ஊழல் குறித்து தொழிற்சங்கங்கள் கொடுத்த புகார்.

வினா எண் 8852—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு (மணல் மேட்டில் உள்ள) நூற்பாலையில் நூல் விற்பனை செய்ததில் நடை பெற்ற மிகப் பெரிய ஊழல் குறித்து தொழிற் சங்கங்கள் கொடுத்த புகார்களின் மீது விசாரணை நடைபெற்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) ஆம். புகார்களின் மீது விரிவான விசாரணை செய்யப்பட்டது.

(ஆ) தொழிற் சங்கங்கள் கொடுத்த புகார்களில் ஒன்றான நூல் விற்பனையில் ஊழல் நடைபெற்றதாகக் கொடுத்த புகாரின் மீது விரிவான விசாரணை செய்யப்பட்டது. அதில் சில தனியார் வியாபாரிகளிடம் செய்த விற்பனையில் தாமதமாகப் பெறப்பட்ட விற்பனைத் தொகைக்கு வட்டி வசூலிக்கப்படாதது குறித்து ஆலையின் ஆட்சியரிடம் விளக்கம் கோரப்பட்டது. ஆட்சியர் தனது விளக்க அறிக்கையில், கன்சைன்மெண்ட் மூலம் விற்பனை செய்யப்பட்ட நூலுக்காக அசல் வசூலிக்கப்பட்ட விவரங்களுடன், தாமதமாக செலுத்தப் பட்ட தொகைக்கு வட்டி வசூல் செய்ய சட்டப் பூர்வமாக நடவடிக்கை எடுத்துள்ள விபரங்களையும், கோப்பில் தாமத நடவடிக்கைக்குக் காரணமான பணியாளர்கள் மீது எடுக்கப்

1993 அக்டோபர் 26]

பட்ட நடவடிக்கை குறித்தும் தெரிவித்துள்ளார். புகாரில் கூறப்பட்ட நூல் விற்பனையில் அசல் வசூலிக்கப்பட்டு விட்டது. தாமதமாக செலுத்தப்பட்ட தொகைக்கான வட்டிக்காக ஆலை சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்துள்ளது. மேற்படி நூல் விற்பனையில் ஊழல் எதுவும் நடைபெறவில்லை.

27—

பரமக்குடி எமனேஸ்வரம் நெசவாளர் கூட்டுறவு தேர்தல்களில் தண்ட வழக்குகளால் தேர்தலில் நிற்க முடியாதவர் எண்ணிக்கை

வினா எண் 16410—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி எமனேஸ்வரம் பகுதிகளில் தண்ட வழக்குகளினால் தேர்தலில் நிற்பதற்கு தடையாக இருப்பவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களின் நிலுவைத் தொகை எவ்வளவு?

(இ) அதை வசூல் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி எமனேஸ்வரம் பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கொடுக்கப்பட்ட தண்ட வழக்குகளினால் கூட்டுறவு தேர்தலில் போட்டியிடுவதற்கு 52 முன்னாள் நிர்வாகிகளுக்கு தடையுள்ளது.

(ஆ) மேற்கண்ட 52 பேர்களிடம் இருந்து தண்ட நடவடிக்கையின் வாயிலாக ரூ. 2,94,591,74 நிலுவையாக உள்ளது.

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 87-ன்கீழ் தண்ட நடவடிக்கையினை முன்னாள் நிர்வாகஸ்தர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு சங்கங்களுக்கு சேர வேண்டிய தொகைகளை வசூலிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

28—

மேற்பனைக்காடு ரயில்வே நிலையத்திலிருந்து கீரமங்கலம் செல்லும் சாலையை சீர் செய்தல்

வினா எண் 13622—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மேற்பனைக்காடு ரயில்வே நிலையத்திலிருந்து கீரமங்கலம் செல்லும் நெடுஞ்சாலை தார்ச் சாலையை சீர் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

1992–93 நிதியாண்டில் மேற்பனைக்காடு ரயில்வே நிலையத்திலிருந்து கீரமங்கலம் செல்லும் நெடுஞ்சாலை கி.மீ. 1/8-3/0 மற்றும் 4/0-5/0 ஆகிய பகுதிகள், காலமுறை புதுப்பித்தல் பணியாக மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும் இச்சாலையில் ஏற்பட்டுள்ள நொடிகளை வெள்ள நிவாரணப் பணியின் ரூ. 5,000 மதிப்பீட்டில் சீர்செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதிகள் சாலைப் பணியாளர்களைக் கொண்டு சீர் செய்யப்பட்டு வருகின்றது.

29—

கோயம்புத்தூரில் கூடை முடைவோருக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல்

வினா எண் 16331—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் அருணாசலம் ரோடு, மெக்ரிகன் ரோடு பகுதிகளில் வசிக்கும் கூடை முடைவோருக்கு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப் புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் அருணாசலம் ரோடு, மெக்ரிகன் ரோடு பகுதிகளில் கூடை முடைவோர் வசிக்கும் நிலம் கோயம் புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமானதாகும். அந்நிலம் தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்த பின் ஹட்கோவிடமிருந்து கடனுதவி பெற்று அவர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தர குடிசை மாற்று வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

0—

சீர்காழியில் வீடற்ற ஏழைகளுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகட்டி கொடுத்தல்.

வினா எண் 16464—து. மூர்த்தி : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழியில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் வீடற்ற ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

இல்லை.

31—

கிருஷ்ணா காப்பித் தோட்ட தொழிலாளர் எண்ணிக்கை

வினா எண் 11571—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை குன்றுகள் கிராமம், கிருஷ்ணா காப்பித் தோட்டம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமா?

(ஆ) ஆம் எனில், அங்கு எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 12.

32—

சங்ககிரியில் விதை சுத்திகரிப்பு நிலையம்

வினா எண் 17516—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியில் வேர்க்கடலை, நெல், எள் ஆகியவைகளை சுத்திகரிக்க விதை சுத்திகரிப்பு மையம் ஒன்றை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) சங்ககிரியில் விதை சுத்திகரிப்பு மையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

33—

கிருட்டிணகிரி கால்நடை மருத்துவமனைக்கு கட்டிடம்

வினா எண் 4229—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருட்டிணகிரி நகரில் கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்ட 4 ஏக்கர் நிலம் ஒதுக்கியும் கட்டாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

1993 அக்டோபர் 26]

விடை —

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் :

(அ) கிருட்டிணகிரி நகரில் கால்நடை மருத்துவமனைக்கு 1.50 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) அரசின் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு உரிய நேரத்தில் கால்நடை மருத்துவமனைக்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

34—

எடமணல் கால்நடை மருத்துவமனையை புதுப்பித்தல்:

வினா எண் 15486—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் எடமணலில் கால்நடை மருந்தகம் பழுதடைந்திருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை புதுப்பிக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. த. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) எடமணலிலுள்ள கால்நடைக் கிளை நிலையம் தற்பொழுது ஊராட்சி ஒன்றியக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. கட்டிடம் பழுதடைந்த விவரம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டு பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

35—

சிட்டா நூலுக்கு விதிக்கப்பட்டுள்ள 2 சதவீத வரியை ரத்து செய்ய நடவடிக்கை.

வினா எண் 14636— திரு. கி. சுவாமிநாதன் : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிட்டா நூலுக்கு விதிக்கப்பட்டுள்ள 2 சதவீத வரியை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : 7—10—1988 முதல் சிட்டா நூல் மீதான வரிவிகிதம் 3 சதவீதத்திலிருந்து 2 சதமாக குறைக்கப்பட்டுள்ளதாலும் வரியை ரத்து செய்தால் ஆண்டுக்கு சுமார் ரூ. 18 கோடி வரி இழப்பு ஏற்படும் என்பதாலும் சிட்டா நூல் மீதான 2 சதவீத வரியை ரத்து செய்ய இயலாது.

36—

சத்துணவுப் பகுதி நேர பணியாளர்களை சமூக நலத்துறை மூலம் வேறு பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளுதல்.

வினா எண் 8177—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுப் பகுதி நேர பணி செய்யும் பணியாளர்களை வேறு பயனுள்ள பணிகளுக்கு சமூக நலத்துறை மூலம் பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் ஏற்கெனவே சத்துணவுப் பணியுடன் குழந்தைகளுக்கான முன்பருவக் கல்வி, சுகாதாரத்திட்டம் போன்றவற்றைக் கவனித்து வருகிறார்கள்.

1993 அக்டோபர் 26]

37—

சேந்தமங்கலத்தில் பால்வாடி அமைத்தல்.

வினா எண் 12708—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, சேந்தமங்கலத்தில் ஒரு பால்வாடி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

ஆண்டிமடம் தொகுதி சேந்தமங்கலத்தில் பால்வாடி அமைக்க குறைந்தது 70 குழந்தைகள் இருக்க வேண்டும். மேற்கண்ட கிராமத்தில் பாலர் பள்ளி அமைக்க போதிய குழந்தைகள் இல்லை. எனவே மேற்கண்ட கிராமத்தில் பால்வாடி அமைக்க செயற் குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

38—

சேதுபாவாசத்திரம் சத்துணவுக்கூடத்திற்கு கட்டிடம்.

வினா எண் 13045—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சேதுபாவாசத்திரத்தில் சத்துணவுக் கூடத்திற்கு நிலையான கட்டிடம் கட்டித்தர 1992–93ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரத்தில் உள்ள சத்துணவுக் கூடத்திற்கு ரூ. 70 ஆயிரம் மதிப்பில் கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

39—

மழவேனிற்காடு பால்வாடி கட்டிடத்திற்குக் கூரை வேய்தல்.

வினா எண் 13408—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் மழவேனிற்காட்டில் உள்ள பால்வாடி கட்டிடத்திற்கு 1992-93ல் கூரையை மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

மழவேனிற்காட்டில் உள்ள குழந்தைகள் நல மையக் கட்டிடத்தின் கூரையை மாற்றி அமைத்துப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

40—

செருவாவிடுதி தெற்கில் சத்துணவுக் கூடம்.

வினா எண் 13572—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, செருவாவிடுதி தெற்கில் சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

தேவையான இடங்களில் ஆவன செய்ய, நன்கொடைகளையும், அரசு ஏற்கனவே ஒதுக்கியுள்ள தொகைகளையும் பயன்படுத்திக்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

1993 அக்டோபர் 26]

41—

வலையன் வயலில் பால்வாடி அமைத்தல்.

வினா எண் 13575—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரம் வலையன்வயலில் 1992-93-ல் பால்வாடி ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிரு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

பேராவூரணித் தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், பெருமகளூர் பேரூராட்சியை சேர்ந்த வலையன் வயல் கிராமத்தில் தற்பொழுது 16 குழந்தைகளே இருக்கின்றனர். வலையன்வயல் குடியிருப்பு பகுதிக்கு மிக அருகாமையில் (1கிலோ மீட்டருக்கும் குறைவு) கல்யாணராமராதபுரம் குழந்தைகள் நல மையம் தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, 1992-93-ல் வலையன் வயல் கிராமத்தில் பால்வாடி அமைக்க வழிவகை இல்லை.

42—

Setting up of Directorate for Handicapped

Question No. 14386—Thiru M. Sundaradoss : Will the Hon• the Minister for Social welfare be pleased to state—

(a) Whether the Directorate of Handicapped has been set up in this State : and

(b) the details of the staff employed?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்கண்ட பணியிடங்கள் ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன :

1. இயக்குநர் ஒன்று.

2. துணை இயக்குநர் ... ஒன்று

3.	செயலாளர் ஊனமுற்றோர் நல வாரியம்		ஒன்று
4.	உதவி இயக்குநர்	..	ஐந்து
5.	கணக்கு அலுவலர்		ஒன்று
6.	உதவி கணக்கு அலுவலர்	..	ஒன்று
7.	புள்ளியியல் அலுவலர்	..	ஒன்று.
8.	புள்ளியியல் ஆய்வாளர்		ஒன்று
9.	பிளேஸ்மென்ட் அலுவலர்	..	இரண்டு
10.	கண்காணிப்பாளர்	..	நான்கு
11.	உதவியாளர்	..	பதிமூன்று
12.	இளநிலை உதவியாளர்	..	ஏழு
13.	சுருக்கெழுத்து தட்டச்சர்	..	ஆறு
14.	தட்டச்சர்	..	ஐந்து
15.	வாகன ஓட்டுநர்	..	ஒன்று
16.	பதிவறை எழுத்தர்	..	ஒன்று
17.	அலுவலக உதவியாளர்.	.	ஒன்பது

மேலும் மாவட்ட அளவில் சார்நிலை அலுவலகங்களுக்கும் அதற்கென்று பணியாளர் பணியிடங்களும் அனுமதிக்கப் பட்டுள்ளன.

43—

பரமக்குடி தாலுக்கா ஊனமுற்றோருக்கு உபகரணங்கள்.

வினா எண் 17204—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தாலுக்காவில் 1991-92 இல் உடல் ஊனமுற்றோருக்காக உபகரணங்கள் என்னென்ன வழங்கப் பட்டன ?

(ஆ) அவர்கள் பெற்ற வேலைவாய்ப்புகளின் விவரம் என்ன?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): இது தொடர்ந்து வழங்கப்பட்டு வரும் உதவி, யார் யாருக்குத் தேவை என்பதைத் தெரியப்படுத்தினால் தக்க உதவி வழங்க ஏற்பாடு செய்யப்படும். அரசுத், துறையும் தொண்டு நிறுவனங்களும் வழங்கிவருகிறார்கள்.

44—

நாகை மாவட்டத்தில் சமூக நலத் துறை மூலம் விதவைகளுக்கு மறுவாழ்வுத் திட்டம்.

வினா எண் 17252—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தில் சமூக நலத் துறை சார்பாக விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுவது குறித்த விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

விதவைகள் மறுமணத் திட்டத்தின் கீழ் 15 பேருக்கு, ரூ. 75 ஆயிரம் வழங்கப்பட்டது.

45—

மேற்பனைக்காடு—நெய்வத்தலி முந்திரிக்காடு மூலம் அரசுக்குக் கிடைத்த லாபம்.

வினா எண் 12908—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், மேற்பனைக்காடு-நெய்வத்தலி கிராமங்களை ஒட்டிய அரசுக்குச் சொந்தமான முந்திரித் தோட்டத்தின் மூலம் அரசுக்கு லாபமா அல்லது நஷ்டமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர் :

அறந்தாங்கி ஒன்றியம், மேற்பனைக்காடு-நெய்வத்தலி கிராமங்களை ஒட்டி, மேற்பனைக்காட்டில் 128.00 எக்டேர் பரப்பளவில் முந்திரிக்காடுகள் தமிழ்நாடு வனத்தோட்டக் கழக நிர்வாகத்தின்கீழ் இலாபமீட்டும் விதத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்தத் தோட்டங்களின் பரப்பளவு விவரம். 1990-91, 1991-92 மற்றும் 1992-93ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் விவரம் மற்றும் நிகர லாபம் ஆகியவை கீழ் வருமாறு:—

வரிசை எண்.	முந்திரித் தோட்டத்தின் பெயர்.	பரப்பளவு எக்டேரில்	நிகர லாபம். 1990-91	1991-92	1992-93
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(ரூபாயில்.)		
1.	1962 மேற்பனைக் காடு.	39.00			
2.	1962 மேற்பனைக் காடு.	12.15			
3.	1964 மேற்பனைக் காடு.	6.58			
4.	1965 மேற்பனைக் காடு.	21.44	18,800	61,634	44,550
5.	1966 மேற்பனைக் காடு.	19.90			
6.	1967 மேற்பனைக் காடு.	22.49			
7.	1972 மேற்பனைக் காடு.	6.44			
	மொத்த பரப்பளவு	128.00			

1993 அக்டோபர் 26]

46—

செங்கம் தொகுதியில் சந்தன மரம் கடத்தல்.

வினா எண் 16707—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த இரண்டு ஆண்டுகளில் செங்கம் தொகுதியில் சந்தன மரக் கடத்தலில் ஈடுபட்டவர் எண்ணிக்கை, பறிமுதல் செய்யப்பட்ட சந்தனக் கட்டையின் மதிப்பு எவ்வளவு ?

(ஆ) நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு தண்டிக்கப் பட்டோர் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

(அ) செங்கம் தொகுதியில் கடந்த 1991-92 மற்றும் 1992-93-ம் ஆண்டுகளில் முறையே 167 மற்றும் 163 நபர்கள் சந்தன மரக் கடத்தலில் ஈடுபட்டனர். இதில் பறிமுதல் செய்யப் பட்ட சந்தனக் கட்டைகளின் மதிப்பு முறையே ரூ.15.25 மற்றும் ரூ. 13.81 லட்சங்களாகும்.

(ஆ) நீதி மன்றத்தில் வழக்குகள் இன்னும் முடிக்கப் படாமல் நிலுவையிலேயே உள்ளதால் தண்டிக்கப்பட்டோர் எவரும் இல்லை.

47—

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் இயங்கும் மொத்த மேல்நிலைப் பள்ளிகள்.

வினா எண் 5364—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் இயங்கும் மேல்நிலைப் பள்ளிகள், அரசு மற்றும் தனியாரின் கீழே உள்ளவற்றின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பள்ளி அலுவலர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) இவற்றில் ஆசிரியர் பணியிடங்களில் இன்னும் காலியாக இருக்கின்ற எண்ணிக்கை எவ்வளவு ?

(ஈ) பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் தாமதம் ஆவதன் காரணம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) அரசு பள்ளிகள்-20, தனியார் பள்ளிகள்-20, மொத்தம்-40.

(ஆ) ஆசிரியர்கள்—1,647

(இ) பள்ளி அலுவலர்கள்—308

(ஈ) 27 காலியாக உள்ள பெரும்பாலான பணியிடங்களுக்கு தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப் பட்டுப் பணியிடங்கள் நிரப்பப்பட இருக்கின்றன.

48—

எஸ். எஸ். எல். சி. மற்றும் பிளஸ்-2 தேர்வு மையங்கள்.

வினா எண் 8274— டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

எஸ்.எஸ். எல். சி. மற்றும் பிளஸ்-2 தேர்வு மையம் அமைக்க ஒரு குறிப்பிட்ட கட்டணம் அரசுக்கு செலுத்தினால் முன்னுரிமை அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

நிர்வாக சிக்கல்களினால் கட்டணம் பெற்றுக் கொண்டு எஸ். எஸ். எல். சி. மற்றும் பிளஸ்-2 தேர்வு மையம் அமைக்க முன்னுரிமை அளிக்க இயலாது. மேல்நிலைப் பள்ளிகளில் பரிட்சை எழுதும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டும் மற்றும் பிற தேவைகளையும் ஆய்ந்து புதிய தேர்வு மையங்கள் அமைக்கப்படுகின்றன.

1993 அக்டோபர் 26]

49—

பல்கலைக்கழக செனட், சிண்டிகேட் மற்றும் அகாடமி உறுப்பினர் நியமனம்.

வினா எண் 8661— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்கலைக்கழகங்களில் செனட், சிண்டிகேட் மற்றும் அகாடமிக் கவுன்சில் ஆகியவற்றிற்கு அரசினால் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்களா ?

(ஆ) ஆம் எனில், பாரதியார், மதுரை, காமராஜ் பல்கலைக்கழகங்களில் அத்தகு அமைப்புகளுக்கு சிறந்த கல்வியாளர் மற்றும் மூத்த தியாகிகளை நியமிக்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) (1) அண்ணா பல்கலைக்கழகம். சென்னை.

அகாடமிக் கவுன்சில் : கல்வித்துறையின் மேல்நிலைக் கல்வி சம்பந்தப்பட்ட ஒரு அதிகாரி அரசினால் உறுப்பினராக நியமிக்கப்படுகிறார்.

(2) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம். சென்னை.

அகாடமிக் கவுன்சில், மற்றும் எக்சிகியூட்டிவ் கவுன்சில் ஆகியவற்றில் அரசால் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

(3) பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

செனட், சிண்டிகேட் ஆகியவற்றிற்கு அரசால் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

(4) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம்.

செனட், சிண்டிகேட் ஆகியவற்றிற்கு அரசால் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

(5) அவினாசிலிங்கம் மகளிர் பல்கலைக்கழகம், கோயம் புத்தூர்.

சிண்டிகேட் மற்றும் அகாடமிக் கவுன்சிலுக்கு உறுப்பின களை அரசு நியமனம் செய்கிறது.

(6) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், சென்னை.

இப்பல்கலைக்கழகத்தின் மேலாண்மைக் குழுமத் தில் அரசால் உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படுகிறார்.

(ஆ) பாரதியார் பல்கலைக் கழகத்தின் செனட் மற்றும் சிண்டிகேட்டுக்கும், மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தின் செனட், சிண்டிகேட் மற்றும் அகாடமிக் கவுன்சிலுக்கும் சிறந்த கல்வியாளர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டு வருகின்றனர், இப்பல்கலைக்கழகங்களில் மூத்த தியாகிகளை உறுப்பினர் களாக நியமிக்க அப்பல்கலைக்கழக சட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை. இதற்காக தனி ஒதுக்கீடு வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

50—

வடுகப்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண் 11339—டாக்டர் வெ. சரோஜா : மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, சங்ககிரி ஒன்றியம் வடுகப்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், இந்த நிதி ஆண்டில் செயல்படுத்தப் படுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வடுகப்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு இன்னும் துவங்கப்படவில்லை. இப்பள்ளி முழுமையான உயர்நிலைப் பள்ளியாக இயங்காத தால் இதனை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வாய்ப் பில்லை.

1993 அக்டோபர் 26]

51—

வெட்டன் விடுதி உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்.

வினா எண் 12729—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வெட்டன் விடுதியில் இருக்கும் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

52—

புதுக்கோட்டை ஊளூர் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்.

வினா எண் 13208—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, புதுக்கோட்டை ஊளூர் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் 1992-93-ல் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

[1993 அக்டோபர் 26

53—

சென்னை எம்.எம்.டி.ஏ. காலனி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்.

வினா எண் 16151—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எம்.எம்.டி.ஏ. காலனியில் இருக்கும் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு ஏதுமில்லை.

54—

ஆத்தம்பாளையத்தில் குடிநீர்த் தொட்டி.

வினா எண் 552—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், மைக்கேல் பாளையம் ஊராட்சிக்குச் சேர்ந்த ஆத்தம்பாளையத்தில் தரமின்றி கட்டப்பட்டுள்ள மேல்நிலைத் தொட்டி இடிந்து விழும் நிலையில் உள்ளது என்பதை அரசு அறியுமா?

(அ) ஆழ்குழாயில் தண்ணீர் இல்லாத போது ஏன் அரசு மேல்நிலைத் தொட்டி கட்ட பணம் செலவு செய்தது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) 1990-91 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஆத்தம்பாளையத்தில் கட்டப்பட்ட குடிநீர் தொட்டி நல்ல நிலையில் உள்ளது. இடிந்து விழும் நிலையில் இல்லை.

1993 அக்டோபர் 26]

(ஆ) 1990 ஜூலை மாதத்தில் இந்த மேல்நிலைத் தொட்டி வேலை தொடங்கும்போது அருகாமையிலிருக்கும் ஆழ்குழாய்க் கிணற்றில் நல்ல தண்ணீர் வரத்து இருந்தது. இதனால் மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டது. மேலும் மேற்படி தொட்டிக்கு குழாய் நீட்டிப்பு செய்து 24—5—1992 முதல் தண்ணீர் நிரப்பப்பட்டு பொதுமக்கள் பயனுக்கு விடப்பட்டுள்ளது.

55—

நாமக்கல் நகராட்சியில் குடிநீர் பிரச்சினை.

வினா எண் 1739—திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாமக்கல் நகராட்சி மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் நாள்தோறும் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட 32 வழிப்புற கிராமங்களுக்கு வழங்கப்பட்டு வரும் 11.50 லட்சம் லிட்டர் தண்ணீர் போக தினசரி 30.48 லட்சம் லிட்டர் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. இந்நகரில் உள்ள 17.45 லட்சம் லிட்டர் தண்ணீர் கொள்ளளவு கொண்ட நான்கு குடிநீர் தொட்டி பகுதிகளை 43 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் 45 நிமிடங்கள் குடிநீர் விநியோகம் ஒவ்வொரு 45 மணி முதல் 48 மணி நேர இடைவெளியில் வழங்கப்படுகிறது. இவ்வாறு ஒரு சுற்று சப்ளை செய்ய 61 லட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இந்நிலையில் குடிநீர் விநியோகத்தை தினசரி வழங்க சோதனை முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதில் நகரில் மேட்டுப் பகுதியும், தாழ்வான பகுதியும் அடுத்தடுத்து உள்ளதால் மேட்டுப் பகுதிக்கு வீட்டுக் குழாய்களுக்கும், பொது குழாய்களுக்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. மேலும் இதனால் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்படும் சூழ்நிலை உருவானது. தற்போது உள்ள 6,076 குடிநீர் இணைப்புகளுக்கு ஒரு இணைப்பிற்கு சுமார் 700 லீட்டர்கள்

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஒவ்வொரு குடிநீர் விநியோகத்தின் போதும் (48 மணி நேர இடைவெளியில்) விநியோகிக்கப்படுகிறது. இது தினசரி குடிநீர் விநியோகிக்கும் அளவுக்கு சமமாக உள்ளது.

56—

குவாகம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 2923—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம் குவாகம் கிராமத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. குவாகம் ஊராட்சியில் உள்ள குவாகம் (கிழக்கு) என்ற குடியிருப்பிற்கு ஆழ்குழாய்கிணறு நீரேற்று நிலையம் 50,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி கட்டி பொது குழாய் மூலம் குடிநீர் வழங்கும் (திட்ட மதிப்பீடு ரூ. 3.86 இலட்சம்) திட்டம் வாரியத்தில் உள்ளது. திட்டம் இந்நிதியாண்டில் (1993–94) நிறைவு செய்யப்படும்.

57—

பெருமகளூர் பேரூராட்சி—காந்தி நகர் தெரு சாலையை மராமத்து செய்தல்.

வினா எண் 2993—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், பெருமகளூர் நகரம், காந்திநகர் தெருவில் உள்ள சாலையை மராமத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், பெருமகளூர் பேரூராட்சி—காந்தி நகர் தெருவில் உள்ள சாலையை மராமத்து செய்ய போதிய நிதி வசதி இன்மையினால் செயற்குறிப்பேதும் இல்லை.

58—

குமரலிங்கத்தில் ஐ.யு.டி.பி. திட்டத்தின்கீழ் திருமண மண்டபம் கட்டுதல்.

வினா எண் 4714— திரு. கே.பி. மணிவாசகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், குமரலிங்கத்தில் ஐ.யு.டி.பி. திட்டத்தின்கீழ் திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

59—

ஆட்டையாம்பட்டி வாரச் சந்தை நிலத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளது.

வினா எண் 6130—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியத்திற்குட்பட்ட ஆட்டையாம்பட்டியில் உள்ள வாரச் சந்தை நிலத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப் படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம். வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம் ஆட்டையாம்பட்டி வாரச் சந்தையில் வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான நிலத்தில் ஆக்கிரமிப்புகள் உள்ளது.

(ஆ) ஆக்கிரமிப்புக்களை அகற்ற 1976 ஆம் வருடம் தமிழ்நாடு பொது இடங்கள் முறையற்ற ஆக்கிரமிப்புகள் சட்டம் 2 (டி) மற்றும் (இ) படி சேலம் கோட்டாட்சி தலைவரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

60—

ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகளின் பயன்கள் மக்களுக்கு சென்றடைகிறதா என்பதை கண்காணிக்க கண்காணிப்புக் குழுக்கள்.

வினா எண் 7757— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊரக வளர்ச்சித் திட்டம் பணிகள் செயல்படுத்தப்படும்போது அவற்றின் பயன் மக்களுக்கு முழுமையாக கிடைக்கின்றதா என்பதை அரசு கண்டறிய முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எந்த வகையில் நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஊரக வளர்ச்சித் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும்போது அவற்றின் பயன் மக்களுக்குச் சென்றடைகின்றதா என்பதைக் கண்காணிக்க கிராம அளவிலும் ஊராட்சி ஒன்றிய அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1993 அக்டோபர் 29]

61—

வால்பாறை நகரியத்தின் மூலம் வால்பாறை நகரத்தில் திரையரங்கம் அமைத்தல்.

வினா எண் 7827—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகரியத்தின் மூலமாக வால்பாறை நகரியத்திற்குள் 'திரையரங்கம்' அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) வால்பாறை நகரியத்தின் மூலம் வால்பாறை நகரியத்திற்குள் திரையரங்கம் அமைக்கக் கேட்டு திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

62—

ஊற்றுக்குழி—பூட்டேற்றி அம்மன் கோயில் இணைப்பு பாலம் கட்டுதல்.

வினா எண் 8789—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் தொகுதி, ஊற்றுக்குழி பூட்டேற்றி அம்மன்கோயில் இணைப்பு பாலம் கட்ட அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மேற்கொள்ளப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம் ஊற்றுக்குழி—பூட்டேற்றி அம்மன் கோயில் இணைப்பு பாலம் கட்ட தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

63—

ஊராட்சி மன்றங்களில் பணி புரியும் துப்புரவு பணியாளர்களுக்கு சம்பள உயர்வு.

வினா எண் 10092—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி மன்றங்களில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு சம்பள உயர்வு அளிக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஊராட்சிகளில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு வேலைப் பளுவைப் பொறுத்து, சந்தை வீதத்திற்கு குறையாமலும் ரூ. 150-க்கு மிகாமலும் நிர்ணயித்து தொகுப்பூதியம் மாதந்தோறும் வழங்க ஊராட்சிகளுக்கு அரசு உத்திரவிட்டுள்ளது.

64—

கீழப்பாவூர் பேரூராட்சிக்கு கூடுதல் நிதி ஒதுக்குதல்.

வினா எண் 10372—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதியிலுள்ள நிதி பற்றாக்குறை உள்ள கீழப்பாவூர் தேர்வுநிலை பேரூராட்சிக்கு அதிக நிதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1992–93ஆம் ஆண்டு சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் திருநெல்வேலி–கட்டபொம்மன் கீழப்பாவூர் தேர்வுநிலை பேரூராட்சி பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள ரூ. 1,90,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1991–92ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், கீழப்பாவூர் பேரூராட்சிப் பகுதியில் ஜல்லி சாலை அமைக்க ரூ. 59,000 ஒதுக்கப்பட்டது. 1992–93 ஆம் ஆண்டுக்கு திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திற்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட ஒதுக்கீட்டில் கீழப்பாவூர் பேரூராட்சியில் 0.560 கி. மீட்டர் ஜல்லி சாலை அமைக்கவும் 0.170 கி. மீட்டர் வடிகால் அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1991–92 ஆம் ஆண்டுக்கு தெரு விளக்கு மின் உபகரணங்கள் வாங்குவதற்காக அரசு மான்யம் ரூ 10,00. ஒதுக்கீடு அளிக்கப்பட்டது 1992–93 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்தின் கீழ் தெரு விளக்குகள் மின் கட்டண நிலுவை செலுத்தவும், தெரு விளக்கு மின் உபகரணங்கள் வாங்கவும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திற்கு ரூ 5.00 லட்சம் அரசு மான்யம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மேற்குறிப்பிட்ட அரசு மான்யத்தை நிதி பற்றாக்குறையுள்ள பேரூராட்சிகளுக்கு பிரித்தளிக்க திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் கோரப்பட்டுள்ளார். எனவே கீழப்பாவூர் பேரூராட்சிக்கு அவரினால் வழங்கப்பட வேண்டிய நிதி ஒதுக்கீடு மற்றும் மான்யங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

65—

பொட்டகவயல் கூட்டு குடிநீர் திட்டம்

வினா எண் 11386—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, பொட்டகவயல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எத்தனை ஊர்கள் சேர்க்கப்பட்டன ?

(ஆ) இவற்றுள் குடிநீர் பெறும் கிராமங்களின் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி. உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பொட்டகவயல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் 36 குடியிருப்புக்கள் சேர்க்கப்பட்டன. பொட்டகவயல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் தற்பொழுது பயன் பெறும் குடியிருப்புகள்—1. பகைவென்றி, 2. டி சிறகிக்கோட்டை, 3. வல்லம், 4. பல்லாவராயனேந்தல், 5. ஒத்த குடியிருப்பு மற்றும் 6. அஞ்சுமடை.

66—

கா. உஞ்சிய விடுதி ஆதி திராவிடர்களுக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்குதல்.

வினா எண் 11968—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம் கா. உஞ்சிய விடுதி ஆதி திராவிடர்களுக்கு 1992–93-ல் வானொலிப் பெட்டியும் தொலைக்காட்சிப் பெட்டியும் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கா. உஞ்சிய விடுதியை உள்ளடக்கிய பாதரங்கோட்டை வடக்கு ஊராட்சியின் நிதிநிலை வளமுடையதாக இல்லாமையால் வானொலி தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க செயற்குறிப்பு இல்லை.

1993 அக்டோபர் 26]

67—

அதம்பை (தெற்கு) திருவள்ளுவர் நகருக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல்.

வினா எண் 11970—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம் அதம்பை (தெ) ஐச் சேர்ந்த திருவள்ளுவர் நகருக்கு 1992–93-ல் வானொலி தொலைக்காட்சிப் பெட்டிகள் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இவ்வூராட்சி நிதி நிலை வளமுடையதாக இல்லாமையால் வானொலி தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க செயற்குறிப்பு இல்லை.

68—

அதம்பை (வடக்கு) ஆதி திராவிடர் குடியிருப்புக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல்.

வினா எண் 11971—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் அதம்பை (வடக்கு) ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு 1992–93-ல் வானொலி தொலைக்காட்சிப் பெட்டிகள் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இவ்வூராட்சியின் நிதிநிலை வளமுடையதாக இல்லாமையால் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க செயற்குறிப்பு இல்லை.

69—

அதம்பை ஊராட்சி வல்லம்ப கொல்லைக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கல்.

வினா எண் 11972—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம் அதம்பை ஊராட்சி வல்லம்ப கொல்லைக்கு 1992-93-ல் வானொலி தொலைக்காட்சிப் பெட்டிகள் அளிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இவ்வூராட்சியின் நிதி நிலை வளமுடையதாக இல்லாமையால வானொலி தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க செயற் குறிப்பு இல்லை.

70—

முடத்துவாசல் ஊராட்சியில் பயணிகள் நிழற்குடை அமைத்தல்.

வினா எண் 12057—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூராணி தொகுதி, குருவிக்கரம்பை ஊராட்சி, முடத்து வாசல் கிராமத்தில் 1992-93-ல் பயணிகள் நிழற்குடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

குருவிக்கரம்பை ஊராட்சி முடத்துவாசல் என்ற இடத்தில் ரூபாய் 12,812 செலவில் 1991 92 ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 2—11—1992-ல் பேருந்து பயணிகள் நிழற்குடை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

1993 அக்டோபர் 26]

71—

குருவிக்கரம்பை ஊராட்சியில் திரை அரங்கிற்கு அருகில் பயணிகள் நிழற்குடை அமைத்தல்.

வினா எண்: 12058— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, குருவிக்கரம்பை ஊராட்சி, சினிமாத் தியேட்டர் அருகில் 1992-93-ல் பயணிகள் நிழற்குடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, குருவிக்கரம்பை ஊராட்சி, சினிமா தியேட்டர் அருகில் 1991-92-ல் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூபாய் 12,990 செலவில் பயணிகள் நிழற்குடை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

72—

ஊமத்தநாடு—உடையநாடு மெயின் ரோட்டில் நிழற்குடை அமைத்தல்.

வினா எண்: 12072—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, ஊமத்தநாடு ஊராட்சி, உடையநாடு மெயின் ரோட்டில் 1992-93-ல் பயணிகள் நிழற்குடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஊமத்தநாடு ஊராட்சி, உடைய நாடு மெயின் ரோட்டில் 1991-92-ல் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூபாய் 13,000- மதிப்பீட்டில் 2—9—1992-லேயே பயணிகள் நிழற்குடை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

[1993 அக்டோபர் 26

73—

நெட்டலக்குறிச்சி மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து ஊராட்சி எல்லாப் பகுதிகளுக்கும் பைப்லைன் அமைத்தல்.

வினா எண் : 12486—திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, நெட்டலக்குறிச்சியில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து செல்லும் பைப்லைன் முழுமையாக எல்லாத் தெருக்களுக்கும் செல்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்போது துவங்கும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம் அணிக்குதிச்சான் ஊராட்சி நெட்டலக்குறிச்சி மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து நிராணிக்கவும் தெரு மற்றும் ஆதிதிராவிடர் காலனி ஆகிய பகுதிகள் தவிர மற்ற எல்லாப் பகுதிகளுக்கும் பைப் லைன் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிராணிக்கம் தெரு மற்றும் ஆதிதிராவிடர் காலனிகளுக்கு பைப்லைன் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ஊராட்சி நிதியிலே போதிய நிதிவசதி இல்லை. சிறப்புத் திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்று மேற்படி பகுதிகளுக்கு பைப்லைன் அமைத்துத் தரப்படும்.

74—

சாத்தனப்பட்டில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.

வினா எண் : 12489—திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, சாத்தனப்பட்டில் உள்ள மக்களின் குடிநீர் கஷ்டத்தைப் போக்க ஒரு போர்வெல் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை, சாத்தனப்பட்டு கிராமத்தில் இரண்டு ஆழ்துளைக் கிணறுகளும், இரண்டு திறந்த வெளிக் கிணறுகளும் உள்ளன. இங்குள்ள மக்கட் தொகைக்கு இந்த இரண்டு ஆழ்குழாய்கள் போதுமானது.

75—

புதுக்கோட்டை நகராட்சிப் பள்ளிக் கட்டிடத்தைப் பழுது பார்த்தல்.

வினா எண்: 12553—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் 1-வது வார்டில் இருக்கும் நகராட்சி பள்ளிக் கட்டிடம் இடிந்து விழும் நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை பழுது பார்க்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை நகராட்சி 1-வது வார்டில் இருக்கும் நகராட்சிப் பள்ளி நகராட்சியின் சொந்த ஓட்டுக் கட்டிடத்தில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. பள்ளிக் கட்டிடம் மட்டும் நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது ரூபாய் 50,000 மதிப்பீட்டில், இப்பள்ளியின் மேற்கூரை, தரை, தளம் மற்றும் மதில் சுவர் பழுதுகள் சீர்செய்ய பணிகள் நகராட்சியால் மேற்கொள்ளப்பட உள்ளது

76—

கோவில் வாழ்க்கையில் சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண். 12712—திரு ஆர். தங்கராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, கோவில்வாழ்க்கையில், புதிய சமுதாயக்கூடம் கட்டித்தர 1992-93-ஆம் ஆண்டில் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1992-93 ஆம் ஆண்டு சமூதாயக் கூடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

77—

திருவத்தேவனில் துணை சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 13453—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருத்தேவனில் 1992-93-இல் ஒரு துணை சுகாதார நிலையம் (Sub-Centre) அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையில், 580 மக்கள் தொகை மட்டுமே உள்ள திருவத்தேவன் கிராமத்தில் தனியாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு இல்லை. சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த 12 குக்கிராமங்களை உள்ளடக்கிய குப்பத்தேவன் என்ற கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. மேற்கண்ட 12 குக்கிராமங்களில் ஒன்றான திருவத்தேவன் கிராமத்திற்கும் குப்பத்தேவன் துணை சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 2 கி. மீ. ஆகும்.

78—

பூவானூர் கிழக்கு ஆதி திராவிடர்களுக்கு தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பெட்டிகள் வழங்குதல்.

வினா எண் 14326—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பூவானூர் கிழக்கு ஆதி திராவிடர்களுக்கு 1992-93-இல் தொலைக்காட்சிப் பெட்டியும், வானொலிப் பெட்டியும் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இவ்வூராட்சியில் ரூபாய் 2,000 மட்டுமே நிதி உள்ளது. தெரு விளக்குக்குரிய மின் கட்டணம, குடிநீர் பராமரிப்புக் கட்டணம், நிர்வாகச் செலவிற்கு இந்நிதிநிலை போதுமானதாக இல்லை. எனவே' தொலைக்காட்சிப் பெட்டி வழங்க இயலவில்லை. பூவானூர் கிழக்கு ஆதி திராவிடர் தெருவில் ஒரு வானொலிப் பெட்டி இயங்குகிறது.

79—

வழுதலை வட்டத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்

வினா எண் 14330—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வாட்டாத்திக் கோட்டையைச் சேர்ந்த வழுதலை வட்டத்திற்கு 1992-93-இல் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்

வழுதலை வட்டத்தைச் சேர்ந்த வாட்டாத்திக் கோட்டை ஊராட்சியில் ரூபாய் 1,500 மட்டுமே உள்ளது, மின் கட்டணம, குடிநீர் பராமரிப்பிற்கே இந்நிதி போதுமானதாக இல்லாததால் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க இயலாது.

80—

வாட்டாத்திக்கோட்டை—சொக்கன தெரு ஆதி திராவிடர்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்

வினா எண் 14331—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வாட்டாத்திக்கோட்டையைச் சேர்ந்த சொக்கன் தெரு ஆதி திராடர்களுக்கு 1992-93-இல் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சொக்கன் தெரு அமைந்துள்ள வாட்டாத்திக்கோட்டை ஊராட்சியில் ரூபாய் 1,500 மட்டுமே நிதியுள்ளது. மின் கட்டணம், குடிநீர் பராமரிப்பு ஆகியவற்றிற்கே நிதி போதுமானதாக இல்லாமையால், தொலைக்காட்சிப் பெட்டி வைக்க இயலவில்லை.

81—

காவேரிப் பட்டணம் பேரூராட்சி குடிநீர் குழாய்களை புதிதாக மாற்றுதல்

வினா எண் 14495—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டணம் பேரூராட்சியில் துருப்பிடித்துள்ள குடிநீர்க் குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் அமைக்க திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

82—

பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி மேலக்கொள்ளுக்காட்டு மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைத்தல்

வினா எண் 14766—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம் பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி மேலக்கொள்ளுக்காட்டிற்கு மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைத்துத் தர 1992-93-இல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பாதரங்கோட்டை வடக்கு ஊராட்சியிலுள்ள மேலக்கொள்ளுக்காடு கிராமத்தில் மயானக் கொட்டகை ஒன்று 1992-93-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் (25—ஊராட்சிப் பங்கு வேலைகள் திட்டத்தில்) ரூபாய் 106,270- மதிப்பீட்டில் வேலை மேற்கொள்ள தஞ்சாவூர் திட்ட அலுவலரால் (ஊரக வளர்ச்சி முகமை) உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

83—

துறையூர் கிராமத்தில் பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண் 15213— திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், துறையூர் கிராமத்தில் பாலர் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி மானூர் ஊராட்சி ஒன்றியம், துறையூர் கிராமத்தில் பாலர் பள்ளி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

84

மேட்டுபிராஞ்சேரி கிராமத்தில் சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 15263— திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம் மேட்டுபிராஞ்சேரி கிராம சுகாதார (Sub—Centre) நிலையத்தை நன்கு செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மேட்டுபிராஞ்சேரி கிராம துணை சுகாதார நிலையம், கங்கைகொண்டான் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை சேர்ந்தது. இந்த துணை சுகாதார நிலையத்தில் அனைத்து வசதிகளும் உள்ளது. இந்நிலையம் வாகனங்கள் செல்லும் சாலைக்கு சற்று தூரமாக தனியாக உள்ளதால் சுகாதார செவிலியர் இங்கு தங்கி பணி புரியவில்லை. மேலும் தற்போதுள்ள சுகாதார செவிலியர் மருத்துவ விடுப்பில் உள்ளதாலும், இந்நிலையம் மற்ற இடங்களிலிருந்து தூரமாக உள்ளதாலும் வேறு சுகாதார செவிலியருக்கு கூடுதல் பொறுப்பு வழங்க இயலவில்லை. இங்கு வேறு சுகாதார செவிலியரை பணிமாற்றம் செய்து அந்த துணை சுகாதார நிலையம் செயல்பட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

85—

தேவூர்-அரசராமணி நீர்த்தேக்கத் தொட்டிப் பணியை விரைந்து முடித்தல்.

வினா எண் 15353—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, தேவூர், அரசராமணி நீர்த் தேக்கத் தொட்டி பணி முடிக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது குடிநீர் வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்

(அ) மற்றும் (ஆ), சங்ககிரி தொகுதியில்: தேவூர் குடிநீர்த் திட்டத்தின் அனைத்து பணிகளும், நீர்தேக்கத் தொட்டி உட்பட முடிக்கப்பட்டு 10/91 முதல், குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அரசராமணி குடிநீர்த் திட்டத்தில் அனைத்துப் பணிகளும் நீர்தேக்கத் தொட்டி உட்பட முடிக்கப்பட்டு முதல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

1993 அக்டோபர் 26]

86—

கள்ளிப்பாளையம் ஆழ்குழாய்க் கிணற்றுக்கு மோட்டார் அமைத்தல்.

வினா எண் 15357— டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதி, கத்தேரி பஞ்சாயத்து, கள்ளிப்பாளையம் ஆழ்துளைக் கிணற்றுக்கு மோட்டார் வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சங்ககிரி தொகுதி, கத்தேரி பஞ்சாயத்து, கள்ளிப்பாளையம் ஆழ்துளைக் கிணற்றில் போதிய நீருற்று இல்லாததினால், அதில் மின் மோட்டார் வைக்க இயலாது.

87—

பரமக்குடி நகராட்சி கைகோலார் ஊரணி கழிவு நீரை அகற்றுதல்.

வினா எண் 15693— டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் கைகோலார் ஊரணியில் உள்ள கழிவு நீரை மோட்டார் மூலம் வெளியேற்ற 1991—92-ல் ஆன செலவு எவ்வளவு?

(ஆ) இந்த ஊரணியை மூடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி நகராட்சியில், கைக்கோலார் ஊரணியில் உள்ள கழிவு நீரை மோட்டார் மூலம் வெளியேற்ற 1991—92-ம் ஆண்டில் ரூ. 2,118-மும் 1992-93ஆம் ஆண்டில் ரூ. 6,027-மும் செலவிடப்பட்டது.

(ஆ) இந்த ஊரணி தற்போது மண் கொண்டு நிரப்பப் பட்டுவிட்டது.

88—

பரமக்குடி நகராட்சியிலுள்ள சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றுதல்.

வினா எண் 15712—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சியில் உள்ள சாலைகளைத் தார் சாலைகளாக மாற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பரமக்குடி நகராட்சிப் பகுதியில் உள்ள சாலைகளை தார் சாலைகளாக மாற்றி அமைக்க கடந்த 5 ஆண்டுகளில் மாநில அரசு சார்பாக ரூ. 7.52 லட்சமும், நகராட்சி சார்பாக ரூ. 50,000-மும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டது. மேலும் நகராட்சியில் சாலைகளைத் தார் தள சாலைகளாக மாற்ற 1993–94 ஆம் ஆண்டில் நகராட்சி வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 3.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சி பத்தாண்டு கால சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1991–92-ல் ரூ. 40,000 செலவில் பாரதி நகர் முருகன்கோவில் தெருவில் தார் தளம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

89—

பரமக்குடி-சாத்தனூர் கூட்டுக் குடிநீர் திட்டம்.

வினா எண் 16041— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எத்தனை கிராமங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது ?

(ஆ) தற்பொழுது எத்தனை கிராமங்களுக்குக் குடிநீர் கிடைக்கிறது ?

(இ) இத்திட்டம் முழுமையாக செயல்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

1993 அக்டோபர் 26]

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 56 குடியிருப்புகளுக்காக செயல்படுத்தப்பட்டது.

(ஆ) தற்போது இத்திட்டத்தினால் 8 குடியிருப்புகள் பயன்பெற்று வருகின்றன.

(இ) இத்திட்டத்தின் நீராதாரம் வைகை ஆற்றில் சிறசிக்கோட்டை கிராமத்திற்கு அருகில் அமைக்கப்பட்டு உள்ள நீர் உறிஞ்சு கிணறுகளாகும். இந்த கிணறுகளிலிருந்து கிடைக்கும் நீர் போதுமானதாக இல்லை. எனவே, குடிநீர் வழங்க இயலாத குடியிருப்புகளுக்கு உப்புநீரை குடிநீராக்கும் திட்டம் மூலம் (Desalination point) குடிநீர் வழங்க ஆய்வு நடைபெற்று வருகின்றது.

90—

பரமக்குடி நகராட்சி பாலன் நகரில் சாலைகள் அமைத்தல்.

வினா எண் 16414—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சி பாலன் நகரில் சாலைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு வேலைகள் துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பாலன் நகர் பகுதி, அரசு ஊரணி புரம்போக்கு நிலமாகும். இந்த ஊரணியில் பலர் வீடு கட்டிக் குடியிருந்து வருகின்றனர். இந் நகருக்கு அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ஏதும் இல்லை. எனவே இப்பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை சட்ட ரீதியாக மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது. வருவாய்த்துறையினரால் முறைப்படுத்தப்பட்ட பின்னர்தான் சட்ட ரீதியாக வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

91—

நகராட்சிப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்ட நிதி.

வினா எண் 16428—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்ட அரசு நிதி ஒதுக்கி உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வ கணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1-6-1986 முதல் நகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆசிரியரல்லாத பணியாளர்கள் கல்வித் துறையின் அதிகார வரம்பிற்கு மாற்றப்பட்டார்கள். நகராட்சியால் வசூல் செய்யப்படும் கல்வி வரியிலிருந்து (Education Tax) நகராட்சி பள்ளிக் கட்டிடங்கள் பராமரிக்கப்படுகின்றன. 1986-க்குப் பின் நகராட்சிப் பள்ளிக் கட்டிடம் பராமரிக்கப்படுவதற்கு அரசு மான்யம் ஏதும் வழங்கவில்லை.

92—

பரமக்குடி நகராட்சி தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் வடிகால் அமைத்தல்.

வினா எண் 16499—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் உள்ள 1992-93-ல் சீரமைக்கப்பட்ட சாலைகள் எத்தனை ?

(ஆ) தேசிய நெடுஞ்சாலையின் இரு புறமும் வடிகால் கட்ட அரசு நிதி ஒதுக்கியுள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வ கணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி நகராட்சியில் வெள்ள நிவாரணப் பணித் திட்டத்தின்கீழ் 4 சாலை வேலைகள் 0.77 கி.மீ. ரூ. 3.01

லட்சம் செலவிலும், பாதி கடன் மற்றும் பாதி மான்யத் திட்டத்தின் கீழ் 3 சாலை 0. 586 கி.மீ. ரூ. 2.26 லட்சம் மதிப்பீட்டிலும் சீரமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) பரமக்குடி நகராட்சிப் பகுதியில் தேசிய நெடுஞ் சாலையின் இருபக்கமும், கழிவு நீரை அகற்ற வடிகால் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

93—

பரமக்குடி தொகுதியில் ஆற்றங்கரையிலுள்ள போகலூர் ஒன்றிய கிராமங்களை நயினார்கோவில் ஒன்றியத்திற்கும் நயினார்கோவில் ஒன்றிய கிராமங்களை போகலூர் ஒன்றியத்திற்கும் மாற்றுதல்

வினா எண் 16846— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் ஆற்றின் அக்கரையில் உள்ள துரத்தியந்தல்,செவ்வூர் வடக்கு, மந்திவலசை, அரசடிவண்டல் ஆகிய கிராமங்களை போகலூர் ஒன்றியத்திலிருந்து நயினார் கோவில் ஒன்றியத்திற்கும், இக்கரையில் உள்ள கொல்லனூர் கிராமத்தை நயினார்கோவில் ஒன்றியத்திலிருந்து போகலூர் ஒன்றியத்திற்கும் மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மேற்சொன்னவாறு கிராமங்களை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

94—

கொத்தமங்கலத்தில் ஆதி திராவிடர் மாணவர் விடுதிக்குச் சொந்த கட்டிடம்

வினா எண் 4327— திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி, கொத்தமங்கலத்தில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி வாடகை கட்டிடத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், சொந்தமாக கட்டிடம் எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி கொத்தமங்கலத்தில் ஆதி திராவிட மாணவர் விடுதி கட்டுவதற்கான இடம் தயாராக இருப்பதாகத் தெரிய வருகிறது. இங்கு விடுதிக்கான கட்டிடம் கட்டுவது பற்றி நிதிநிலைக்கேற்பவும், வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

95—

ஆதி திராவிடர்களுக்கு வீடுகட்ட வழங்கிய கடனை அவ்வீடுகள் இடிந்துவிட்டதால் தள்ளுபடி செய்தல்

வினா எண் 12977—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையில் ஆதி திராவிடர்கள் வீடு கட்ட வாங்கிய ரூ. 6,000 கடனை வீடுகள் இடிந்து விட்டதால் தள்ளுபடி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

96—

நகர்ப்புறங்களில் ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக கடைகள் தருதல்

வினா எண் 14689—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களில் ஆதி திராவிடர்களுக்கு அரசால் இலவசமாகக் கடைகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இலலை.

97—

திருஉத்திரகோசமங்கை கோயிலை புதுப்பித்தல்

வினா எண் 10716—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருஉத்திரகோசமங்கை கோயிலை புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

ஆம்.

98—

பழனி மலையில் மேலும் ஒரு ரயில் வண்டியை இயக்குதல்

வினா எண் 13183—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி கோயிலின் மலையில் மேலும் ஒரு ரயில் வண்டி இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

99—

இராமநாதபுர மாவட்டத்திலுள்ள 108 கால் மண்டபக் கோயில்கள்

வினா எண் 15436—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் 108 கால் மண்டபம் உள்ள திருக்கோயில்கள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

ஏதுமில்லை.

100—

இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள திருக்கோயில்கள்

வினா எண் 15803—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரத்தில் உள்ள திருக்கோயில்கள் எத்தனை?

(ஆ) நயினார்கோயில், நாகநாதர் திருக்கோயில் ஆண்டு வருமானம் எவ்வளவு ?

(இ) பக்தர்களுக்காக நிர்வாகம் புதிதாக ஏற்படுத்தி உள்ள வசதிகள் யாவை ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள திருக்கோயில்கள் 79 ஆகும்.

(ஆ) பசலி 1401-ஆம் ஆண்டில் வருமானம் ரூ. 7,11,940.

(இ) 1. பக்தர்கள் தங்கி செல்ல இலவசமாக யாத்ரீகர்கள் விடுதி.

1993 அக்டோபர் 26]

2. கட்டண ஓய்வு விடுதி இரண்டு.

3. பக்தர்கள் உணவு அருந்துவதற்காக சாப்பிடும் இடம்.

4. முடி காணிக்கை செலுத்தும் பக்தர்களுக்காக தெப்பக்குளத்தில் நீர் இல்லாதபோது திருக்கோயிலில் குளிப்பதற்காக குழாய் மூலம் நீர் கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

5. மின்சாரத் தடை ஏற்படும்போது ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான மாற்று ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

6. பக்தர்கள் உடைமாற்றம் செய்வதற்காக ஓர் உடைமாற்றும் அறையும் கட்டித் தரப்பட்டுள்ளது.

7. தெப்பக்குளத்தில் (வாசுகி தீர்த்தம்) அதிக அளவில் தண்ணீர் சேகரித்து மராமத்துப் பணிகள் செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆறாம் பட்டியல்)

1—

இலங்கை திரும்பும் இலங்கைத் தமிழர்கள்

வினா எண் 4059—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு முதல அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இலங்கைத் தமிழர்கள் அனைவரும் பெயரைப் பதிவு செய்ய வேண்டும் எனக் கெடு கொடுத்தும் பதிவு செய்யாதவர்களைக் கண்டுபிடித்து அவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதல அமைச்சர் :

இவ்வரசு பதவியேற்றதிலிருந்து, இலங்கைப் போராளிக் குழுக்கள் குறிப்பாக விடுதலைப் புலி இயக்கத்தினர் மற்றும் அவர்களின ஆதரவாளர்கள் ஆகியோரின தீவிர நடமாட்டத்தையும், செயல்களையும் கட்டுப்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதில் ஓர் அங்கமாக அகதிகள் முகாம்களை விட்டு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள் அனைவரும் தங்கள் பெயர்களை அருகில் அமைந்து இருக்கும் காவல் நிலையத்தில் 5–7–1991-க்குள் பதிவு செய்து கொள்ளவேண்டுமாய், அரசின் பத்திரிக்கை விளம்பரங்களின் வாயிலாகவும், தொலைக்காட்சி மற்றும் வானொலி வாயிலாகவும் கேட்டுக் கொள்ளப் பட்டனர். பதிவு செய்யாத இலங்கைத் தமிழர்களை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு, மீண்டும் இருமுறை அதாவது 12–7–1991 வரையும் 19–7–1991 வரையும் தவணை கொடுக்கப் பட்டது. இவ்வாறு தங்கள் பெயர்களைப் பதிவு செய்வதற்கான காலக்கெடு 19–7–1991 வரைதான் என்று அறுதியிட்டுக் கூறப் பட்டது. இவ்விளம்பரங்களைத் தொடர்ந்து, தங்கள் பெயர்களைக் காவல் நிலையங்களில் பதிவு செய்த இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 27,187 ஆகும். இக் காலக்கெடுவிற்குப் பின்னர் அதாவது 19–7–1991-க்குப் பின்னர் பதிவு செய்யாத இலங்கைத் தமிழர்களைத் தேடும் பணி காவல் துறையினரால் தொடங்கப்பட்டது. இவ்வாறு பிடிபட்ட இலங்கைத் தமிழர்கள் இதற்கென மாவட்டங்களில அமைக்கப்பட்ட சிறப்பு முகாம்களில் பிணைக்கப்பட்டனர். அவர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அயல்நாட்டார் சட்டம் 1946 பிரிவு (3) (2)ன் கீழ் உரிய ஆணைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பிறப்பிக்கப்பட்டு பிணைக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாகச் சார்பு செய்யப் பட்டது. இவ்வாறு முதற் கட்டமாக சிறப்பு முகாம்களில் பிணைக்கப்பட்டோர் எண்ணிக்கை 1,500 ஆக இருந்தது.

1993 அக்டோபர் 26]

பின்னர் பிற அகதிகள் முகாம்களில் பதிவு செய்து விட்டு அம் முகாம்களில் இருந்து வெளியில் வந்தோர், இந்திய இலங்கை ஒப்பந்தங்களின்கீழ் இந்தியா திரும்பியவர்கள் எனக் கருதப்பட்ட வர்கள், காவல் துறையின் விசாரணைக்குப் பின்னரும் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரைகளின் பேரிலும், தாங்கள் பிணைக்கப் பட்டிருந்த முகாம்களை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப் பட்டனர்.

2. பின்னர் 3—9—92 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கடலோர பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு களுக்கிணங்க, தமிழகத்தில் மீண்டும் காவல் நிலையங்களில் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளாமல் அகதிகள் முகாமிற்கு வெளியில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நடமாட்டத் தைக் கட்டுப்படுத்தும்பொருட்டு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் 1—10—1992க்குள் தங்கள் பெயர்களை அருகா மையில் அமைந்துள்ள காவல் நிலையங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு அரசு கேட்டுக் கொண்டதுடன், அவ்வாறு பதிவு செய்து கொள்வதற்கான கடைசி நாள் 30—9—1992 என்றும் அறிவிக்கப்பட்டது. 1-10—1992 லிருந்து முகாம்களுக்கு வெளியில் வாழும் பதிவு பெறாத இலங்கைத் தமிழர்களைத் தேடும் பணி காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக 681 இலங்கைத் தமிழர்கள் தங்கள் பெயர்களை அருகாமையில அமைந்துள்ள காவல் நிலையங்களில 30-8-1992-க்கு முன்னர் பதிவு செய்துகொண்டுள்ளனர். பதிவு பெறாமல் முகாம்களுக்கு வெளியே வாழும் சுமார் 50 இலங்கைத் தமிழர் கள் காவல் துறையினரால் தேடி கண்டுபிடிக்கப்பட்டு இதற் கென அமைக்கப்பட்டுள்ள சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

3. தற்சமயம் இச்சிறப்பு முகாம்களில் பிணைக்கப்பட் டிருப்போர் எண்ணிக்கை சுமார் 200 ஆகும்.

4. பதிவு செய்யாது முகாம்களைவிட்டு வெளியே வாழும் சர்ச்சைக்குரிய இலங்கைத் தமிழர்களைத் தேடும் பணி காவல் துறையினரால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5. சிறப்பு முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் வேறு வகையான குற்றங்களில் ஈடுபடாமலிருந்து தங்கள் தாய் நாட்டிற்கோ அல்லது பிற வெளி நாடுகளுக்கோ செல்ல இசைவு தெரிவித்தால், அவர்களின் கோரிக்கை கியூ பிரிவு காவல் துறை யினரால் பரிசீலிக்கப்பட்டு தகுந்த ஆணைகள் அரசாங்கத்தால் வெளியிடப்படுகிறது.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2-

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இடமாற்றம் அரசு திட்டம்.

வினா எண் 13161—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குறைந்த பட்சமாக மூன்று ஆண்டுகள் மாற்றப்படாமல் இருக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதல் அமைச்சர்:

இல்லை.

3—

கும்பகோணம் மகாமகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு உதவித் தொகை.

வினா எண் 13169—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் மகாமகத்தில் காயமடைந்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) இறந்தவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு விட்டதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதல் அமைச்சர் :

(அ) 74 நபர்கள் காயமடைந்தனர்.

(ஆ) 48 நபர்கள் இறந்தனர்.

(இ) இறந்த 48 குடும்பத்தினருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 50,000 மும் மற்றும் பிரதம மந்திரியின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 20,000 மும் வழங்கப்பட்டது, மேலும் காயமடைந்த 74 பேர்களுக்கு

1993 அக்டோபர் 26]

முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 5,000-மும் பிரதம மந்திரியின் தேசிய நிவாரணநிதியிலிருந்து தலா ரூ. 5,000-மும் வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் இறந்தவர் குடும்பத்திற்கு மொத்தமாக ரூ. 70,000-மும் மற்றும் காயமடைந்தவர் குடும்பத்திற்கு மொத்தமாக தலா ரூ. 10,000-மும் வழங்கப்பட்டது.

4—

தேயிலைத் தோட்டம் அமைக்க குத்தகைக்கு விடப்பட் நிலங்கள்.

வினா எண் 1767—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் தேயிலைத் தோட்டம் அமைக்க தனியாருக்கு 99 வருடத்திற்கு விடப்பட்ட குத்தகை 1993-ல் முடிவடைவதால் மீண்டும் குத்தகைக்கு விடாமல் அத்தேயிலை தோட்டங்களை அரசுடைமையாக்கி கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

வால்பாறையில் உள்ள தேயிலைத் தோட்டங்கள் அனைத்தும் 1929, 1930 மற்றும் 1931-ம் ஆண்டுகளில் ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் ஆகும் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்கள் அல்ல, எனவே இவ்வினா எழவில்லை.

5—

தேயிலைத் தோட்டத்திற்கு நிலவரி வசூல்.

வினா எண் 9701—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் தேயிலைத் தோட்டங்களிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஏக்கருக்கு எத்தனை ரூபாய் நிலவரியாக வசூலிக்கப் படுகிறது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

தமிழகத்தில் தனியார் தேயிலைத் தோட்டங்கள் கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மட்டும் உள்ளன. தனியார் தேயிலைத் தோட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஏக்கருக்கு கீழ்க்கண்டவாறு நிலவரி முதலியவை வசூலிக்கப்படுகிறது—

கோவை மாவட்டம்—

	(ஒரு ஏக்கருக்கு ரூபாய்.)
(i) நிலவரி வளர்ச்சியடைந்த பகுதிக்கு ..	3.00
நிலவரி வளர்ச்சியடையாத பகுதிக்கு	0.63
(ii) தண்ணீர் வரி ..	15.00
(iii) தல வரி Local cess ..	0.45
தல வரி சர்சார்ஜ் Local cess surcharge ..	2.50

நீலகிரி மாவட்டம்—

	உதகை வட்டம்.	குன்னூர் மற்றும் கோத்தகிரி வட்டம்.
	(ரூபாய்)	(ரூபாய்)
(i) நிலவரி ..	2.00	3.00
(ii) தலவரி Local cess ..	0.90	1.35
(iii) தலவரி சர்சார்ஜ் Local cess surcharge	5.00	7.50

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

6—

கால்நடைப் பட்டிகள் அமைக்கும் திட்டம்.

வினா எண் 12672—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை வட்டம், ஒட்டங்காட்டில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை வட்டம், ஒட்டங்காட்டில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால்நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டுமொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதி நிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7—

மாடு அடைக்கும் பவுண்டு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 12674—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, புதுக்கோட்டை உளூரில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, புதுக்கோட்டை உளூரில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து

பழுதடைந்த கால்நடைப் பட்டிகளையும் பழுதுபார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதி நிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுதுபார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

அரசு நிலத்தை நீண்ட கால குத்தகைக்கு வழங்க அரசிடம் திட்டம்.

வினா எண் 12697—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை வட்டம், ஏரிப்புறக் கரையிலுள்ள சர்வே எண். 235/2இல் உள்ள 75 ஏக்கர் தரிசு நிலத்தை நீண்டகால குத்தகைக்கு வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைசசா:

இல்லை.

9—

இராஜா மடத்தில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 13584—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி பட்டுக் கோட்டை ஒன்றியம், இராஜா மடத்தில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைசசா:

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடத்தில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்

1993 அக்டோபர் 26]

நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால்நடைப் பட்டிகளையும் பழுதுபார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதி நிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

10—

குடிமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை.

வினா எண் 13749—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், குறிச்சியைச் சேர்ந்த மேட்டுவயல் இந்திரா நகரில் பல வருடங்களாக குளம் புறம்போக்கில் குடியிருந்து வருபவர்களுக்கு 1992–93இல் குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சியைச் சேர்ந்த மேட்டுவயல் இந்திரா நகரில் குடிமனைப் பட்டா வழங்கக் கோரும் நிலம் தடை செய்யப்பட்ட நீர்நிலைப் புறம்போக்காக இருப்பதால் பட்டா வழங்க இயலாது.

11—

மலைவாழ் மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்குதல்.

வினா எண் 15088—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ் செங்கம் தாலுக்கா அலுவலகத்திலேயே வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

அனைத்து மலை சாதியினருக்கும், பழங்குடியினருக்கும், சாதிச் சான்றிதழ்கள் வழங்கும் அதிகாரம் வருவாய் கோட்டாட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளதால் அவை கோட்ட அலுவலகங்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன. எனவே மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் செங்கம் வட்ட அலுவலகத்தில் வழங்க இயலாது.

12—

விவசாயிகளுக்குப் பட்டா பாஸ்புத்தகம் வழங்குதல்.

வினா எண் 15628—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு பட்டா பாஸ் புத்தகம் வழங்குவதற்கு கால வரையறை உள்ளதா?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): 1983-ம் வருட தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தக சட்டம் 1986 ஆம் வருடம் ஜனவரி மாதத்தில் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி ஒவ்வொரு நில உரிமைதாரருக்கும் வட்டாச்சியரால் பட்டா பாஸ் புத்தகம் வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. பட்டா பாஸ் புத்தகச் சட்டத்திற்கான விதிகளும் இயற்றப்பட்டுள்ளன. இவ்விதிகளில் பட்டா பாஸ் புத்தகம் பெறுவதற்கான கால வரையறைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

2. விதி 3 (1)-ன்படி வட்டாட்சியர் சொந்தமாக நிலம் வைத்திருப்பவர்களை பொறுத்தமட்டில், ஒவ்வொரு உரிமையாளருக்கும், இச்சட்டத்தின் கீழ் பட்டா விவரக் குறிப்பு புத்தகம் வழங்கப்படவுள்ளது என்று பொது மக்களுக்குத் தெரிவித்து, அப்பகுதிக்காக 1 (3) பிரிவின் கீழ், அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் ஒவ்வொரு

1993 அக்டோபர் 26]

கிராமத்திலும் படிவம் 1-ல் அறிவிப்பு வெளியிட வேண்டும் இச்சட்டத்தின் 3 (1) பிரிவின் கீழ் செய்து கொள்ளப்படும் விண்ணப்பம் படிவம் II-ல் இருக்க வேண்டும். இது அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்குள் அனுப்பப்பட மதிக்கப் இந்த விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ள அனு பட்டுள்ள கால அளவு 30 நாட்களாகும். வட்டாட்சியர் விண்ணப்பத்தை பெற்றுக் கொண்டு ஒப்புகை அளிப்பார். பின்னர் குறிப்பிட்ட நாளன்று வட்டாட்சியர் விசாரணை மேற்கொண்டு இச்சட்டத்தின் விதிகளுக்கிணங்க பட்டா விவரக் குறிப்புப் புத்தகம் ஒன்றை அந்த நில உரிமையாளருக்கு வழங்குவார்.

13—

வெள்ள நிவாரணத் தொகை வழங்குதல்.

வினா எண் 16127—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சீர்காழி தொகுதியில் வெள்ளம் ஏற்பட்டபோது வெள்ள நிவாரணத் தொகையாக முதல் கட்டம் எவ்வளவு வழங்கப்பட்டது?

(ஆ) இரண்டாம் கட்டமாக எவ்வளவு வழங்கப்பட்டது?

(இ) அதில் பயன் பெற்ற நபர்கள் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) முதல் கட்டமாக ரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டது.

(ஆ) இரண்டாம் கட்டமாக ரூ. 27,50,000 வழங்கப்பட்டது, மற்றும் மூன்றாம் கட்டமாக ரூ. 30,00,000 வழங்கப்பட்டது.

(இ) பயன் பெற்றவர்கள் 25,988 (குடும்பங்கள்).

14—

வைகை ஆற்றில் வெள்ளம்—அரசு நடவடிக்கை.

வினா எண் 16710—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டதால் வீடு இழந்தவர்கள் பகைவென்றி, துரத்தியேந்தன், செவ்லூர், கள்ளிக்கோட்டை கிராமங்களில் எத்தனை பேர் ?

(ஆ) அரசு வழங்கிய உதவிகள் பற்றிய விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி.சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) வீடு இழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 32.

(ஆ) துரத்தியேந்தன் மற்றும் கள்ளிக்கோட்டை கிராமங்களில் பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு அரசு நிவாரணமாக தலா ரூ. 250 வீதம் 19 நபர்களுக்கு ரூ. 4,750-வும் மற்றும் பகைவென்றி, செவ்லூர் கிராமங்களில் முழுவதும் சேதமடைந்த வீடுகளுக்கு தலா ரூ. 500 வீதம் 13 நபர்களுக்கு ரூ. 6,500 வழங்கப்பட்டுள்ளது. மொத்த நிவாரணத் தொகையாக ரூ. 11,250 வழங்கப்பட்டுள்ளது. இது தவிர பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணை வழங்கப்பட்டுள்ளது.

15—

புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்பவர்கள் மீது வழக்கு.

வினா எண் 19248—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்துள்ளவர்கள் மீது அரசு தொடுக்கும் வழக்குகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பவர்கள்மீது அவ்வப்போது துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர்கள், ஆட்சேபணையான ஆக்கிரமிப்புகளை கண்டுபிடித்து அப்புறப்படுத்த நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் விதிகளின்படி நடவடிக்கை எடுக்கின்றனர். உயர்ந்த அளவு தண்டத் தீர்வையும் விதிக்கின்றனர். ஆட்சேபகரமான ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும்போது அதனை எதிர்த்து, ஆக்கிரமிப்பாளர்கள் நீதிமன்றத்தில் அரசுக்கு எதிராக வழக்குகள் தொடுத்து, அப்புறப்படுத்தும் நடவடிக்கைக்குத் தடையாணையும் பெற்று விடுகின்றனர். எனவே நீதிமன்றத்திற்கு ஆக்கிரமிப்புக்காரர்கள் செல்வதைத் தடுக்கும் எண்ணத்துடன் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் III 1905-ற்குத் தகுந்த திருத்தம் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் ஆக்கிரமிப்புகளை மிக விரைவில் அகற்றுவதுடன் உரிமையியல் நீதி மன்றங்களுக்கு அவர்கள் செல்வதும் தடுக்கப்படும்.

16—

பேராவூரணி அரசு மருத்துவமனை அறுவை சிகிச்சைப் பிரிவுக்கு குளிர் சாதனப் பெட்டி மற்றும் நவீன சாதனங்கள் வழங்குதல்

வினா எண் 909—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி காமராஜர் அரசு மருத்துவமனை ஆபரேஷன் தியேட்டருக்கு குளிர் சாதனப் பெட்டி, கருவிகள், நவீன சாதனங்கள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பேராவூரணி காமராஜர் அரசு மருத்துவமனை அறுவை சிகிச்சை அரங்கிற்கு குளிர்சாதனப் பெட்டி கருவிகள் நவீன சாதனங்கள் வழங்க தற்போது அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

17—

அரசு மருத்துவமனையில் இருபாலாருக்கும் ஓரிடத்தில் சிகிச்சை.

வினா எண் 2146—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை ஆண்கள் பெண்கள் என்று தனித்தனியாக செயல்படுவது ஒன்றாக அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) தற்போது ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

18—

மாநகராட்சி மருத்துவமனைகளை அரசு பொது மருத்துவ மனைகளுடன் இணைக்கத் திட்டம்.

வினா எண் 4535—டாக்டர் எம். பி. சேகர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகராட்சி மருத்துவமனைகளை எல்லாம் மக்கள் நல்வாழ்வுத்துறை எடுத்துக்கொண்டு அவைகளை அரசு பொது மருத்துவமனைகளுடன் இணைத்து மாநகராட்சி மருத்துவ மனைக்ளை புறநோயாளிப் பகுதியாக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1993 அக்டோபர் 26]

19—

தாய்சேய் நல விடுதி அமைத்தல்.

வினா எண் 7152—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கோட்டைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு தாய்சேய் நலவிடுதி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

5,000 மக்கட் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற விதிமுறைகளின்படி, ஏற்கனவே கோட்டைக்காட்டுக்கு அருகில் உள்ள கரம்பக்காட்டில் ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது. கரம்பக்காடு துணை சுகாதார நிலையத்திற்குட்பட்ட மக்கட் தொகை 2,446 ஆகும்.

எனவே, மேலும் ஒரு துணை சுகாதார நிலையம் கோட்டைக்காட்டில் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

கரம்பக்காடு துணை சுகாதார நிலையத்தில் கீழ்வரும் கிராமங்களும் மக்கட் தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. கரம்பக்காடு	..	703
2. பூமுடிக்காடு	..	214
3. கந்தமனைக்காடு	..	429
4. எமலயல்	..	463
5. கோட்டைக்காடு	..	364
6. கொல்லன்கரம்பை		066
7. விளக்குவெட்டிக்காடு		210
மொத்தம்	..	2,449

20—

பிரதம சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 13464—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, காயாவூரில் பிரதம சுகாதார துணை நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

30,000 மக்கட் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி ஏற்கனவே திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தில் தேவைக்கு அதிகமாகவே இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதால் மேலும், ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை காயாவூர் கிராமத்தில் அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

21—

Introduction of women Auto Drivers

Question No. 3230—Thiru M. Sundardoss : Will the Hon'ble the Minister for Transport be pleased to state—

(a) Whether women auto drivers are being introduced in this state;

(b) whether any special conditions for them are prescribed; and

(c) the details thereof?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம். பெண் ஆட்டோ ஓட்டுநர் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளனர். மொத்தம் நாளது தேதி வரை 65 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) தனியாக விதிமுறைகள் ஏதும் வரையறுக்கப்பட வில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

22—

தனியார் கல்லூரி மாணவர்களுக்கு பஸ் கட்டண சலுகை.

வினா எண் 8823—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் கல்லூரி மாணவர்களுக்கு பஸ் கட்டண சலுகையை மீண்டும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

அரசால் அங்கீகரிக்கப்படாத தனியார் கல்லூரி மாணவர்களுக்கு பஸ் கட்டண சலுகை வழங்கும் செயற் குறிப்பு பரிசீலனையில் இல்லை.

23—

புதிய நகரப் பேருந்து வழித்தடம் விடுவதற்கு நடவடிக்கை.

வினா எண் 11954—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் இருந்து முதல்சேரி, பள்ளிகொண்டான், சேன்டாக் கோட்டை, தொக்காளிகாடு, மகிழங்கோட்டை, ராசாமடம், கீழத்தோட்டம், ஏரிப்புறக்கரை வழியாக அதிராம்பட்டினத்திற்கு 1992–93-ல் புதிய நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை—அதிராம்பட்டினம் வழி, முதல்சேரி, பள்ளிகொண்டான், சேன்டாக்கோட்டை, தொக்காளிகாடு, மகிழங்கோட்டை, ராசாமடம், கீழத்தோட்டம், ஏரிக்கரை தடத்தின் நீளம் 20 கி. மீ. பள்ளிகொண்டானில் இருந்து

மகிழங்கோட்டை வரை உள்ள சாலையும், ராசாமடத்தில் இருந்து ஏரிப்புறக்கரை வரை உள்ள சாலையும் பழுதடைந்து பேருந்து இயக்க தகுதியற்றதாக உள்ளது. இத்தடத்தில் பேருந்து இயக்க செயற் குறிப்பு ஏதும் தற்சமயம் இல்லை.

24—

வழக்கமாக இயங்கும் பேருந்து தடத்தை நீட்டிக்கத் திட்டம்.

வினா எண் 13631—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது புதுக்கோட்டையிலிருந்து கொத்தமங்கலம் செல்லும் 3-ம் நம்பர் நகரப் பேருந்தை கீரமங்கலம் வரை நீட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை கீரமங்கலம் வழி கொத்தமங்கலம் வழித்தடத்தின் நீளம் 37.6 கி. மீட்டராகும். இவ்வழித் தடத்தின் அனைத்துப் பகுதியும் பேருந்து வசதி பெற்றதாகும்.

வழித்தடத்தின் நீளம் அனுமதிக்கப்பட்ட 30.0 கிலோ மீட்டரைக் காட்டிலும் அதிகமாக இருப்பதால் புதுக்கோட்டையிலிருந்து கொத்தமங்கலம் வரை இயங்கும் நகரப் பேருந்தை கீரமங்கலம் வரை நீட்டிக்க இயலாது.

25—

சென்னைக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் பேருந்து விடுதல்.

வினா எண் 14742—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியிலிருந்து சென்னைக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் விரைவுப் பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியிலிருந்து சென்னைக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் விரைவுப் பேருந்து விட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

26—

போக்குவரத்துக் கழகத்தினரால் நடத்தப்படும் பயணிகள் தங்கும் கட்டிடங்கள்.

வினா எண் 16301—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விடுமுறைகளில் செல்வோர் வசதிக்காக முக்கியமான நகரங்களில் போக்குவரத்து கழகத்தினரால் கட்டப்பட்டுள்ள தங்கும் இடங்கள் எங்கெங்கு உள்ளன?

(ஆ) அங்கு வசூலிக்கப்படும் வாடகை மற்றும் வசதிகள் பற்றிய விவரங்கள் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர்:

(அ) விடுமுறையில் செல்வோர் வசதிக்காக கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் குற்றாலத்திலும், நேசமணி போக்குவரத்துக் கழகத்தால் பயணிகளின் வசதிக்கென கன்னியாகுமரி நவீன பேருந்து நிலையத்திலும், சேரன் போக்குவரத்துக் கழகத்தால் நீலகிரி மாவட்டம் உதகையிலும், ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தால் கொடைக்கானலிலும் தங்கும் இடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதர போக்குவரத்துக் கழகங்களில் இத்தகைய தங்கும் இடங்கள் கட்டப்படவில்லை.

(ஆ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 2-ம், நேசமணி போக்குவரத்துக் கழகம் சொகுசு அறைக்கு ரூ. 104.50-ம், தனி அறைக்கு ரூ. 82.50-ம் பொது அறைக்கு ரூ. 23-ம், சேரன் போக்குவரத்துக் கழகம் ரூ. 1-ம், ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் ரூ. 4-ம் வசூலித்து வருகின்றன.

[1993 அக்டோபர் 26

27—

நெசவாளர் சங்கங்களில் கொள்முதல் செய்த சரக்குகளின் விவரம்.

வினா எண் 14591—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மற்றும் எமனேஸ்வரத்தில் உள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் தேங்கியுள்ள சரக்குகளில் கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்த சரக்குகளின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மற்றும் எமனேஸ்வரம் ஆகிய இடங்களில் செயல்படும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தேங்கியுள்ள சரக்குகளில் ரூ. 84,26,000 மதிப்புள்ள 23,406 சேலைகளை மாநில சங்கமாகிய கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்துள்ளது. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு :—

மாதம்.	கொள்முதல் (சேலைகள்).	மதிப்பு. ரூ.
1. ஏப்ரல் 1992	600	2,16,000
2. மே 1992	..	..
3. ஜூன் 1992	4,500	16,20,000
4. ஜூலை 1992	6,700	24,12,000
5. ஆகஸ்ட் 1992	675	2,43,000
6. செப்டம்பர் 1992	..	..
7. அக்டோபர் 1992	8,456	30,44,000
8. நவம்பர் 1992	..	..
9. டிசம்பர் 1992	2,475	8,91,000
	23,406	84,26,000

1993 அக்டோபர் 26]

மேலும் கோ-ஆப்டெக்ஸ் தனது விற்பனை நிலையங்களில் தேவைக்கு ஏற்பவும் மற்றும் சங்கங்களின் சரக்கு இருப்பிற் கேற்பவும் சேலைகள் அவ்வப்போது கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

28—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள காலனி வீடுகள்.

வினா எண் 16408—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி எமனேஸ்வரம் பகுதியில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள காலனி வீடுகள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

பரமக்குடி எமனேஸ்வரம் பகுதியிலுள்ள நெசவாளர்களுக்கு 1985-86 ஆம் ஆண்டு முதல் 1990-91 வரையிலான காலத்திற்கு 603 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 1991-92-ல் இப்பகுதியில் பரவலாக வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 69 வீடுகளும், தொகுப்பு வீடுகள் திட்டத்தின் கீழ் 40 வீடுகளும் கட்ட கட்டுமானப் பணி துவக்கப்பட்டுள்ளது.

29—

நெடுஞ்சாலையைப் பராமரிக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 13254—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி கோட்டம், சீதாம் பாள் புரத்திலிருந்து இடையாத்தி வழியாக கறம்பக்குடி செல்லும் நெடுஞ்சாலையை 1992-93-ல் பராமரிக்க அரசிடம் செயல் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சிதாம்பாள்புரத்திலிருந்து இடையாத்தி வழியாக கரம்பக்குடி செல்லும் சாலையானது நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் பூவாரூர் - நெய்வேலி சாலை கி.மீ. 0/0 - 16/8 ஆகும். இச்சாலையில் கி.மீ. 4/0 – 5/0, 9/0 - 10/0 ஆகிய பகுதிகள் 1992-93 ஆண்டு காலமுறை தார் புதுப்பிக்கும் பணியாகவும் கி.மீ. 2/0-3/0 வரை உள்ள பகுதி வெள்ள நிவாரணப் பணியில் 1993-ல் தார் தளம் புதுப்பிக்கப்படவுள்ளது. மேலும் இச்சாலையில் கி.மீ. 1/2, 6, 9, 10, 3/2, 8, 6/4, 6, 8/0,–9/0 ஆகிய பகுதிகளை பழுதற்ற சாலைகள் திட்டத்தில் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதிகளை நிதிநிலைக் கேற்ப புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

30—

கோயம்புத்தூரில் அடுக்குமாடி வீடுகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை.

வினா எண் 15215—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கு அடுக்கு மாடி வீடுகள் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கோவை நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் சுமார் 23,000 குடும்பங்கள் குடிசைப் பகுதியில் வசிப்பதாக கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளது. கோவையில் உள்ள குடிசைப் பகுதிகளில் 2,500 அடுக்கு மாடி குடியிருப்புகளும், 2,500 தொகுப்பு வீடுகளும், ரூ. 1,350 இலட்சங்கள் செலவில் கட்ட

திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் 1993-94 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று 1998—99-க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் வரைபட ஒப்புதல் பெற்று ஹட்கோவிடம் கடன் வசதி பெற்றவுடன் பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

31—

வேளாண்மைத் துறை ஆழ்துளைக் கிணறுகள் வடிகால் வாரியததிற்கு மாற்றம்,

வினா எண் 1692—டாக்டர் எஸ். சுந்தரராஜ்; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[அ) வேளாண்மைத்துறை மூலம் ஏற்படுத்தப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளில் உபயோகமற்று இருக்கும் ஆழ்த் துளைக் கிணறுகளின் தண்ணீரைக் குடிநீருக்குப் பயன்படுத்த வேளாண்மைத் துறையிலிருந்து குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு, கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்;

(அ) ஆம்.

(அ) வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளில பாசனத்திற்கு போதுமான தண்ணீர் கிடைக்காத காரணத்தால் கீழ்க்காணும் இடங்களில் அமைக்கப்பட்ட 12 ஆழ்துளைக் கிணறுகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைப்பது குறித்த செயற்குறிப்பு காமராசர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியாளர்களின் பரிசீலனையில் உள்ளது.

சமுதாய கிணறு உள்ள கிராமம் (1)	கிணற்றின் வகை (2)	வட்டம் மாவட்டம். (3)
1. உசிலங்குளம் ..	குழாய் கிணறு	திருச்சுழி, காமராசர்.
2. நல்லுக்குறிச்சி ..	குழாய் கிணறு	ஷ்டி
3, அம்மன் கோவில் பட்டி.	திறந்த வெளிக் கிணறு.	விருதுநகர், காமராசர்.

4. மனைவியேந்தல் ..	குழாய் கிணறு	அருப்புக்கோட்டை-காமராசர்.
5. தோணுகால் ..	குழாய் கிணறு	ஷை
6. இராமானுஜபுரம்	திறந்தவெளிக் கிணறு.	ஷை
7. ஆண்மைப் பெருக்கி	குழாய்க் கிணறு	ஷை
8. கம்பாளி ..	குழாய் கிணறு	ஷை
9. நீராவிப்பட்டி ..	திறந்தவெளிக் கிணறு.	சாத்தூர், காமராசர்.
10. வாடியூர் ..	திறந்தவெளிக் கிணறு.	விருதுநகர், காமராசர்.
11. கருவக்குடி ..	குழாய் கிணறு	திருச்சுழி, காமராசர்.
12. மனவிடுதி ..	குழாய் கிணறு	புதுக்கோட்டை, புதுக்கோட்டை.

32—

கொட்டாரம் பழத்தோட்டத்தில் கன்றுகள் விற்பனை மூலம் கிடைத்த லாபம்.

வினா எண் 17506—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுக்குச் சொந்தமான கொட்டாரம் பழத்தோட்டத்தில் 1991-92-ல் கன்றுகள் விற்பனை மூலம் கிடைத்த லாபம் எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

அரசுக்குச் சொந்தமான கன்னியாகுமரி, கொட்டாரம் பழப் பண்ணையில் மா, கொய்யா, சப்போட்டா போன்ற பழச்

1993 அக்டோபர் 26]

செடிகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு பழச் செடிகள் விநியோகம் செய்து அதன் மூலம் ரூ. 2.05 லட்சம் நிகர லாபம் பெறப்பட்டது. அதன் விபரம் :

	(ரூபாய் இலட்சத்தில்.)
1991-92ஆம் ஆண்டில் உற்பத்திச் செலவினம் ..	6.50
1991-92ஆம் ஆண்டில் பழச்செடிகள் விற்பனை மூலம் மொத்த வரவு.	8.55
ஆண்டு நிகர லாபம் ..	2.05

33—

கால்நடைகளைப் பராமரிக்க அரசு எடுத்த நடவடிக்கை.

வினா எண் 16265—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கால்நடைகள் அதிகமாக எந்தெந்த மாவட்டங்களில் உள்ளன ?

(ஆ) அவற்றை பராமரிக்க 1992-93-ல் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் :

(அ) திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, சேலம், தஞ்சாவூர், செங்கை-எம்.ஜி.ஆர். ஆகிய மாவட்டங்களில் கால்நடைகள் அதிகமாக உள்ளன.

(ஆ) கால்நடைப் பராமரிப்புத்துறை, கால்நடைகள் நலம் காக்கும் பொருட்டு மேற்படி மாவட்டங்களில் 14 பிரதம மருத்துவமனைகளையும், 24 மருத்துவ பெருமனைகளையும், 342 கால்நடை மருந்தகங்களையும், 25 நடமாடும் கால்நடை மருந்தகங்களையும், 5 கால்நடை நோய் புலனாய்வுக் குழுக்களையும் மற்றும் 875 கால்நடை கிளை நிலையங்களையும் நிறுவி பணியாற்றி வருகின்றது. நடமாடும் மருத்துவமனை வாயிலாக மிகவும் பின்தங்கியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு

சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோய் புலனாய்வுக் குழுவின் மூலம் நோய் கிளர்ச்சியைக் கண்டறிந்து தக்க நேரத்தில் நோய் தடுப் பூசி போட தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் தேவைக்கேற்ப புதிய கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

தவிர, இம்மாவட்டங்களில் உள்ள பசுக்கள், எருமைகளுக்கு செயற்கைமுறை இனவிருத்திப் பணியை மேற்கூறிய நிலையங் கள் (கால்நடை நோய் புலனாய்வுக்குழு நீங்கலாக) மூலமாக இயங்கி வருகிறது.

மேற்படி 5 மாவட்டங்களில் 1992-93-ம் வருட பணி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

பணி விவரங்கள்—1992-93.

(1)	செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். (2)	தென் ஆற்காடு. (3)	திருச்சி. (4)	சேலம். (5)	தஞ்சாவூர். (6)
1. சிகிச்சை அளிக்கப்பட்டது ..	10,50,339	12,50,705	12,26,110	18,59.891	9,08,943
2. ஆண்மை நீக்கம் செய்யப் பட்டவை ..	26,249	53,660	59,422	1,24,568	35,619
3. குடற்புழு நீக்கம் செய்யப் பட்டது ..	5,17,417	10,39,350	6,59,775	13,68,873	2,96,248
4. தடுப்பூசி போடப்பட்டது ..	13,25,167	17,52,517	9,50,333	21,07,598	10,55,454
5. செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டது ..	1,00,474	2,29,870	2,71,239	1,93,355	1,50,545
6. கன்றுகள் பிறப்பு ..	22,617	70,868	65,791	86,776	34,013

1993 அக்டோபர் 26]

34—

கால்நடை மருந்தகம் திறக்கும் திட்டம்.

வினா எண் 19558— திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

''ஓசூர் வட்டம், மேகமலை ஊராட்சிக்குட்பட்ட சாமல் பள்ளம் கிராமத்தில் கால்நடை மருந்தகத்தைத் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா''?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் :

ஓசூர் வட்டம், மேகமலை ஊராட்சிக்குட்பட்ட சாமல் பள்ளம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் திறக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

35—

இடையாத்தி கால்நடை மருத்துவமனைக் கட்டிடத்தில் மருத்துவ மனை தொடங்குதல்.

வினா எண் 19679—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தியில் கட்டப்பட்ட கால்நடை மருத்துவமனைக் கட்டிடத்தில் மருத்துவமனை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி கிராமத்தில் கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம் கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது. விரைவில் புதிய நிரந்தர கட்டிடத்திற்கு கால்நடை மருந்தகம் மாற்றப்படும்.

36—

பணி நிமித்தமாய் நிகழும் பிரயாணங்களுக்கு பயணப்படி வழங்குதல்.

வினா எண் 7458—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவுப் பணி நிமித்தமாய் நிகழும் பிரயாணங்களுக்கு உரியப் பயணப்படி அரசு நிதியில் முழுமையாக வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

பணி நிமித்தமாய் நிகழும் பிரயாணங்களுக்கு உரிய தொகையை சில்லரைச் செலவினத்திற்கு அனுமதிக்கப்பட்ட ரூ. 20-லிருந்து செலவு செய்யலாம்.

37—

வடுகபாளையத்தில் சத்துணவு மையம் அமைக்க திட்டம்.

வினா எண் 11204—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் வடுகபாளையத்தில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, வடுகபாளையத்தில் குழந்தைகள் நல மையம் இயங்கி வருகிறது. 50 குழந்தைகள் உணவருந்தி வருகிறார்கள். எனவே, புதிய மையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

1993 அக்டோபர் 26]

38—

வாரம் ஒரு நாள் விடுமுறை சத்துணவுக் கூடத்திற்கு அரசு திட்டம்.

வினா எண் 12511—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாரம் ஒரு நாள் சத்துணவு போடுவதை நிறுத்தினால் அதன் மூலம் ஒரு ஆண்டில் மிச்சமாகும் தொகை எவ்வளவு ?

(ஆ) வார விடுமுறை நாட்களில் பெரும்பாலான குழந்தைகள் சத்துணவு சாப்பிட வராததை கருத்தில் கொண்டு குறைந்த பட்சம் வாரம் ஒரு நாள் சத்துணவு வழங்குவது நிறுத்தப்படுமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) வாரம் ஒரு நாள் குழந்தைகள் மையங்களில் குழந்தைகளுக்கு உணவு வழங்குவதை நிறுத்தினால் அதன் மூலம் ஒரு ஆண்டில் (52 வாரங்கள்) மிச்சமாகும் தொகை ரூ. 446 லட்சங்களாகும்.

(ஆ) ஆண்டு முழுவதும் குழந்தைகள் நல மையங்களில் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்க வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கை முடிவாகும். எனவே, வாரம் ஒரு நாள் சத்துணவு வழங்குவதை நிறுத்தும் எண்ணம் அரசிற்கு இல்லை. எனினும், விடுமுறை நாட்களில் பயனடையும் குழந்தைகளின் எண்ணிக்கை தனியே கணக்கிடப்பட்டு, அதற்கேற்றவாறு மானியம் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

39—

அனைத்து குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்க அரசு நடவடிக்கை.

வினா எண் 12773—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, சாமியார்பேட்டை சத்துணவு மையத்தில் மீனவர்களின் 150 குழந்தைகளுக்கு சத்துணவு கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) இப்போதுள்ள திட்டங்கள்படி ஆங்காங்கே எந்தக் குழந்தையும் விடுபடாமல் பலன்பெற ஆணையிடப்பட்டுள்ளது. மீனவக் குழந்தைகளுக்கென்று தனியாக திட்டமேதுமில்லை.

(ஆ) எழவில்லை.

40—

சத்துணவுக் கூடங்களில் குழந்தைகளுக்கு மருத்துவர்கள் மூலம் பரிசோதனை.

வினா எண் 15087—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவுக் கூடங்களில் உள்ள குழந்தைகளுக்கு மருத்துவர்கள் மூலம் பரிசோதிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ? தடுப்பு ஊசிகள் போடப்படுகிறதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

சத்துணவுக் கூடங்களில் பயனடையும் குழந்தைகளின் மனம், உடல் வளர்ச்சிக்கு சுகாதாரத்தின் அவசியம் கருதி, ஆரம்ப சுகாதார மைய மருத்துவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் மூலம் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு உரிய கவனிப்பு குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்ட மையங்களில் மருத்துவ அலுவலர் மூலம் பரிசோதனை செய்யப்படுகிறது. தடுப்பூசிகளும் போடப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

41—

கிராமங்கள்தோறும் சத்துணவு மையம் ஏற்படுத்தும் திட்டம்:

வினா எண் 15781—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ், ஜனத்தொகை அதிகம் உள்ள, சத்துணவு மையங்கள் இல்லாத குக்கிராமங்களில் சத்துணவு மையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

ஜனத்தொகை எவ்வாறு இருப்பினும், குறிப்பிட்ட கிராமத்தில் சத்துணவு மையங்களில் பயனடையத் தகுதி வாய்ந்த 2 முதல் 4 வயது முடியவுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்படுகிறது. அவ்வாறான எண்ணிக்கை 25-க்கு குறையாமல் இருந்தால், அந்த கிராமத்தில் சத்துணவு மையம் இயங்க அனுமதி வழங்கப்படுகிறது.

42—

சத்துணவு மையத்திற்கு புதிய கட்டிடம்.

வினா எண் 16124—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியம் கும்மங்குளம் கிராமத்தில் சத்துணவு மையத்திற்கு கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

தேவையான அனைத்து இடங்களிலும் இத்தகைய அபிவிருத்திகளை, நன்கொடைகள் மூலமும் அரசு ஏற்கனவே ஒதுக்கியுள்ள தொகைகளைப் பயன்படுத்தியும் செய்து கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

43—

சத்துணவுக்கூடம் கட்டித்தர அரசு திட்டம்.

வினா எண் 16602—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம் சொக்காங்கொல்லை காலனியில் சத்துணவுக்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நன்கொடைகளையும், அரசு ஏற்கனவே ஒதுக்கியுள்ள நிதிகளையும் பயன்படுத்தி ஆவன செய்ய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

44—

புதிய சத்துணவுக் கூடங்கள் அமைக்க அரசு பரிசீலனை

வினா எண் 16612—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம் மிராளூர் ஆதிதிராவிடர் பகுதியில் சத்துணவுக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின்கீழ் தேவைக்கேற்ப, ஆய்வு செய்து புதிய சத்துணவுக் கூடங்கள் அமைப்பது பரிசீலிக்கப்படும்.

1993 அக்டோபர் 26]

45—

குப்பத்தேவன் நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 6896— திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் நடுநிலைப்பள்ளிக்கு போதுமான ஆசிரியர்கள் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் உள்ள மாணவர் பதிவு வருகை மற்றும் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை பரிசீலிக்கப்பட்டு அப்பள்ளிக்குக் கூடுதலாக அதே ஒன்றியத்தில் உபரியாக உள்ள 3 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை ஆசிரியர்களுடன் வரும் 1993-ஆம் ஆண்டு பொது மாறுதலின் போது மாற்ற உரிய ஆணை வழங்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

46—

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செயல்பட அரசு திட்டம்.

வினா எண் 7839— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மாநில விளையாட்டு வாரியத்தின் தற்பொழுதுள்ள பொது மேலாளர், மேலாளர் பதவிகளை நீக்கி விட்டு அவர்கள் செய்யும் பணியினை விளையாட்டுத் துறையின் துணை இயக்குநரும் உதவி இயக்குநர்களும் செய்கின்றவாறு நிர்வாகத்தை திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் மற்றும் இளைஞர் விளையாட்டுப் பயிற்சித்துறை ஆகிய இரண்டையும் இணைத்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் என ஒரே அலுவலகமாக செயல்பட இருப்பதால் மேலாளர் மற்றும் துணை இயக்குநர்கள் தனித்தனி பதவிகளில் பணிபுரிவர்.

47—

தொடக்கப்பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமிக்கத் திட்டம்.

வினா எண் 13228—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, மானியக்காடு தொடக்கப்பள்ளிக்குப் போதிய ஆசிரியர்கள் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

48—

புதிய கட்டிடம் அரசு மேல்நிலைப்பள்ளிக்குக் கட்டும் திட்டம்.

வினா எண் 15569—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி வட்டம், குருவிக்கரம்பை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு 1992-93-ல் புதிய கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

1993 அக்டோபர் 26]

49—

மேல்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்

வினா எண் 15572—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் மேல்நிலைப்பள்ளிக்கு 1992-93-ல் புதிய கூடுதல் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

50—

பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்தல்.

வினா எண் 16638—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதியில் சுற்றுச்சுவர் இல்லாத பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு சிறப்பு நிதி ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

சுற்றுச்சுவர் இல்லாத அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்ட 1993-94-ம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை, எனினும், அவசியம் சுற்றுச்சுவர் தேவைப்படும் பள்ளிகளுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு பெறப்படின், அக்கருத்துரு அரசின் நிதி வசதியைப் பொறுத்து பரிசிலிக்கப்படும்.

[1993 அக்டோபர் 26

51—

முட்டம் பள்ளியைப் பழுது பார்க்க அரசின் திட்டம்.

வினா எண் 16762—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதி, முட்டம் கிராமத்தில் உள்ள பள்ளியைப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பழுது பணி மேற்கொள்வது பற்றி கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

52—

மின் கட்டணம் செலுத்தாததால் மின்சாரம் துண்டித்தல் அரசு நடவடிக்கை.

வினா எண் 169—திரு. ஏ. டி. செல்லச்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் அனைத்து ஊராட்சிகளிலும் நிதி வசதியின்றி மின்கட்டணம் கட்டாததால் குடிநீர் வழங்கும் மின் இயந்திரங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஒட்டன்சத்திரம் தொகுதியில் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஊராட்சிகளில் மின் இணைப்புகள் எந்த ஊராட்சிகளிலும் துண்டிக்கப்படவில்லை. ஆனால் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில்

1993 அக்டோபர் 26]

பொது நிதியிலும் ஊராட்சிகளின் தொகுப்பு நிதியிலும் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தை முன்னிட்டு மின் கட்டணம் செலுத்தப்படாததால் 16—7—1991-ம் தேதியன்று மேற்படி ஒன்றியத்தின் பல ஊராட்சிகளின் மின் இணைப்புகள் துண்டிக்கப் பட்டுவிட்டன. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு 18—7—1991-ம் நாளன்று மின் கட்டணம் செலுத்தப்பட்டு மேற்படி ஒன்றிய அனைத்து ஊராட்சிகளிலும் மின் சப்ளை செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் உடனடியாக சீர் செய்யப் பட்டது.

53—

கைப்பம்பு, பவர் பம்பு பராமரிக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 3897— திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் (அண்ணா மாவட்டம்) ஊராட்சி ஒன்றியத்திற்கு கைப்பம்பு, பவர் பம்பு பராமரிப்பு செலவினத் தொகையில் அரசு வழங்க வேண்டிய மானியத் தொகையில் வழங்கியத் தொகை போக மீதம் வழங்க வேண்டிய மானியத் தொகை வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு கைப்பம்பு, பவர் பம்பு, பராமரிப்பு செலவினத் தொகையில், அரசு வழங்கிய மான்யம் போக எஞ்சிய செலவினத் தொகையை மான்யமாக வழங்க இயலாது. இத்தொகையை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(ஆ) வினா எழவில்லை.

54—

குடிநீர்த் கட்டுப்பாடுகளை நீக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 4858— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், உச்சி பொத்தை கிராமத்தில் வாழும் அருந்ததியர் மக்கள் குடிநீர் சரிவர கிடைக்காமல் சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அடிபம்பு போட்டு குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், உச்சி பொத்தை கிராமத்தில் அருந்ததியர் குடியிருப்பில் 1991-92-ம் ஆண்டு சிறப்பு குடிநீர் திட்டத்தின் கீழ் ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கெனவே உள்ள 3 ஆழ் குழாய் கிணறுகள் மூலம் குடிநீர் சரிவர வழங்கப்பட்டு வருகிறது.

55—

பகுதி நேர எழுத்தர்களை நிரந்தர ஊழியர்களாக்கும் திட்டம்

வினா எண். 5293— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகளில் பகுதி நேர எழுத்தர்களாக (பஞ்சாயத்து கிளார்க்) பணிபுரிவோர் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எவ்வளவு ?

(ஆ) நிரந்தர ஊழியர்களாக நியமிக்க கோரி அவர்களிடமிருந்து அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(ஈ) அவற்றின் மீது அரசு பரிசீலித்து எடுத்துள்ள முடிவு என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ)	1. திருவண்ணாமலை—சம்புவராயர்	314
	2. சேலம்	584

3.	மதுரை	410
4.	திண்டுக்கல்—அண்ணா	257
5.	பசும்பொன் முத்துராமலிங்க தேவர். ..	280
6.	வடாற்காடு—அம்பேத்கார் ..	471
7.	ராமநாதபுரம்	308
8.	திருநெல்வேலி—கட்டபொம்மன்	365
9.	பெரியார்	271
10.	தென்னாற்காடு	1,141
11.	சிதம்பரனார்	301
12.	நீலகிரி	24
13.	கோயம்புத்தூர்	328
14.	தர்மபுரி	455
15.	செங்கல்பட்டு-எம். ஜி. ஆர். ..	828
16.	புதுக்கோட்டை	279
17.	காமராசர்	317
18.	தஞ்சாவூர்	923
19.	திருச்சிராப்பள்ளி	620
		8,676

(ஆ) ஊராட்சி உதவியாளர்களை நிரந்தர ஊழியர்களாக்குவது குறித்து தனிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் அரசுக்கு வரவில்லை.

(இ) மற்றும் (ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

56—

பழுதடைந்த கட்டிடம் புதுப்பிக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 5465— திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மங்களூர் தொகுதிக் புதுகுளம் கிராமத்தில ஆரம்பப் பள்ளிக் கட்டிடம் இடிந்து விட்டதால் மாணவர்கள் அருகில் உள்ள பஞ்சாயத்து கட்டிடத்தில் படித்து வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஆரம்பப் பள்ளிக் கட்டிடம் கட்டித்தர அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மங்களூர் தொகுதி, புதுக்குளம் கிராமத்தில் பழுதடைந்த கட்டிடத்திற்குப் பதிலாக புதிய கட்டிடம் ரூ. 1.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட ஏற்கனவே 1992-93-ம் ஆண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

57—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பழுதுபார்க்கத் திட்டம்.

வினா எண் 6590— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செந்தலைவயலில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பழுதுபார்த்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், செந்தலைவயலில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல நிலையில் இயங்கி வருவதால், இதுபற்றி செயற்குறிப்பு ஏதும் இல்லை.

58—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மயான வசதி செய்து வழங்க அரசு நடவடிக்கை.

வினா எண் 7365—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, நடுமனைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு மயானச் சாலை ஆக்கிரமங்களை அப்புறப்படுத்தி மயான சாலை அமைத்து தகர கொட்டகை அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் ;

இல்லை. 1993-94-ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் நடுமனைக்காடு ஆதி திராவிடர்களுக்கு மயானச்சாலை ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்தி மயானச் சாலை அமைத்து தகர கொட்டகை அமைத்து தருவதற்கு முன்னுரிமை அளித்து செய்வதற்கு பேராவூரணி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு தக்க அறிவுரைகள் மாவட்ட ஆட்சித்தலைவரால் வழங்கப்பட்டுள்ளது.

59—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பள்ளிக்குப் புதிய கட்டிடம்.

வினா எண் 7402—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புக்கரம்பை ஊராட்சி, மேற்குடிகாடு ஓராசிரியர் பள்ளிக்கு கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், புக்கரம்பை ஊராட்சி, மேற்குடிகாடு ஓராசிரியர் பள்ளிக்கு 1991-92-ல் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

60—

ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவிப்பொறியாளர் நியமிக்கும் திட்டம்.

வினா எண் 7554—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சிகளின் தெருவிளக்குகளை பராமரிக்க ஒன்றியத்திற்கு ஒரு உதவிப்பொறியாளர் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஊராட்சிகளின் தெருவிளக்குகளை பராமரிக்க ஒன்றியத்திற்கு ஒரு உதவிப் பொறியாளர் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

61—

கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் கூடுதல் பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதவற்கு அரசு நடவடிக்கை.

வினா எண் 7776—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியத்திற்குட்பட்ட துவார், புனக்குளம், மட்டங்கால், மெய்குடிபட்டி, வேலாடிப்பட்டி, வெள்ளாளவிடுதி போன்ற கிராமங்களில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அப்பணி செயல்படுத்தப் படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மட்டங்கால் மற்றும் மெய்குடிப்பட்டி ஆகிய இடங்களில் மாணவர்களின் சராசரி வருகைக்கு போதிய இடம் இருப்பதால் தற்போது கூடுதல் பள்ளிக்கட்டிடம் கட்டத் தேவையில்லை.

(ஆ) துவார், புனக்குளம், வெள்ளாளவிடுதி, வேலாடிப்பட்டி ஆகிய கிராமங்களில் கூடுதல் பள்ளிக்கட்டிடங்கள் கட்ட, நிதி நிலைமையைப் பொறுத்து நடவடிக்கை பின்னர் மேற்கொள்ளப் படும்.

62—

வரட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்குத் திட்டம்.

வினா எண் 8089—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி அருகே வரட்டாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி அருகே வரட்டாற்றின் குறுக்கே பாலம் கட்ட தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

63—

சாலை விளக்கு வசதிகள் செய்ய அரசு நடவடிக்கை.

வினா எண் 19868—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணி ஒன்றியம், எம். ஜி. ஆர். நகரில் உள்ள மக்களுக்கு சாலை விளக்கு வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆரணி ஒன்றியம், எம். ஜி. ஆர். நகரில் உள்ள சாலைகளில் 25 மின்கம்பங்கள் நடப்பட்டு அதில் 2 கம்பங்கள் மட்டும் மெர்குரி விளக்குகள் போடப்பட்டுள்ளது. மீதமுள்ள 23 கம்பங்களில் 13 விளக்குகள் பொருத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

64—

தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கூடுதல் பள்ளிக்கட்டிடம் அமைத்தல்.

வினா எண் 12054—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம், குப்பத்தேவனில் 1992-93-ல் பள்ளிக்கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், குப்பத்தேவன் கிராமத்தில் 1991-92-ல் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் கூடுதல் பள்ளிக்கட்டிடம் ரூ. 1,38,000 மதிப்பீட்டில் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

65—

பள்ளிக்கட்டிடம் கட்ட அரசு திட்டம்.

வினா எண் 12056—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் செந்தலைப்பட்டிணத்தில் 1992-93-ல் பள்ளிக்கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் நகராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செந்தலைப்பட்டிணத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட 1992-93-ம் ஆண்டில் திட்டம் ஏது மில்லை.

66—

பெரியநாயகிபுரத்தில் வானொலிப்பெட்டி, தொலைக் காட்சிப் பெட்டி வழங்குதல்.

வினா எண். 12336—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பெரிய நாயகிபுரம் ஆதி திராவிடர்களுக்கு 1992-93-ல் வானொலிப் பெட்டியும், தொலைக்காட்சிப் பெட்டியும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(1) பெரியநாயகிபுரம் ஆதி திராவிடர் குடியிருப்பில் தற்போது ஒரு வானொலிப் பெட்டி உள்ளது.

(2) தொலைக்காட்சிப் பெட்டி இக் குடியிருப்பின் அருகில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடததில் இருக்கிறது.

(3) பெரியநாயகிபுரம் ஊராட்சியின் வருவாய் போதுமானதாக இல்லாமையால், இக்குடியிருப்பிற்குத தனியே தொலைக் காட்சிப் பெட்டி வழங்கும் வாய்ப்பு இல்லை.

67—

பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பழுது நீக்கம் செய்ய அரசு நடவடிக்கை.

வினா எண் 12354—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஆலடிக்குமுளை ஊராட்சியைச் சேர்ந்த நறுவழிக்கொல்லையிலுள்ள பழைய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பழுதுபட்டு விட்டதால் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள புதிய தொட்டி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆலடிக்குமுளை ஊராட்சியைச் சார்ந்த நறுவழிக் கொல்லையிலுள்ள கிராமம் சுமார் 1,500 மக்கள் தொகையினை கொண்டதாகும். இக்கிராமத்திற்கு 1972 ஆம் ஆண்டு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்கப்பட்டது. பழுதடைந்துள்ள இந்த நீர்ததேக்க தொட்டியினை வரும் நிதி ஆண்டில் பழுது நீக்கம் செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

68—

குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு திட்டம்.

வினா எண் 12482—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, வல்லம் மேலத்தெரு, நாயுடு தெருவிற்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆண்டிமடம் தொகுதி, வல்லம் மேலத்தெரு நாயுடு தெருக்களுக்கு பைப்லைன் அமைத்து அதன் மூலம் குடிநீர் வசதி செய்து தர ஊராட்சியிலேயோ அல்லது ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலேயோ போதிய நிதி வசதியில்லாததால் செயற்குறிப்பு ஏதுமில்லை.

69—

படப்பனார் வயலில் தொலைக்காட்சிப் பெட்டி வைக்க கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா எண் 12627—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி, படப்பனார் வயலில் தொலைக் காட்சிப் பெட்டி வைக்கக் கட்டிடம் கட்டித்தர 1992-93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

படப்பனார் வயல் கிராமம், சொர்னக்காடு ஊராட்சியின் ஒரு பகுதி ஆகும். இவ்வூராட்சியின் ஆண்டு வருமானம் ரூ. 55,000 மட்டுமே. போதிய நிதி வசதி இல்லாமையால் 1992-93-ல் தொலைக்காட்சிப் பெட்டி வைக்க கட்டிடம் கட்டித் தர செயற் குறிப்பு ஏதும் இல்லை.

70—

தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் கட்டிடம் கட்டி வழங்கும் திட்டம்.

வினா எண் 12630—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஆண்டாக்கோட்டைக்கு தொலைக்காட்சிப் பெட்டியும், கட்டிடமும் கட்டித்தர 1992–93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆண்டாக்கோட்டை கிராமம், பைங்கால் ஊராட்சியைச் சேர்ந்தது. இவ்வூராட்சியின் நிதி நிலைமை வளமுடையதாக இல்லாமையால் இக்கிராமத்திற்கு தொலைக் காட்சிப் பெட்டி வழங்கவும், கட்டிடம் கட்டித்தரவும் 1992–93 ஆம் ஆண்டில் செயற் குறிப்பு ஏதுமில்லை.

71—

தெரு விளக்குகள் விரிவாக்கம் செய்ய அரசு திட்டம்.

வினா எண் 12919—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டிணம் ஊராட்சி, வெளிவயல் மீனவர்கள் குடியிருப்பு வரை 1992–93-ல் தெரு விளக்குகளை விரிவாக்கம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டிணம் ஊராட்சியைச் சேர்ந்த வெளி வயல் மீனவர்கள் குடியிருப்புவரை மின் வசதி விரிவாக்க

1993 அக்டோபர் 26]

செய்திட பட்டுக்கோட்டை தமிழ்நாடு மின் வாரியத்திற்கு உரிய முன்மொழிவுகள் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றிய ஆணையரால் அனுப்பப்பட்டுள்ளது.

72—

ஊராட்சிக்கு தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பெட்டி வழங்கும் திட்டம்.

வினா எண் 12929—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ருத்திரசிந்தாமணி ஊராட்சி பழுக்காட்டிற்கு 1992–93-ல் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும், வானொலிப் பெட்டியும், அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

73—

இடையாத்தி குளக்கரையை ஆழப்படுத்த திட்டம்.

வினா எண் 12992—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி குளக்கரையை பலப்படுத்தி தூர் எடுத்து ஆழப் படுத்திக் கொடுக்க 1992–93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி கிராமத்திலுள்ள இடையாத்திக் குளக்கரையை பலப்படுத்தி தூர் எடுத்து ஆழப்படுத்திக் கொடுக்க 1992–93ஆம் ஆண்டில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

74—

மீனவர் காலனிக்கு மின் விஸ்தரிப்பு அரசு நடவடிக்கை.

வினா எண் 13589—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அந்தோணியார்புரம் மீனவர் காலனிக்கு மின்சார விஸ்தரிப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கொள்ளுக்காடு ஊராட்சியினைச் சேர்ந்த அந்தோணியார்புரம் மீனவர் காலனிக்கு மின் விளக்கு விஸ்தரிப்பு செய்திட பட்டுக்கோட்டை தமிழ்நாடு மின்சார வாரியம் அலுவலகத்திற்கு உரிய முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டுவிடும்.

75—

ஊராட்சி ஒன்றியத்திற்கு நவீன தட்டச்சும் ஜெராக்ஸ் மெஷினும் வழங்கும் திட்டம்.

வினா எண் 14041—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ஒரு நவீன தட்டச்சும் ஒரு ஜெராக்ஸ் மெஷினும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

1993 அக்டோபர் 26]

76—

திருவோணம் ஊராட்சிக்கு நவீன தட்டச்சும் ஜெராக்ஸ் மெஷினும் வழங்கும் திட்டம்.

வினா எண் 14042—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ஒரு நவீன தட்டச்சும், ஜெராக்ஸ் மெஷினும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

77—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு நவீன தட்டச்சும் ஜெராக்ஸ் மெஷினும் அளிக்கும் திட்டம்.

வினா எண். 14043—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ஒரு நவீன தட்டச்சும் ஜெராக்ஸ் மெஷினும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

78—

ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்க நடவடிக்கை.

வினா எண் 14479—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல உள்ளாட்சிகளுக்கு ஒப்படைக்கப்படும் இடங்கள் (பூங்கா, Community purpose என்று ஒதுக்கப்படும் இடங்களை) உள்ளாட்சி மன்றங்களால் பராமரிக்கப்படாமல் ஆக்கிரமிக்கப் பட்டு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைப் பராமரிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

உள்ளாட்சிகளிடம் ஒப்படைக்கப்படும் இடங்களை ஊராட்சி கள்தான் பராமரிக்க வேண்டும். ஆக்கிரமிப்பு ஏதும் இருந்தால் சட்டத்தின் துணைக் கொண்டு அவற்றை அகற்ற உள்ளாட்சிகள் தக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இதுபோன்ற இடங்களை அரசு பராமரிப்பது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

79—

வடகாடு கிராமத்திற்குத் தொலைக் காட்சிப் பெட்டி வழங்குதல்.

வினா எண் 14763—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், வடகாடு, ஆதி திராவிடர் களுக்கு ஒரு தொலைக் காட்சிப் பெட்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. வடகாடு ஊராட்சியில் பொதுவான ஒரு தொலைக் காட்சிப் பெட்டி உள்ளது. அதன் மூலம் ஆதி திராவிடர்களும் பயனடைகிறார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

80—

குறிச்சி ஊராட்சிக்குத் தொலைக் காட்சிப் பெட்டி வழங்க அரசு நடவடிக்கை.

வினா எண் 14765—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், குறிச்சி கிழக்கு ஆதி திராவிடர்களுக்கு 1992-93-ல் தொலைக் காட்சிப் பெட்டி அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

குறிச்சி ஊராட்சியில் தற்போது இரண்டு தொலைக் காட்சிப் பெட்டிகள் உள்ளன. இவ்வூராட்சியின் ஆண்டு வருமானம் குடிநீர் தெருவிளக்குகள் பராமரிப்புக்கே போதுமானதாக இல்லாததால் மேலும் ஒரு தொலைக் காட்சிப் பெட்டி அமைக்க 1992-93ம் ஆண்டில் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

81—

பழுதடைந்த போர்வெல்லை பழுது நீக்க அரசு நடவடிக்கை:

வினா எண் 14786—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் கீழக்காட்டில் உள்ள பழுதுபட்ட போர்வெல்லை 1992-93-ல் பழுது பார்த்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வ கணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், செங்கமங்கலம் கீழ்க்காட்டில் உள்ள போர்வெல் மிகவும் பழுதடைந்து

பயனற்றதாகி விட்டதால் மாற்று போர் போடப்பட்டு கைபம்ப்பு அமைக்கப்பட்டு இதன் மூலம் மக்களுக்கு குடிநீர் கிடைத்து வருகிறது.

82—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மோட்டாருக்கு மின் இணைப்பு அரசு நடவடிக்கை.

வினா எண் 4787—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் மகிழங்கோட்டை ஊராட்சி மாத்தாக்கோவில் தெருவில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு 1992-93ல் மோட்டார் இணைப்புக் கொடுத்து இயங்கச் செய்யும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மகிழங் கோட்டை ஊராட்சி மாதாக் கோவில் தெருவில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டு தற்பொழுது மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

83—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மோட்டாரை அதிக சக்தியுள்ள மோட்டாராக மாற்ற அரசு நடவடிக்கை.

வினா எண் 14795—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெண்டாம்புளிக்காட்டில், 1992-93ல் கடற்கரைக்கு தண்ணீர் சப்ளை செய்யும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மோட்டாரை அதிக சக்தியுள்ள மோட்டாராக மாற்ற அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

1993 அக்டோபர் 26]

சேதுபாவாசத்திரம், ஊராட்சி ஒன்றியம், ரெண்டாம்புளிக் காட்டில் கடற்கரைக்கு தண்ணீர் விநியோகம் செய்யும் மேல் நிலைத் நீர்த் தேக்கத் தொட்டி 1988ஆம் ஆண்டு கட்டி முடிக்கப் பட்டுள்ளது. 12.5 குதிரை சக்தி கொண்ட மின் மோட்டாருடன் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்டது. கடற்கரைப் பகுதி மக்களுக்குத் தேவையான குடிநீரை சீரான முறையில் பற்றாக்குறை ஏற்படாமல் விநியோகம் செய்யப்பட்டு விடுவதால் மேற்படி மின் மோட்டாரை அதிக சக்தியுள்ள மோட்டாராக மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

84—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 14809—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் குறிஞ்சியைச் சேர்ந்த மேட்டு வயலில் அமைக்கப் பட்ட மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு 1992-93ல் மின்மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், குறிஞ்சியைச் சேர்ந்த மேட்டு வயல் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் அமைக்கப் பட்டு குடிநீர்த் தொட்டி இயங்கி மக்களுக்கு பயன்பட்டு வருகிறது. எனவே செயற் குறிப்பு ஏதுமில்லை.

85—

பழுதுபட்ட குடிநீர் குழாயைப் பழுது பார்க்கத் திட்டம்.

வினா எண் 14818—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், தென் ஏரிப்புறக்கரை கண்டியன் கொல்லை ஆதிதிராவிடர் மக்களுக்கு பழுதுபட்ட குடிநீர் குழாயை சரி செய்து தண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஏரிப்புறக்கரை ஊராட்சியைச் சேர்ந்த கண்டியன்கொல்லை ஆதிதிராவிடர் மக்களுக்குச் செல்லும் குடிநீர்க் குழாயிலிருந்து ஏழு பீலிகள் அமைத்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கடைசி பகுதியாகவும் மேட்டுப் பகுதியாகவும் இருப்பதால் பீலிகள் மூலம் குடி தண்ணீர் போதிய அழுத்தம் குறைந்து தண்ணீர் விநியோகம் சில சமயங்களில் தடைப்பட்டு வந்தது. தற்போது போதிய அழுத்தம் ஏற்படுத்த புதிதாக கேட் வால்வு அமைக்கப்பட்டுள்ளது. எனவே செயற்குறிப்பு ஏதுமில்லை.

86—

கண்ணாடி குளத்திற்குத் தொலைக் காட்சிப் பெட்டி அளிக்கத் திட்டம்.

வினா எண் 15209—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை— கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், கண்ணாடிகுளம் கிராமத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மக்கள் தொகை குறைவாக உள்ள இக் கிராமத்திற்கு தற்போது தொலைக்காட்சிப் பெட்டி அமைக்க இயலாத நிலை உள்ளது.

87—

கூடுதல் தொலைக்காட்சிப் பெட்டி அளிக்க அரசு திட்டம்

வினா எண் 15254—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி,—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், பால்கணபதியாபுரம் கிராம பொது மக்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வ கணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பால்கணபதியாபுரத்தில் 48 வீடுகளே உள்ளன. இங்கிருந்து ஒரு கிலோ மீட்டரில் உள்ள பாலாமடையில், தொலைக்காட்சிப் பெட்டி உள்ளது. மேலும் இவ்வூராட்சியில் 6 தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளன. எனவே, கூடுதல் பெட்டிகளுக்கான அவசியம் ஏற்படவில்லை.

88—

கூடுதலாக தெரு விளக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை

வினா எண் 15255—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், பிள்ளையார் குளம் டாக்டர் அம்பேத்கார் நகருக்கு கூடுதலாக ஏழு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறைஅமைச்சர் :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், பிள்ளையார்குளம் டாக்டர் அம்பேத்கார் நகரில் 50 வீடுகளில் 220 மக்கள் வசித்து வருகிறார்கள். ஏற்கனவே நான்கு தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு அவை நல்ல முறையில் எரிகின்றன. எனவே தற்போது புதியதாக தெரு விளக்கு அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

89—

வடக்கு தாழையூத்தில் வானொலி மன்றம் அரசு வழங்குதல்

வினா எண் 15257—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், வடக்குத் தாழையூத்து கிராமத்தில் வானொலி மன்றம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

வானொலி மன்றம் அமைக்கத் தகுதியான இடம் தேர்வு செய்து விரைவில் மன்றம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

90—

வானொலி மன்றம் அமைத்தல்

வினா எண் 15444—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் கணகரப்பட்டு ஆதி திராவிடர்களுக்கு வானொலி மன்றம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைத்துத் தரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) குறிப்பிடப் பட்ட இடத்தில் 1993-94 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் வானொலி மன்றக் கட்டடப் கட்டுவதைச் சேர்க்க நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது.

91—

தி. குன்னத்தூர் மயானப் பாதையில் ஆக்கிரமிப்பு

வினா எண் 16814—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுக்கா, கல்லுப் பட்டி ஊராட்சி ஒன்றியம், தி. குன்னத்தூர் கிராமத்தில் ஆதி திராவிட மக்கள் பயன்படுத்தும் மயானப் பாதையை தனியார் ஆக்கிரமிப்புச் செய்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த ஆக்கிரமிப்பை அகற்றி மயானப் பாதை மீண்டும் அமைக்கப்படுமா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர்கள் பயன்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட மயான பாதை புல எண். 179-2 மற்றும் 178-18 ஏ யில் உள்ளன. இவைகளில் தனியார் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

92—

ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்கு விடுதிகள்.

வினா எண் 7732—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கான விடுதிகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எவ்வளவு ?

(ஆ) மேலும் புதிதாக எங்கெங்கு துவங்க அரசு உத்தேசித்துள்ளது. ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் 1992-93ஆம் நிதியாண்டு வரை தொடங்கப்பெற்ற விடுதிகள் ஆதிதிராவிட மாணவர்களுக்காக செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மாவட்ட வாரியான எண்ணிக்கை வருமாறு :—

ஆதி திராவிடர் நல மாணவர்/மாணவியர் விடுதிகள் :

வ. எண்.	மாவட்டம்.	மாணவர் விடுதி.	மாணவியர் விடுதி.	மொத்தம்.
	(1)	(2)	(3)	(4)
1.	சென்னை	10	7	17
2.	செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர்.	52	18	70
3.	வடஆற்காடு—அம்பேத்கார்	25	13	38
4.	தென்னாற்காடு	77	28	105

வ எண்.	மாவட்டம்.	மாணவர் விடுதி.	மாணவியர் விடுதி.	மொத்தம்.
5.	தஞ்சாவூர்	27	12	39
6.	திருச்சிராப்பள்ளி	62	23	85
7.	புதுக்கோட்டை	21	13	34
8.	மதுரை	38	16	54
9.	திண்டுக்கல்-அண்ணா	22	11	33
10.	இராமநாதபுரம்	18	6	24
11.	காமராஜர்	33	9	42
12.	பசும்பொன் முத்துராமலிங்க தேவர்.	19	7	26
13.	திருநெல்வேலி-கட்டபொம்மன்	26	18	44
14.	கன்னியாகுமரி	7	7	14
15	சேலம்	43	18	61
16.	தர்மபுரி	25	9	34
17.	கோயம்புத்தூர்	21	10	31
18.	பெரியார்	18	11	29
19.	நீலகிரி	12	5	17
20.	சிதம்பரனார்	19	13	32
21.	திருவண்ணாமலை-சம்புவராயர்	22	10	32
22.	நாகப்பட்டினம்-காயிதே மில்லத்.	30	18	48
	மொத்தம்	627	282	909

(ஆ) 1993-94 ஆம் நிதியாண்டில் ரூ. 40.20 இலட்சம் செலவில் ஒவ்வொரு மாணவர் விடுதியிலும் 50 மாணவர்கள் தங்கும் வகையில் புதிதாக 20 மாணவர் விடுதிகளைத் துவக்க

1993 அக்டோபர் 26]

அரசு திட்டமிட்டுள்ளது. இவ்விடுதிகளை எந்தெந்த இடங்களில் துவக்குவது என்பது பற்றி தேவையைக் கருத்திற்கொண்டு முடிவு செய்யப்படும்.

93—

ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை

வினா எண் 15413—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளை AEO, DEO, CEO பார்வையிடுகிறார்களா ?

(ஆ) அவற்றின் கல்வித் தரத்தை உயர்த்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்த பள்ளி நேரம் தவிர சிறப்பு வகுப்புகள் நடத்தவும், வாராந்திர மற்றும் மாதாந்திரத் தேர்வுகள் நடத்தவும், தலைமை ஆசிரியர்களுக்குப் அறிவுரை வழங்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கு புதிய பாடத் திட்டங்களை செம்மையாகச் செயல்படுத்தும் வகையில் புத்தூட்டப் பயிற்சி (Orientation Training) அளிக்கப்படுகிறது. மேலும் மாணவர்களுக்கு அனைத்துப் பாடங்களிலும் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு மாதிரி வினா—விடை கையேடு தயாரித்து அச்சிட்டு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. பொதுத் தேர்வுகளில் சிறந்த வெற்றி விழுக்காட்டை எய்தும் உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கட்கும், பாட ஆசிரியர்கட்கும் ஊக்கப் பரிசுகள் வழங்கும் திட்டமும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

94—

தாட்கோ தலைமை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம்

வினா எண் 16427—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு டையளிப்பாரா—

தாட்கோ தலைமை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

ஆம். அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

95—

ஆதி திராவிடர் குடியிருப்பில் திருமண மண்டபம் கட்டும் திட்டம்

வினா எண் 16732—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், தொண்டமான் ஊரணி ஆதி திராவிடர் குடியிருப்பில் திருமண மண்டபம் கட்டும் பணி அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் ;

இல்லை.

96—

'நஞ்சமத்து வாழ்க்கை' கோவிலை புதுப்பிக்க அரசு நடவடிக்கை

வினா எண் 8183—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, 'நஞ்சமத்து வாழ்க்கை' கிராமத்திலுள்ள கோயிலை புதுப்பித்து கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி 'நஞ்சமத்து வாழ்க்கை' கிராமத்திலுள்ள திருக்கோயில், இந்து சமய

அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழ் கொண்டு வரவும் பின்னர் இத்திருக்கோயிலின் திருப்பணிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

97—

பரிமளேஸ்வரர் ஆலயத்திற்கு திருமண மண்டபம்

வினா எண் 8385—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, திருமணஞ்சேரி சுகந்த பரிமளேஸ்வரர் ஆலயத்திற்கு திருமண மண்டபம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை எப்போது எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

98—

கோயில் குதிரைச் சிலையைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை

வினா எண் 9231—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடியில் குலமங்கலம் வடக்கில் இருக்கும் அரசுக்குச் சொந்தமான பெருங்காரமுண்டய்யனார் கோயில் குதிரையை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இத்திருக்கோயிலில் உள்ள குதிரை சிலை அரசு மான்யம் ரூ. 20,000 பெற்று, 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பழுதுபார்த்து புதுப்பிக்கப்பட்டுள்ளது.

99—

அரசு மாணவர் தங்கும் விடுதி கட்டும் திட்டம்

வினா எண் 19342— திருமதி இரா. பாண்டியம்மாள் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி விக்கிர மங்கலம் கிராமத்தில் அரசு மாணவர்கள் தங்கும் விடுதி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் வாய்ப்பில்லை.

100—

பிற்பட்டோர் நல விடுதி கட்டும் திட்டம்

வினா எண் 19845— திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் தாலுக்கா குமராட்சி கிராமத்தில் பிற்பட்டோர் நல விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

தற்சமயம் இல்லை.

(ஏழாம் பட்டியல்)

1—

பரமக்குடி வழக்கறிஞர்கள் சங்கக் கட்டிடத்தை பழுது பார்த்தல்.

வினா எண் 10780— டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள வழக்கறிஞர்கள் சங்கக் கட்டிடம் இடிந்த நிலையில் இருப்பதால் அதை மராமத்து செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் ரூ. 2.16 இலட்சம் செலவினத்தில் வழக்கறிஞர்கள் சங்கக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு, தற்போதைக்கு நிதிநிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

2—

Scheme for Development of waste land in and around Pasumpon Muthu Ramalingam Devar District.

Question No. 3210—Tmt. V.G. Manimegalai: Will the Hon. the Minister for Revenue be please to state—

(a) Whether the Central Electro Chemical Research Institute at Karaikudi has prepared the scheme for development of waste lands in and around Pasumpon District; and

(b) the details thereof.

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) ஆம்

(ஆ) பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்தில் தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்று தயார் செய்யப்பட்டு அதை செயல்படுத்துவதற்காக ரூ. 65,00,025 நிதி உதவி கோரி புதுடில்லியிலுள்ள தேசிய தரிசு நிலங்களை மேம்படுத்தும் வாரியத்தின் இயக்குநரிடம் மாவட்ட ஆட்சியர்

அவர்களால் 27—4—1992 நாளிட்ட கடிதத்தில் கொடுக்கப் பட்டது. இத்திட்டத்தின்படி கீழ்க்கண்ட கிராமங்களில் தரிசு நிலங்களை மேம்படுத்தும் பணி செயல்படுத்தப்படும்.

கிராமம்.	பரப்பு. (ஹெக்டேரில்)	பயனடைவோர்.
1. ஒக்கூர் (புல எண் 1)	60.00	227
2. கம்பனூர் (புல எண் 1320) ..	105.00	189
3. அமராவதி புதூர் (புல எண் 144)	105.00	117
4. சிறுகானூர் (புல எண் 56) ..	200.00	336
5. அரண்மனை சிறுவயல் (புல எண் 199)	6.00	..
	476.00	869

இத்திட்டம் 1991-92 முதல் 1993-94 வரையில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இத்திட்டத்தில் பயனுள்ள பழமரங்கள் நடவு செய்யப் படவுள்ளது. அதன் பலனாக உபதொழில்களாக, பழச்சாறு தயார் செய்யும் யூனிட் ஜாம் தயார் செய்யும் யூனிட் விளக் கெண்ணெய் தயார் செய்யும் யூனிட் போன்றவைகள் தொடங்க வாய்ப்புள்ளன. இத்தொழில்களினால் இப்பகுதிகளைச் சுற்றி யுள்ள மிகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்கள் பலர் வேலைவாய்ப்புப் பெற வாய்ப்புள்ளது. அதனால் பொருளா தார மேம்பாடு ஏற்பட வழியுள்ளது.

தேசிய தரிசு நிலங்கள் மேம்பாட்டு வாரியத்திடமிருந்து நிதி உதவி கிடைத்த பின்பு இத்திட்டம் செயல்படுத்தப் படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

3—

ஆங்கில நிதி ஆண்டு கணக்கு முறையை நடைமுறைப்படுத்தல்.

வினா எண் 3959—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராம வரி வசூல் கணக்குகள் அக்பர் காலத்து பசலி முறையில் இருப்பதை ஆங்கில நிதி ஆண்டு கணக்கு முறைக்கு கொண்டு வர அரசு பரிசீலிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

தற்போதுள்ள பசலி முறையில் இருக்கும் கிராம வரி வசூல் கணக்குகளை ஆங்கில நிதி ஆண்டு கணக்கு முறைக்கு கொண்டு வரும் உத்தேசம் அரசுக்கு தற்போது இல்லை.

4—

மாவட்டத் தலைநகர் ஒன்றுக்கு நேதாஜி பெயர் சூட்டல்.

வினா எண் 8058—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட தலைநகரம் ஒன்றுக்கு மாவீரர் நேதாஜி அவர்கள் பெயர் சூட்டவும், மாவட்டங்களின் தலைநகரங்களில் நேதாஜி சிலை அமைக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

'இல்லை'.

பட்டா வழங்குவதில் காலதாமதம்.

5—

வினா எண் 8298—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்மாய் புறம்போக்கு கால்வாய் புறம்போக்கு என்று வருவாய்த் துறை பதிவேடுகளில் இருப்பதால் பட்டா கொடுக்காத நிலை இருப்பது பற்றி அரசுக்கு மேல் முறையீடு வந்தனவா?

(ஆ) ஆம் எனில், பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கண்மாய்ப் புறம்போக்கு மற்றும் கால்வாய் புறம் போக்கு போன்ற அனைத்து நீர்வழிப் புறம்போக்குகளில், வீட்டுமனை அல்லது விவசாய நில ஒப்படை வழங்க அரசு ஆணை எண் 41, வருவாய், நாள் 20—1—1987 இல் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் நீர்வழிப் புறம்போக்குகளிலுள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும், தயவுதாட்சண்யமின்றி அகற்ற மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. முன்னர் கண்மாய்களாக இருந்து மழைக்காலங்களில் நீர் தேங்காமலும் கண்மாய்களாக உபயோகப்படாமலுள்ள நீர் வழிப் புறம்போக்குகளில் தகுதி வாய்ந்த ஆக்கிரமிப்புதாரர் கட்கு மட்டும் பட்டா அல்லது உரிமை மாற்றம் செய்வதற்கு முன்பு, பொதுப்பணித்துறையினரின் அறிக்கை பெற்றே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நீர் சேகரித்து வைப்பதையும் நீர் பாய்வதையும் தடுக்காமல் ஆக்கிரமணம் இருந்தால் பட்டா வழங்க இயலுமென்றால் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாவட்ட வருவாய் அலுவலரின்/மாவட்ட ஆட்சியரின் புலத் தணிக்கைக்குப் பிறகு நீர் பிடிப்பு இல்லாத பகுதிகளில் மிகக் குறைவான பகுதியே மேற்காண் அரசாணையில் உள்ள தடையினை தளர்த்தி கடைசி கட்டமாக அரசாணை மூலம் ஒப்படை வழங்கப்படுகிறது. அரசின் கொள்கை இவற்றில் பட்டா வழங்க ஊக்குவிக்கக் கூடாது என்பதேயாகும்.

6—

பட்டா இல்லாதவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குதல்.

வினா எண் 8365—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, நந்தமேடு கிராமத்தில் பட்டா இல்லாதவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நத்தம் நிலவரிச் சட்டத்தின் கீழ் இக் கிராமத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் மனு எடுத்துக் கொள்ளப்பட்டு பிப்ரவரி 91-ல் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

7—

வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம்.

வினா எண் 1659—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல் ஒன்றியம் இலுப்ப நத்தம் கிராமத்தில் பூமிதான இயக்கத்தின் கீழ் உள்ள நிலங்களை ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், தலைவாசல் ஒன்றியம், இலுப்பநத்தம் கிராமத்தில் பூமிதான இயக்கத்தின்கீழ் உள்ள நிலத்தை வீட்டுமனை பட்டா வழங்க சட்டத்தில் இடமில்லை. இலுப்பநத்தம் கிராமத்தில் ச. எண் 134/1, 134/சி 2-வில் 4.70 ஏக்கர் நிலம் ஏற்கனவே ஆர்ஜிதம் செய்யப்பட்டு 110 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் ஆதி திராவிடர்கள் அனைவருக்கும் வீடுகள் உள்ளன.

8—

தாலுகா அலுவலக பணியாளர்களுக்கு வீடுகள் கட்டி வழங்க அரசு திட்டம்.

வினா எண் 11813—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தாலுகா அலுவலக பணியாளர்களுக்கு தாலுகா அலுவலகம் அருகிலேயே வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

வட்ட அலுவலகப் பணியாளர்களுக்கு, வட்ட அலுவலகம் அருகிலேயே வீடுகள் கட்டித்தர இடமின்மை மற்றும் அரசின் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களினால் இயலாததாகும்.

9—

புதுக்கோட்டை ஒன்றியங்களில் செட்டில்மென்ட் மூலம் சர்வே

வினா எண் 15293—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி கந்தர்வக்கோட்டை மற்றும் புதுக்கோட்டை ஒன்றியங்களில் செட்டில்மென்ட் மூலம் சர்வே செய்யப்பட்ட மொத்த ஏக்கர் எவ்வளவு ?

(ஆ) அதில் நன்செய், புன்செய், புறம்போக்கு, நத்தம் என தனித்தனியாக எவ்வளவு ஏக்கர் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) செட்டில்மெண்ட் மூலம் சர்வே செய்யப்பட்ட மொத்த ஏக்கர்.

கந்தர்வக்கோட்டை ஒன்றியம்	புதுக்கோட்டை ஒன்றியம்
ஹெக்டேர். ஏர்ஸ்.	ஹெக்டேர். ஏர்ஸ்.
31,870,73.5	28,121,58.0

(ஆ) கந்தர்வக்கோட்டை

நன்செய்.	புன்செய்.
ஹெக். ஏர்ஸ்.	ஹெக். ஏர்ஸ்.
2,868. 99.5	20,124. 34.5
புறம்போக்கு	நத்தம்
5,475. 96.5	690. 12.5

புதுக்கோட்டை

	நன்செய்	புன்செய்
	ஹெக். ஏர்ஸ்.	ஹெக். ஏர்ஸ்.
	5,063. 14.0	12,904. 75.5
	புறம்போக்கு	நத்தம்
	ஹெக். ஏர்ஸ்.	ஹெக். ஏர்ஸ்.
	7,176. 87.0	842. 09.0

10—

பரமக்குடி பத்திரப் பதிவு அலுவலக ஆண்டு வருமானம்.

வினா எண் 15405—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகரில் இயங்கி வரும் பத்திரப் பதிவு அலுவலகத்தின் மூலம் 1991-92-ல் வந்த வருமானம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

பரமக்குடி பத்திரப் பதிவு அலுவலகம் மூலம் 1991-92 ஆம் ஆண்டில் முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் மூலம் வந்த வருவாய் ரூ 58,41,379 ஆகும்.

11—

நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் நிலங்களைப் பங்கீடு செய்தல்.

வினா எண் 17025—திரு கா. பூ. முனுசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களின் பரப்பு எவ்வளவு?

(ஆ) எத்தனை பேர்களுக்கு எவ்வளவு நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) 3,020 ஏக்கர்.

(ஆ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின்படி 28—2—1993 முடிய நிலம் பகிர்ந்தளிப்பு பற்றிய விவரம்—

1. ஒப்படை செய்யப்பட்ட பரப்பு .. 2,827 ஏக்கர்

2. இனவாரியான விவரம்:

	நபர்களின் எண்ணிக்கை.	பரப்பளவு (ஏக்கரில்).
(1) ஆதி திராவிடர்	204	612
(2) மற்றவர்கள்	818	2215
மொத்தம் ..	1,022	2,827

12—

வலங்கைமான் தொகுதியில் அரசு மருத்துவமனைகள் சிறப்பாக செயல்படுவதற்கு அரசு நடவடிக்கை.

வினா எண் 4208—திருமதி கே. பஞ்சவர்ணம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் தொகுதி, மெலட்டூர் மற்றும் வலங்கைமான் மருத்துவமனைகளில் அனைத்து வசதிகள் இருந்தும் மருத்துவர்கள் முறையாக வராததால் இரண்டு மருத்துவ மனையும் செயலற்றுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சிறப்பாக மருத்துவமனையைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது மருத்துவர்கள் முறையாக பணிபுரிந்து வருகிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையமும் ஒழுங்காகச் செயல்படுகிறது.

13—

ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை.

வினா எண் 4585—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியத்திற்குட்பட்ட வத்திப்பட்டியில் மிக வசதியில்லாத வாடகை கட்டிடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கென அரசு கட்டிடம் ஒன்றினைக் கட்ட அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வத்திப்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடங்கள் கட்ட தக்க நிலத்தை தேர்ந்தெடுக்கவும், கையகப்படுத்தவும் பரிசீலனையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டதும் அரசின் நிதிநிலைமைக்கேற்ப கட்டிடம் கட்ட செயற்குறிப்புகள் பரிசீலிக்கப்படும்.

14—

அரசு மருத்துவமனைகளின் சராசரி செலவினங்கள்.

வினா எண் 6241—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் ஒரு நோயாளிக்காக மருந்து மற்றும் உணவிற்காக ஒரு நாளைக்கு சராசரியாக செலவிடப்படும் தொகை எவ்வளவு?

(ஆ) இந்தத் தொகை நிர்ணயம் எந்த ஆண்டில் செய்யப்பட்டது?

(இ) இன்றைய விலைவாசி நிலவரத்தில் இந்தத் தொகையை மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் ஒரு நோயாளிக்காக மருந்து, நோயின் தன்மைக்கு ஏற்ப மருத்துவரின் ஆலோசனைப்படி வழங்கப்படும் நிலையில் தொகை நிர்ணயம் செய்யவியலாது. வழங்கப்படும் உணவிற்காக கீழ்கண்டவாறு ஒரு நாளைக்கு சராசரியாக செலவிடப்படுகிறது :

	ரூ.	பை.
இந்திய சாதாரண உணவு (அசைவம்) மற்றும் குழந்தைகள் இந்திய சாதாரண உணவு (அசைவம்)	7	00
நோய்நீக்கி நலம் பெறுபவர்களுக்கு ரொட்டி பால் உணவு	10	00
காச நோய் உணவு	12	00

மருத்துவக் கல்வி இயக்குநரின் கீழ்வரும் கீழ்க்கண்ட மருத்துவ மனைகளில் ஒரு நோயாளிக்கு உணவிற்காக ஒரு நாளைக்கு சராசரியாக செலவிடப்படும் விபரம்:—

		உணவு உள் நோயாளி ரூ.	பை.
1.	அரசு பொது மருத்துவமனை, சென்னை	10	50
2.	அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை	11	50
3	அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை.	7	20
4.	அரசு நெஞ்சகநோய் மருத்துவமனை, தாம்பரம், சென்னை:	12	30

இதைத்தவிர சென்னை அரசு பொது மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைக்காக ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு— ரூ. 20 வீதம் (அறுவை சிகிச்சை நீங்கலாக) செலவிடப்படுகிறது.

(ஆ) தொகை நிர்ணயம் குறித்து எவ்வித ஆணையும் இல்லை. மேற்குறிப்பிட்ட தொகை அவரவர்க்கு கொடுக்கும் மருந்துகளின் அளவைப் பொறுத்தும் அம் மருந்துகளை அவ்வப்போது வாங்கப்பட்ட விலைகளின்படியும் சராசரியாக தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) மருத்துவமனைகளுக்கு வரும் புற நோயாளிகளுக்கும் மற்றும் அனுமதிக்கப்படும் உள் நோயாளிகளுக்கும், அவரவர் நோய்களுக்கேற்ப தேவையான எல்லா சாதாரண மற்றும் அவசியமான மருந்துகள் அனைத்தும் மருந்துகளின் விலையை கணக்கில் கொள்ளாமல் உச்ச வரம்பு ஏதுமின்றி வழங்கப்படுகிறது.

நோயாளிகளுக்கு பலவிதமான தரப்படுத்தப்பட்ட உணவுகள் (Standardtsed diet) வழங்கப்படுகின்றன. அதாவது வழங்கப்பட வேண்டிய உணவின் அளவுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த அளவுகள் விலை மாற்றத்தைக் கணக்கில் கொள்ளாமல் எப்போதும் வழங்கப்படுகிறது.

15—

அண்ணா மாவட்டத்திலுள்ள தாய்சேய் நலவிடுதிகள்.

வினா எண் 10630— திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டத்தில் உள்ள தாய்சேய், நல விடுதிகள் எங்கெங்கு உள்ளன?

(ஆ) மேலும் நத்தம் தொகுதியில் எங்கெங்கு தாய்சேய் நலவிடுதிகள் அமைக்கப்படவுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.

வட்டாரம்.	ஆரம்ப சுகாதார நிலையம்.	துணை சுகாதார நிலையம்.
(1)	(2)	(3)
ஆத்தூர்	ஆலமரத்துப் பட்டி	ஆலமரத்துப்பட்டி
		ஜெ. புதுக்கோட்டை
		முன்னிலகோட்டை
		என். பஞ்சம்பட்டி
		பித்தலைபட்டி
		கோதம்பட்டி
	ஆத்தூர்	போடிகாமன்வாடி
		மல்லையபுரம்
		பாளையங்கோட்டை
		செம்பட்டி
		வண்ணம்பட்டி.
	அம்மாபாளையம்	அய்யன்பேட்டை
		அய்யம்பாளையம் I
		அய்யம்பாளையம் II
		மஞ்சள்பரப்பு
		தேவாரப்பன்பட்டி
சின்னாலப்பட்டி.	சின்னாலப்பட்டி	சிக்கனாம்பட்டி
		சின்னாலம்பட்டி I
		சின்னாலம்பட்டி II
		சிட்டியாபட்டி
		நடுப்பட்டி
		பெருமாள் கோயில் பட்டி.
	சித்தயன்கோட்டை	அளகர்நாய்க்கன் பட்டி
		கதிர்நாய்க்கன்பட்டி
		சித்தயன்கோட்டை I
		சித்தயன்கோட்டை II
		சிங்காரக்கோட்டை
		சித்தரேவு I
		சித்தரேவு II

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வத்தலக்குண்டு	மல்லனாம்பட்டி	எம். வாடிப்பட்டி மல்லனாம்பட்டி பட்டிவீரன்பட்டி செஷகம்பட்டி செங்கட்டாம்பட்டி தும்மாலப்பட்டி
	விராலிப்பட்டி	வத்தலகுண்டு-I வத்தலகுண்டு-II வத்தலகுண்டு-III கட்டகாமன்பட்டி பழையவத்தலகுண்டு விராலிபட்டி
	விருவீடு	எழுவானம்பட்டி கள்ளிபட்டி கணுவரயன் கோட்டை வெள்ளையபட்டி நடகோட்டை
திண்டுக்கல்	எம்.எம்.கோவிலூர்	பாலகிருஷ்ணாபுரம் செல்லமன்தாடி முல்லிபாடி நல்லமாணிக்கன் பட்டி பெரியகோட்டை தாமரைபாடி
	நரசிங்கபுரம்	எ. வெள்ளோடு கரத்தழகன்பட்டி குரும்பப்பட்டி நல்லம்பட்டி நரசிங்கபுரம் புதுப்பட்டி
	தாழக்கொம்பு	செட்டிநாயக்கன் பட்டி சல்லிப்பட்டி மரவப்பட்டி சிறுமலைபாலையூர் சிறுமலைப்புதூர் சுக்கம்பட்டி உலகம்பட்டி

நத்தம்	உலுப்பகுடி	காந்திநகர்
		கோவில்பட்டி
		மாரியம்மன்கோவில் தெரு.
		மலையூர்
		துவாரவத்தி
		உலுப்பக்குடி
		வேலாயுதம்பட்டி
	செந்துரை	கோட்டைப்பட்டி
		கொடுகபட்டி
		காட்டுப்பட்டி
		மணக்காட்டூர்
		பி. புதுப்பட்டி
		சித்தூர்
		செந்துரை
	சிறுகுடி	துவிச்சிப்பட்டி
		கொசுகுருச்சி
		நல்லகண்டம்
		நல்லூர்
		சமுத்திரப்பட்டி
		சிறுகுடி
		ஊரலிபட்டி
	வத்திப்பட்டி	லிங்கவாடி
		மூங்கில்பட்டி
		பண்ணுவாரப்பட்டி
		பரலிபுதூர்
		ரெட்டியாபட்டி
		சாத்தம்பட்டி
நிலக்கோட்டை	அம்மைய நாயக்கனூர்	கொடைரோடு
		மலையகவுண்டன் பட்டி
		மருதம்பட்டி
		பாலம்பட்டி
		சிலுக்குவார்பட்டி
	சக்கைநாயக்கனூர்	அய்யம்பட்டி
		கமலாபுரம்
		மேட்டூர்
		மைக்கேல்பாளையம்
		திம்மநாயக்கன்பட்டி

1993 அக்டோபர் 26]

நிலக்கோட்டை—தொடர்ச்சி	மட்டப்பாறை	காந்தப்பக்கோட்டை
		கல்லடிப்பட்டி
		மட்டப்பாறை
		முத்துலாபுரம்
		பள்ளபட்டி
		ராமராஜபுரம்.
	சிறுநாயக்கன்பட்டி	அனைப்பட்டி
		துரைசாமிபுரம்
		கொங்கப்பட்டி
		குள்ளிசெட்டிபட்டி
		முசலநூத்து
		சிறுநாயக்கன்பட்டி
	தூமாலபட்டி	கரியம்பட்டி
		கொண்டங்கி
		நாயக்கன்பட்டி
		நிலக்கோட்டை (வடக்கு)
		நிலக்கோட்டை (தெற்கு)
		எஸ். தூமலப்பட்டி
ரெட்டியார்சத்திரம்	கண்ணிவாடி	அலகுமலை
		ஆலத்தூரன்பட்டி
		அம்மாபட்டி
		ஆதலூர்
		போதம்பட்டி
		தர்மத்துப்பட்டி
		அனுமந்தராயன் கோட்டை
		கரிசல்பட்டி
		கோனூர்
		குயவநாயக்கன்பட்டி
		மிலபூர்
		நெட்டியாபட்டி
		பாலம்ராஜாக்கப்பட்டி
		பண்டரிமலை
		பெரியபொன்மான்துரை
		டி. புதுப்பட்டி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

	புதுக்கோட்டை	
	கே.	குருநாதநாயக்கனூர்
		கே. புதுக்கோட்டை
		முழுநல்லிகோட்டை
		ரெட்டியார்சத்திரம்
		தெப்பகுளத்துப் பட்டி
ரெட்டியார்சத்திரம்	ஸ்ரீராமபுரம்	எல்லைப்பட்டி
		கம்பளிநாய்க்கன் பட்டி
		பாலக்கணத்து பண்ணிபட்டி
		ஸ்ரீராமபுரம்
		வெள்ளமடத்துப் பட்டி
சாணார்பட்டி	கோபாலபட்டி	அஞ்சுகுழிபட்டி
		ஜெ. மணியகாரபட்டி
		கே. அய்யாபட்டி
		கணலைபட்டி
		ராமராஜபுரம்
		வி. டி. பட்டி
		வெம்பார்பட்டி
	கொசவபட்டி	ஆவிலிபட்டி
		கு. குரம்பப்பட்டி
		நக்சிவாடிவண்டி
		ராகலாபுரம்
		தவசிமடை
		வடகாட்டுப்பட்டி
		தீரசின்னம்பட்டி
	சிலுவதூர்	ஆலம்பட்டி
		அத்திகரைபட்டி
		செங்குருச்சி
		கம்பளியம்பட்டி
		எம். மணியகாரன் பட்டி
		மரக்கம்பட்டி
		ராஜக்கப்பட்டி
குஜிலியம்பாறை	கூடலூர்-டி.	டி. கூடலூர்-II

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

		கே. அணைப்பட்டி கரிசும் கொட்நத்தம் லாந்தக்கோட்டை பாளையம் பூகார்பட்டி
	குஜிலியம்பாறை	சின்னாலநாயக்கனூர். பிள்ளமநாயக்கன் பட்டி புளியம்பட்டி ஆர். கொம்பை ஆர். புதுக்கோட்டை உள்ளியகோட்டை
	வெள்ளோடு ஆர். ..	ஏ. கொல்லப்பட்டி கூம்பூர் மல்லபுரம் ஆர். வெள்ளோடு சோலபுரம் திருக்கூரணம்
கொடைக் கானல் ..	மன்னவனூர்	ஆட்டுவம்பட்டி கூக்கல் மாட்டுப்பட்டி பெரிஜம் பூம்பாறை பூண்டி
	பெருமாள்மணல்	அடுக்கம் கோவில்பட்டி மேல்பள்ளம் பெருமாள்மலை-1 பேத்துபாளை வடக்கபூஞ்சி
	பூலத்தூர்	கே.சி. பட்டி மங்களம் கொம்பு பண்ணைக்காடு-1 பண்ணைக்காடு-11 பஞ்சாரூர் பெரியூர் பூலத்தூர்-1 தண்டிக்குடி

ஒட்டன்சத்திரம்	சத்திரப்பட்டி ..	அரசப்பிள்ளைப் பட்டி பெரியகோட்டை சிண்டலவடம்பட்டி வீராலபட்டி வேலூர் விடுபேட்சி
..	எடையகோட்டை	எடையகோட்டை ஜீவத்துப்பட்டி கொடங்கிப்பட்டி மார்க்கம்பட்டி முத்துநாயக்கன் பட்டி சின்னக்கம்பட்டி சிறுநாயக்கன் பட்டி
...	கரூர் கே.	அம்பிலிகாய் சின்னய்ய கவுண்டர் வலுசு. ஏடைப்பட்டி சிந்தாலப்பட்டி தங்கசின்னபட்டி
...	ஒட்டன்சத்திரம்	கலஞ்சிபட்டி கோதையறும்பு மேட்டுப்பட்டி நாகனம்பட்டி ஒட்டன்சத்திரம் கிழக்கு ஒட்டன் சத்திரம் மேற்கு சாலை புதூர் வேரியப்பூர்
பழனி	பாலசுந்தரம்	பாலசுந்தரம் II கலிக்கநாயக்கன்பட்டி கோதைமங்களம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

		குரும்பட்டி புதிய ஆய்க்குடி ஞுபுலாபுரம் சந்தைப்பட்டி	
	நெய்க்காரன் பட்டி ..	கலையம்புதூர் இ. கலையம் புதூர். நெய்காரப்பட்டி பி. கலையம் புதூர். ராஜாபுரம் தாமரைகுளம்	
	பாப்பம்பட்டி	ஆண்டிப்பட்டி அய்யம்பாளையம் தாதநாயக்கன் பட்டி. கவலபட்டி குப்பம்பாளையம்	
தொப்பம்பட்டி	அமரம்பூண்டி	அமரம்பூண்டி எருமநாயக்கன் பட்டி. கணக்கன்பட்டி பழைய ஆயக்குடி	II
	கள்ளிமந்தயம்	தேவத்தூர் கள்ளிமந்தயம் கமாலபட்டி காரியம்பட்டி கதம்பாடி மஞ்சநாயக்கன் பட்டி.	
	கீரனூர்	அப்பநூத்து அப்பியம்படி கீரனூர்-I கீரனூர்-II போளுனூர் தொப்பம்பட்டி	

	மிடப்பாடி	அத்திவலசு
		மேல்காலைப்பட்டி
		முத்துநாயக்கன் பட்டி.
		புஷ்பத்தூர்
		தாலையூத்து
	நரிக்கால்பட்டி	கோதையம்
		மனூர்.
		பொச்சிபாளையம்
		பூலம்பட்டி
		தும்பாலபட்டி
வடமதுரை	அய்யலூர்	அய்யலூர் (வடக்கு)
		அய்யலூர் (தெற்கு)
		குறுத்தம்பட்டி
		புதூர்
		எஸ். புதுப்பட்டி
	பிலத்தூர்	பாகநத்தம்
		மோர்பட்டி
		பிலத்தூர் II
		சித்துவார்பட்டி
		தென்னம்பட்டி
	வடமதுரை	கனபாடி
		குளத்தூர்
		பி. கொசவபட்டி
		படியூர்
		வேலாயுதம் பாளையம்.
		வேலவர் கோட்டை
வேடசந்தூர்	எரியோடு	பூதம்பட்டி
		எரியோடு II
		மாரம்பாடி
		நாகய்ய கோட்டை
		தண்ணீர் பந்தம் பட்டி.
		தொட்டான் பட்டி.
		வெள்ளம்பட்டி

1993 அக்டோபர் 26]

வேடசந்தூர்—தொடர்ச்சி.	கோவிலூர் ..	கோசிபாளையம் I கோசிபாளையம் II கோவிலூர் II புதிய அழகாபுரி ராமநாதபுரம் வையம்பட்டி
..	வேடசந்தூர் ..	பூதிபுரம் தேவிநாயக்கன்பட்டி. கலனம்பட்டி நத்தபட்டி சேனம் கோட்டை விடுத்தலைப்பட்டி

16—

வானதிராஜபுரம் கிராம மக்கள் பயன்பெறும் வகையில் 20 நம்பர் நகரப்பேருந்தை மீண்டும் இயக்குதல்.

வினா எண் 4199—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி வானதிராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மாணவ மாணவிகள் ஆகியோர் பலன் பெறும் வகையில் நிறுத்தப்பட்ட 20 நம்பர் நகரப் பேருந்தை மீண்டும் விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

வானதிராஜபுரம் என்ற ஊர் கல்லணை காவிரிப் பூம்பட்டினம் பிரதான சாலையில் அமைந்துள்ளது. போதிய அளவு பேருந்து வசதி உள்ளது. கோரிக்கையில் உள்ள பேருந்து மக்கள் பயன்பாடு இல்லாததால் நிறுத்தப்பட்ட ஒன்றாகும். மக்கள் பயன்பாடு குறைவாக உள்ள காரணத்தால் பேருந்து இயக்குவது இயலாது. சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று 19—9—1992 முதல் மயிலாடுதுறையிலிருந்து ஆடுதுறைக்கு பள்ளி மாணவ மாணவியருக்காக 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.

17—

உடுமலைப் பேட்டையில் ஆர். டி. ஓ. அலுவலகம் திறக்க அரசு திட்டம்.

வினா எண் 4782—திரு. கே. பி. பணிவாசகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டையில் ஆர்.டி.ஓ. (R.T.O.) அலுவலகம் ஒன்று திறக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

உடுமலைப்பேட்டையில் ஆர்.டி.ஓ. அலுவலகம் திறப்பது பற்றிய குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

18—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களின் குறைபாடுகளை நீக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 5875—திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் இடைத்தரகர்களை ஒழிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

சட்டரீதியாக வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் இடைத் தரகர்களுக்கு இடமில்லை. ஆயினும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் காணப்படும் குறைபாடுகளை தவிர்ப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

1993 அக்டோபர் 26]

19—

பேரணாம்பட்டில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 8395—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டில் பட்டுக்கோட்டை அழகிரி போக்கு வரத்துக் கழகம் பணிமனை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) பேரணாம்பட்டு கிராமத்தில் அருள்மிகு பொன் னாச்சி அம்மன் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை இப்பணிமனை அமைப்பதற்காக வாங்குவதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கிடைக்கப் பட்டவுடன் பணிமனை கட்டப்படும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

20—

தஞ்சாவூரிலிருந்து ஆலங்குடிக்கு பேருந்து வசதி.

வினா எண் 8901—திரு. சி. சுவாமிநாதன் : மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினா வுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரிலிருந்து கந்தர்வ கோட்டை கணபதிபுரம் தொண்டமான் ஊரணி, வாராப்பூர் வழியாக ஆலங்குடிக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

தஞ்சாவூரிலிருந்து கந்தர்வக்கோட்டை, கணபதிபுரம் தொண்டமான் ஊரணி, வாராப்பூர் வழியாக ஆலங்குடிக்கு சோழன் போக்குவரத்துக் கழகம் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை. இத்திட்டத்தில் துலுக்கன்பட்டியில் இருந்து மீனாம்பட்டி கைகாட்டி வரை 15 கி.மீ தூரம் சாலை பழுதுபட்டு பேருந்து இயக்க தகுதி யற்றதாக உள்ளது. எனவே இத்திட்டத்தில் பேருந்து இயக்க இயலாது.

21—

நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அபிவிருத்திக்கு பல்வேறு அரசு நலத்திட்டங்கள் :

வினா எண் 16407— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்பு மிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி எமனேஸ்வரம் பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர் சங்கங்களில் உள்ள உறுப்பினர்கள் ஆண்கள் பெண்கள் எத்தனை பேர் ?

(ஆ) நெசவாளர் மத்தியில் இது எத்தனை விழுக்காடு ?

(இ) இதைக் கூட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி எமனேஸ்வரம் பகுதிகளில் உள்ள நெச வாளர் கூட்டுறவு சங்கங்கள்-44.

மொத்த உறுப்பினர்கள்	..	8,273
ஆண் உறுப்பினர்கள்	..	3,997
பெண் உறுப்பினர்கள்	..	4,276 ஆகும்.

1993 அக்டோபர் 26]

(ஆ) நெசவாளர்கள் மத்தியில் இது 70.15 சதவிகிதம் ஆகும்.

(இ) அரசு கைத்தறி அபிவிருத்திக்கென மான்யம் மற்றும் கடன் உதவி வழங்கியும், நெசவாளர்களைக் கூட்டுறவில் கொண்டு வரும் பொருட்டு பல்வேறு நலத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது.

22—

பரமக்குடி பகுதியில் லாபகரமாக இயங்கும் பட்டு கூட்டுறவு சங்கங்கள்.

வினா எண் 164412—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி எமனேஸ்வரம் பகுதிகளில் எத்தனை கூட்டுறவு கைத்தறி பட்டு சொசைட்டிகள் உள்ளன?

(ஆ) இவற்றுள் லாபத்தில் இயங்குகின்ற சொசைட்டிகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி, எமனேஸ்வரம் பகுதிகளில், என் எச் 77 பரமக்குடி பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் என். எச். 78 சத்தியமூர்த்தி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகிய இரண்டு பட்டு கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

(ஆ) என் எச் 78, சத்தியமூர்த்தி பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம் லாபத்தில் இயங்கி வருகிறது.

23—

நெடுஞ்சாலைத் துறையில் பணி புரிவோருக்கு குடும்ப பென்ஷன் வழங்கும் திட்டம்.

வினா எண் 12171—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரிந்து கொண்டிருக்கையில் 10 ஆண்டுகளுக்கு குறைவாகப் பணிமுடித்து இறந்துவிட்டால் வாரிசுகளுக்கு குடும்ப பென்ஷன் வழங்க வேண்டும்

என்ற அரசு ஆணைப்படி பணிபுரிந்து இறந்துவிட்டார் என்ற உதவிக் கோட்டப் பொறியாளரின் சான்றிதழை மட்டிலும் அடிப்படையாகக் கொண்டு குறைந்த பட்சமாக குடும்ப பென்ஷன் வழங்க அரசிடம் செயற் குறிப்புள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் :

செயற்குறிப்பு ஏதுமில்லை

24—

பழுதடைந்த குடிசைமாற்று வாரியத்தின் வீடுகளை செப்பனிட அரசு நடவடிக்கை.

வினா எண் 19670—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை நகரில் குடிசைமாற்று வாரியத்தால் வழங்கிய வீடுகள் பழுதடைந்து போனதால் அதனைப்பழுது பார்க்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப் புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

ஆம்.

25—

கிராமங்களில் சமுதாயக் களங்கள் அமைக்கும் திட்டம்.

வினா எண் 15489—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பொன்னாங்கண்ணிக்காடு, நாட்டாணிக்கோட்டை, பழைய பேராவூரணி பனஞ்சேரி துலுக்கவிடுதி ஏனாதி கரம்பை ஆத்தாளூர், நாட்டாணிக்கோட்டை தெற்கு, ஆதனூர் கருப்ப மனை, பின்னவாசல் ஆகிய கிராமங்களில் நெல் அறுவடைக் காலங்களில் பயன்படுத்த சமுதாயக்களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

மேற்கண்ட கிராமங்களில் சமுதாயக்களங்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

26—

பேராவூரணி ஒன்றியத்தில் சமுதாயக்களம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 15490—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், சித்தாத்திக்காடு, பைங்கால், பொக்கன்விடுதி, பொக்கன் விடுதி தெற்கு உப்பு விடுதி, மடத்திக்காடு, செருவா விடுதி வடக்கு செருவா விடுதி தெற்கு, ஈச்சன் விடுதி' சித்துக்காடு ஆகிய கிராமங்களில் நெல் அறுவடைக் காலங் களில் பயன்படுத்த சமுதாயக் களம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மை துறை அமைச்சர் :

மேற்கண்ட கிராமங்களில் சமுதாயக் களங்கள் அமைக் கும் திட்டம் தற்போது இல்லை.

27—

சமுதாயக் களங்கள் அமைக்கும் திட்டம்.

வினா எண் 15491—திரு. ஆர். சிங்காரம் : மாண்பு மிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், களத்தூர் கல்லூரணிக்காடு, ஆணைக்காடு, பெரிய தெற்குக் காடு, ஒட்டங்காடு, மதன்பட்டவூர், நவக்கொல்லைக்காடு,

காலகம், கொன்றைக்காடு, திருப்பூரணிக்காடு ஆகிய கிராமங்களில் நெல் அறுவடைக் காலங்களில் பயன்படுத்த சமுதாயக் களம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

மேற்கண்ட கிராமங்களில் சமுதாயக் களங்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

28—

வணிகவரி துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நியமனம்

வினா எண் 14017— திரு. ஆர். சுப்புரத்தினம்: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிகவரித்துறை ஆணையர் அலுவலகத்தில் துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் பணியிடங்களின் எண்ணிக்கை கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வணிகவரித்துறை ஆணையர் அலுவலகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் தோற்றுவிக்கப்பட்ட துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் எண்ணிக்கை மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் அந்த பதவிகளின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பதவியின் பெயர்.	இரண்டு ஆண்டுகளுக்கு முன் அப்பதவிகள் எண்ணிக்கை	கடந்த இரண்டு ஆண்டுகளில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)
1 உதவி ஆணையர் (வகுப்பு) XXV (பொதுப் பணிகள்) ..	3	2

1993 அக்டோபர் 26]

2	துணை ஆணையர் (வகுப்பு XXV (பொதுப் பணிகள்)	1	1
3	துணை ஆணையர் (வணிகவரி) (சுயசீராய்வு மனு)	2	1
4	உதவி ஆணையர் (சட்டம்)	5	1

29—

பணியில் இறந்தவர்களுக்கு அரசு உதவித்தொகை வழங்கியது

வினா எண் 11729— திரு. கே. செல்வராஜ்; மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவுப் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது இறந்தவர்களுக்கு இதுவரை எத்தனை பேருக்கு அரசு உதவித்தொகை 60,000 கொடுக்கப்பட்டுள்ளது ?

விடை —

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

1993-94 ஆம் ஆண்டிற்கு இதுவரை 23 இனங்களில் தொகை வழங்கப்பட்டது. இன்னும் 146 இனங்கள் பரிசீலனையில் உள்ளன.

30—

கூடுதல் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆதரவு.

வினா எண் 12757—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய கத்தாழை காலனிக்கு சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

தேவையான இடங்களில் ஆவன செய்துகொள்ள நன்கொடைகளையும், அரசு ஏற்கனவே ஒதுக்கியுள்ள தொகைகளையும் பயன்படுத்திக்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

31—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் காலனி அரசு நடவடிக்கை

வினா எண் 12765—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், சி. முட்லூர் ஆதி திராவிடர் காலனிக்கு சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

புவனகிரி ஊராட்சி ஒன்றியம், சி. முட்லூர் ஆதிதிரா விடர் காலனிக்கு 1993-94 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சத்துணவுக்கூடம் கட்ட நட வடிக்கை எடுக்கப்படும்.

32—

ஏகாதிகரம்பையில் கூடுதலாக ஒரு சத்துணவு மையம் துவங்க அரசு திட்டம்

வினா எண் 13576—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஏகாதி கரம்பை மேற்கு ஆதிதிராவிடர் தெருவில் சத்துணவு மையம் 1992-93-ல் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம், ஏகாதிகரம்பை மேற்கு ஆதி திராவிடர் தெருவில் சத்துணவு மையம் 1992–93-ல் தொடங்க

1993 அக்டோபர் 26]

கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. இதன ருகே வீரராகவபுரம் கிராமத்தில் சத்துணவு மையம் ஒன்று செயல்படுகிறது.

33—

ராதாபுரம் தொகுதியில் கூடுதல் சத்துணவு மையங்கள் அரசு பரிசீலனை

வினா எண் 14149—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, பணக்குடி பஞ்சாயத்து சிவகாமி புரம் குழந்தைகளுக்கு சத்துணவு அங்கேயே வைத்து வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி, இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் கீழ் தேவைக்கேற்ப புதிதாக சத்துணவு மையங்கள் துவக்குவது பரிசீலக்கப்படும்.

34—

கூடுதலாக ஊட்டச் சத்து மையங்கள் அமைப்பதற்கு அரசு பரிசீலனை

வினா எண் 15862—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், கீழ்வானி ஊராட்சிக்கு சேர்ந்த இந்திரா நகரில் குழந்தைகள் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா.

(ஆ) ஆம் எனில், எப்போது மையம் ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டத்தின் கீழ் கூடுதலாக மையங்கள் தேவைக் கேற்ப துவங்குவது பரிசீலிக்கப்படும்.

35—

பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடத்தை சீர் செய்ய அரசு எடுத்த நடவடிக்கை

வினா எண் 16478—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், குறிஞ்சி கொல்லையில் பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடத்தை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்கொடைகளையும், அரசு ஒதுக்கியுள்ள தொகையையும் பயன்படுத்தி ஆவன செய்ய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

36—

புதிதாக சத்துணவு மையங்கள் ஏற்படுத்த அரசு பரிசீலனை

வினா எண் 16483—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம் கவரைப்பட்டு ஆதி திராவிடர்கள் வாழும் காலனிகளுக்கு சத்துணவுக்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

1993 அக்டோபர் 26]

விடை —

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டத்தின் கீழ் தென்னார்க்காடு மாவட்டத்தில் தேவைக்கேற்ப புதிதாக சத்துணவு மையங்கள் துவக்குவது பரிசீலிக்கப்படும்.

37—

மருதூர் காலனி சத்துணவுக் கூடம் சீர் செய்ய அரசு நடவடிக்கை

வினா எண் 16677—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம் மருதூர் காலனி கிராமத்தில் சத்துணவுக் கூடம் சீர் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேவையான அபிவிருத்திப் பணிகளைச் செய்துதர நன்கொடைகளையும், அரசு ஏற்கனவே ஒதுக்கியுள்ள நிதியைப் பயன்படுத்திக் கொள்ளவும் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

38—

புவனகிரி பேரூராட்சியில் கூடுதல் சத்துணவுக் கூடங்கள் அமைக்க அரசு நடவடிக்கை

வினா எண் 17440—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேத்தியாதோப்பு பேரூராட்சி சென்னிநத்தம், புவனகிரி பேரூராட்சி அழிச்சிக்குடி, ஆதிவராக நத்தம்

சுத்துக்குழி, கீழ்புவனகிரி கிராமத்தில் சத்துணவுக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேவையான இடங்களில் ஆவன செய்ய நன்கொடைகளையும் அரசு ஏற்கனவே ஒதுக்கியுள்ள தொகைகளையும் பயன்படுத்திக்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

39—

ஆசிரியர் தேர்வாணையம் தேர்வு செய்த ஆசிரியர்கள் விவரம்

வினா எண் 7992—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசிரியர் தேர்வாணையம் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள், தொழிற் கல்வி ஆசிரியர்கள் எண்ணிக்கை ஆண்டுவாரியாக எவ்வளவு?

(ஆ) அவர்களில் பணியிலமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ)

ஆண்டு.	முதுகலை பாட ஆசிரியர்கள்.	பட்டதாரி ஆசிரியர்கள்.	கைத்தொழில் ஆசிரியர்கள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1988-89	638	1,358	..	1,996
1989-90	443	765	..	1,203

1993 அக்டோபர் 26]

1990-91	287	390	..	677
1991-92	253	498	..	751

(ஆ) 4,396

40—

அரசு ஆரம்ப பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்க அரசு முடிவு

வினா எண் 9686—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி கல்வி மாவட்டம், சண்முகம்பாறை அரசு ஆரம்பப் பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பழனி கல்வி மாவட்டம், சண்முகம் பாறை அரசு தொடக்கப்பள்ளியில் உள்ள மாணவர் பதிவு 78 ஆகும். சராசரி வருகை 48. மாணவரின் சராசரி வருகையின் அடிப்படையில் ஒரு தலைமை ஆசிரியர், ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் போதுமானதாக உள்ளன. இனிமேல் மாணவர் வருகை எண்ணிக்கை அதிகரித்தால் விதிகளின் அடிப்படையில் மேற்படி பள்ளிக்கு கூடுதல் பணியிடம் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

41—

அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசு திட்டம்

வினா எண் 13186—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, உடையநாடு அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு 1992-93-ல் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

42—

அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்குத் திட்டம்

வினா எண் 13209—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பள்ளத்தூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு 1992-93 ஆம் ஆண்டில் கூடுதல் கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

43—

சுயநிதிக் கல்லூரி துவங்க அரசு அனுமதி

வினா எண் 15245—திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1989-90-ல் எத்தனை சுயநிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

1989-90-ல் சுயநிதி பொறியியற் கல்லூரிகள் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படவில்லை. எனினும் 1988-89-இல் அனுமதி வழங்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்

1993 அக்டோபர் 26]

கோட்டிலுள்ள நூருல் இஸ்லாம் பொறியியற் கல்லூரி 1989-90 முதல் செயல்படத் துவங்கியது.

44—

நாட்டுப்புறக் கலையை வளர்க்க அரசின் பங்கு.

வினா எண் 16810—டாக்டர் எஸ். சுந்தரராஜ்; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாட்டுப்புறக் கலையை வளர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

கலை வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்த கலை பண்பாட்டுத் துறை என்ற புதிய துறை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் திறமிக்க இளங் கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையிலும், நாட்டுப்புறக் கலைகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி வாரந்தோறும் புதன், சனிக்கிழமைகளில் சென்னை அருங்காட்சியகக் கலையரங்கில், கலை பண்பாட்டு இயக்ககத்தால் பண்பாட்டுப் பலகனி எனும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பெறுகின்றன. இப்பண்பாட்டுப் பலகனியில் நாட்டுப் புறக் கலைஞர்கள் மிகப் பேரளவில் பங்குபெற்று கலை நிகழ்ச்சிகளை நடத்திட அவ்வப்போது வாய்ப்பளிக்கப்படுகிறது. இதனால் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. தமிழக தென்னகப் பண்பாட்டு மையத்துடன் இணைந்து அவ்வப்போது நாட்டுப்புறக் கலைவிழா நடத்தி வருகிறது.

2. சென்னையிலுள்ள அரசு இசைப்பயிற்சி மையத்தில் நாட்டுப்புறக் கலைகளைப் பயிற்றுவிக்க புதிய துறை தொடங்கப் பெற்றுள்ளது. மேலும் நாட்டுப்புறக் கலைக் கூறுகளைக் கண்டறிந்து, ஆராய்ந்து, ஊக்குவித்து, மேம்பாட்டையச் செய்யும் வகையில் இவ்வாண்டில் மதுரை மாநகரில் நாட்டுப் புறக் கலைப் பயிற்சி ஆராய்ச்சி மையம் ஒன்றைத் தோற்றுவிக்க அரசு முடிவு செய்துள்ளது.

[1993 அக்டோபர் 26

45—

தனியார் பொறியியற் கல்லூரி ஏற்படுத்தல் அரசு திட்டம்.

வினா எண் 16829—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை தனியார் மற்றும் அரசு பொறியியற் கல்லூரிகள் உள்ளன?

(ஆ) மேலும், தனியார் பொறியியல் கல்லூரி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு பொறியியற் கல்லூரி ஏதுமில்லை. கீழக்கரையில் முகமது சதக் பொறியியற் கல்லூரி (சுயநிதி) ஒன்றுள்ளது.

(ஆ) இம் மாவட்டத்தில் புதியதாக தனியார் பொறியியற் கல்லூரி ஆரம்பிக்க கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

46—

அரசினர் பொறியியல் கல்லூரி மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை

வினா எண் 16989—திரு. கே. ஏ மனோகரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசினர் பொறியியல் கல்லூரிகள் எத்தனை உள்ளன?

(ஆ) 1992–93 ஆம் ஆண்டில் இவைகளில் பயிலும் மொத்த மாணவர் எண்ணிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரி உட்பட தமிழகத்தில் மொத்தம் ஆறு (6) அரசு பொறியியற் கல்லூரிகள் உள்ளன.

(ஆ) 1992–93 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளிலும், பொறியியல் பட்ட வகுப்பு/ பொறியியல் பட்ட மேற்படிப்பு, முழுநேரம்/பகுதி நேர வகுப்புகள் முதல் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்படும். மொத்த மாணவர்களின் எண்ணிக்கை (ஆண்/பெண்) உட்பட 1,685 ஆகும்.

47—

தொழிலாளர் நல நிதியை அதிகரிக்க அரசு முடிவு

வினா எண் 19317— திரு ஆர் பி பரமசிவம் : மாண்பு மிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1992–93 ஆம் ஆண்டில் தொழிலாளர் நல நிதியில் சேர்ந்த தொகை எவ்வளவு ?

(ஆ) இதனை மேலும் அதிகரிக்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியில் 1992–93 ஆம் ஆண்டு தொழிலாளர் பங்கு நிறுவனங்களின் பங்கு அரசின் பங்கு மற்றும் நீதிமன்றங்களின் மூலம் விதிக்கப்பட்ட அபராதத் தொகை, நிறுவனங்களின் மூலம் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை ஆகியவற்றுடன் தானா முன்வந்து கொடுக் கும் நன்கொடைத் தொகையும் சேர்த்து ரூ. 1,55,28,180 சேர்ந்துள்ளது.

(ஆ) இதனை மேலும் அதிகரிக்கச் செய்ய, தற்போது, ஒரு ஆண்டுக்கு ஒரு தொழிலாளிக்கு, தொழிலாளரின் பங்கு ரூ. 2, நிறுவனத்தின் பங்கு ரூ. 4, அரசின் பங்கு ரூ 2, என

வசூலிக்கப்பட்டு வரும் சந்தாத் தொகையினை ரூ. 3, ரூ. 6 மற்றும் ரூ. 3 என அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

48—

தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் கல்வி கற்றோர் விவரம்.

வினா எண் 19314—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் தொழிலாளர் நலத் திட்டங்களின் கீழ் பட்டப் படிப்பிற்காக தென்னாற்காடு மாவட்டத்தில் பயன்பெற்றோர் எத்தனைப் பேர்?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் தொழிலாளர் நலத் திட்டங்களின் கீழ் பட்டப் படிப்பிற்காகவும் பட்டய படிப்பிற்காகவும் தென்னாற்காடு மாவட்டத்தில் 1981–82 முதல் 1992–93 வரை பயன்பெற்றோர் விவரம் கீழ் வருமாறு :

1981–82	இல்லை
1982–83	இல்லை.
1983–84	இல்லை.
1984–85	11
1985–86	10
1986–87	30
1987–88	22
1988–89	36
1989–90	இல்லை
1990–91	37

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1991–92	..	..	..	..	23
1992–93	..	..	..	..	19
		மொத்தம்	..		188

49—

பள்ளிக் கட்டிடம் அரசு திறந்து வைத்தது.

வினா எண் 2405—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, தெய்வேந்திர நல்லூரில் பள்ளிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பெற்று இன்னும் திறக்கப் படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி தொகுதி, தெய்வேந்திர நல்லூரில் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக் கட்டிடம் 10–3–1993 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

50—

பழுதடைந்த பள்ளிக் கட்டிடத்திற்கு புதிய கட்டிடம் அரசின் திட்டம்.

வினா எண் 6902—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அம்மணி சத்திரம், பள்ளிக் கட்டிடம் பழுதடைந்து விட்டதால் அதற்கு புதிய கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், அம்மணி சத்திரம் பள்ளிக் கூடத்திற்கு புதிய கட்டிடம் கட்ட தற்போது செயற் குறிப்பு இல்லை.

51—

பள்ளிக் கட்டிடம் பழுதடைந்ததற்கு மாற்றுக் கட்டிடம்—அரசு நடவடிக்கை.

வினா எண் 7352—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டயங்காடு பள்ளிக் கட்டிடம் பழுதுபட்டு இருப்பதால் மாற்றுக் கட்டிடம் உடன் கட்டித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கட்டயங்காடு, உக்கடை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு இரு கட்டிடங்கள் உள்ளன. அதில் ஒரு கட்டிடம் மட்டும் பழுதடைந்துள்ளது. அந்தப் பழுதடைந்த கட்டிடத்திற்கு மாற்றுக் கட்டிடம் கட்ட தற்போது செயற் குறிப்பேதும் இல்லை.

52—

தொகுப்பு வீடுகள் கட்ட அரசு நடவடிக்கை.

வினா எண் 7750—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய சேந்திரக்கிள்ளை காலனிக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[1993 அக்டோபர் 26]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைப்படி 1992—93 ஆம் ஆண்டில் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கணக்கரப்பட்டு கிராமத்தில் 12 வீடுகளும், கீழ் மணக்குடி கிராமத்தில் 12 வீடுகளும், தில்லை விடங்கன் கிராமத்தில் 12 வீடுகளும், பின்னத்தூர் கிராமத்தில் 14 வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதால் இந்த நிதியாண்டில் சேந்திரக்கிள்ளை கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வாய்ப்பு இல்லை.

53—

பள்ளிக் கட்டிடம் கட்டும் திட்டம்—அரசு முடிவு.

வினா எண் 7778—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள பெரிய கோட்டை, புதுவயல், தின்னங்குளம் போன்ற கிராமங்களில் புதியதாக பள்ளிக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா‘

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பெரிய கோட்டை, புதுவயல் மற்றும் தின்னங்குளம் கிராமங்களில் அரசு அங்கீகாரம் பெறப்படாத பள்ளிகள் செப்டம்பர் 1990 முதல் தற்காலிகமாக கூரைக் கொட்டகையில் செயல்பட்டு வருகிறது. மேற்படி பள்ளிகளுக்கு நிரந்தரமாக அங்கீகாரம் பெறப்பட்டதும் புதிய பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

54—

ஊராட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்ட அரசு அனுமதி.

வினா எண் 7789—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் குமாரமங்கலம் ஊராட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்டித்தர அரசு அனுமதி வழங்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் குமாரமங்கலம் ஊராட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்டிக்கொடுக்க தற்போது செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை

55—

பஞ்சாயத்து அலுவலகம் கட்டுவதற்கு அரசு திட்டம்.

வினா எண் 8192—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்தில் கண்ணக்கன்காடு பஞ்சாயத்துக்கு பஞ்சாயத்து அலுவலகம் கட்டுவதற்கு அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் ஏனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் கண்ணக்கன்காடு பஞ்சாயத்திற்கு பஞ்சாயத்து அலுவலகம் கட்டுவதற்கு நிதி நிலைமையை பொறுத்து பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்.

1993 அக்டோபர் 26]

56—

சென்னை மாநகராட்சியின் மின் கட்டண செலவு.

வினா எண் 8741—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சிக்கு கடந்த 5 ஆண்டு காலத்திற்கான மின் கட்டண செலவு எவ்வளவு?

(ஆ) மின் கட்டண செலவைக் குறைக்க ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சென்னை மாநகராட்சிக்கு கடந்த ஐந்து ஆண்டு காலத்திற்கான மின் கட்டண செலவு மொத்தம் ரூ. 9,20,67,227 ஆகும்.

(ஆ) ஆம். மின்சக்தி இழப்பைத் தவிர்க்க சென்னை மாநகராட்சியால் இவ்வருடம் 300 கி.மீ. நீளத்திற்கு பழுதடைந்துள்ள கேபிள்களை புதுப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மின்கட்டண செலவைக் குறைக்கலாம்.

57—

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண் 9883—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதியில் ஸ்ரீராமன் காலனிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. ஸ்ரீராமன் காலனியில் மக்கள் தொகை தற்போது 310 ஆகும். இக்கிராமத்தில் ஒரு ஆழ்துளைக் கிணறு அமைத்து ஸ்ரீராமன் குடியிருப்புக்கும் காலனிக்கும் சேர்த்துக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்து நல்லமுறையில் இயங்கி வருகிறது.

58—

கட்டி முடிந்த கட்டப்பட வேண்டிய ஊராட்சி மன்றங்கள்.

வினா எண் 11365—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஒன்றியத்தில் கட்டி முடிக்கப்பெற்ற ஊராட்சி மன்றக் கட்டிடங்கள் எத்தனை?

(ஆ) கட்ட வேண்டிய ஊராட்சி மன்றக் கட்டிடங்கள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டம் போகலூர் ஊராட்சி ஒன்றியத்தில்.

(அ) கட்டி முடிக்கப்பட்ட ஊராட்சி மன்றக் கட்டிடங்கள் 14.

(ஆ) கட்ட வேண்டிய ஊராட்சி மன்ற கட்டிடங்கள் 12.

59—

பூங்காக்களை மேம்படுத்த அரசின் நடவடிக்கை.

வினா எண் 11707—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பூங்காக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

1993 அக்டோபர் 26]

(ஆ) பெரும்பாலான பூங்காக்கள் சரிவர பராமரிக்கப் படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) பூங்காக்களின் பராமரிப்புக்குரிய முக்கியத்துவம் கொடுக்குமாறு மாநகராட்சி அறிவுறுத்தப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் 88 பூங்காக்கள் உள்ளன. அவற்றில் 45 பூங்காக்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மற்ற 43 பூங்காக்கள் அடிப்படை வசதிகள் இல்லாததால் சரியாக பராமரிக்கப்படாமல் உள்ளன.

(ஆ) பராமரிக்கப்படாமல் இருக்கும் பூங்காக்களை— அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலமாக பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும், பராமரிக்கப்படாத பூங்காக்களை தண்ணீர் வசதி, சுற்றுச் சுவர் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து, மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக இவ்வருடம் ரூ. 75 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) பூங்காக்களை பராமரிக்கவும், புதிய பூங்காக்களை உருவாக்கவும் மாநகராட்சி செயல் திட்டம் தயாரித்துள்ளது. அதன் அடிப்படையில் பணிகளை மேற்கொண்டு பூங்கா பராமரிப்பு மேம்படுத்தப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

60—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அரசு திட்டம்.

வினா எண் 12000—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கீழப்புன வாசல் வடக்குப் பகுதியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. கீழப்புனவாசலில் ஒரு மின்விசைத் திட்டம் செயலில் உள்ளது. இதன் மேற்குப் பகுதியில் தனியே ஒரு கையிறைப்பான் அமைக்க வரும் நிதியாண்டுகளில் ஆவன செய்யப் படவிருக்கிறது.

61—

குழாய்க் கிணறு அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 12020—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பெரிய நாயகிபுரம் காமராஜ் நகர் மக்களுக்கு குழாய்க் கிணறு அமைக்க 1992-93-ம் ஆண்டில், அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. காமராஜ் நகர் பெரியநாயகிபுரத்தின் ஒரு பகுதி வரும் நிதியாண்டுகளில் இப்பகுதிக்கு முன்னுரிமைப் படி ஒரு கையிறைப்பான் அமைத்துத்தர ஆவன செய்யப்படும்.

62—

கிராமக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

வினா எண் 12021—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொரட்டூர் ஆதி திராவிடர் தெருவின் கீழ்ப்பகுதிக்கு ஆழ் குழாய்க் கிணறு அமைத்துத்தர 1992-93-ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொரட்டூர் ஊராட்சி, கொரட்டூர் கிழக்கு அரிசன காலனிக்கு ஒரு கையிறைப் பானும் கொரட்டூர் கிராம குடிநீர்த் திட்டத்தில் ஒரு குடிநீர் மடையும் பயனில் உள்ளது.

63—

மின் விசைத் திட்டம் நிறுவ அரசு முடிவு.

வினா எண் 12030—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி பெரியகத்திக் கோட்டைக்கு ஊரின் தெற்கு காட்டாற்றுக் கரையோரத்தில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?.

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். இக்கிராமத்திற்கு மின்விசைத் திட்டம் நிறுவ கருத்துரு உள்ளது. இது வரும் டிசம்பர் மாதத்தில் முடிக்கப்படவிருக்கிறது.

64—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஏற்படுத்தும் திட்டம்.

வினா எண் 12038—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மனக்காடு ஊராட்சி பாங்காரன் கொல்லைக்கு 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1993 அக்டோபர் 26

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. இங்கு ஒரு கையிறைப்பான் பயனில் உள்ளது.

65—

பரவாச்சிக் குளத்தில் தடுப்புச் சுவர் கட்ட அரசின் நடவடிக்கை.

வினா எண் 12043—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, கொள்ளுக்காடு பரவாச்சிக் குளத்தில் தடுப்புச் சுவர் கட்டித்தர 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொள்ளுக்காடு - பரவாச்சிக் குளத்தில் 1991-92-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 25 சதவிகிதம் ஊராட்சி பங்குத் தொகையின் கீழ் ரூ. 9,108 செலவில் தடுப்புச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

66—

பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு திட்டம்.

வினா எண் 12050—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, குருவிக்கரம்பை ஊராட்சி, கள்ளங்காட்டில் 1992–93-ல் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, குருவிக்கரம்பை ஊராட்சி, கள்ளங்காட்டில் 1992–93-ல் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

1993 அக்டோபர் 26]

67—

பள்ளிக் கட்டிடம் கட்ட திட்டம்.

வினா எண் 12053—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகிய நாயகிபுரத்தில் 1992–93-ல் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், அழகிய நாயகிபுரத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை.

68—

ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் அரசு கட்டித் தருவதற்கு முடிவு.

வினா எண் 12612—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணைவயல் ஊராட்சியைச் சேர்ந்த சுந்தர்ராஜபுரம் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டித்தர 1992–93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பண்ணைவயல் ஊராட்சியில் இதுவரை ஆதி திராவிடர்களுக்கு 1984–85, 1985–86, 1988–89 ஆகிய மூன்று வருடங்களில் 54 பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. சுந்தர்ராஜபுரம் காலனியில் 34 வீடுகள் (1984–85, 1985–86) ஏற்கனவே கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 1992–93-ல் சுந்தர்ராஜபுரம் காலனியில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டித் தர மன்னப்

பட்டா ஏதும் கொடுக்கப்படவில்லை. அடுத்து வரும் ஆண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்றவாறு விதிமுறைகளுக்குட்பட்டு வீடுகள் கட்டித் தர ஏற்பாடு செய்யப்படும்.

69—

மேல்நிலைத் தொட்டி கட்ட அரசின் கருத்து.

வினா எண் 12660—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை கரூர் ஊராட்சியைச் சேர்ந்த நடுவிக்காட்டிற்கு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்ட 1992-93 ஆம் ஆண்டில் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

70—

பஞ்சாயத்துக்கு புதிய கட்டிடம் அரசின் முடிவு.

வினா எண் 12719—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, சிலம்பூர் பஞ்சாயத்துக்கு ஒரு புதிய கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆண்டிமடம் தொகுதி சிலம்பூர் பஞ்சாயத்துக்கு ஒரு புதிய கட்டிடம் கட்டித்தர தற்போது இருக்கும் நிதி நிலைமையின் காரணமாக அரசிடம் செயற்குறிப்பேதும் இல்லை.

1993 அக்டோபர் 26]

71—

மெர்க்குரி விளக்குகள் அமைக்க அரசின் நடவடிக்கை.

வினா எண் 12731—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சிப் பகுதிகளில் ''மெர்க்குரி'' பல்புகள் அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை நகராட்சிப்பகுதியில் 105 மெர்க்குரி விளக்குகள் 15 சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் 2215 குழல் விளக்குகள் உள்ளன. நிதிநிலை பற்றாக்குறை காரணமாக பிரதான வீதிகளில் உள்ள தெரு விளக்குகள் அனைத்தையும் மெர்க்குரி விளக்குகளாக ஒரே சமயத்தில் மாற்றி அமைக்க இயலவில்லை. எனவே 1992–93-ம் ஆண்டு 100 மெர்க்குரி விளக்குகளும் 1993–1994 ஆண்டு 100 மெர்க்குரி விளக்குகளும் தற்சமயம் உள்ள தெரு விளக்குகளுக்கு பதிலாக மாற்றியமைக்கப்பட உள்ளது.

72—

ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம்.

வினா எண் 12973—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி (கி) பசுக்காரன் தெருவிலும் பள்ளி அருகிலும் 1992–93–ல் இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[1993 அக்டோபர் 26

73—

குடிநீர்த் திட்டத்திற்கு மின்மோட்டார் அரசு அமைத்துக் கொடுத்தது.

வினா எண் 13412—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பள்ளிக் கொண்டான் ஊராட்சி செட்டிக்காட்டில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு 1992–93ல் மின் மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

செட்டிக்காடு குடிநீர்த் திட்டத்திற்கு மின் மோட்டார் அமைத்து மின் இணைப்பு பெறப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு திட்டம் பராமரிப்புக்காக பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டது. சில மாதங்களாகவே திட்டம் நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

74—

கோட்ட வளர்ச்சி அலுவலகத்தை இடமாற்றம் செய்ய அரசு திட்டம்.

வினா எண் 14007—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடியில் இயங்கிவரும் கோட்ட வளர்ச்சி அலுவலகத்தை, மாவட்டம் பிரிக்கப்பட்டதால் திருத்துறைப்பூண்டிக்கு மாற்றுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடியில் இயங்கி வரும் கோட்ட வளர்ச்சி அலுவலகத்தை திருத்துறைப்பூண்டிக்கு மாற்றுவதற்கு செயற் குறிப்பேதும் தற்போது இல்லை.

75—

ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசின் திட்டம்.

வினா எண் 14026—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சீகன்காடு, வெள்ளாலங்காடு, பழுக்காடு, கோரியக் கொல்லை ஆகிய ஊர்களில் தண்ணீர் வழங்குவதற்கு ஆழ் துளைக் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

76—

ஊராட்சிக்கு கட்டிடம் அமைக்க அரசு முடிவு.

வினா எண் 14639—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியிலுள்ள ஓலையம்புத்தூர் ஊராட்சிக்குக் கட்டிடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சீர்காழி தொகுதியிலுள்ள ஓலையம்புத்தூர் ஊராட்சிக்கு கட்டிடம் கட்ட இந்த நிதியாண்டில் (1993–94) நிதி ஒதுக்கீட்டினைப் பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

77—

ஒன்றியப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை.

வினா எண். 14984—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றியத்திலுள்ள களக்குடி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளி மாணவர்கள் கட்டிட வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், கட்டிட வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மானூர் ஊராட்சி ஒன்றியம் களக்குடி கிராமத்திலுள்ள பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

78—

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆழ் குழாய்க் கிணறுகள்.

வினா எண் 15193—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி' பரமக்குடி ஒன்றியம், சோமநாத நகரில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் போடப்பட்டுள்ள ஆழ்குழாய்க் கிணறுகள் எத்தனை ?

(ஆ) இவற்றில் உபயோகத்தில் இல்லாதவற்றை பழுது பார்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியம், சோம நாத நகரில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் இரண்டு ஆழ் குழாய்க் கிணறுகள் (1988ல்) போடப்பட்டுள்ளன.

(ஆ) இவை இரண்டும் பயனில் உள்ளன. இது தவிர பரமக்குடி நகராட்சி குடிநீர்த் தேவைக்காக இப்பகுதியில் ஒரு ஆழ் குழாய் போடப்பட்டுள்ளது. இது சோமநாத நகர்ப் பகுதி மக்களின் ஆட்சேபணை காரணமாக இந்த ஆழ்துளைக் கிணற்றை பயனுக்குக் கொண்டு வர இயலவில்லை.

79—

ஆசிரியர் இல்லத்தைப் பராமரிக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 15262— திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், பாலமடை மேலூரில் ஆசிரியர்கள் இல்லத்தை பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், பாலமடை மேலூரில் ஆசிரியர்கள் இல்லத்தைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

80—

துவக்கப்பள்ளி கட்டிடத்தை அரசு நடவடிக்கை மூலம் பழுது பார்த்தல்.

வினா எண் 15265— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், வெங்கடாசலபுரம் கிராம ஒன்றிய துவக்கப்பள்ளி கட்டிடத்தை பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், வெங்கடாசலபுரம் கிராம ஒன்றிய துவக்கப்பள்ளி கட்டிடத்தை பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

81—

ஒன்றியப் பள்ளியை சீர்செய்ய அரசு நடவடிக்கை.

வினா எண் 15267—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், மேட்டுப்பிராஞ்சேரி ஒன்றியப் பள்ளிக் கட்டிடத்தைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஊராட்சி ஒன்றியம், மேட்டுப் பிராஞ்சேரி ஒன்றிய பள்ளிக்கூடத்தை ஒன்றியப் பொது நிதியிலிருந்து செலவழித்து சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

82—

தேசிய நெடுஞ்சாலையில் கழிவு நீரை அகற்ற வடிகால் அமைக்கும் திட்டம்.

வினா எண் 15709—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் தேசிய நெடுஞ்சாலையின் இரு பக்கமும் கழிவுநீரை அகற்ற வடிகால் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு கட்டப்படும்?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

83—

நடைபாதை ஆக்கிரமிப்பு கடைகளை அகற்ற அரசு நடவடிக்கை.

வினா எண் 16023—திரு. சே. செல்வராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் தியாகி குமரன் மார்க்கெட் தெற்குப் பகுதி நடைபாதையில் உள்ள கடை ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட தியாகி குமரன் மார்க்கெட் தெற்குப் பகுதி நடைபாதையில் உள்ள கடை ஆக்கிரமிப்புகள் கடந்த 30—1—1993 ஆம் தேதியன்று அகற்றப்பட்டுவிட்டன.

84—

குடிநீர் மேல் நிலைத் தொட்டியை பழுது பார்க்க அரசு நடவடிக்கை.

வினா எண் 16404—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியம், மடந்தை கௌரிபட்டியில் உள்ள குடிநீர் மேல்நிலத் தொட்டி பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியம், மடந்தை கௌரிப் பட்டியில் உள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டியை பழுதுபார்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

85—

ராதாபுலி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மதிப்பீடு.

வினா எண் 16431—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, ராதாபுலி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் ஒப்பந்தத் தொகை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

		ரூபாய்.
1.	ராதாபுலி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் இரண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி பணிக்கான ஒப்பந்தத் தொகை ..	2,14,893.00
2.	ராதாபுலி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் நீரேற்றுக் குழாய் பதிக்கும் பணி (90 மி.மீ. குழாய் பி.வி.சி.) 5 கி.மீ. தூரம் ஒப்பந்தத் தொகை	68,927.00
3.	ராதாபுலி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் நீரேற்றுக் குழாய் பதிக்கும் பணி (90 மி.மீ. பி.வி.சி. குழாய்) 10 கி. மீ. ஒப்பந்தத் தொகை	1,26,710.00
	மொத்தம்	4,10,530.00

1993 அக்டோபர் 26]

4. மோட்டார் அறை மற்றும் தெருக் குழாய் கட்டுமானப் பணிகளுக்கு உரிய மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளித்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு உள்ளன.

86—

வைகை ஆற்றில் ஆழ்குழாய் கிணறு மேம்படுத்த திட்டம்.

வினா எண் 16507—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, அரியக்குடி புத்தூருக்கு வைகை ஆற்றில் ஏற்படுத்திய ஆழ்குழாய்க் கிணறுகள் பயன்படுகின்றனவா?

(ஆ) அதனை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) அரியக்குடி புத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக மெய்யனேந்தல் அருகில் வைகை ஆற்றில் 4.5 மீட்டர் விட்டமுள்ள ஒரு நீர் ஊடுருவிக் கிணறு தான் அமைக்கப்பட்டுள்ளது. அக்கிணற்றிலிருந்து தான் அரியக்குடி புத்தூருக்கு சோதனை ஓட்டம் நீருந்துப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வேறு ஆழ்துளைக் கிணறுகள் எதுவும் வைகை ஆற்றில் அரியக்குடி புத்தூருக்கு ஏற்படுத்தப்படவில்லை.

(ஆ) வினா எழாது.

87—

குடிதண்ணீர்ப் பற்றாக் குறையை நீக்க அரசு நடவடிக்கை

வினா எண் 16513—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம், பி. புத்தூரில் குடிதண்ணீர் பற்றாக்குறை இருப்பதை போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்

பி. புத்தூர் காலனி கிராமத்திற்கு குடிநீர் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு 1992–93 ஆம் வருடம் அக்கிராமத்திற்கு ஒரு ஆழ் குழாய் அமைத்து ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

88—

கூடுதல் தெரு விளக்குகள் பொருத்த அரசு எடுத்த நடவடிக்கை.

வினா எண் 17003— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் தெரு விளக்குகள் வேண்டி நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அவைகள் எந்த ஆண்டு வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி நகராட்சியிலிருந்து 152 புதிய தெரு விளக்குகள் கேட்டு மின்வாரியத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது. அதில் 100 தெரு மின் விளக்குகள் மட்டும் அனுமதிக்கப்பட்டு ரூ. 30,840 மின் வாரியத்தால் கோரப்பட்டதின் பேரில் இத்தொகை மின் வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

100 புதிய தெரு விளக்குகள் இரண்டு மாதங்களில் பொருத்தப்படும். மீதி 52 புதிய தெரு விளக்குகள் அமைக்க, மின் வாரியத்தால் அனுமதிக்கப்பட்டு, கட்டண விபரம் நகராட்சியில் கிடைக்கப்பெற்றவுடன் மின் விளக்குகள் நிறுவ ஆவன செய்யப் படும்.

89—

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு பரிசீலனை.

வினா எண். 7324—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சி உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

1993–94 ஆம் பகுதி 2 திட்டத்தில் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. எனவே நிதிநிலைக்கேற்பவும் அவசியத்தினை அனுசரித்தும் நடுவிக்குறிச்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

90—

சில்லாங்குப்பம் ஆதிதிராவிடர் மயானத்திற்கு மயானப்பாதை அமைத்தல்.

வினா எண். 8010—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், சில்லாங்குப்பம் ஆதி திராவிட மக்களுக்கு மயானப்பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதியில் உள்ள சின்ன குமட்டி மதுரா சில்லாங்குப்பத்தில் ரி. ச. எண். 236/6 நத்தத்தில் ஆதிதிராவிடர் காலனி உள்ளது. அவர்களுக்கான மயானம் ரி.ச. 223/4-ல் 0.10.5 ஹெக்டேர் பரப்பில் உள்ளது. இவர்கள் ரி.ச. 236/6-லிருந்து ரி.ச. 237 பாட்டை, ரி.ச. 227 பாட்டை, ரி.ச. 224/5-ஏ, 6, 7, 13 ஆகிய புலன்கள் வழியாகச் சென்று மயானத்தை அடைகின்றனர். எனவே சுமார் 90 மீட்டர் நீளத்திற்கு பாதை அமைக்க பட்டா நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

[1993 அக்டோபர் 26

91—

ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்ட அரசு பரிசீலனை.

வினா எண் 11268—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, சாத்தப்பாடி ஆதிதிராவிடர் பள்ளி மாணவர் விடுதிக் கட்டிடம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப இது குறித்து பரிசிலிக்கப்படும்.

92—

அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வு பயிற்சி நிலையம்.

வினா எண் 16009—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வு முன் பயிற்சி மையத்தில் (Pre-Examination Training Centre) 1992-93-ல் சேர விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேர் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) சென்னையில் உள்ள அகில இந்திய பணிகளுக்கான முன்னோடி தேர்வு பயிற்சி நிலையத்தில் 1993-ல் சேர விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 510.

(ஆ) அவர்களில் பயிற்சிக்காக 60 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றனர்.

1993 அக்டோபர் 26]

93—

ஆதிதிராவிடர் நலத் துறையில் விளம்பர ஊர்திகள்.

வினா எண். 16496—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் நலத்துறையில் உள்ள விளம்பர ஊர்திகள் எத்தனை?

(ஆ) அதனால் ஏற்பட்ட பலன்கள் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) இரு விளம்பர ஊர்திகள் உள்ளன.

(ஆ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரப் பணிக்காக சென்னையையும் திருச்சியையும் தலைமையிடங்களாகக் கொண்டு இயங்கும் இரண்டு பிரிவுகள் உள்ளன. இவ்விரு பிரிவுகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் ஒரு விளம்பர ஊர்தி உள்ளது. இவை கிராமங்களுக்குக் குறிப்பாக தீண்டாமை பரவியுள்ள கிராமங்களுக்குச் சென்று தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரித்துள்ள தீண்டாமையின் கொடுமைகளை விளக்கும் திரைப்படத்தைப் பொது மக்களுக்குத் திரையிட்டுக் காட்டுகின்றன. குறிப்பாக சாதி இந்துக்கள் வாழும் பகுதிகளில் இப்படம் திரையிடப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் பிரச்சார ஊர்தி மூலம் இது வரையில் 1,004 இடங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன் திரைப்படம் காட்டப்பட்டது.

94—

கோவில் நிலம் குத்தகைக்கு விட அரசு நடவடிக்கை.

வினா எண் 9775—திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் ஏரிகாத்த ராமர் கோயிலுக்குச் சொந்தமான ஏரி எதுவாயில் அரண்மனைக்குளம் என்னும் இடத்தில் சுமார் 9 ஏக்கர் நிலத்தைத் தனியாருக்கு நியாயமான குத்தகைக்கு விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

மதுராந்தகம் அருள்மிகு ஏரிகாத்தராமர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 6.27 ஏக்கர் நிலம் ஏரியின் உள் வாயிலில் அமைந்துள்ளதால் நீர் பிடிப்பினால் எவ்வித பயிரும் சாகுபடி செய்ய இயலாமல் கரம்பாக உள்ளது. தனியார் எவரேனும் தன் சொந்த பொறுப்பில் நிலத்தினை சீர் செய்து குத்தகைக்கு ஏற்க முன்வந்தால் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

95—

தமிழகத்தில் அதிக வருமானம் வரும் திருக்கோயில்.

வினா எண் 15800— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அதிகவருமானம் உள்ள திருக்கோவில் எது?

விடை—

மாண்புமிகு திரு வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

தமிழ்நாட்டிலே அதிக வருமானம் உள்ள திருக்கோயில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆகும்.

96—

அறங்காவலர் குழு அமைக்கத் திட்டம்.

வினா எண் 16326— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சா கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து அறநிலையத்துறை கோயில்களில் ஆன்மீகத் துறையைச் சேர்ந்தவர்களை தக்காராகவும் அறங்காவலர் குழுவிலும் நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நியமிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் நியமனம் செய்யப்பட்ட அறங்காவலர் குழுவின் பதவிக்காலம் முடிவடைந்து விட்டால் அறங்காவலர் குழுவின் செய் கடமைகளைச் செய்ய தற்காலிக ஏற்பாடாக தக்கார் நியமனம் செய்யப்படுகிறது. தக்கார் நியமனம் செய்யப்படும் தருணத்தில் சட்டப் பிரிவு 26 ன்படி உள்ள தகுதியின் அடிப்படையில் இந்து சமய அறநிலையத்துறையைச் சேர்ந்தவர்களைத் தக்காராக நியமனம் செய்யப்படுகிறது. அதே போல் ஆன்மீகத் துறையைச் சார்ந்தவர்கள் விண்ணப்பம் செய்தால் தகுதியின் அடிப்படையில் அறங்காவலர்களாக நியமனம் செய்யப்பட்டு வருகிறது.

97—

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்தை அரசு ஏற்கத் திட்டம்.

வினா எண் 16441—திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல் மருவத்தூர் ஆதி பராசக்தி ஆலயத்தை அரசே ஏற்றுக் கொள்வது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

98—

இலங்கை அகதிகளுக்குச் சலுகை.

வினா எண் 12698—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரையில் இலங்கை அகதிகளுக்காக சமையல் கொட்டகையும் மின் வேலைகளுக்காக வயர்களும் போடப்பட்டதை தற்பொழுது ஏலம் விடப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் தொகை எவ்வளவு?

(இ) ஏல விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) எழவில்லை.

99—

பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை.

வினா எண் 16640—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களில் விடுதிகளில் அனுமதி கேட்டு கிடைக்காதவர்கள் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவியர் எண்ணிக்கை பின்வருமாறு :—

பள்ளி வகை.	பள்ளிகள் எண்ணிக்கை.	மாணவியர் எண்ணிக்கை 1992–93	
		பிற்படுத்தப்பட்டோர்.	மிகப் பிற்படுத்தப்பட்டோர்.
(1)	(2)	(3)	(4)
1. உயர்நிலைப்பள்ளி	1	37	43
2. மேல் நிலைப்பள்ளி	4	1,685	185
	5	1,722	228

1993 அக்டோபர் 26]

(ஆ) பரமக்குடியில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர்களில் விடுதி அனுமதி கேட்டு கிடைக்காதவர்கள் விவரம் பின்வருமாறு :—

	மாணவியர்கள் எண்ணிக்கை.
(1)	(2)
பரமக்குடி அரசு மாணவியர் விடுதியில் தங்கியுள்ளவர்கள்.	50
மேற்படி விடுதியில் சேர அனுமதி கிடைக்கப் பெறாத மாணவியர்கள் (மொத்தம்).	27
மேற்படி விடுதியில் சேர அனுமதி கிடைக்கப் பெறாத பரமக்குடி அரசு மாணவியர் மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்தவர்கள்.	23

100—

சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைப் பெட்டிகளை இலவசமாக வழங்கத் திட்டம்.

வினா எண் 19233—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம், பாசூர் கிராமத்தில் நலிவடைந்த சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைப் பெட்டிகளை இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

ஒவ்வொரு ஆண்டும் அந்தந்த ஆண்டின் நிதி ஒதுக்கீட்டிற்கேற்பவும், மாவட்டங்களின் தேவை அடிப்படையிலும் சலவைப்பெட்டிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது. இலவச சலவைப்பெட்டியைபெற மனுதாரர் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை சேர்ந்த சலவைத் தொழிலாளராகவும், ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்கு மிகாதவராகவும் இருத்தல் வேண்டும். அத்தகைய தகுதிகள் வாய்ந்த மனுதாரர்களின் மனுக்கள் விசாரணைக்குப் பின் தகுதியிருப்பின் வரிசைக் கிரமமாக பதிவேட்டில் பதிந்து; முதுநிலையடிப்படையில் சலவைப் பெட்டிகள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் வழங்கப்பட்டு வருகிறது.

1993 அக்டோபர் 26]

(எட்டாம் பட்டியல்)

1—

சொக்கம்பட்டி கிராமத்தில் தனியாக வாக்குச்சாவடி அமைத்தல்.

வினா எண் 19375—திரு. சஞ்சய் ராமசாமி : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி சிவகாசி யூனியன் சொக்கம் பட்டி கிராமத்திற்கு தனியாக வாக்குச்சாவடி அமைத்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும் ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2—

தமிழகத்தில் மத்திய சிறைச்சாலைகளில் தொழில் நிறுவனம் ஏற்படுத்துதல்.

வினா எண் 5927—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மத்திய சிறைச்சாலைகளில் எளிதாகக் கிடைக்கும் உழைப்பை (Cheap Labour) பயன்படுத்தி தொழில் நிறுவனம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சிறை தொழிற் கூடங்களுக்கு ஒரு தொழில் நிறுவனம் நிறுவுவதற்கான செயற்குறிப்பு சிறைத் துறை தலைவருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

3—

Number of under trials among women and children.

Question No. 11568—Dr. BEATRIX D'SOUZA : Will the Hon. the Minister for Law be plea ed to st te:

Whether stastistics are avail ble for number of under tri ls among women and children ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

ஆம்.

23–2–1993 நாள் நிலவரப்படி தமிழ் நாட்டிலுள்ள சிறைகளில் பெண் மற்றும் இளம் சிறார் (ஆண் மற்றும் பெண்) விசாரணைச் சிறைவாசிகளின் எண்ணிக்கை பின் வருமாறு—

பெண்கள்—128.
இளம் ஆண்கள்—90.
இளம் பெண்—17.

4—

ஆதிதிராவிடர் மற்றும் சீர்மரபினருக்கு தனியாக நீதி மன்றங்கள்.

வினா எண் 11734—திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் ஆதி திராவிடர் பழங்குடியினர் மற்றும் சீர் மரபினர்களுக்கு தனியாக நீதி மன்றங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை நீதிமன்றங்கள் அமைக்கப் படும் ?

(இ) இந்த வழக்குகளில் வாதிடும் வழக்கறிஞர்களுக்கு சிறப்பு சலுகைகள் அளிக்கப்படுமா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : அரசாணை எண். 219, உள்துறை நாள் 29-1-1990-ல் மாவட்ட செசன்ஸ் நீதிமன்றங்கள் பிற்படுத்தப்பட்ட அரிசன மற்றும் பழங்குடியினர் (பாது காப்பு) சட்டம், 1989-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்கு களை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்களாக அறிவிப்பு செய் யப்பட்டு 30-2-1990 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவன்றி 13-11-1981 நாளிட்ட உள் துறையின் அரசாணை எண். 2688-ல் குடி உரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப் பதற்கென நான்கு தனி நீதிமன்றங்கள் மதுரை, திருச்சிராப் பள்ளி, கும்பகோணம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங் களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவை தவிர இத்தகைய வழக்குகளை விசாரிப்பதற்கென நாகப் பட்டினத்தில் தனி நீதிமன்றம் அமைக்கும் செயற் குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் தனியே உள்ளது.

(இ) இத்தகைய வழக்குகளில் வழக்காடும் வழக்கறிஞர் களுக்கு சிறப்பு சலுகைகள் ஏதும் அளிக்கப்படுவதில்லை.

5—

புதுக்கோட்டை மாவட்டத்தில் தொழில் மற்றும் குடும்ப வழக்குகளின் விபரம்.

வினா எண் 16669 திரு. சி. சுவாமிநாதன் : மாண்பு மிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 1989-90 ஆம் ஆண்டுகளில் தொழில் மற்றும் குடும்ப சம்பந்தமான வழக் குகள் எத்தனை ?

(ஆ) அதில் தீர்க்கப்பட்ட வழக்குகள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

(அ) 1989-90 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட் டத்தில் தொழில் சம்பந்தமான 83 வழக்குகளும் (இவற்

றில் தொழில் தகராறு குறித்து 55 வழக்குகள் மற்றும் நஷ்டஈடு குறித்து 28 வழக்குகள் ஆகும்) குடும்ப சம்பந்தமான 54 வழக்குகள் தொடரப்பட்டன.

(ஆ) இவ்வழக்குகளில் தொழில் சம்பந்தமான 38 வழக்குகளும் (இவற்றில் தொழில் தகராறு குறித்து 14 வழக்குகள் மற்றும் நஷ்டஈடு குறித்து 24 வழக்குகள் ஆகும்.) குடும்ப சம்பந்தமான 38 வழக்குகளும் 1989-90 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டன.

6—

சிறைச்சாலை ஆணையம் ஏற்படுத்துதல்.

வினா எண் 21154—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல்துறை ஆணையம் போல் சிறைச்சாலை ஆணையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

காவல் துறை ஆணையம் போல், சிறைச்சாலை ஆணையம் ஏற்படுத்த தற்சமயம் அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

7—

அலிவலத்தில் மாடு அடைக்கும் பவுண்டு கட்டுதல்.

வினா எண் 12673—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, அலிவலத்தில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, அலிவலத்தில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ் நாட்டில் உள்ள அனைத்து பழு

1993 அக்டோபர் 26]

தடைந்த கால்நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இக் கருத்துரு பெறப் பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால் நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

மகிழங்கோட்டையில் மாடு அடைக்கும் பவுண்டு கட்டுதல்.

வினா எண் 12675 —திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, மகிழங்கோட்டையில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, மகிழங்கோட்டையில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இக் கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

ஏரிப்புறக்கரையில் மாடுகட்டும் பவுண்டு கட்டுதல்.

வினா எண் 12676—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஏரிப்புறக் கரையில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, ஏரிப்புறக் கரையில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுதுபார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப்பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10—

புனவாசலில் மாடு அடைக்கும் பவுண்டு கட்டுதல்.

வினா எண் 12677—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, புனவாசலில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் வருவாய்த் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, புனவாசலில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக் கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

1993 அக்டோபர் 26]

11—

ஆவணத்தில் மாடு கட்டும் பவுண்டு கட்டுதல்.

வினா எண் 12678—திரு. ஆர். சிங்காரம் : மாண்பமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஆவணத்தில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, ஆவணத்தில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக் கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலைமையை அனுசரித்து கால் நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

ரெண்டாம் புளிக்காட்டில் மாடு அடைக்கும் பவுண்டு கட்டுதல்.

வினா எண் 12679—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ரெண்டாம் புளிக்காட்டில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி ரெண்டாம் புளிக்காட்டில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால்நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க

[1993 அக்டோபர் 26

ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதி நிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13—

குருவிக் கரம்பையில் மாடு அடைக்கும் பவுண்டு கட்டுதல்.

வினா எண் 12681—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, குருவிக் கரம்பையில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, குருவிக்கரம்பையில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால்நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14—

துறவிக் காட்டில் மாடு அடைக்கும் பவுண்டு கட்டுதல்.

வினா எண் 12682—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, துறவிக் காட்டில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் வருவாய்த்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, துறவிக்காட்டில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால்நடைப் பட்டிகளையும் பழுதுபார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆவணயர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இக் கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால் நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

15—

ரெட்டைவயலில் மாடு அடைக்கும் பவுண்டு கட்டுதல்.

வினா எண் 12691—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ரெட்ட வயலில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, ரெட்டவயலில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக் கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

16—

பெருமகளூரில் மாடு அடைக்கும் பவுண்டு கட்டுதல்.

வினா எண் 12692—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பெருமகளூரில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, பெருமகளூரில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப் பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால் நடைப்பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17—

களத்தூரில் மாடு அடைக்கும் பவுண்டு கட்டுதல்.

வினா எண் 12693—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, களத்தூரில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, களத்தூரில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ் நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய்த் துறை நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக் கருத்துரு பெறப் பட்டவுடன் நிதி நிலையை அனுசரித்து கால் நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

18—

காலகத்தில் மாடு அடைக்கும் பவுண்டு கட்டுதல்.

வினா எண். 12694—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, காலகத்தில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, காலகத்தில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப் பட்டவுடன் நிதி நிலையை அனுசரித்து கால் நடைப் பட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

19—

மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும், மருத்துவர்களுக்கும்,—வெள்ளை மேல் சட்டை அணிவதைக் கட்டாயமாக்குதல்.

வினா எண் 11344—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மருத்துவக் கல்லூரி மாணவர்களும், அரசு மருத்துவர்களும் கட்டாயமாக வெள்ளை மேல் சட்டை அணிய அரசு ஆணை பிறப்பிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஏற்கனவே நடைமுறையில் உள்ள விதிகள் படி, மருத்துவக் கல்லூரி மாணவர்களும் மருத்துவர்களும் பயிலும்போதும் கடமையாற்றும் போதும் வெள்ளை மேல் சட்டை அணிந்து கொண்டுள்ளார்கள். எனவே, இதைக் கட்டாயமாக்கி உத்திரவிட வேண்டிய அவசியமில்லை.

20—

இடையாத்தி தாய் சேய் நல விடுதிக்கு மருத்துவரை நியமனம் செய்தல்.

வினா எண் 13479—திரு. ஆர் சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுததுறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தியிலுள்ள தாய் சேய் நல விடுதிக்கு 1992-93-ல் மருத்துவர் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இல்லை.

21—

நயினார் கோயில், பாம்பூர் மற்றும் வெங்கடங்குறிச்சி சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 16043—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, நயினார்கோவில் ஆரம்ப சுகாதார நிலையம், பாம்பூர் ஆரம்ப சுகாதார நிலையம், வெங்கடங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

பரமக்குடி தொகுதி, நயினார் கோவில், பாம்பூர் மற்றும் வெங்கடங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டிடம், மருத்துவ அலுவலர் குடியிருப்பு ஆகியவை கட்ட அரசு 1990-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு கட்டிடப் பணிகள் நிறைவேறி வருகின்றன.

1993 அக்டோபர் 26]

22—

பார்த்திபனூர் மற்றும் சத்திரக்குடி ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துதல்.

வினா எண் 16679—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையம், சத்திரக்குடி ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பரமக்குடி தொகுதி, பார்த்திபனூர் மற்றும் சத்திரக்குடி ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

23—

சென்னை மாநகரில் பல்லவன் பேருந்துகளில் நெரிசல் நேரங்களில் நிற்கும் இடங்களை அதிகரிக்க இருக்கைகள் அகற்றுதல்.

வினா எண் 8164—திரு. மா. சா. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் பல்லவன் பேருந்துகளில் நெரிசல் நேரங்களில் அதிகம் பேர் பயணம் செய்யும் முறையில் பேருந்தின் உள்பகுதியில் நிற்கும் இடங்களை அதிகரிக்க இருக்கைகள் அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சென்னை நகரில் நெரிசல் நேரங்களில் அதிகம் பேர் பயணம் செய்யும் முறையில் குறைவான இருக்கைகளுடன் கூடிய சுமார் 100 பேருந்துகள் தற்பொழுது இயக்கப்பட்டு வருகின்றன. நெரிசல் நேரங்களில் இத்தகைய பேருந்துகள் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டாலும் மற்ற நேரங்களில் சில

பயணிகளுக்கு உட்கார்ந்து பயணம் செய்ய இருக்கைகள் கிடைப்பதில்லை. எனவே பயணிகளின் ஒரு பகுதியினர் குறைவான இருக்கைகளுக்கு ஆதரவாகவும் மறு பகுதியினர் எதிர்க்கவும் செய்கின்றனர். இருந்த போதிலும் பயணிகள் எண்ணிக்கை கூடிவரும் நிலையில் இத்தகைய குறைவான இருக்கைகள் கொண்ட பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டிய அவசியம் பற்றி பரிசீலிக்கப்படும்.

24—

சென்னை-திருச்சி, துவரங்குறிச்சி, ஆங்கிலயம்பட்டி, குட்டுப்பட்டி, நத்தம்-வத்திப்பட்டி வழியாக மதுரைக்கு திருவள்ளுவர் கழகப் பேருந்து.

வினா எண் 8457—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை - கொட்டாம்பட்டி - நத்தம் மதுரை வழித் தடத்தைவிட, சென்னை - திருச்சி, துவரங்குறிச்சி, ஆக்கியம்பட்டி குட்டுப்பட்டி நத்தம் வத்திப்பட்டி வழியாக மதுரை செல்வதில் சுமார் 20 கிலோ மீட்டர் பயண தூரம் குறைவதாலும் அந்த வழித்தடத்தில் துவரங்குறிச்சி - நத்தம் வரையில் மெட்டல் தார் சாலையாக இருப்பதாலும், இவ்வழித் தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து ஒன்று புதிதாக இயக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது தடம் எண். 135 சென்னையிலிருந்து மதுரைக்கு திருச்சி, விராலிமலை, துவரங்குறிச்சி, கொட்டாம்பட்டி, நத்தம் வழியாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப் படுகிறது. இந்த வழித் தடத்தின் நீளம் 451 கிலோ மீட்டர்களாகும். இதில் நாள்தோறும் 2 பேருந்துகள் 2 ஒரு வழிப் பயணமாக இயக்கப்படுகின்றன.

இந்த வழித் தடத்தினை ஆக்கியம்பட்டி, குட்டுப்பட்டி, நத்தம், வத்திப்பட்டி வழியாக மாற்றி இயக்க வேண்டும் என்பது கோரிக்கையாகும். துவரங்குறிச்சி ஆக்கியம்பட்டி குட்டுப்பட்டி, நத்தம், வத்திப்பட்டி சாலை 10 அடி அகலமுள்ள ஒரு பேருந்து மட்டுமே செல்லக் கூடிய பாதையாக உள்ளது.

1993 அக்டோபர் 26]

இந்தச் சாலையின் குறுக்காக காட்டாறு ஒன்றும் பாலம் இல்லாத நிலையில் கடக்கின்றது. எனவே இத்தகைய சாலையில் விரைவுப் பேருந்து இயக்குவது சாத்தியமில்லை.

25—

சென்னைக்கு வந்து செல்லும் பேருந்துகள் தாம்பரத்தில் நின்று செல்ல வசதி செய்தல்.

வினா எண் 9913-ஏ,—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கு வந்து செல்லும் பேருந்துகள் தாம்பரத்தில் நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல வசதி இல்லாமல் நடுரோட்டிலேயே பயணிகளை ஏற்றிச்செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்து நின்று செல்ல வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) பயணிகளின் வசதிக்காக தாம்பரத்தில் அனைத்து வசதிகளுடன் பேருந்து நிலையம் செயல்பட்டு வருகின்றது. தாம்பரத்திலிருந்து சென்னை, தி. நகர், ஆவடி, வடபழனி, நடுவீரன்பட்டி, திருநீர்மலை போன்ற இடங்களுக்குச் செல்லும் பேருந்துகள் தாம்பரம் பேருந்து நிலையத்திலிருந்து பயணிகளை ஏற்றிச் செல்கின்றன. ஆனால் கூடுவாஞ்சேரி, வண்டலூர் உயிரியல் பூங்கா, காமராஜபுரம் ஆகிய இடங்களிலிருந்து வரும் பேருந்துகள் தாம்பரம் பேருந்து நிலையத்தில் போதிய இட வசதியின்மையால் சிறு வியாபாரிகள், கை வண்டிகள், பழக்கடை, சாலை வியாபாரிகளின் ஆக்கிரமிப்பால் சாலையின் ஓரத்தில் நிறுத்தி பயணிகளை இறக்கியும், ஏற்றியும் செல்கின்றன.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

26—

அரசு அலுவலகங்களில் ஓட்டுநராகப் பணியாற்றுபவர்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பஸ்பாஸ் வழங்குதல்.

வினா எண் 10751—திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அலுவலகங்களில் ஓட்டுநராகப் பணியாற்றுபவர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் இலவச பாஸ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இல்லை.

27—

மணல் கர்ட்டனூர் மற்றும் வடமலைப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் நிழற்குடைகள் அமைத்தல்.

வினா எண் 14502—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஒன்றியம் வெங்கடம்பட்டி ஊராட்சி மணல் கர்ட்டனூர் வடமலைப்பட்டி ஆகிய ஊர்களுக்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் பயணிகள் நிழற்குடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

28—

தமிழ்நாட்டில் ஓடும் அரசு மற்றும் தனியார் பேருந்துகள்.

வினா எண் 16075—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு போக்குவரதந்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஓடும் அரசு மற்றும் தனியார் பஸ்கள் எததனை?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர்:

அரசுப் பேருந்துகள்	14,536
தனியார் பேருந்துகள்	5,575
மொத்தம்	20,111

29—

ஆலங்குடியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக்கழக பணிமனை.

வினா எண் 16474—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி ஆலங்குடியில் புதியதாய் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி ஆலங்குடியில் மருது பாண்டியர் போக்கு வரத்துக் கழகத்தாரால் பணிமனை அமைக்க கரம்பக்குடி சாலை யில் 2.09 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு கடந்த மாதம் வருவாய்த்துறையினரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பாது காப்பு கருதி முள் வேலி அமைக்கும் பணி மட்டும் நடைபெற வுள்ளது. இன்றைய நாளில் ஒரு பணிமனை அமைக்க போக்கு வரத்துக் கழகத்திற்கு சுமார் ரூ. 30 லட்சம் தேவைப்படுகிறது. நிதிநிலைமையினை கருத்தில் கொண்டு இந்த ஆண்டு கட்டு மானப் பணிகள் தொடங்கவில்லை.

30—

தமிழகத்தில் ஆதி திராவிடர்களுக்கென ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகள்.

வினா எண் 15689—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கைத்தறித துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆதி திராவிடர்களுக்கு என ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகள் எத்தனை?

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம் அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலையின் நிதிநிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் ஆதிதிராவிடர்களுக்கு என ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவு நூற்பாலை ஒன்றாகும். அந்த நூற்பாலை இராமநாதபுர மாவட்டத்தில் அச்சங்குளத்தில் அமைந்துள்ளது.

(ஆ) இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 19-3-1982 அன்று பதிவு செய்யப்பட்டு 3-5-1982 முதல் செயல்பட்டு வருகிறது. இக் கூட்டுறவு நூற்பாலை 12,320 கதிர்வீச்சுக்களுடன் செயல்பட்டு வருகிறது. இக் கூட்டுறவு நூற்பாலை 55 உறுப்பினர்களுடன் மொத்த பங்கு மூலதனமாக ரூ. 1,48,59,400-டன் செயல்பட்டு வருகின்றது. இதில் அரசு பங்கு மூலதனம் ரூ. 1,46,50,000 ஆகும். இக் கூட்டுறவு நூற்பாலை 1991-92-ம் ஆண்டில் ரூ. 40,83,518.68 நிகர நஷ்டத்தில் இயங்கி வருகின்றது. இக் கூட்டுறவு நூற்பாலையின் நடப்பு சொத்து ரூ. 231.58 லட்சம் ஆகும். இதில் ஆலை செலுத்த வேண்டிய கடன் ரூ. 179.62 இலட்சம் ஆகும். ஆலையின் சொத்து கடனை விட ரூ. 51.96 இலட்சம் அதிகமாக இருப்பதாலும் ஆலையினை இலாபத்தின் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாலும் எதிர்காலத்தில் இக் கூட்டுறவு நூற்பாலை இலாபத்தில் இயக்குவதற்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன.

31—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அரசு நூற்பாலைகள்.

வினா எண் 17146—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு அரசு நூற்பாலைகள் எத்தனை?

(ஆ) இதில் இலாபத்தில் இயங்கும் நூற்பாலைகள் நஷ்டத்தில் இயங்கும் நூற்பாலைகள் யாவை?

TRUTH ALONE TRIUMPHS

26 அக்டோபர் 1993]

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) ஒன்று. (இராமநாதபுரம் மாவட்டம் அச்சன் குளம் கிராமத்தில் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை என்ற பெயரில் அரசுக்கு சொந்தமான கூட்டுறவு நூற்பாலை இயங்கி வருகிறது.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை தற்போது ஜவுளித் தொழிலில் நிலவிவரும் மந்த நிலை காரணமாக நட்டத்தில் இயங்கி வருகிறது.

32—

திருவான்மியூர்—எண்ணூர் இணைப்பு சுற்றுவழிச்சாலை.

வினா எண் 6524—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவான்மியூர்—எண்ணூர் இணைப்புச் சுற்றுவழிச்சாலை அமைப்பில் இதுவரை நடந்துள்ள பணி விவரம் என்ன?

(ஆ) இதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) இந்த திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

(ஈ) இத்திட்டப்பணி எப்போது முழுமையாக நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) திருவான்மியூரிலிருந்து எண்ணூரை அடைவதற்கு தமிழ் நாடு, நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் கீழ்கண்ட பகுதிகளாக பிரிக்கப்பட்டு, சாலை பணி நடைபெற்று வருகிறது. அதன் விவரம் கீழ்வருமாறு:—

[1993 அக்டோபர் 26

(1) தென்பகுதி உள்வட்டச்சாலை இருவழி நடப்பாதை கொண்டதாக தேசிய நெடுஞ்சாலை 45-ல் கி.மீ. 1/41-ல் ஆரம்பிக்கப்பட்டு பழைய மகாபுலிபுரம் சாலையில் கி.மீ. 13/4-ல் முடிவடைகிறது.

(2) தேசிய நெடுஞ்சாலை 45-ல் கி.மீ. 14/1-ல் இருந்து கி.மீ. 12/4 (கத்திப்பாரா சந்திப்பு) வரை ஆறுவழி நடப்பதையாக அகலப்படுத்தும் பணி.

(3) தேசிய நெடுஞ்சாலை 45-ல் கி.மீ. 18/4-ல் இருந்து (கத்திப்பாரா சந்திப்பிலிருந்து) உள்வட்டச்சாலை ஆரம்பமாகிறது. இது கி.மீ. 0/0 முதல் கி.மீ. 17/5 வரை ஆகும்.

(4) உள்வட்டச்சாலையில் தொடர்ச்சியாக வலிக்குப் பகுதி உள்வட்டச்சாலை அமைக்கும் பணி கி.மீ. 17/5 முதல் 25/6-வரை ஆகும்.

(5) இறுதியாக திருவொற்றியூர்-பொன்னேரி பஞ்செட்டி சாலையில் கி.மீ. 4/6-ல் பிரிந்து எண்ணூரில் துரித வழிபாதையில் கி.மீ. 13/0 சேரும் சாலை மேம்பாட்டு பணி.

(ஆ) இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூபாய் 940.55 இலட்சங்கள் ஆகும்.

(இ) இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 4,153- இலட்சங்கள் ஆகும்.

(ஈ) இத்திட்டம் 1995 மார்ச் மாதம் முடிவடையுமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

33—

நேரு விளையாட்டு அரங்கத்தைச் சுற்றி வாழ்ந்த ஏழை குடும்பங்களுக்கு மாற்று இடம்.

வினா எண் 15385—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நேரு விளையாட்டு அரங்கத்தைச் சுற்றி வாழ்ந்து வந்த சுமார் 48 ஏழை குடும்பங்களுக்கு மாற்று இடம் ஏற்பாடு செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

தற்போதைக்கு இல்லை

1993 அக்டோபர் 26]

34—

பேராவூரணி தொகுதி கிராமங்களில் சமுதாயக்களம் அமைத்தல்.

வினா எண் 15488—திரு. ஆர் சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, அலிவலம், கொண்டிகுளம், கழுகு புலிக்காடு, நடுவிக்கோட்டை, பாதரங்கோட்டை, பாதரங் கோட்டை தெற்கு, ஆதம்பை வடக்கு, அதம்பை தெற்கு, காயாவூர் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாய மக்கள் நெல் அறுவடைக் காலங்களில் பயன்படுத்த சமுதாயக்களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மேற்கண்ட கிராமங்களில் சமுதாயக்களங்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

35—

நெல் அறுவடைக்காலங்களில் பயன்படுத்த சமுதாயக் களங்கள் அமைத்தல்.

வினா எண் 15495—திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, வட்டாத்திக்கோட்டை ஊராட்சி, பூவலூர் கிழக்கு, பாளத்தளி ஊராட்சி, பிள்ளங்குழி, பட்டுக் கோட்டை ஒன்றியம், முதலசேரி, பட்டுக்கோட்டை ஒன்றியம், சேண்டாகோட்டை ஆகிய கிராமங்களில் விவசாயிகள் நெல் அறுவடைக் காலங்களில் பயன்படுத்த சமுதாயக்களம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மேற்கண்ட கிராமங்களில் சமுதாயக்களங்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

36—

கால்நடைகளை நடத்தி செல்வதற்கு தடையுள்ளதை தவிர்க்க நடவடிக்கை.

வினா எண். 7829—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறைக்கு பொள்ளாச்சியிலிருந்து கால்நடைகளை நடத்திக் கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதை தளர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு தே. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

''வால்பாறைக்கு, பொள்ளாச்சியிலிருந்து கால்நடைகளை நடத்திக்கொண்டு செல்வதற்கு கால்நடைப்பராமரிப்பு துறையினரால் தடையேதும் விதிக்கப்படவில்லை.—மேலும், பொள்ளாச்சி இந்திராகாந்தி வனவிலங்கு சரணாலய காப்பாளரால், வால்பாறை உள்ளாட்சி நிர்வாக அலுவலருக்கு, வால்பாறக்குக் கொண்டு வரும் கால்நடைகளை வனவிலங்குகளின் பாதுகாப்பு கருதி லாரிகள் மூலம் எடுத்துச்செல்லவேண்டும் என்றும், இறைச்சிக்கொட்டகைகள் ஏலம்விடும்பொழுது ஒரு நிபந்தனையாக சேர்த்துக்கொள்ள கோரி எழுதப்பட்டத்தின் மீது இதுவரை உள்ளாட்சி நிர்வாகத்தால் ஆணைகள் ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. மேற்கண்ட முடிவு வன இலாகா அலுவலர்களால், வன விலங்குகளையும் வனத்தையும் பாதுகாக்க எடுக்கப்பட்ட முடிவு ஆகும். தற்பொழுது மாடுகள் நடத்திச் செல்லப்படுகின்றன. ஆடுகள், செம்மறி ஆடுகள் மற்றும் பன்றிகள் போன்றவை லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன.''

37—

அஞ்சேட்டியை தலைமையிடமாகக் கொண்டு நடமாடும் கால்நடை மருந்தகம் அமைத்தல்.

வினா எண். 19556—திரு. ஏ. கே. மனோகரன்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

அஞ்செட்டி பகுதிக்கு ஓர் நடமாடும் கால்நடை மருந்தகம் அஞ்செட்டியை தலைமை இடமாக கொண்டு ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத்துறை அமைச்சர் :

அஞ்செட்டி பகுதியில் தற்பொழுது கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால் நடமாடும் கால்நடை மருந்தகம் ஒன்று அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

38—

கால்நடை மருத்துவமனை தொடங்குதல்.

வினா எண் 19680—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணித் தொகுதி, களத்தூர், ஆவளம், சேதுபாவாசத்திரம், பள்ளத்தூர், கோட்டக்குடி ஆகிய இடங்களிலும், பட்டுக்கோட்டை ஒன்றியம் கோட்டக்குடியிலும், கால்நடை மருத்துவமனை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, களத்தூர், ஆவணம், சேதுபாவாசத்திரம், பள்ளத்தூர் ஆகிய இடங்களிலும், பட்டுக்கோட்டை ஒன்றியம் கோட்டக்குடியிலும், கால்நடை மருத்துவமனை தொடங்க அரசிடம் தற்பொழுது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

39—

சில்லாங்குப்பம் பாலர் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 8362—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், சில்லாங்குப்பத்திலுள்ள பாலர் பள்ளிக்குக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, பரங்கிப் பேட்டை ஒன்றியம் சில்லாங்குப்பம் பாலர் பள்ளிக்கு 1993-94ல் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

40—

மின்றான் காடுவெட்டியில் பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண் 11203—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுயில் மின்றான் காடுவெட்டியில் பாலர் பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மின்றான் காடுவெட்டிக்கிராமக் குழந்தைகள், அணிக்குதிச்சான் குழந்தைகள் நல சத்துணவு மையத்தின் துணை மையமாக இயங்கிவருவதால், தனியாக மின்றான் காடுவெட்டி கிராமத்திற்கு புதிய மையம் ஆரம்பிக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

41—

வேலம்பட்டி கிழக்கில் ஒரு பாலர் பள்ளி தொடங்குதல்.

வினா எண் 12971—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கிழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி ஊராட்சி, வேலம்பட்டி கிழக்கில் 1992—93-ல் ஒரு பாலர் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

1993-94-ல் வேலம்பட்டி கிழக்கில் பாலர் பள்ளி தொடங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

42—

இடையாத்தி (கி) ஆதிதிராவிடர்களுக்கு பால்வாடி ஒன்று தொடங்குதல்.

வினா எண் 12972—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (கி) ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் பால்வாடி ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (கி) ஆதிதிராவிடர்களுக்கு 1993-94ல் பால்வாடி ஒன்று அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

43—

வெளிவயல் கிராமத்தில் பாலர் பள்ளி தொடங்குதல்.

வினா எண் 13044—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டிணம் ஊராட்சியைச் சேர்ந்த வெளிவயல் கிராமத்தில் ஒரு பாலர் பள்ளி அமைத்துக் கொடுக்க 1992-93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டிணம் ஊராட்சியைச் சேர்ந்த வெளிவயல் கிராமத்தில் 29 குழந்தைகள் மட்டுமே இருக்கின்றனர். மேற்படி கிராமத்திற்கு மிக அருகாமையில் கொள்ளுக்காடு மற்றும் புதுப்பட்டிணம் குழந்தைகள் சத்துணவு மையம் தற்பொழுது இயங்கி வருகிறது. வெளிவயல் கிராம குழந்கள் மிக அருகாமையிலுள்ள கொள்ளுக்காடு குழந்தைகள் சத்துணவு மையத்திலும், புதுப்பட்டிணம் குழந்தைகள் சத்துணவு மையத்திலும் பயன்பெற்று வருகின்றனர். எனவே புதுப்பட்டிணம் ஊராட்சியைச் சேர்ந்த வெளிவயல் கிராமத்தில் பால்வாடி அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

44—

மிலாரிக்காட்டில் பாலர் பள்ளி தொடங்குதல்.

வினா எண் 13401—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேணிற்காடு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மிலாரிக்காட்டில் 1992-93-ல் ஒரு பாலர் பள்ளி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் மழவேணிற்காடு ஊராட்சியைச் சேர்ந்த மிலாரிக்காட்டில் வீடுகள் 30 இருக்கின்றன. தனியாக குழந்ைதகள் நல மையம் ஆரம்பிக்க போது

1993 அக்டோபர் 26]

மான குழந்தைகள் இல்லை. மேலும் சுமார் 300 மீட்டர் தூரத்தில் அதே ஊராட்சியிலுள்ள நடுவிக்காட்டில் பாலர் பள்ளி உள்ளது. ஆகவே 1992-93-ல் பாலர் பள்ளி அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

45—

மந்திகோன் விடுதியில் ஒரு பாலர் பள்ளி தொடங்குதல்.

வினா எண் 13440—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தியைச் சேர்ந்த மந்திக்கோன் விடுதியில் 1992-93-ல் ஒரு பாலர் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தியைச் சேர்ந்த மந்திக்கோன் விடுதியில் இருந்து சுமார் 1 கி. மீ. தொலைவில் கொல்லைக்காட்டில் ஒரு சத்துணவு மையமும் 2 கி. மீ. தொலைவில் இடையாத்தி (கி) சத்துணவு மையமும் இயங்கி வருகிறது. மேலும் மந்திக்கோன் விடுதியில் சுமார் 40 குடும்பங்கள் மட்டுமே வசித்து வருவதால் அங்கு குழந்தைகள் நல மையம் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

46—

இடையாத்தி ஊராட்சி வேளார் தெருவில் ஒரு பாலர் பள்ளி தொடங்குதல்.

வினா எண் 13577—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, இடையாத்தி ஊராட்சி, வேளார் தெருவில் ஒரு பாலர் பள்ளி தொடங்க 1992-93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் இந்த மாவட்டத்துக்கு நீட்டிக்கப்படும்போது கூடுதல் மையங்கள் துவங்குவது பரிசீலிக்கப்படும்.

47—

உளூர் பாலர் பள்ளியில் விடுமுறை நாட்களில உணவு வழங்குதல்.

வினா எண் 14598—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூர் பாலர் பள்ளியில விடுமுறை நாட்களில் உணவு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் குழந்தைகள் மையங்களில் எல்லா நாட்களிலும் சத்துணவு வழங்கப்படுகிறது. சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களிலும் சத்துணவு வழங்கப்படுகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

48—

லட்சுமிபுரம் கிராமத்தில் பாலர் பள்ளி தொடங்குதல்.

வினா எண் 14461—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி — கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள லட்சுமிபுரம் கிராமத்தில் பால்வாடி பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் கீழ், கூடுதல் மையங்கள் தேவையானால் துவங்குவது பரிசீலிக்கப்படும்.

49—

எஞ்சினியரிங் படிக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வாய்ப்பளித்தல்.

வினா எண் 5462—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1988-90-ம் கல்வி ஆண்டுகளில் என்ஜினியரிங் படிக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில் எத்தனை மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது?

(ஆ) இவர்களில் அரசு கல்லூரிகளில் இடம் பெற்றோர் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) தனியார் கல்லூரிகளில் அரசுக்கு உள்ள ஒதுக்கீட்டின்கீழ் இம் மாணவர்களுக்கு எத்தனை இடம் அளிக்கப்பட்டது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) 1988-90 ஆம் கல்வி ஆண்டுகளில் என்ஜினியரிங் படிக்க வாய்ப்பளிக்கப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்களின் எண்ணிக்கை :—

கல்வியாண்டு.	ஆதிதிராவிடர்.	பழங் குடியினர்.	மொத்தம்.
1988—89	616*	..	616
1989—90	571*	..	571
1990—91	659	36	695

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) அரசு மற்றும் அரசு மான்யம் பெறும் பொறியியற் கல்லூரிகளில் இடம் பெற்றோர் எண்ணிக்கை :—

1988—89	271*	..	271
1989—90	301*	..	301
1990—91	308	17	325

(இ) தனியார் (சுயநிதி) பொறியியற் கல்லூரிகளில் இடம் பெற்றோர் எண்ணிக்கை:—

1988—89	345*	..	345
1989—90	270*	..	270
1990—91	351	19	370

1989-90-ம் கல்வியாண்டு வரை பழங்குடி மற்றும் ஆதிதிராவிட இன மாணவர்களின் தேர்வு, சேர்க்கை சேர்ந்தே செய்யப்பட்டது. 1990—91-ம் கல்வி ஆண்டிலிருந்துதான் தேர்வு தனித்தனியாக செய்யப்பட்டது.

விடை—29–6–1993 ஆம் நாளிட்டது.

50—

பொறியியல் கல்லூரி தேர்வில் Open Competition-ல் வகுப்பு வாரியாக தேர்ச்சி பெற்றவர்களின் சதவிகிதம்.

வினா எண் 6076— திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு பொறியியல் கல்லூரியில் Open Competition-இல் இடம் பெற்ற மாணவர்களில் Forward Community-யைச் சார்ந்தவர் எத்தனை சதவிகிதம் ? Backward Community-யைச் சார்ந்தவர் எத்தனை சதவிகிதம் ? தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எத்தனை சதவிகிதம்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

1991—92 ஆம் கல்வி ஆண்டில் பொதுப் போட்டியில் (Open Competition) கீழ் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களின் விழுக்காடு (வகுப்பு வாரியாக) பின்வருமாறு—

	குருப் 1.	குருப் 2.
முற்பட்ட வகுப்பினர்	15.62	16.19
பிற்பட்ட வகுப்பினர்	13.80	13.71
மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்	1.46	1.00
தாழ்த்தப்பட்ட வகுப்பினர்	0.06	0.05
பழங்குடியினர்	0.06	0.05
	31.00	31.00

51—

Construction of houses of College women teachers

Question No. 8858—Dr. Beatrix D. Souza: Will the Hononrable Minister for Education be pleased to state—

Whether Government will consider constructing housing unit for women teachers working in Colleges transferred from the city?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

52—

திருக்களப்பூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம்.

வினா எண். 12707—திரு. ஆர். தங்கராசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி திருக்களப்பூர் அரசினர் உயர் நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டித்தர 1992-93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

53—

கந்தர்வக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 12738—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி கந்தர்வக்கோட்டையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாகக் கட்டிட வசதியும், கழிப்பிட வசதியும் செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

54—

குருவிக்கரம்பை உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 15818—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குருவிக்கரம்பை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு 1992-93-ல் நிரந்தர இரு வகுப்பறைத் துணைக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்விஅமைச்சர்:

செயற்குறிப்பு ஏதுமில்லை.

1993 அக்டோபர் 26]

55—

அத்தாணி அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 16516—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில், மூங்கில்பட்டி அத்தாணி அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு புதிய வகுப்பறைக் கட்டிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசிடம் இதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

56—

நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் அரசு திட்டங்கள்.

வினா எண் 158—திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

நகர்ப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க நேரு வேலை வாய்ப்புத் திட்டமும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டமும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

57—

வேலூர் புறநகர்ப் பகுதியில் வசதியான பேருந்து நிலையம் கட்டுதல்.

வினா எண் 424—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூரில் புறநகர்ப் பகுதியில் வசதியான பெரிய பேருந்து நிலையம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

வேலூரில் புறநகர்ப் பகுதியில் பேருந்து நிலையம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

58—

மணப்பத்தூர் காலனிக்கு மேல்நிலைத் நீர்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அரசு திட்டம்.

வினா எண் 2951—திரு. ஆர் தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், செந்துறை ஒன்றியம், மணப்பத்தூர் காலனிக்கு புதிய ஆழ்குழாய்க் கிணறு போட்டு, மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. ஆனால் தற்சமயம் இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் (கையிறைப்பான் பொருத்தியது) இயங்கிவருகிறது. வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் மேல்நிலை நீர்த்தொட்டி கட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆவன செய்யப்படும்.

1993 அக்டோபர் 26]

59—

அவிநாசி மயானத்திற்கு சுற்றுச்சுவர் எழுப்புதல்.

வினா எண். 4260— டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அவிநாசியிலுள்ள மயானத்திற்கு சுற்றுச்சுவர் எழுப்ப அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இப்பேரூராட்சியில் போதுமான நிதிவசதி தற்போது இல்லை. எனவே மயானத்திற்கு சுற்றுச்சுவர் எழுப்ப செயற் குறிப்பு ஏதும் இல்லை.

60—

ஆரம்ப சுகாதார ஊழியர்கள் நகராட்சி சுகாதார அதிகாரியின்கீழ் பணியாற்றுவதற்கு அரசு திட்டம்.

வினா எண் 4673 —டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சியில் பணியாற்றிய ஆரம்ப சுகாதார ஊழியர்களை நகராட்சி சுகாதார அதிகாரியின் கீழ் பணியாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1990ஆம் ஆண்டு நிறைவேறிய தமிழ்நாடு பொது சுகாதார திருத்த சட்டத்தின் படி (சட்டம் 25/90) நகராட்சி சுகாதாரப் பிரிவுப் பணியாளர்கள் மாநில அளவில் பொது சுகாதாரத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டிலிருந்து நகராட்சி நிர்வாக ஆணையாளரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளனர். நகராட்சி அளவில், நகர சுகாதார அதிகாரியின் கட்டுப்பாட்டிலிருந்து நகராட்சி ஆணையரின் கட்டுப்பாட்டிற்குள்ளும் கொண்டு வரப்பட்டுள்ளனர். இந்நிலையில் மாற்றம் தேவையென அரசு கருதவில்லை.

1993 அக்டோபர் 26

61—

புதிதாக அடிகுழாய்கள் அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 5701—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியங்களில் புதிதாக அடிக்குழாய்கள் அமைக்க வேண்டிய முன்னுரிமை பட்டியல் அவ்விரு ஒன்றியஆணையர்களால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 1988-89, 1989-90, 1990-91 ஆகிய ஆண்டுகளில் அனுப்பப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், அவற்றில் பலவற்றின் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாமல் இருப்பது அரசு அறியுமா?

(இ) இனி அமல் நடத்தப்படவிருக்கும் புதிய தன்னிறைவுத் திட்டங்களின்கீழ் நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களால் அனுப்பப்பட்ட புதிய அடிகுழாய்கள் அமைக்க வேண்டிய முன்னுரிமைப் பட்டியலிலிருந்து முக்கிய அவசரத் தேவையுள்ள கிராமங்களே கருத்தில் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டன. தேவைக்கு ஏற்ப அல்லது தேவைக்குமேல் புதிய அடிக்குழாய்களுக்கு ஒதுக்கீடு வழங்கும் பட்சத்தில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களின் புதிய அடிகுழாய்கள் அமைக்க வேண்டிய முன்னுரிமைப் பட்டியலை அப்படியே ஏற்றுக் கொள்ள முடியும்.

(இ) ஓராண்டில் மேற்படி முன்னுரிமைப் பட்டியலில் புதிய அடிகுழாய் தர முடியாத கிராமம் அதே ஆண்டில் பிறிதொரு குடிநீர்த் திட்டத்திலோ அல்லது வரும் ஆண்டுகளின் அதே திட்டத்திலோ/பிறிதொரு திட்டத்திலோ சேர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

1993 அக்டோபர் 26]

62—

நடைபாதைக் கடைகளை அகற்ற அரசு நடவடிக்கை.

வினா எண் 5839—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணி நகராட்சி காய்கறி அங்காடி கடைகளுக்கு இடையே உள்ள பாதையில் பொதுமக்களுக்கு இடைஞ்சல் விளைவிக்கும் கடைகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆரணி நகராட்சிக்குச் சொந்தமான காய்கறி அங்காடியின் உட்புறத்தில் உள்ள கடைகளுக்கு இடையே உள்ள பாதையில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள கடைகளை ஆரணி நகராட்சிப் புறப்பணியாளர்களால் 24—12—1992 அன்று அகற்றப்பட்டது.

63—

தென்னங்குடி ஆதிதிராவிடர் காலனி வீடுகளை பழுதுபார்த்துப் பராமரித்தல்.

வினா எண் 7226—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் தென்னங்குடி ஆதிதிராவிடர் தெருவிலுள்ள பழுதுபட்ட, இடிந்துபோன காலனி வீடுகளைப் பராமரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தென்னங்குடி ஆதிதிராவிடர்களுக்கு 1988-89ஆம் ஆண்டு தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் 25 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. இதில் 10 வீடுகள் பழுதடைந்துள்ளன. பழுதை நீக்கம் செய்ய செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

64—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர்மூழ்கி மோட்டார் அமைக்கத் திட்டம்.

வினா எண் 7257—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்: கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் மாவடுகுறிச்சி ஊராட்சி நாட்டாணிக்கோட்டையில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர்மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் மாவடுகுறிச்சி ஊராட்சியில் இயங்கும் மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால். இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் மூழ்கி மோட்டார் அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

65—

கோட்டைக்காடு பள்ளிக்கு முள்வேலி அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 7329—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கோட்டைக்காடு பள்ளிக்கூடத்தைச் சுற்றி முள்வேலி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் கங்காதரபுரம் ஊராட்சியில் உள்ள கோட்டைக்காடு பள்ளிக்கு முள்வேலி அமைக்க ரூ. 7,500 மதிப்பீடு தயார் செய்து அப்பணியைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1993 அக்டோபர் 26]

66—

வாணக்கன்காடு கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறும் மின்சார மோட்டாரும் பழுதுநீக்க அரசு நடவடிக்கை

வினா எண் 8186—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடி ஒன்றியத்தில், வாணக்கன்காடு கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறும், மின்சார மோட்டாரும் பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர் செய்ய நடவடிக்கை எப்போது எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும், (ஆ) : ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், வாணக்கன்காடு கிராம விசையிறைப்பானில் புதிய நீர்மூழ்கி மோட்டார் பொருத்தப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

67—

சீலியம்பட்டி ஏரி மதகுகளுக்கு இரும்பு சட்டர்கள் அமைத்தல்.

வினா எண் 9466ஏ—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் சீலியம்பட்டி ஏரியில் இரும்புச் சட்டர் அமைக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1992—93-ஆம் ஆண்டில் தல பாசன மானியம் நிதியில் இருந்து ரூ. 6,000 மதிப்பீட்டில் சீலியம்பட்டி ஏரியில் மதகுகளுக்கு இரும்பு சட்டர்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

68—

திருக்கோகர்ணம் நடுநிலைப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 10544—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதியில் உள்ள திருக்கோகர்ணம் நடுநிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி. உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருக்கோகர்ணம் நகராட்சி நடுநிலைப்பள்ளி, நகராட்சியின் சொந்த ஓட்டு கட்டிடத்தில் செயல்பட்டு கொண்டு வருகிறது. தற்போது பள்ளிக் கட்டிட பராமரிப்பு மட்டும் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருக்கோகர்ணம் நடுநிலைப் பள்ளியில் மேற்கூரை, தரைதளம் மற்றும் மதில்சுவர் பழுதுகள் சீர்செய்ய ரூ. 50,000 மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது.

69—

டி. வடுகப்பட்டியில் குடிநீர் வசதி அரசு திட்டம்

வினா எண் 11346—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், டி. வடுகப்பட்டியின் குடிநீர்த் தேவைக்காக மேலும் ஒரு போர்வெல் அமைத்து பம்ப்செட் மோட்டார் மூலம் நீர் எடுத்து போதுமான அளவு குடிநீர் கிடைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், டி. வடுகப்பட்டியில் குடிநீர் விநியோக அளவு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 30 லிட்டர்களாக இருப்பதால் மேலும் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் உத்தேசம் தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

1993 அக்டோபர் 26]

70—

ஒன்றியங்களில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்க அரசு திட்டம்

வினா எண் 11371—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒன்றியத்தில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் முன்பே 255 ஊராட்சி ஒன்றியங்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு தற்போது உள்ள திட்டங்களில் மோட்டார் சைக்கிள் வழங்க வழிவகை இல்லாததால் வழங்கும் உத்தேசம் இல்லை.

71—

ரெகுநாதபுரம் தெற்கில் ஒரு ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.

வினா எண் 11622—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவா சத்திரம் ஒன்றியம், வாத்தலைக்காடு ஊராட்சி ரெகுநாதபுரம் தெற்குக்கு ஒரு ஆழ்குழாய் கிணறு 1992–93-ல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. சுமார் 125 மக்கள் தொகையுள்ள ரெகுநாதபுரம் கிராமத்தில் ஒரு பகுதியான தெற்கில் ஒரு கையிறைப்பான் பயனில் உள்ளது. வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் திட்டம் மேற்கொள்ளப்படும்.

72—

அஞ்சூர்னிக் காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 11628—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி, அஞ்சூர்னிக் காட்டில் 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. இங்கு ஏற்கெனவே இரண்டு கையிறைப்பான்கள் பயனில் உள்ளன.

73—

தெற்கு வாண்டான் விடுதி கிராமத்திற்கு குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை.

வினா எண் 11839—திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக் கோட்டை ஒன்றியத்தில் உள்ள தெற்கு வாண்டான் விடுதி கிராமத்தில் குடி நண்ணீருக்காக இருக்கும் மின்சார மோட்டார் பழுதடைந்து இருப்பதை சரி செய்து, உடன் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கந்தர்வக் கோட்டை ஊராட்சி ஒன்றியம், தெற்கு வாண்டான் விடுதி விசையிறைப்பானுக்காக குடிநீர் ஆதாரமான ஆழ்குழாய் கிணற்றில் 4–2–1993 அன்று நீர்மூழ்கி மோட்டார் பொருத்தி நல்ல முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

1993 அக்டோபர் 26]

74—

வல்லம்பக்கொல்லைக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க நடவடிக்கை.

வினா எண் 12012—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சி, வல்லம்பக்கொல்லைக்கு 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. இங்கு ஒரு மின்விசைத் திட்டமும் 2 கையிறைப்பான் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு பயனில் உள்ளது.

75—

வாடியக்காடு கிழக்கில் முத்தரையன் தெருவில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.

வினா எண் 12018—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனவாசல் ஊராட்சி, வாடியக்காடு கிழக்கில் முத்தரையர் தெருவில் ஒரு ஆழ்குழாய் கிணறு போட்டுக் கொடுக்க 1992-93-ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. தற்போது இப்பகுதிக்கு வாடியக்காடு குடிநீர்த் திட்டத்திலிருந்து ஒரு பொது மேடை மூலம் குடிநீர் வழங்கப் பட்டு வருகிறது. எனவே, வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமைப் படி இப்பகுதிக்கு ஒரு கையிறைப்பான் திட்டம் அமைத்துத் தர ஆவன செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

76—

நறுவழிக்கொல்லை குளத்து தடுப்புச்சுவரைப் பழுதுபார்த்து குளத்தை ஆழப்படுத்துதல்

வினா எண் 12092—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஆலக்குடி குழுமுளை, நறுவழிக் கொல்லையிலுள்ள பழுதுபட்ட தடுப்புச்சுவர் படித்துறையை பழுதுபார்த்து குளத்தை ஆழப்படுத்திக்கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நறுவழிக்கொல்லையிலுள்ள பழுதுபட்ட தடுப்புச்சுவர் படித்துறையைச் சீரமைக்க ரூ. 15,000 ஆகும். ஊராட்சியிலும், ஒன்றிய பொது நிதியிலும் போதிய நிதி வசதி இல்லாததால் இவ்வேலையை எடுத்துச் செய்ய தற்போது செயற் குறிப்பு ஏதும் இல்லை.

77—

கீழக்கொள்ளுக்காடு கீழத் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுத்தல்.

வினா எண் 12403—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (வ) ஊராட்சி, கீழக்கொள்ளுக்காடு கீழத் தெருவுக்கு 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

1993 அக்டோபர் 26]

78—

குவாகம் ஏரிக்கரையிலிருந்து தேவனூர் செல்லும் சாலையைப் மராமத்து செய்தல்.

வினா எண் 12471—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, குவாகம் ஏரிக்கரையிலிருந்து தேவனூர் செல்லும் சாலையை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மராமத்து செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆண்டிமடம் தொகுதி குவாகம் ஏரிக்கரையிலிருந்து தேவனூர் செல்லும் சாலையை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மராமத்து செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

79—

வீடற்ற கஞ்சங்காடு ஆதி திராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12569—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கஞ்சங்காடு வீடற்ற ஆதி திராவிடர் மக்களுக்குப் புதிய காலனி வீடுகள் கட்டித்தர 1992-93 ஆம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சி துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கஞ்சங்காடு கிராமத்தில் 1988–89இல் 20 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டன. மேலும், தகுதியான வீட்டுமனைப் பட்டா உடைய ஆதிதிராவிடர்கள் இல்லாததால் 1992–93-ல் காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

80—

வீடுகள் இல்லாத கோட்டாக்குடி ஆதி திராவிடர் மக்களுக்கு புதிய காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 11613— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாக்குடி வீடு இல்லாத ஆதி திராவிட மக்களுக்கு புதிய காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க 1992-93 ஆம் ஆண்டில் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கோட்டாக்குடி ஊராட்சியில் 1984-85-ல் 12 வீடுகளும் 1985-86இல் 30 வீடுகளும் ஆக மொத்தம் 42 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 1992-93-ல் இக்கிராமத்தில் ஆதி திராவிட தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க மனைப் பட்டா கிடைக்கப்பெறவில்லை. அடுத்து, வரும் ஆண்டுகளில் ஒதுக்கீட்டிற்கு ஏற்றவாறு விதி முறைகளுக்கு உட்பட்டு வீடுகள் கட்டித்தர ஏற்பாடு செய்யப்படும்.

81—

வீரமுடையான் நத்தம் ஆதி திராவிடர் காலனிக்கு குடிநீர் மேல் தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 12890— செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், வீரமுடையான் நத்தம் ஆதிதிராவிடர் காலனிக்குக் குடிநீர் மேல் தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை. வீரமுடையான் நத்தம் கிராமத்திலுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து மூன்று பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், இங்கு ஒரு கையிறைப்பானும் உள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

82—

வீரியங்கோட்டை கிழக்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுதல்.

வினா எண் 12988—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியங்கோட்டை கிழக்காட்டில் 1992-93இல் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்

இல்லை.

83—

கோட்டா குடி ஆதிதிராவிடர் காலனிக்கு கைப்பம்பு அமைத்தல்.

வினா எண் 13367—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், கார்காவயல் ஊராட்சி கோட்டாகுடி ஆதி திராவிடர் காலனிக்கு கைப்பம்பு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இல்லை.

84—

அலிவலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் அமைத்தல்.

வினா எண் 13388—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பட்டுக்கோட்டை வட்டம் அலிவலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு விரைவில் மின் மோட்டார் வைக்க 1992-93 இல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. அலிவலம் கிராமத்திற்கு 1990-91 இல் ஒரு மின் விசைத் திட்டம் எடுக்கப்பட்டு இத்திட்டத்திற்கான ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு இத்திட்டத்திற்காக மோட்டார் பொருத்தப்பட்டு திட்டம் பயனுக்கு கொண்டு வந்து ஒன்றியத்தில் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

85—

ஆண்டா கோட்டை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மூன்று பி. எம். விஸ்தரிப்பு செய்தல்.

வினா எண் 13410—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி பேராவூரணி ஒன்றியம் ஆண்டா கோட்டை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு1992-93-இல் மேலும் 3 பி. எம். விஸ்தரித்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. ஆண்டான் கோட்டை கிராமத்தில் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு உள்ளது. அதுவே, தற்போதைய மக்கட் தொகைக்கு பற்றாக்குறையாக உள்ளதால் வரும் நிதியாண்டுகளில் 3 பொது மேடைக் குழாய் விஸ்தரிப்பு செய்யாமல், திட்டத்தால் பயனடையாத பகுதிக்கு கையிறைப்பான் திட்டம் அமைத்துத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

86—

புதுநகர் ஆதி திராவிடர் தெரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் அமைத்தல்.

வினா எண் 13419—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி புதுநகர் ஆதி திராவிடர் தெருவில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு 1992-93இல் மின்சார மோட்டார் அமைத்து குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். 1991-92இல் ஒரு ஆழ்த்துளைக் கிணறு அமைக்கப்பட்டு பயனில் உள்ளது. ஒரு மின்விசைத் திட்டம் மின் இயந்திரம் பொருத்தும் பணியினைத் தவிர அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு விட்டது. மின் இயந்திரம் பொருத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. விரைவில் திட்டம் பயனுக்கு கொண்டு வரப்படும்.

87—

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை.

வினா எண் 14869— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்க 1990-91, 1991-92, 1992-93ஆம் ஆண்டுகளில் அரசு ஒதுக்கினத் தொகையின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்க அரசு ஒதுக்கிய தொகையின் விவரம் பின்வருமாறு:—

1990-91— ரூ.22.50 இலட்சம்.

1991-92— ரூ.3.16 இலட்சம்.

1992-93— ரூ.18.00 இலட்சம்.

88—

தேவண்ணகவுண்டர் பஞ்சாயத்து குடிநீர் பிரச்சினை தீர அரசு நடவடிக்கை.

வினா எண் 15354— டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டூர் வட்டம், தேவண்ணகவுண்டர் பஞ்சாயத்து கொல்லனூர் குடிநீர்ப் பிரச்சினை தீர அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மேட்டூர் வட்டம், தேவண்ணகவுண்டர் பஞ்சாயத்து, கொல்லனூரில் ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு, கையிறைப்பான் பொருத்தப்பட்டு, பொதுமக்கள் உபயோகத்

திற்கு கொண்டு வரப்பட்டு பராமரிப்பிற்காக சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக் குடியிருப்பின் மக்கட்தொகைக்கு தற்போதைய ஏற்பாடு போதுமானதாக உள்ளது.

89—

பரமக்குடி நகராட்சியில் இயங்கும் மகப்பேறு மருத்துவ மனைகள்.

வினா எண் 15710—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் இயங்கும் மகப்பேறு மருத்துவ மனைகள் எத்தனை ?

(ஆ) இங்கு பணிபுரியும் மகப்பேறு உதவியாளர்கள் எத்தனை பேர் ?

(இ) 1991—92இல் இங்கு பார்க்கப்பட்ட மகப்பேறுகள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மூன்று,

(ஆ) மூன்றுமருத்துவமாதுகளும்,மூன்று மருத்துவ ஆயாக்களும்.

(இ) 24.

90—

ஆலங்குடி தொகுதியில் புதிய மின் விளக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 15737—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா '

ஆலங்குடி தொகுதியில் கண்ணக்கன்காடு ஊராட்சியில் இந்தஆண்டு புதிதாக மின் விளக்குகள் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கண்ணக்கன் காடு ஊராட்சியில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கூடுதலாக 13 புதிய மின் விளக்குகள் அமைக்க, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் மூலம் காப்புத் தொகை ரூ. 270-ம் வளர்ச்சித் தொகை ரூ.26,000-ம் செலுத்தப்பட்டு, மின்கம்பங்கள் அமைத்து மின் இணைப்பு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

91—

கொழுந்துரைக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்க அரசு நடவடிக்கை.

வினா எண். 16038—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கொழுந்துரைக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தற்சமயம் செயல்படுகின்றதா ?

(ஆ) அத்திட்டத்திற்கு என மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை. ஆனால் இத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 260 இலட்சங்கள்.

92—

மேலச்சத்திரம் நகராட்சி ஆரம்பப் பள்ளியை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை.

வினா எண் 16505—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சி மேலச் சத்திரம் நகராட்சி ஆரம்பப்பள்ளியை வேறு இடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி நகர் மன்றத் தொடக்கப் பள்ளி தற்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அக்கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேற்படி பள்ளிக் குழந்தைகளின் நலம் கருதி மேலச் சத்திரம் பகுதியில் நகர் மன்றத்திற்கு பாத்தியப்பட்ட காட்டு-பரமக்குடி கிராமம் புல எண் ஜி. ஆர். 544/24-இல் மனை இடத்தில் நகர்மன்றத் தொடக்கப்பள்ளிக்கூடம் கட்ட திட்டம் வரையறுக்கப் பட்டுள்ளது. மேலச்சத்திரம் பகுதியைச் சார்ந்த தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர்கழகம், பரமக்குடி நகர்மன்றத் தொடக்கப்பள்ளி மேலச் சத்திரம் (கிளை) மேற்படி நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் ஓட்டுக் கட்டிடம் அமைத்து நகர்மன்றத் தொடக்கப்பள்ளியைத்துவக்க அதற்கான கட்டுமானப் பணியை அவர்களது சொந்த செலவில் மேற்கொள்ளவும் அதை நகராட்சிக்கு ஒப்படைக்கவும் அரசாங்கத்திலிருந்து நிரந்தரமாகக் கட்டிடம் கட்டும் சமயம் மேற்படி ஓட்டுக் கட்டிடத்தை அப்புறப்படுத்திக் கொள்வதற்கும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

மேற்படி பள்ளிக்கூடம் கட்டுமானத்திற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகெங்கை அவர்களால் வடிவமைப்பு வரைபடமும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேல்மேற்படிப்புபள்ளிக்கூட கட்டுமானத்திற்கு அனுமதி அளிப்பது சம்மந்தமாக மாவட்ட கல்வி அலுவலர், பரமக்குடி அவர்களின் ஒப்புதல்கோரியும், நகர்மன்றவழக்கறிஞரின் சட்ட ஆலோசனை கோரியும் பதில் எதிர்பார்க்கப் படுகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

93—

பரமக்குடி நகராட்சியில் 1991–92இல் அமைக்கப்பட்ட சாலைகளுக்கான செலவு விவரம்.

வினா எண் 16686—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சியில் 1991-92இல் புதிதாக அமைக்கப் பட்ட சாலைகளுக்காக அரசுக்கு ஏற்பட்ட செலவு என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1991-92ஆம் ஆண்டில் பரமக்குடி நகராட்சிப் பகுதியில் அரசு நிதியிலிருந்து புதிதாக சாலை ஏதும் அமைக்கவில்லை. நகராட்சி நிதியிலிருந்து ரூ. 50,000 செலவில் பாரதி நகர் முருகன் கோவில் தெருவில் 190 மீட்டர் நீளத்திற்கு புதிதாக தார்ச் சாலை அமைக்கப் பணி மேற்கொள்ளப்பட்டது.

94—

புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள சாலைகளைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை.

வினா எண் 17301—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள சாலைகள் அனைத்தும் பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சியில் சாலையின் மொத்த நீளம் 103 கி.மீ. இதில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் கீழ் ரூ. 35.78 இலட்சம் மதிப்பீட்டில் 31.3 கி.மீ. நீளத்திற்கு சாலை மராமத்துப் பணி நடைபெற்று வருகிறது. இதர சாலைகளிலும் மராமத்துப் பணி கட்டம் கட்டமாக (Phased manner) முடிக்கப்படும்.

95—

பரங்கிப்பேட்டை ஒன்றியம் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை.

வினா எண் 8008—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், சில்லாங்குப்பம் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டம், புவனகிரி தொகுதியில் உள்ள சில்லாங்குப்பம், சின்னக்குமட்டி கிராமத்தின மஜரா கிராமமாகும். இக்கிராமத்தில் 23 ஆதி திராவிட குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் இல்லை. இவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குவதற்கு நில எடுப்பு முன்மொழிவுகளை அனுப்பி வைக்குமாறு தனி வட்டாட்சியர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். இம் முன்மொழிவு அரசு மட்டத்தில் பெறப்பட்ட பின் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

96—

பழுதடைந்த ஆதி திராவிடர் காலனி வீடுகளை பழுதுபார்க்க அரசு நடவடிக்கை.

வினா எண் 16167—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி கிழக்கு ஆதி திராவிடர் பழுதுபட்ட காலனி வீடுகளை பழுதுபார்க்க 1992-93-இல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

இல்லை.

97—

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் ஓராசிரியர் பள்ளி துவங்க அரசின் திட்டம்.

வினா எண் 16170—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (வடக்கு) புதுநகர் ஆதிதிராவிடர்களுக்கு ஆதி திராவிடர் நலத்துறையின்கீழ் 1992-93இல்- ஓராசிரியர் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

53-302—67

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

98—

மயிலாடுதுறை தொகுதியில் சமூகக் கூடம் கட்டுவதற்கு அரசு திட்டம்.

வினா எண் 17210— திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, குளிச்சார் கிராமத்தில் சமூகக் கூடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நிதி நிலையையும் தேவைகளையும் கருத்திற்கொண்டு இது பரிசீலிக்கப்படும்.

99—

ரெட்டியார் சத்திரத்தில் திருமண மண்டபம் கட்டும் திட்டம்.

வினா எண் 3314— திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் (அண்ணா மாவட்டம்) தொகுதியில், ரெட்டியார் சத்திரம் அருள்மிகு கோபிநாத சுவாமி தேவஸ்தானம் சார்பில் ரெட்டியார் சத்திரத்தில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டிலேயே திருமண மண்டபம் கட்டப்படுமா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

100—

இராமநாதபுரம் மாவட்ட திருக்கோயில்களின் நிலங்களின் விவரம்.

வினா எண் 4978—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருக்கோயில்களின் பெயரில் உள்ள கோயில் நிலங்கள் எவ்வளவு ?

(ஆ) இந்நிலங்களிலிருந்து திருக்கோயில்களுக்கு வருகின்ற வருமானம் எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களும், அந்நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானமும் கீழ்க்கண்டவாறு உள்ளன :—

நிலம்.	மொத்த பரப்பளவு.	மொத்த வருமானம்.
(1)	(2)	(3)
	ஏ. செ.	ரூ.
1 நஞ்சை	1,838.08	27,40,115
2 புஞ்சை	3,084.74½	2,32,982
மொத்தம் ..	4,922.82½	29,73,097

(ஒன்பதாம் பட்டியல்)

1—

பர்கூர் ஊராட்சியில் இல்லங்களுக்குப் பட்டா வழங்குதல்.

வினா எண் 4847— திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதியில் மலைப் பகுதியாகிய பர்கூர் ஊராட்சி மன்றத்திற்கு உட்பட்ட அனைத்து இல்லங்களுக்கு இன்னும் பட்டா வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அவர்களுக்கு பட்டா வழங்கப் படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், பவானி வட்டம், பர்கூர் கிராமத்தில் நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் விசாரணை மேற்கொண்டு தற்போது பட்டா வழங்கப்பட்டு விட்டது.

2—

நத்தம் தொகுதியில் ஆதி திராவிடர்களுக்கு குடியிருப்பு மற்றும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல்.

வினா எண் 7703— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதியில் அரசு புறம்போக்கு நிலங்களில் எங்கெங்கு ஆதி திராவிடர்கள் குடியிருப்பு அமைத்துள்ளனர் ?

(ஆ) அந்த குடியிருப்புக்கள் அமைந்துள்ள மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்கிட எங்கெங்கு இலவச வீட்டுமனைப் பட்டா இதுவரை எவ்வளவு பேர்களுக்கு அரசு வழங்கியுள்ளது ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல்–அண்ணா மாவட்டம், நத்தம் தொகுதியில் அரசு புறம்போக்கு நிலங்களில் ஆதி திராவிடர்கள் குடியிருப்பு மற்றும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப் பட்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

திண்டுக்கல்–அண்ணா மாவட்டம், நத்தம் தொகுதியில் அரசு புறம்போக்கு நிலங்களில் ஆதி திராவிடர்கள் குடியிருப்பு மற்றும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட விவரப் பட்டியல் :

வரிசை எண்ணும் ஆதிதிராவிடர்கள் குடியிருப்புக் கிராமங்களும்.		வட்டம்.	வழங்கப் பட்ட இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் எண்ணிக்கை.	நத்தம் சர்வேயில் வழங்கப் பட்டதா ?
(1)		(2)	(3)	(4)
1	நத்தம்	நத்தம்.	590	ஆம்.
2	வேலம்பட்டி ..	,,	215	,,
3	ஊராணிப்பட்டி	,,	36	,,
4	சமுத்திராபட்டி ..	,,	102	,,
5	பூதகுடி ..	,,	3	,,
6	ஆவிச்சிபட்டி ..	,,	14	,,
7	பள்ளியாமலை	,,	69	,,
8	பன்னுவார்ப்பட்டி ..	,,	228	,,
9	பார்பாபட்டி	,,	41	,,
10	பாலப்பநாயக்கன்பட்டி	,,	12	,,
11	நடுமண்டலம்	,,	304	,,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)		(2)	(3)	(4)
12	ரெட்டியப்பட்டி ..	நத்தம்.	109	ஆம்.
13	சாத்தம்பாடி	..	16	,,
14	செல்லப்பநாயக்கன்பட்டி	,,	42	,,
15	இடையபட்டி	,,	59	,,
16	புதூர்	,,	232	,,
17	லிங்கவாடி	,,	80	,,
18	புன்னப்பட்டி	,,	40	,,
19	முணையூர்	,,	32	,,
20	செந்துறை	,,	320	,,
21	சேத்தூர்	,,	157	,,
22	சிரங்காட்டுப்பட்டி ..	,,	40	,,
23	சிறுகுடி	,,	199	,,
24	குடசிப்பட்டி	,,	52	,,
25	பிள்ளையார்நத்தம் ..	,,	33	,,
26	கோட்டையூர்	,,	54	,,
27	சாணார்பட்டி ..	திண்டுக்கல்.	253	,,
28	கோணப்பட்டி ..	,,	93	,,
29	ஆவுளிபட்டி	,,	105	,,
30	அங்குசுளிர்ப்பட்டி ..	,,	145	,,
31	வேம்பார்பட்டி ..	,,	272	,,
32	கோம்பைப்பட்டி ..	,,	228	,,
33	டி. பஞ்சம்பட்டி ..	,,	249	,,
34	எமக்காலாபுரம் ..	,,	75	,,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

	(1)	(2)	(3)	(4)
35	தவசிமடை	திண்டுக்கல்.	111	ஆம்.
36	விராலிப்பட்டி	,,	69	,,
37	கூவனூத்து	,,	224	,,
38	வீரசின்னம்பட்டி ..	,,	126	,,
39	ராகலாபுரம்	,,	345	,,
40	ராஜக்காபட்டி	,,	154	,,
41	மரூர்	,,	71	,,
42	சலுவத்தூர்	,,	135	,,
43	வங்கமனூத்து	,,	200	,,
44	வி. டி. பட்டி	,,	112	,,
45	தேத்தாம்பட்டி ..	,,	75	,,
46	சம்பிளியம்பட்டி ..	,,	212	,,
47	மருதூத்து	,,	39	,,
48	திம்மனநல்லூர் ..	,,	239	,,
49	செங்குறிச்சி	,,	260	,,
50	வி. எஸ். கோட்டை ..	,,	51	,,
51	மார்க்கம்பட்டி ..	,,	75	,,
52	புதுப்பட்டி	,,	64	,,
53	ஜோத்தாம்பட்டி ..	,,	128	,,
54	சக்கிலியர்கொடை ..	,,	52	,,
55	கணவாய்பட்டி ..	,,	63	,,
	மொத்தம் ..		7,305	

3—

புவனகிரி தொகுதியில் மனைப் பட்டாக்கள் வழங்குதல்.

வினா எண் 7848—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, சி. புதுப்பேட்டை கிராமங்களுக்கு வீடு கட்ட நத்தம் புறம்போக்கு நிலத்தை பட்டா செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இக்கிராமத்தில் மொத்தம் 204 மனைப் பட்டாக்கள் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு அவற்றில் இது வரை 188 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 16 பட்டாக்களும் சம்பந்தப்பட்ட மனையின் உரிமையாளர்கள் ஊரில் இல்லாததால் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளன.

4—

பயன்படுத்தாமலுள்ள நிலங்களை கையகப்படுத்த அரசு பரிசீலனை.

வினா எண் 11780—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வசதியானவர்கள் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை வாங்கி பல ஆண்டுகள் பயன்படுத்தாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில் 3 வருடங்களுக்கு பயன்படுத்தாமல் இருக்கும் நிலங்களை கையகப்படுத்தி அரசுப் பணிக்கு பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை வசதியானவர்கள் வாங்கிப் பயன்படுத்தாமல் இருப்பது பற்றிய தகவல்கள் ஏதுமில்லை.

(ஆ) அவ்விதம் இருப்பது பற்றி குறிப்பிட்டு ஏதேனும் கூறப்பட்டால் அதை பரிசீலனை செய்ய இயலும்.

5—

பட்டா வழங்குவதற்கு தனி வட்டாட்சியர் நியமனம்.

வினா எண் 15866— திரு. எஸ். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோவில் தாலுக்காவிற்கு பட்டாக்கள் வழங்குவதில் தேக்க நிலை உள்ளதால் இத்தாலுக்காவிற்கு நத்தம் சர்வே தனி தாசில்தார் பணி நியமனம் செய்ய அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

நில அளவைப் பணி முடிந்து ஆவணங்கள் தயார் நிலை ஆனதும் பட்டாக்கள் வழங்க தனி வட்டாட்சியர் நியமனம் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6—

அங்காடி அமைக்க அரசு பரிசீலனை.

வினா எண் 3062— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஒமவயல் பாலச்சேரிக் காட்டில் அமுதம் அங்காடி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஓமவயல் பாலச்சேரிக்காட்டில் அமுதம் அங்காடி அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

அங்காடிகள் துவங்க நெறிமுறைகளைத் தளர்த்த அரசுத் திட்டம்.

வினா எண் 5385—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மீனவர்கள் அதிகம் வாழும் வேதாரண்யம் தொகுதியில் மீனவ மக்களது நலனைக் கருத்திற் கொண்டு அங்காடிகள் துவங்குவதில் உள்ள நெறிமுறைகளைத் தளர்த்த அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர் :

வேதாரண்யம் வட்டத்தில் கோடியக்கரை சிறுதலைக் காடு பகுதி ஆற்காட்டுத்துறை, புஷ்பவனம், வெள்ளப்பள்ளம், மற்றும் அவரிக்காடு (கள்ளிமேடு) ஆகிய கிராமங்களில் மீனவர்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் அருகிலுள்ள நியாய விலைக் கடைகளில் தங்கள் குடும்ப அட்டைகளுக்கான இன்றியமையாப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். அப்படி பிரச்சினைகள் ஏதுமின்றி அவர்கள் பொருட்கள் பெற்றுவரும் நிலையில் அங்காடிகள் துவங்குவதில் உள்ள நெறிமுறைகளைத் தளர்த்த வேண்டிய தேவையில்லை.

8—

வாடிக்காடு கிராமத்தில் அமுதம் அங்காடி திறக்க அரசு திட்டம்.

வினா எண் 7007—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனவாசல் ஊராட்சி, வாடிக்காடு ஆதி திராவிடர்களுக்கு அமுதம் அங்காடி ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனவாசல் ஊராட்சி, வாடிக்காடு கிராமத்திற்கு புனவாசல் முதன்மை வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் 387 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, அமுதம் அங்காடி திறக்க வேண்டிய அவசியம் இல்லை.

9—

குடும்ப அட்டைகளை சோதனையிடுதல் அரசு நடவடிக்கை.

வினா எண் 11095— திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பல இடங்களில் குடும்ப அட்டைகளை சோதனையிடச் சென்ற அலுவலர்கள், குடும்பத்திலுள்ளவர் வெளியில் சென்றிருந்ததால் பல குடும்ப அட்டைகளை ரத்து செய்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு குடும்ப அட்டைகளைத் திரும்ப வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) தமிழகத்தில் குடும்ப அட்டைகளை சோதனையிடச் செல்லும் அலுவலர்கள், குடும்பத்திலுள்ளவர்கள் வெளியில் சென்றிருந்ததால் குடும்ப அட்டைகளை ரத்து செய்வதில்லை.

(ஆ) வினா எழவில்லை, எனினும், அப்படி விடுபட்டவர்கள் முறையாக மனுச் செய்தால் தக்க விசாரணைக்குப் பிறகு குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10—

ஆலங்குடியில் நியாய விலைக் கடை திறக்க அரசு பரிசீலனை.

வினா எண் 11532—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை தாலுகா, ஆலங்குடி கிராமத்திற்கு தனியாக நியாய விலைக் கடை அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர் :

குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை தாலுக்காவுக்குட்பட்ட ஆலங்குடி கிராமம், முருகமங்கலம் நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி நியாய விலைக் கடையில் தற்போது 710 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளன. மேற்படி கடையில் குறைவான அட்டைகளே உள்ளதால் தற்போது 228 குடும்ப அட்டைகளே உள்ள ஆலங்குடி கிராமத்தில் பகுதி நேர அங்காடி திறக்க விதிமுறைகளில் இடமில்லை.

11—

ராயபுரத்திற்கு ஒரு தனி அமுதம் அங்காடி.

வினா எண். 13029—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, கீழராயபுரத்திற்கு ஒரு தனி அமுதம் அங்காடி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

அரியலூர் வட்டத்திலுள்ள ஆனந்தவாடி முதன்மைக் கூட்டுறவு வங்கியால் சின்ன ஆனந்தவாடியில் 941 குடும்ப அட்டைகளுடன் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதில் சின்ன ஆனந்தவாடி, பெரிய ஆனந்தவாடி, கீழராயபுரம் மற்றும் சோழன் குறிச்சி கிராம மக்கள் இக்கடையில் இன்றியமையாப்

TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

பொருட்கள் பெற்று வருகின்றனர். கீழராயபுரத்திற்கும் தற்போது இருக்கும் கடைக்கும் இடையே உள்ள தூரம் 5 கிலோ மீட்டராகும். எனினும், கீழராயபுரத்திற்கு லாரி மூலம் இன்றியமையாப் பொருட்கள் கொண்டு செல்ல சரியான ரோடு வசதிகள் இல்லாததாலும் பகுதிநேரக் கடை திறக்க வாடகையின்றி கட்டிடம் கொடுக்க யாரும் முன் வராததாலும் கீழராயபுரத்தில் பகுதிநேரக் கடை திறக்க வாய்ப்பில்லை. இது குறித்து செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

12—

காரிக் கோயிலுக்கு மீண்டும் நியாய விலைக் கடை திறக்க அரசு திட்டம்.

வினா எண் 14139—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, காரிக்கோயிலுக்கு மீண்டும் நியாய விலைக் கடை ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : உணவு அமைச்சர் :

புலியான்குளம் விவசாய முதன்மைக் கூட்டுறவு வங்கியால் 398 குடும்ப அட்டைகளுடன் குண்டல் கிராமத்தில் நியாய விலைக் கடை நடத்தப்பட்டு வருகிறது. காரிக்கோயில் கிராமத்தில் உள்ள 126 குடும்ப அட்டைதாரரும் குண்டல் கிராமத்திற்கு வந்து ரேசன் பொருட்களை பெற்றுச் செல்கிறார்கள். குண்டல் கிராமத்திற்கும் காரிக்கோயில் கிராமத்திற்கும் இடையே சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் தான் உள்ளது. எனவே, (தற்போதுள்ள அரசு விதிமுறைகளின் அடிப்படையில்) காரிக்கோயில் கிராமத்திற்கு தனியாக நியாய விலைக் கடை அமைக்க இயலாது.

13—

புதுக்குப்பம் கிராமத்திற்கு நியாய விலைக் கடை திறத்தல்.

வினா எண் 14240—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள புதுக்குப்பத்திற்கு நியாய விலைக் கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1993 அக்டோபர் 26

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டுப்பாட்டின் கீழ் புதுப் பட்டியில் 380 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வந்த நியாய விலைக் கடையினை புதுக்குப்பம் கிராமத்திற்கு மாற்றம் செய்து, மேற்படி நியாய விலைக் கடை புதுக்குப்பம் கிராமத்தில் 31—1—1993 முதல் செயல்பட்டு வருகிறது.

14—

துறையூரில் ரேசன் கடை அமைக்கும் திட்டம்.

வினா எண் 15130—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றியம் துறையூரில் ரேசன் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம் கங்கைகொண்டான் கிராமத்தில் 782 குடும்ப அட்டைகளுடன் அமுதம் நியாய விலைக் கடை இயங்கி வருகிறது. இதில் துறையூரும் அடங்கும். கங்கை கொண்டான் கிராமத்திற்கும் துறையூருக்கும் இடையே சுமார் $1\frac{3}{4}$ கி.மீ. தூரமே உள்ளது. எனவே, துறையூரில் தனியாக ரேசன் கடை அமைக்க அவசியம் இல்லை.

15—

பொட்டிதட்டியில் நியாய விலைக் கடை அமைத்தல்.

வினா எண் 15139—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், பொட்டி தட்டியில் நியாய விலைக் கடை ஆரம்பிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : உணவு அமைச்சர் :

பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, போகலூர் பஞ்சாயத்திலுள்ள மஞ்சூர் நியாய விலைக் கடையினைப்பிரித்து பொட்டிதட்டி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டு, 10—3—1993 முதல் செயல்பட்டு வருகிறது.

16—

பரமக்குடி தாலுக்காவில் குடும்பக்கார்டுகள் வழங்கிய விவரம்.

வினா எண் 16538—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தாலுக்காவில் குடும்பக்கார்டுகள் வேண்டி வந்துள்ள மனுக்கள் எத்தனை ?

(ஆ) 1991-92இல் கொடுக்கப்பட்ட குடும்பக்கார்டுகள் எத்தனை ?

(இ) குடும்ப கார்டு கொடுக்கப்படாதவர்களுக்கு அவற்றை வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) பரமக்குடி தாலுக்காவில் 1991 ஆம் ஆண்டில் புதிய குடும்ப அட்டை கோரி மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) 1992 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் முடிய 220 மனுக்கள் பெறப்பட்டு அதில் 176 மனுதாரர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) நவம்பர் 1992 முதல் ஜனவரி 1993 முடிய, 13,046 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இம்மனுக்களில் உரிய விசாரணைக்குப் பிறகு தகுதி வாய்ந்த மனுதாரர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

17—

பொட்டிதட்டியில் பகுதி நேர நியாய விலைக் கடை திறத்தல்.

வினா எண் 16560—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, பொட்டிதட்டியில் நியாய விலைக் கடை ஆரம்பிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி சட்டமன்றத் தொகுதி போகலூர் பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்ட மஞ்சூர் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து பொட்டிதட்டி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டு 10—3—1993 முதல் செயல்பட்டு வருகிறது.

18—

அரசிராமணி பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை.

வினா எண் 10330—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சங்ககிரி தொகுதி, அரசிராமணி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்ட நிலம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் எப்பொழுது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அரசிராமணி பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக்கட்டிடம் கட்டத் தேவையான நிலத்தைத் தர தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்நிலம் மருத்துவத்

1993 அக்டோபர் 26]

துறைக்கு மாற்றப்படதக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நில மாற்றம் செய்யப்பட்ட பின்னர் இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப கட்டிடம் கட்டும் திட்டம் பரிசீலிக்கப்படும்.

19—

இராஜாமடம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு பரிசீலனை.

வினா எண் 13466—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடத்தில் இயங்கி வரும் பிரதம சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

ஆம். தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான மருந்தகம் மற்றும் அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் போதுமான நிலம் கையகப்படுத்திய பின்னர் இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

20—

கும்பகோணம், அரசு மருத்துவமனைக்கு ஜெனரேட்டர் வழங்கும் திட்டம்.

வினா எண் 16186—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு 1992-93-ல் ஒரு ஜெனரேட்டர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

இல்லை.

21—

தமிழ் வளர்ச்சி மன்றத்திற்கு விவசாயத்துறை நிலம் அளிக்கும் திட்டம்.

வினா எண் 14521—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர், தமிழ் வளர்ச்சி மன்றத்திற்கு விவசாயத்துறை நிலம் அளிப்பதாக அரசு உத்தரவிட்டும், நிலம் ஒப்படைப்பு செய்யப்படாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த நிலத்தினை அந்த மன்றத்திற்கு அளிக்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) ஓசூர், தமிழ் வளர்ச்சி மன்றத்திற்கு விவசாயத்துறை நிலம் அளிப்பதாக உத்திரவிடவில்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

22—

தேவூர் வேளாண்மைத்துறை அலுவலகத்தை மேம்படுத்தும் திட்டம்.

வினா எண் 17237—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, தேவூர் வேளாண்மைத் துறை அலுவலகத்திற்கு ஒரு வேளாண்மைத் துணைக் கிடங்கு அமைக்கவும், அலுவலகத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்கவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

23—

பண்ணை மகளிர் கருத்தரங்கின் பயன்கள்.

வினா எண் 17344—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டென்மார்க் உதவியுடன் நடைபெறும் உழவர் பயிற்சி நிலையங்களில் பண்ணை மகளிர் கருத்தரங்கு மூலம் பயன் கிடைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) டென்மார்க் நாட்டின் நிதி உதவியுடன் செயல் படுத்தப்படும் ''வேளாண்மையில் தமிழ்நாடு மகளிர்'' என்ற திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பண்ணை மகளிர் கருத்தரங்கு கீழ்க்குறிப்பிட்டவாறு பயனுடையதாக உள்ளது :—

(1) மேற்கண்ட திட்டத்தின் கீழ் நடத்தப்படும் கிராம அடிப்படை பயிற்சியில் பயிற்சி பெற்ற பண்ணை மகளிர் தங்கள் வயல்களில் கடைப்பிடித்த தொழில் நுட்பங்களைப் பற்றியும், அதில் அடைந்த பயன்களையும் வெற்றிக் கதைகளாக மற்ற பண்ணை மகளிர்க்கு இக்கருத்தரங்கின் போது விளக்குவதால் தயக்கத்துடன், தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிக்காத, பண்ணை மகளிர் இனிவரும் காலங்களில் எல்லா தொழில் நுட்பங்களையும் கடைப்பிடிக்க தூண்டுகோலாக அமைந்துள்ளது.

(2) வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து வரும் தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை உதவி இயக்குநர்களுடன் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் 150 பண்ணை மகளிர், 5 குழுக்களாகப் பிரிந்து வயல் வெளி பிரச்சினைகள் பற்றி கருத்துப் பரிமாற்றம் செய்து சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்கின்றனர்.

(3) பயிற்சியில் இதுவரை கற்பிக்கப்படாத புதிய தொழில் நுட்பங்களை அந்தந்தப் பருவத்திற்கு ஏற்றவாறு செயல் விளக்கங்கள் செய்து காட்டுவதன் மூலம் பண்ணை மகளிர் புதிய தொழில் நுட்பச் செய்திகளை அறிந்து கொள்கிறார்கள்.

(4) மேலும், ஏற்கனவே, இத்திட்டத்தின் கீழ் கிராம அடிப்படை பயிற்சியில் கற்பித்த தொழில் நுட்பங்களை மீண்டும் எடுத்துரைத்து, வரும் பட்டத்தில் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்துவதன் மூலம் பண்ணை மகளிர் அதிக தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிக்கின்றனர்.

(5) சாதாரணமாக கிராமத்திலுள்ள பெண்கள் மேடை ஏறிப்பேசுவதில்லை. இந்தக்கருத்தரங்கின் மூலம் இப்பெண்கள் தங்கள் கருத்துக்களைக்கூற இப்பண்ணை மகளிர் கருத்தரங்கு உதவுகிறது.

(6) பயிற்சி பெற்ற பண்ணை மகளிர் எவ்வளவுதான் தெளிவுறு கற்றாலும், செயலில் ஈடுபடும்போது எழக்கூடிய சந்தேகங்களை கருத்தரங்கில் தொழில் நுட்பங்களைக்கடைப்பிடித்த பண்ணை மகளிர் கூறும்பொழுது ஐயம் நீங்கி தெளிவு பெற இது உதவுகிறது.

24—

விவசாய உற்பத்தியைப் பெருக்க பெண்களுக்கு அரசு வழங்கும் சிறப்புச் சலுகைகள்.

வினா எண் 17307—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாய உற்பத்தியைப் பெருக்க பெண்களுக்கு அரசு வழங்குகின்ற சிறப்புச் சலுகைகள் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

விவசாய உற்பத்திப்பெருக்கத்தில் ஈடுபட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயப் பெண்களுக்கு டானிடா உதவியுடன் செயல் படுத்தப்படும் ''டான்வா'' என்கிற பண்ணை மகளிர் பயிற்சித் திட்டத்தின் மூலம் 5 நாட்களுக்கு கிராம அளவிலான செயல்

1993 அக்டோபர் 26]

விளக்கப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியின் மூலம் பெண்கள் தங்கள் வயல்களில் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கான முக்கிய மற்றும் அதிக அளவில் மகசூல் மற்றும் பண வரவு தரக்கூடிய தொழில் நுட்பங்களை பெண் வேளாண்மை அலுவலர்களிடமிருந்து கற்றுக் கொள்கிறார்கள். இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 25 வீதம் 5 நாட்களுக்கு ரூ. 125 தரப்படுகின்றது. இது தவிர பழ மற்றும் மரக் கன்றுகள் வழங்குவதோடு இடு பொருட்களாக விதை, உரம், உயிர் உரம், பூஞ்சாண மருந்துகள், களைக்கொல்லி போன்றவை தரப்படுகின்றன. மேலும், மண்வெட்டி, அரிவாள், களைக்கொத்தி போன்ற உபகரணங்கள் இலவசமாகவும், டயர் வண்டிகள் 50 சதவீத மானியத்திலும் வழங்கப்படுகின்றன. இந்த டான்வா திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற விவசாயப் பெண்கள் தங்கள் ஊர்களிலுள்ள பயிற்சி பெறாத பிற விவசாய பெண்களுக்கு தாங்கள் கற்றுக் கொண்ட தொழில் நுட்ப செயல் விளக்கங்களை சொல்லிக் கொடுத்து செயலாக்கம் செய்யும் திட்டம், பன்மடங்கு பெருக்குத் திட்டம், இத்திட்டத்தில், விவசாயப் பெண்களுக்கு ஊக்குவிக்கும் வகையில் உரங்கள், உயிர் உரம், நுண்ணுயிர் உரங்கள், பூஞ்சாண மருந்து, களைக்கொல்லி ஆகியவையும் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், பயிற்சி அளிக்கும் விவசாயப் பெண்மணிக்கு ரூ. 100 பண உதவியும், பயிற்சியாளர்களுக்கு ரூ. 20 பண உதவியும் தரப்படுகின்றது. இவை தவிர, ''டான்வா'' பயிற்சி பெற்ற பெண் விவசாயிகளுக்கு சிறப்புப் பயிற்சி மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு இந்தப் பயிற்சிகளில் தொடர்ந்து வருவாய் தரக்கூடிய விவசாய உப தொழில்கள் கற்றுத் தரப்படுகிறது. மேலும், இப்பயிற்சிகளில் ஊக்கத் தொகை, இடுபொருட்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் தரப்படுகின்றன.

25—

திருமாளத்திலிருந்து ஏனக்குடிவரை புதிய தார்ச்சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 19145—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, கோயில் திருமாளம் பஞ்சாயத்தில் கோயில் திருமாளத்திலிருந்து—ஏனக்குடி வரை கரும்புக் கழகத்திலிருந்து புதிய தார்ச்சாலை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

26—

முடச்சிக்காட்டில் சமுதாயக் களம் அமைக்கத் திட்டம்.

வினா எண் 19650—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக் காட்டில் நெல் அறுவடைக் காலங்களில் பயன்படுத்த சமுதாயக் களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

இல்லை.

27—

பள்ளி கொண்டாவில் சமுதாயக் களம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 19710—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிகொண்டாவில் நெல் அறுவடைக் காலங்களில் பயன்படுத்த சமுதாயக் களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

மேற்கண்ட கிராமத்தில் சமுதாய களங்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

1993 அக்டோபர் 26]

28—

வணிகர் நலவாரியக் கூட்டத்தின் முடிவுகள்.

வினா எண் 14018— திரு ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தி அமைக்கப்பட்ட வணிகர் நல வாரியத்தின் கூட்டம் எப்போது கூட்டப்பட்டது ?

(ஆ) அதில் எடுக்கப்பட்ட முடிவுகளின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித்துறை அமைச்சர் :

(அ) 27-2-1992 நாளிட்ட அரசாணை எண் 88-ல் திருத்தி அமைக்கப்பட்ட வணிகர் நல வாரியத்தின் கூட்டம் இதுவரை கூட்டப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

29—

வணிகவரி மேல் முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்களில் பார்வையாளர்கள் அறைகள் வசதியை அதிகரிக்கும் திட்டம்.

வினா எண் 14407—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரும்பாலான வணிகவரி மேல் முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்களில் போதிய இருக்கைகளுடன் கூடிய பார்வையாளர் அறைகள் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் இக்குறைபாட்டைப்போக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பெரும்பாலான வணிகவரி மேல் முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்களில் போதிய இருக்கைகளுடன் கூடிய பார்வையாளர் அறைகள் உள்ளன. ஒரு சில அலுவலகங்களில் மட்டுமே போதிய இருக்கைகளுடன் கூடிய தனி பார்வையாளர்கள் அறைகள் இல்லை என்ற போதிலும் அவ்வலுவலகங்களிலும் பார்வையாளர்கள் அமருவதற்கு இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

30—

அமரர் டாக்டர் எம். ஜி. ஆர். சமாதியை மாற்றி அமைக்கும் திட்டம்.

வினா எண் 117— திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெரினா கடற்கரையில் அமரர் டாக்டர் எம். ஜி. ஆர். சமாதியின் அமைப்பை மாற்றி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) டாக்டர் எம். ஜி. ஆர். சமாதியின் மேம்பாட்டுக்காக ரூ. 1,965 கோடி செலவில் பணிகள் முடிக்கப்பட்டு 24-12-1992-ல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

1993 அக்டோபர் 26]

31—

அமரர் ராஜீவ் காந்திக்கு நினைவுச் சின்னம் அமைத்தல்.

வினா எண் 118—திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமரர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு ஸ்ரீபெரும்புதூரில்—அழகுடன் நினைவுச் சின்னம் அமைக்க அரசு நிலத்தை கையகப்படுத்தி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஸ்ரீபெரும்புதூரில் திரு. ராஜீவ் காந்தி நினைவகம் அமைக்க 12.19 ஏக்கர் நிலம் ரூ. 8,41,000 செலவில் அரசு சார்பில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. நினைவகத்தின் அமைப்பு மத்திய அரசின் பொறுப்பில் உள்ளது.

32—

காமராசர் நினைவாலயம் பழுது பார்க்க அரசு நடவடிக்கை.

வினா எண் 1089—திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராசர் நினைவாலயம் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்து பராமரிக்க அரசு முன் வருமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

(அ) கிண்டியில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராசர் நினைவாலயம் பழுது பார்க்கப்பட்டு 2—10—1991-க்கு முன்பாக பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சீர் செய்து நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

33—

சர். சி. வி. இராமன் பிறந்த இடத்தை நினைவிடமாக்கத் திட்டம்.

வினா எண் 2919—திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி சர். சி. வி. இராமன் தமிழகத்தில் பிறந்த இடத்தை அரசு நினைவிடமாக மாற்றும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1993 அக்டோபர் 26]

34—

வள்ளியம்மை மண்டபம் அழகுபடுத்தும் திட்டம்.

வினா எண் 3301—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சுதந்திர போராட்ட வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மை வாழ்ந்த தில்லையாடியை (வள்ளியம்மை மண்டபம்) அழகுப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :

இல்லை.

35—

காமராசர் மணிமண்டபம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 3538—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் பெருந்தலைவர் காமராஜரின் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் அரசு மணிமண்டபம் அமைக்க முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

36—

அண்ணா அருங்காட்சியகத்தில் முதல்வர்களின் படங்கள்.

வினா எண் 4194—டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணா சமாதியில் உள்ள அண்ணா அருங்காட்சியகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவரின் படங்களும் அண்ணாவிடம் பரிசு பெற்ற மாண்புமிகு முதல் அமைச்சரின் படங்களும் வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

சென்னை அண்ணா சமாதியில் உள்ள அண்ணா அருங்காட்சியகத்தில் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் புகைப் படங்களும் தற்போதைய முதலமைச்சரின் புகைப் படங்களும் வைக்கப்பட்டுள்ளன.

37—

அமரர் எம். ஜி. ஆர். சிலை மாவட்டந்தோறும் அமைக்கும் திட்டம்.

வினா எண் 5396—திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அமரர் புரட்சித் தலைவரின் சிலை தமிழகத்தில் எல்லா மாவட்ட தலை நகரங்களிலும் அரசின் சார்பில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

அரசின் பரிசீலனையில் இல்லை.

[1993 அக்டோபர் 26]

39—

காமராசர் வாழ்க்கை வரலாறு ஒலி, ஒளி காட்சி மூலம் அறிந்திட திட்டம்.

வினா எண் 5543—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்பு மிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தியாகராய நகரில் உள்ள பெருந்தலைவர் காமராஜ் நினைவு இல்லம் அல்லது கிண்டியில் உள்ள காமராஜ் நினைவாலயத்தில் அவரது வாழ்க்கை வரலாற்றினை குறைந்த பட்சமாக அவரது பிறந்த நாள் மற்றும் நினைவு நாளையொட்டி வரும் ஒரு வாரம் முழுவதும் ஒலி, ஒளி காட்சி மூலம் வருங் காலச் சமுதாயம் அறிந்திட வகை செய்ய அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம் பரத்துறை அமைச்சர்:

அரசின் பரிசீலனையில் இல்லை.

39—

அமரர் காந்திஜி வாழ்க்கை வரலாற்றை விளக்க ஒலி, ஒளி காட்சித் திட்டம்.

வினா எண் 5591—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்பு மிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கிண்டியில் உள்ள அமரர் காந்திஜி மண்டபத்தில் அவர் வாழ்க்கை வரலாற்றினை விளக்கும் ஒலி, ஒளி காட்சியினை நடத்த குறிப்பாக அவர் பிறந்த, மறைந்த நாட்களிலும் மற்றும் அவர் அமரரான மாதக் கடைசி வெள்ளிக் கிழமைகளிலும் நடத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அரசு சார்பின்றி தனியார் நிறுவனம் ஏதேனும் இதை நிறைவேற்றிட முன் வந்தால் அரசு ஊக்குவிக்குமா?

[1993 அக்டோபர் 26

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

(அ) பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) பரிசீலனையில் இல்லை.

40—

நினைவு மண்டபங்களில் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் ஒலி, ஒளிக் காட்சி நடத்தும் திட்டம்.

வினா எண் 5502—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூதறிஞர் ராஜாஜி, மகாகவி பாரதியார் ஆகியோருக்காக எழுப்பப்பட்டுள்ள நினைவு மண்டபங்களில் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் ஒலி, ஒளிக் காட்சி நடத்த அரசு முன் வருமா?

(ஆ) தனியார் துறை ஏதேனும் இத்தகு ஒலி, ஒளி காட்சிகளை அங்கு நடத்த அரசு அனுமதித்து ஊக்குவிக்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

(அ) பரிசீலனையில் இல்லை.

(ஆ) பரிசீலனையில் இல்லை.

41—

மதுவிலக்கு பிரச்சாரத்தை சினிமாவில் புகுத்துதல்—

வினா எண் 7498—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுவிலக்குப் பிரச்சாரத்தை ஒவ்வொரு சினிமாவிலும் புகுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

அம்மாதிரி செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

42—

ராஜாஜி மண்டபத்தில் தலைவர்கள் திருவுருவப் படங்களின் விவரங்கள்.

வினா எண் 7713—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள ராஜாஜி மண்டபத்தில் யார் யாரின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு உள்ளன?

(ஆ) இம் மண்டபத்தில் உள்ள சரித்திர மற்றும் அரசியல் முக்கியத்துவமிக்க தலைவர்களின் திருவுருவப்படங்களை பொது மக்கள் பார்ப்பதற்கு ஏதுவாக தினசரி ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு இந்த மண்டபம் திறந்து வைக்க செய்ய அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

(அ) 1. திரு. பாரதிதாசன்

2. ஔவையார்

3 திரு. கரிகால் சோழன்

4. திரு. கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார்.

5. திரு. வீரபாண்டிய கட்டபொம்மன்

6. திரு. இளங்கோ அடிகள்

7. டாக்டர் திரு. சி. என். அண்ணாதுரை.

8. முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ஜவகர்லால் நேரு.

9. அண்ணல் காந்தி அடிகள்.

10. திரு. சி. ஆர். இராஜகோபாலாச்சாரி.

11. திரு. கே. காமராஜ்.

12. திரு. எம். பக்தவச்சலம்.

13. திரு. கம்பர்.

14. திரு. சேரன் செங்குட்டுவன்.

15. திரு. மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

16. திரு. பாண்டியன் நெடுஞ்செழியன்.

17. திருவள்ளுவர்.

18. திரு. ஈ. வெ. இராமசாமி பெரியார்.

(ஆ) 1802-ல் அதாவது 191 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இராஜாஜி மண்டபம் காலப்போக்கில் வலுவிழந்து உள்ளதால் பொது மக்கள் பார்வைக்காக திறந்து வைக்க தற்பொழுது சாத்தியமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

43—

ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தி நினைவுச் சின்னம் அரசு நடவடிக்கை.

வினா எண் 8095— திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தி நினைவுச் சின்னம் மாநில அரசின் சார்பில் கட்டப்படுகிறதா அல்லது வேறு அமைப்பிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு நினைவுச் சின்னம் மாநில அரசின் ஒத்துழைப்போடு மத்திய அரசின் சார்பில் கட்டப்படவுள்ளது.

44—

திருவாரூரில் குடிநீர் வசதியை விரிவாக்கும் திட்டம்.

வினா எண் 781— திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் நகரத்தில் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க குடிநீர் வழங்குவதை விரிவாக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை. ஆனால் இந்நகராட்சிக்கு ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஆய்வு நகராட்சி ஆய்வு மதிப்பீட்டுத் தொகையை செலுத்தியவுடன் குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

(ஆ) கேள்வி எழாது.

45—

கோவை, மதுரை மாநகராட்சிகளின் வருவாய் விவரம்

வினா எண் 6286— திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, மதுரை மாநகராட்சிகளுக்கு கடந்த 3 ஆண்டுகளில் சொத்து வரி மற்றும் தொழில் வரி மூலம் கிடைத்த வருவாய் ஆண்டு வாரியாக எவ்வளவு?

(ஆ) இரு மாநகராட்சிகளிலும் சொத்து வரி எப்போது உயர்த்தப்பட்டது?

(இ) உயர்த்தப்பட்ட சதவிகிதம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வருடம்.		சொத்துவரி வசூல். (ரூபாய் லட்சத்தில்)	தொழில்வரி வசூல். (ரூபாய் லட்சத்தில்)
(அ) மதுரை மாநகராட்சி:			
1988-89	..	676.31	26.15
1989-90	..	840.57	26.41
1990-91	..	691.43	34.79
கோவை மாநகராட்சி:			
1988-89	..	[illegible]21.11	35.60
1989-90	..	660.55	40.78
1990-91	..	650.75	31.84

(ஆ) மற்றும் (இ) மதுரை மாநகராட்சியில் சொத்துவரி விகிதாச்சாரங்கள் 1—4—1972 முதல் 24 சதவிகிதத்திலிருந்து 27 சதவிகிதத்திற்கு உயர்த்தப்பட்டு நாளது தேதி வரையில் அதே வரி விகிதாச்சாரத்தில் இருந்து வருகிறது. 1974-ல் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 13 பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளுக்கு 17 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதத்திற்கு 1—4—1988 முதல் வரி விகிதாச்சாரம் உயர்த்தப்பட்டுள்ளன.

கோவை மாநகராட்சியில் கோவை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு $15\frac{1}{2}$ சதவிகிதமும், சிங்காநல்லூர் நகராட்சிப் பகுதிகளுக்கு $12\frac{1}{2}$ சதவிகிதமும் மற்றும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பஞ்சாயத்து பகுதிகளான கணபதி, குமாரபாளையம், சங்கனூர், விளாங்குறிச்சி, கோவை ரூரல் ஆகிய

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

வற்றிற்கு $8\frac{1}{2}$ சதவிகிதமும், தெலுங்குபாளையம் பகுதிக்கு $7\frac{1}{2}$ சதவிகிதமும் 1—10—1983 முதல் வரி உயர்வு செய்யப்பட்டு உள்ளது. மேலும் அனைத்து மாநகராட்சிப் பகுதிகளிலும் காலி இட வரி ஒரு சதவீதம் வசூலிக்கவும், கல்வி வரியாக $2\frac{1}{2}$ சதவீதமும், நூலக வரியாக ரூபாய்க்கு 5 பைசா வீதமும் வரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

46—

ஆனைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு குடிநீர் வசதி அரசு நடவடிக்கை.

வினா எண் 11616—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி, ஆனைக்காடு ஆதி திராவிடர் தெருவில் 1992-93-ல் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். இங்குள்ள மக்கள் தொகை 100. இங்கு ஒரு கையிறைப்பான் பயனில் உள்ளது. மேலும், ஆனைக்காட்டிற்கு உத்தரவாகியுள்ள மின் விசைத் திட்டம் மூலம் ஆனைக்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

47—

வெட்டிக்காட்டில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம்.

வினா எண் 11624—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மருங்கப்பள்ளம் புளியஞ்சேரி வெட்டிக்காடு பகுதியில் 1992—93ல் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. புளியஞ்சேரி வெட்டிக்காடு, மருங்கப்பள்ளம் கிராமத்தின் ஒரு பகுதியாகும். இப்பகுதியின் மக்கட் தொகை 165 ஆகும். தற்போது மருங்கப்பள்ளத்திலுள்ள 500 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து இப்பகுதிக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

48—

எழுத்தாணி வயலில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 12039—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலத்தளி ஊராட்சி, எழுத்தாணி வயலில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி 1992-93-ல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். ஒரு மின்விசைத் திட்டம் எடுக்கப்பட்டு இத்திட்டத்திற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டப்பட உள்ளது. களப்பணிகள் தொடங்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

49—

வேலாக்குடியில் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 12659—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம்புளிக்காடு ஊராட்சி வேலாக்குடிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க 1992-93-ம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புளிக்காடு ஊராட்சி, வேலாக்குடியில் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணிகள் நடப்பில் உள்ளன.

50—

நாணத்திடலில் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம்.

வினா எண் 12662—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம்புளிக்காடு ஊராட்சி, நாணத்திடல் ஆதிதிராவிடர் தெருவிற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க 1992-93-ம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

51—

கீழமூங்கிலடியில் நீாத்தேக்கத் தொட்டி அமைக்க திட்டம்.

வினா எண் 12767—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி, கீழமூங்கிலடி ஆதிதிராவிடர் காலனிக்கு குடிநீர் மேல்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.
(ஆ) வினாவிற்கு இடமில்லை.

52—

வண்டுராயன்பட்டி காலனிக்கு நீர்த்தேக்கத் தொட்டி ஏற்படுத்த அரசு திட்டம்.

வினா எண் 12872—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், வண்டுராயன்பட்டு காலனிக்கு குடிநீர் மேல்நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.
(ஆ) 1993-94-ம் ஆண்டில் இக்காலனிக்கு தனியாக குடிநீர்த் திட்டம் செய்ய ஆவன செய்யப்படும்.

53—

அந்தோணியார்புரத்திற்கு நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கத் திட்டம்.

வினா எண் 12986—திரு. ஆர், சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அந்தோணியார்புரத்திற்கு 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைசசர் :

இல்லை.

54—

புதுக்குடியிருப்பிற்கு தனியாக நீர்த்தேக்கத் தொட்டி ஏற்படுத்தத் திட்டம்.

வினா எண் 12989—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக்காடு ஊராட்சி, புதுக்குடியிருப்பிற்கு 1992-93-ல் தனியாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடிச்சிக்காடு ஊராட்சி புதுக்குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், முடச்சிக்காடு குடிநீர்த் திட்டத்திலிருந்து விஸ்தரிப்பு மூலம் 2 குடிநீர் மேடைகளும் பயனில் உள்ளது. இது தற்போதைய மக்கட் தொகைக்கு (450) போதுமானது.

TRUTH ALONE TRIUMPHS

55—

வீரியங்கோட்டை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை விரிவுபடுத்தும் திட்டம்.

வினா எண் 12991—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியங்கொட்டையில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை விரிவுபடுத்திக் கட்ட 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியங்கோட்டை ஊராட்சி, வீரியங்கோட்டையில் இரண்டு கைபம்புகளும், ஒரு 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலைத் தொட்டியும் பயனில் உள்ளன.

56 —

புனல்வாசல் மேற்கு முருகன் தெருவிற்கு குடிநீர் வசதி செய்தல்.

வினா எண் 13381—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், புனல்வாசல் மேற்கு முருகன் தெருவிற்கு 1992-93-ல் ஒரு மேல்நிலைத் தொட்டி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை, முருகன் தெருவானது, புனல்வாசல் மேற்கு கிராமத்தின் ஒரு பகுதியாகும். இக்கிராமத்திற்கு ஏற்கனவே 1979-80-ம் ஆண்டில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது, தற்போதைய மக்கட் தொகைக்கு குடிநீர் பற்றாக்குறையாக உள்ளதால் 1992-93-ம் ஆண்டில் புதிய மின்விசைத் திட்டம் எடுக்கப்பட்டு 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட உள்ளது, அதற்கான போர்வெல் போடப்பட்டு விட்டது. இதர பணிகளும் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திலிருந்து முருகன் தெருவிற்கு பொது மேடை குழாய் அமைக்கப்பட்டு திட்டம் செயலுக்கு கொண்டு வரப்படும்,

1993 அக்டோபர் 26]

57—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பழுது நீக்குதல்,

வினா எண் :13837—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உடைந்து விட்டதால் அதை மாற்றித் தர 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை, இங்கு கட்டப்பட்டிருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்பட்டிருக்கின்ற பழுதுகள் சீர் செய்யப்பட்டு தற்பொழுது நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது, எனவே, புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு திட்டம் ஏதும் இல்லை.

58—

கழனிவாசலில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம்,

வினா எண் 13409—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் மேலத்தெருவில் 1992-93-ல் ஒரு ஆழ் குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் ஊராட்சி, கழனிவாசல் மேலத் தெருவிற்கு, கழனிவாசல், குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வினியோகம் இல்லை, ஆகவே, இனிவரும் நிதியாண்டுகளில் இப்பகுதிக்கு தனியே ஒரு கையிறைப்பான் நிறுவ ஆவன செய்யப்படும்,

59—

காயாலூரில் வானொலிப் பெட்டியும் தொலைக்காட்சிப் பெட்டியும் அமைத்தல்,

வினா எண் 14782—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

"தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாலூர் மேற்கு காவக்காரன் தெரு மக்களுக்கு 1992-93-ல் வானொலிப் பெட்டியும், தொலைக் காட்சி பெட்டியும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

காயாலூர் ஊராட்சியின் நிதிநிலை வளமுடையதாக இல்லாமையால், அவ்வூராட்சியின் மேற்கு காவக்காரன் தெரு மக்களுக்கு வானொலி மற்றும் தொலைக் காட்சி பெட்டிகள வழங்கும் செயற்குறிப்பு இல்லை,

60—

நெல்லிக்கொல்லை ஆதி திராவிடர்களுக்கு குடிநீர் வசதி திட்டம்.

வினா எண். 15443—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சா கீழ்ககாணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள நெல்லிக் கொல்லை ஆதிதிராவிடர்களுக்கு குடிநீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்து தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை. குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக இக்குடியிருப்பிற்கு குடிநீர் வசதி ஏற்கெனவே செய்து தரப் பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

6 —

பரமக்குடி தொகுதியில் தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு வழங்குதல்.

வினா எண் 15711—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகள் எத்தனை?

(ஆ) மேலும் விண்ணப்பித்துள்ள காலனிகளுக்கு எந்த ஆண்டு வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) 12.

(ஆ) நிதி வசதி ஏற்படும்போது தொலைகாட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்.

62—

தெருவிளக்குகளை அதிகரிக்கத் திட்டம்.

வினா எண் 15839—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வண்ணபடப்பனார் வயல் வடக்கில் 1992-93-ல் தெரு விளக்கை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

63—

பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் ஆழப்படுத்திய கிணறுகள் அரசு நடவடிக்கை.

வினா எண் 16498—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் 1991-92-ல் ஆழப்படுத்திய திறந்தவெளிக் கிணறுகள் எத்தனை?

(ஆ) இதற்கு பதில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) திறந்தவெளிக் கிணறுகள் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படுகிறது. பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்க்கண்ட 4 கிராமங்களில் திறந்தவெளிக் கிணறு ஆழப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவை யாவன: 1. பதுக்குடி, 2. கண்டாகுளம், 3. கள்ளிக்குடி, 4. வாலாங்குடி.

(ஆ) மேற்படி திறந்தவெளிக் கிணறுகள் தற்போது உபயோகத்தில் உள்ளன. எனவே, மாற்று ஆழ்துளைக் கிணறுகள் தற்போது அமைக்கத் தேவையில்லை.

64—

புவனகிரி ஒன்றியத்தில் குடிநீர் வசதி கொடுக்கும் திட்டம்

வினா எண் 16803—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், பிராளூர் ஆதிதிராவிடர் பகுதியில் கையிறைப்பான் போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

1993 அக்டோபர் 26]

65—

புவனகிரி ஒன்றியத்தில் குடிநீர் வசதி செய்து கொடுக்கும் திட்டம்.

வினா எண் 16806—செல்வி. கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள தலைக்கும் ஆதிதிராவிடர் பகுதிக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்து கொடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை. மேல்நிலைநீர்த்தேக்கத் தொட்டி ஏற்கனவே கட்டப்பட்டு பயனில் உள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

66—

தரைமேடு காலனிக்கு வானொலி மன்றம் அமைத்தல்.

வினா எண் 17378—செல்வி. கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், தரைமேடு காலனி மக்களுக்கு வானொலி மன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைத்துத் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 1993-94-ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஊராட்சிகளுக்கான 80 சதவிகித வேலைத் திட்டத்தில் இப்பணி சேர்க்கப்பட்டு வானொலி மன்றம் அமைத்துத் தரப்படும்.

67—

குளித்தலைப் பகுதி இந்து சமய அறநிலையத்துறையை திருச்சி மாவட்ட அறநிலையத் துறையுடன் இணைப்பு.

வினா எண் 322—திரு. அ. பாப்பாசுந்தரம் ; மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் இணைந்துள்ள குளித்தலைப் பகுதி இந்து சமய அறநிலையத் துறையை திருச்சி மாவட்ட இந்துசமய அறநிலையத் துறையுடன் இணைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலயத் துறை அமைச்சர் :

இல்லை.

68—

கோயில் சிலைகள் திருட்டு அரசு எடுத்த நடவடிக்கை.

வினா எண் 526—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள கோயில் சிலைகளை வெளிநாட்டிற்கு கடத்தியதாக அரசுக்குத் தகவல் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(இ) மீட்கப்பட்ட சிலைகள் மதிப்பு எவ்வளவு ?

(ஈ) எந்தெந்த நாட்டில் மீட்கப்பட்டது ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இந்திய தூதரகம் மூலம் வெளிநாட்டு நீதி மன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தும், கடத்தி செல்லப்பட்ட சிலைகள் இருந்த சம்பந்தப்பட்ட நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையிலும் சிலைகள் மீட்கப்பட்டு தாயகம் கொண்டு வரப்பட்டுள்ளன.

1993 அக்டோபர் 26]

(இ) கலைநுட்பமுள்ள சிலைகள் என்பதால், அவை களை விலையிடமுடியாது. அவைகள் எல்லாம் விலை மதிப்பற்றவை.

(ஈ) அமெரிக்கா, கனடா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து மீட்கப்பட்டன.

69—

இலவசமாக கோயில் கட்ட அரசின் நடவடிக்கைகள்.

வினா எண் 838—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் இருந்து ஆதிதிராவிடர் காலனிக்கு இலவசமாக கோயில் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

70—

இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள கோயில்கள் விவரம்.

வினா எண். 1718—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழுள்ள திருக்கோயில்கள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

1781.

71—

ஆலயங்களில் சாஸ்திர விதிமுறைகள் அறிந்த வல்லுனர்கள் பணியில் நியமிக்கும் திட்டம்.

வினா எண் 4489—திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் ஆலயங்களில் பணியாற்றும் நிர்வாக அதிகாரிகட்குப் பதிலாக வேதநெறி சாஸ்திர விதிமுறைகள் அறிந்த வல்லுனர்களை பணியில் நியமிக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

ஆலயங்களில் பணியாற்றும் நிர்வாக அதிகாரிகள் ஆலய நிர்வாகத்தை மட்டும்தான் கவனிக்க வருகிறார்கள். வழிபாடு சடங்குகள் போன்ற மத கோட்பாடுகள் அடங்கிய எந்த செயலிலும் அவர்களுக்கு நேர்பங்கு கிடையாது. ஆகவே வேத நெறி சாஸ்திரம் விதிமுறைகள் அறிந்த வல்லுநர்களை நிர்வாக அதிகாரிகளாக நியமிப்பது அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

72—

கோயம்புத்தூர் பட்டீஸ்வரர் கோயில் கற்சிலைகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 6053—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் பேரூரில் உள்ள அருள்மிகு பட்டீஸ்வரர் கோயில் கற்சிலைகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1993 அக்டோபர் 26]

விடை —

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் கோயில் கற்சிலைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, கற்சிலைகள் அனைத்தும் உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

73—

சீகன் காட்டிலுள்ள பிள்ளையார் கோயிலை சீரமைக்க அரசின் திட்டம்

வினா எண் 6411—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சீகன் காட்டிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு திருப்பணி செய்து சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

74—

வெள்ளங்காடு முனியன் காளி கோயிலை சீரமைக்கும் திட்டம்

வினா எண் 6465—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வெள்ளங்காட்டிலுள்ள முனியன் காளி கோயிலை சீரமைத்துத் திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

75—

திருவாங்கூர் தேவஸ்வம் போர்டின் பொறுப்பிலுள்ள அறக் கட்டளை

வினா எண் 6519—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்ட பிறகும் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் சில பகுதிகளில் திருவாங்கூர் தேவஸ்வம் போர்டின் பொறுப்பில் ஏதேனும், திருக்கோயில்கள் இந்து சமய அறக் கட்டளைகள் உள்ளனவா ?

(ஆ) அவற்றின் நிர்வாகத்தில் அரசு அறநிலையத்துறைக்கு உள்ள பொறுப்பு விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

() வினாவிற்கு இடமில்லை.

76—

அடைக்கலம் காத்தான் ஐயனார் கோயிலை பராமரிக்கும் திட்டம்

வினா எண் 6783—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் அருகில் அடைக்கலங்காத்தான் ஐயனார் கோயிலை பராமரித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இப்பொருள் பற்றிய செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

ஊமத்தநாடு காளியம்மன் கோயிலை பராமரிக்கும் திட்டம்

வினா எண் 7052—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஆதிதிராவிடர்களின் காளியம்மன் கோயிலை பராமரித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இப்பொருள் பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

78—

அருள்மொழித் தேவன் காலனி கோயிலைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை

வினா எண் 7569—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அருள்மொழித் தேவன் காலனிக்கு கோயில் புதுப்பிக்க அரசு நிதியுதவி வழங்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பரங்கிப்பேட்டை ஒன்றியம், அருள்மொழித்தேவன் காலனிக்கு அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயிலில் பொதுமக்களால் திருப்பணி வேலைகள் செய்து முடிக்கப்பட்டு 9–7–1992 அன்று கும்பாபிஷேகம் செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

79—

பக்தர்களுக்கு வழங்கும் விபூதி, சந்தனம், பன்னீர் தயாரிக்க ஆகும் செலவினங்கள்

வினா எண் 8370—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக் கோயில் பக்தர்களுக்கு வழங்கும் விபூதி, சந்தனம், பன்னீர் நல்ல தாக சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், வருடம் ஒன்றுக்கு ஆகும் செலவின் விவரம் என்ன ?

விடை —

மாண்புமிகு திரு வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அற நிலையத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இதன் பொருட்டு வருடம் ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு செலவாகிறது:—

		ரூபாய்
1.	விபூதி	71,207
2.	சந்தனம் (1,000 கிலோ எடை)	2,96,000
3.	பன்னீர்	1,29,606

80—

''திருக்கோயில்'' மாத இதழை மேம்படுத்த அரசு நடவடிக்கை

வினா எண் 8755—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடான ''திருக்கோயில்'' மாத இதழை மேலும் மேம்படுத்தும் வகையில் துணை ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களின் எண்ணிக் கையை அதிகரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : 'திருக்கோயில்' இதழில் வெளியிடப்படும் கட்டுரைகளுக்கேற்ப விளக்கப் படம் வரைந்து கொடுக்க இளநிலை ஓவியர் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மற்ற பணியிடங்கள் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

81—

ஆலயங்களில் பொது விருந்துகள் நடத்துதல்

வினா எண் 10349—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள ஆலயங்களில் பொது விருந்துகள் நடத்தப்படுகின்றனவா ?

(ஆ) எந்தெந்த தினங்களில் நடத்தப்படுகின்றன ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு வருடமும் தமிழகத்தில் நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் சுதந்திர தினமான ஆகஸ்ட் 15ஆம் தேதியிலும் பேரறிஞர் அண்ணா நினைவு நாளான பிப்ரவரி 3ஆம் தேதியிலும் பொது விருந்துகள் நடத்தப்பட்டு வருகின்றன.

82—

துர்க்கை செல்லம்மன் கோயிலைப் புதுப்பிக்கும் திட்டம்.

வினா எண் 13163—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், அதிராம்பட்டினம் துர்க்கை செல்லம்மன் கோயிலைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இப் பொருள் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

83—

செல்வ விநாயகர் கோயிலைப் புதுப்பிக்கத் திட்டம்

வினா எண் 13501—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, செங்காதரபுரம் ஊராட்சி பால்சேரிக்காடு செல்வ விநாயகர் கோயிலைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

இப் பொருள் பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

84—

மனோரா மாரியம்மன் கோயிலைப் புதுப்பிக்கும் திட்டம்

வினா எண் 13502—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சுரபேந்திரா ராஜபட்டிணம் மனோரா மாரியம்மன் கோவிலைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு.வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இப் பொருள் பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் **பரிசீலனையில்** இல்லை.

85—

கோயில் தெப்பங்களை பராமரிக்க அரசு பரிசீலனை.

வினா எண் 15429—திரு. டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுர மாவட்டத்தில் தெப்பங்களுடன் கூடிய திருக்கோயில்கள் எத்தனை?

(ஆ) தெப்பங்களைப் பழுது பார்ப்பதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) ஆறு.

(ஆ) இது குறித்த பிரேரணைகள் அரசுக்கு வரப்பெறும் போது பரிசீலிக்கப்படும்.

86—

திருக்கோயில்களில் உள்ள கடைகளின் மூலம் வரவினங்கள்

வினா எண் 15434—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் திருக்கோயில்களில் உள்ள கடைகளின் மூலம் இத்துறைக்கு வரும் வருமானம் (1991–92)இல் எவ்வளவு?

(ஆ) எத்தனை கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன?

(இ) மேலும் கடைகள் கட்டிட அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) 1991-92ல் இராமநாதபுரம் மாவட்டத்தில் திருக்கோயில்களில் உள்ள கடைகள் மூலம் வரும் வருமானம் ரூ. 3,84,662.

(ஆ) 336.

(இ) இல்லை.

87—

திருக்கோயில் ஆய்வர்களும் பணியின் விவரங்களும்.

வினா எண் 15791—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் திருக்கோயில்களைக் கவனிக்க உள்ள ஆய்வர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இவர்களுக்கு அலுவலகங்கள் இருக்கின்றனவா ?

(இ) இவர்கள் பணி பற்றிய விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் திருக்கோயில் பணிகளைக் கவனிக்க நான்கு ஆய்வர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

(ஆ) இவர்கள் நால்வருக்கும் அலுவலகங்கள் உண்டு.

(இ) இந்து சமய அறநிலையத் துறை ஆய்வர்கள், திருக் கோயில்களின் பாக்கி வசூல், உண்டியல் எண்ணிக்கை மற்றும் ஏலங்களைக் கண்காணித்தல், கணக்குகளை ஆய்வு செய்தல், உதவித் தொகை நிர்ணய அறிக்கை சமர்ப்பித்தல், சொத்துப் பதிவேடுகள் பரிசீலனை செய்தல், வரவு செலவுத் திட்டம் தயாரிக்க உதவுதல், நீதிமன்ற விசாரணை தொடர்

619 to 634

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

சிவகிரி-கொளாநல்லி வழித்தடத்தில் இயக்கம் செய்யப்பட்ட ஜீவா போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து வழித்தட எண். ஏ-1 வழித்தடத்தில் பயணிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்ததால் பேருந்து தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்பட்டது. மீண்டும் மேற்படி வழித்தடத்தை ஆய்வு செய்து பேருந்து இயக்க ஆவன செய்யப்படும்.

17—

கள்ளக்குறிச்சிக்குக் கூடுதல் பேருந்து வசதி ஏற்படுத்துதல்.

வினா எண் 20376—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தம்மம்பட்டியிலிருந்து கள்ளக் குறிச்சிக்கு கெங்கவல்லி, வீரகனூர், தலைவாசல் வழியாக அண்ணா போக்குவரத்துக் கழகப் புறநகர் பேருந்து விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து தம்மம்பட்டி-கள்ளக்குறிச்சி (வழி) கெங்கவல்லி, ஆத்தூர் என்ற புறநகரப் பேருந்து மூலம் இரு நடைகளும் இராசிபுரம்-கைகளத்தூர் (வழி) கெங்கவல்லி வீரகனூர் என்ற புறநகர் பேருந்தின் மூலம் நான்கு நடைகளும் 58 சதவீத பயணிகள் போக்குவரத்துடன் மட்டும் இயக்கப்படுகின்றன. மேலும் கள்ளக்குறிச்சிக்கு வீரகனூர் வழியாக, தந்தை பெரியார் தீரன் சின்னமலை மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் 12 நடைகளும் இயக்கப்படுகின்றன. இதைத் தவிர அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் தம்மம்பட்டி-கெங்கவல்லி தடத்தில் 58 நடைகளும் கெங்கவல்லி வீரகனூர் தடத்தில் 68 நடைகளும் வீரகனூர்-தலைவாசல் தடத்தில் 42 நடைகளும் தலைவாசல் கள்ளக்குறிச்சி தடத்தில் 15 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதமும் உள்ளதால் தற்போதுள்ள பயணிகள் போக்குவரத்துக்கு நிறைவானதாக உள்ளது.

மேற்படி தடத்தில் அனைத்துப் பகுதிகளும் தேவையான அளவுப் பேருந்து வசதிகள் பெற்று வருவதால் புதியதாக புறநகர்ப் பேருந்து தற்போது இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

18—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்த அரசு நடவடிக்கை.

வினா எண் 16173— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் உடன் நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித்துறை அமைச்சர் :

கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவது தொடர்பான வழக்கு, சென்னை உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் நிலுவையில் உள்ளது. வழக்கு முடிந்ததும், ஏனையக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தும்பொழுது, நெசவாளர் கூட்டுறவுச சங்கங்களுக்கும் தேர்தல் நடத்தப்படும்.

19—

செனாய் நகர் அரசு அலுவலர் குடியிருப்பில் குடிநீர்த் தொட்டியை (Sump) பழுதுபார்க்க அரசு நடவடிக்கை.

வினா எண் 16491— திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, செனாய்நகர், கிழக்கு கிளப் சாலையிலுள்ள அரசு அலுவலர் குடியிருப்பில் ''ஏ'' மற்றும் ''பி'' பிளாக்குகளில் குடிநீர் வழங்கும் நிலத்தடித் தொட்டிகளில் (Sump) அடிக்கடி கழிவுநீர் குடிநீரில் கலந்து குழந்தைகள் நோயால் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

(ஆ) ஆம் எனில், இதனைத் தடுக்க குடிநீர்த் தொட்டிகளை கட்டிடத்தின் முன்புறம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சென்னை, செனாய் நகரில் உள்ள அரசு அலுவலர் குடியிருப்புகளில் உள்ள கழிவுநீர் குழாய்கள், அருகில் உள்ள சில குடிசைவாசிகளால் சென்ற ஆண்டு பாதிக்கப்பட்டு கழிவுநீர் குடிநீர் உடன் கலக்கும் அபாயம் சென்ற ஆண்டு ஏற்பட்டது. இந்தக் குறை உடனடியாக நிவர்த்தி செய்யப்பட்டு, அபாயம் ஏதும் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டுவிட்டது. அதன் பிறகு, இது நாள் வரை இப்படிப்பட்ட எந்தக் குறையும் இல்லை. எனவே, குடிநீர் நிலத்தடித் தொட்டிகளை கட்டிடத்தின் முன்புறம் கட்டுவதற்கு அவசியமில்லை.

20—

செனாய் நகர் அரசு அலுவலர் குடியிருப்பில் வடிகால் குழாய்களைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை.

வினா எண் 16493—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, செனாய் நகர் கிழக்கு கிளப் சாலையிலுள்ள அரசு அலுவலர் குடியிருப்பில் வடிகால் குழாய்கள் அனைத்தும் பழுதடைந்து கழிவுநீர் கட்டிடத்தின் மேற்புறம் வழிவதால் கட்டிடங்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், புதிய குழாய்கள் பதிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : செனாய் நகரில் உள்ள அரசு அலுவலர் குடியிருப்பில் உள்ள பழுதடைந்த வடிகால் குழாய்கள் மாற்றப்பட்டு கழிவுநீர் கட்டிடத்தில் மேற்புறம் வழியாமல் தடுக்கப்பட்டுவிட்டது.

21—

சென்னை நகர் அரசு அலுவலர் குடியிருப்பில் கூடுதல் குடிநீர் வசதி அளிக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 16898—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, சென்னை நகர் கிழக்கு கிளப் சாலையிலுள்ள வீட்டுவசதி வாரிய குடியிருப்பிற்கு குடிநீர் வழங்கும் பைப் லைனையும் மெட்ரோ குடிநீர் முதன்மைக் குழாயையும் இணைக்கும் குழாய் துருப்பிடித்து பழுதடைந்து குடிநீர் மிககுறைவாக வருவதால் அந்த இணைப்புக் குழாயை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

சென்னை, சென்னை நகர் அரசு அலுவலர்கள் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் குழாய் இணைப்பையும் மெட்ரோ குடிநீர் முதன்மைக் குழாயையும் இணைக்கும் குழாய், துருப்பிடித்திருந்ததால், அந்தக் குழாய்ப் பகுதி மாற்றப்பட்டு புதிய குழாய் இணைப்பு இந்த ஆண்டு சனவரி மாதத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக எந்தக் குறையும் இல்லை.

22—

Supply of water tank by Tansi Units.

Question No. 19437—Thiru. M. Sundaradoss: Will the Hon. Minister for Rural Industries be pleased to state—

(a) whether the Madras Metro Water Board has asked the Tansi units to supply them water tank in recent times and

(b) if so, the details thereof

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) சென்னைக் குடிநீர் வடிகால் வாரியம் 1993ஆம் ஆண்டு சனவரி மாதம் கடைசி வாரத்தில் (25—1—1993) தண்ணீர்த் தொட்டி செய்ய டான்சி நிறுவனத்திடம் பணி ஆணை கொடுத்தது.

1993 அக்டோபர் 26]

(ஆ) சென்னைக் குடிநீர் வடிகால் வாரியம் 600 தண்ணீர்த் தொட்டிகள் செய்ய டான்சி நிறுவனத்திடம் பணி ஆணை கொடுத்தது. இந்த 600 தொட்டிகளின் மதிப்பு சுமார் ரூ. 74 இலட்சங்கள் ஆகும். மொத்தத் தொட்டிகளையும் 1993ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் வாரத்தில் டான்சி நிறுவனம் செய்து கொடுத்துவிட்டது.

23—

Int roduc ion of volun tary re iremen scheme in TANSI.

Que tion No. 19439—Thiru M. S ndar dos : Will he Ho , the Mi is er for Rural Ind stries be pleated o sta e —

(a) whe her vol n ary re irement scheme have bee introduced in TANSI uni s and

(b) the details there of

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத்தொழில் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) டான்சி நிறுவனத்தில் தன்னிச்சை ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற பணியாளர்கள் விவரம்.

	1986-87-ல் ஓய்வு பெற்றவர்களின் எண்ணிக்கை.	1991-92, 1992-93 மேலும் இதுவரை.
(1)	(2)	(3)
தொழிலாளர்கள் ..	1,195	530
அதிகாரிகளும் பணியாளர்களும்.	157 (பணியாளர்கள் மட்டும்)	387 (அதிகாரிகள் 56 பணியாளர்கள் 331)
	1,352	926
மொத்தம் ..	2,278	

24—

கால்நடை மருத்துவமனை அமைக்கத் திட்டம்.

வினா எண் 15449—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதியில், தெற்கு விருதாங்கன் கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை ஒன்று அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைத்துத் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) சிதம்பரம் தொகுதியில் தெற்கு விருதாங்கன் கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

25—

செயலற்ற பால் உற்பத்தியாளர் சங்கங்களை மீண்டும் இயங்க வைத்தல்.

வினா எண் 16811—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி தாலுகாவில் செயலற்று இருக்கும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?

(ஆ) அவைகளை மீண்டும் இயங்க வைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர் :

(அ) தற்போது இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்காவில் செயலிழந்து இருக்கும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 55.

(ஆ) இந்த சங்கங்களை மீண்டும் இயங்க வைக்க, சங்கங்கள் அமைந்துள்ள கிராமங்களில் உள்ள முக்கிய பிரமுகர்கள் மற்றும் கிராம பொது மக்களை பால் விரிவாக்க உதவியாளர் மூலம் கலந்து பேசி மேற்கண்ட பாலுற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் செயல்படுத்துவதால் ஏற்படும் நன்மைகளை எடுத்துக்கூறி மீண்டும் செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

26—

ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை மீண்டும் செயல்பட அரசு நடவடிக்கை.

வினா எண் 524—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலை கடந்த ஐந்து வருட காலமாக மூடிக் கிடப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): அரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலை 3—2—1992 அன்று மீண்டும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

27—

அவிநாசித் தொகுதியைப் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவித்தல்.

வினா எண் 1106—டாக்டர் மூ. சீனியம்மாள் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்கனவே அவிநாசித் தொகுதியைப் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவித்ததை ரத்து செய்ததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அவிநாசியைப் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : மாநில முதலீட்டு மானியம் அளிப்பதற்காக 34 வட்டங்களை தொழிலில் பின்தங்கிய பகுதியாக மாநில அரசு அறிவித்திருந்தது. பின்னர் பின் தங்கிய பகுதிகளை மறு ஆய்வு செய்து சில வரன்முறைகளைக் கடைபிடித்து முன்பிருந்த 34 வட்டங்களில் அவிநாசி உள்ளிட்ட 8 வட்டங்கள் நீங்கலாக 105 வட்டங்களை பின் தங்கிய பகுதிகளாக அறிவித்தது. தற்போது மீண்டும் அவிநாசி உள்ளிட்ட 6 வட்டங்களை தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து 23—4—1992 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

28—

திருமயிலாடியில் காகிதத் தொழிற்சாலை.

வினா எண் 3944—திரு. டி. மூர்த்தி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி திருமயிலாடியில் பேப்பர் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சீர்காழி வட்டம், திருமயிலாடியில் காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக் கூறு ஏதும் இல்லை.

29—

செங்கம் தொகுதியில் காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்த திட்டம்.

வினா எண் 4824—திரு. பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் ஜவ்வாது மலையில் கிடைக்கும் மூங்கில், நீலகிரி மரம் ஆகிய கச்சாப் பொருட்களைக் கொண்டு, காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) ஜவ்வாது மலையில் கிடைக்கும் மூங்கில் மற்றும் யூகலிப்டஸ் மரங்களைப் பயன்படுத்தி, செங்கம் தொகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்திற்கான சாத்தியக் கூறு இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

30—

புதிய தொழில்களை மேம்படுத்த சிறப்புத் திட்டம்.

வினா எண் 7745—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

33—

புதுக்கோட்டை மாவட்டத்தில் நவவோதயா பள்ளிகள்.

வினா எண் 12737—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் எத்தனை நவோதயா பள்ளிகள் அமைக்கப்பட உள்ளன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டத்தில் நவோதயா பள்ளி அமைக்க கருத்துருக்கள் ஏதும் இன்று வரை பெறப்படவில்லை.

34—

மாவடுகுறிச்சி தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம்.

வினா எண் 13191—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, மாவடுக்குறிச்சி தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1993 அக்டோபர் 26]

35—

பழைய நகரம் தொடக்கப்பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம்.

வினா எண் 13192—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பழைய நகரம், தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

36—

தென்னங்குடி தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம் செய்யும் திட்டம்.

வினா எண் 13193— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, தென்னங்குடி தொடக்கப் பள்ளிக்குப் போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[1993 அக்டோபர் 26

37—

திருப்பூர்னிக்காடு தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம்.

வினா எண் 13194—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருப்பூர்னிக்காடு தொடக்கப் பள்ளிக்குப் போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

38—

கொன்றைக்காடு தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம்.

வினா எண் 13195—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, கொன்றைக்காடு தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

39—

சமூகரங்கபுரம் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் கட்டிடத்தைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை.

வினா எண் 13793—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

ராதாபுரம் தொகுதி, சமூகரங்கபுரததில் உள்ள அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் கட்டிடத்தைப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

இராதாபுரம் தொகுதி, சமூகரங்கபுரத்தில் உள்ள அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவன கட்டிடத்தைப் பழுது பார்க்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

40—

காலகம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு அறிவியல் கூடம்.

வினா எண் 15564—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், காலகம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு அறிவியல் கூடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

இல்லை.

41—

செந்தலை வயல் பள்ளிக்கு ஆசிரியர் நியமனம்.

வினா எண் 16145—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செந்தலை வயல் பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

42—

சொர்ணக்காடு தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியர் பற்றாக் குறையைப் போக்கும் திட்டம்.

வினா எண் 16149—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கிழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், சொர்ணக்காடு தொடக்கப் பள்ளியின் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

43—

கீழக்குறிச்சி நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்

வினா எண் 1879—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கிழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஒன்றியம், கீழக்குறிச்சி நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், மதுக்கூர் ஊராட்சி ஒன்றியம், கீழக்குறிச்சி நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

44—

செங்கமங்கலம் தொடக்கப் பள்ளிக்குப் புதிய கட்டிடம்.

வினா எண் 2688—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் தொடக்கப் பள்ளிக்கு இடப் பற்றாக்குறையை தவிர்க்க புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், செங்கமங்கலம் தொடக்கப்பள்ளிக்கு பள்ளிக்கட்டிடம் 1992—93-ல் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

45—

சென்னையிலுள்ள திருமணக்கூடங்கள்.

வினா எண் 3929—திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில், எத்தனை தனியார் திருமணக் கூடங்கள் உள்ளன?

(ஆ) அவற்றில் பெருந்தொகையாக வாடகை வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) அதைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) 441.

(ஆ) இது குறித்து புகார்கள் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(இ) இக்கேள்விக்கே இடமில்லை.

46—

கொட்டாரம் பள்ளியில் கட்டிடம் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை.

வினா எண். 5397—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மங்களூர் தொகுதி, கொட்டாரம் கிராமத்தில் ஆரம்பப் பள்ளி கட்டிடம் பழுதடைந்து பள்ளி முழுவதும் திறந்த வெளியில் நடைபெறுவதால் அதற்கு கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் ஊராட்சி ஒன்றியம் கொட்டாரம் கிராமத்திலுள்ள பள்ளியின் பழைய கட்டிடம் பழுதடைந்துவிட்டதால், 1980—81-ல் தன்னிறைவுத திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கட்டிடத்தில்தான் பள்ளி நடைபெற்று வருகிறது. இக்கட்டிடம் 1990—91 ஆம் ஆண்டில் பழுது நீக்கம் செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. ஆகவே திறந்த வெளியில் வகுப்புகள் ஏதும் நடைபெறவில்லை. மேலும் பழுதடைந்த பழைய கட்டிடம் உள்ள இடத்தில் புதிய கட்டிடம் கட்ட 1992—93 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

47—

கூடலிவயல் பள்ளிக்குத் தளம் அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 6987—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் மகிழங்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த கூடலிவயல் பள்ளிக்கு தளம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மகிழங்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த கூடலிவயல் பள்ளிக்கு தளம் அமைக்கவும் மற்றும் சில்லரை வேலைகளை செய்து முடிக்கவும் ரூ. 5,000 மதிப்பீட்டில் ஒன்றியக் கல்வி நிதியிலிருந்து செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

48—

சேவுகம்பட்டி பள்ளிக்கூடத்திற்கு கூடுதல் கட்டிடம்.

வினா எண் 7923— திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, சம்மட்டி விடுதி பஞ்சாயத்துக்கு உட்பட்ட சேவுகம்பட்டி கிராமத்தில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை தொகுதி சம்மட்டி விடுதி ஊராட்சி சேவுகம்பட்டி கிராமத்தில் கூடுதல் பள்ளிக்கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

49—

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினை செயல் படுத்த வங்கிகளின் பங்கு.

வினா எண் 8340— திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நலிந்த பிரிவினர் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப் படும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தினை செயல் படுத்துவதில் வங்கிகள் தயக்கம் காட்டுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், திட்டத்தினை நல்ல முறையில் செயல்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) :

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினை செயல் படுத்துவதில் சில வங்கிகள் தயக்கம் காட்டியதன் காரண மாக பாரத ரிசர்வ் வங்கி சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினை நிறை வேற்ற அறிவுரைகள் வழங்கியது. மேலும், மாநில அளவி லான வங்கியாளர் குழுவில் தனியார் வங்கிகள் உட்பட்ட அனைத்து வங்கிகளுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளன என்றும், இது தொடர்பாக வங்கிகள் தொடர்பான துறை யுடன் தொடர்பு கொண்டு தேவையான தகுந்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பாரத ரிசர்வ் வங்கி கூறியுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் செயலாக்கம் தொடர்பாக மாநில அளவிலான வங்கியாளர் குழு தகுந்த நடவடிக்கை எடுத்துள்ளது. எனவே, தற்சமயம் ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் செயலாக்கத்தில் அனைத்து வங்கிகளும் பங்கேற்கின்றன.

50—

ஊராட்சி மன்றங்களில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர் களுக்கு பொங்கல் இனாம்.

வினா எண் 10091— திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி மன்றங்களில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு மீண்டும் பொங்கல் பண்டிகை இனாம் கொடுக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போதிருந்து கொடுக்கப்படும் ?

1993 அக்டோபர் 26]

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்கு பொங்கல் கருணைத் தொகை வழங்குவதற்கு தற்போது வாய்ப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

51—

கிணத்துக்கடவு ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய கட்டிடம்.

வினா எண் 10158—திரு. நா. கா. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிணத்துக்கடவு ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கிணத்துக்கடவு ஒன்றிய அலுவலகத்திற்குப் போதிய நிதி வசதி இல்லாததால் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

52—

பரமக்குடி மற்றும் நயினார் கோவில் ஒன்றியங்களிலுள்ள ஊராட்சி மன்றக் கட்டிடங்களின் விவரம்.

வினா எண் 11363—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மற்றும் நயினார் கோயில் ஒன்றியங்களில் உள்ள ஊராட்சி மன்றக் கட்டிடங்கள் எத்தனை ?

(ஆ) கட்டி முடிக்கப்பெறாத ஊராட்சி மன்றக் கட்டிடங்கள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தில், 19 ஊராட்சி மன்றக் கட்டிடங்களும் நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் 10 ஊராட்சி மன்றக் கட்டிடங்களும் உள்ளன.

(ஆ) கட்டி முடிக்கப்பெறாத ஊராட்சி மன்றக் கட்டிடங்கள் ஏதும் இல்லை.

53—

மேட்டுவயலில் பள்ளிக்கட்டிடம் கட்ட அரசு திட்டம்.

வினா எண் 11486—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், மேட்டுவயலில், 1992–93-ல் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் மேட்டுவயலில் பள்ளிக் கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

54—

பாலாஜி நகரின் சாலைகளை பழுதுபார்த்தல்.

வினா எண் 11597—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சாலிக்கிராமம், பாலாஜி நகரிலுள்ள சாலைகள் பழுதடைந்துள்ளது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், 1992–93-ல் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சென்னை பாலாஜி நகரிலுள்ள 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு, முதல் குறுக்குத் தெரு, 2வது குறுக்குத் தெரு, ஆகிய ஐந்து சாலைகள் 1992–93-ம் நிதி யாண்டில் பழுதுபார்க்கும் பணி பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

55—

மிதியக்குடி காட்டிற்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம்.

வினா எண் 11615—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், நூலகம் ஊராட்சி மிதியக்குடி காட்டிற்கு 1992–93-ல் ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

56—

அழகியநாயகிபுரத்திற்கு கூடுதல் குடிநீர் வசதி அளிக்க அரசு திட்டம்.

வினா எண் 11623—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகியநாயகிபுரத்தில் ஒரு லட்சம் காலன் கொள்ளளவு உள்ள ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி 1992–93-ல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. அழகியநாயகிபுரத்தில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியின் மூலம் நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

57—

ஒட்டங்காடு உக்கடையில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம்.

வினா எண் 11999—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு உக்கடையில் ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி 1992–93-ல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

58—

பேராவூரணி குடிநீர்த் திட்டம்.

வினா எண் 12002—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி நகரத்தில் தொடங்கப்பட்ட குடிநீர்த் திட்ட வேலைகள் விரைவில் முடித்து தண்ணீர் சப்ளை செய்ய 1992–93-ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். குடிநீர்த் திட்ட வேலைகள் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டுத் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

1993 அக்டோபர் 26]

59—

மேற்குடிக் காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண். 12005— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் புக்கரம்பை ஊராட்சி, மேற்குடிக்காட்டில் 1992—93-ல் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். மேற்குடிக்காடு கிராமத்தில் நடப்பு நிதியாண்டில் (1992—93) ஒரு மின்விசைத் திட்டம், செயல்படுத்தப்பட உள்ளது. அப்போது ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியும் அமைக்கப்பட உள்ளது.

60—

வேலாகுடிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அரசு நடவடிக்கை.

வினா எண் 12015— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புளிக்காடு ஊராட்சி, வேலாகுடிக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1992—93-ல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். வேலாகுடி பகுதி இரண்டாம் புளிக்காடு குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் குழாய் விஸ்தரிப்பு மூலம் குடிநீர் பெற்று வருகிறது. நடப்பு நிதியாண்டில் இக்கிராமத்திற்கு ஒரு மின்விசைத் திட்டம் நிறுவும் பணிகள் நடப்பில் உள்ளன. இத்திட்டம் 9/93-ல் முடிவு பெறும்.

[1993 அக்டோபர் 26

61—

தில்லங்காட்டிற்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம்

வினா எண். 12025—திரு. ஆர். சிங்காரம். : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் தில்லங்காடு கிழக்குப் பகுதியிலும், மத்திய பகுதியிலும் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க 1992–93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. இவ்விரு பகுதிகளிலும் தில்லங்காடு குடிநீர்த் திட்டத்திலிருந்து ஒவ்வொரு குடிநீர் மேடை அமைக்கப் பட்டுள்ளது.

62—

கழனிவாசல் ஆதி திராவிடர்களுக்குக் கூடுதல் குடிநீர் வசதி.

வினா எண். 12026—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் ஆதிதிராவிடர்களுக்குத் தனியாக ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அல்லது போர்வெல் போட்டுக் கொடுக்க 1992–93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. இந்த அரிசன காலனியின் மக்கள் தொகை 150. இங்கு ஒரு கையிறைப்பானும், கழனிவாசல் குடிநீர்த் திட்டத்திலிருந்து விஸ்தரிப்பு மூலம் ஒரு குடிநீர் மேடையும் உள்ளது.

1993 அக்டோபர் 26]

63—

ஆணைக்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 12031—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி, ஆணைக்காட்டில் 1992–93-ல் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி. உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். இந்த நிதியாண்டில் (1992–93) ஒரு மின்விசைத் திட்டம் எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ஆழ்துளைக் கிணறு போடப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் புதிய மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட உள்ளது. இத்திட்டம் 9/93-க்குள் முடிக்கப்பட உள்ளது.

64—

பெரிய நாயகிபுரத்தில் போர்வெல் ஏற்படுத்தும் திட்டம்

வினா எண் 12335—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பெரிய நாயகிபுரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு தென்புறம் 1992–93-ல் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி. உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

65—

அதம்பை நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்.

வினா எண் 12379— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி திருவோணம் ஊராட்சி ஒன்றியம் அதம்பை வடககு நடுநிலைப்பள்ளிக்கு 1992–93-ல் கூடுதல் கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம், ஊராட்சி ஒன்றியம் அதம்பை வடக்கு நடுநிலைப்பள்ளிக்கு 1992–93-ல் கூடுதல் கூட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை.

66—

மழவேனிற்காடு ஊராட்சிக்கு புதிய கட்டிடம்.

வினா எண். 12385— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் மழவேனிற்காட்டிற்கு ஊராட்சி கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் மழவேனிற்காடு ஊராட்சிக் கட்டிடம் 1986- 87-ல் கட்டப்பட்டுள்ளது.

1993 அக்டோபர் 26]

67—

மானியக்காட்டிற்கு ஊராட்சிக் கட்டிடம்.

வினா எண் 12386—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், மானியக்காட்டிற்கு ஊராட்சி கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மானியக்காட்டிற்கு 1991–92-ல் ஊராட்சிக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

68—

வயலாமூர் காலனிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 12879—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள வயலாமூர் காலனிக்கு குடிநீர் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆம். 1992—93ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் டானிடா திட்டத்தின் கீழ் வயலாமூர் காலனி அடங்கிய வயலாமூர் குடியிருப்பு சேர்க்கப்பட்டு நீர் ஆதாரத்திற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பணி நடந்து வருகிறது.

69—

இடையாத்தியில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி.

வினா எண் 12970—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி(மே) வெள்ளாளர் தெருவில் 1992-93-ல் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இல்லை.

70—

நடுவிக்காட்டிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண் 12974—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பட்டுக்கோட்டை ஒன்றியம் மழவேனிற்காடு ஊராட்சி நடுவிக்காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

71—

வலச்சேரிகாட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண் 12978—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, வலச்சேரிக் காட்டில் 1992-93-ல் மேல்நிலைத் தொட்டி கட்ட அரசின் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. வலச்சேரிக்காடு கிராமத்திற்கு 1992–93ஆம் ஆண்டில் ஒரு மின்விசைத் திட்டம் எடுக்கப்பட்டு அதற்காக 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு மற்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எனவே, புதிதாக ஒரு மின்விசைத் திட்டம் அமைக்க உத்தேசமில்லை.

72—

சின்னப்பைங்காலுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அரசு நடவடிக்கை.

வினா எண் 12981—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், சின்னபைங்காலுக்கு 1992–93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். சின்னபைங்கால் கிராமம் பைங்கால் பஞ்சாயத்தைச் சேர்ந்ததாகும். இக்கிராமத்தில் ஒரு கையிறைப்பான் திட்டம் உள்ளது. 1992-93-ல் இக்கிராமத்தையும் பைங்காலையும் சேர்த்து ஒரு மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

[1993 அக்டோபர் 26

73—

காமராஜ் நகருக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம்.

.வினா எண் 12985—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பெரியநாயகிபுரம், காமராஜ் நகர் மக்களுக்கு 1992–93-ல் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

74—

குறிச்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு சப்மெர்ஜிபில் பம்பு அமைத்தல்.

வினா எண். 13397—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், குறிச்சியில் தற்போதுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் 1992–93-ல் சப்மெர்ஜிபில் பம்பு (Submersible pump) அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர். :

இல்லை. குறிச்சி வடக்குப் பகுதியில் உள்ள குடிநீர்த் திட்டம் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. கோடை காலத்திலும் போர்வெல்லில் 20 அடிக்குள் தண்ணீர் உள்ளதால் தரைமட்டத்திலிருந்து ஜெட் பம்பு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

1993 அக்டோபர் 26]

75—

உலக வங்கித் திட்டத்தின்கீழ் அத்திக்கடவுக்குக் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 14121— திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தின் மூலம் சூலூருக்கு மேற்கில் உள்ள பள்ளபாளையம், பட்டணம் ஆகிய பகுதிகட்கு குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். ஆவன செய்யும். இது உலக வங்கித்திட்டப் பணிகளின்கீழ் வருகிறது. இப்பணிகள் டிசம்பர் 1994-ல் முடிவு பெற்று, பயனுக்குக் கொண்டு வரும் வகையில் பணிகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

76—

பாலாமடை மேலூர் ஒன்றிய துவக்கப்பள்ளிக்குப் புதிய கட்டிடம்.

வினா எண் 15264— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், பாலாமடை மேலூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்குப் போதுமான கட்டிட வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1993–94ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிதிநிலைமையைப் பொறுத்து, திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், பாலாமடை மேலூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்குப் போதுமான கட்டிட வசதி செய்து கொடுக்கப்படும்.

77—

எட்டான் குளத்திற்கு மேல்நிலை நீர்த்தொட்டி ஏற்படுத்துதல்.

வினா எண் 15271—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம், எட்டான்குளம் கிராமத்திற்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீ வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம், எட்டான்குளம் கிராமம் ஒரு பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற கிராமம் ஆகும். இங்கு ஒரு கையிறைப்பான் நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும், இக்கிராமத்திற்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய விசையிறைப்பான் திட்டம் செயல்படுத்துவதற்காக ரூ. 4.97 லட்சத்திற்கு திட்டப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

78—

கத்தேரியிலுள்ள ஆழ்துளைக் கிணற்றுக்கு மோட்டார் பொருத்துதல்.

வினா எண் 15358—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதி, கத்தேரியிலுள்ள ஆழ்துளைக் கிணற்றுக்கு மோட்டார் வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சங்ககிரி தொகுதி, கத்தேரி அருகிலுள்ள தொட்டிபாளையம் கிராமக் குடிநீர் திட்டத்திற்காக ரூ. 5.06 லட்சத்திற்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 1992—93ஆம் நிதி ஆண்டில்

1993 அக்டோபர் 26]

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணற்றிலிருந்து தொட்டியபாளையம் குடியிருப்பில் கட்டப்பட உள்ள ஒரு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றி, குடிநீர் வழங்க ஆவன செய்யப்படுகிறது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிய உடன் ஆழ்துளைக் கிணற்றில் மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வழங்கப்படும்.

79—

டாக்டர் அம்பேத்கார் நகருக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 15374— திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், பிள்ளையார்குளம், டாக்டர் அம்பேத்கார் நகருக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

1991–92ஆம் ஆண்டில் பிள்ளையார்குளம் மற்றும் டாக்டர் அம்பேத்கார் நகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ரூ. 4.87 இலட்சங்கள் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு டாக்டர் அம்பேத்கார் நகர் கிராமத்திற்கு 3 பொது நல்லிகள் (Public Sector) அமைத்து குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஊராட்சி ஒன்றியத்திடம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டு தற்போது பயனில் உள்ளது. இதன் மூலம் போதுமான குடிநீர் வசதி கிடைப்பதினால் இங்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க நடப்பாண்டில் 1992–93-ல் திட்டம் எதுவும் இல்லை.

80—

காந்தி நகரில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 15378— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், தென்கலம் ஊராட்சி காந்தி நகரில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

காந்திநகர், தென்கலம் ஊராட்சிக்குட்பட்ட தென்கலம் புதூர் கிராமத்தைச் சேர்ந்த ஒரு பகுதியாகும். இக்காந்தி நகர் பகுதியில் 20 குடியிருப்புக்களும், 150 மக்கள் தொகையினைக் கொண்டதாகவும் உள்ளது. இப்பகுதியானது வாரிய மறு ஆய்வறிக்கையின்படி தனி கிராமமாக இடம் பெறவில்லை. தற்போது இப் பகுதியில் திறந்தவெளி கிணறு ஒன்று பொது மக்களின் பயனில் உள்ளது. இப்பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கும் திட்டம் தற்சமயம் ஏதுமில்லை.

81—

ஆலங்குளம் தொகுதி குடிநீருக்காக கூடுதல் மானியம்.

வினா எண் 15380— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதியில் பல கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப் பட்டு பொது மக்கள் குடிநீருக்காக துன்பப் படுவதால் கூடுதல் மானியம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இம்மாவட்டத்திற்கு 1993-ம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் 23—4—1993-ம் தேதிய உத்தரவு எண். எஸ். 1/7833/93/1-ன்–படி 20 ஆழ்குழாய்க் கிணறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் அமைக்க அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. மேற்காணும் 20 ஆழ்குழாய்க் கிணறுகளில் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

1993 அக்டோபர் 26]

82—

பரமக்குடியில் கழிவு நீர் வடிகால் அமைத்தல்.

வினா எண் 15692— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் கழிவு நீர் வடிகால் திட்டத்திற்கு அரசிடம் நிதிகேட்டு பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பரமக்குடி நகராட்சியில் கழிவு நீர் வடிகால் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

83—

கே. கருங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 15704— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் கே. கருங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எத்தனை கிராமங்கள் பயனுக்கு அமல்படுத்தப் பட்டது ?

(ஆ) தற்பொழுது எத்தனை கிராமங்களுக்குக் குடிநீர் கிடைக்கிறது ?

(இ) இத் திட்டம் முழுமையாகச் செயல்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம் செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) கே. கருங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 33 குடியிருப்புக்கள் பயன்பெறும் வண்ணம் செயல்படுத்தப்பட்டது.

(ஆ) தற்பொழுது கீழ்க்கண்ட ஏழு கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது :

1. மென்னன் திங்காட்சி
2. கே. கருங்குளம்.
3. அரசநகரி
4. தீயானூர்.
5. போகலூர் கோனார் குடியிருப்பு
6. போகலூர் ராஜா குடியிருப்பு
7. போகலூர் மருத்துவமனை குடியிருப்பு

(இ) இத்திட்டத்தின் நீராதாரம் வைகை ஆற்றில் அமைக்கப் பட்டுள்ள இரு நீர் உறிஞ்சு கிணறுகளாகும். அந்த நீர் உறிஞ்சு கிணறுகளில் போதுமான நீர் இல்லாத காரணத்தால் குடிநீர் அனைத்துக் குடியிருப்புக்களுக்கும் வழங்க இயலவில்லை.

குடிநீர் வழங்க இயலாத குடியிருப்புகளுக்கு உப்புநீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் மூலம் குடிநீர் வழங்க திட்டம் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

84—

நிலுவையிலுள்ள குடிநீர் வாரிய திட்டங்களைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை.

வினா எண் 16044—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தாலுகாவில் ஒப்பந்தம் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள குடிநீர் வடிகால் வாரிய திட்டங்கள் என்னென்ன?

(ஆ) அத்திட்டங்களை அமல்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி தாலுகாவில் ஒப்பந்தம் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள திட்டங்கள் நான்கு ஆகும். இந்த நான்கு திட்டங்களின் தற்போதைய நிலை கீழ் வருமாறு :—

1993 அக்டோபர் 26]

(ஆ) இராதாபுளிகட்டுக் குடிநீர்த் திட்டம்.—இத் திட்ட மதிப்பீடு ரூ. 12.45 இலட்சங்கள் ஆகும். இத்திட்டம் நவம்பர் 1992-ல் துவக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நீராதாரம் அமைக்கப்பட்டுள்ளது. பகிர்மான குழாய், மேல்நிலைத் தொட்டி கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. மின் அறை கட்டும் பணி, பொதுக் குழாய்கள் ஆகியவற்றிற்கு ஒப்பந்தக் காரர்களை நியமித்து பணிகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

கோமாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.—இத்திட்ட மதிப்பீடு ரூ. 4.26 இலட்சங்கள் ஆகும். இத்திட்டம் 1991-ம் ஆண்டு துவக்கப்பட்டது. இத் திட்டத்தில் நீர் உறிஞ்சு கிணறு முடிவுற்றுள்ளது. மின் அறை அமைக்கும் பணி நிலுவையில் உள்ளது.

கலையூர் குடிநீர்த் திட்டம்.— இத் திட்ட மதிப்பீடு ரூ. 2.080 இலட்சங்கள் ஆகும். இத்திட்டம் 1992-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது இத்திட்டப் பணிகளில் 30,000 லிட்டர் மேல் நிலைத் தொட்டி, மின் அறை, நீர் உந்து குழாய், பொதுக்குழாய் அனைத்தும் 9/92-ல் முடிவுற்றுள்ளன. மின்னிறைப்பான் பொருத்தும் பணியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இணைப்புக் குழாய் அமைக்கும் பணியும் நிலுவையில் உள்ளது.

திருவாடி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.—இத்திட்ட மதிப் பீடு ரூ. 6.85 இலட்சங்கள் ஆகும். இத்திட்டம் 9/92-ல் ஆரம் பிக்கப்பட்டது. இத்திட்டத்தில் தேசீய நெடுஞ்சாலை குழாய் மதிப்புப் பணிகள். விசைப் பம்பு நிர்மாணப் பணிகள் மட்டும் நிலு வையில் உள்ளது

85—

எமனேஸ்வரத்தில் நகராட்சிக் கட்டிடங்களின் விவரங்கள்.

வினா எண் 16698—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி, எம னேஸ்வரத்தில் நகராட்சிக் கட்டிடங்கள் எத்தனை இருக் கின்றன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி, எமனேஸ்வரத்தில் நகராட்சிக் கட்டிடங்கள் எட்டு உள்ளன. அவை யாவன :

வரிசை எண்.	புல எண்.	பரப்பு.	கட்டிடம் பயன்படும் நிலை.
(1)	(2)	(3)	(4)
		ஏ. செ.	
1	206!4 பி.டி	0.53	நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் சத்துணவு கட்டிடம்.
2	206/1	0.15	பெண்கள் கழிப்பறை
3	223/138	0.12	நகராட்சி மேல்நிலைத் நீர்த் தேக்கத் தொட்டி.
4	100/9	0.10	நகராட்சிப் பள்ளிக் கூடம் மற்றும் சத்துணவுக் கூடம்.
	100/10	0.17	மேற்படி
5	251/1	0.17	பள்ளிக்கூடம் மற்றும் சத்துணவுக் கூடம்
6	219/1	0.03	நகராட்சி சத்துணவுக் கூடம்.
7	357	0.02	நகராட்சி சத்துணவுக் கூடம்
8	281	0.05	நகராட்சி தண்ணீர்த் தொட்டி மற்றும் ஜெனரேட்டர் ரூம்.

1993 அக்டோபர் 26)

86- -

உலகவங்கி நிதியுதவியின் கீழ் திருமண மண்டபம்.

வினா எண் 16699—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை, யளிப்பாரா—

பரமக்குடி நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான திருமண மண்டபங்கள் மற்றும் கலையரங்கங்கள் எத்தனை உள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பரமக்குடி நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான திருமண மண்டபங்கள் மற்றும் கலையரங்கங்கள் ஏதும் இல்லை.

உலக வங்கி நிதியுதவி திட்டத்தில் பரமக்குடி நகராட்சி திரௌபதியம்மன் ஊரணி இடத்தில் பகவத்சிங் சாலையை நோக்கி நகரளவை எண். 34ல் ரூ. 16.00 லட்சம் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்ட செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

87—

கிளாவடி நத்தம் காலனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் செப்பனிடுதல்

வினா எண் 16805—செல்வி கொ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள கிளாவடி நத்தம் காலனி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியை சீர் செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம். சீர் செய்யப் பட்டது.

(ஆ) நீர் உறிஞ்சு குழாய் அமைப்பு சீர் செய்யப் பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் நல்ல முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

88—

பரமக்குடி நகராட்சியில் வீட்டு வசதி மூலம் வருமானம்.

வினா எண் 16837— டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் வீட்டுவசதி மூலம் 1991-92-ல் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

(ஆ) நிலுவைத் தொகை எவ்வளவு ?

(இ) முற்றிலுமாக வீட்டுவரி வசூல் செய்த நகராட்சிகளுக்கு அரசு ஊக்கத் தொகை வழங்குமா ?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி நகராட்சியில், 1992-93-ஆம் நிதியாண்டிற்கான வீட்டுவரியின் மொத்த கேட்புத் தொகை ரூ. 39.70 இலட்சத்தில், ரூ. 37.35 இலட்சம் வசூல் செய்யப்பட்டு இத்தொகை நகராட்சிக்கு வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளது.

(ஆ) 1991-92-ல் பரமக்குடி நகராட்சியில் வீட்டுவரியின் கீழ் வசூலிக்கப் படவேண்டிய நிலுவைத் தொகை ரூ. 2.35 இலட்சம் ஆகும்.

(இ) முற்றிலுமாக வீட்டுவரி வசூல் செய்த நகராட்சிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

89—

Question No. 17467—Thiru M. Sundararajan, will the Hon. Minister for Local Administration be pleased to state—

Collection of Tax from Physically Handicapped owners.

(a) The total number of physically handicapped owners of property coming under the municipal property Tex Act.

1993 அக்டோபர், 26]

(b) the number of males and the number of females among them and

(c) the total amount of tax collected from them per year?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ), (ஆ) மற்றும் (இ) சொத்துவரி, குடியிருக்குப் வீடு, கடை போன்ற சொத்துக்களுக்கு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920-ன் கீழ் உள்ள விதிகளுக்குட்பட்டு எந்தவித பாரபட்சமுமின்றி விதிக்கப்படுகிறது. வரி விதிக்கப்படும் சொத்தின் உரிமையாளர், உடல் ஊனமுற்றவரா அல்லது இல்லையா என்ற விவரங்கள் நகராட்சியில் பெறப்படுவதில்லை.

90—

வெங்கம்பூர் கிராமத்தில் தொலைக்காட்சிப்பெட்டி வழங்கத் திட்டம்.

வினா எண் 19378—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியத்தில் வெங்கம்பூர் கிராமம் கொள்ளுக்காட்டுவலசில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் ;

வெங்கம்பூர் பேரூராட்சிக்குட்பட்ட கொள்ளுக்காட்டு வலசிற்குத் தொலைகாட்சிப் பெட்டி வழங்க, தற்போது பேரூராட்சியில் போதிய நிதி வசதியில்லை.

91—

பரமக்குடி நகராட்சியில் அருந்ததியர்களுக்கு விளையாட்டு மைதானம்

வினா எண் 2392—டாக்டர் எஸ். சுந்தாராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரமக்குடி நகராட்சி சிவானந்தபுரம் (பொன்னையாபுரம்) அருந்ததியர்களுக்கு ஒதுக்கப்பட்ட விளையாட்டு மைதானம் பொதுமக்களுக்கு பயன்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பொதுமக்களுக்குப் பயன்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி நகராட்சி, சிவானந்தபுரம் பகுதி (பொன்னையாபுரம்) அருந்ததியர்களுக்காக விளையாட்டு மைதானம் ஒதுக்கப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

92—

செங்கமங்கலம் வானொலி நிலையத்திற்கு மின் இணைப்பு வழங்குதல்

வினா எண் 16166—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் ஆதிதிராவிடர்களின் வானொலி மன்றத்திற்கு மின் இணைப்புத் தர 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், செங்கமங்கலம் ஆதிதிராவிடர் காலனியில் கட்டப்பட்டுள்ள வானொலி மன்றக் கட்டிடத்திற்கு ஏற்கெனவே மின் இணைப்பு கொடுக்கப்பட்டு தற்போது ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் வழங்கப்பட்ட வானொலிப் பெட்டி மேற்படி கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

1993 அக்டோபர் 26]

93—

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலையைப் பழுதுபார்த்தல்.

வினா எண் 19174—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் பச்சைமலை டாப் செங்காட்டுப்பட்டி யிலிருந்து நல்லமாத்திவரை ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலை சீரமைக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

சேலம் மாவட்டம், டாப் செங்காட்டுப்பட்டியிலிருந்து நல்லமாத்திவரை சாலை சீரமைக்க ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் இதுவரை அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை. 1992-93 ஆம் ஆண்டில் நடைமுறையில் இத் திட்டத்தின் கீழ் சுமார் 16.80 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகள் எடுத்துச் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் 1992-93 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு—செலவு மதிப்பீடு ரூ. 262.19 இலட்சங்கள் மட்டுமே அரசினால் நிதி ஒதுக்கீடு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே குறைவான நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு நடைமுறையில் உள்ள வேலைகளை முடிப்பதற்கே இயலாததாக சூழ்நிலை உள்ளது. ஆகவே 1992-93 மற்றும் 1993-94 ஆம் ஆண்டுகளுக்கு இத் திட்டத்தில் புதிய வேலைகள் எதுவும் எடுத்துக்கொள்ள பரிந்துரைக்கப் படவில்லை. எனவே போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறுமானால், 1994-95 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் சாலையை எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

94—

பரமக்குடி தொகுதியில் அதிக வருவாய் உள்ள திருக்கோயில்கள்.

வினா எண் 15400—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதியில் வருடத்திற்கு 1 இலட்சத்திற்கும் அதிக வருமானம் உள்ள திருக்கோயில்கள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் :

பரமக்குடி தொகுதியில் வருடத்திற்கு ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் அதிக வருமானம் உள்ள திருக்கோயில்கள் இரண்டு.

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் மற்றும் அருள்மிகு முத்தாரம்மன் கோயில், பரமக்குடி நகர்.

2. அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், நயினார் கோயில், பரமக்குடி நகர்.

95—

இராமநாதபுர மாவட்டத்தில் திருப்பணிகள் நடந்துள்ள கோயில்கள்.

வினா எண் 15437—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு இந்துசமய அறநிலையந்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 1991–92–ல் திருப்பணிகள் நடந்த கோயில்கள் எத்தனை ?

(ஆ) இதனால் அரசுக்கு ஏற்பட்ட செலவினம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 1991–92–ம் ஆண்டில் 9 திருக்கோயில்களில் திருப்பணிகள் நடந்துள்ளன.

(ஆ) திருப்பணியினால் அரசுக்கு ஏற்பட்ட செலவினம் ரூ. 5,25,000 ஆகும்.

1993 அக்டோபர், 26]

96—

கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்கு எச்சரிக்கை மணி அமைத்தல்.

வினா எண் 16057—திரு. ஆர் சிங்காரம்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மைலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்கு எச்சரிக்கை மணி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இத்திருக்கோயிலில் எச்சரிக்கை மணி ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.

97—

இராமநாதபுர மாவட்டத்தில் அறநிலையத் துறை நடத்தும் கல்வி நிலையங்கள்.

வினா எண் 16842—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுர மாவட்டத்தில் அறநிலையத் துறை சார்பில் நடத்தப்படும் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் எத்தனை ?

(ஆ) புதிதாக கல்லூரிகள் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரத்தில் இராமநாதசுவாமி திருக்கோயில் சார்பாக மகளிர் மேல்நிலைப் பள்ளி ஒன்று மட்டும் நடத்தப்பட்டு வருகிறது.

(ஆ) நிதி வசதியுடைய திருக்கோயில்கள் இம்மாவட்டத்தில் இல்லையாதலால் புதிதாக கல்லூரிகள் தொடங்க திட்டம் ஏதும்இல்லை.

98—

பரமக்குடி தொகுதியில் மாணவ மாணவிகள் விடுதிகள்.

வினா எண். 10210—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவிகள் விடுதிகள் எத்தனை ?

(ஆ) இதில் சொந்தக் கட்டிடங்கள் எத்தனை விடுதிகளுக்கு உள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் விடுதிகள் விவரம் பின்வருமாறு :—

	பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்.	மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்.	சீர்மரபினர் நல விடுதிகள்.
	(1)	(2)	(3)
மாணவர் ..	2	2	8
மாணவியர் ..	1	..	3
	3+	2+	11=16

1993 அக்டோபர் 26]

(ஆ) 4 சீர்மரபினர் நல மாணவர் விடுதிகளும், 1 சீர்மரபினர் நல மாணவியர் விடுதியும் சொந்தக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

99—

திருமுல்லைவாசலில் மாணவியர் விடுதி அமைக்கும் திட்டம்.

வினா எண். 15483— திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சீர்காழி தொகுதியில் திருமுல்லைவாசலில் பிற்பட்டோர் மாணவியர் விடுதி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தற்சமயம் இல்லை.

100—

கீழ்த்தோட்டத்தில் மீனவர் காலனியைப் பழுதுபார்க்கும் திட்டம்.

வினா எண். 18672— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராசாமடம் ஊராட்சி கீழத்தோட்டத்தில் உள்ள பழுதுபட்ட மீனவர் காலனியைப் பழுதுபார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

இல்லை. பொதுவாக மீனவர் இலவச வீட்டுவசதி திட்டம் மூலம் கட்டி வழங்கப்படும் வீடுகளை நல்ல முறையில் பேணிப் பாதுகாக்கவேண்டியது பயனீட்டாளாகள் பொறுப்பு.

வீடுகளை தனது சொந்த செலவில் பராமரித்துக்கொள்ள வேண்டுமென்று வீடுகள் ஒப்படைப்பு பத்திரத்தின் நிபந்தனையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இவ்வீடுகளை பழுதுபார்க்க நடவடிக்கை ஏதும் எடுக்க இயலாது.

(பதினொன்றாம் பட்டியல்)

மனித உரிமைகள் கழகம் அமைக்க நடவடிக்கை

வினா எண். 16068— அ. தெய்வநாயகம் மற்றும் பி. ஆர். எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போலீஸ் காவலில் நடைபெறும் சித்ரவதை, உயிரிழப்பு, கற்பழிப்பு போன்றவற்றை ஜுடிசியல் மாஜிஸ்ட்டிரேட்டைக் கொண்டு விசாரித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு தொகைகளை வழங்குவது பற்றிய குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமலுக்கு வரும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மத்திய அரசின் உள் விவகாரத் துறை தேசிய அளவில் சட்ட ரீதியாக அமைக்க உத்தேசித்துள்ள ''மனித உரிமைகள் கழகம்'' வடிவமைக்கப்பட்ட பிறகு, தக்க அதன் பரிந்துரைகள், ஆணைகள் மத்திய அரசால் வெளியிடப்படும்.

2—

பணி நிமித்தமாக அயல்நாடு செல்லும் அலுவலர்கள் அயல் நாட்டில் உயர்கல்வி பயில்வதற்கான தடையை ரத்து செய்ய அரசு நடவடிக்கை.

வினா எண். 17426— டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பணி நிமித்தமாக அயல்நாடு செல்லும் தமிழ்நாடு அரசு அலுவலர்கள் அங்குள்ள காலத்தில் உயர்கல்வி பயில்வதற்கானத் தடையை ரத்து செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் :

(அ) அத்தகையச் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

3—

நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளைத் துரிதப்படுத்தி முடிக்க அரசின் நடவடிக்கை.

வினா எண் 15880—டாக்டர் . எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள உரிமையியல், குற்றவியல் வழக்குகள் எத்தனை?

(ஆ) இவைகளை, துரிதப்படுத்தி முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

நீதிமன்றங்களின் பெயர்கள்.	1—3—1993 அன்றைய நிலவரப்படி உரிமையியல் வழக்குகள்	குற்றவியல் வழக்குகள்.
(1)	(2)	(3)
முதன்மை வழக்குகள் :		
1 மாவட்ட நீதிமன்றங்கள் ..	245	37
2 துணை நீதிமன்றங்கள்	488	116
3 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்	2,586	...

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4 முதன்மை குற்றவியல் நீதிமன்றங்கள்	..	140
5 குற்றவியல் நீதிமன்றங்கள்	..	6,807

உதிரி வழக்குகள்.

1 மாவட்ட நீதிமன்றங்கள்	..	116	..
2 துணை நீதிமன்றங்கள் ..	..	423	..
3 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்.		1,707	..
4 முதன்மை குற்றவியல் நீதிமன்றங்கள்.		..	..
5 குற்றவியல் நீதிமன்றங்கள்	..	..	89
மொத்தம்	..	2,246	89

(ஆ) நிலுவையிலுள்ள வழக்குகளை துரிதப்படுத்த சென்னை உயர்நீதிமன்றம்—

(1) மாவட்ட நீதிபதிகள் கால முறை ஆய்வுகள் செய்து அவ்வப்போது அறிவுரைகள் வழங்குகின்றனர்; மேலும்

(2) ஒவ்வொரு நீதிபதியும் மாதத்திற்கு நிர்ணயிக்கப் பட்ட எண்ணிக்கை வழக்குகளைத் தீர்க்க வேண்டும் என்று குறியீடு நிர்ணயம் செய்து அவ்வாறு நடக்க அறிவுறுத்தப்படு கின்றனர், மற்றும்

(3) உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மாவட்ட நீதிபதி கள் ஆகியோர் கீழ்நிலை நீதிமன்றங்களை அவ்வப்போது ஆய்வு செய்து வழக்குகளைத் துரிதமாக முடிப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க அறிவுரை வழங்குகின்றனர்.

4—

மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் ஓய்வு அறை கட்ட அரசு நடவடிக்கை.

வினா எண். 16295—திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்கள் ஓய்வு அறை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மதுரை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்கான ஓய்வு அறை கட்டும் செயற் குறிப்பு தற்போது பரிசீலனையில் இல்லை என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

5—

சீர்காழி குற்றவியல் நீதிமன்றக் கட்டிடத்தைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 16463—திரு. டி. மூர்த்தி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி குற்றவியல் நீதிமன்றக் கட்டிடம் பழுதடைந்து இருப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சீர்காழி குற்றவியல் நீதிமன்றக் கட்டிடத்திற்கு ஏற்கெனவே சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் பொதுப்பணி துறையினரால் மேற்கொள்ளப்பட்டு கடந்த ஜனவரி 1993 இல் முடிக்கப்பட்டது.

6—

நியாய விலைக் கடைகளை தனியாரிடம் ஒப்படைத்தல்.

வினா எண் 9107—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நியாயவிலைக் கடைகளைத் தனியாரிடம் ஒப்படைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : நியாய விலைக் கடைகள் மூலம் பொது மக்களுக்குத் தேவையான இன்றியமையாப் பண்டங்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இப்படிக் குறைந்த விலையில், தேவையான மக்களுக்குச் சென்றடைய வேண்டிய இன்றியமையாப் பண்டங்களைத் தனியார்களிடம் ஒப்படைத்தால் அவர்கள் அதைச் சரியாக உரிய நபர்களுக்கு வழங்காமல் கூடுதல் விலைக்கு வெளிச்சந்தையில் விற்க வாய்ப்புள்ளது என்று அஞ்சப் படுவதால் தற்போது அரசுத் துறையால் நடத்தப்பட்டு வரும் நியாயவிலைக் கடைகளைத் தனியார்களிடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

7—

நாங்கூரில் இயங்கும் அங்காடியை நிரந்தரமாக்குதல்.

வினா எண். 17424—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, நாங்கூரில் இயங்கிவரும் அமுதம் அங்காடியை நிரந்தரம் ஆக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், பூம்புகார் சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் அடங்கிய மயிலாடுதுறை வட்டம்-நாங்கூர் கிராமத்தில் திருவாலி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினால், 976 குடும்ப அட்டைகளுடன் நாங்கூர் நியாயவிலைக்கடை முழுநேர அங்காடியாகவே செயல் பட்டு வருகிறது. எனவே, நாங்கள் இயக்கிவரும் அங்காடியை அமுதம் அங்காடியாக மாற்றவேண்டிய கேள்வி எழவில்லை.

8—

சாத்தப்பாடி கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்தல்

வினா எண் 20412—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்தில் சாத்தப்பாடி கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

<u>மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :</u>

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், சாத்தப்பாடி கிராமத்தில் ஒவ்வொரு சம்பா கொள்முதல் பருவத்திலும் நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்படுகிறது. கடைசியாகச் சம்பா 1993 பருவத்திலும், சாத்தப்பாடி கிராமத்தில் நேரடிக் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது.

(ஆ) கேள்வி எழவில்லை.

9—

<u>இரவு நேரங்களில் கடைசிப் பேருந்து புறப்படுவது தடைபடும் போது மாற்றுப் பேருந்து இயக்க நடவடிக்கை.</u>

<u>வினா எண் 8460—திரு. எம். ஆண்டி அம்பலம் :</u> மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்வேறு கிராமங்களை உள்ளடக்கிய நத்தம் உட்பட அண்ணா மாவட்டத்தில் உள்ள முக்கிய நகரங்களிலிருந்து திண்டுக்கல்லுக்கும் அங்கிருந்து அந்த நகரங்களுக்குச் செல்லும் கடைசி பேருந்து இரவு 10–30-க்கு மேல்தான் புறப்படும் நேரம் இருக்க வேண்டுமென்றும், பழுது மற்றும் ஏதேனும் காரணங்களினால் அந்தப் பேருந்துப் புறப்படுவது தடைப்பட்டால் உடனடியாக மாற்றுப் பேருந்து அந்த நேரத்திற்கு விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

<u>மாண்புமிகு திரு. சே. எ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :</u>

இரவு 10-30 -க்கு மேல் திண்டுக்கல்லிலிருந்து அண்ணா மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களுக்குப் பயணிகள் விழுக்காடு குறைவே. அதேபோல் 10–30-க்கு மேல் கிராமங்களிலிருந்து திண்டுக்கல்லுக்கு வரும் பயணிகள் விழுக்காடு மிகவும் குறைவே. இரவு 10–30 க்கு நகரப் பேருந்துகள் இயக்கமே மிகவும் குறைவு. அவ்வாறு இயக்கப்படும் பேருந்துகள் பயணத் தடை ஏற்படின் மாற்றுப் பேருந்து இயக்கப்படுவது வழக்கத்தில் உள்ளது.

10—

புதிய நகரப் பேருந்துகள் விட அரசு நடவடிக்கை.

வினா எண் 11670—திரு. பி. கலியபெருமாள்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணம்-தஞ்சாவூரில் கந்தர்வக்கோட்டையிலிருந்து, கல்லணைச் செல்லும் பேருந்துகளும், தஞ்சாவூரிலிருந்து பல பகுதிகளுக்குச் செல்லும் நகரப் பேருந்துகளும் நல்ல நிலையில் இல்லாததால் மேற்குறிப்பிட்ட வழித்தடங்களில் புதிய பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

புதியப் பேருந்துகள் மாற்றம் செய்யும்போது அதிக வருவாய் ஈட்டக்கூடியத் தடங்களில் இயக்கப்படுகின்ற பேருந்துகளுக்கும், தனியார்த் துறைப் பேருந்துகளுக்கும், போட்டியாக இயக்கப்படுகின்ற பேருந்துகளுக்கும் முன்னுரிமை கொடுத்து மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், தற்பொழுது, கழகத்தின் நிதிநிலைமைக்கேற்ப 7 ஆண்டுகள் பூர்த்தி அடைந்த பேருந்துகள் மட்டுமே கழிவு செய்யப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் கும்பகோணம்-கல்லணைத் தடத்தில் இயக்கப்படும் பேருந்து, ஒன்று சனவரி1993க்குள்ளும், தஞ்சாவூர் மற்றும் கந்தர்வக்கோட்டையிலிருந்து கல்லணைக்கு இயக்கப்படும் இரண்டு பேருந்துகள்சூன் 1993—க்குள்ளும், நல்ல நிலையில் உள்ளப் பேருந்துகளைக் கொண்டு மாற்றம் செய்யப்பட உள்ளன. தஞ்சையிலிருந்துபல்வேறுபகுதிகளுக்கு இயக்கப்படும் 18 நகரப் பேருந்துகள் மே 1993-க்குள் நல்ல நிலையில் உள்ள பேருந்துகளைக் கொண்டு மாற்றம் செய்யப்பட உள்ளன. இருப்பினும், தற்பொழுது இயங்கும் பேருந்துகள் நல்லபடியாக பழுது பார்த்து இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், 1992ஆம் ஆண்டில் இது வரை தஞ்சாவூர் பகுதியில் 10 பழைய நகரப் பேருந்துகள் புதிய பேருந்துகளினால் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

11—

சென்னையிலிருந்து செந்துரைக்குத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விட நடவடிக்கை.

வினா எண் 13034—திரு. ஆர். தங்கராசு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

(அ) சென்னையிலிருந்து செந்துரைக்குத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விடப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சென்னையிலிருந்து செந்துரைக்கு, உள்ள தூரம் 295 கிலோ மீட்டராகும். இது ஜெயம்கொண்டத்திலிருந்து மாற்றுப் பாதையில் உள்ளது. ஜெயங்கொண்டத்தையும் செந்துரையையும் இணைக்கும் சாலையானது மிகவும் குறுகலாக உள்ளது. இக்குறுகிய சாலை விரைவுப் பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே, இந்த வழித்தடத்தில் விரைவுப் பேருந்து இயக்கச் சாத்தியமில்லை.

12—

வடக்கு அதம்பையிலிருந்து செல்லும் சாலையில் நகரப் பேருந்து விட நடவடிக்கை.

வினா எண். 13042—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், வடக்கு அதம்பையிலிருந்துச் செல்லும் சாலையில் நகரப் பேருந்துவிட 1992-93ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை திருவோணம் வழி ஏனாதி தடத்தில் நம்பிவயலில் இருந்து 1 கி.மீ. தூரத்தில் வடக்கு அதம்பைக் கிராமம் உள்ளது. அரசு ஆணைப்படி பேருந்து இயக்கப்படும் சாலையில் இருந்து 1 கி.மீ. தூரத்தில் உள்ள கிராமங்கள் பேருந்து வசதி பெற்றவையாகக் கருதப்படும். வடக்கு அதம்பை பேருந்து வசதி பெற்ற தடத்தில் இருந்து 1 கி.மீ. தூரத்தில் உள்ளதால் இக்கிராமத்திற்கு நகரப் பேருந்து இயக்கச் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

13—

பூவாணம்-பள்ளத்தூர் தடத்தில் நகரப் பேருந்து 8 நடைகளாக இயக்க நடவடிக்கை.

வினா எண். 13427—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து பள்ளத்தூர் பூவாணம், ஒட்டங்காடு வழியாக பேராவூரணி செல்லும் நகரப் பேருந்தை 1992–93 இல் எட்டு சிங்கிளாக இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

பேராவூரணி நகரப் பேருந்து தடம் எண். 4, பேராவூரணி, பட்டுக்கோட்டை (வழி), பூவாணம் பள்ளத்தூர் தடத்தில் எட்டு நடைகள் தற்பொழுது இயக்கப்பட்டு வருகின்றன.

14—

பேராவூரணியிலிருந்து இராமேஸ்வரத்திற்குத் தொலைதூரப் பேருந்து விட நடவடிக்கை.

வினா எண். 13612—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணியிலிருந்து இராமேஸ்வரம் செல்ல 1992–93இல் தொலைதூரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

இல்லை.

1993 அக்டோபர் 26]

15—

மன்னார்குடி-சிலம்ப வேளங்காடு வழித்தடத்தில் தட எண்.10ஐ மீண்டும் இயக்குதல்.

வினா எண். 13613—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மன்னார்குடியிலிருந்து சிலம்ப வேளாங்காட்டிற்கு முன்னர் ஓடிக்கொண்டிருந்த 10ஆம் எண்ணுள்ளப் பேருந்தை மீண்டும் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

மன்னார்குடி-சிலம்பவேளங்காடு வழி, மதுக்கூர் தடத்தில் நீளம் 26 கி.மீ. ஆகும். சிலம்பவேளங்காடு பிரிவு சாலையிலிருந்து சிலம்பவேளங்காடு வரை 2 கி.மீ. தூரம் சாலைப் பேருந்து இயக்கத்திற்குத் தகுதியானதாக இல்லை. எனவே, இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது.

16—

பட்டுக்கோட்டையிலிருந்து பாலத்தளி வரை செல்லும் நகரப் பேருந்து மண்வயல், சீதாம்பாள்புரம் வரை நீடித்தல்.

வினா எண். 13636—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பட்டுக்கோட்டையிலிருந்து பாலத்தளி வரையில் வருகின்ற நகரப் பேருந்தை மணவயல், சீதாம்பாள்புரம் வரை நீட்டித்து 1992-93 இல் நிரந்தரமாக்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

இல்லை.

[1993 அக்டோபர் 26

17—

தடம் எண். 71-ஜே–யை ஈஸ்வரன் நகர் வரை நீட்டித்தல்

வினா எண். 13640—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து திருநின்றவூர் வரை செல்லும் 71 ஜே பேருந்தை ஈஸ்வரன் நகர் வரை விடுவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

இல்லை.

18—

பல்லவன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகளில் காய்கறி மூட்டைகள் ஏற்றப்படுவதால் ஏற்படும் இடையூறுகளைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண். 13641—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பல்லவன் நகரப் பேருந்துகளில் காலை நேரங்களில் காய்கறி மூட்டைகள் ஏற்றப்படுவதால் பயணிகள் மிகவும் சிரமப்படுவதைத் தடுக்க ஏற்பாடு செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

இல்லை.

1993 அக்டோபர் 26]

19—

வழித்தடம் 469 எஸ். செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்து தொகுசுப் பேருந்தில் பழனி நகருக்கான இட ஒதுக்கீட்டை அதிகரித்தல்.

வினா எண் 13998—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டையிலிருந்து சென்னை வரும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தொகுசு பேருந்தில் (வழித்தடம் எண். 469எஸ். பழனி நகருக்கான இட ஒதுக்கீட்டை அதிகரித்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

உடுமலைப்பேட்டையிலிருந்து சென்னைக்கு இயக்கப்படும் பேருந்தில் பழனியிலிருந்து பயணம்செய்ய விரும்பும் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ஐந்து இருக்கைகள் (இருக்கை எண். 21 முதல் 25 வரை) ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இருக்கைகளை அதிகரித்தால் இத்தடத்தில் இயக்கப்படும் பேருந்தின் இயக்க வருமானம் குறையும். எனவே, இருக்கை ஒதுக்கீட்டை மேலும் அதிகரிக்க இயலாது.

20—

கோயமுத்தூர்-சென்னை வழித்தடத்தில் பெண்களுக்காக தனி விரைவுப்பேருந்து விட நடவடிக்கை.

வினா எண். 15156—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரிலிருந்து சென்னை வரை பெண்களுக்கு தனி விரைவுப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த அனைத்துப் பேருந்துகளில் பெண்களுக்கு இருக்கை எண். 11

லிருந்து 14 வரை ஒதுக்கப்பட்டுள்ளன. இது தற்போது மகளிர் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் உள்ளது. எனவே, கோயம்புத்தூரிலிருந்து சென்னை வரை மகளிருக்கென தனி விரைவுப்பேருந்து இயக்க அவசியமில்லை என கருதப்படு கிறது.

21—

சீர்காழியில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக முன் பதிவு அலுவலகம் ஏற்படுத்த நடவடிக்கை.

வினா எண் 16747—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப் பாரா—

சீர்காழியில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் முன்பதிவு செய்யும் அலுவலகம் ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன். போக்கு வரத்துத்துறை அமைச்சர்:

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் முன்பதிவுக்கூடம் சீர்காழிக்கு முன்பு 20 கி மீ தொலைவில் மயிலாடுதுறையில் செயல்பட்டு வருகிறது சீர்காழியிலிருந்து பயணம் செய்ய விரும்புவோர் மயிலாடுதுறை முன்பதிவுக்கூடத்தில் முன்பதிவு செய்து கொண்டு சீர்காழியை ஏறுமிடமாகக் கேட்டு முன்பதிவு செய்து கொள்ளலாம். எனவே. சீர்காழியில் ஒரு முன்பதிவுக் கூடம் அமைப்பது தற்பொழுது சாத்தியமில்லை.

22—

சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சங்ககிரி பேருந்து நிலையத்தில் நின்று செல்லுதல்.

வினா எண் 19188—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோவையிலிருந்து சேலம் செல்லும் அனைத்துப் பேருந்து களும் சங்ககிரி பேருந்து நிலையத்தில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

கோவையிலிருந்து சேலம் செல்லும் சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அனைத்தும் சங்ககிரி பேருந்து நிலையத்தில் நின்று செல்கின்றன.

23—

சென்னை துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தை துரிதப் படுத்த நடவடிக்கை

வினா எண் 8061—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வழியாகச் செல்லும் மின்சார இரயில் போக்குவரத்தை விரைவில் தொடங்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு செ. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

சென்னை துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தின்கீழ், சென்னை கடற்கரையிலிருந்து மைலாப்பூர் லஸ் வரை 8.55 கி.மீ. தூரத்திற்குத் திட்டப்பணிகள் 1984ஆம் ஆண்டிலிருந்து நடை பெற்று வருகிறது இதில் 2.75 கி.மீ. தூரம் தரை மட்டத் திலும் மீதமுள்ள 5.80 கி.மீ. தூரம் மேல் மட்டத்திலும் அமை யும். கடற்கரை. கோட்டை மற்றும் பார்க் டவுன் இரயில் நிலையங்கள் தரைமட்டத்திலும். சிந்தாதிரிப்பேட்டை. சேப்பாக் கம், திருவல்லிக்கேணி லாயிட்ஸ்ரோடு, லஸ் இரயில் நிலையங்கள் மேல் மட்டத்திலும் அமையும். இத்திட்டத்திற்காக மாநில அரசு சுமார் 20.88 ஹெக்டேர் அரசு மற்றும் தனியார் நிலங்களை இனாமாக அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. 58 சத வீத திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளது. இத்திட்டம் முடிவடைய தற் பொழுதுள்ள செலவின்படி ரூ 189 கோடி ஆகும் என கணக் கிடப்பட்டுள்ளது மத்திய அரசு இந்தத் துரித இரயில் போக்கு வரத்துத் திட்டத்திற்காக இதுவரை ரூ. 88.15 கோடி ஒதுக்கி உள்ளது இத்திட்டத்திற்காக 1993–94ஆம் ஆண்டிற்கான மத்திய இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தில் ரூ 19.00 கோடி

கள் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இத்திட்டத்தில் கடற்கரையிலிருந்து பார்க் டவுன் வரை இரயில் போக்குவரத்து தொடங்கியுள்ளது. 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரயில் போக்குவரத்து சேப்பாக்கம் வரை விடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1995-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் லஸ் வரை இத்திட்டம் முடிவடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் விரைவாக முடிவடையத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

24—

சென்னை நகரில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 16490—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, செனாய் நகர் கிழக்கு கிளப் சாலையிலுள்ள அரசு அலுவலர் குடியிருப்பில் ''ஏ'', ''பி'' மற்றும் ''சி'' என்ற மூன்று குடியிருப்புகளில் 64 வீடுகள் உள்ளதால் குடிநீர் பற்றாக்குறை இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், குடிநீர் பற்றாக்குறையைப் போக்க, மேலும், ஒரு மெட்ரோ குடிநீர் இணைப்பை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு செ. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சென்னை செனாய் நகரில் உள்ள 64 அரசு அலுவலர் குடியிருப்புக்குக் குடிநீர் வாரியத்திடமிருந்து குழாய் மூலம் குடிநீர் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள பொதுவான சென்னை மாநகரமெங்கும் நிலவி வரும் குடிநீர்ப் பற்றாக்குறை காரணமாக குடிநீர் வாரிய இணைப்புகளில் நீர் அழுத்தம் குறைவு காரணமாகக் குடிநீர் வரும் அளவு சிறிதளவு பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு புதிய இணைப்பு ஏற்படுத்தினால் தற்போதுள்ள இணைப்புகளில் மேலும் அழுத்தம் குறைய வாய்ப்புள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

25—

செனாய் நகர் சிறார் விளையாட்டுத் திடலில் மழைநீர் தேங்குவதைத் தவிர்க்க நடவடிக்கை.

வினா எண் 16492—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, செனாய் நகர் கிழக்கு கிளப் சாலையிலுள்ள அரசு அலுவலர் குடியிருப்பில் மழைக் காலங்களில் குடியிருப்பின் முன்பும், சிறார் விளையாட்டுத் திடலிலும் இரண்டடித் தண்ணீர் தேங்குவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், செம்மண் கப்பி கொண்டு மேடுபடுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. செ. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சென்னை, செனாய் நகர் கிழக்கு கிளப் சாலையில் உள்ள அரசு அலுவலர் குடியிருப்பில் மழைக் காலங்களில் குடியிருப்பின் முன்பும் சிறார் விளையாடும் இடத்திலும் மண் நிரப்பப்பட்டு மழை நீர் தேங்காமல் இருக்க வேண்டிய நடவடிக்கை ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டது. மழைக் காலங்களில் தண்ணீர் இனிமேலும் தேங்கி நிற்காது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

26—

ஊமத்தநாட்டிலும் உடையாட்டிலும் பால் வழங்கும் சங்கம் அமைத்தல்.

வினா எண் 12791—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதியிலுள்ள உடையாட்டிலும் மற்றும் ஊமத்தநாட்டிலும். பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர் :

பேராவூரணி வட்டம், ஊமத்த நாட்டிலும், உடையாட்டிலும் (உடைநாடு கிராமத்தில்) தனித்தனியே ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க ஆய்வு செய்யப்பட்டதில் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை என்று தெரிகிறது. எனவே, மேற்படி கிராமங்களில் தனித்தனியாக சங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

27—

சேதுபாவாசத்திரத்தில் பால் வழங்கும் சங்கம் அமைத்தல்.

வினா எண் 12793—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதியிலுள்ள சேதுபாவாசத்திரத்தில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால் வளத்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் கிராமம் கடற்கரை பகுதியில் உள்ளதால் கால்நடைகள் வளர்ப்போர் எண்ணிக்கை குறைவு. மேலும் அவ்வூரில் உற்பத்தி செய்யப்படும் குறைந்த அளவு பால் கூட, உள்ளூர் தேவைக்கு நுகரப்படுவதால் உபரி பால் இல்லை. அதனால் சேதுபாவாசத்திரம் கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை.

28—

கார்பைடு தொழிற்சாலையமைக்க அரசுத் திட்டம்.

வினா எண் 386—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம் ஊத்துமலைப்பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல்லைப் பயன்படுத்தி ஒரு ''கார்பைடு'' தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர் :

இல்லை.

29—

விளவங்கோடு, கல்குளம் தாலுக்காக்களை தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவித்தல்.

வினா எண் 1012— திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள விளவங்கோடு, கல்குளம் தாலுக்காக்களை தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

30—

மங்களூர் தொகுதியில் தொழிற்சாலை அமைக்க திட்டம்.

வினா எண் 1276— திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

இல்லை.

31—

புதுக்கோட்டை மாவட்டத்தில் வனஸ்பதி தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க நடவடிக்கை.

வினா எண் 2101—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் வனஸ்பதி தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

32—

பொது நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டு முறையில் வேலை வாய்ப்பு.

வினா எண் 8808—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சா கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரிய தொழிற்சாலைகளில் அரசு இட ஒதுக்கீடு (Roster) முறையில் வேலை வாய்ப்பு கொடுக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : அரசு பொது நிறுவனங்களில் இட ஒதுக்கீடு முறையில் வேலை வாய்ப்பு ஏற்கனவே அளிக்கப்பட்டு வருகிறது. தனியார் நடத்தும் பெரிய தொழிற்சாலைகளில் அரசின் இட ஒதுக்கீடு ஆணையைச் செயல்படுத்த இயலாது.

1993 அக்டோபர் 26]

33—

தலைவாசலில் மகளிர் மேல்நிலைப்பள்ளி ஏற்படுத்த நடவடிக்கை.

வினா எண். 8817—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தலைவாசலில் மகளிர் மேல்நிலைப் பள்ளி ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) அரசு விதிகளின்படி ஏற்கனவே பெண்களுக்கெனத் தனியாக உயர்நிலைப்பள்ளி இயங்கி வந்திருந்தால் மட்டுமே அப்பள்ளியை மேல் நிலைப்பள்ளியாக உயர்த்த இயலும், தலைவாசலில் மகளிருக்கென தனியாக அரசு உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்தப்பட்ட பின்புதான் அதனை மேல்நிலைப்பள்ளியாக மாற்றுவது பற்றி பரிசீலனை செய்ய இயலும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

34-

மேல்நிலைப்பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் துவங்குதல்.

வினா எண். 12132—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் வரும் கல்வி ஆண்டில் துவங்கிடத்தக்க வகையில் அரசு செயற்குறிப்பாணை உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மகளிர் மேம்பாட்டினை கருத்திற்கொண்டு 1992-93-ம் ஆண்டில் நூறு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இடை

நிலை ஆசிரியை பயிற்சி வகுப்புகள் தொடங்க அரசு ஆணை (நிலை) எண். 645, கல்வி நாள் 20—7—1992-ல் ஆணை வெளியிடப்பட்டு 90 பள்ளிகளில் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

35—

ஆசிரியர் பணியிடங்களை நிரப்பு நடவடிக்கை.

வினா எண் 13305—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிகளில் நீண்ட காலமாக ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தற்போது பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும் சிறப்பாசிரியர் பணியிடங்களும் மட்டுமே காலியாக இருக்கின்றன. மேற்படி பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு ஆணை எண் 1251, கல்வி, நாள் 14-12-92-ல் புதிய நடைமுறைகளை வகுத்துள்ளது, அதன்படி ஆசிரியர் தேர்வு வாரியத்திலிருந்து நபர்களை பெற்று அப்பணியிடங்களை நிரப்ப வேண்டும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

36—

பேராவூரணி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு தளவாட சாமான்கள் கட்டிட வசதி செய்தல்.

வினா எண் 15579—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 1991–93-ல் தளவாட சாமான்கள் கட்டிட வசதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

37—

குப்பதேவன் நடுநிலைப்பள்ளி ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 15586—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குப்ப தேவன் நடுநிலைப் பள்ளிக்கு 1992–93ல் ஆசிரியர் பற்றாக்குறை யைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

38—

குருவிக்கரம்பை அரசு மேல்நிலைப்பள்ளியில் முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்.

வினா எண் 15590—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி வட்டம், குருவிக்கரம்பை அரசு மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணி இடங்களை 1992–93-ல் நிரப்ப அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இப்பள்ளியில் தகுதி வாய்ந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் கள் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

39—

அனந்த கோபாலபுரம் உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக மாற்ற நடவடிக்கை.

வினா எண் 15822—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அனந்த கோபாலபுரம் உயர்நிலைப்பள்ளியை 1992–93-ல் மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

40—

குறைவான மாணவர்களின் எண்ணிக்கையுள்ள அரசு உயர்நிலைப்பள்ளிகளை இடம் மாற்றம் செய்தல்

வினா எண் 16424—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குறைவான மாணவ—மாணவிகளைக் கொண்ட அரசு உயர் நிலைப் பள்ளிகளை வேறு இடங்களுக்கு மாற்ற அரசுக்குப் பரிந்துரைகள் வந்துள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

41—

இராமநாதபுர மாவட்டத்தில் மகளிர் கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை.

வினா எண் 16940—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தனியார் மற்றும் அரசு மகளிர் கல்லூரிகள் எத்தனை உள்ளன?

(ஆ) மேலும் புதிதாக ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) கீழக்கரையில் தாஸீம் பீபி அப்துல் காதர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி ஒன்று மட்டுமே சுயநிதிக் கல்லூரியாக இயங்கி வருகிறது.

(ஆ) இல்லை.

1993 அக்டோபர் 26]

42—

வேளாண்மைப் பயிற்சி பெற்றவர்களை ஆசிரியர்களாக நியமனம் செய்ய அரசு நடவடிக்கை.

வினா. எண். 19739—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மை ஓராண்டு பயிற்சி பெற்ற வேலை இல்லாதவர்களை அரசு உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் தொழிலாளர் அல்லது தோட்டக்கலை ஆசிரியர்களாக நியமனம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

இதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

43—

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதர படிகளுக்கான மானியம் வழங்குதல்.

வினா எண். 3506—திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊதியம் மற்றும் இதரப்படிகளை திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் செலவு செய்த தொகைக்கு அரசு மான்யம் வழங்காததால் ஊராட்சிக்கு 3 லட்சம் ரூபாய் நிலுவையாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு ஊதியமோ, இதரப்படிகளோ வழங்க அரசு மான்யம் அளிக்கப்படுவதில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

44—

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் திக்குறிச்சி பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 4928—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதி, பாகோடு கிராமத்தில் திக்குறிச்சி பள்ளிக்கூட கட்டிடத்திற்கு நிலம் வாங்கி பல வருடங்களாகியும் இன்னும் பள்ளிக்கூட கட்டிடம் கட்டப்படாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திருவட்டார் தொகுதி, திக்குறிச்சி பள்ளிக்கூட கட்டிடம் கட்டுவதற்கு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1992–93-ம் ஆண்டில் ரூ. 1,30,000 (ரூபாய் ஒரு லட்சத்து முப்பதாயிரம்)க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 22—10—1992ல் கோட்டப் பொறியாளர் (என். ஆர். இ. பி.) தக்கலை அவர்களால் தொழில் நுட்ப அனுமதியும் 5–11–1992ல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் அவர்களால் நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

45—

காவேரி ஆற்றில் செல்லும் படிக்கட்டுத்துறையில் ஏற்பட்ட பழுது நீக்க அரசு நடவடிக்கை.

வினா எண். 5103—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, சின்னப்பள்ளம் என்ற ஊரில் காவேரி ஆற்றில் செல்லும் படிக்கட்டுத் துறை பழுது அடைந்து உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், 1991—92-ல் அதனை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னப்பள்ளம் என்ற ஊரில் காவேரி ஆற்றில் செல்லும் படித்துறையில் பழுது ஏற்பட்டுள்ளது. படித்துறை பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காவேரியில் தேக்கப்பட்டுள்ள தண்ணீர் வடிந்ததும் பழுது நீக்கம் செய்யப்படும்.

46—

முசிறி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை.

வினா எண் 5390—திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

முசிறி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து புலிவலத்தைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள முசிறி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து புலிவலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

47—

கோபால்பட்டி கிராமத்தை தனி ஊராட்சியாக்க நடவடிக்கை.

வினா எண். 5967—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த கோபால்பட்டி கிராமத்தை தனி ஊராட்சியாக்க அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசின் முடிவு என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல்—அண்ணா மாவட்டம், நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த கோபால்பட்டி கிராமத்தை தனி ஊராட்சியாக அமைப்பதற்கான கோரிக்கைகள் ஏதும் தற்போது வரப்பெறவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

48—

மழைக்காலங்களில் போக்குவரத்து தடைகளை போக்க பாலம் அமைக்க நடவடிக்கை.

வினா எண். 6321—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் நெம்புகை அணைக்கட்டு மற்றும் வெள்ளாள விடுதி, ஆத்தங்கரை விடுதி போன்ற இடங்களில் பாலம் இல்லாத காரணத்தால் மழைக்காலங்களில் போக்குவரத்து தடைபடுவது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்,

(ஆ) இப் பணிகளை மேற்கொள்ள போதுமான நிதி வசதி இல்லை.

49—

கரம்பக்காடு ஊராட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 6769—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கரம்பக்காடு ஊராட்சிக்கு, ஊராட்சிக் கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம். சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கரம்பக்காடு ஊராட்சிக்கு அலுவலகக்கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

50—

போளூர் மற்றும் கணியம்பாடி ஒன்றியங்களுக்குப் புதிய வாகனங்கள் வழங்குதல்.

வினா எண். 6860—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் மற்றும் கணியம்பாடி ஒன்றியங்களில் ஜீப்புகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் புதிய வாகனங்கள் வழங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : போளூர் மற்றும் கணியம்பாடி ஊராட்சி ஒன்றிய ஜீப்புகளை கழிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கழிவு செய்து சான்று பெற்ற பின்பு புதிய வாகனம் வாங்கப்படும்.

51—

திருவத்தேவன் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை.

வினா எண் 6880—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சிக்கு நடப்பு நிதியாண்டில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

52—

ஊரக வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணிக்க கண்காணிப்புக் குழுக்கள் அமைத்தல்.

வினா எண் 7422—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊரக வளர்ச்சிக்கான திட்டங்களை உரிய முறையில் செயல்படுத்தவும் அவற்றின் செயல்பாடுகளையும் கண்காணிக்கவும், அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது.

[1993 அக்டோபர் 26

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஊரக வளர்ச்சித் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படு வதையும் அவற்றின் பயன்கள் மக்களுக்குச் சென்றடைகிறதா என்பதைக் கவனிக்கும் பொருட்டும், கிராம அளவிலும் மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் (Vigilance Committees) அமைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

53—

பி. முட்லூர் ஊராட்சி பள்ளிக்குப் புதிய கட்டிடம்.

வினா எண் 7599—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பி. முட்லூர் ஊராட்சியில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு மேலும் புதிய கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், புவனகிரி தொகுதி, பி. முட்லூர் ஊராட்சியில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டுதல் குறித்து வழக்கு நிலுவையில் உள்ளதால், அந்த ஊரில் பள்ளிக்கூடத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டும் வேலை நிறுத்தப் பட்டு, அதற்குப் பதிலாக அதே ஒன்றியத்தைச் சேர்ந்த தெற்குத் திட்டை என்ற ஊரில் பள்ளிக் கட்டிடம் கட்ட முடிவு செய்யப் பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

54—

வயலாமூர் கிராம குளத்திற்குத் தடுப்புச் சுவர் கட்டுதல்.

வினா எண் 7663—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, வயலாமூர் கிராமத்தில் உள்ள குளத்திற்குத் தடுப்புச் சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): புவனகிரி தொகுதி, வயலாமூர் கிராமத்திலுள்ள குளத்திற்குத் தடுப்புச் சுவர் கட்டும் பணி ஊராட்சி ஒன்றிய அளவில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது.

55—

புதுக்கோட்டை தொகுதியில் கூடுதல் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்.

வினா எண் 7777—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் உள்ள முதுகுளம், கந்தர்வகோட்டை, கந்தம்பட்டி, கல்லாக்கோட்டை, குளத்தூர், மோகனூர் போன்ற இடங்களில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வ கோட்டை ஒன்றியத்தில் முதுகுளம், கந்தர்வகோட்டை, மோகனூர் ஆகிய இடங்களில் கூடுதல் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது. கந்தம்பட்டி, கல்லாக்கோட்டை, குளத்தூர் ஆகிய இடங்களில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்ட தற்போது செயற் குறிப்பு இல்லை.

56—

தெற்குதிட்டை கிராம குளத்தில் படிக்கட்டு கட்ட அரசு நடவடிக்கை.

வினா எண் 7913—செல்வி கோ. மல்லிகா : உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள தெற்குதிட்டை கிராமத்திலுள்ள குளத்திற்கு படிக்கட்டு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): புவனகிரி ஊராட்சி ஒன்றியம், தெற்கு திட்டை கிராம குளத்திற்கு படிக்கட்டு கட்டும் பணி 1993–94 ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ள மாவட்ட அளவில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

57—

துருக்கன்தோப்பு கிராம வாரியில் தூர் எடுத்தல்.

வினா எண் 8224—திரு சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளூர் பஞ்சாயத்துக் குட்பட்ட துருக்கன்தோப்பு கிராமத்தில் நீண்ட நாட்களாக வரத்து வாரி தூர் எடுக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளூர் பஞ்சாயத்துக் குட்பட்ட துருக்கன்தோப்பு கிராம வாரியினை ஆழப்படுத்தி வாரியின் குறுக்கே பாலம் கட்டும் பணியினை நிதி வசதிக்கேற்ப ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

58—

நவீன கழிப்பிடங்கள் கட்டுதல்.

வினா எண். 8927—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் அரசு உதவித் தொகையுடன் நவீன கழிப்பிடங்கள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டத்தில், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் உள்பட, தீவிர சுகாதாரத் திட்டத்தின் கீழ் தனியார் இல்லங்களில் அரசு மான்யம் ரூ. 1,280 உடன் இத் திட்டத்தில் சேரும் பயனாளி பங்குத் தொகை ரூ. 320 பெற்று ரூ. 1,600 செலவில் நவீன கழிப்பிடம் கட்டப்பட்டு வருகின்றது.

59—

உடையூர் ஆதிதிராவிடர் பகுதியிலுள்ள குளத்தைத் தூர்வாரி பராமரித்தல்.

வினா எண் 9193—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள உடையூர் ஆதிதிராவிடர் பகுதியில் குளம் தூர் வாரி பராமரிப்பு செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மேல் புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பி. உடையூர் ஆதிதிராவிடர் காலனி பகுதியில் உள்ள குளத்தை தூர் அகற்றும் பணி ரூ. 7,500 மதிப்பீட்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றிய அளவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

60—

தென்னங்குடி பாளைய ஊராட்சி மன்றக் கட்டிடத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் பெயர் சூட்டுதல்.

வினா எண் 9561—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், தென்னங்குடி பாளையத்தில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்றக் கட்டிடத்திற்கு டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். பெயர் வைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

அரசிடம் கருத்துரு ஏதும் வரப்பெறவில்லை. வரப்பெற்றால் பரிசீலித்து தக்க முடிவெடுக்கப்படும்.

61—

பெருச்சிவன்னியன்பட்டி ஊத்துக்குளம் வரத்து வாரிக்கு தடுப்பு சுவர் கட்டுதல்.

வினா எண் 9808—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கந்தர்வ கோட்டை ஒன்றியத்தில் பெருச்சிவன்னியன் பட்டி கிராமத்தில் இருக்கும் ஊத்துக்குளம் வரத்து வாரிக்கு தடுப்புச் சுவர் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கந்தர்வ கோட்டை ஒன்றியத்தில் உள்ள ஊத்துக்குளம், காட்டுநாவல் ஊராட்சியைச் சார்ந்ததாகும். காட்டுநாவல் ஊராட்சியில் போதிய நிதி வசதி இன்மையால் ஊத்துக்குளம் வரத்து வாரிக்கு தடுப்புச் சுவர் கட்டும் பணியினை மேற்கொள்ள இயலவில்லை.

62—

சாத்தனப்பட்டு கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்.

வினா எண் 9834—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதியில், சாத்தனப்பட்டு கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. சாத்தனப்பட்டு கிராமத்தில் இரண்டு ஆழ் துளைக் கிணறு அமைக்கப்பட்டு கையிறைப்பான் பொருத்தப் பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. தற் போதைய மக்கட் தொகை 521 ஆகும். கையிறைப்பான் இரண்டும் இக்கிராமத்திற்கு வாரியத்தில் வரையறுக்கப்பட்ட மக்கட் தொகைக்கு போதுமானது. எனவே, தற்போது குடிநீர் வசதி செய்ய எவ்வித திட்டமும் இல்லை. இது தன்னிறைவு பெற்ற கிராமமாக செயல்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

63—

மேலமூங்கிலடி கிராம குளத்தில் தூர்வாரி, படித்துறை அமைத்தல்.

வினா எண் 10766—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், மேலமூங்கிலடி கிராமத்தில் குளம் தூர் வாரி படித்துறை கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாததால் மேலமூங்கிலடி கிராம குளத்தை தூர் அகற்றி படித்துறை கட்டும் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை.

64—

டிராக்டர்களை சிறு விவசாயிகள் பயன்படுத்த நடவடிக்கை.

வினா எண் 11217—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்களை சிறு விவசாயிகள் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் சிறு விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய டிராக்டர்கள் ஏதும் இல்லை.

65—

மேலப் பெருங்கரை கூட்டுக் குடிநீர் திட்டத்தால் பயன் பெற்ற கிராமங்கள்.

வினா எண் 11297— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியம், மேலப்பெருங்கரை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தால் பயன்பெறும் கிராமங்கள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. ம. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியம், மேலப்பெருங்கரை கூட்டுக்குடிநீர்த் திட்டத்தினால் 6 கிராமங்கள் பயன் பெற்று வருகின்றன. அவை பின்வருமாறு :

1. மேலப்பெருங்கரை.
2. பாலப்பச்சேரி.
3. இராஜாக்கல்பெட்டி.
4. பியனேந்தல்.
5. கணபதியேந்தல்.
6. சங்கங்கோட்டை.

66—

வையப்பமலை தனி ஊராட்சி அமைக்க நடவடிக்கை.

வினா எண் 11335— டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம் வையப்பமலைக்கு தனியாக பஞ்சாயத்து அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சேலம் மாவட்டம், மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், வையப்பமலைக்கு தனியாக ஊராட்சி அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

67—

பெருமகளூர் பேரூராட்சி பட்டங்காட்டில் பள்ளிக்கட்டடம் கட்டுதல்.

வினா எண் 12052—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பெருமகளூர் பேரூராட்சி பட்டங்காட்டில் 1992-93-ல் பள்ளிக்கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பெருமகளூர் பேரூராட்சி பட்டங்காட்டில் பள்ளிக்கட்டிடம் கட்ட தற்பொழுது செயற்குறிப்பு இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

68—

பூவாணத்தில் பள்ளிக் கட்டடம் கட்ட அரசு செயற்குறிப்பு.

வினா எண் 12055—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் பூவாணத்தில் 1992-93-ல் பள்ளிக்கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் பூவாணத்தில் பள்ளிக்கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை.

69—

பள்ளத்தூர் ஊராட்சி சுமைதாங்கி சாலையில் நிழற்குடை அமைத்தல்.

வினா எண் 12087—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பள்ளத்தூர் ஊராட்சி சுமைதாங்கி சாலையில் பயணிகள் நிழற்குடை 1992-93-ல் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பள்ளத்தூர் ஊராட்சி சுமைதாங்கி சாலையில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 9—9—1992-லேயே ரூ. 12,000 செலவில் பயணிகள் நிழற்குடை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

70—

நிழற்குடை அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 12088—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பள்ளத்தூர் ஊராட்சி உயர் நிலைப்பள்ளி தலைப்பில் 1992-93-ல் பயணிகள் நிழற்குடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பள்ளத்தூர் ஊராட்சி உயர்நிலைப் பள்ளி தலைப்பில் 1991-92-ம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் 9—9—1992 நாளிலேயே ரூ. 12,000 செலவில் நிழற்குடை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

71—

ஆண்டிக் காட்டில் பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 12368—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிக் காட்டில் 1992-93-ல் பள்ளிக்கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிக்காட்டில், 1991-92 ஆம் ஆண்டுக்கான சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 1,38,000 மதிப்பீட்டில் ஒரு கூடுதல் பள்ளிக்கட்டிடம் கட்டி முடியும் நிலையில் உள்ளது. ஆகவே, 1992-93-ல் மேலும் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்ட செயற்குறிப்பு இல்லை.

72—

பள்ளிகொண்டான் ஊராட்சிக்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை.

வினா எண் 12387—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் பள்ளிகொண்டானுக்கு ஊராட்சிக் கட்டிடம் 1992-93 ல் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பள்ளிகொண்டானுக்கு ஊராட்சிக் கட்டிடம் கட்ட செயற்குறிப்பு இல்லை.

73—

சிலம்பூரில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல்.

வினா எண் 12452—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, சிலம்பூரில் ஒரு ஆழ்துளை குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைத்துக் கொடுக்கப் படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): ஆண்டிமடம் தொகுதி, சிலம்பூரில் மாற்று ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் திட்டம் உள்ளது. இவ்வூரில் கிழக்குப் பகுதியினரும், மேற்குப் பகுதியினரும் இடம் தேர்வு செய்வதில் தகராறு செய்வதால், இக்கிராமத்தில் பொதுவான ஓரே இடத்தினை தேர்வு செய்த பிறகு திட்டம் செயலாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

74—

கோயில் வாழ்க்கை கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா எண் 12492—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, கோயில் வாழ்க்கை கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை. கோயில் வாழ்க்கை கிராமத்தில் ஒரு 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் செயல்பட்டு வருகிறது. 1990 மறு ஆய்வின்படி இக் கிராமம் முழுவதுமாக குடிநீர் வழங்கப்பட்ட கிராமமாக வரையறுக்கப்படுகிறது.

75—

சிலம்பூர் பஞ்சாயத்து கட்டிடத்திற்கு கான்கிரிட் போட்டுக் கொடுத்தல்.

வினா எண் 12493—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, சிலம்பூர் பஞ்சாயத்து கட்டிடத்திற்கு கான்கிரிட் போட்டுக் கொடுக்க நடப்பு நிதி ஆண்டில் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆண்டிமடம் தொகுதி, சிலம்பூர் பஞ்சாயத்துக் கட்டிடத்திற்கு கான்கிரிட் போட்டுக் கொடுக்க போதிய நிதி வசதியின்மையால் தற்போது செயற் குறிப்பு இல்லை.

76—

ராமச்சந்திரபுரத்திற்கு நல்ல குடிநீர் வழங்க நடவடிக்கை.

வினா எண் 13819—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஒன்றியம், மடத்தூர் ஊராட்சி, ராமச்சந்திரபுரம் உப்புநீர் வழங்கப்படுவதால் ஊர் மக்களுக்கு நல்ல குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

77—

வேலாயுதபுரம் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 14054—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதியைச் சேர்ந்த வேலாயுதபுரம் கிராமத்தில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் மேலநிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். ஆதிதிராவிடர் வாழும் பகுதியிலிருந்து சுமார் 60 மீட்டர் தூரத்தில் 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று உலக வங்கி உதவியுடன் செயல் படுத்தப்பட்டு, சங்கரன் கோவில் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வருகின்றது.

78—

அத்திக்கடவு குடிநீர்த் திட்டம்.

வினா எண் 14110—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

(ஆ) காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) கோவை மாநகராட்சி அத்திக்கடவு குடிநீர்த் திட்டப் பணிகள் அனைத்தும் டிசம்பர் 1994 ஆம் ஆண்டுக்குள் முடிவடைந்து பயனுக்குக்கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டப்பணிகள் அனைத்தும் முதலில் 30—6—1993-ல் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரும் வகையில் பணிகள் தொடங்கப்பட்டது. ஆனால் தற்போது தமிழ்நாடு மின்சார வாரியத்தால் குகை தோண்டும் பணிகளில் ஏற்பட்ட சுணக்கத்தினாலும், பயனீர் இன்ஜினியரிங் சிண்டிகேட் ஒப்பந்தக்காரரால் முன்வலுவூட்டப்பட்டு சிமெண்ட் குழாய்கள் தயாரித்து பதிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்தினாலும் இத்திட்டப் பணிகள் அனைத்தும் டிசம்பர் 1994ஆம் ஆண்டு வாக்கில் முடிவடைந்து பயனுக்குக் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

79—

குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை.

வினா எண் 14570—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி கருத்தலிங்கபுரம், அருணாசலபுரம், நாலாங்கட்டளை ஆகிய இடங்களுக்கு குடிநீர் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

80—

தீர்த்தாரப்புரம் ஊருக்கு மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைத்தல்.

வினா எண் 14572—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையம் ஒன்றியம், மடத்தூர் ஊராட்சி, தீர்த்தாரப்புரம் ஊருக்கு மேல் நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கடையம் ஒன்றியம், மடத்தூர் ஊராட்சியைச் சார்ந்த தீர்த்தாரப்புரம் கிராமத்தில் 2 கையிறைப்பான்களும், 2 திறந்த வெளிக் கிணறுகளும் உள்ளன. கையிறைப்பான்கள் மூலம் கிடைக்கும் நீர் உப்பு நீராகும். இந்த நிதியாண்டில் (1993–94) இக்குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய விசையிறைப்பான் திட்டம் செயல் படுத்துவதற்காக ரூ. 3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டதும் திட்டம் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

81—

வீரபாண்டியபட்டிணம் பகுதியில் கையிறைப்பான் அமைத்தல்.

வினா எண் 14574—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஒன்றியம், அனந்தபெருமாள் நாடானூர் ஊராட்சி, சிவநாடானூர் ஊரின் வடபகுதி வீரபாண்டியப் பட்டிணம் பகுதிக்கு கையிறைப்பான் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): இல்லை.

82—

துவரங்குறிச்சி ஊராட்சியில் மாட்டுச் சந்தை அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 14759—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், துவரங்குறிச்சி ஊராட்சியில் ஞாயிற்றுக்கிழமை மாட்டுச் சந்தை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி. உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இல்லை.

83—

குடைஞ்சான் குளத்தில் தூரெடுத்தல்

வினா எண் 14819—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், தென் ஏரிப்புறக்கரை கண்டியன்கொல்லை, குடைஞ்சான் குளத்தை தூர் எடுத்து பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், தென் ஏரிப்புறக்கரை கண்டியன் கொல்லை குடைஞ்சான் குளம் ஏற்கனவே தூர்

எடுக்கப்பட்டு தற்போது நீர் நிறைந்திருப்பதால் மேற்கொண்டு தூர் எடுக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

84—

வெண்டாகோட்டை வாய்க்காலை சுத்தம் செய்ய நடவடிக்கை

வினா எண் 14823—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், கீழப்பழுஞ்சூர் கிராமத்தில் வெண்டாகோட்டை வாய்க்காலை வெட்டிச் சுத்தம் செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் கீழப்பழுஞ்சூர் கிராமத்தில் வெண்டாகோட்டை வாய்க்காலில் தொலைதூரம் 1,000 மீட்டரிலும். 5,000 மீட்டரிலும் நவம்பர் 1992-ல் ஏற்பட்ட வெள்ளத்தில் உடைப்பு ஏற்பட்ட இடங்களில் நிரந்தரமாக உடைப்பு ஏற்படாவண்ணம் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 1993–94-ல் நிதி நிலைமையைப் பொறுத்து தேவையான இடங்களில் வாய்க்காலில் மராமத்துப் பணிகள் மாவட்ட அளவில் மேற்கொள்ளப்படும்.

85—

உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்த நடவடிக்கை.

வினா எண் 15232—திரு. மா. சுந்தரதாஸ் ; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், தேர்தல் எப்போது நடைபெறும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு நபரால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவைத் தொடர்ந்து இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்துவது தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இத் தடையை விலக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தற்போது தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மன்றத் தொகுதி வாக்காளர் பட்டியல்களிலிருந்து ஊராட்சித் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியல்கள் தனியே தயாரிக்க வேண்டியுள்ளதால் இதற்கு இன்னும் சிறிது காலம் ஆகும். எனவே, உள்ளாட்சித் தேர்தல்கள் தற்போது உடனடியாக நடத்த இயலாத நிலை உள்ளது.

86—

இராதவிளாகம் குளத்திற்கு படித்துறை கட்டுதல்

வினா எண் 15456—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள இராதாவிளாகம் குளத்திற்கு படித்துறை கட்டித் தர அரசு ஆவண செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : 'பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் இராதாவிளாகம் குளத்திற்கு படித்துறை கட்டும் பணியினை 1993–94 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட அளவில் மேற்கொள்ளப்படும்.

87—

பார்த்திபனூரை பேரூராட்சியாக அங்கீகரிக்க அரசு நடவடிக்கை

வினா எண் 15695—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதியில் பார்த்திபனூரை பேரூராட்சியாக அங்கீகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், பரமக்குடி தொகுதியிலுள்ள பார்த்திபனூரை பேரூராட்சியாக வகை மாற்றம் செய்வது தொடர்பாக செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

88—

திருச்சிற்றம்பலத்தை பேரூராட்சியாக உயர்த்த அரசு நடவடிக்கை

வினா எண் 16053—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மடத்திக்காடு, கல்லூரணிக்காடு, துறவிக்காடு ஊராட்சிகளை இணைத்து திருச்சிற்றம்பலத்தை பேரூராட்சியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மடத்திக்காடு, கல்லூர்ணிக்காடு, துறவிக்காடு, ஊராட்சிகளை இணைத்து திருச்சிற்றம்பலத்தை பேருராட்சியாக வகை மாற்றம் செய்வதற்கான செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

தர்மபுரி மாவட்டத்தில் கசிவுநீர்க் குட்டைகளின் எண்ணிக்கை

வினா எண் 16106—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தருமபுரி மாவட்டத்தில் 1992–93 ஆம் வருடத்தில் கட்டப்பட்டுள்ள கசிவு நீர்க் குட்டைகள் எத்தனை?

(ஆ) காவேரிப்பட்டினம் தொகுதியில் எத்தனை கட்டப்பட உள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) 1992–93 ஆம் வருடத்தில் தருமபுரி மாவட்டத்தில் கட்டப்பட்ட கசிவுநீர்க் குட்டைகள் 129.

(ஆ) காவேரிப்பட்டினம் சட்டமன்ற தொகுதியில் 1992–93 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் மற்றும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 3 கசிவுநீர்க் குட்டைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 1993–94 ஆம்ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இரண்டு கசிவுநீர்க் குட்டைகள் கட்டப்படுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

90—

மருங்கபள்ளம் சிவன் கோயில் குளத்தில் படித்துறையும் மற்றும் தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் 16251—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மருங்கபள்ளம் சிவன் கோவில் குளத்தில் ஒரு படித்துறையும் தடுப்புச் சுவரும் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், மருங்கபள்ளம் ஊராட்சியிலுள்ள சிவன் கோவில் குளத்திற்கு படித்துறையும், தடுப்புச் சுவரும் 1991–92 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

91—

பாசனக் குளம், வெட்டன் குளத்தைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி சீரமைத்தல்.

வினா எண் 17170— திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கணக்கன்காடு ஊராட்சியிலுள்ள பாசனக் குளம் வெட்டன் குளத்தில் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி கரைகளை அகலப்படுத்தி, குளத்தை ஆழப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கரம்பைக்குடி ஊராட்சி ஒன்றியம், கணக்கன்காடு ஊராட்சியிலுள்ள பாசனக் குளம் வெட்டன் குளத்தைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற ஆலங்குடி வருவாய் வட்டாட்சியர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இக்குளத்தை சீரமைக்கும் பணியினை 1992–93 ஆம் ஆண்டு தல பாசனத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு ரூ. 15,000 மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

92—

புதூர் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டுதல்

வினா எண் 19764— திருமதி என். கனகவல்லி— : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதி, புதூர் பேரூராட்சிக்குச் சொந்தமாக புதிய பேருந்து நிலையம் கட்ட அரசு முன்வருமா?

1993 அக்டோபர் 26]

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) தற்போது இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

93—

மணிக்கொல்லை காலனிக்கு நத்தம் தரிசு நிலத்தை மாற்றி பட்டா வழங்குதல்.

வினா எண் 4146—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் உள்ள பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் மணிக்கொல்லை காலனிக்கு நத்தம் தரிசு நிலத்தை மாற்றி பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சிதம்பரம் வட்டம், மணிக்கொல்லை காலனியில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு மேற்படி கிராமத்தில் உள்ள தரிசு நிலத்தை நத்தமாக மாற்றி பட்டா வழங்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு சிதம்பரம் கோட்டாட்சியர் கேட்கப் பட்டுள்ளார்.

94—

ஆதிதிராவிடர் மக்களுக்கு பட்டா வழங்குதல்

வினா எண் 8769—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில், அம்பேத்கார் நகரில் (ஆத்தூர் நகரம்) 122 பேருக்கு பட்டாக்கள் ஏழு ஆண்டுகளாக வழங்கப் படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

1993 அக்டோபர் 26]

(ஆ) ஆம் எனில், பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் மற்றும் ஆத்தூர் கிராமத்தில் 5.99 ஏக்கர் நிலம் மேற்படி கிராம ஆதிதிராவிடர்களுக்காக தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 31/78-ன் படி கையகப்படுத்தியதைப் பற்றி உச்சநீதிமன்றத்தில் தற்போது வழக்கு நிலுவையில் உள்ளதால், நிலம் கையகப்படுத்தி வீட்டு மனைப்பட்டா வழங்க முடியவில்லை. தீர்ப்பு வந்தபின் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

95—

அருந்ததியர் மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்குதல்.

வினா எண். 15363— டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உலகப்பம்பாளையம் அருந்ததியர் மக்களுக்கு உஞ்சனை ஏரி சர்வே எண். 114-ல் 36.360 ஹெக்டேர் நிலத்தில் சுமார் 15 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், உஞ்சனை கிராமம், ச. எண். 114, ஏரிப் புறம்போக்கு நிலமாதலால் அதே கிராமத்தில் ச. எண். 115/1-பி-ல் 0.95 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு தனி வட்டாட்சியர் (ஆதி.ந.), சங்கரகிரி அவர்களால் 2—3—1993-ல் நிலம் சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் அதில் உஞ்சனை கிராமம், உலகப்பம்பாளையத்தில் தற்போது ஏரிப் புறம்போக்கில் குடியிருந்து வரும் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும்.

1993 அக்டோபர் 26]

96—

பன்னாரி மாரியம்மன் திருக்கோயில் மூலம் கலைக்கல்லூரி கட்டுதல்.

வினா எண். 255—திருமதி ஏ. டி. சரஸ்வதி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் தொகுதியில் அருள்மிகு பன்னாரி யம்மன் திருக்கோயில் மூலம் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவில் கலைக் கல்லூரி கட்டும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைந்து புதிய கலைக்கல்லூரி திறக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இத் திருக்கோயில் மூலம் கலைக்கல்லூரி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு இல்லை.

97—

கோயில் நிலங்களை அறநிலையத் துறை நேரடியாகப் பராமரித்தல்

வினா எண். 6048—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில் நிலங்களைத் தனியாருக்குத் குத்தகைக்குக் கொடுக்காமல் இந்து அறநிலையத் துறையே நேரடிப் பார்வையில் நிலங்களைப் பராமரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கோயில் நிலங்களை இந்து சமய அறநிலையத் துறையே நேரடிப் பார்வையில் பராமரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

98—

பழனியாண்டவர் திருக்கோயில் தல வரலாறு மற்றும் திருக்கோயில் வெளியீடுகள் தடையின்றிக் கிடைக்க நடவடிக்கை.

வினா எண். 6094— திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகரில் உள்ள அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயில் தகவல் நிலையங்களில் தல வரலாறு உட்பட திருக்கோயில் வெளியீடுகள் எதுவும் கிடைப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், திருக்கோயில் வெளியீடுகள் தடையின்றிக் கிடைக்க ஆவன செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இத்திருக்கோயிலில் உள்ள தகவல் நிலையங்களில் தல வரலாறு உள்ளிட்ட திருக்கோயில் வெளியீடுகள் அனைத்தும் தடையின்றிக் கிடைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

99—

திருத்தேவன் ஊராட்சி, புதுத்தெரு மீனவர்களுக்கு மனைப்பட்டா வழங்குதல்.

வினா எண். 3146— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருத்தேவன் ஊராட்சி, புதுத்தெரு மீனவர்களுக்குக் காலனி வீடு கட்ட வழங்கப்பட்ட 4 ஏக்கர் நிலத்தில் குடிமனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருத்தேவன் ஊராட்சி, புதுத்தெருவில் உள்ள 53 மீனவர் குடும்பங்களுக்கு புல எண். 310, நத்தம் புறம்போக்கில் வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டு விட்டன.

100—

ஏரிப்புறக்கரை மீனவர்களுக்கு மனைப்பட்டா வழங்குதல்.

வினா எண் 20319—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஏரிப் புறக்கரை மீனவர்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்கி மீனவர் காலனி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஏரிப் புறக்கரை கிராமத்தில் புல எண். 752/2பி-யில் வீட்டுமனைப் பட்டா அங்குள்ள மீனவர்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் அவர்கள் அங்கு குடியேற மறுத்து வேறு இடத்தில் பட்டா கேட்டு வருகிறார்கள். அவர்கள் கேட்டுள்ள இடம் தொழில் பயிற்சி நிலையத்தின் விளையாட்டு மைதானமாக ஆக்கிரமிப்பில் உள்ளது. வேறு புறம்போக்கு நிலங்கள் இல்லை.

[பன்னிரெண்டாம் பட்டியல்]

1—

சிறு சேமிப்புத் திட்டங்களின் வட்டி வீதங்களை உயர்த்துதல்

வினா எண் 16623—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி வீதங் களை உயர்த்தக்கோரி தமிழ்நாடு அரசு மத்திய அரசை கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், இந்திய யூனிட் டிரஸ்டு நடத்தி வரும் பயன் நிதித் திட்டங்களுடன் ஒப்பிடுகையில் சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி வீதங்கள் குறைவாக உள்ளதால் மாதாந்திர வருவாய் திட்டத்தில் முதல் மூன்றாண்டுகளுக்கு 15 சதவீத வட்டி வழங்கவும் அடுத்துள்ள இரண்டு ஆண்டுகளுக்கு 15.5 சதவீதம் வட்டி வழங்கவும், அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்கு திட்டத்தின் வட்டி வீதத்தை 6.5 சதவீதம் ஆக உயர்த்தக் கோரியும், தேசிய சேமிப்பு திட்டம் 1992-ன் கீழ் வட்டி வீதம் 11.5 சதவீதமாக உயர்த்தக் கோரியும், தேசிய சேமிப்பு சான்றிதழ் 8-வது வெளியீட்டின் கீழ் வட்டி வீதத்தை 12.5 சதவீதமாக மாற்றக் கோரியும் மத்திய அரசிற்கு மாநில அரசு கடிதமொன்று எழுதியுள்ளது. மேலும் தொடர் வைப்புத் திட்டத்தின் கீழ் மூன்றாண்டுகளில் முடிவடையக் கூடிய ஒரு தொடர்வைப்புத் திட்டத்தினை ஆண்டிற்கு 13 சதவீதம் வட்டி வீதத்தில் தொடங்கவும் மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

2—

திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்றத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுதல்

வினா எண் 11498—டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி நகரில் உள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

திருச்சி மாவட்டம், திருச்சி நகரில் உள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு புதிய கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது. மேலும் திருச்சி நகரில் ரூபாய் 400 லட்சம் செலவினத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டும் கருத்துரு திட்ட இனத்தில் சேர்க்கப்பட்டு மைய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3—

The quantum of Money remitted by Advocates for each memo of appearance.

Question No. 14391—Thiru M. Sundaradoss: Will the Hon. the Minister for Law be pleased to state

(a) Whether Advocates have to remit two Rupees for each memo of appearance to be credited to the Advocates Welfare Fund in this State;

(b) If so, the details there of; and

(c) Whether the Central Government has been consulted in this regard on the quantum of money to be credited ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1987-ம் ஆண்டு தமிழ்நாடு வழக்கறிஞர் நல நிதிச் சட்டத்தின் படி (திருத்தப்பட்ட சட்டம் பிரிவு 23-ன்படி நீதிமன்றம், தீர்ப்புமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு எதனின் முன்பும் தாக்கல் செய்யப்படும் வக்கலாத்துநாமா ஒவ்வொன்றிற்கும் நீதிமன்றக் கட்டணம் முத்திரை வில்லைகள் எவையேனுமிருப்பின் அவற்றோடு கூட ரூபாய் ஒன்று மதிப்புள்ள இரண்டு வழக்கறிஞர் நல நிதி முத்திரை வில்லை ஒட்டப்படுதல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு முத்திரை வில்லை ஒட்டப்பட்டிருக்காவிட்டால், வக்காலத்துநாமா எதுவும் செல்லத்தக்கதுமாகாது. இத்திருத்தம் 1–1–1993 முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(இ) மேற்குறித்த சட்டத்திருத்தத்திற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

4—

மானூர் ஒன்றியப்பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவித்தல்.

வினா எண் 8710—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் ஒன்றியம், மானூர் ஒன்றியப் பகுதிகள் வறட்சியாக இருப்பதால் இப்பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) வரிவிதிப்பு தள்ளுபடி செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள 14 கிராமங்கள் அதிகமாக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக கண்டறியப்பட்டுள்ளது. மற்ற பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என அறிவிப்பு செய்யாமலேயே பாதிக்கப்பட்ட எல்லா பகுதிகளிலும் அனைத்து நிவாரணப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள 14 கிராமங்களுக்கு வரிவஜா செய்யப்பட்டுள்ளது.

5—

சென்னை நேரு ஸ்டேடியத்தை சென்னை மாவட்ட விளையாட்டு மன்றத்திடம் ஒப்படைத்தல்.

வினா எண் 7965—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விளையாட்டுத் துறையின் நேரடி நிர்வாகத்தில் இயங்கும் நேரு ஸ்டேடியத்தை சென்னை மாவட்ட விளையாட்டு மன்றத்திடம் ஒப்படைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

சென்னை நகரில் உள்ள நேரு விளையாட்டரங்கம் சுமார் ரூபாய் 40 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது, இதனை நிர்வகிக்கும் பொறுப்பினை எந்தத்துறையிடம் ஒப்படைக்கலாம் என்பதுபற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது.

* விடை—15-4-1993ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

6—

மாவட்டம் தோறும் பெண் பயிற்றுநர்களை விளையாட்டுத் துறைக்கு நியமித்தல்.

வினா எண் 7968—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டங்கள் தோறும் பெண் பயிற்றுநர்கலை விளையாட்டுத் துறைக்கு நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

** விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

தற்போது தமிழ்நாட்டில் 8 பெண் பயிற்றுநர்கள் கீழ்க் கண்ட மாவட்டங்களில் பணியாற்றி வருகின்றனர்:—

(1) சென்னை மாவட்டம்	..	2 (தடகளம் மற்றும் கை யுந்து பந்து)
(2) நீலகிரி மாவட்டம்	..	1 (சிறகு பந்து)
(3) கோவை மாவட்டம்	..	1 (கையுந்து பந்து)
(4) சேலம் மாவட்டம்	..	2 (தடகளம் மற்றும் கை யுந்து பந்து)
(5) பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்		1 (கையுந்து பந்து)
(6) கன்னியாகுமரி மாவடம்.		1 (கையுந்து பந்து)

மேலும் தேவை ஏற்படின், பிற மாவட்டங்களில் அவ்வப் போது பெண் பயிற்றுநர்கள் நியமனம் செய்யப்படும்.

7—

நாடியம் உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்.

வினா எண் 13213—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, நாடியம் உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டிக்கொடுக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—6–4–1993 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

8—

நடுவிக்கோட்டை உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்

வினா எண் 13214— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, நடுவிக்கோட்டை உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் 1992-93-ல் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

* விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம். கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

9—

சொக்கநாதபுரம் தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் 13219— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சொக்கனாதபுரம். தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்கள் நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: ஏதும் இல்லை.

*விடை—18–3–1993 ஆம் நாளிட்டது.

**விடை—18-3-1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

10—

புக்கரம்பை தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் 13220—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, புக்கரம்பை தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை.

11—

கே. உஞ்சி விடுதி தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் 13230—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, கே. உஞ்சி விடுதி தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை.

12—

கார்காவயல் தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் 13235—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, கார்காவயல் தொடக்கப்பள்ளிக்குப் போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*விடை—2–4–1993 ஆம் நாளிட்டது.

**விடை—6–4–1993 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை.

13—

எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை.

வினா எண் 15371—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரை 'எய்ட்ஸ்' நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

** விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இரத்த மாதிரிகள் எலிஸா பாசிடிவ் மற்றும் வெஸ்ட்டர்ன் பிளாட் முறையில் பரிசோதனை செய்யப்பட்டதில் 1986 முதல் 1992 வரை எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 47 என எய்ட்ஸ் மேனஜ்மேன்ட் பொறுப்பு மருத்துவர் டாக்டர் ஜெயகர்பால் தெரிவித்துள்ளார்.

14—

சென்னை நகர ஆட்டோ ரிக்ஷா மீட்டர்களில் முறைகேடுகள்.

வினா எண் 2674—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சென்னை நகரில் ஆட்டோ ரிக்ஷா மீட்டர்களில் முறைகேடுகள் செய்யப்படுவது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

*விடை—2-4-1993 ஆம் நாளிட்டது.

**விடை—11-3-1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

*விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சென்னையில் உள்ள ஆட்டோக்களை இயக்கூர்தி ஆய்வாளர்களால் 1991-ல் 26,740-ம் 1992-ல் 26,572-ம் தணிக்கை செய்யப்பட்டது. அவைகளில் 1991-ல் 1,409-ம் 1992-ல் 1,140-ம் தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டன. தணிக்கை அறிக்கை வழங்கும்போது ஆட்டோ மீட்டர்களில் சீல் செய்ததை உடைத்து ஓட்டிய குற்றத்திற்காக 1991-ல் 506 -ம் 1992-ல்1,140-ம் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தணிக்கை அறிக்கைகள், ஆட்டோக்களுக்கு எந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டதோ அந்தந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது. அவர்கள் குற்றத்திற்கேற்ப வரியையும், இணக்கத் தொகையையும் வசூலிக்கிறார்கள். மேலும், சோதனை, காவல் துறையும், போக்குவரத்துத்துறையும் சேர்த்து நடத்தப்பட்டு வருகிறது.

15—

முடச்சான் குளம் பராமரிப்பு

வினா எண் 13736 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூணி தொகுதி, சேதுபாவாசத்திரத்தில் முடச்சான் குளத்தை மராமத்து செய்து மதகுகள் செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏரியில் இரண்டு மதகுகள் உள்ளன. இவற்றில் ஒன்று நல்ல நிலையிலும் மற்றொன்று மராமத்து செய்ய வேண்டிய நிலையிலும் உள்ளது. இம்மதகும், கரையும் வரும் அடைப்புக் காலத்தில மராமத்து செய்யப்படும்.

*விடை— 29-3-1993 ஆம் நாளிட்டது.

16—

அதம்பை தெற்கு துணை சுகாதார நிலையத்தைச்சரிவர இயங்க வைக்க நடவடிக்கை

வினா எண். 1993—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், அதம்பை (தெற்கு)-ல் இயங்கும் துணைசுகாதார நிலையத்தைச் சரிவர இயங்க வைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

***விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், அதம்பை (தெற்கு-ல் துணை சுகாதார நிலையம் ஒன்று வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அங்கு ஒரு கிராம சுகாதார செவிலியர் பணியாற்றி வருகிறார். துணை சுகாதார நிலையம் சரிவர இயங்கி வருகிறது.

17—

பரமக்குடி தொகுதி மயானச் சாலைகளைச் சீர் செய்தல்

வினா எண் 2114—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் மயானச்சாலைகளைச் சீர் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

***விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ):

பரமக்குடி தொகுதியில் மொத்தம் 29 மயானச் சாலைகள் உள்ளன. அவற்றில் ஐந்து மயான சாலைகள் ஏற்கனவே சீர் செய்யப் பட்டு விட்டன. மீதியுள்ள 24 மயான சாலைகளை ஊராட்சிகளின் நிதிநிலைமை போதிய அளவு பெருகியவுடன் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

** விடை 10-3-1993 ஆம் நாளிட்டது

1993 அக்டோபர் 26]

18—

பின்னவாசலில் உதவி மருத்துவமனை

வினா எண் 2534—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் பின்னவாசலில் உதவி மருத்துவமனை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

***விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், பின்னவாசலில் தற்போது ஆரம்ப சுகாதார நிலையத்தில் கிளை நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அங்கு உதவி மருத்துவமனை துவக்குவது தொடர்பாக செயற்குறிப்பு ஏதும் இல்லை.

19—

ஆர். கே. நகர்-பட்டங்காடு சாலையைக் கப்பிச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 3003—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆர். கே. நகரிலிருந்து பட்டங்காடு வரை செல்லும் சாலையைக் கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

***விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆர். கே. நகரிலிருந்து பட்டங்காடு வரை செல்லும் சாலையைக் கப்பிச் சாலையாக மாற்ற பேரூராட்சியில் நிதி வசதி இல்லாததால் தற்போது செயற்குறிப்பேதும் இல்லை.

*** விடை 10-3-1993 ஆம் நாளிட்டது.

[1993 அக்டோபர் 26

20—

சானார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றிய பகுதி ஆறு கரைகளில் தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் 5710—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியப் பகுதிக்குள் ஓடும் ஆறுகள் மற்றும் ஓடைகளில் மழைக்காலங்களில் நீர் பெருக்கு அதிகமாக வருவதால் அவற்றினை ஒட்டியுள்ள சாலைகளில் மண் அரிப்பு ஏற்படுவதால் தடுப்பு சுவர் கட்ட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கடந்த 3 ஆண்டுகளில் ஒன்றியம் மற்றும் பேரூராட்சிகளால் பரிந்துரைக்கப்பட்டவை எத்தனை ?

(ஆ) அவற்றில் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம் என்ன ?

***விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சானார்ப்பட்டி ஒன்றியத்தால்பரிந்துரைக்கப்பட்டவை:

	வருடம்	எண்ணிக்கை
1.	1989—90	21
2.	1990—91	3
3.	1991—92	3
		27

நத்தம் ஒன்றியம்மற்றும் பேரூராட்சியால்பரிந்துரைக்கப்பட்டவை:

	வருடம்.	எண்ணிக்கை
1.	1989-90	10
2.	1990-91	9
3.	1991-92	5
		24

***விடை—10-3-1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

(ஆ) பரிந்துரை செய்யப்பட்ட அனைத்து வேலைகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

21—

பூ. முடிக்காடு—கறம்பக்காடு மெயின்சாலையை மராமத்து செய்தல்.

வினா எண் 6751—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, பூ. முடிக்காட்டிலிருந்து கறம்பக்காடு மெயின்சாலை வரை சாலை அமைத்து மராமத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, பூ. முடிக்காட்டிலிருந்து கறம்பக்காடு மெயின்சாலை வரை சாலை அமைத்து மராமத்து செய்ய பேரூராட்சியில் போதிய நிதி வசதியில்லாததால் தற்போது செயற்குறிப்பேதுமில்லை.

22—

நடுவிக்குறிச்சியில் மயானசாலை அமைத்து கொட்டகை அமைத்தல்.

வினா எண் 7001—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சியில் மயானசாலை அமைத்து கொட்டகை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*விடை—11-3-1993 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சியில் மயானச்சாலை அமைத்து கொட்டகை அமைத்துக்கொடுக்க போதிய நிதி வசதியின்மையால் தற்போது செயற்குறிப்பேதுமில்லை.

23—

வெட்டிக்காடு ஆதிதிராவிடர் தெரு அருகில் சி.எம். பி. வாய்க்காலில் பாலம் கட்டுதல்.

வினா எண் 7220—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் செருவாவிடுதி, வடக்கு வெட்டிக்காடு ஆதிதிராவிடர் தெரு அருகில் புதுப்பட்டினம் சி.எம். பி. வாய்க்காலில் ஒரு பாலம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் செருவாவிடுதி வடக்கு வெட்டிக்காடு ஆதிதிராவிடர் தெரு அருகில் புதுப்பட்டினம் சி.எம்.பி. வாய்க்காலில் ஒரு பாலம் கட்டிக்கொடுக்க போதிய நிதிவசதியின்மையினால் தற்போது செயற்குறிப்பேதுமில்லை.

*விடை—10-3-1993 ஆம் நாளிட்டது.

**விடை—10-3-1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

24—

ஏனாதிகரம்பை சி.எம்.பி. ஆற்றுக் கரை சாலையை செப்பனிடுதல்.

வினா எண் 7318—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஏனாதிகரம்பை செக்போஸ்டுக்கு தெற்கே சி.எம்.பி. ஆற்றுக்கரை சாலையை செப்பனிட்டு போக்குவரத்து செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

போதிய நிதி வசதியின்மையால், தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், ஏனாதிகரம்பை செக்போஸ்டுக்கு தெற்கே சி.எம். பி. ஆற்றுக்கரைச் சாலையைச் செப்பனிட்டுத்தர தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

25—

வழுதலை வட்ட கிராமத்திற்கு தெரு விளக்கு வசதி

வினா எண் 12278—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வட்டாத்திக்கோட்டை ஊராட்சி வழுதலை வட்டம் கிராமத்திற்கு 1992-93-ல் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், வட்டாத்திக்கோட்டை ஊராட்சி வழுதலை வட்டம் கிராம குடியிருப்புப் பகுதியில் 4 தெருவிளக்குகள் உள்ளன.

*விடை—10-3-1993 ஆம் நாளிட்டது.

**விடை—10-3-1993 ஆம் நாளிட்டது.

இப்பகுதிக்கு இவையே போதுமானதாக உள்ளதால் மேற்கொண்டு இப்பகுதிக்கு தெருவிளக்கு விஸ்தரிப்பு அவசியம் எழவில்லை. எனவே, செயற்குறிப்பு ஏதுமில்லை.

26—

சேண்டாக்கோட்டை ஊராட்சிக் கட்டிடம்.

வினா எண் 12388—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், சேண்டாகோட்டைக்கு ஊராட்சிக் கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சேண்டாக்கோட்டை ஊராட்சிக்கு கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை.

27—

நடுவிக்கோட்டை ஊராட்சி கட்டிடம்

வினா எண் 12396—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை ஊராசிக்குக் கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், நடுவிக்கோட்டை ஊராட்சிக்குக் கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை.

*விடை—9-3-1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

28—

காமாட்சியம்மன் கோயில் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண். 12578— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு, காமட்சியம்மன் கோவில் தெருவில் உள்ள 30 ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க 1992-93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு காமாட்சியம்மன் கோவில் தெருவில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு நடப்பு நிதியாண்டில் வீடுகள் கட்டிக் கொடுக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

29—

அதம்பை தெற்கு வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்

வினா எண். 12584— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை தெற்கு வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டித் தர 1992-93-ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை தெற்கு ஊராட்சியில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு 1992-93ல் வீடுகள் கட்டித்தர செயற்குறிப்பு ஏதும் இல்லை.

*விடை—10-3-1993 ஆம் நாளிட்டது.

30—

சின்னமனை ஆதிதிராவிடர்களுக்கு புதிய வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12607—திரு. ஆர் சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்ன மனை வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் 1992—93-ம் ஆண்டில் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், ஒன்றியம், சின்னமனை கிராமத்தில் வீடுமனை சம்மந்தமாக நிலத் தகராறு இருப்பதால் 1992—93-ல் நிதியாண்டில் வீடுகள் கட்ட செய்ற் குறிப்பு ஏதுமில்லை.

31—

புலியகுளம், டவுன்ஹால் மேல்நிலைத் தொட்டிகள்

வினா எண் 12838—திரு. வி. கே. லட்சுமணன். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சியில் புலியகுளத்திலும், மாநகராட்சி அலுவலக வளாகத்திலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் கட்டி முடிக்கப்பட்ட மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் பயன்படுத்தப்படாமலேயே இருப்பனத அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம், அறியும்.

*விடை—10—3—1993 ஆம் நாளிட்டது.

**விடை—11—3—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

(ஆ) 1. புலியகுளம் நீர்த்தேக்கத் தொட்டி :

இந்நீர்த்தேக்கத் தொட்டியில் காணப்பட்ட பழுதுகளை நிவர்த்தி செய்து 29—12—1992 முதல் அதிகபட்ச அளவிற்கு நீர் நிரப்பப்பட்டு, தற்போது நீர்க்கசிவு ஏதும் இல்லாமல் நல்ல நிலையில் உள்ளது. இந்நீர்த்தேக்கத் தொட்டியினை மாநகராட்சியிடம் ஒப்படைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2. மாநகராட்சி அலுவலக வளாகத்திலுள்ள டவுன்ஹால் நீர்த்தேக்கத் தொட்டி—

இந்நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு நீர் நிரப்பி பரிசோதனை செய்யும்பொழுது, தொட்டியில் சில இடங்களில் ஏற்பட்ட குறைபாடுகளினால் நீர்க்கசிவு ஏற்பட்டது. அக்குறைகளை நிவர்த்தி செய்து நீர்த்தேக்கத்தொட்டியை பயனுக்குக் கொண்டு வருவதற்கான பரிந்துரைகள் தொழில் நுட்ப ஆலோசகர்களிடமிருந்து பெறப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தொழில் நுட்ப குழுவின் பரிந்துரைக்கு அனுப்பியதில், தொழில் நுட்ப குழு இத்தொட்டியை குடிநீர் தொட்டியாகப் பயன்படுத்துவதற்கு பதிலாக கோவை மாநகராட்சியின் அலுவலக பதிவு அறையாக மாற்றிப்பயன்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்தது— எனவே, புதியதாக மாற்று நீர்த்தேக்க தொட்டி, மாநகராட்சியின் ஒப்புதலுடன் வேறு இடத்தில் கட்டுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

32—

மந்திரிப்பட்டிணத்தில் ஒரு துணை சுகாதார நிலையம்.

வினா எண். 13454: திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் மந்திரிபட்டிணத்தில் 1992—93ல் ஒரு துணை சுகாதார நிலையம் (Sub-Centre) அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

5000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் மக்கள் தொகை 760 மட்டுமே உள்ள மந்திரிப்பட்டிணத்தில் தனியாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு இல்லை. மந்திரிப்பட்டிணம் கிராமத்தை உள்ளடக்கிய 12 கிராமங்களுக்கு குப்பதேவன் என்ற கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. மந்திரிப்பட்டிணம் கிராமத்திற்கும் குப்பதேவன் துணை சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 2 கிலோ மீட்டரே யாகும்.

33—

நெல்லியடிக்காடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும் நீர்மூழ்கி மோட்டார்.

வினா எண் 14791—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நெல்லியடிக்காட்டில் இருக்கும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு 1992—93-ல் நீர்மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம்செயற்குறிப்பு உள்ளதா?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் மணக்காடு ஊராட்சியில் உள்ள நெல்லியடிக்காடு கிராம மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1988ஆம் ஆண்டு கட்டப்பட்டு 30000 லிட்டர் கொள்ளளவுடன் அப்பகுதி மக்களுக்கு தேவையான குடிதண்ணீரை வழங்கி வருகின்றது. இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தரை மட்டத்திலிருந்து 30 அடிக்கு உள்ளாகவே தண்ணீர் கிடைத்துவிடுவதால் நீர்மூழ்கி மோட்டார் அமைக்க வேண்டிய அவசியம் இல்லாததால் செயற்குறிப்பு ஏதுமில்லை.

***விடை—10—3—1993 ஆம் நாளிட்டது.**

1993 அக்டோபர் 26]

34—

கண்டியன்கொல்லை ஆதிதிராவிடர் மக்களுக்கு கூடுதல் கை பம்பு அமைத்துக் கொடுத்தல்.

வினா எண். 14797—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், தென் ஏரிப்புறக்கரை கண்டி, யன் கொல்லை ஆதிதிராவிடர் மக்களுக்கு கூடுதல் கைப்பம்பு அமைத்து குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள ஊராட்சியில் ஏரிப்புறக்கரை ஊராட்சியும் கண்டியன் கொல்லை ஆதிதிராவிடர் காலனியும் சேர்ந்தது ஆகும். ஏரிப்புறக்கரை ஊராட்சியைச் சார்ந்த கண்டியன் கொல்லை கிராமப் பகுதியில் சுமார் 100 குடும்பங்கள் தற்போது வசித்து வருகின்றனர். இவ்வூராட்சிக்கு தற்போது மகிழங்கோட்டை ஊராட்சி பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து அங்கிருந்து நீரேற்றப்பட்டு அதன் மூலம் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. ஊராட்சியின் பகுதியில் குடிநீருக்கு லாயக்கற்ற நீர் கிடைப்பதால் ஏற்கனவே கைப் பம்பு அமைக்கவில்லை. தற்போது 7 பீலிகள் அமைத்து குடி நீர் வழங்கப்பட்டு வருகிறது. போதுமான குடிநீர் வசதி இருக்கு தாலும் ஆழ்குழாய் கைப்பம்பு அமைத்தால் குடிநீரு லாயக்கற்ற நீர் கிடைக்கும் என்பதாலும் புதியதாக [illegible]ய் கைப்பம்பு அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

35—

உக்கிரன்கோட்டை குடிநீர் கிணற்றுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்.

வினா எண் 14987—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

*10—3—1993ஆம் நாளிட்டது.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியத்திலுள்ள உக்கிரன் கோட்டையில் உள்ள குடிநீர்க்கிணறாகிய ஊரணியில் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம், உக்கிரன்கோட்டையில் உள்ள குடிநீர் கிணறு என்று சொல்லப்படும் ஊரணியில் மக்கள் குடிநீர் எதுவும் எடுப்பதில்லை. மேலும் பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகின்றது. எனவே, மேற்படி ஊரணியில் நாலுப்பக்கமும் தடுப்புச்சுவர் கட்டும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

36—

பூவிருந்தவல்லி மாட்டு தீவனம் கூட்டுறவுச் சங்கம் நட்டத்தில் இயங்குதல்.

வினா எண் 10263—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லியிலுள்ள மாட்டுத்தீவனக் கூட்டுறவுச் சங்கம் நட்டத்தில் இயங்குகின்றதா ?

(ஆ) ஆம் எனில், நட்டத்தை ஈடுகட்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

*10—3—1993 ஆம் நாளிட்டது.

**13—4—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

(ஆ) 1990-91-ல் இந்த கூட்டுறவுச் சங்கத்தின் நிகர நட்டம் ரூ. 3,53,264.64 ஆக இருந்தது. கால்நடைத் தீவன உற்பத்தியை அதிகரித்து இந்த நஷ்டத்தைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1991-92-ல் 309.940 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து வியாபார இலாபம் ரூ. 29,169,43 ஈட்டியுள்ளது. சென்ற ஆண்டுகளின் நிகர நஷ்டத்தில் இவ்வாண்டு இலாபம் ரூ. 12,673.62 ஈடு செய்யப்பட்டு நிகர நட்டம் ரூ. 3,41,591 ஆக குறைக்கப்பட்டுள்ளது. உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் தொடர்ந்து இலாபம் ஈட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

37—

சேலம் நாச்சியப்பா கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியில் மாணவர் சேர்க்கையை அதிகரித்தல்.

வினா எண். 11558—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலுள்ள நாச்சியப்பா கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியில் மாணவர்களின் சேர்க்கை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சேலம் நாச்சியப்பா கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தில் 1989–90 ஆம் ஆண்டு 605 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 1990–91 மற்றும் 1991–92ஆம் ஆண்டுகளில் முறையே 650 மற்றும் 800 பயிற்சியாளர்களுக்கு ஷிப்டு முறையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. ஷிப்டு முறையில் பயிற்சி வகுப்புகள் நடத்துவதிலும், அதிக பயிற்சியாளர்களுக்கு ஷிப்டு முறையின்றி வகுப்புகள் நடத்துவதிலும், உள்ள நடைமுறைச் சிக்கல்களை கருத்திற்கொண்டு, 1992–93 ஆம் ஆண்டிற்கு பயிற்சியாளர்களின் எண்ணிக்கை 400 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இக்குறையை நிவர்த்தி செய்யும் முகத்தான் 1992–93ஆம்

* 19—4—1993ஆம் நாளிட்டது.

ஆண்டிலிருந்து இப்பயிற்சி நிலையத்தில் 591 நபர்களுக்கு அஞ்சல் வழி கூட்டுறவு பட்டயப் பயிற்சி அளிக்கப் படுகிறது.

38—

சித்துக்காட்டில் பால்வழங்கும் சங்கம்.

வினா எண் 12783—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சித்துக்காட்டில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சித்துக்காட்டில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைக்க யாரும் முன் வரவில்லை. ஆதலால் இப்பகுதியில் புதிதாக சங்கம் அமைக்க வாய்ப்புகள் ஏதும் இல்லை. எனவே, பேராவூரணி தொகுதி சித்துக்காட்டில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

39—

உளூர் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டிடம்

வினா எண் 12914—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, புதுக்கோட்டை உளூர் கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு 1992–93-ல் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை 10—3—1993ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

செயற்குறிப்பு ஏதுமில்லை.

40—

திருவத்தேவன் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டிடம்

வினா எண் 13604— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு 1992–93-ல் புதியக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

செயற்குறிப்பு ஏதுமில்லை.

41—

நிலவள வங்கி வட்டி, அபராத வட்டி தள்ளுபடி.

வினா எண் 15330—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலுவையிலுள்ள நிலவள வங்கியின் கடனுக்கான வட்டியையும் அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

***விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

இல்லை.

*விடை 9—3—1993 ஆம் நாளிட்டது.

**விடை—10—3—1993 ஆம் நாளிட்டது.

***விடை—23—3—1993 ஆம் நாளிட்டது.

42—

மின்மோட்டார் கடன் மீதான வட்டி தள்ளுபடி

வினா எண் 15331—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலுவையிலுள்ள மோட்டார் பம்பு செட்டுகளுக்கான விவசாயிகளின் கடனுக்கான வட்டி—அபராத வட்டிகளை தள்ளுபடி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. ஸ்ரீ. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

இல்லை.

43—

அரசு வேளாண் கல்லூரியில் இட ஒதுக்கீடு

வினா எண் 6076பி—திரு. வி.கே. லட்சுமணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

அரசு வேளாண் கல்லூரிகளில் Open Competition-ல் இடம் பெற்ற மாணவர்களில் Forward Community-யைச் சார்ந்தவர் எத்தனை சதவீதம்? Backward Community-யைச் சார்ந்தவர் எத்தனை சதவீதம்? தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எத்தனை சதவீதம் ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

I. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலம் இளநிலை (அறிவியல்) பட்டப் படிப்பிற்காக வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், தோட்டக்கலை, வனம் மற்றும் மனையியல் ஆகிய பாடப்பிரிவுகளில் மொத்தம் 582 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

*விடை—23—3—1993 ஆம் நாளிட்டது.

II. இங்ஙனம் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் 1992–93 ஆம் கல்வி ஆண்டில் மொத்தம் 555 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

வகுப்பு வாரியாக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :

பொதுப் போட்டிப் பிரிவு (OC)	156
பிற்பட்ட வகுப்பினர் (BC)	139
மிகவும் பிற்பட்ட வகுப்பினர் (MBC)	99
தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (SC)	94
பழங்குடியினர் (ST)	4
மைய அரசுக்கு ஒதுக்கப்பட்டவை	23
தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையில் பணிபுரியும் உதவி வேளாண்மை அலுவலர்களுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள்	40
மொத்தம் ..	555

III. இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பொதுப் போட்டிப் பிரிவின் கீழ் (Open Competition Category) 156 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இங்ஙனம் பொதுப் போட்டியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் வகுப்பு வாரியான மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் சதவிகிதம் கீழ்வருமாறு கொடுக்கப்பட்டது :—

	எண்ணிக்கை	சதவிகிதம்
முற்பட்ட வகுப்பினர்	24	15
பிற்பட்ட வகுப்பினர் ..	119	76.5
மிகவும் பிற்பட்ட வகுப்பினர் ..	11	7
தாழ்த்தப்பட்டவர்கள்	2	1.5
பழங்குடியினர் — ..	இல்லை	இல்லை
	156	

44—

பேராவூரணி உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகத்திற்குக் கட்டிடம்.

வினா எண் 15627—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்புள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

ஆம். பேராவூரணியில் அலுவலகம் கட்டித்தர மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தகுந்த நடவடிக்கையினை எடுத்து வருகின்றார். நிலம் கையகப்படுத்திய உடன் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

45—

கோயமுத்தூர் வடக்கு தாலுகாவிற்கு தனி உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகம்.

வினா எண் 16088—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் வடக்கு தாலுக்காவிற்கு உதவி வேளாண்மை இயக்குநர் தனியாக நியமித்து, தனி அலுவலகம் செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1993 அக்டோபர் 26]

46—

தருமபுரி மாவட்டத்தில் பலன் தரும் மரங்கள் நடுதல்.

வினா எண் 17411—திரு. கே.ஏ. மனோகரன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் பலன் தரும் மரங்கள் நடும் அரசுத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) மா மற்றும் சப்போட்டா இந்த ஆண்டு (1991-92) எவ்வளவு ஏக்கரில் பயிரிடப்பட்டது?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) தோட்டக் கலைத்துறையினரால் தருமபுரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட திட்டங்கள் மூலம் பலன் தரும் மரங்கள் நடப்படுகின்றன:

1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்.

2. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்.

3. நலிவடைந்த தோட்டங்களைப் புதுப்பிக்கும் திட்டம்.

4. கிராமப் புறங்களில் ஊட்டமிகு சத்துணவுமிக்க பழத் தோட்டம் அமைக்கும் திட்டம்.

5. வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மேற்படி திட்டங்கள் யாவும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். இனிவரும் ஆண்டுகளிலும் இத்திட்டம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு அதிக விவசாயிகள் பயனடைய ஏற்பாடு செய்யப்படும்.

(ஆ) தருமபுரி மாவட்டத்தில் 1991-92 ஆம் ஆண்டு மா 1737 ஏக்கரிலும், சப்போட்டா 63 ஏக்கரிலும் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

47—

தனியார் கம்பெனியில் உடல் ஊனமுற்றோர்க்கென குறிப்பிட்ட சதவிகித பணியிடங்கள் ஒதுக்குதல்.

வினா எண் 11666— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் கம்பெனிகளில் புதிதாக ஆள் எடுக்கும்போது உடல் ஊனமுற்றோர்க்கென குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

இல்லை.

எனினும் ஒவ்வொரு ஆண்டும் அதிகபட்சம் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் தனியார் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கும்வகையில் ஜனவரித் திங்கள், 26 ஆம் நாளில் 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அரசு விருது, நடப்பு ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

48—

தருமபுரி மாவட்டத்தில் செயல்படுத்தும் IFFAD திட்டம்.

வினா எண் 14517— திரு. கே.ஏ. மனோகரன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் செயல்படும் IFFAD திட்டத்தின் கீழ் இதுவரை செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் என்ன ?

(ஆ) இதனால் பயன் அடைந்த பயனாளிகள் எத்தனை பேர் ?

(இ) எந்த ஆண்டு வரை இந்தத்திட்டம் செயல்பட உள்ளது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

(அ) வேளாண்மை வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி நிறுவனத்தின் உதவியுடன் கிராமப் புற ஏழை மகளிர் பயனடையும் வகையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் தர்மபுரி மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், கல்வி, சிறு சேமிப்பு, குடும்ப நலம், வேளாண்மை, வேளாண் பொறியியல், தோட்டக் கலை, பட்டு வளர்த்தல், கால்நடை பராமரிப்பு, குடிசை/கிராமப்புறத் தொழில் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் ஜனவரி 1993 வரை வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் 13000 மகளிர் பயன் அடைந்துள்ளனர்.

(இ) 1996-97 வரை இத்திட்டம் செயற்பட உள்ளது.

49—

மட்டம்பட்டியில் குழந்தைகள் காப்பகம்.

வினா எண் 15887—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதி, மட்டம்பட்டியில் குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

சேலம் மாவட்டத்தில் தற்போது அரசு குழந்தைகள் காப்பகம் (ஆதரவற்ற குழந்தைகள் இல்லம்) சேலத்தில் ஒன்றும் ஆத்தூரில் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. எனவே சங்ககிரி தொகுதி, மட்டம்பட்டியில் அரசு குழந்தைகள் காப்பகம் ஆரம்பிக்க செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது இல்லை.

[1993 அக்டோபர் 26

50—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சீர்மரபினர் மாணவ மாணவியர் விடுதிகள்.

வினா எண் 16502—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சீர்மரபினர் மாணவ மாணவியர் விடுதிகள் எத்தனை?

(ஆ) பரமக்குடி தொகுதியில் சீர்மரபினர் விடுதிகள் ஆரம்பிக்க அரசுக்குப் பரிந்துரைகள் வந்துள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 11 சீர்மரபினர் மாணவர் விடுதிகளும், 4 சீர்மரபினர் மாணவியர் விடுதிகளும் உள்ளன.

(ஆ) ஆம்.

(பதின்மூன்றாம் பட்டியல்)

1—

செ. கந்தப்பன் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு டாக்டர் எம்.ஜி.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலை என்று பெயர் மாற்றம்.

வினா எண் 5168—திரு. கே. சிங்காரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், கோபாலபுரத்திலுள்ள செ. கந்தப்பன் கூட்டுறவு சர்க்கரை ஆலை என்பதை மாற்றி டாக்டர் எம்.ஜி.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலை என மாற்றப்படுமா?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதல் அமைச்சர் :

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், கோபாலபுரத்தில் உள்ள 'செ. கந்தப்பன் கூட்டுறவு சர்க்கரை ஆலையின்' பெயரை 'சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை' என மாற்றி 13—4—1993 நாளிட்ட அரசாணை நிலை எண் 139-ல் (தொழில்), அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

2—

விற்பனை வரியைத் திரும்ப அளிக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 14102—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சி அப்பளம் உரிமையாளர்களிடமிருந்து வெளி மாநில விற்பனை வரியை ரத்து செய்து 1988 ஆம் வருடம் வசூலித்த பணத்தை திரும்ப அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) :

இது தொடர்பாக அப்பள விற்பனையாளர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தடையாணைப் பெற்றிருப்பதால், வரிவிதிப்பு அதிகாரிகள் இறுதி வரிவிதிப்பு ஆணை வெளியிடுவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளார்கள். கேட்பு எதுவும் வரிவிதிப்பு அலுவலரால் விதிக்கப்படாத நிலையில் மத்திய விற்பனை வரியைத் தள்ளுபடி செய்வது என்ற கேள்விக்கே இடம் இல்லை.

3—

திரு. வி.க. நகரிலிருந்து திருவேற்காடு கருமாரியம்மன் கோயில் வரை துரித பேருந்து விடுதல்.

வினா எண் 9932—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகரிலிருந்து திருவேற்காடு கருமாரியம்மன் கோயில் வரை செல்ல துரித பேருந்து விடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

4—

இராமநாதபுரத்திலிருந்து செய்யாலூருக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுதல்.

வினா எண் 11875—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்திலிருந்து செய்யாலூருக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

செய்யாலூர் கிராமம் இராமநாதபுரம்—பரமக்குடி பிரதானச் சாலையில் இருந்து பிரிந்து 1.6 கி.மீ. தூரத்திலுள்ளது. அந்த கிராமத்தின் மக்கள் தொகை 1981 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 775 ஆகும். தற்சமயம் 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பேருந்து வசதி செய்யப்பட்டு வருகிறது. செய்யாலூர் கிராமத்தின் மக்கள் தொகை 1000-த்திற்கும் குறைவாக இருப்பதால் முன்னுரிமை அடிப்படையில் தற்சமயம் உடனடியாக பேருந்து வசதி செய்வதற்குரிய சாத்தியக் கூறுகள் இல்லை.

1993 அக்டோபர் 26]

5—

பட்டுக்கோட்டையிலிருந்து சீதாம்பாள்புரம் வரை பேருந்துத் தடத்தை நீட்டித்தர அரசு நடவடிக்கை.

வினா எண் 11953—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் இருந்து உதயசூரியபுரம் வழியாக பாலத்தளி துர்க்கையம்மன் கோவிலுக்குச் செல்லும் நகரப் பேருந்தை எண்ணாளிவயல் மணவயல் வழியாக சீதாம்பாள்புரம் வரை நீட்டித்தரவும் எட்டு சிங்கிளாக மாற்றி அமைக்கவும் 1992–93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை சீதாம்பாள்புரம் (வழி) பாலத்தளி தடத்தின் நீளம் 14 கி.மீ. பாலத்தளியில் இருந்து எண்ணாளி வயல் மணவயல் வழியாக சீதாம்பாள்புரம் வரை உள்ள சாலை குறுகலாக பழுதடைந்து பேருந்து இயக்க தகுதியற்றதாக உள்ளது. எனவே, பட்டுக்கோட்டை—பாலத்தளிவரை இயக்கப்படும் நகரப் பேருந்து தடத்தினை சீதாம்பாள்புரம் வரை நீட்டித்து இயக்க வாய்ப்பு இல்லை.

6—

பட்டாங்காடு வழியாக நகரப்பேருந்து விடுவதற்குத் திட்டம்.

வினா எண் 12415—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பட்டங்காடு வழியாக 1992–93-ல் நகரப் பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பேராவூரணி—பெருமகளூர் சாலயையில் பட்டங்காடு பிரிவு சாலையில் இருந்து 2. கி.மீ. தூரத்தில் பட்டங்காடு உள்ளது. இச்சாலை பழுதடைந்துள்ளது. பேருந்து இயக்க தகுதியற்றதாக உள்ளது. எனவே பட்டங்காடு வழியாக நகரப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

7—

பேராவூரணியிலிருந்து நேரிடையாக குற்றாலத்திற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடும் திட்டம்.

வினா எண் 12422—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் குற்றாலம் செல்ல திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

பேராவூரணியிலிருந்து அறந்தாங்கி, காரைக்குடி, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி வழியாக குற்றாலம் செல்லும் தடத்தின் நீளம் 417 கி. மீ. ஆகும். பேராவூரணியிலிருந்து குற்றாலத்திற்கு நேரிடையாகப் பேருந்து இயக்கும்படி எவ்வித கோரிக்கையும் பொதுமக்களிடமிருந்து பெறப்படவில்லை. மேலும் பேராவூரணியிலிருந்து குற்றாலத்திற்கு நேரிடைப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் விகிதாசாரம் மிகவும் குறைவாக இருக்கும் நிலையிலுள்ளது. எனவே, இத்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்குவது சாத்தியமில்லை.

1993 அக்டோபர் 26]

8—

பேராவூரணியிலிருந்து பெங்களூருக்கு சொகுசுப் பேருந்து விடுவதற்குத் திட்டம்.

வினா எண் 12424 —திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து பெங்களூருக்கு நெடுந்தூர சொகுசுப் பேருந்து விடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

இல்லை.

9—

பட்டுக்கோட்டையிலிருந்து பேராவூரணி செல்லும் பேருந்து நடைகளை அதிகரிக்கும் திட்டம்.

வினா எண் 12910—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் இருந்து பள்ளத்தூர்—பூவாணம் ஒட்டாங்காடு வழியாக பேராவூரணி செல்லும் நகரப் பேருந்தை 10 சிங்கிளாக இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

பேராவூரணி நகரப் பேருந்து தடம் எண். 4 பேராவூரணி பட்டுக்கோட்டை (வழி) ஒட்டாங்காடு, பூவாணம், பள்ளத்தூர் தடத்தில் 8 நடைகள் தற்போழுது இயக்கப்படுகின்றன. தற்பொழுது இயக்கப்படுகின்ற நடைகளே போதுமானதாக உள்ளதால் இத்தடத்தில் கூடுதல் நடைகள் இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

10—

செங்கமங்கலத்திற்கு நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை

வினா எண் 12975—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலத்திற்கு நகரப் பேருந்து (சோழன்) சென்று வர நடவடிக்கை எடுக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பேராவூரணி ஆவணம் கைகாட்டி சாலையில் பேராவூரணியில் இருந்து 4வது கி.மீ.-ல் செங்கமங்கலம் பிரிவு சாலை உள்ளது. இப்பிரிவு சாலையில் இருந்து 1. கி.மீ. தூரத்தில் செங்கமங்கலம் கிராமம் அமைந்துள்ளது. அரசு ஆணைபடி பேருந்து வசதி பெற்ற சாலையில் இருந்து 1. கி.மீ. தூரத்திற்குள் அமைந்துள்ள கிராமங்கள் பேருந்து வசதி பெற்றவையாகவே கருதப்படும். எனவே செங்கமங்கலத்திற்கு நகரப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

11—

முந்திரிக்காடு 'Reserve Forest''—ஐ ஊராட்சிக்கு ஒப்படைக்கும் திட்டம்

வினா எண் 13040—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பெரிய நாயகிபுரம் முந்திரிக்காட்டுப் பகுதியாக உள்ள Reserve Forest—ஐ மீண்டும் ஊராட்சிக்கு ஒப்படைக்க 1992-93ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை,

1993 அக்டோபர் 26]

12—

அல்லிக்குளம் வளாகத்தில் புதிய அங்காடி கட்டிடம்.

வினா எண் 2676—திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பூங்கா நகர் அல்லிக்குள வளாகத்தில் ஒரு புதிய அங்காடி கட்டப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சென்னை, பூங்கா நகர் அல்லிக்குள வளாகத்தில் சுமார் ரூபாய் 6.25 கோடி செலவில் அடித்தளம் மற்றும் மூன்று மாடிகளைக் கொண்ட ஒரு புதிய அங்காடிக் கட்டிடம் சென்னை மாநகராட்சியால் அனைத்து வசதிகளும் கொண்ட கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதன் மொத்தப் பரப்பளவு 14,152 சதுர மீட்டர். இக்கட்டிடத்தில் மொத்தம் 859 கடைகள் அமைக்கப்பட்டிருகின்றன.

13—

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்பவர்களுக்கு வயது உச்ச வரம்பு.

வினா எண் 11546—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு அலுலகத்தில் பதிவு செய்பவர்களுக்கு வயது வரம்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு வயது வரை பதிவு செய்யலாம்?

*விடை—17.4.1993 ஆம் நாளிட்டது.

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள மனுதாரர்களுக்கு உச்ச வயது வரம்பு எதுவும் அரசால் நிர்ணயிக்கப்படவில்லை. உச்ச வயது வரம்பு பற்றிய தடை ஏதுமின்றி மனுதாரர்கள் தங்களது பெயர்களை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம். ஆனால் வேலையளிப்பவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு காலியிடங்களின் எண்ணிக்கையைத் தெரிவித்து, மனுதாரர்களின் பட்டியல் கோரும்போது அவர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச வயது வரம்புக்கு உட்பட்ட மனுதாரர்கள் மட்டுமே (கல்வித்தகுதி, பதிவு மூப்பு, சாதி ஒதுக்கிடு ஆகியவற்றிற்குட்பட்டு) வேலையளிப்பவர்களுக்குப் பரிந்துரை செய்யப்படுவார்கள். அரசுத் துறைகளில் ஏற்படும் காலியிடங்கள் தெரிவிக்கப்படும்பொழுது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பணி நியமன உச்ச வயது வரம்புக்குட்பட்ட மனுதாரர் மட்டுமே (மேலே கூறப்பட்ட பிற தகுதிகளுக்குட்பட்டு) பரிந்துரை செய்யப்படுவார்கள்.

14—

பரமக்குடி அரசு தொழிற் கூடத்தின் அமைப்பளவு.

வினா எண் 16070—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்ளுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி அரசு தொழிற்கூடத்தில் உள்ள இடத்தின் அளவு, கட்டிடம் இருக்கும் பரப்பு எவ்வளவு?

(ஆ) உபயோகமில்லாமல் இருக்கும் மீதி இடத்தில் கல்லூரி ஆரம்பிக்க அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி அரசு தொழிற்கூடம் அமைந்துள்ள இடத்தின் அளவு 39.63 ஏக்கர். கட்டிடம் இருக்கும் பரப்பளவு 22,059 சதுர அடி.

(ஆ) இல்லை.

1993 அக்டோபர் 26]

15—

நாகப்பட்டினம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா எண் 16587— திரு. து. மூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்த கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்த கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

16—

இராமநாதபுரத்தில் அரசு மற்றும் தனியார் பெண்கள் தொழிற் பயிற்சி பள்ளிகளின் விவரங்கள்.

வினா எண் 16841—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பெண்கள் தொழிற் பயிற்சி பள்ளிகள் அரசு சார்பிலும் தனியார் துறையிலும் எத்தனை உள்ளன?

(ஆ) மேலும் புதிதாக ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மகளிருக்கான அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் ஏதும் இல்லை.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது 3 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றும் இயங்கி வருகின்றன. இவற்றில் பயிற்சியளிக்கப்படும் கட்டிடப் பட வரைவாளர் மற்றும் கம்மியர், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகிய தொழிற் பிரிவுகளில் மகளிரும் சேர்ந்து பயில இயலும். மேலும் தமிழ்நாட்டில் மகளிருக்கென 10 இடங்களில் தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்களில் ஆண்டுதோறும் சுமார் 1200 மகளிர் பயிற்சி பெற வாய்ப்புகள் உள்ளன. எனவே, மகளிருக்கென இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிற்பயிற்சி நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

17—

ஓசூரில் தொழிலாளர் நல உதவி ஆணையாளர் அலுவலகம் திறப்பதற்கு அரசு பரிசீலனை.

வினா எண் 17499—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூரில் தொழிலாளர் நல உதவி ஆணையாளர் அலுவலகம் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓசூரில் தொழிலாளர் நல உதவி ஆணையாளர் அலுவலகம் ஒன்றை திறக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

18—

விளாத்திக்குளம் தொகுதியில் ஆட்டுப்பண்ணை அமைக்கும் திட்டம்.

வினா எண் 3385—திருமதி என். சி. கனகவல்லி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

விளாத்திக்குளம் தொகுதியில் ஆடுகள் அதிகம் வளர்க்கப்படுவதால் இங்கு ஆட்டுப் பண்ணை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை.

19—

மேநல்லூர் கால்நடை மருத்துவக்கிளை நிலையம் மூடிக் கிடப்பதை திறப்பதற்கு அரசு நடவடிக்கை.

வினா எண் 5027—திரு. அ. தேவராஜ்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, வெண்பாக்கம் ஒன்றியம், மேநல்லூர் கிராமத்தில் கடந்த ஒரு வருடமாக கால்நடை மருத்துவக்கிளை நிலையம் மூடிக்கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வெண்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் மேநல்லூர் கிராமத்தில் இயங்கி வந்த கால்நடை நிலையத்தின் கால்நடை ஆய்வாளர் பதவியினை ஐரோப்பிய பொருளாதார சமூக திட்டத்திற்கு மாற்றப்பட்டதால் மேற்படி கிளை நிலையம் மூடப்பட்டது. ஆனால், மேநல்லூர் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு பெருங்களத்தூர் கால்நடை கிளை நிலைய ஆய்வாளரால் வாரத்தில் இரண்டு நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

[1993 அக்டோபர் 26

20—

நத்தம் தொகுதியில் கால்நடை மருந்தகங்கள் அமைக்கும் திட்டங்களின் விவரங்கள்.

வினா எண் 5712—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியப் பகுதிகளில் உள்ள எந்தெந்த ஊராட்சிகளில் கால்நடை மருந்தகம் அமைக்க ஊராட்சிகளால் நிலம் ஒதுக்கித் தரப்பட்டுள்ளன?

(ஆ) அவற்றில் கால்நடை மருந்தகம் கட்டும் பணிகள் எப்போது துவங்கும்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) செந்துறை கால்நடை மருந்தகத்திற்கு ஒரு ஏக்கர் நிலம் கட்டிடம் கட்ட நத்தம் ஊராட்சி ஒன்றியத்தினரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிலம் கால்நடைப் பராமரிப்புத்துறைக்கு வழங்கப்படவில்லை. சாணார்பட்டி ஒன்றியப்பகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்க நிலம் ஏதும் வழங்கப்படவில்லை.

(ஆ) நிலம் கால்நடைப் பராமரிப்புத்துறைக்கு வழங்கப்பட்டவுடன் செந்துறை கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம் கட்டும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

21—

குறிச்சி பஞ்சாயத்தில் கால்நடை மருத்துவமனை கட்டும் திட்டம்.

வினா எண் 5736—திரு. எம்.எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம் குறிச்சி பஞ்சாயத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மயிலாடுதுறை ஒன்றியம் குறிச்சி பஞ்சாயத்தில் கால்நடை மருத்துவமனை ஏதும் செயல்படவில்லையென்பதால், கட்டிடம் கட்டும் பணி குறித்து நடவடிக்கை ஏதும் இல்லை.

22—

பெரியகரம் கால்நடை கிளை மருந்தகத்தை மீண்டும் துவக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 6175—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பெரியகரம் பகுதியில் கால்நடை கிளை மருந்தகத்தை மீண்டும் தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) கால்நடை ஆய்வாளர் பதவி இல்லாமையால், பெரியகரம் கிராமத்தில் கிளை நிலையம் முழுநேரம் இயங்காமல் உள்ளது. எனினும், பெரியகரம் கிராமத்திற்கு அருகாமையிலுள்ள வடபாதிமங்கலம் கால்நடை கிளை நிலைய ஆய்வாளர், பெரிகரம் கால்நடை கிளை நிலையத்தினைக் கூடுதல் பொறுப்பு வகித்து, வாரம் இருமுறை பெரியகரம் கிளை நிலையப் பணிகளைக் கவனித்து வருகிறார்.

(ஆ) புதிய பதவிகள் தோற்றுவிப்பதற்கு அரசின் தடை நீங்கிய பின்னர், பெரியகரம் கால்நடை கிளை நிலையத்தில் கால்நடை ஆய்வாளர் பதவி தோற்றுவித்து முழுநேர கிளை நிலையமாக அது செயல்படுத்தப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 அக்டோபர் 26

23—

சின்ன ஆவுடையார் கோவிலில் துணை கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

வினா எண் 6906—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்ன ஆவுடையார் கோவிலில் ஒரு துணை கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை.

24—

துணை மருத்துவமனையை மருத்துவமனையாக மாற்றல்.

வினா எண் 7270—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு கால்நடை துணை மருத்துவமனையை மருத்துமனையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை.

25—

ஆவணம் கால்நடை மருத்துவமனைக்கு கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா எண் 8146—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆவணம் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆவணம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் உள்ளது. கால்நடை மருத்துவமனைக் கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

26—

பசுவதை செய்வதைத் தடுக்க சட்டம் கொண்டுவரும் திட்டம்.

வினா எண் 8725—திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து பசுவதை செய்ய கேரளாவிற்குக் கொண்டு செல்வதைத் தடுக்க சட்டம் கொண்டு வரும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கு .ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

27—

கால்நடை மருந்தகம் அமைத்தல்.

வினா எண் 10592—திரு. கே. ஆர். முருகானந்தம்; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகெங்கை தொகுதியில் தமராக்கி கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தற்போது செயற்குறிப்பு இல்லை.

(ஆ) வரும் ஆண்டுகளில் சிவகெங்கை தொகுதி, தமராக்கி கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக் கூறுகள் இருப்பின், தகுதியின் அடிப்படையில் மேற்கண்ட கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப் படும்.

28—

இடைய குறிச்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

வினா எண் 10609—திரு. ஆர். தங்கராசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம், தொகுதி இடையகுறிச்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கால்நடை மருத்துவமனை எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஆண்டிமடம் தொகுதி, இடையக் குறிச்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க தற்போது நிலுவையில் செயற்குறிப்பு இல்லை. இதற்குச் சாத்தியக்கூறுகள் இருப்பின் தகுதியின் அடிப்படையில் இனிவரும் ஆண்டுகளில் மேற்கண்ட கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

29—

பரமக்குடி தொகுதியிலுள்ள தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் விவரங்கள்.

வினா எண் 10809—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வோளண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதியில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் எத்தனை?

(ஆ) நலிவடைந்து மூடப்பட்டு, இன்னும் இயங்காத மற்றும் மீண்டும் இயங்கிய சங்கங்கள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் ஆகஸ்ட் 1992 முடிய மொத்தம் 91 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. அவற்றில் 40 சங்கங்கள் செயலிழந்துள்ளன.

(ஆ) 31-8-1992 முடிய செயலிழந்ததால் கலைக்கப்பட்ட சங்கங்கள் 27. இவற்றில் 1-4-1992 முதல் 31-8-1992 முடிய 4 சங்கங்கள் புத்துயிரூட்டப்பட்டுள்ளன.

30—

வெட்டன் விடுதியில் கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 16857—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி வெட்டன்விடுதியில் வாடகை கட்டிடத்தில் இயங்கும் கால்நடை மருந்தகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் கால்நடை மருந்தகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம், தனது பங்குத் தொகையினை வழங்கினால் நிரந்தரக் கட்டிடம் கட்டப்படும்.

31—

குடிசைப்பகுதி மாற்று வாரியம் மேம்பாட்டுத்திட்டங்களின் விவரங்கள்.

வினா எண். 6499—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகவங்கி வழங்கிய ஆலோசனைகளின்படி தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் திட்டமிட்ட மேம பாட்டுத்திட்டங்கள் என்னென்ன?

(ஆ) அத்திட்டங்களை நிறைவேற்ற உலகவங்கி எவ் வகையில் எவ்வளவு நிதி உதவி வழங்கியது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

(அ) உலகவங்கி நிதியுதவியுடன் சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-I மற்றும்-II நிறை வேற்றப்பட்டன. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் தற்போது நிறை வேற்றப்பட்டு வருகிறது.

(ஆ) சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம்–I, உலக வங்கியின் கடனுதவியுடன் 1977 முதல் 1982 வரை செயல் படுத்தப்பட்டு ரூபாய் 443.65 இலட்சம் செலவில் 24,862 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்—II உலகவங்கியின் கடனுதவி யுடன் 1982 முதல் 1988 வரை ரூபாய் 27.80 கோடி செலவில், 50.000 குடும்பங்கள் பயனடைந் துள்ளன. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 1988 முதல் ரூபாய் 46.40 கோடி திட்ட மதிப்புடன் துவங்கப் பட்டது. இதில், உலகவங்கியின் கடனுதவி ரூபாய் 18,050 கோடி ஆகும். இத்திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து 30–9–1992 வரை ரூ. 540.96 இலட்சம் உலக வங்கியிடமிருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளது.

32—

நத்தம் தொகுதியில் வீடுகட்டுவதற்கு கிராம வீட்டுவசதி சங்கங்களின் மூலம் வழங்கப்பட்ட கடன்களின் விவரங்கள்.

வினா எண் 8938—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

(அ) நத்தம் தொகுதியில் எந்தெந்த கிராமங்களில் எத்தனை பேர்களுக்கு வீடுகட்ட கிராம வீடுகட்டும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 1988-89 முதல் 1991-92 ஆம் ஆண்டு ஜனவரி வரையில் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) விண்ணப்பித்தும், இன்னும் எவ்வளவு பேர்களுக்கு எந்தெந்த கிராமங்களில் இதுவரை கடன் வழங்கப்படாமல் உள்ளது?

(இ) இதற்கான காரணம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நத்தம் தொகுதியில் 1988-89 முதல் 1991-92 ஆம் ஆண்டு வரை வீடுகட்ட கிராம வீட்டுவசதி சங்கங்களின் மூலம் வழங்கப்பட்ட கடன்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மூலம் வழங்கப்பட்ட கடன்.

வருடம்.	கிராமத்தின் பெயர்.	கடன் மனு பெறப்பட்டது.	வழங்கப்பட்ட கடன்.	நிலுவை.
(1)	(2)	(3)	(4)	(5)
1988-89 :	..	கடன் ஏதும் வழங்கப்படவில்லை.		
1989-90	1 கோபால்பட்டி	..	..	..
	2 மருநூத்து	26	19	7
	3 இராஜக்காப்பட்டி	29	19	10
	4 பூவக்கிழம்பட்டி	27	19	8
	5 வலசுபட்டி	23	22	1
1990-91				
	6 கோபால்பட்டி	1	1	..
	7 ராமராஜபுரம்	4	4	..
	8 சாணார்பட்டி	1	1	..
1991-92				
	9 கோணப்பட்டி	27	14	13
	10 அஞ்சுகுமிப்பட்டி	11	3	8

நத்தம் வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட் மூலம் வழங்கப்பட்ட கடன்கள் விவரம்.

வருடம்.	கிராமத்தின் பெயர்.	கடன் மனு பெறப் பட்டது.	வழங்கப் பட்ட கடன்.	நிலுவை.
(1)	(2)	(3)	(4)	(5)
1988–89—				
	1. வேலாயுதம்பட்டி	39	28	11
	2. மல்லநாயக்கன்பட்டி	22	22	..
	3. பெரியூர்பட்டி	6	6	..
	4. குரும்பப்பட்டி	2	2	..
	5. ஏரக்காபட்டி	11	10	1
	6. ஆவிச்சிப்பட்டி	11	8	3
	7. சேர்வீடு ..	18	18	..
	8. நடுவனூர் ..	4	2	2
	9. புன்னப்பட்டி	19	19	..
	10. பண்ணியாமலை	26	20	6
	11 காசம்பட்டி ..	22	15	7
	12. ரெட்டியப்பட்டி	5	5	..
	13. கோமனாம்பட்டி	11	11	..
1989–90—				
	14. பன்னியமலை ..	2	..	2
	15. லிங்கவாடி ..	1	..	1
	16. சாத்தாம்பாடி	11	11	..
	17. கோமனாம்பட்டி	19	18	1
	18. விளாம்பட்டி ..	23	23	..

1993 அக்டோபர் 26]

(1)	(2)	(3)	(4)	(5)
1988-89—தொடர்ச்சி.				
19.	கவரயப்பட்டி	20	8	12
20.	பாலப்பநாயக்கன் பட்டி	20	20	..
21.	தேத்தாம்பட்டி	9	9	..
22.	மதுக்காரம்பட்டி	14	14	..
23.	நடுவானூர் ..	3	3	..
24.	ப. புதூர் ..	9	9	..
25.	பள்ளப்பட்டி ..	1	..	1
26.	பெரியூர்பட்டி	5	5	...
27.	உலுப்பகுடி ..	10	10	..
28.	இடையப்பட்டி	11	11	..
29.	ரெங்கன்சேர்—வைக்காலன்பட்டி	1	1	0
30.	சித்திரைக் கவுண்டர்பட்டி—	8	7	1
1989-90—				
31.	செந்துரை ..	3	2	1
32.	நல்லபிச்சன்பட்டி	1	..	1
33.	கோடிக்கன்பட்டி	5	..	5
34.	சமுத்திராப்பட்டி	9	9	..
35.	வேம்பரளி ...	5	5	..
36.	களத்துப்பட்டி	7	7	..
37.	ஊராணிப்பட்டி	11	9	2

(1)	(2)	(3)	(4)	(5)
1989-90—தொடர்ச்சி.				
38.	பூதகுடி ..	10	10	..
39.	மல்லநாயக்கன்பட்டி	4	4	..
40.	சேர்வீடு ..	10	10	..
41.	கோட்டையூர்	5	5	..
42.	கோசுகுறிச்சி ..	9	9	..
43.	மலையூர் ..	12	12	..
44.	புதுக்கோட்டை	10	10	..
45.	ரெட்டியப்பட்டி	10	10	..
46.	முலையூர் ..	14	14	..
47.	ஆவிச்சிப்பட்டி	2	2	..
48.	சிங்கவாடி ..	1	1	..
49.	பன்னியாமலை	1	1	..
1990-91—				
50.	அழகாபுரி ...	8	7	1
51.	ஆவிச்சிப்பட்டி	20	15	5
52.	உலுப்பகுடி ..	32	2	30
53.	பன்னியாமலை	9	2	7
54.	வேலாயுதம்பட்டி	31	8	23
55.	காசம்பட்டி ..	30	3	27
56.	எஸ். தேத்தாம் பட்டி	24	18	6
57.	மஞ்சநாயக்கன் பட்டி	8	8	..
58.	பண்ணுவார்பட்டி	7	5	2

1993 அக்டோபர் 26]

(1)	(2)	(3)	(4)	(5)
1990-91—தொடர்ச்சி.				
59.	கம்பிளியம்பட்டி	1	1	—
60.	குரும்பபட்டி ..	9	1	8
61.	கோமணாம்பட்டி	39	8	31
62.	சின்னயம்பட்டி	21	10	11
63.	சிறுகுடி ..	7	5	2
64.	சமுத்திராப்பட்டி	11	2	9
65.	நல்லூர் ..	5	4	1
66.	பூசார்பட்டி ..	19	19	..
67.	ஒடுகம்பட்டி ..	9	2	7
68.	லிங்கவாடி ..	72	30	42
69.	கருத்தலக்கம்பட்டி	5	4	1
70.	சேர்வீடு ..	51	11	40
71.	செந்துறை ..	4	1	3
72.	வத்திபட்டி ..	1	1	—
73.	ஊராளிப்பட்டி	19	18	1
74.	மதுக்காரம்பட்டி	11	3	8
75.	அரவங்குறிச்சி	2	1	1
76.	சொறிப்பாறைபட்டி	25	25	—
77.	வேப்பம்பட்டி	3	2	1
78.	கோட்டைப்பட்டி	6	5	1
79.	ஏரக்காபட்டி	5	4	1
80.	திருநாத்துப்பட்டி	10	10	..

(1)	(2)	(3)	(4)	(5)
1990-91—தொடர்ச்சி.				
81.	சேத்தூர் ..	10	7	3
82.	பி. நத்தம் ..	8	8	—
83.	பாண்டி நகர் ..	5	—	5
84.	புதுக்கோட்டை	2	—	2
85.	மதுக்காரன்பட்டி	2	—	2
86.	பாலப்ப நாயக்கன்பட்டி	7	—	7
87.	நல்லகண்டம்	8	—	8
88.	பூதகுடி ..	9	—	9
89.	நரசிம்மபுரம் ..	6	—	6
90.	மல்லநாய்க்கன்பட்டி	8	—	8
91.	குட்டுப்பட்டி ..	1	—	1
92.	நல்லகண்டம்	2	—	2
93.	புதூர் காலனி	25	—	25
94.	சின்னமலையூர் வலசு	10	—	10
95.	ராவுத்தன்பட்டி	10	—	10
96.	மநத்குளத்துப்பட்டி	7	—	7
97.	வேலம்பட்டி	1	—	1
98.	எட்டியம்பட்டி	1	—	1
99.	சங்கரலிங்கபுரம்	1	—	1
100.	வேலூர் ..	8	—	8
101.	நடுவனூர் —	5	—	5

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

(1)	(2)	(3)	(4)	(5)
102.	மொட்டமலைப் பட்டி	1	..	1
103.	பெரியூர்பட்டி	10	..	10
104.	பஞ்சயம்பட்டி	16	..	16
105.	லட்சுமணபுரம்	11	..	11
106.	புனப்பட்டி ..	22	..	22
107.	ரெட்யப்பட்டி	17	..	17
108.	பட்டணம்	3	..	3
109.	சேத்தூர் ..	1	..	1
110.	திரையூர் ..	1	..	1
111.	மாமரத்துப்பட்டி	1	..	1
112.	சின்னமுறையூர்	17	..	17
113.	கட்டபுலிப்பட்டி	1	..	1
114.	புதுக்கோட்டை	11	..	11
115.	ராசகோபாலபுரம்	8	..	8
116.	சடையம்பட்டி	13	..	13
117.	வேம்பரளி ..	9	..	9
118.	எரமநாயக்கன்பட்டி	5	..	5
119.	பள்ளப்பட்டி ..	6	..	6
120.	கென்வார்பட்டி	1	..	1
121.	சாத்தாம்பாடி	15	..	15
122.	விளாம்பட்டி ..	12	..	12
123.	கோவில்பட்டி..	5	..	5

(1)	(2)	(3)	(4)	(5)
124.	செல்வப்ப நாயக்கன்பட்டி	8	..	8
125.	மாமரத்துப்பட்டி	1	1	..
126	புதூர்	1	1	—
127.	ரெங்கையன் சேர்வைகாரன்பட்டி	1	1	..
128.	சின்னையம்பட்டி	2	2	..
129.	ஊராளிபட்டி	1	1	...
130.	எஸ். தேத்தாம்பட்டி	1	1	..
131.	பன்னியாமலை	1	1	..
132.	வேம்பரளி ..	1	1	..
133.	ஒடுகம்பட்டி —	1	1	...
134.	அரவங்குறிச்சி	1	1	...
135.	கோட்டப்பட்டி	2	—	2
136.	குட்டுப்பட்டி	1	..	1
137.	சேர்வீடு —	1	—	1

1988–89

1989–90

138.	லிங்கவாடி	1	1	—
139.	பன்னியாமலை	1	1	—

1990–91

140.	மாமரத்துப்பட்டி	1	1	...
141.	புதூர் ..	1	1	—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)
1990-91—தொடர்ச்சி.				
142.	ரெங்கையன் சேர்வைகாரன்பட்டி	1	1	..
143.	சின்னையம்பட்டி	2	2	..
144.	எஸ். தேத்தாம்பட்டி	1	1	..
145.	பன்னியாமலை	1	1	..
146.	வேம்பரளி	1	1	..
147.	ஊராளிப்பட்டி	1	1	..
148.	ஒடுகம்பட்டி	1	1	..
149.	அரவங்குறிச்சி	1	1	..
150.	கோட்டப்பட்டி	2	—	2
151.	குட்டுப்பட்டி	1	..	1
152.	சேர்வீடு ..	1	..	1
1991-92				
153.	லிங்கவாடி	25	25	..
154.	எல். மலையூர்	10	10	..
155.	ரவுதன்பட்டி	9	9	..
156.	துவரப்பட்டி	32	12	20
157.	பூதகுடி ..	8	8	..
158.	குட்டூர் ..	6	6	..
159.	கோமனம்பட்டி	14	12	2!
160.	பரலிபுதூர் ..	15	5	10
161.	உரலிப்பட்டி	41	40	1
162.	நைனா கவுண்டம்பட்டி.	3	3	..

(1)	(2)	(3)	(4)	(5)
1991-92—தொடர்ச்சி.				
163.	ராக்கம்பட்டி	2	2	..
164.	உளுப்பகுடி ...	16	16	..
165.	பெரியமுலையூர்	8	8	..
166.	காரையூர் ...	7	7	..
167.	என். பூதுப்பட்டி	11	11	..
168.	புதுக்கோட்டை	12	2	10
169.	சிறுகுடி ...	9	9	..
170.	பூசாரிப்பட்டி	3	3	..
171.	நல்லகண்டம்	1	1	..
172.	செந்துரை ...	1	1	..
173.	எஸ். குரும்பப்பட்டி	4	4	..
174.	செங்குளம்	1	1	..
175.	அவிச்சிப்பட்டி	24	4	20
176.	சின்னமுதலையூர்	8	8	..
177.	கசம்பட்டி ...	5	5	..
178.	பாலப்ப நாயக்கன்பட்டி	5	5	..
179.	சொரிபரையப்பட்டி	7	1	6
180.	சமுத்திரபதி	4	4	...
181.	மாம்பட்டி	4	4	..
182.	சதம்பாடி ..	1	1	..
183.	சேர்வீடு ..	48	23	25
184.	புன்னைப்பட்டி	35	..	35

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

(1)	(2)	(3)	(4)	(5)
1991-92—தொடர்ச்சி				
185.	கருதலக்கம்பட்டி	10	..	10
186.	ரெட்டிப்பட்டி	10	..	10
187.	செந்துரை	4	..	4
188.	பஞ்சம்பட்டி	5	..	5
189.	பள்ளப்பட்டி	6	..	6
190.	மஞ்சநாயக்கன்பட்டி	8	..	8
191.	எஸ். கோவிபட்டி	15	..	15
		1,795	956	850

1988–89 முதல் 1991–92 ஆம் ஆண்டு வரை மேற்கூறிய இரண்டு சங்கங்களின் மூலம் மொத்தம் பெறப்பட்ட மனு, வழங்கப்பட்ட கடன் மற்றும் நிலுவையிலுள்ள மனுக்களின் எண்ணிக்கை :—

மொத்தம் பெறப்பட்ட மனுக்கள் ..	1944	(149+1,795)
மொத்தம் வழங்கப்பட்ட கடன்கள் ..	1,058	(102 + 956)
மொத்த நிலுவையிலுள்ள மனுக்கள் ..	897	(47 + 850)

(இ) ஒவ்வொரு ஆண்டிற்கும் நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டு அளவிற்கே கடன் மனுக்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு அனுமதிக்காக பரிந்துரைக்கப்படுகிறது. 1988-89 ஆண்டு முதல் ஆண்டுதோறும் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 30,000 வீடுகள் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் மூலம் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இவ்இலக்கினை தமிழ்நாட்டில் உள்ள 165 வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. ஹட்கோ நிறுவனத்திலிருந்து நிதி பெறுதலின் பற்றாக்குறை காரணமாக இவ் இலக்கினை அதிகரிக்க இயலவில்லை. எனவே, எல்லா வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களிலும் காத்திருப்போர் பட்டியலில் நிலுவை அதிகரித்துக் கொண்டு இருக்கிறது.

33—

சேலம் நகரில் குடிசை மாற்று வாரிய காலனிகள் பராமரிக்க அரசு நடவடிக்கை.

வினா எண். 10089—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரில் நேரு நகர் உட்பட ஆறு தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய காலனிகள் பராமரிக்காமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த காலனிகளை பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சேலம் நகரில் நேரு நகர் உட்பட மொத்தம் 9 குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பராமரித்து வருகிறது. இக்குடியிருப்புகளை பராமரிப்பதற்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 1992-93 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 4 இலட்சம் செலவு செய்ய நிதி ஒதுக்கியுள்ளது. இது தவிர, மேற்கொண்டு நிதி ஒதுக்குவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

34—

கோவை மாநகராட்சியில் குடிசை மாற்று வாரியத்தால் அடுக்கு மாடி வீடு கட்டுவதற்கு அரசு நடவடிக்கை.

வினா எண் 14115—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சியில் குடிசை மாற்று வாரியத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பாலசுப்பிரமணியம் நகர், அம்மன் நகர் ஆகிய பகுதிகளில் அடுக்கு மாடி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயல் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் பாலசுப்ரமணியம் நகர் பகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டும் திட்டம் இல்லை. ஆனால், கோவை அம்மன் நகர் அமைந்துள்ள அம்மன்குளம் பகுதியில் உள்ள அரசுக்கு சொந்தமான காலி நிலங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மாடிக் குடியிருப்புகள் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி நிலங்களை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு மாற்றித் தர பொதுப்பணித் துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் கூட்டு ஆய்வு செய்த பின் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு நில மாற்றம் செய்த பின்னர், ஹட்கோவின் கடன் உதவி பெற்று, கட்டுமானப் பணிகள் துவங்க வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

35—

சின்னவேடம்பட்டி குளத்தில் வீடு கட்டுவதற்கு அரசு திட்டம்.

வினா எண் 14119—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் சின்னவேடம்பட்டிக் குளத்திற்கு அருகில் வீடுகள் கட்ட நிலம் கையகப்படுத்தும் திட்டத்தைக் கைவிட்டு வேளாண்மைக்குப் பயனற்ற போத்தனூருக்கும் செட்டிபாளையத்திற்கும் இடையிலுள்ள நிலங்களைக் கையகப் படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்

கோவை மாவட்டத்தில் சின்னவேடம்பட்டி குளத்திற்கு அருகில் வீடுகள் கட்ட நிலம் கையகப்படுத்தும் திட்டம் உள்ளது. அதைக் கைவிட்டுவிட்டு போத்தனூருக்கும் செட்டிப்பாளையத்திற்கும் இடையில் உள்ள நிலங்களை கையகப்படுத்தும் செயற் குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

36—

பரமக்குடியில் வீடுகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை

வினா எண் 14862—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டுவசதி வாரியம் மூலம் பரமக்குடியில் வீடுகள் கட்ட இடம் வாங்கப்பட்டுள்ளதா?

(ஆ) இதற்காக ஒதுக்கிய தொகை எவ்வளவு?

(இ) எந்த ஆண்டு கட்டி முடிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ), (ஆ) மற்றும் (இ) பரமக்குடி பகுதியில் ரூ 9,65,900 செலவில் 14.56 ஏக்கர் நிலம் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது அந் நிலம் கிடைக்கப்பெற்ற பின்னர் வீட்டுவசதி திட்டம் செயல் படுத்தப்படும்.

37—

பரமக்குடி கிராம வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தின் மூலம் ஆதி திராவிடர்களுக்கு கடன் வழங்குதல்

வினா எண் 14863—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி கிராம வீடுகட்டும் கூட்டுறவு சங்கத்தின் சார்பில் 1991-92-ல் ஆதி திராவிட மக்களுக்கு கொடுக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

(ஆ) அதில் அரசின் தள்ளுபடித் தொகை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி கிராம வீடுகட்டும் கூட்டுறவு சங்கத்தின் சார்பில் 1991–92–இல் ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கட்ட கடனாக ரூ. 3,36,000-ம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அரசு மானியமாக ரூ. 72,000-ம் வழங்கப்பட்டுள்ளது தள்ளுபடித் தொகை எதுவும் வழங்கப்படவில்லை.

38—

செல்வசிந்தாமணியில் குடிசை மாற்று வாரியம் வீடு கட்டுவதற்கு அரசு நடவடிக்கை

வினா எண் 15154— திரு. சே. செல்வராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயமுத்தூர் செல்வசிந்தாமணி குளம் பகுதியில் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடு கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

கோவை செல்வசிந்தாமணி குளம் திட்டப் பகுதிக்கான நிலம் மாவட்ட ஆட்சியரால் இன்னும் தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு ஒப்படைக்கப்படவில்லை. இந்நிலம் வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டவுடன் கட்டுமானப் பணிகள் துவங்கப்படும்.

39—

அரசு அலுவலகங்களில் பணிபுரியும் ஆண்களுக்கு விடுதி கட்டும் திட்டம்

வினா எண் 15638— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடு துறை நகரில் வெளியூர்களில் இருந்து வந்து அரசு அலுவலகங் களில் பணிபுரியும் ஆண்களுக்கு விடுதி ஒன்றினைக் கட்டித்தர 1992—93-ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

இல்லை.

40—

சங்ககிரியில் அரசு ஊழியர்களுக்கு வாடகை குடியிருப்புகள் கட்டி வழங்குதல்

வினா எண் 15895—டாக்டர் வ. சரோஜா : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் கீழ் எந்தெந்தப் பணிகள் எங்கெங்கு செயல்படுத்தப்பட்டுள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

சங்ககிரியில் வாரியம் இதுவரை அரசு ஊழியர்களுக்கான வாடகை வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 60 குடியிருப்புகளும், வருவாய் கோட்ட அதிகாரி மற்றும் தாசில்தார் ஆகியோருக்கு தலா ஒரு குடியிருப்பும் கட்டி முடித்துள்ளது. மேலும் சங்க கிரியில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான வீட்டமைப்பு திட்டத்தின் கீழ் மனை ஆர்ஜிதப் பணிகள் நடைபெற்று வரு கின்றன.

41—

இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 15909—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு குடியிருப்புகள் உள்ள நகரங்கள் என்னென்ன ?

(ஆ) வேறு ஊர்களில் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) தற்சமயம் இராமநாதபுரம் மற்றும் இராமேஸ்வரத்தில் அரசு வாடகைக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) கீழ்க்காணும் ஊர்களில் அரசு வாடகைக் குடியிருப்புகள் கட்ட திட்டமுள்ளது.

(1) திருவாடானையில் 42 குடியிருப்புகள். இதற்கான நில மாற்றம் உத்திரவு, நில நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

(2) கமுதியில் 24 குடியிருப்புகள். இதற்கான ஒப்பந்தப் புள்ளி கேட்கப்பட்டுள்ளது.

(3) முதுகுளத்தூரில் 24 குடியிருப்புகள். இதற்கான ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்டுள்ளது.

(4) பரமக்குடியில் 120 குடியிருப்புகள். இதற்காக நிலம் இன்னும் கையகப்படுத்தவில்லை.

42—

மாவட்டந்தோறும் பத்திரிக்கை நிருபர்களுக்கு வீடு கட்டுதல்

வினா எண் 15917—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள பத்திரிகை நிருபர்களுக்கும் வீடு கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

ஆ) ஆம் எனில், மாவட்ட வாரியாக விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இல்லை.

43—

கோயம்புத்தூரில் பலமாடி நவீன வீடுகள் கட்ட அரசு திட்டம்.

வினா எண் 16092— திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் புதிதாக நவீன நகர் அமையும் விதத்தில் பல மாடி நவீன வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது எங்கு கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

44—

கோயம்புத்தூர் பகுதியில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடு கட்டும் திட்டம்

வினா எண் 16093— திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் கோவைபுதூர் பகுதியில் மீண்டும் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு வீடுகள் கட்டப்படும்?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

45—

சங்ககிரியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் அமைத்தல்

வினா எண் 16289—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் அமைக்க அரசு 1992—93 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்குமா ?

விடை:—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் திட்டத்தின் முதற் கட்டத்தில் சங்ககிரியில் தேவைக் கணிப்பு செய்யப்பட்டு 553 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. வீட்டு வசதித் தேவை இருப்பினும் அதற்கான நிலம் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. சங்ககிரியில் நில ஆர்ஜிதம் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

46—

கோயம்புத்தூரில் வீட்டுவசதி வாரியத்தின் பழைய வீடுகளை பழுது பார்க்க அரசு நடவடிக்கை

வினா எண் 16330—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள பழைய வீடுகளுக்கு பழுதுபார்க்க நிதி ஒதுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நிதி எந்தெந்த பகுதிக்கு ஒதுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக அரசு ஊழியர்களுக்கும் குடிசைப் பகுதி மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் மற்றும் குறைந்த, நடுத்தர, உயர்தர வருவாய்ப் பிரிவு மக்களுக்கும் வீடுகள்/குடியிருப்புகள் கட்டப் பட்டுள்ளன. இப்படி கட்டப்பட்டுள்ள பழைய வீடுகளுக்கு/குடியிருப்புகளுக்கு பழுதுபார்க்க இந்த வருட வேலைக்கான நிதிநிலை அறிக்கையில் (1993—94) ரூபாய் 13.43 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒதுக்கீடு நிதியின் விவரம் பின்வருமாறு :—

1. அரசு ஊழியர் குடியிருப்பு—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1. ரேஸ் கோர்ஸ் & ரெட்பில்டு ..	9.55
2. உப்பிலிபாளையம்	0.30
3. கவுண்டன்பாளையம்	4.50
4. காந்திபுரம்	4.55
5. சீரநாயக்கன்பாளையம்	1.40
6. கோவை அரசினர் கல்லூரி வளாகம் ..	2.40
மொத்தம் ..	22.70

2. குடிசைப் பகுதி மக்கள் குடியிருப்பு—

1. வின்சென்ட் ரோடு	1.00
2. பாலையன் தோட்டம்	1.60
3. லிங்கி கவுண்டன் தோட்டம் ..	1.55

2. குடிசைப் பகுதி மக்கள் குடியிருப்பு—தொடர்ச்சி.

(1)	(ரூபாய் இலட்சத்தில்) (2)
4. ஸ்லாட்டர் ஹவுஸ்	1.05
5. அருந்ததியர் காலனி	0.70
6. பேரூர்—தெற்கு	2.80
7. பேரூர்—வடக்கு	4.25
8. சித்தாபுதூர்	1.40
9. ஆர். ஏ. புரம்	1.88
மொத்தம் ..	16.23

3. தொழிலாளர் மக்கள் குடியிருப்பு—

	(ரூபாய் (இலட்சத்தில்
1. பீளமேடு	0.70
2. சிங்காநல்லூர்	0.80
மொத்தம் ..	1.50

4. குறைந்த நடுத்தர மற்றும் உயர் வருவாய் மக்கள் குடியிருப்பு.:—

1. உப்பிலிபாளையம்	1.00
2. சவுரிபாளையம்	1.50
3. சிங்காநல்லூர்	0.50
மொத்தம் ..	3.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

47—

கிராமப்புற தொழிலாளர்களுக்கு கச்சாப் பொருட்கள் எளிதில் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை.

வினா எண் 10517— திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற தொழில்களான தள ஓடு, கூரை ஓடு, செங்கல், மண்பாண்டம் தயாரிப்போருக்கு அத்தியாவசியமான கச்சா பொருள்கள் எளிதில் கிடைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கிராமப்புற தொழில்களான தள ஓடு, கூரை ஓடு, செங்கல், மண்பாண்டம் இதுபோன்ற மண்பாண்டத் தொழில் தொடர்புடைய உற்பத்திப் பொருட்கள் தயாரிப்பதற்கு தேவையான மூலப் பொருளான சாதாரண களிமண் அரசு புறம்போக்கு நிலங்களான குளம், ஏரிகள் மற்றும் வாய்க்கால் இவைகளிலிருந்து கிடைக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு ஒரு மண்பாண்டத் தொழிலாளர் 800 மாட்டுவண்டி அளவிலான களி மண்ணை கட்டணமின்றி எடுத்துக்கொள்ள அரசு ஆணை .எண் 443, தொழில் துறை, நாள் 2-4-1981-ல் வழி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

48—

பதனீர் இறக்கி விற்பனை செய்வதை தடை செய்யும் திட்டம்

வினா எண் 13174— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பதனீர் இறக்கி விற்பனை செய்வதைத் தடை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

இல்லை.

49—

பரமக்குடியில் சிட்கோ மூலம் கட்டப்படும் தொழிற்கூடங்களின் விவரம்.

வினா எண் 15682—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் சிட்கோ மூலம் கட்டப்படும் தொழிற் கூடங்கள் எத்தனை?

(ஆ) மேலும் நிலம் கையகப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) பனிரெண்டு.

(ஆ) தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம் ஏற்கனவே உள்ளதால் நிலம் கையகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற் படவில்லை.

50—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தொழிற்கூடங்கள்

வினா எண் 16650—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிற்பேட்டை களில் உள்ள தொழிற்கூடங்கள் எத்தனை?

(ஆ) இம்மாவட்டத்தில் தொழிற்கூடம் ஏற்படுத்த அரசு நிதி உதவி செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 3 தொழிற்பேட்டைகளில் 42 தொழிற்கூடங்கள் தமிழ்நாடு அரசு நிறுவனமான சிட்கோ மூலம் ஏற்கனவே கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

(பதினான்காம் பட்டியல்)

1—

அண்ணா நகரை மையமாகக் கொண்டு கிளை நீதிமன்றம் அமைத்தல்.

வினா எண் 11057—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மேற்குப் பகுதியில் விருகம்பாக்கம், கோயம்பேடு, வில்லிவாக்கம் பகுதிகள் நகருடன் இணைக்கப்பட்டு விட்டிருப்பதால், அப்பகுதிக்கு மையமாக அண்ணா நகர் அல்லது அரும்பாக்கத்தில் மற்றொரு கிளை நீதிமன்றம் அமைக்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

அண்ணா நகர் அல்லது அரும்பாக்கம் ஆகிய இடங்களில் ஒரு கிளை நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. எழும்பூர் மற்றும் சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் மேற்கண்ட செயற்குறிப்பை உள்ளடக்கிய இரண்டு சென்னைப் பெருநகர் நீதிமன்றங்கள் அமைக்கும் செயற்குறிப்பை உயர்நீதிமன்றத்துடன் கலந்து அரசு பரிசீலித்து வருகிறது.

1993 அக்டோபர் 26]

2—

கோயம்புத்தூரில் அனைத்து நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்தில் அமைத்தல்.

வினா எண் 11667—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் ஒரே வளாகத்தில் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர்:

கோயம்புத்தூரில் உள்ள அனைத்து நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்தில் அமைக்க ரூபாய் 400 லட்சம் செலவினத்தில் கட்டிடம் கட்டும் கருத்துரு திட்ட இனத்தில் சேர்க்கப்பட்டு மைய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

3—

வேதாரண்யம் தாலூகாவை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண் 8439—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தாலூகாவை வேதாரண்யம், தலைஞாயிறு என இரு தாலூகாவாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

4—

துவக்கக் கல்விக்கென தனி இயக்குநரகம்

வினா எண் 8594—திரு. கே. பி. முனுசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துவக்கக் கல்விக்கென தனி இயக்குநரகம் அமைக்கப்படும் பரிசீலனை அரசு மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் யாது?

* விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 538, கல்வி, நாள் 21–4–1986-ன் படி துவக்கக் கல்விக்கு என தனி இயக்ககம் அமைக்கப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகிறது.

5—

அதம்பை வடக்கு நடுநிலைப் பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறை.

வினா எண் 11959—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம், ஒன்றியம் அதம்பை வடக்கு நடுநிலைப்பள்ளியில் 1992-93–ல் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

** விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இல்லை.

* 6–4–1993 ஆம் நாளிட்டது.

**15–2–1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

6—

ஆண்டிக்காடு தொடக்கப்பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம்

வினா எண். 13225—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி ஆண்டிக்காடு தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை.

7—

ராஜாமடம் தொடக்கப்பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் 13227—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, ராஜாமடம் தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை.

8—

பாதரங்கோட்டை தொடக்கப்பள்ளிக்கு ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் 13231—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூராணி தொகுதியில், பாதரங்கோட்டை தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

***விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை.

* 6–4–1993— ஆம் நாளிட்டது.
** 6–4–1993— ஆம் நாளிட்டது.
*** 6–4–1993— ஆம் நாளிட்டது.

9—

அதம்பை (வடக்கு) தொடக்கப்பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் 13232—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, அதம்பை (வடக்கு) தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

ஏதுமில்லை

10—

அதம்பை (தெற்கு) தொடக்கப்பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் 13233—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, அதம்பை (தெற்கு) தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை

11—

கொண்டிகுளம் தொடக்கப்பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் 13234—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா

பேராவூரணி தொகுதி கொண்டிகுளம் தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

* 2–4–1993 ஆம் நாளிட்டது.

** 2–4–1993 ஆம் நாளிட்டது.

TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை.

12—

திருவாடானை, தேவகோட்டை அரசு மருத்துவமனைகள்.

வினா எண். 208—திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை மற்றும தேவகோட்டை அரசு மருத்துவமனைகளில் அதிகப்படியாக மருத்துவர்களை நியமனம் செய்யவும், கட்டிட வசதிகளை அதிகப்படுத்தவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை அரசு மருத்துவ மனைக்கு கூடுதல் மருத்துவர் நியமனம் செய்ய தற்போது செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால் இந்த மருத்துவ மனையில் பத்து கூடுதல் படுக்கை வசதி ரூபாய் 5 லட்சம் செலவில் ஏற்படுத்த 1992–93-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேவகோட்டை மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர் நியமனம் செய்யவோ இடவசதி மேம்படுத்தவோ தற்போது செயற்குறிப்பு எதுவும் இல்லை.

13—

கருக்காகுறிச்சியில் ஆரம்ப சுகாதார நிலையம்.

வினா எண் 4641—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள கருக்காகுறிச்சிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் பெறுவதற்கு வைப்புத்தொகையாக ரூபாய் 10,000 செலுத்தி மூன்று வருடமாகியும் இன்னும் அனுமதி அளிக்காதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

* 2-4-93— ஆம்நாளிட்டது

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்தில் ஏற்கனவே அதன் ஜனத்தொகை 93763 கணக்கின்படி தேவைக்கு அதிகமாகவே இரண்டு ஆரம்ப சுகாதாரநிலையங்கள் இயங்கி வருவதால் மேலும் கூடுதலாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை கருக்காகுறிச்சி கிராமத்தில் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

14—

ஒரு ஆண், ஒரு பெண் மருத்துவரின்றி செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

வினா எண் 7755—திரு எம் ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் (மாவட்ட வாரியாக) ஒரு ஆண், ஒரு பெண் என்ற வகையில் இரண்டு டாக்டர்கள் இன்றி செயல்படுகின்றன?

(ஆ) இக்குறையினை களைய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ)

வரிசை எண்.	மாவட்டம்	ஒரு ஆண், ஒரு பெண் மருத்துவர் இன்றி செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1	செங்கை-எம். ஜி. ஆர்.	31
2	வடாற்காடு அம்பேத்கார்	10
3	தென்னாற்காடு	26
4	திருவண்ணாமலை-சம்புவராயர்	38

1993 அக்டோபர் 26]

5	புதுக்கோட்டை	..	11
6	தஞ்சாவூர்	..	23
7	நாகை காயிதேமில்லத்	..	37
8	திருச்சிராப்பள்ளி	..	49
9	மதுரை	..	16
10	பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்	..	17
11	இராமநாதபுரம்	..	19
12	திண்டுக்கல்-அண்ணா	..	15
13	வ. உ. சிதம்பரனார்	..	6
14	காமராஜர்	..	17
15	நெல்லை-கட்டபொம்மன்	..	1[illegible]
16	கன்னியாகுமரி	..	[illegible]
17	கோயம்புத்தூர்	..	20
18	சேலம்	..	37
19	பெரியார்	..	1[illegible]
20	தர்மபுரி	—	20
21	உதகமண்டலம்	—	11
	மொத்த ஆரம்ப சுகாதார நிலையங்கள்	—	436

(ஆ) இக்குறையினை களைய தமிழ்நாடு தேர்வாணைக் குழு மூலம் தெரிவு செய்யப்பட்ட உதவி மருத்துவர்களை பணியமர்த்தும் போது நடவடிக்கை எடுக்கப்படும்.

15—

அரசு மருத்துவமனை காலி மருத்துவர் பதவிகள்

வினா எண் 11856—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

அரசு மருத்துவமனைகளில் உள்ள காலியான மருத்துவர் பதவிகளை நிரப்ப அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவர் பதவிகள் அவ்வப்போது பட்டப்படிப்பு முடித்து வரும் உதவி மருத்துவர்களை வைத்தும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஊரக நலப்பணிகளை முடித்து வரும் மருத்துவர்களை நியமித்தும் விண்ணப்பிக்கும் மருத்துவர்கள் கோரிக்கைகளை பரிசீலனை செய்து நிரப்புவதின் மூலமும் நிரப்பப்பட்டு வருகின்றன.

16—

திருக்கோகர்ணம் அரசு மருத்துவமனை

வினா எண் 12549—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சி திருக்கோகர்ணத்தில் இருக்கும் அரசு மருத்துவமனையை படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக மாற்றிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை நகராட்சி திருக்கோகர்ணத்தில் இயங்கி வரும் அரசு மருந்தகத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் அனைத்து வசதிகள் கொண்ட அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை புதுக்கோட்டையில் இயங்கி வருகிறது. எனவே திருக்கோகர்ணம் அரசு மருந்தகத்தை படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனையாக மாற்றிக் கொடுக்க செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் இல்லை.

17—

திண்டிவனம் அரசு மருத்துவமனையிலுள்ள காலி பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 13474—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள நான்கு டாக்டர்கள் மற்றும் இரண்டு செவிலியர் பணியிடங்களுக்கு உடன் நியமனம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அரசு ஒப்பளிக்கப் பட்ட இடங்களில் மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். காலியாக இருந்த செவிலியர் பணியிடமும் நிரப்பப்பட்டுள்ளது.

18—

பவுண்டு ஏரியாவில் தனியார் மரம் வளர்த்து வெட்டுதல்.

வினா எண் 11900—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் குருடிமலையின் அடிவாரத்தில் பவுண்டு ஏரியாவில் தனியார் மரம் வளர்த்து ஒப்பந்த அடிப்படையில் வெட்டும் அனுமதி கேட்டால் அனுமதிக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத் துத்துறை அமைச்சர்:

'பவுண்டு ஏரியா' என்பது எந்தப் பகுதி என்பது சரியா கத் தெரிவிக்கப்படாததால், அது ஒதுக்குக் காடா அல்லது பட்டா நிலமா என்பதை அறிய இயலவில்லை.

குருடிமலை அடிவாரத்தில் தனியார் நிலத்தில் மரம் வளர்த்தால் வெட்டுவதற்கு வருவாய்த் துறை அனுமதி அளிக் கும். அவ்வாறு அனுமதியளித்து வெட்டப்பட்ட மரத்தை அப்புறப்படுத்த விதிமுறைகளுக்குட்பட்டு படிவம்-2 அனுமதிச் சீட்டு வழங்கப்படும். அப்பகுதி ஒதுக்குக் காடாக இருப்பின், அதில் தனியார் மரம் வளர்க்கவும், ஒப்பந்த அடிப்படை யில் வெட்டவும் அனுமதிக்க இயலாது.

19—

மரக்கன்றுகள் வழங்குதல்

வினா எண் 15166—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மரக்கன்றுகள் விநியோகித்து கோயம்புத்தூர் மேற்கு தொகுதி, மலைப்பகுதி பவுண்டு அருகே உள்ள நிலச் சொந்தக்காரர் மூலம் மரம் வளர்க்க ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

சம்பந்தப்பட்ட நிலச்சொந்தக்காரர் தேவையான மரக்கன்றை குறிப்பிட்டு விண்ணப்பம் கொடுத்தால், மலிவான விலையில் நாற்றுகள் கோயம்புத்தூர் சமூகக் காடுகள் கோட்ட வன அலுவலரால் விநியோகம் செய்யப்படும்.

20—

கைத்தறி கூட்டுறவுச் சங்கத்தில் போலி உறுப்பினர்கள்

வினா எண் 12966—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி கூட்டுறவுச் சங்கத்தில் போலியாக சேர்க்கப்பட்ட போலி உறுப்பினர்கள் நீக்கப்பட்டார்களா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித்துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் நெசவுத் தொழிலுக்கு சம்மந்தமில்லாத தகுதியற்ற மற்றும் போலி உறுப்பினர்கள் இருப்பதாக துறையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு அதன் தொடர்பாக சரக உதவி இயக்குநர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டு தகுதியில்லாத உறுப்பினர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் இருந்து இவ்வாறு 61180 தகுதியில்லாத உறுப்பினர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

1993 அக்டோபர் 26]

21—

மேட்டூர் அணை பூங்காவில் பொதுமக்கள் பார்வையிட இருந்த தடையை நீக்குதல்.

வினா எண் 8393—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டூர் அணை பொதுப்பணித்துறை பூங்காவில் பொதுமக்கள் சென்று பார்க்க விதிக்கப்பட்டிருக்கும் தடை எப்போது நீக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

எந்த சூழ்நிலையில் தடை விதிக்கப்பட்டதோ அந்த நிலையில் மாற்றம் ஏற்படும்போது அத்தடையை நீக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

22—

களத்திகுளம் சீரமைப்பு

வினா எண் 8958—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் களத்தூரிலுள்ள களத்திகுளத்திலுள்ள ஆக்ரமணங்களை அப்புறப்படுத்தி ஆழப்படுத்தி கரையை பலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்டுள்ள களத்திகுளம் சி.எம்.பி. பாசன ஏரியாகும். இதன் உள்வாயில் சுமார் 18 ஏக்கர்கள் ஆக்கிரமிப்பு உள்ளது. இந்த ஆக்கிரமிப்புகளை புல்டோசர் மூலம் அகற்ற வரும் நிதியாண்டில் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் கரைப்பகுதியில் தாழ்வான பகுதிகளை பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

[1993 அக்டோபர் 26

23—

கோனாடுகாத்தான் ஏரி சீரமைப்பு

வினா எண் 11944— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பண்ணைவயல் கோனாடுகாத்தான் ஏரியை புல்டோசர் வைத்து தூர் எடுத்து கரையை உயர்த்திககட்டி, மதகுகளை புதுப்பித்து செப்பனிட 1992–93ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன். பொதுப்பணித்துறை அமைச்சர் :

ஐரோப்பிய நிதி உதவியுடன் தற்போது நவீனப்படுத்தப் படும் ஏரிகளின் பயன்கள் குறித்து திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் பரிசீலனையில் உள்ளது. இப்பரிசீலனைக்குப்பின் அத்துறையின் பரிந்துரையின்படி காவிரி மேம்பாட்டுத் திட்ட ஏரிகளை நவீனப்படுத்த தயாரித்த மதிப்பீடு மறுபரிசீலனை செய்யப்படும். அதற்குப்பின் வினாவில் குறிப்பிட்டுள்ள ஏரி செப்பனிடப்படும்.

24—

பூவாளூர் கிழக்குக் குளம்

வினா எண் 12207— திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் பூவாளூர் கிழக்கு ஆதிதிராவிடர் தெருவில் உள்ள குளத்தை 1992–93ல் புல்டோசர் வைத்து அகலப்படுத்தி ஆழப்படுத்தி பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

காவிரி டெல்டாவிலுள்ள பாசன அமைப்புகளை ஒருங்கிணைந்த வகையில் மேம்பாடு செய்வதற்காக காவிரி கழிமுக பாசன மேம்பாடு ஆணைக்குழு (CADRA) ஒன்று ஏற்படுத்தலாமென தமிழக அரசு கருதுகிறது. காவிரி நீரை சிறந்த முறையில் பயன்படுத்த வகை செய்யும் இத்திட்டம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததால் இவ்வரசு இதனை ஒரு மைய அரசு திட்டமாகச் செயலாக்கலாமெனக் கருதி ரூ. 952 கோடி அளவுக்கு தேசிய நீர் மேலாண்மை திட்டம் பண்ணை மேம்பாட்டுத்திட்டம் தொடர்பான செயற்குறிப்புகளை மத்திய அரசின் எட்டாவது திட்டத்தில் சேர்ப்பது பற்றி பரிசீலிப்பதற்கு மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

1993 அக்டோபர் 26]

25—

அடைக்கத்தேவன் அணை உடைப்பு.

வினா எண் 12294—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூராணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அடைக்கத்தேவன் அணைக்கட்டிலிருந்து தண்ணீர் வெளியில் வரும் இடத்தில் உடைப்பு ஏற்பட்டுள்ளதை 1992-93-ல் அடைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

அடைக்கத்தேவன் அணைக்கட்டு வழங்கு வாய்க்காலில் ஏற்பட்டுள்ள உடைப்பை அடைக்க ரூபாய் 5,000க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உடைப்பை அடைக்கும் பணி 12/1992—ல் முடிக்கப்பட்டுவிட்டது.

26—

துறையூர் சி.எம்.பி. வாய்க்கால் சீரமைப்பு

வினா எண் 12296—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியங்கோட்டை அக்கிரகாரத்திலிருந்து துறையூர் ஆதிதிராவிட தெரு வரையில் உள்ள சி.எம்.பி. வாய்க்காலை 1992-93—ல் சீரமைத்து ரிவெட்மெண்ட் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

ஆம். விரைவில் குறிப்பிடப்பட்டுள்ள வாய்க்கால் பகுதியை சீர் அமைத்து சுமார் 600 மீட்டர் நீளத்திற்கு ரூபாய் 1.00 இலட்சம் செலவில் ரிவெட்மெண்ட கட்ட 1992-93—ல் திட்டம் உள்ளது. வரும் அடைப்பு காலத்தில் இவ்வேலையைச் செய்து முடிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

27—

கீழ மணக்காடு, கூத்தாண்டகுளம் புதுக்குளம் சீரமைப்பு

வினா எண் 13246—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கீழமணக்காடு கூத்தாண்டகுளம், புதுக்குளம் இவைகளை புல்டோசர் வைத்து மராமத்து செய்து சருக்கல் கட்ட 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

இல்லை.

28—

அம்மணிச்சத்திரம் சி.எம்.பி. வாய்க்கால்.

வினா எண். 13660—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூராணி தொகுதி, அம்மணிச்சத்திரம் சி.எம்.பி. வாய்க்காலை தூர் அள்ளி பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

அம்மணிச்சத்திரம் சி.எம். பி. வாய்க்காலில் வரும் அடைப்புக் காலத்தில் நிதி நிலைமைக்கேற்ப தேவையான இடங்களில் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் தற்போது தடையின்றி மேற்படி வாய்க்காலில் போதுமான அளவு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

1993 அக்டோபர் 26]

29—

பனங்குன்றாபுரம் சாலை

வினா எண் 13676—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், பனங்குன்றாபுரம் சாலையை பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை 7.4 கி. மீ. நீள தார் சாலையாகும். இச்சாலை கி.மீ. 3/6—6/0 வரை உள்ள பகுதி ரூபாய் 3.15 இலட்சம் மதிப்பீட்டில் செப்டம்பர் 1990ல் மேம்பாட்டுப்பணி முடிக்கப்பட்டுள்ளது. மற்ற பகுதிகள் நல்ல நிலையில் உள்ளன. நவம்பர் 1992-ல் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தால் தற்போது இச்சாலையில் நொடிகள் ஏற்பட்டு உள்ளன. அவைகளை சீர் செய்ய வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ் பணிகள் நடைபெற்று வருகின்றன.

30—

நாச்சிக்குளம் பள்ளிக்கு புதிய கட்டிடம்.

வினா எண் 1534—திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், நாச்சிகுளம் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், நாச்சிகுளம் பள்ளிக்கு புதிய கட்டிடம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

*விடை—9—3—1993 ஆம் நாளிட்டது.

53—302—100

31—

ராஜாமடம் ஆதிதிராவிடர் தெருவிற்கு கப்பிச்சாலை அமைத்தல்.

வினா எண் 2863—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ராஜாமடம் ஆதிதிராவிடர் தெருவிற்கு கப்பிச் சாலையாக அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ராஜாமடம் ஆதிதிராவிடர் தெரு வீடுகள் ராஜாமடம் ஏரிப்புரக்கரை சாலையில் உள்ளது. இச்சாலை ஏற்கனவே கருங்கல் சாலையாக உள்ளது, புதிதாக செயற்குறிப்பு ஏதுமில்லை.

32—

கழிவுநீர் மற்றும் கழிவுகளை அகற்ற நவீன இயந்திரங்கள்.

வினா எண் 5451—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கழிவுநீர் மற்றும் அன்றாட கழிவுகள் (குப்பைகள்) அகற்ற நவீன இயந்திரங்கள் சென்னை நகரில் ஈடுபடுத்தப் பட்டுள்ளது போல் மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களிலும் பயன்படுத்த அரசு முன்வருமா?

**விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் அன்றாட கழிவுகளை (குப்பைகள்) அகற்ற நகர்ப்புற வளர்ச்சி திட்ட நிதி உதவி திட்டத்தின் கீழ் (MUDF) கழிவுகளை

* விடை—10—3—1993 ஆம் நாளிட்டது,

** விடை—2—2—1993 ஆம் நாளிட்டது.

அகற்றப் பயன்படும் நவீன உபகரணங்கள் மற்றும் லாரிகள் வாங்குவது குறித்து ஆய்விலுள்ளது. திருச்சி நகராட்சியைப் பொறுததமட்டில் சென்னை மாநகராட்சியில் தற்போது பயள்படுத்தப்படும் நவீன இயந்திரங்களின் திறன், பயன் ஆகியவற்றினை ஆராய்ந்து திருச்சி நகராட்சி நிதிநிலைக்கு ஏற்ப, நவீன இயந்திரங்களை வாங்கி பயன்படுத்த ஆலோசிக்கப்படும்.

33—

கரம்பக்காடு சுகாதார கிளை மையத்திற்கு கட்டிடம்.

வினா எண் 6406—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கரம்பக்காடு சுகாதாரக் கிளை மையத்திற்கு கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கரம்பக்காடு சுகாதாரக் கிளை மையத்திற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

34—

பட்டங்காடு ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு பாதை அமைத்தல்.

வினா எண் 6566—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பட்டங்காடு ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு பாதையும், இடையில் ஒரு சிறு பாலமும், (Culvert) அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

* 10—3—1993 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பட்டங்காடு ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு பாதையும், இடையில் ஒரு சிறு பாலமும் (Culvert) அமைத்துக் கொடுக்க போதிய நிதி வசதியின்மையால் தற்போது செயற்குறிப்பேதும் இல்லை.

35—

பெரியநாயகிபுரம் ஊராட்சி துவக்க விடுதியில் தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்தல்.

வினா எண் 6644—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆவணம் பெரியநாயகிபுரம் ஊராட்சியில் துலுக்க விடுதியில் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்யவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், பெரியநாயகிபுரம் ஊராட்சியில் துலுக்கவிடுதியில் தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்வதற்கு செயற்குறிப்பு ஏதும் இல்லை.

36—

வாலியக்காடு பேரான்குளத்திற்கும் கல்லான் குளத்திற்கும் படித்துறை கட்டுதல்.

வினா எண் 6962—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

* 9—3—1993 ஆம் நாளிட்டது.

** 10—3—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துறையூரைச் சேர்ந்த வாலியக்காடு பேரான்குளத்திற்கும், கல்லான்குளத்திற்கும் படித்துறை கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மரக்காவலசை ஊராட்சியில் உள்ளது பேரான்குளம், கல்லான்குளமும், மரக்காவலசை ஊராட்சியில் 21 தொகுப்பு வீடுகள் 1991—92-க்கு கட்டப்பட்டு வருகிறது. எனவே, வாலியக்காடு பேரான்குளம், கல்லான்குளம் ஆகியவற்றிற்கு படித்துறை கட்டுவதற்கு தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

37—

கொள்ளுக்காடு ஆதிதிராவிடர்களுக்கு துணை பிரதம சுகாதார நிலையம்.

வினா எண். 6986—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கொள்ளுக்காடு ஆதிதிராவிடர்களுக்கு துணை பிரதம சுகாதார நிலையம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

** விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் கொள்ளுக்காடு கிராமம் சின்ன ஆவுடையார் கோவில் துணை சுகாதார நிலையத்துக்கு உட்பட்டதாகும். சின்ன ஆவுடையார் கோவில் கிராமத்திற்கும் கொள்ளுக்காடு கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் $1\frac{1}{2}$ கி. மீ. ஆகும். எனவே கொள்ளுக்காடு ஆதிதிராவிடர்களுக்கு துணை பிரதம சுகாதார நிலையம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

* விடை—10—3—1993 ஆம் நாளிட்டது.

** விடை—10—3—1993 ஆம் நாளிட்டது.

38—

சீத்தாக்காடு ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 7059—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த சீத்தாக்காடு ஆதிதிராவிடர்களுக்கு மேலும் 15 வீடுகள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் 1987—88-ல் நாடியம் ஊராட்சி, நாடியம் கிராமத்தில் 20 வீடுகள் ஏற்கெனவே கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வூராட்சியில் சீத்தாக்காடு என்ற கிராமம் இல்லை. 1992—93-ல் வேறு ஊராட்சி தேர்வு செய்யப்பட்டு விட்டதால் நாடியம் கிராமத்திற்கு அடுத்த நிதியாண்டில் பாக்கியுள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க முன்னுரிமை அளிக்கப்படும் என்ற விவரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

39—

துறவிக்காட்டில் மீண்டும் தாய் சேய் நலவிடுதி துவக்குதல்.

வினா எண் 7213—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், துறவிக்காட்டில் உள்ள தாய்-சேய் நல கட்டிடத்தில் மீண்டும் தாய்சேய் நல விடுதி துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

* விடை—10—3—1993 ஆம் நாளிட்டது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், துறவிக் காட்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒரு தாய் சேய் நலவிடுதி கட்டப்பட்டு தற்போது அது பழுதடைந்து உள்ளதால் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அக்கட்டிடம் பழுது நீக்கி சீர் செய்யப்பட்டவுடன் துணை சுகாதார நிலையம் அதில் இயங்கும்.

40—

அண்ணா மாவட்ட ஆட்சியர் அலுவலக பஞ்சாயத்து அபிவிருத்தி பிரிவு மூலம் குடிநீர் வசதி.

வினா எண் 8470—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அண்ணா மாவட்ட ஆட்சியர் அலுவலக பஞ்சாயத்து அபிவிருத்தி பிரிவு மூலம் எங்கெங்கு குடிநீர் வசதி மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென திண்டுக்கல் பொதுப்பணித் துறை செயற்பொறியாளருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அவற்றில் இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை விவரம் என்ன ?

(இ) நத்தம் தொகுதியில் இதுவரை எங்கெங்கு இத்தகு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

** விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலக பஞ்சாயத்து அபிவிருத்தி பிரிவு மூலம் பொதுப்பணித்துறைக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க பரிந்துரை செய்யப்படுவதில்லை. குடிநீர் வடிகால் வாரியம் மூலமே பரிந்துரை செய்யப்படுகிறது.

*விடை—10—3—93 ஆம் நாளிட்டது.

**விடை—10—3—93 ஆம் நாளிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

(ஆ) நத்தம் சட்டமன்றத் தொகுதியில் 1992—93-ல் வறட்சி நிவாரணத்தில் 17 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன.

(இ) நத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் சாந்திவீரன் கோயில், பாலமரத்துப்பட்டி, வேலாம்பட்டி, பூசாரிப்பட்டி, தீத்தாம்பட்டி, ஒத்தக்கடை, அம்பலக்காரன்பட்டி ஆகிய இடங்களிலும் நத்தம் பேரூராட்சியில் மெயின் ரோடு பெத்த பிள்ளையார் கோவில் அருகில் வெள்ளக்குட்டு, கைலாச நாதர் கோவில், அருகில் அம்மன்குளம் ஆகிய இடங்களிலும் சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், வத்தலதொப்பம்பட்டி, மரூர், ராஜாக்காபட்டி, சாணார்பட்டி போலீஸ் குடியிருப்பு, குரும்பபட்டி, இந்திராநகர், கம்பிளியம்பட்டி ஆகிய இடங் களிலும் மொத்தம் 17 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட் டுள்ளன.

41—

வேப்பங்காடு ஊராட்சிக்கு கட்டிடம்.

வினா எண் 12376—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா —

பட்டுக்கோட்டை ஒன்றியம் வேப்பங்காடு ஊராட்சி கட்டிடம் 1992—93ல் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

* விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வேப்பங்காடு ஊராட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்ட தற்போது செயற் குறிப்பு இல்லை.

42—

சூரப்பள்ளத்திற்கு ஊராட்சி கட்டிடம்.

வினா எண் 12391—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

* விடை—9-3-1993 ஆம் நாளிட்டது

1993 அக்டோபர் 26]

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் சூரப்பள்ளத்திற்கு ஊராட்சிக் கட்டிடம் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

*விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் சூரப்பள்ளத்திற்கு ஊராட்சிக் கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை.

43—

பரக்கலக்கோட்டைக்கு ஊராட்சிக் கட்டிடம்.

வினா எண் 12394—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா ?

பட்டுக்கோட்டை ஒன்றியம், பரக்கலக்கோட்டைக்கு ஊராட்சிக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பரக்கலக் கோட்டைக்கு ஊராட்சிக் கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை.

44—

புதிய நியாய விலைக்கடை திறக்க இடையே தேவையான இடைவெளி.

வினா எண் 14456—திரு. எஸ். எஸ். ராமசுப்பு—மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா ?

புதிய நியாயவிலைக் கடைகள் திறக்க ஒரு கடைக்கும் மற்றொரு கடைக்கும் இடையே 3 கி. மீ. தூரம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்த அரசு முன் வருமா ?

*விடை 10—3—1993 ஆம் நாளிட்டது.

** விடை 9—3—1993 ஆம் நாளிட்டது.

* விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

புதிய நியாயவிலை கடைகள் திறக்க ஒரு கடைக்கும் மற்றொரு கடைக்கும் இடையே 3 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்த அவசியமில்லை.

45—

ரேஷன் கடை தற்காலிக பணியாளர் பணியை நிரந்தரம் செய்தல்.

வினா எண் 16095—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ரேஷன் கடைகளில் கூட்டுறவுத் துறையின் மூலம் இயங்கும் கடைகளில் பணிபுரியும் தற்காலிகப் பணியாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்கள் பணியினை நிரந்தரமாக்க அரசு ஆவன செய்யுமா ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் சுமார் 6,000 தற்காலிக பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

(ஆ) வேலை வாய்ப்பகத்தை கலவாமல், 8—7—1980 வரை, கூட்டுறவுச் சங்கங்களிலும் அவை நடத்தும் நியாய விலைக் கடைகளிலும் செய்யப்பட்ட முறையற்ற பணி நியமனங்களை வரன்முறைபடுத்தும் (Regularisation of irregular appointments) அதிகாரத்தை, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அரசு வழங்கியுள்ளது. அந்தப் பணியாளர்கள் பதவிக்குத் தேவையான கல்வி, வயது மற்றும் இதர தகுதிகளைப் பெற்றிருந்தால் மட்டுமே அவர்கள் பணி வரன்முறைப்படுத்தப்படும்.

* விடை 13—4—1993 ஆம் நாளிட்டது.

**விடை 13—4—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

எனவே, நியாயவிலைக் கடை பணியாளர்கள் உட்பட மற்ற பணியாளர்கள் பற்றியும், கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து, முறையற்ற பணி நியமனத்தை வரன்முறைப் படுத்த கருத்துருக்கள் பெறப்பட்டால் அவைகள் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு தக்க ஆணைகள் வழங்கப்படும்.

46—

கால்நடை கிளை மருத்துவ நிலையங்களுக்கு கட்டிடங்கள்.

வினா எண் 11176—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் அரசு கட்டிடம் இல்லாமல் செயல்பட்டு வருகின்ற கால்நடை கிளைமருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

தற்போது உள்ள நிதிப்பற்றாக்குறை சூழ்நிலையில் கால்நடைக் கிளை மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

47—

அதம்பை தெற்கு மற்றும் வடக்கில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

வினா எண் 15826—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா ?

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை தெற்கு மற்றும் வடக்கில் 1992-93-ல் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை தெற்கு மற்றும் வடக்கில் கால்நடை மருத்துவ மனைகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை. சாத்தியக்கூறுகள் இருப்பின் நிதி ஆதாரத்தை உத்தேசித்து தகுதியின் அடிப்படையில் இனிவரும் ஆண்டுகளில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து பரிசீலிக்கலாம்.

48—

குப்பதேவன் மேற்கில் பாலர் பள்ளி தொடங்குதல்.

வினா எண் 13400—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பதேவன் மேற்கில் 1992-93ல் பாலர் பள்ளி ஒன்று தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றிய குப்பதேவன் ஊராட்சியைச் சேர்ந்த குப்பத்தேவன் மேற்கு குடியிருப்பு பகுதியில் 19 குழந்தைகள் மட்டும் இருக்கின்றனர். மேற்படி கிராமத்திற்கு மிக அருகாமையில் குப்பத்தேவனில் குழந்தைகள் மையம் (பால்வாடி) தற்பொழுது இயங்கி வருகிறது. எனவே குப்பத்தேவன் மேற்கில் 1992-93-ல் பால்வாடி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

49—

மகிழங்கோட்டை ஆதிதிராவிடர் தெருவில் பாலர் பள்ளி தொடங்குதல்.

வினா எண் 13402—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை ஆதிதிராவிடர் தெருவில் 1992-93ல் பாலர்பள்ளி ஒன்று அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மகிழங்கோட்டை ஊராட்சியில் ஆதிதிராவிடர் காலனியில் 42 வீடுகள் உள்ளன. இதன் மக்கள் தொகை 268 பேர் ஆகும். ஆதிதிராவிடர் காலனியில் உள்ள சத்துணவு உட்கொள்ளும் நான்கு முதியோர்களும் மகிழங்கோட்டை குழந்தை நல சத்துணவு மையத்தில் சத்துணவு பெறுகிறார்கள். மேற்குறிப்பிட்ட காலனியில் சத்துணவு பெறும் வயதுடைய குழந்தைகள் சுமார் 20 பேர் ஆகும். மேற்காணும் குழந்தைகள் சுமார் 1 கி. மீ. தூரத்திற்குள் உள்ள சத்திரம் தொக்காளிக்காடு குழந்தை நல மையத்திலோ அல்லது மகிழங்கோட்டை குழந்தை நல மையத்திலோ சத்துணவு பெறலாம். ஆகவே மகிழங்கோட்டை ஆதிதிராவிடர் தெருவில் 1992-93-ல் பாலர் பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

50—

கைவனவயல் ஆதிதிராவிடர் குடியிருப்பில் பால்வாடி அமைத்தல்.

வினா எண் 13618— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கைவனவயல் ஆதிதிராவிடர் குடியிருப்பில் பால்வாடி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கைவனவயல் கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்பில் 17 குழந்தைகள் மட்டுமே இருக்கின்றனர். கைவனவயல் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு மிக அருகாமையில் வீரியன்கோட்டை கிராமத்திலும் மற்றும் கைவனவயல் கிராமத்திலும் குழந்தை நல மையங்கள் தற்பொழுது இயங்கி வருகின்றன. எனவே 1992—93-ம் ஆண்டு கைவன வயல் ஆதிதிராவிடர் குடியிருப்பில் பால்வாடி அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(பதினைந்தாம் பட்டியல்).

1—

திட்டக்குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள்.

வினா எண் 16022—திரு கே. செல்வராஜ் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு திட்டக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்த்துக் கொள்ள அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

2—

அலகந்தாபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்,

வினா எண். 423—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்றம்பள்ளி தொகுதியில் அலகந்தாபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள் தொகைக்கு ஏற்ப (79,687) அங்கு ஏற்கெனவே 3 சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதால் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அலகந்தாபுரம் கிராமத்தில் அமைப்பதற்கு சாத்தியமில்லை.

3—

வேலூரில் இருப்பது போன்று மாவட்டந்தோறும் Dextrose Bottle Manufacturing Unit அமைத்தல்.

வினா எண். 465—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

Dextrose Bottle Manufacturing Unit வேலூரில் இருப்பது போன்று மாவட்டந்தோறும் அமைக்க அரசு பரிசீலிக்குமா?

விடை :—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தமிழக அரசு தன் தேவைக்கு Dextrose 5% Dextrose 10% ஒரு மாதத்திற்கு 2 முதல் 3 இலட்சம் பாட்டில்கள் தனியார் மற்றும் மத்திய அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் இருந்து வாங்கப்படுகின்றன. எனவே, தற்போது ஒவ்வொரு மாவட்டந்தோறும் டெக்ஸ்ட்ரோஸ் பாட்டில் தயாரிக்கும் நிலையம் ஆரம்பிப்பது குறித்து திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

4—

சேரன்மகாதேவி தொகுதியில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்குதல்.

வினா எண். 4466—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதியில் புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை நிலையங்கள் தொடங்கப் படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதியில் தற்பொழுது ஆரம்ப சுகாதார நிலையம் புதியதாக ஆரம்பிக்க செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

வேதாரண்யம் தொகுதியில் மருத்துவர் விடுப்பில் செல்லுதல்

வினா எண். 5444—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்கள் நீண்டகால விடுப்பில் செல்வதையும் சரிவர பணிக்கு வராத நிலையையும் அரசு அறியுமா—

(ஆ) ஆம் எனில், இக்குறைபாடு களைய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வேதாரண்யம் சட்டமன்ற தொகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் எல்லா மருத்துவ அலுவலர்களும் விடுப்பில் செல்லாமல் பணிபுரிகின்றனர்.

6—

கிராமப்புறங்களில் நடமாடும் மருந்தகங்கள் செயல்படுத்தல்.

வினா எண். 5754—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் குழந்தைகள் மற்றும் முதியோரின் நலன் கருதி நடமாடும் மருந்தகம் ஒன்றை செயல்படுத்த அரசு முன்வருமா?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

அத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

அரசு மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள்

வினா எண் 6258—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உரிய அளவில் மருத்துவர்கள் இன்றி காலியாக உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடங்களை நிரப்ப அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவர்களின் பட்டியல் கிடைக்கப் பெற்று ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள காலியிடங்களுக்கு பணி நியமனம் செய்வதற்கான உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள காலியிடங்களுக்கு தமிழ்நாடு தேர்வாணைக்குழுவிடமிருந்து தேர்வு பட்டியல் பெற்றவுடன் காலியான இடங்கள் நிரப்பப்படும்.

8—

அதம்பை ஆரம்ப சுகாதார நிலையம் இயங்காமை

வினா எண் 7446—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் அதம்பையிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு டாக்டர் வராததால் இயங்காமலிருப்பதை இயங்க வைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

மருத்துவர் வி. செல்வகுமார் 6-4-1990 முதல் 27-1-1992 வரை பணியாற்றி வந்தார். அவருக்குப்பின் தற்பொழுது மருத்துவர் பி. ரகுபதி என்பவர் 27-10-1992 முதல் பணிபுரிந்து வருகிறார்.

9—

திருத்தங்கல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 10423—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி, திருத்தங்கலில் அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிக் கொடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திருத்தங்கல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடங்கள் கட்ட தற்போது போதுமான நிலம் இல்லை. தேவையான நிலம் நன்கொடையாகவோ அல்லது கையகப்படுத்தப்பட்டப் பின்னர் அரசின் நிதி நிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

10—

ஆண்டிமடத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தை உயர்த்தி படுக்கை வசதி அதிகரித்தல்

வினா எண் 10596—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடத்தில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை உயர்த்தி படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

அவ்வித செயற் குறிப்பு ஏதும் இல்லை. தற்போது ஆறு படுக்கைகள் கொண்ட இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தின் படுக்கை வசதிகளை உயர்த்த நிதிநிலைக்கு ஏற்ப ஆவன செய்யப்படும்.

11—

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் குளிர்சாதனப் பெட்டிகள்

வினா எண் 11218—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன ?

(ஆ) அதில் எத்தனை நிலையங்களில் குளிர்சாதனப் பெட்டிகள் உள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 53 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) அதில் 48 ஆரம்ப சுகாதார நிலையங்களில் குளிர் சாதனப் பெட்டி வசதிகள் உள்ளன. மீதியுள்ள 5 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

12—

முடச்சிக்காடு தாய் சேய் நலவிடுதி

வினா எண் 13455—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் முடச்சிக்காட்டில் உள்ள தாய் சேய் நல விடுதியை 1992–93-ல், இயங்க வைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

முடச்சிக்காடு கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை.

13—

மோழியனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பெண் மருத்துவர்

வினா எண் 13461—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் வட்டம், மோழியனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பெண் மருத்துவரை நியமனம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

திண்டிவனம் வட்டம், மோழியனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்பொழுது இரண்டு ஆண் மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றார்கள். பெண் மருத்துவர் போதிய அளவுக்கு இல்லாத காரணத்தினால் நியமனம் செய்ய இயலவில்லை. தமிழ்நாடு தேர்வாணைக்குழுவின் மூலம் தெரிவு செய்யப்பட்ட உதவி மருத்துவர்கள் பணி நியமனம் செய்யும்போது பெண் மருத்துவரை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

14—

சீதாம்பாள்புரத்தில் பிரதம சுகாதார நிலையத்திற்கு கட்டிட வசதி.

வினா எண் 13462—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சீதாம்பாள்புரத்தில் இயங்கிவரும் பிரதம சுகாதார நிலையத்திற்கு கட்டிட வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

குறிச்சி கிராமத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் சீதாம்பாள்புரத்தில் தற்போது தற்காலிகமாக இயங்கி வருகிறது என்பதால் இக்கேள்விக்கு இடமில்லை.

15—

மாத்தூரில் அரசு மருத்துவமனை தொடங்குதல்.

வினா எண் 13477—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம் மாத்தூரில் அரசு மருத்துவமனை தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

அரசு ஆணை நிலை எண் 83, சுகாதாரம், நாள் 18-1-1984-ல் அரசு புதிய மருந்தகம் மற்றும் மருத்துவமனைகளை திறப்பதற்குத் தடை விதித்துள்ளபடியால் புதிய ஆரம்ப

சுகாதார நிலையங்கள் மட்டும் திறக்க அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி அறந்தாங்கி ஒன்றியம், மாத்தூரில் அரசு மருத்துவமனை தொடங்க அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

16—

ஆயங்குடியில் பிரதம சுகாதார நிலையம்.

வினா எண் 13478—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், ஆயக்குடியில் ஒரு பிரதமசுகாதார நிலையம் தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி மேலும் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் ஆயங்குடியில் தற்போது அமைக்கசாத்தியக் கூறுகள் இல்லை.

17—

கோட்டாகுடியில் தாய்சேய் நல விடுதி.

வினா எண் 13485—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாகுடியில் 1992-93ல் தாய் சேய் நல விடுதி ஒன்று தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம் கோட்டாக்குடி கிராமத்தில் தாய் சேய் நல விடுதி அமைக்க செயற்குறிப்பு 1992-93ல் ஏதுமில்லை.

1993 அக்டோபர் 26]

18—

சுற்றுப் புறச்சூழல் பாதிப்பைத் தடுத்தல்.

வினா எண். 14385—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

The details of the steps adopted by the Tamil Nadu Pollution Control Board to check and prevent noise. light and smoke pollution causing injury to the phsically h nicapped in cases of complaints to the Board?

விடை.—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

சப்தம், ஒளி மற்றும் புகை மாசினால் உடல் ஊனமுற்றோர் பாதிக்கப்படுவது தொடர்பான புகார்கள் பொதுமக்கள் அரசு மற்றும் முதலமைச்சர் தனிப் பிரிவிடமிருந்து பெறப்படும் போது அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உடனடி ஆய்வு செய்யப்படுகிறது. குறைகளை தீர்ப்பதற்கான ஆலோசனைகள் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகின்றன. குடியிருப்புப் பகுதிகளில் தொழிற்சாலைகள் இயங்கி, நீர், காற்று, புகை மற்றும் சப்தம் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை அவ்விடத்திலிருந்து அகற்றி தொழிற்சாலைகளுக்கு உரிய இடத்தில் தொழிற்சாலையை நிறுவும்படியும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் மேற்படி தொழிற்சாலைகளுக்கும் உரிமம் வழங்க வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை அளவை குறித்த வரையில் சென்னையிலுள்ள கனரக மோட்டார் வாகனங்களுக்கு (தளவாடப் பொருட்களை கொண்டு செல்பவை) வாரியத்திடமிருந்து தடையில்லா சான்றிதழ் வழங்கப்பட்ட பிறகே. மோட்டார் துறையினால் தகுதிச் சான்றிதழ் (Fitness Certificate) வழங்கப்படுகிறது.

19—

கீழக்கொள்ளுக் காட்டில் சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 15825—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி கீழக்கொள்ளுக்காட்டில் 1992–93ல் சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியத்தின் மக்கள் தொகை 74,955 ஆகும். அதற்கேற்ப அங்கு ஏற்கனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள், (1) திருவோணம், (2) சில்லாத் தூர், (3) அதம்பை மற்றும் (4) வெங்கரை ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி மேலும் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை திருவோணம் ஒன்றியத்தை சேர்ந்த கீழ் கொள்ளுக்காட்டில் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

20—

செட்டிக்காட்டில் பயணிகள் நிழற்குடை.

வினா எண் 12433—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிகொண்டான் நகராட்சியில் உள்ள செட்டிகாட்டிற்கு 1992–93–ல் பயணிகள் நிழற்குடை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

நிதிநிலை பற்றாக்குறை காரணமாக 1992–93–ல் நிழற் குடை அமைக்கும் திட்டம் இல்லை.

21—

சின்னரெட்ட வயலில் நிழற்குடை.

வினா எண் 12434—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவா சத்திரம் ஒன்றியம், சின்ன ரெட்டவயல் மெயின் சாலையில் 1992-93–ல் நிழற்குடை ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

22—

கொத்தமங்கலத்திற்கு நகரப் பேருந்து.

வினா எண் 12909—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணியிலிருந்து பைங்கால் கீரமங்கலம் வழியாக கொத்தமங்கலம் வரை நகரப் பேருந்து மிக அதிக நெரிசலாக இருப்பதால் 1992-93-ல் மேலும் ஒரு நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

இல்லை.

23—

ராஜாமடம் வழியாகப் பேருந்து.

வினா எண் 13603—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து அதிராம்பட்டிணம், ஏரிப்புறக்கரை, கீழத்தோட்டம், ராஜாமடம் வழியாக 1992-93-ல் பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை—ராஜாமடம் தடத்தில் ஏரிப்புறக்கரையில் இருந்து ராஜாமடம் வரை 5 கி.மீ. தூரம் சாலை பழுதடைந்து பேருந்து இயக்க தகுதியற்றதாக உள்ளது. சாலை சீர் செய்யப் பெற்றதும் பேருந்து வசதி செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

24—

சின்கோனா தொழிலாளர்களுக்கு வசதிகள்.

வினா எண் 14431—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சின்கோனா தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கூட்டுறவுப் பண்டகசாலை, மருத்துவமனை மற்றும் வீடுகள் ஆகிய வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

முன்னாள் சின்கோனாத் துறை, தேயிலைத் தோட்டக் கழகத்துடன் இணைக்கப்பட்ட பிறகு, தேயிலை பயிரிடும் பொருட்டு வால்பாறையில் 7 கோட்டங்களும், நீலகிரியில் 3 கோட்டங்களும் உருவாக்கப்பட்டன. வால்பாறை பகுதியில் இரண்டு கூட்டுறவு பண்டகசாலைகள் செயல்படுகின்றன. நீலகிரி பகுதியில் உள்ள கோட்டங்களில் கூட்டுறவு பண்டகசாலைகள் ஏற்படுத்த சம்பந்தப்பட்ட கூட்டுறவுத் துறை அதிகாரிகளை அணுகி ஆவன செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

வால்பாறை பகுதியில் அரசு மருத்துவ மனை ஒன்று முன்னாள் சின்கோனா அல்லது தற்போதைய டான்டீ தொழிலாளர்களுக்கு உரிய மருத்துவ சலுகைகளை அளிக்கும் பொருட்டு செயல்பட்டு வருகிறது. நீலகிரி பகுதியில் உள்ள முன்னாள் சின்கோனா மற்றும் தற்போதைய தொழிலாளர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டு, அதற்கான மருத்துவ செலவினை தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமே ஏற்றுக்கொள்கிறது.

தற்போது 1,277 தொழிலாளர்களை உள்ளடக்கிய 1,087 குடும்பங்களில் 873 குடும்பங்களுக்கு நிலையான குடியிருப்புகள் அளிக்கப்பட்டு உள்ளன. மற்றும் 135 குடும்பங்களுக்கு தற்காலிக குடியிருப்புகள் அளிக்கப்பட்டு உள்ளன. மேலும் 79 குடும்பங்களுக்கு வீடுகள் அளிக்கப்பட வேண்டியுள்ளது. அவற்றில் தற்போது நீலகிரி பகுதியில் 15 குடியிருப்புகளும், வால்பாறை பகுதியில் 20 குடியிருப்புகளும் கட்டப்பட்டு வருகின்றன.

1993 அக்டோபர் 26]

25—

நாடியம் குளத்திற்கு ரோலிங் ஷட்டர்.

வினா எண் 12209—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் குளத்திற்கு 1992–93-ல் ரோலிங் ஷட்டர் ஒன்று அமைத்துக் கொடுக்கவும் சீரமைத்துக் கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

நாடியம் குளத்தில் உள்ள ஐந்து மதகுகளில் ஆழமடை இரண்டுக்கு மட்டும் திருகு சட்டர் (Screw gearing Shutters) பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய மூன்று மதகுகளுக்கு தற்போதுள்ள சாதாரண ஷட்டர்களே போதுமானது. கொட்டை குளம் ஏரியில் உள்ள மதகுகளில் சாதாரண ஷட்டர்கள் உள்ளன. அவற்றை வரும் கோடையில் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் தற்போது பாசனத்திற்கு நீர் வழங்குவதில் தடை ஏதுமில்லை.

26—

பள்ளிமுடை வயல் வாய்க்கால்.

வினா எண். 12289—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சர்வேந்திர ராஜபட்டிணம் ஊராட்சி பள்ளிமுடைவயல் ஏரிக்கு தண்ணீர் வரும் வாய்க்காலை செப்பனிட்டுத் தர 1992–93-ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பள்ளி முடை வயல் ஏரிக்கு வரும் வழங்கு வாய்க்காலில் உள்ள சிறு பழுதுகள் சரிபார்க்கப்பட்டு தண்ணீர் ஏரிக்குச் சென்று கொண்டிருக்கிறது. எனவே 1992–93 ஆம் ஆண்டில் வாய்க்காலைச் செப்பனிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

27—

பூதலூர் கால்வாயில் வண்டல் அகற்றுதல்.

வினா எண் 12906—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

கல்லணைக் கால்வாயில் தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் கால்வாயில் வண்டல் படிந்துள்ளதை அகற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

கல்லணைக் கால்வாய் தலைப்பில் படிந்திருந்த வண்டல் மண்ணை சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு புல்டோசர் மூலம் நடப்பு ஆண்டில் (1992–93) அகற்றி தற்போது தண்ணீர் தடையின்றி செல்கிறது. எஞ்சியுள்ள தூரத்தில் படிந்திருக்கும் வண்டல் மண்ணை அத்தியாவசியமான இடங்களில் எதிர்வரும் கோடையில் நிதி நிலைமைக்கேற்ப அகற்றப்படும்.

28—

கழுகுப்புளிக்காடு ஏரியை பராமரித்தல்.

வினா எண் 12995—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப்புளிக்காடு ஊராட்சி பில்லங்குழியில் உள்ள நி. 200-ம் ஏரியை புல்டோசர் வைத்து ஆழப்படுத்தி பராமரிப்புச் செய்ய 1992–93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

காவிரி டெல்டாவிலுள்ள பாசன அமைப்புகளை ஒருங்கிணைந்த வகையில் மேம்பாடு செய்வதற்காக காவிரி வடிநில பாசன மேம்பாடு ஆணைக்குழு (CADRA) ஒன்று ஏற்படுத்தலாமென தமிழக அரசு கருதுகிறது. காவிரி நீரை நன்முறையில் பயன்படுத்த வகை செய்யும் இத்திட்டம் தேசீய முக்கியத்துவம்

1993 அக்டோபர் 26]

வாய்ந்ததால் இவ்வரசு இதனை ஒரு மத்திய அரசு திட்டமாக செயலாக்கலாமெனக் கருதி, ரூ. 952 கோடி அளவுக்கான, தேசிய நீர் மேலாண்மைத் திட்டம் பண்ணை மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான செயற் குறிப்புகளை மத்திய அரசின் எட்டாவது திட்டத்தில் சேர்ப்பது பற்றி பரிசீலிப்பதற்கு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் பதில் எதிர் பார்க்கப்படுகிறது.

29—

திருக்களப்பூர்—ஏரவாங்குடிச்சாலை.

வினா எண் 13000—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, திருக்களப்பூர்—ஏரவாங்குடி செல்லும் இணைப்புச் சாலையை புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை, சட்டமன்ற வினாவில் குறிப் பிடப்பட்டுள்ள சாலை, இரு சாலைப் பகுதிகளாக உள்ளது.

(1) ஏரவாங்குடி - திருகளப்பூர் சாலை:— இது ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி சாலையாகும். இது (0/0 - 1/0) 1 கி.மீ. நீளமுள்ள கிராவல் தளசாலையாகும்.

(2) திருக்களப்பூர் - ஏரவாங்குடி சாலை:— ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வகைப்படுத்தப் படாத சாலையாகும். இச்சாலைகளை தார் தளமாக மேம்பாடு செய்வதற்கு ரூ. 10 இலட்சம் தேவைப்படும். ஊராட்சி ஒன்றிய சாலைகளை நெடுஞ்சாலைத் துறையின் பகுதி 2 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள இயலாது.

30—

அகரவயல் ஏரிப் பராமரிப்பு.

வினா எண் 13004—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

[1993 அக்டோபர் 26

பேராவூரணி தொகுதி, பட்டுக்கொட்டை ஒன்றியம் சேண்டா கோட்டையில் உள்ள அகரவயலில் உள்ள பெரிய ஏரியை அகலப்படுத்தவும், ஆழப்படுத்தவும் 1992-93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

காவிரி டெல்டாவிலுள்ள பாசன அமைப்புகளை ஒருங்கிணைந்த வகையில் மேம்பாடு செய்வதற்காக காவிரி கழிமுக பாசன மேம்பாட்டு ஆணைக்குழு (CADRA) ஏற்படுத்தலாமென தமிழக அரசு கருதுகிறது. காவிரி நீரை சிறந்த முறையில் பயன்படுத்த வகைசெய்யும் இத்திட்டம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததால் இவ்வரசு இதனை ஒரு மத்திய அரசு திட்டமாக செயலாக்கலாமெனக் கருதி ரூ. 952 கோடி அளவுக்கு தேசிய நீர் மேலாண்மை திட்டம், பண்ணை மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான செயற்குறிப்புகளை மத்திய அரசின் எட்டாவது திட்டத்தில் சேர்ப்பது பற்றி பரிசீலிப்பதற்கு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

31—

பெரியகத்திக்கோட்டைப் பெரிய ஏரிப் பராமரிப்பு.

வினா எண் 13258—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி பெரியகத்திக் கோட்டையில் உள்ள பெரிய ஏரியை 1992-93-ல் புல்டோசர் வைத்து மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பெரிய ஏரிக்கு மராமத்துப் பணிகள் செய்ய ரூ. 60,000-க்கு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. வரும் அடைப்புக் காலத்தில் இந்த வேலை செய்து முடிக்கப்படும்.

32—

துறையூர் காட்டுக்குளம் ஏரியின் உபரி நீர்.

வினா எண் 13359—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துறையூர் காட்டுக்குளம் ஏரியிலிருந்து வரும் உபரி நீரை மேற்படி ஏரியில் 1992-93-ல் ஒரு தேக்கம் கட்டி ஞாயகத்திவையல் குளத்தில் விட்டு பாசனத்திற்கு பயன்பெறச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

33—

பண்ணைவயல் சி.எம்.பி. வாய்க்கால்.

வினா எண் 13635—திரு. ஆர். சிங்காரம் : மாண்பு கு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பண்ணவயல் சி.எம்.பி. வாய்க்காலை தூர்வாரி பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிட்டுள்ள வாய்க்கால் பொதுவாக நல்ல நிலையில் உள்ளது. தற்போது இவ்வாய்க்காலில் தடையின்றி பாசனத்திற்குத் தண்ணீர் செல்லுகிறது. நிதி நிலைமைக்கேற்ப வரும் அடைப்புக் காலத்தில் அத்தியாவசிய மராமத்து வேலைகள் செய்யப்படும்.

34—

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி அளித்தல்.

வினா எண் 4098—திரு. அ. சுப்புரத்தினம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளில் கற்பிக்கப்படும் கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் அப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி (Refresher course) அளிப்பது குறித்து பரிசீலிக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு. ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் அப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி (Refresher course) அளிப்பது குறித்து அரசு ஆணை வெளியிடப்பட்டு, அதன்படி, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். திருச்சி மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் 120 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 360 இடைநிலை ஆசிரியர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சி அளிக்க ஜனவரி 91 திங்களில் திட்டம் செயல்படுத்தப்பட்டு, இதுவரை 120 இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் 111 பட்டதாரி ஆசிரியர்கள் ஆக மொத்தம் 231 ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். வரும் ஆண்டுகளில் இது தொடரப்படும்.

35—

ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகளில் தரமான உணவு, அரசு நிர்ணயித்துள்ள அளவுப்படி வழங்கல்.

வினா எண் 4872—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட மாணவர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு தரமில்லாமலும் குடிநீர் வசதியின்றியும், குளியலறை இல்லாமலும் இருப்பதை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1993 அக்டோபர் 26]

(ஆ) ஆத்தூர் தொகுதி, பெரியகல்வராயன் மலையில் கரிய கோயிலில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள மாணவர்கள் விடுதியில் மேற்கண்ட வசதிகள் இல்லாதது நிவர்த்தி செய்யப்படுமா ?

(இ) ஆதிதிராவிட மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை உயர்த்திக் கொடுக்க திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. மு. ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆதிதிராவிடர் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தரமான உணவு, அரசு நிர்ணயித்துள்ள அளவுப்படி வழங்க வேண்டும் என்று அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர், விடுதிக் காப்பாளர்கள், காப்பாளி கள், உண்டு உறைவிடப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஆகி யோருக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். மேலும் தரமான உணவு வழங்கப் பட்டு வருகிறதா என்று அவ்வப்பொழுது திடீர் தணிக்கை மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. குடிநீர் மற்றும் குளியல் அறை வசதிகள் ஏற்படுத்த மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) ஆத்தூர் தொகுதி பெரியகல்வராயன் மலையில் கரிய கோயில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாணவர்கள் விடுதியில் மேற்கண்ட வசதிகள் அளிக்கும்படி ஆதி திராவிட நல அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

(இ) சென்னை நகரிலுள்ள அரசு கல்லூரி ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகளில் வழங்கப்படும் மாதாந்திர உணவுக் கட்டணம் ஒரு மாணவருக்கு ரூ. 160-லிருந்து ரூ. 180 ஆக உயர்த்தியும், ஏனைய அரசு ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளில் வழங்கப்படும் மாதாந்திர உணவுக் கட்டணம் ஒரு மாணவருக்கு ரூ. 155-லிருந்து ரூ. 175 ஆக உயர்த்தியும், அரசு ஆதிதிராவிட நலப்பள்ளி மாணவ, மாணவி யர் விடுதிகளில் வழங்கப்படும் மாதாந்திர உணவுக் கட்டணம் ரூ. 105-லிருந்து ரூ. 120 ஆக உயர்த்தியும், 1993-94-ம் கல்வி ஆண்டிலிருந்து வழங்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

36—

பெரியகுப்பம் ஆதிதிராவிடர்களுக்கு மயானப்பாதை அமைத்தல்.

வினா எண் 6685—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள பெரியகுப்பம் ஆதி திராவிடர்களுக்கு மயானப்பாதை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், பெரியகுப்பம் கிராம ஆதிதிராவிடர்களுக்கு மயானப் பாதை வசதிக்கு நிலமெடுப்பு செய்வது தொடர்பாக 11-11-1992 நாளிட்ட அரசாணை எண் 834, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் ஆணையின்படி பிரிவு 4 (1)கீழ் முன்மொழிவுகள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும் நிலமெடுப்பு நடவடிக்கைகள் முற்றுப்பெற்றதும் மயானப்பாதை அமைத்துத் தரப்படும்.

37—

சித்தலாபாடி காலனிக்கு மனைப்பட்டா வழங்கல்.

வினா எண் 7568—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய வசப்புத்தூர் பஞ்சாயத்து சித்தலாபாடி காலனிக்கு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய வசப்புத்தூர் பஞ்சாயத்து சித்தலாபாடி காலனியில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு மனைப் பட்டா வழங்குவதற்கு நன்செய் நிலங்களை கையகப்படுத்த அரசு முன் அனுமதி கோரும் கருத்துரு அரசு மட்டத்தில் பெறப் பட்டு ஆய்வில் உள்ளது. முன் அனுமதி அளித்த பின்னர் இது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

38—

சிங்காரக்குப்பம் ஆதிதிராவிடர்களுக்கு மனைப்பட்டா வழங்கல்.

வினா எண் 7589—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, கிள்ளை பேரூராட்சியில் அடங்கிய சிங்காரக்குப்பம் காலனியில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சிதம்பரம் வட்ட கிள்ளை மதுரா சிங்காரக்குப்பம் கிராம ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க மேற்படி கிராம ரி.ச.எண் 131/2ஏ. 3ஏ. 132/6. 9பி, 10 ஆகிய புலன்களில் 1.79.0 ஹெக்டேர் நிலங்களைக் கையகப்படுத்த 14-1-1988 நாளிட்ட தனி வட்டாட்சியரின் தீர்ப்பு எண் 3/87-88-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நில எடுப்பு நடவடிக்கைகளை எதிர்த்து. மேற்படி நிலங்களின் குத்தகை சாகுபடிதாரர்களால் சிதம்பரம் முன்சிப் கோர்ட்டில் ஓ, எஸ். 1138/88-ல் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கு முடிவுற்றதும் பட்டாக்கள் வழங்கப்படும்.

39—

முகந்தெரியாங்குப்பம் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கல்.

வினா எண் 7630—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், முகந்தெரியாங்குப்பம் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி ஒன்றியம், முகந்தெரியாங்குப்பம் அகர ஆலம்பாடி கிராமத்தினுடைய மதுரா கிராமமாகும் அகர ஆலம்பாடி கிராமம் மற்றும் மதுரா முகந்தெரியாங்குப்பம் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைக்காக நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுத் தீர்ப்பும் பகரப்பட்டுள்ளது. இதற்கிடையே மேற்படி நிலங்களில் நில உரிமையாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்துள்ளார்கள் (ரிட் மனு எண் 14217/92 மற்றும் 15064/92) ரிட் மனுக்கள் மீது இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் மேல் நடவடிக்கை தொடரப்படும்.

40—

காரைக்காட்டி சாவடி ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கல்.

வினா எண் 7802—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி. காரைக்காட்டி சாவடி ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன். ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தென் ஆற்காடு மாவட்டம். சிதம்பரம் வட்டம், நஞ்சை மகத்துவாழ்க்கை மேற்கு மதுராக்காரைக்காட்டு சாவடி, கிராமத்தில் ஆதிதிராவிடர்கள் எவருமில்லை. எனவே, வீட்டுமனை பட்டா வழங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

1993 அக்டோபர் 26]

41—

தெற்கு திட்டை ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கல்.

வினா எண் 8011—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெற்கு திட்டை ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தென்னாற்காடு மாவட்டம், புவனகிரி தொகுதியிலுள்ள தெற்கு திட்டை கிராம ஆதி திராவிடர்கள் மேற்படி கிராம ரி.ச. 18 காலனி நத்தம் 1.22.0 ஹெக்டேரில் வசித்து வருகின்றனர். 24 வீடுகளில் 31 குடும்பங்கள் உள்ளனவென்றும் 7 குடும்பத்துக்கு வீடு இல்லை என்றும் அறிக்கை பெறப்பட்டுள்ளது. இந்தக் காலனி நத்தத்தில் 7 நபர்கள் 0.21.0 ஹெக்டேர் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து மணிலா சாகுபடி செய்து வருகின்றனர். எனவே மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றி வீடற்ற ஏழு ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கும் வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

42—

மஞ்சக்கொல்லை காலனிக்கு மனைப்பட்டா வழங்கல்.

வினா எண் 12758—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் உள்ள புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய மஞ்சக்கொல்லை காலனிக்கு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில். எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், மஞ்சக்கொல்லை காலனி ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வசதிக்காக, மேற்படி கிராமத்தில் ரி.ச. எண் 134/2, 4ஏ2, 136/1, 2, 3, 4, 5-ல் 1.75.0 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு 30—11—90ல் தீர்ப்பு பகரப்பட்டுள்ளது. இந்நேர்வில் நில எடுப்பு நடவடிக்கைகளை எதிர்த்து நில உரிமையாளரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு முடிவு பெற்ற பின்னர் வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்படும்.

43—

கிடையூரில் வீடு கட்ட நிலம் கையகப்படுத்துதல்.

வினா எண் 15355—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, கிடையூரில் 1.30 ஏக்கரும், தெற்குவளவில் 4.20 ஏக்கரும் (ஆதிதிராவிடர் தெரு) வீடு கட்ட நிலம் கையகப்படுத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிக் கொடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : (1) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம் தேவண்ணகவுண்டனூர் கிராமம் கிடையூர் அருந்ததியர்களுக்கு வீட்டு மனை வழங்க புல எண் 520-ல் 1,33 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 31/78-ன்படி கையகப்படுத்தியதைப் பற்றி தற்போது உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால், நிலம் கையகப்படுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்க முடியவில்லை, தீர்ப்பு வந்தபின் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

1993 அக்டோபர் 26]

(2) தேவண்ணகவுண்டனூர் கிராமம், மட்டப்பட்டி தெற்கு வளவில் இருக்கும் 74 ஆதிராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க தனி வட்டாட்சியரால் 3.79 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

44—

பின்னவாசலில் ஆதிதிராவிடர் நலத்துறை துவக்கப்பள்ளி தொடங்குதல்.

வினா எண் 15594—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பின்ன வாசலில் 1992-93-ல் ஆதிதிராவிடர் நலத்துறை துவக்கப்பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பின்ன வாசலில் ஆதிதிராவிட நலத்துறைத் துவக்கப்பள்ளி துவக்கு வது குறித்து அரசு பரிசிலித்து வருகிறது.

45—

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் இறுதி வகுப்பு தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை.

வினா எண் 16153—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளி களில் 1991-92 ஆம் கல்வியாண்டில் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவர்களில் தேர்ச்சி பெற்றவர்கள் எவ்வளவு பேர்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 1991-92-ம் கல்வியாண்டில் 10-ம் வகுப்புத் தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை 6814. அவர்களுள் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 3,896. இதே கல்வியாண்டில் 12-ம் வகுப்புத் தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை 2111. அவர்களுள் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 1,250.

46—

பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் மூலம் வீடுதிகள் கட்டுதல்.

வினா எண் 16426—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தாட்கோ மூலம் கட்டப்படும் விடுதிகள் பொதுப்பணித் துறை நிர்வாகப் பொறியாளர் (கட்டிடங்கள்) மூலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

தாட்கோவுக்கென்று தனியாக தொழில் நுட்பப்பிரிவு அமைக்கப்பட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான விடுதிகள், பள்ளிக்கூடங்கள், சமுதாய நலக்கூடங்கள் போன்ற கட்டிடப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதை மாற்றி பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் (கட்டிடம்) மூலம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

47—

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் நடத்தப்படும் பள்ளிகளின் உயர் மாற்றங்கள்.

வினா எண் 16520—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் நடத்தப்படும் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அவற்றுள் எத்தனை ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகளாக மாற்றப்பட்டன ?

(இ) அவற்றுள் எத்தனை நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாக மாற்றப்பட்டன ?

(ஈ) அவற்றுள் எத்தனை உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகளாக மாற்றப்பட்டன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தம் 103 பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 93 ஆரம்பப் பள்ளிகள், 4 நடுநிலைப்பள்ளிகள் மற்றும் 6 உயர்நிலைப் பள்ளிகள் அடங்கும்.

(ஆ) ஆரம்பப் பள்ளிகள் எதுவும் நடுநிலைப்பள்ளிகளாக மாற்றப்படவில்லை.

(இ) நல்லாடையில் இயங்கும் ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளி மட்டும் 1989-90ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்டுள்ளது.

(ஈ) உயர்நிலைப்பள்ளிகள் எதுவும் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படவில்லை.

48—

பரமக்குடி தாலுக்கா ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதிகளில் படிக்கும் மாணவர்களின் தேர்ச்சி விகிதம்.

வினா எண் 16635—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்காவில் உள்ள ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதிகளில் படிக்கும் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

1991–92 ஆம் கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்தில் உள்ள ஆதிதிராவிட மாணவ / மாணவியர் விடுதிகளில் படித்த மாணவர்களின் தேர்ச்சி விவரம் வருமாறு :

விடுதியின் பெயர்.	தேர்வு எழுதியவர்கள்.	தேர்ச்சி பெற்றவர்கள்.	தேர்ச்சி விழுக்காடு. சதவிகிதம்.
(1)	(2)	(3)	(4)
1. அரசு மாணவர் விடுதி, பரமக்குடி.	49	16	33
2. அரசு மாணவர் விடுதி, பார்த்திபனூர்.	24	7	31
3. அரசு மாணவர் விடுதி, சத்திரக்குடி.	16	6	37½
4. அரசு மாணவா விடுதி, ஆர்.எஸ். மங்கலம்.	13	6	46
5. அரசு மாணவியர் விடுதி, பரமக்குடி.	13	6	46
6. அரசு மாணவியர் விடுதி, பார்த்திபனூர்.	10	4	40
7. அரசு மாணவியர் விடுதி, ஆர்.எஸ். மங்கலம்.	12	8	65

பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி விவரப் பட்டியல்.

விடுதியின் பெயர்.	தேர்வு எழுதியவர்கள்.	தேர்ச்சி பெற்றவர்கள்.	தேர்ச்சி விழுக்காடு. சதவிகிதம்.
(1)	(2)	(3)	(4)
1. அரசு மாணவர் விடுதி, பரமக்குடி.	54	42	80
2. அரசு மாணவர் விடுதி, பார்த்திபனூர்.	2	1	50

1993 அக்டோபர் 26]

(1)	(2)	(3)	(4)
3. அரசு மாணவர் விடுதி, சத்திரக்குடி.	8	6	75
4. அரசு மாணவியர் விடுதி, பரமக்குடி.	12	10	83
5. அரசு மாணவியர் விடுதி, பார்த்திபனூர்.	எவரும் தேர்வுக்குச் செல்லவில்லை.	..	..
6. அரசு மாணவியர் விடுதி, ஆர். எஸ். மங்கலம்.	ஷை	..	..

49—

பரமக்குடியில் ஆதிதிராவிடர் விடுதியில் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

வினா எண் 16636—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடியில் உள்ள ஆதிதிராவிட மாணவர், மாணவியர் விடுதிகளில் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கையைக் கூட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

1992–93 ஆம் கல்வியாண்டில் பரமக்குடியில் உள்ள மாணவ, மாணவியர் விடுதி ஒவ்வொன்றிலும் தலா 5 மாணவ மாணவியர் எண்ணிக்கையை அதிகரித்து ஆணையிடப்பட்டுள்ளது. 1993–94 ஆம் கல்வியாண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் தமிழ் நாடு முழுவதிலுமுள்ள ஆதிதிராவிடர் நல விடுதிகளில் கூடுதலாக 1,000 மாணவ, மாணவிகளைச் சேர்க்க அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பரமக்குடியிலுள்ள விடுதியில் மாணவ/மாணவியரின் எண்ணிக்கையை அதிகரிப்பது பற்றி, இடவசதி, தேவை ஆகியவற்றின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

50—

இராமநாதபுரம் மாவட்டத்தில் புதியதாக ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதிகள்.

வினா எண் 16691—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

இராமநாதபுரம் மாவட்டத்தில், புதிதாக 1992–93-ல் கட்ட இருக்கும் ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதிகள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம், சத்திரக்குடியில் 1992–93-ல் ரூ. 21.10 இலட்சம் செலவில் ஒரு ஆதிதிராவிட மாணவர் விடுதிக் கட்டிடம் கட்டுவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பதினாறாம் பட்டியல்.

1—

மத்திய அரசு பிரிவு அலுவலர்களுக்கு இணையான சம்பளம். இதர படிகள் மாநில அரசு பிரிவு அலுவலர்களுக்கு வழங்குதல்.

வினா எண் 7489—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் பிரிவு அலுவலர்களுக்கு இணையான சம்பளம், படி, இதர படிகள் எல்லா மாநில அரசின் பிரிவு அலுவலர்களுக்கும் வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) ஒரு சில மாநில அரசுகளைத் தவிர, அனைத்து மாநில அரசுகளும் மத்திய அரசின் பிரிவு அலுவலர்களுக்கு இணையாக அந்தந்த மாநில அரசின் பிரிவு அலுவலர்களுக்கு சம்பளம், படி மற்றும் இதர படிகளை வழங்கவில்லை.

(ஆ) மத்திய அரசின் பிரிவு அலுவலர்களுக்கு இணையான சம்பளம், படி மற்றும் இதர படிகள் வழங்கும் மாநிலங்களின் பெயர்கள் :

1. குஜராத்,
2. மகாராஷ்ட்டிரா மற்றும்
3. மத்திய பிரதேசம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, பிரிவு அலுவலர்களுக்கு மத்திய அரசிலுள்ள பிரிவு அலுவலர்களுக்கு இணையாக சம்பளம் மற்றும் அகவிலைப்படியும், சிறப்புப் படியாக ரூ. 100ம் மாநில அரசின் முறைப்படி வீட்டு வாடகைப்படியும், நகர ஈட்டுப் படியும் வழங்கப்படுகிறது.

2—

பரமக்குடி சார்பதிவாளர் அலுவலத்திற்கு தொலை பேசி மற்றும் ஊர்தி வசதி.

வினா எண் 14718—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் சார்பதிவாளர் அலுவலத்திற்கு தொலை பேசி மற்றும் ஊர்தி வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

நிதி பற்றாக்குறையின் காரணமாக நடவடிக்கை எதுவும் தற்போது எடுக்கப்படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

3—

பெருமகளூர் துணைப் பதிவாளர் அலுவலகத்திற்கு கட்டிட வசதி.

வினா எண் 13588—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பெருமகளூர் துணைப் பதிவாளர் அலுவலகத்திற்கு கட்டிடம் கட்ட பொது மக்களால் வாங்கப் பட்டுள்ள இடத்தில் 1992–93ல் கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பெருமகளூர் சார் பதிவகக் கட்டிடம் கட்டுவதற்கு பொது மக்களால் இடம் எதுவும் நன்கொடையாக அளிக்கப்படவில்லை. இதன் தொடர்பாக இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான 0.10 சென்ட் நிலம் ஒதுக்கீடு செய்து பெறுவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

4—

தனியார் அடகுக் கடைகளை தடை செய்தல்.

வினா எண் 11569—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வங்கிகளில் நகைக் கடன் கொடுப்பதால் தனியார் அடகு கடைகளை தடை செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விபிட—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

மக்கள் அனைவரும் வங்கிகளில் நகைக் கடன் பெறுவது என்பது இயலாத காரியம். மேலும் வங்கிகளில் தங்கம் / வெள்ளி நகைகளுக்கு மட்டுமே கடன் கிடைக்கும். ஆனால் தனியார் அடகு கடைகளில் பித்தளை பாத்திரங்கள் மற்றும் இதர வீட்டு உபயோகப் பொருட்களின் மீதும் கடன் கொடுக்கப் படுகிறது.

*விடை 8-4-1993ஆம் நாளிட்டது.

வங்கிகளில் கடன் என்பது குறிப்பிட்ட கால நேரங்களில் மட்டுமே கொடுக்கப்படுகிறது. ஆனால் தனியார் கடைகளில் அவசரத்தை முன்னிட்டு எந்நேரமும் கடன் பெறும் வாய்ப்பு உள்ளது. மக்களின் பொருளாதார நிலைமையில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்படும் வரை தனியார் அடகு கடைகளை தொடர்ந்து அனுமதிக்கப்படுவது அவசியமாகிறது.

மேற்கூறப்பட்ட காரணங்களை முன்னிட்டு தனியார் அடகு கடைகளை தடை செய்ய இயலாது.

5—

இடைநிலை ஆசிரியர் சான்று பெற்று இளநிலை ஆசிரியர் பணியிடத்தில் பணியாற்றிய காலத்தை இடைநிலை ஆசிரியர் தேர்வு / சிறப்பு நிலைகளுக்கு கணக்கில் கொள்ளுதல்.

வினா எண் 12121—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இடைநிலை ஆசிரியர் சான்று பெற்றும் இளநிலை ஆசிரியர் பணியிடத்தில் பணியாற்றிய பணிக்காலத்தை இடைநிலை ஆசிரியர் தேர்வு நிலை, சிறப்பு நிலைக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளத்தக்க வகையில் கல்வித் துறை ஆணை வெளியிடுமா ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இடைநிலை ஆசிரியர் சான்று பெற்றும் இளநிலை ஆசிரியர் பணியிடத்தில் பணியாற்றிய காலத்தை இடைநிலை ஆசிரியர் தேர்வு நிலை / சிறப்பு நிலைக்கு கணக்கில் கொள்ள இயலாது. குறைந்த ஊதிய விகிதத்தில் இளநிலை ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தை இடைநிலையில் தேர்வு நிலைக்காக கணக்கில் கொள்ள முடியாது.

6—

பேராவூரணி தொடக்கப்பள்ளிகளுக்கு போதிய ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் 13723—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

* விடை—25—2—1993 ஆம் நாளிட்டது.

பேராவூரணி தொகுதி, பொக்கன்விடுதி (தெற்கு) திருச்சிற்றம்பலம், உப்புவிடுதி, பொக்கன்விடுதி (வடக்கு) செருவாவிடுதி தெற்கு மற்றும் வடக்கு, ஏனாதிகரம்பை செங்கமங்கலம், கோனார்தெரு, குப்பத்தேவன் ஆகிய தொடக்கப் பள்ளிகளுக்குப் போதிய ஆசிரியர் நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

* விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

7—

அரசு மருத்துவமனைகளில் Honorary Surgeon பதவிகளை நீக்குதல்.

வினா எண் 1642—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவமனைகளில் (Honorary Surgeon) பதவிகளை நீக்குவதற்கு செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் 91 கௌரவ மருத்துவர்கள் பதவிகள் இருந்தன. இவற்றில் 32 பதவிகளை அரசு பணி பதவிகளாக (Paid posts) மாற்ற 29–12–1992ல் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. ஏனைய கௌரவ மருத்துவர்கள் பதவிகளை நீக்க தற்சமயம் செயற் குறிப்பு இல்லை.

* விடை—25—2—1993 ஆம் நாளிட்டது.

8—

மருத்துவத் தொழிலை வியாபார ரீதியில் செய்வதை கட்டுப்படுத்துதல்.

வினா எண் 4565—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் மருத்துவர்கள் தனியார் மருத்துவமனையை ஏற்படுத்தி மருத்துவத் தொழிலை வியாபார ரீதியில் செய்து வருவதைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) அரசு விதிகளின்படி ஆலோசனை கூறுவதற்கு (Consultation practice) மட்டும்தான் அனுமதி உண்டு. தனியாக மருத்துவமனை நடத்துவதற்கு அனுமதி இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

9—

அகர ஆலம்பாடியில் சுகாதார நிலையம்.

வினா எண் 7619—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புவனகிரி ஒன்றியம் அகர ஆலம்பாடியில் சுகாதார நிலையம் சரிவர இயங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

புவனகிரி ஒன்றியம், அகர ஆலம்பாடியில் துணை சுகாதார நிலையம் ஒன்று திறம்பட இயங்கி வருகிறது. அகர ஆலம்பாடியில் உள்ள துணை சுகாதார நிலையம் தடையின்றி

இயங்கும் பொருட்டு கிராம சுகாதார செவிலியர் ஒருவரை மாற்றம் செய்து தற்போது உத்திரவிடப்பட்டுள்ளது. துணை சுகாதார நிலையத்திற்கு தேவையான மருந்துகள் சேத்தியா தோப்பு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

10—

காடம்பாறை நீரேற்று மின் நிலையத்தில் அவசர மருத்துவ வசதி பிரிவு.

வினா எண் 7902—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காடம்பாறை நீரேற்று மின் நிலையத்தில் அவசர மருத்துவ வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

காடம்பாறை நீரேற்று மின் திட்டத்தில் மின்வாரிய குடியிருப்பில் இருக்கும் ஊழியர்களுக்கும், குடும்பத்தினருக்கும் தகுதி வாய்ந்த சார்பு நிலைப் பணியாளர்களுடன் ஒரு மருத்துவ அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். ஆரம்பகட்ட சுகாதார மையத்தின் வசதிகளுக்கு இணையாக மருத்துவ வசதிகள் அளிக்கப் பட்டு வருகின்றன. ஊழியர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் போதிய மருத்துவ பரிசோதனை செய்யப்படுகின்றது.

11—

குமுளூர் மகளிர் மைய மன்றம் சார்பாக ஆரம்ப சுகாதார நிலையம்.

வினா எண் 8667—திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி வட்டம், குமுளூர் கிராமத்தில் மகளிர் மைய மன்றம் சார்பாக ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த 1986 ஆம் ஆண்டு ரூபாய் பத்தாயிரம் கட்டப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அரசு ஆணைப்படி 1986 ஆம் ஆண்டில் பணம் கட்டப் பட்டும் இதுவரை மருத்துவமனை மையம் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) தெரியும்.

(ஆ) புல்லம்பாடி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை யான 93759–க்கேற்ப ஏற்கனவே அங்கு 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதால் கூடுதலாக மேலும் ஒரு ஆரம்ப சுககாதார நிலையம் மேற்படி கிராமத்தில் அமைப்பதற் கான சாத்தியக்கூறுகள் இல்லை.

12—

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய சிகிச்சைப் பிரிவுகளைத் துவக்குதல்.

வினா எண் 8684—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக என்னென்ன சிகிச்சைப் பிரிவுகள் துவங்கவும் அவற்றிற் கான கருவிகள் வாங்கவும் அரசு அனுமதித்திருக்கிறது ?

(ஆ) அரசு அனுமதி அளித்தும் இன்னமும் அவை நிறைவு செய்யப்படாமல் இருப்பது அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், விரைவில் நிறைவேற்ற அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் கதிர் வீச்சு முறை சிகிச்சைப் பிரிவுக்குக் கட்டிடம் கட்ட 11–8–1987 நாளிட்ட அரசு நிலை ஆணை எண் 1526-ல்

ரூ. 15 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு கட்டிடம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. 1980, ஆகஸ்ட் திங்களில் ஒட்டுத்தசை மற்றும் நரம்பியல் துறை துவங்க அரசு அனுமதி அளித்து கட்டிடம் கட்டி முடிக்கும் நிலையில் உள்ளது.

(ஆ) மற்றும் (இ) : கோபால்ட் கதிர் வீச்சுக் கருவிகள் வாங்க பகுதி இரண்டாம் திட்டத்தில் செயற் குறிப்பு அனுப்பு மாறு மருத்துவக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட் டுள்ளார்.

13—

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டிடம்.

வினா எண் 10806—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, பாம்பூர், வெங்கடங்குறிச்சி, மஞ்சூர், நயினார்கோவில் மற்றும் கொடிக்குளம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) கட்டிடம் கட்டித் தர அரசு எடுத்துள்ள நடவடிக்கை கள் யாவை ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பாம்பூர், வெங்கடங்குறிச்சி மற்றும் நயினார்கோவிலில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒவ்வொன்றிற்கும் சுமார் ரூ. 6.75 இலட்சம் செலவில் மருத்துவ மனையும் மருத்துவ அலுவலர் குடியிருப்பும் கட்ட 1990 ஆம் ஆண்டு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் கொடிக்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ. 7 இலட்சம் செலவில் கட்டிடம் கட்ட தமிழ்நாடு அரசிற்கு குடும்ப நலத்திட்டத்திற் காக அளிக்கப்பட்ட பரிசுத் தொகையிலிருந்து அனுமதியளிக்கப் பட்டுள்ளது. மஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டிடங்கள் வரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைகளைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும்

14—

மேட்டுப்பாளையம் தாலுக்கா மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி.

வினா எண் 11011—செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தாலுகா மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

தற்சமயம் அரசு தாலுகா மருத்துவமனைகளுக்கு அமரர் ஊர்தி வழங்கப்படுவதில்லை. மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் மட்டுமே அமரர் ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே மேட்டுப்பாளையம் தாலுகா மருத்துவமனையிலும் தற்சமயம் அமரர் ஊர்தி கிடையாது. ஆயினும் அம்மருத்துவமனைக்கு இரண்டு ஆம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. நிதி நிலைக்கேற்ப அமரர் ஊர்திகள் மேட்டுப்பாளையம் தாலுகா உட்பட தாலுகா மருத்துவமனைகளுக்கும் வழங்க வரும் நிதி யாண்டுகளில் பரிசீலிக்கும்.

15—

அனைத்து அரசு வண்டிகளை இன்சூர் செய்தல்.

வினா எண் 11236—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether a number of vehicles belonging to the Directorate of Medical Services have not been insured yet?
(b) The details there of?
(c) The reasons there of?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு வாகன கட்டுப்பாட்டு விதிகளின்படி அனைத்து அரசு வண்டிகளை இன்சூர் செய்ய வேண்டியது அவசியமில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

16—

ஈசநத்த அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம்.

வினா எண் 11353—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சித் தொகுதியைச் சேர்ந்த ஈசநத்தத்தில் உள்ள அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : அரவக்குறிச்சி தொகுதியிலுள்ள ஈசநத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநரின் ஆய்வில் உள்ளது. இந்தத் திட்டம் வரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

17—

குடும்ப நலத்திட்டத்திற்கு மருத்துவமனைகளுக்கு வழங்கும் முன் பணத்தை அதிகப்படுத்துதல்.

வினா எண் 13484—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[1993 அக்டோபர் 26]

குடும்ப நலத்திட்டத்திற்கு என மருத்துவமனைக்கு முன் பணமாக ரூ. 5,000 அனுமதி வழங்கியதை ரூ. 10,000 ஆக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

பொதுவாக இது குறித்து செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. எனினும் கீழ்க்கண்ட மாவட்டத்திலுள்ள சில மருத்துவ மனைகளுக்கு முன் பணமாக ரூ. 5,000 ரூ. 10,000, ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

1. சென்னை
2. செங்கல்பட்டு
3. வடஆற்காடு
4. தென்ஆற்காடு
5. தஞ்சாவூர்
6. திருச்சி
7. மதுரை
8. திருநெல்வேலி
9. கன்னியாகுமரி
10. இராமநாதபுரம்
11. கோயம்புத்தூர்
12. சேலம்
13. தர்மபுரி
14. புதுக்கோட்டை மற்றும்
15. பெரியார்

மாவட்ட இணை இயக்குநரின் பரிந்துரைகளின் அடிப் படையில் ஆய்வு செய்யப்பட்டு இவ்வுயர்வு அளிக்கப்படுகிறது.

18—

பொள்ளாச்சி – வடக்கிபாளையத்திற்கு (வழி) ஆர். பொன்னா புரம் நகரப் பேருந்து வசதி.

வினா எண் 10969—திரு. நா.சா. பழனிசாமி : மாண்பு மிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சியிலிருந்து வடக்கிபாளையம் செல்லும் நகரப் பேருந்துகளில் ஏதாவது இரண்டினை ஆர். பொன்னாபுரம்,

சி. கோபாலபுரம் வழியாக வடக்கிபாளையம் வரை மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

பொள்ளாச்சி—வடக்கிபாளையம் பிரதான சாலையி லிருந்து ஆர். பொன்னாபுரம்,சி. கோபாலபுரம் கிராமங்கள் முறையே 0.5 கி.மீ. மற்றும் 0·9 கி.மீ. நடை தூரங்களில் உள்ள கிராமங்கள் ஆகும்.

பொள்ளாச்சி—வடக்கிபாளையம் பிரதான சாலை களில் இயக்கப்படும் நகரப் பேருந்துகளை மேற்காணும் கிரா மங்கள் வழியாக இயக்கினால் நேரடிப் பயணிகள் அதிகக் கட்ட ணம் செலுத்த நேரிடும்.

தற்போது ஆர். பொன்னாபுரம் கிராமம் வழியாக பொள் ளாச்சியிலிருந்து இரு நகரப் பேருந்துகள் தினசரி 20 நடைகளும். சி. கோபாலபுரம் கிராமம் வழியாக ஒரு நகரப் பேருந்து தினசரி 16 நடைகளும் என இயக்கப்படுவதாலும், பொள்ளாச்சி–வடக்கிபாளையம் பிரதான சாலைக்கு மிக அருகாமையில் மேற் காணும் இரு கிராமங்கள் நடை தூரத்தில் இருப்பதாலும் பொள்ளாச்சியிலிருந்து வடக்கிபாளையம் செல்லும் நகரப் பேருந்துகளில் ஏதாவது இரண்டினை மேற்காணும் இரு கிராமங் கள் வழியாக வடக்கிபாளையம் வரை மாற்றும் திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

19—

பொள்ளாச்சி–நெகமம் புதிய நகரப் பேருந்து வழித்தடம்.

வினா எண் 10971—திரு. நா.சா. பழனிசாமி : மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சியிலிருந்து ராசக்காபாளையம் வழியாக திருப் பூர் சாலையில் சென்று கள்ளிப்பட்டி, கணக்கம்பட்டி, கருமா புரம், ஆவல்பம்பட்டி, ஜோத்தம்பட்டி, மூலனூர் வழியாக நெகமம் வரை செல்லும் புதிய நகரப் பேருந்து வழித்தடம் தொடங்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

உறுப்பினர் அளித்துள்ள வழித்தடத்தில் உள்ள சாலைகள் பேருந்து இயக்க ஏற்ற நிலையில் இல்லாமல் பழுதுற்று உள்ளது. கள்ளிப்பட்டி பிரிவு முதற் கொண்டே கவுண்டம்பாளையம் வரையிலான 4.8 கி.மீ. தூரமுள்ள கப்பி சாலை பேருந்து இயக்க ஏற்ற நிலையில் இல்லை. மேலும் ஜோத்தம்பட்டி முதல் மூலனூர் வரை 3.1 கி.மீ. மண்சாலை பேருந்து இயக்க ஏற்ற நிலையில் இல்லை. இச்சாலைகள் பழுதுற்றிருப்பதால் பொள்ளாச்சி-நெகமம் (வழி) ராசக்காபாளையம், கள்ளிப்பட்டி, கணக்கம்பட்டி, கருமாபுரம், ஆவல்பம்பட்டி, ஜோத்தம்பட்டி, மூலனூர் என புதிய நகர வழித்தடம் தற்போது தொடங்க இயலாது. இருப்பினும் மேற்காணும் குறைபாடுடைய சாலைகள் சீரடையும்போது பேருந்து இயக்கும் திட்டத்தைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

20—

அறந்தாங்கி — மேற்பனக்காடு வழித்தடத்தில் கூடுதல் பேருந்து

வினா எண் 13634— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது அறந்தாங்கியிலிருந்து மேற்பனக்காடு வரை செல்லும் நகரப் பேருந்து போதவில்லை. ஆதலால் இன்னுமொரு கூடுதல் நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

குறிப்பிட்டுள்ள வழித்தடத்தில் பயணிகள் பயணம் செய்யும் விகிதாச்சாரம் 65 விழுக்காடுகளே உள்ளதால் அறந்தாங்கியிலிருந்து மேற்பனக்காட்டிற்கு கூடுதலாக நகரப் பேருந்து இயக்கிடும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

21—

கோயமுத்தூர் பேருந்து நிலையத்தில் முன்கூட்டியே பயணச் சீட்டு வழங்க நடவடிக்கை

வினா எண் 15157—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயமுத்தூரில் பேருந்து நிறுத்தங்களில் பயணச்சீட்டு வழங்கும் பெட்டி அமைத்து முன்கூட்டியே பயணச்சீட்டு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்;, போக்குவரத்துத் துறை அமைச்சர் :

கோயமுத்தூர் நகரில் தனியார் துறை பேருந்துகளும் இயக்கப்படுவதால் பயணச்சீட்டு வழங்கும் பெட்டி பேருந்து நிறுத்தங்களில் அமைத்து முன்கூட்டியே பயணச்சீட்டு வழங்குவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால் அதனை நடைமுறைப்படுத்த ஏதுவாக அமையாது.

22—

இராமநாதபுரம் மாவட்டத்தில் காடுகளை வளர்த்தல்

வினா எண் 16047—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் இயற்கை வளம் குறையாமல் இருக்க காடுகள் வளர்க்க அரசு எடுத்துள்ள திட்டங்களின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் இயற்கை வளம் குறையாமல் இருக்க 'பண்ணைக்காடு' திட்டத்தின் கீழும் மற்றும் சிடா நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட சமூகக் காடு

வளர்ப்புத் திட்டத்தின் கீழும் 13,500 எக்டேரில் தீவனம், சவுக்கு மற்றும் பலவகை மரங்களையும், சாலையோரம், இருப்புப் பாதை மற்றும் கால்வாய் ஓரங்களில் 666 கி.மீ. தூரமும் காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாடு திட்டத்தின் (D.P.A.P.) கீழும் நடப்பு நிதியாண்டில் (1992–93) ஏராளமான கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, 50 இலட்சம் செடிகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டுகளில் 20,000 மரக் கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டு இயற்கை வளம் குறையாமல் இருக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

23—

அலமதிக்காடு செருபாலக்குளத்தை பராமரித்தல்

வினா எண் 13357—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், பேராவூரணி சப்டிவிஷன் அலமதிக்காடு கிராமத்திலுள்ள செருபாலக்குளத்தை 1992–93-ல் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

காவிரி டெல்டாவிலுள்ள பாசன அமைப்புகளை ஒருங்கிணைந்த வகையில் மேம்பாடு செய்வதற்காக காவிரி வடிநில பாசன மேம்பாடு ஆணைக்குழு (CADRA) ஒன்று ஏற்படுத்தலாமென தமிழக அரசு கருதுகிறது. காவிரி நீரை நன்முறையில் பயன்படுத்த வகை செய்யும் இத்திட்டம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததால் இவ்வரசு இதனை ஒரு மத்திய அரசு திட்டமாக செயலாக்கலாமெனக் கருதி ரூ. 952 கோடி அளவுக்கு தேசிய நீர் மேலாண்மை திட்டம், பண்ணை மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான செயற்குறிப்புகளை மத்திய அரசின் எட்டாவது திட்டத்தில் சேர்ப்பது பற்றி பரிசீலிப்பதற்கு மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

24—

வீரமுடையான் நத்தம் குளத்தில் தூர் வாரி படித்துறை கட்டுதல்

வினா எண் 9178—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சியில் வீரமுடையான் நத்தம் கிராமத்திற்கு குளம் தூர் வாரி படித்துறை கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஊராட்சி வீரமுடையான் நத்தம் கிராம குளம் தூர் அகற்றி படித்துறை கட்டும் பணி ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிதி வசதிக்கேற்ப ஒன்றிய அளவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

25—

நத்தைமேடு காலனி குளத்தில் தூர் வாரி படித்துறை கட்டுதல்

வினா எண் 9180—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், நத்தைமேடு காலனிக்கு குளம் தூர் வாரி படித்துறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

*விடை—10-3-1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி ஊராட்சி ஒன்றியம், நத்தைமேடு காலனிக்கு குளம் தூர் அகற்றி படித்துறை கட்டும் பணி ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கு இணங்க ஊராட்சி ஒன்றிய அளவில் மேற்கொள்ளப்படும்.

26—

பின்னலூர் காலனி குளத்தில் தூர்வாரி படித்துறை கட்டுதல்.

வினா எண் 9189—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், பின்னலூர் காலனிக்கு குளம் தூர் வாரி படித்துறை கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி ஊராட்சி ஒன்றியம், பின்னலூர் காலனி குளத்திற்கு படித்துறை கட்டித்தரும் பணி ஜவகர் வேலை வாய்ப்புத் திட்ட நிதியில், ஒன்றிய அளவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

27—

மலேசியாவில் வாங்கப்படும் பாமாயில் கொள்முதல் விலை.

வினா எண் 10710—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் விநியோகிப்பதற்காக மலேசியாவில் வாங்கப்பட்ட பாமோலின் எண்ணையின் கொள்முதல் விலை என்ன ?

(ஆ) இம்மாநிலத்தில் பாமோலின் விற்பனை விலை என்ன?

* விடை—10-3-1993 ஆம் நாளிட்டது.
** விடை—10-3-1993 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) இம்மாநிலத்தில் விநியோகிப்பதற்காக வாங்கப்பட்ட பாமோலின் கொள்முதல் விலை ஒரு டன்னுக்கு 392.50 அமெரிக்க டாலர்களாகும். (கொள்முதல் காப்பீடு மற்றும் ஏற்ற இறக்க கூலி உட்பட) 1 டாலரின் இந்திய நாணய மதிப்பு ரூ. 26.20. அவ்வெண்ணை இங்கு வந்து சேரும் போது எல்லாச் செலவுகளும் உட்பட அடக்க விலை ஒரு டன்னுக்கு ரூ. 11,765 ஆகும்.

(ஆ) பாமோலின் எண்ணையின் விற்பனை விலை பின் வருமாறு :

1. உதிரி எண்ணைய் (1 கிலோவிற்கு) ரூ. 22.50

2. பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டது (1 கிலோவிற்கு). ரூ. 24.00

மைய அரசு உதிரி பாமோலின் விற்பனை விலை ரூ. 25 என தெரிவித்துள்ளது.

28—

காயாவூரில் பால் வழங்கும் சங்கம்.

வினா எண் 12785—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, காயாவூரில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, காயாவூரில் ஏற்கெனவே, ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் இயங்குவதால் மேற்படி பகுதியில் புதியதாக ஒரு பால உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க வாய்ப்பில்லை. இப்பொருள் குறித்து அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

* விடை—23-3-1993 ஆம் நாளிட்டது.

** விடை—18-3-1993 ஆம் நாளிட்டது

29—

கல்லூர்ணிக்காட்டில் பால் வழங்கும் சங்கம்.

வினா எண் 12786—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, கல்லூர்ணிக்காட்டில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

* விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, கல்லூர்ணிக்காடு கிராமத்தில் ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க ஆய்வு செய்ததில் அங்கு ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கு போதுமான அளவு பால் உற்பத்தி மற்றும் உபரி பால் உள்ளதென அறியப்பட்டு மேற்படி கிராமத்தில் ஒரு புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கு தஞ்சை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றிய நிர்வாக இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசளவில் செயற்குறிப்பு தற்பொழுது ஏதுமில்லை.

30—

பின்னவாசலில் பால் வழங்கும் சங்கம்.

வினா எண் 12787—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பின்னவாசலில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

* விடை—18-3-1993 ஆம் நாளிட்டது.

* விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பின்னவாசலில் ஏற்கெனவே, ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் இயங்கி வருவதால் மேற்படி பகுதியில் புதிதாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைக்க வாய்ப்பில்லை. எனவே, இப்பொருள் குறித்து அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

31—

சொர்ணக்காட்டில் பால் வழங்கும் சங்கம்.

வினா எண் 12788—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சொர்ணக்காட்டில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

** விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சொர்ணக்காட்டில் ஏற்கனவே ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் இயங்கி வருவதால் மேற்படி பகுதியில் புதிதாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க வாய்ப்பில்லை. எனவே, இப்பொருள் குறித் அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

32—

பட்டத்தூரணியில் பால் வழங்கும் சங்கம்.

வினா எண் 12790—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டத்தூரணியில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

* விடை—18-3-1993 ஆம் நாளிட்டது.

** விடை—18-3-1993 ஆம் நாளிட்டது.

* விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பட்டத்தூரணியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைக்க யாரும் முன்வரவில்லை. ஆதலால், இப்பகுதியில் சங்கம் பதிவு செய்ய வாய்ப்புகள் ஏதும் இல்லை. எனவே, பேராவூரணி தொகுதி பட்டத்தூரணியில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

33—

அழகியநாயகிபுரத்தில் பால் வங்கும் சங்கம்.

வினா எண் 12798—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதியிலுள்ள அழகியநாயகிபுரத்தில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

** விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, அழகியநாயகிபுரத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைக்க யாரும் முன் வரவில்லை. ஆதலால் இப்பகுதியில் புதிதாக சங்கம் பதிவு செய்ய வாய்ப்புகள் ஏதும் இல்லை. எனவே, பேராவூரணி தொகுதியிலுள்ள அழகியநாயகிபுரத்தில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

* விடை—18–3–1993 ஆம் நாளிட்டது.

** விடை—18–3–1993 ஆம் நாளிட்டது.

34—

ஆண்டிக்காட்டில் பால் வழங்கும் சங்கம்.

வினா எண் 12799—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதியில் உள்ள ஆண்டிக்காட்டில் பால் வழங்கும் சங்கம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை வட்டம், ஆண்டிக்காடு கிராமம், பள்ளத்தூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க விவகார எல்லையில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் தற்போது உபரி பாலை பள்ளத்தூர் சங்கத்திற்கு வழங்கிப் பயன் பெறுகிறார்கள். எனவே, மேற்படி கிராமத்தில் புதிதாக சங்கம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்று கருதப்படுகிறது.

35—

சூளகிரியில் தருமபுரி மத்திய கூட்டுறவு வங்கி கிளை.

வினா எண் 14597—திரு. கே.ஏ. மனோகரன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூளகிரியில் தருமபுரி மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை திறக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

* விடை—18-3-1993 ஆம் நாளிட்டது.

** விடை—6-4-1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

36—

தொழிலாளர் நீதிமன்றங்களில் நடுவர்கள் பதவிகளை நிரப்புதல்.

வினா எண் 14582—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல தொழிலாளர் நீதிமன்றங்களில் நடுவர்கள் பதவி காலியாக உள்ளதால் பல ஆண்டுகளாய் வழக்குகள் தீர்க்கப் படாமல் நிலுவையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : அனைத்து தொழிலாளர் நீதிமன்றங் களில் நடுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

37—

போனஸ் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு.

வினா எண் 15152—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

போனஸ் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண லாப அடிப் படையில் போனஸ் சதவீதம் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

தற்போது அமுலில் உள்ள 1965 ஆம் ஆண்டு போனஸ் பட்டுவாடா சட்டப் பிரிவுகள் 10, 11 மற்றும் 31ஏ-ன் கீழ், லாபத்தின் அடிப்படையிலும், உற்பத்தியோடு இணைக்கப் பட்டதன் அடிப்படையிலும், போனஸ் சதவீதம் நிர்ணயம் செய்ய வழிவகைகள் உள்ளன. இவற்றை நிர்ணயம் செய் வதில் முடிவு ஏற்படாமல் பிரச்சினைகள் அல்லது கருத்து வேறு பாடுகள் ஏற்பட்டால், தொழிற் தகராறுகள் சட்டப்படி தொழில் நீதிமன்றங்களுக்கு அப்பிரச்சினைகள் விடப்பட்டு தீர்வு காணப் படுகின்றன. எனவே, இம்முறைகள் தவிர லாப அடிப்படையில்

மட்டும் போனஸ் பிரச்சினையில் நிரந்தர தீர்வு காண்பதற்கு வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் உத்தேசம் ஏதும் அரசுக்கு தற்போது இல்லை.

38—

தோட்டக் கலைத் துறையின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் செயல்படுத்தும் திட்டங்கள்.

வினா எண் 14520—திரு. கே.ஏ. மனோகரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டக் கலைத் துறையின் மூலமாக தருமபுரி மாவட்டத்தில் செயல்படுத்தப் போகும் திட்டங்கள் என்ன?

(ஆ) அதன் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ)—

(1) ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்.

(2) ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்.

(3) திம்மாபுரம் மற்றும் ஜீனூர் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளை நிர்வகித்தல்.

(4) வேளாண் வளர்ச்சிக்கு உலக நிதியுதவி, பெண்கள் மேம்பாட்டுத் திட்டம்.

(5) நலிவடைந்த தோட்டங்களை புதுப்பிக்கும் திட்டம்.

(6) கிராமப்புறப் பகுதிகளில் ஊட்டமிகு சத்துமிக்க பழத்தோட்டங்கள் அமைத்தல்.

(7) காய்கறி விதை சிறுதளை திட்டம்.

(8) ஒருங்கிணைந்த வாசனை திரவியப் பயிர் அபிவிருத்தி திட்டம்.

தர்மபுரியில் தர்மபுரி மாவட்ட வளர்ச்சி கழகத்தினரால் செயல்படுத்தப்படும் தோட்டக்கலைத் திட்டங்கள்—

(1) வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

(2) தோட்டக்கலை நாற்றங்கால், போலயம்பள்ளி.

(ஆ) தற்போதைய நிலை :

மேற்படி திட்டங்கள் யாவும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். இனிவரும் ஆண்டுகளிலும் இத்திட்டம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு அதிக விவசாயிகள் பயனடைய ஏற்பாடு செய்யப்படும். 1991–92 ஆம் ஆண்டில் தோட்டக் கலைத்துறையின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் அமுல் படுத்தப்பட்ட திட்டங்களின் இலக்கு மற்றும் சாதனை விவரங்கள் கீழ்வருமாறு :—

வரிசை எண்	திட்டத்தின் பெயர்.	பொருள் இலக்கு (ஹெக்.)		நிதி இலக்கு (ரூ. இலட்சம்.)	
		இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்.—				
	பழவகை பயிர் பரப்பு அதிகரித்தல் (ஹெக்.)	875	566	23.15	18.241
	காய்கறி வகை பயிர் பரப்பு அதிகரித்தல் (ஹெக்.)	875	830		
2.	ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்—				
	பழங்குடியினருக்கு தனியார் பழப்பண்ணை அமைத்தல் (ஏக்.)	200	200	3.573	2.265

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பழப்பண்ணை பராமரிப்பு	200	200		
பழங்குடியினருக்கு பயிற்சி அளித்தல் (நபர் எண்ணிக்கை).	100	100	3.573	2 265
பயணம் (பழங்குடியினர் நபர் எண்ணிக்கை)	50	..		
தெளிப்பான் விநியோகம்	10	10		
3 அரசு தோட்டக்கலைபபண்ணை திம்மாபுரம்—				
கன்றுகள் உற்பத்தி (எண்ணிக்கை இலட்சம்)	2.28	2.84	..	5.32
ஜீனூர்— ..				
கன்றுகள் உற்பத்தி (எண்ணிக்கை இலட்சம்)	1.66	2.35	..	6.42
4 வேளாண் வளர்ச்சிக்கு உலக நிதியுதவி பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் (பெண்கள் எண்ணிக்கை).	450	..	42.07	..
5 பழைய புழப்பண்ணைகளை புத்துயிர் செய்தல் (ஹெக்.)	30	30	0.357	0.155
6 கிராமப்புறங்களில் சத்துணவுத் தோட்டம் அமைத்தல்—				
(எண்ணிக்கை) பழவகை செடிகள்	1,28,000	69,000	6.4	0.75

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

7 காய்கறி சிறுதளை திட்டம்—				
காய்கறி சிறுதளை எண்ணிக்கை ..	2,1 00	300	1.757	0.225
8 வறட்சி நிவாரண பகுதித் திட்டம்				
மா பரப்பு விரிவாக்கம் 50 மான்யம் (ஹெக்.)	400	250		
கற்றாழை வேலி அமைத்தல் (ஹெக்.) ..	400	238		
பாசனம் (ஹெக்.)	400	237	8.40	4.815
தோட்டக்கலைச் செடிகள் நாற்றங்கால் உற்பத்தி திட்டம் (இலட்சம்).	0.170	0.170		
9 ஒருங்கிணைந்த வாசனைத் திரவியங்கள் உற்பத்தி—				
மிளகு வேர் கரணைகள் உற்பத்தி (எண்.)	64,000	..	0.45	..
இடுபொருள் மான்யம் வழங்குதல் ..	313	..	0.39	..
மிளகு செயல் விளக்கப் பாத்திகள் ..	16	..	0.07	..
மிளகு உற்பத்தியாளருக்கு பயிர் பாதுகாப்பு தெளிப்பான் விநியோகம்.	16	..	0.08	..
மரவாசனை திரவிய நடவு பொருட்கள் உற்பத்தி.	4,430	..	0.18	..

தனியா சிறுதளை விநியோகம்	536	95	0.62	0.19
வாசனை திரவிய சிறு உற்பத்தியாளர்களுக்கு தெளிப்பான்கள் விநியோகம்.	15	2	0.08	0.02
மஞ்சள் விதை பெருக்கத்திற்கு செயல் விளக்கம் எண்ணிக்கை.	33	5	0.36	0.05
மிளகாய் விதை பெருக்கத்திற்கு செயல் விளக்கம் எண்ணிக்கை.	26	4	..	..
பயிர் பாதுகாப்பு செயல் விளக்கம் எண்ணிக்கை.	390	..	..	..
மிளகாய் உற்பத்திக்குத் தெளிப்பான் விநியோகம். ..	9	1	..	..
மரவாசனை திரவியங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்தல்.	8	..	..	..
நாற்றுக் கொட்டகை கட்டுமானம் ..	1	..	..	..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 அக்டோபர் 26]

39—

கிராமப்புற கால்நடை மருத்துவமனைகளில் வயதான காளைகளின் விந்துகளை உபயோகித்தல்.

வினா எண் 14620— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கிராமப்புற கால்நடை மருத்துவமனைகளில் பசுமாடுகளுக்கு போடப்படும் ஊசியில் வயதான காளைகளின் விந்துகளை உபயோகிப்பதால் ஒரே தடவையில் கரு நிற்காதது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) தமிழகத்து கிராமப்புற கால்நடை மருத்துவமனைகளில் பசுமாடுகளுக்கு போடப்படும் ஊசியில் வயதான காளைகளின் விந்துகள் உபயோகப்படுவதில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

40—

நூல் தட்டுப்பாட்டை போக்க பருத்தி உற்பத்தியை ஊக்குவித்தல்

வினா எண் 15901— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நூல் தட்டுப்பாட்டை போக்க பருத்தி உற்பத்தியை ஊக்குவிக்க அரசு சலுகைகள் அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) பருத்தி உற்பத்தியை ஊக்குவிக்க பருத்தி விதை, பூச்சிக்கொல்லி மருந்து, பூச்சிக்கொல்லி மருந்தடிக்கும் சாதனம், தெளிப்பு நீர் சாதனம் மற்றும் இனக் கவர்ச்சி பொறி ஆகிய இனங்களுக்காக மத்திய நிதி உதவியுடன் ரூ. 60.775 இலட்சம் செலவில் தமிழ்நாட்டில் செயல்படும் தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

41—

திருச்சிற்றம்பலத்தில் சமுதாயக்களம் அமைத்தல்.

வினா எண் 15620-ஏ— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி ஒன்றியம், வலச்சேரிக்காடு மற்றும் திருச்சிற்றம்பலத்தில் நெல் அறுவடை காலங்களில் பயன்படுத்த சமுதாய களம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு, கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

மேற்கண்ட பகுதிகளில் சமுதாயக்களம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

42—

அரசு அலுவலர்களுக்கு ஒதுக்கப்படும் வீட்டுவசதி வாரிய வீடுகளின் வாடகை.

வினா எண் 13997— திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அரசு அலுவலர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வீடுகளுக்கான வாடகை தற்போது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது ?

(ஆ) வாடகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) நிதித்துறை (ஊதியக்குழு) வெளியிட்டுள்ள அரசாணை எண். 666, நாள் 27—6—1989-ன்படி வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அரசு அலுவலர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வீடுகளுக்கான வாடகை, அடிப்படை ஊதியத்தின் அடிப்படையில் வீடுகள் அமைந்துள்ள மாநகரம்/நகரம்/பேரூர்/சிற்றூர் என்ற தரப் பிரிவுகளைப் பொறுத்து கீழ்க்கண்டவாறு பிடித்தம் செய்யப்படுகிறது:

அடிப்படை ஊதிய விகிதம்.	நிலை 1(அ) நிலை 1(ஆ)	நிலை 2	நிலை 3	மற்ற இடங்கள்.
	(சதவிகித அடிப்படையில்).			
(1)	(2)	(3)	(4)	(5)
950—1,799	3	3	2	2
1,800—2,999	5	4	4	3
3,000 மற்றும் அதற்கு மேல்.	8	8	8	6

இந்த புதிய வாடகை பிடித்தம் 1—7—1988

(ஆ) தற்சமயம் இல்லை.

43—

மாயமான்குறிச்சி சத்துணவுக் கூடத்தை சீரமைத்தல்

வினா எண் 8717— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம், மாயமான்குறிச்சி கிராமத்தில் இருக்கும் சத்துணவுக் கூடத்தைச் சீரமைக்க அரசு முன் வருமா

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாயமான்குறிச்சி கிராமத்தில் உள்ள சத்துணவுக் கூடம் ரூ. 7,500 மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

44—

தென் கிருஷ்ணவரம் காலனி சத்துணவுக் கூடத்திற்கு கட்டிடம்.

வினா எண் 12759— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைகளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், தென் கிருஷ்ணவரம் காலனிக்குச் சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், தென் கிருஷ்ணவரம் காலனியில் 2+4+ குழந்தைகள் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. எனவே, தனியாக அங்கு மையம் ஏற்படுத்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

சம்பைபட்டின சத்துணவுக் கூட மையத்திற்கு கட்டிட வசதி.

வினா எண் 13423— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவா சத்திரம் ஒன்றியம் சம்பைபட்டினத்தில் 1992-93-ல் கத்துணவு கூடத்திற்குச் கட்டிடம் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி சமூக நலத் துறை அமைச்சர் :

சேதுபாவா சத்திரம் ஊராட்சி ஒன்றியம், சம்பைப் பட்டினம் சத்துணவுக் கூடத்திற்கு 1992-93-ல் கட்டிடம் கட்ட செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

46—

பின்னவாசல் சத்துணவு மையத்திற்கு கட்டிட வசதி.

வினா எண். 13450—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பின்னவாசலில் சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பின்னவாசலில் சத்துணவுக் கூடம் கட்டித்தர கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

47—

பஞ்சப்பள்ளி சிறார் சீரமைப்புப் பள்ளி.

வினா எண் 14546—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளியில் உள்ள சிறார் சீர்திருத்தப் பள்ளியின் சிறார்களை சீர்திருத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளி அரசினர் இளைஞர் இல்லத்தில் (சீர்திருத்தப்பள்ளியில்) உறையும் சிறார்களுக்கான உணவு, உடை மற்றும் உறைவிட வசதிகள் அரசினரால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வில்லத்தில் அமைந்துள்ள கல்விப் பகுதியில் ஒன்று முதல் எட்டு வகுப்பு வரை சிறார்களுக்கு கல்வி வழங்கப்படுகிறது. எட்டாம் வகுப்பு பூர்த்தி செய்த மாணவர்களுக்கு தொடர்ந்து மேலே படிக்க வசதி செய்து கொடுக்கப்படுகிறது. ஏட்டுக் கல்வியுடன் அவர்களது பிற்கால வாழ்விற்கு பயனுள்ளவாறு, பாய் நெசவு, நெசவு, தையல், தோட்டக் கலை மற்றும் பேண்டு வாத்தியம் ஆகியவற்றில், பயிற்சி ஆசிரியர்களைக் கொண்டு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. சிறுவர்களின் உடல் நலன்களைப் பேண, ஒரு முழு நேர மருத்துவ அலுவலரும், ஒரு மருந்தாளுநரும் இதர மருத்துவப் பணியாளர்களும் உள்ளனர். இவ்வாறு அவர்கள் பரிவுடன் பேணிக் காக்கப்பட்டு, சிறந்த மக்களாக உருவாகி, சமுதாயத்தில் இணைந்து வாழ, தயார் படுத்தப்படுகின்றனர்.

48—

கெங்கவல்லியில் பல நோக்கு கூட்டுறவு சங்க கிளையைத் துவக்குதல்.

வினா எண் 8388—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தலைவாசல் தொகுதி, வேப்படி, பாலக்காடு, கிழக்கு பாலாத்தங்கரை, மேற்கு பாலாத்தங்கரை, கட்டக்காடு, எடப்

பாடி பகுதி மலைவாழ் மக்கள் நலனுக்காக பச்சைமலை பெரும் பல நோக்குக் கூட்டுறவு சங்க கிளை ஒன்றை கெங்கவல்லியில் துவக்க அரசு முன் வருமா[

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

தலைவாசல் தொகுதி, வேப்படி, பாலக்காடு, கிழக்கு பாலாத்தங்கரை, மேற்கு பாலாத்தங்கரை, கட்டக்காடு, எடப் பாடி பகுதி மலைவாழ் மக்களின் நலனுக்காக பச்சைமலை பெரும் பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கிளை ஒன்று கெங்கவல்லியில் துவக்குவது சம்பந்தமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

49—

கீழ்தும்பை, மேல் தும்பை மலைவாழ் மக்களுக்கு லேம்ப் சொசைட்டி அமைத்தல்.

வினா எண் 9656—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, கீழ் தும்பை, மேல் தும்பை மலைவாழ் மக்களுக்கு ''லேம்ப் சொசைட்டி'' அமைக்கப் படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, கீழ் தும்பை, மேல் தும்பை மலைவாழ் மக்களுக்காக பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கம் புதிதாக அமைத்து தன்னிறைவுடன் செயல்பட போதுமான பழங்குடியின மக்கள் தொகையோ, பரப்பளவோ இல்லாததால் பெரும் பலநோக்குக் கூட்டுறவு சங்கம் அமைக்கத் தற்போது சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை,

50—

1991–92ல் ஆரம்பிக்கப்பட்ட ஆதிதிராவிடர் மாணவியர் விடுதிகள்.

வினா எண் 16049—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1991–92 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்ட ஆதிதிராவிடர் மாணவியர் விடுதிகள் எத்தனை?

(ஆ) இவற்றில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம் பிக்கப்பட்ட மாணவியர் விடுதிகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) 14 மாணவியர் விடுதிகள்.

(ஆ) 2 மாணவியர் விடுதிகள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பதினேழாம் பட்டியல்.

1—

காக்காவேரியில் கிளை நூலகம்

வினா எண் 9656—திருமதி கே. பழனியம்மாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராசிபுரம் தொகுதி, இராசிபுரம் ஒன்றியம், காக்காவேரியில் ஒரு கிளை நூலகம் துவக்க அரசு முன்வருமா?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

2—

ஆலங்குடி துவக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக்குதல்.

வினா எண் 10439—திரு. எஸ். ஆலசமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், ஆலங்குடி ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

3—

போளூரில் கிளை நூலகம்

வினா எண் 10917—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

போளூரில் உள்ள கிளை நூலக கட்டிடத்திற்கு மாடிக் கட்டிடம் கட்டித் தர அரசு முன்வருமா?

*விடை—26-3-1993 ஆம் நாளிட்டது.

**விடை—5—2—1993 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

4—

வகுப்புக்கு ஓர் ஆசிரியர் நியமித்தல்

வினா எண் 12165—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா?—

கிராமங்களில் உள்ள பள்ளிகளில் வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்ற திட்டப்படி நியமனங்கள் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

5—

பள்ளிகளுக்கு மின் வசதி

வினா எண் 12269—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மின்சாரம் இல்லாத அனைத்துப் பள்ளிகளுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

***விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

*விடை—26–3–1993 ஆம் நாளிட்டது.
**விடை—15–2–1993 ஆம் நாளிட்டது.
***விடை—4–2–1993 ஆம் நாளிட்டது.

தமிழக அரசு 1992-93 ஆம் ஆண்டில் அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு சிறப்பு பழுது பணி செய்திட, ஒரு சிறப்பு வழக்காக, பராமரிப்பு மற்றும் பழுது பணி நிதியிலிருந்து ரூ. 260.28 இலட்சம் பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் கையிருப்பில் இருந்த 5 மின் பழுது மதிப்பீடுகளுக்கு மேலொப்பமிட்டு ரூ. 1,34,800-க்கு மதிப்பீடுகள் சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வரும் 1993-94-ல் சிறப்பு மராமத்து மற்றும் முன்னேற்றப் பணி என்ற தலைப்பின் கீழ் ரூ. 6 கோடிக்கு அரசிடம் நிதி கோரப்பட்டு ஒரு சிறப்புத் திட்ட அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. புதிய மின் இணைப்புகள் முன்னேற்றப்பணி என்ற தலைப்பின்கீழ் தேர்வு செய்யப்படும். அவ்விதம் மேற்படி சிறப்புத் திட்ட அறிக்கை தொடர்பாக நிதி கிடைக்கும் பட்சத்தில் மின்சாரம் இல்லாத பள்ளிகளுக்கு மின் வசதி செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6—

பைங்கால் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்.

வினா எண் 13212—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பைங்கால் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் 1992-93-ல் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற் குறிப்பு ஏதுமில்லை. எனினும் வரும் நிதியாண்டில் அரசால் ஒதுக்கப்படும் கட்டிட நிதியிலிருந்து நிதி வசதியைப் பொறுத்து பைங்கால் உயர்நிலைப்பள்ளி பள்ளிக் கல்வி இயக்குநரால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

* விடை—15-2-1993 ஆம் நாளிட்டது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

7—

அதிராம்பட்டினம் பள்ளிக் கட்டிடம்.

வினா எண் 13236—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டைத் தொகுதி, அதிராம்பட்டினம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு 1992-93 ஆம் ஆண்டில் கூடுதல் கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

8—

களத்தூர் பள்ளிக் கட்டிடம்.

வினா எண் 13239—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, களத்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு 1992-93-ல் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

அரசிடம் தற்போது செயற் குறிப்பு ஏதுமில்லை. எனினும் வரும் நிதியாண்டில் அரசால் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் இருந்து நிதி வசதிக்கேற்ப களத்தூர் உயர்நிலைப்பள்ளியும் பள்ளிக் கல்வி இயக்குநரால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படும்.

* விடை—15-3-1993 ஆம் நாளிட்டது.

**விடை—15-3-1993 ஆம் நாளிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

9—

குருவிக்கரம்பை பள்ளிக் கட்டிடம்.

வினா எண் 13240—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, குருவிக்கரம்பை, அரசினர் மேல் நிலைப் பள்ளிக்கு 1992-93 ஆம் ஆண்டில் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

10—

கழனிவாசல் நடுநிலைப்பள்ளி.

வினா எண் 15309—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியப், கழனிவாசல் நடுநிலைப் பள்ளியை 1992–93-ல் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தவும், புதிய கட்டிடம் கட்டித்தரவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

***விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

11—

பூம்புகார் தொகுதியில் போதுமான மருத்துவ வசதி.

வினா எண் 3309—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் சங்கரன்பந்தல், பொறையார், தரங்கம்பாடி, செம்பனார் கோயில், திருவெண்காடு ஆகிய

**விடை—5—3—1993 ஆம் நாளிட்டது.
***விடை—12—3—1993 ஆம் நாளிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மருத்துவமனைகளில் போதுமான மருத்துவர்களும், படுக்கை வசதிகளும் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) சங்கரன்பந்தல், தரங்கம்பாடி, செம்பனார்கோயில் மற்றும் திருவெண்காடு ஆகிய மருத்துவமனைகள் தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. இவ்விடங்களில் போதிய பணியிடங்கள், படுக்கை வசதிகள் உள்ளன. மகப்பேறு உள் நோயாளிகளும் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். பொறையாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மூன்று பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. இந்த மருத்துவமனைக்கு 24 படுக்கைகள் கொண்ட கட்டிடம் கட்ட அரசு அனுமதித்துள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

12—

தனியார் மருத்துவக் கல்லூரிக் கட்டணம்

வினா எண் 5448-ஏ— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவப் பட்டப் படிப்புக்கு அரசு கல்லூரிகளில் உள்ள கட்டண விகிதங்களை விட தனியார் நடத்தும் கல்லூரிகளில் இருமடங்கு அளவிற்கு கட்டண விகிதங்கள் உள்ளது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில். தனியார் கல்லூரிகளில் விதிக்கப்பட்டுள்ள கட்டண விகிதங்களை குறைக்க தனியார் கல்லூரிகளை அரசு கட்டுப்படுத்த முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) ஆம்

(ஆ) தனியார் கல்லூரிகளில் கட்டண விகிதங்கள் வசூலிப்பு சம்பந்தமாக உச்ச நீதிமன்றம் அண்மையில் வழங்கியுள்ள தீர்ப்பினை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

13—

மருத்துவர் வாரிசுகளுக்கு சேர்க்கை முன்னுரிமை.

வினா எண் 4505—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மருத்துவமனையில் பணிபுரிந்து பணியில் இறக்கும் மருத்துவர்களின் வாரிசுக்கு எம்.பி.,பி.எஸ்., சேர்க்கையில் முன்னுரிமை அளிக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

முன்னுரிமை அளிக்க இயலாது.

14—

ஐ. எம். எஸ். பட்டம் ஏற்படுத்துதல்

வினா எண் 4536—டாக்டர் எம். பி. சேகர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

I.A.S., I.P.S., I.F.S., போன்று மருத்துவத் துறையிலும் I.M.S., பட்டம் (Indian Medical Service) பெற மாநில அரசு மத்திய அரசிற்கு சிபாரிசு செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

தற்போது இது சம்பந்தமான குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1993 அக்டோபர் 26

15—

பட்டாபிராமில் மருத்துவமனை.

வினா எண் 5201—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், ஆவடி நகரியம், பட்டாபிராமில் புதிய மருத்துவமனை அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், ஆவடி நகரியம், பட்டாபிராமில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

16—

வேதாரண்யம் தொகுதியில் போதிய மருத்துவர்கள்.

வினா எண் 5446—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வேதாரண்யம் மற்றும் வேதாரண்யம் தொகுதியிலுள்ள தலைஞாயிறு, நாலுவேதபதி, காரியாபட்டிணம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதிய மருத்துவர்கள் இல்லாத நிலையைப் போக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

வேதாரண்யம், தலைஞாயிறு, நாலுவேதபதி, காரியாபட்டிணம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் பணிபுரிந்துகொண்டு இருக்கிறார்கள்.

1993 அக்டோபர் 26]

17—

வடாற்கா—டுஅம்பேத்கார் மாவட்டத்தில் மருத்துவக்கல்லூரி.

வினா எண் 5899—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

புதிதாக மருத்துவக் கல்லூரி தொடங்குவது குறித்து அரசு கொள்கை முடிவு எடுக்கவில்லை. எனவே, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

18—

கோவையில் புதிய மருத்துவமனை.

வினா எண் 8879—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் அரசு பொது மருத்துவமனையில் இட நெருக்கடி காரணமாக புதிதாக வேறு இடத்தில் ஒரு மருத்துவமனை கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புதிதாக வேறு இடத்தில் மருத்துவமனை கட்ட அவசியம் ஏதும் இல்லை.

19—

அதிராம்பட்டினம் மருத்துவமனைக்கு வசதி.

வினா எண் 13456—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அதிராம்பட்டினத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் 1992-93-ல் எக்ஸ்-ரே கருவி மற்றும் புதிய தளவாடங்கள் வாங்குவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அதிராம்பட்டினத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கு எக்ஸ்-ரே கருவி மற்றும் புதிய தளவாடங்கள் வாங்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

20—

பேராவூரணி ஒன்றியத்தில் பிரதம சுகாதார நிலையம்.

வினா எண் 13460—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ரெட்டவயல் ஆவணம், ஒட்டங்காடு, களத்தூர் ஆகிய ஊர்களில் பிரதம சுகாதார நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியத்தில் மக்கள் தொகையான 97,778-க்கு ஏற்ப அங்கு 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கனவே இயங்கி வருவதால் மேலும் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை அந்த ஒன்றியத்தில் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

1993 அக்டோபர் 26]

21—

திருவோணம் ஒன்றியத்தில் பிரதம சுகாதார நிலையம்.

வினா எண் 13465— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டையிலும், பட்டுக்கோட்டை ஒன்றியம் மானியக்காட்டிலும் பிரதம சுகாதார நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி, மேலும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் திருவோணம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பாதரங்கோட்டையிலும் மற்றும் பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மானியக்காட்டிலும் தற்போது அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

22—

அதம்பை பிரதம சுகாதார நிலையம்.

வினா எண் 13467— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, அதம்பை பிரதம சுகாதார நிலையத்தில் போதிய மருந்துகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

நடப்பு நிதியாண்டில் (1992-93) ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ரூ. 40,000-க்கு மதிப்பிற்கான மருந்து, மாத்திரைகள் வாங்க, நிதி ஒதுக்கீடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. தற்போது அரசாணை எண் 134, நாள் 5–2–1993 இல் அரசு

அத்தொகையை ரூ. 50,000 ஆக உயர்த்தி ஆணை வெளியிட்டு உள்ளது. அதன்படி ரூ. 50,000 மதிப்பிற்கான மருந்து மாத்திரைகள் வழங்குவதற்கான வழங்கல் ஆணைகள் அனுப்பப்பட்டு, மருந்து மாத்திரைகள் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் சம்பந்தப்பட்ட துணை இயக்குநர்கள் மூலம் சென்று அடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

23—

ஊமத்தநாடு சுகாதார நிலையம்.

வினா எண் 13471—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, ஊமத்தநாடு பிரதம சுகாதார நிலையத்தில் போதிய மருந்துகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

நடப்பு நிதியாண்டில் (1992-93) ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ரூ. 40,000 மதிப்பிற்கான மருந்து, மாத்திரைகள் வாங்கி, வழங்க நிதி ஒதுக்கீடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது அரசாணை எண் 134, நாள் 5—2—1993-ல் அத்தொகையை ரூ. 50,000 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. எனவே போதிய மருந்துகள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

24—

அழகியநாயகிபுரம் பிரதம சுகாதார நிலையம்.

வினா எண் 13472—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, அழகியநாயகிபுரம் பிரதம சுகாதார நிலையத்தில் போதிய மருந்துகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

ஆம், நடப்பு நிதியாண்டில் (1992-93) ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ரூ. 40,000 மதிப்பிற்கான மருந்து,

1993 அக்டோபர் 26]

மாத்திரைகள் வாங்கி, வழங்க நிதி ஒதுக்கீடு அரசால் வழங்கப் பட்டுள்ளது. மேலும் தற்போது அரசாணை எண் 134, சுகாதாரம், நாள் 5—2—1993-இல் அத்தொகையை ரூ. 50,000 மதிப்பிற்கான மருந்து மாத்திரைகள் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் சம்பந்தப்பட்ட துணை இயக்குநர்கள் மூலம் சென்று அடைந்து கொண்டுள்ளது.

25—

முதல்சேரியில் சுகாதார துணை நிலையம்.

வினா எண் 13475—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, முதல்சேரியில் பிரதம சுகாதார துணை நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தின் ஜனத்தொகையான 1,23,468க்கு ஏற்ப ஏற்கனவே தேவைக்கு அதிகமாக அங்கு ஆறு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதாலும் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பது அரசின் கொள்கையாக இருந்து வருவதாலும், முதல் சேரியில் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

26—

சேண்டாகோட்டையில் சுகாதார துணை நிலையம்.

வினா எண் 13476—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேண்டாகோட்டையில் பிரதம சுகாதார துணை நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கனவே அதன் ஜனத்தொகைக்கேற்ப ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதால் சேண்டா கோட்டையில் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்ப தற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

27—

அன்னூரில் பணிமனை.

வினா எண் 10458—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசித் தொகுதி, அன்னூரில் சேரன் போக்கு வரத்து பணிமனை கட்டுவதற்கான அரசு ஆணை இருந்தும் தனியார் இடத்திற்கு தடையாணை பெற்றிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தடையை நீக்கி எப்போது பணிமனை கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தடையை நீக்கிச் சட்டப்படியான நடவடிக்கைகளை சேரன் போக்குவரத்துக் கழகம் மேற்கொண்டு வருகிறது. தடை உத்தரவை நீக்கிய உடன் நிலம் கையகப்படுத்தப்பட்டு அன்னூரில் பணிமனை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

28—

வால்பாறையிலிருந்து பேருந்து

வினா எண் 10707—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலிருந்து, திருச்சி சேலம் வரை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மூலம் பேருந்து விட அரசு ஆவன செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வால்பாறையிலிருந்து சென்னைக்கு திருச்சி வழியாகவும் மற்றும் வால்பாறையிலிருந்து சேலத்திற்கும் பேருந்து இயக்க திட்டம் ஏதும் இல்லை.

29—

நடுப்புணிக்குப் பேருந்து.

வினா என் 10966—திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சியிலிருந்து ஆர். பொன்னாபுரம் சி. அர்த்த நாரிபாளையம், சி. கோபாலபுரம் கருமாண்டகவுண்டனூர் வழியாக நடுப்புணி வரை ஒரு புதிய வழித்தட பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்—

ஆர். பொன்னாபுரம், சி. அர்த்தநாரிபாளையம், சி. கோபாலபுரம் ஆகிய கிராமங்கள் ஏற்கனவே பொள்ளாச்சியி லிருந்து வேறு பகுதிகளுக்கு இயக்கப்படும் பேருந்துகளால் இணைக்கப்பட்டுள்ளது. சி. கோபாலபுரத்திலிருந்து கருமாண்ட கவுண்டனூர் வரை உள்ள 2.8 கி.மீ. தூரம் உள்ள சாலை பழுதடைந்து பேருந்து இயக்க ஏற்ற நிலையில் இல்லை. மேலும் கருமாண்டகவுண்டனூரிலிருந்து நடுப்புணி செல்லும் சாலையில் கருமாண்டகவுண்டனூரில் இருந்து 01. கி.மீ. தூரத்தில் ஓர் ஓடை உள்ளது. தற்சமயம் மேற்கூறிய பகுதிகளைஇணைப்பதற்கு அதில் பாலம் இல்லை. மேற்சொன்ன காரணங்களால் ஆர். பொன்னாபுரம், சி. அர்த்தநாரிபாளையம், சி. கோபால புரம், கருமாண்டகவுண்டனூர் வழியாக நடுப்புணி வரை ஒரு புதிய பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

30—

திருவான்மியூருக்கு விரைவுப் பேருந்து.

வினா எண் 11242—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகரிலிருந்து திருவான்மியூர் வரை செல்ல விரைவுப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திரு.வி.க. நகர் பேருந்து நிலையத்திற்கு அருகாமையிலுள்ள பெரவள்ளூர் சாலை பேருந்து நிறுத்தம் வழியாக வழித்தடம் 29-ஆர் (எல்.எஸ்.எஸ்.) பெரியார் நகரிலிருந்து திருவான்மியூருக்கு 6 பேருந்துகள் தினசரி 48 பயணத் தடவைகளில் இயக்கப்படுகின்றன. இதன் மூலம் திரு.வி.க. நகர் பகுதி மக்கள் நேரடியாகத் திருவான்மியூருக்கு செல்ல இயலும். திரு.வி.க. நகர் பகுதி மக்கள் திருவான்மியூர் செல்ல போதுமான போக்குவரத்து வசதி உள்ளது என்பதால் திரு.வி.க. நகரிலிருந்து திருவான்மியூருக்கு விரைவுப் பேருந்து விடும் வாய்ப்பு தற்போது இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

31—

சானூரப்பட்டிக்குப் பேருந்து

வினா எண் 11690—திரு ப. கலியபெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரிலிருந்து ஆவாரம்பட்டி வரை செல்லும் நகரப் பேருந்தை நந்தவனப்பட்டி. முத்தாண்டிப்பட்டி வழியாக சானூரப்பட்டி வரை செல்ல அரசு ஏற்பாடு செய்யுமா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன். போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர்—சானூரப்பட்டி (வழி) பூதனூர், ஆவாரம்பட்டி, நந்தவனப்பட்டி, முத்தாண்டிப்பட்டி தடத்தின் நீளம் 36 கி.மீ. ஆகும். பேருந்து வசதி பெற்ற தடங்களில் நகரப் பேருந்துகள் 30 கி.மீ. வரையிலும், பேருந்து வசதி பெறாத பகுதிகளில் 35 கி.மீ. தூரம் வரையிலும் அரசாணைப்படி இயக்க இயலும். இத்தடத்தின் நீளம் 35 கி.மீ.க்கு மேல் உள்ளதால் இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது. மேலும், ஆவாரம்பட்டியில் இருந்து சானூரப்பட்டி வரை உள்ள சாலை பழுதடைந்து பேருந்து இயக்க தகுதியற்ற நிலையில் உள்ளது.

32—

புங்கனூருக்கு நகரப் பேருந்து

வினா எண் 11787—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலிருந்து திருவையாறு தொகுதியிலுள்ள கீழ் திருவிழாப்பட்டி. இராமையமுண்டாம்பட்டி, வெண்டையம் பட்டி, மனையேறிப்பட்டி, நாயராம்பட்டி, கோட்டாரப்பட்டி கிராமங்கள் வழியாக புங்கனூர் வரை நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திருச்சி-புங்கனூர் (வழி) கீழ்திருவிழா பட்டி, இராயமுண்டான்பட்டி, வெண்டையம்பட்டி, மனை யேறிப்பட்டி, நாயராம்பட்டி, கோட்டாரப்பட்டி வழித்தடத் தின் மொத்த தூரம் 41.0 கி.மீ. ஆகும். இதில் கோட்டாரப்பட்டி புங்கனூர் வரையுள்ள 2.0 கி.மீ. பகுதி மட்டும் தான் பேருந்து வசதி பெறாத பகுதியாகும். இப்பகுதியிலுள்ள கப்பிசாலை பேருந்து போக்குவரத்திற்கு ஏற்புடையதாக இல்லையாதலால் பேருந்து வசதி செய்ய இயலவில்லை. மீதமுள்ள ஏனைய அனைத்துப் பகுதிகள் சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் மூலம் போக்குவரத்து வசதி பெற்ற பகுதிகளாகும்

33—

திருவையாறு தொகுதி பேருந்துகள்

வினா எண் 11869—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதியில் செல்லும் சி.ஆர்.சி. பேருந்துகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் புதிய பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

திருவையாறு தொகுதியில் நல்ல நிலையில் உள்ள பேருந்துகளே இயக்கப்படுகின்றன. இயக்கப்படும் பழைய பேருந்துகளில் ஒன்று மார்ச் 93-க்குள்ளும். 10 பேருந்துகள் ஜுன் 93-க்குள்ளும் 4 பேருந்துகள் செப்டம்பர் 93-க்குள்ளும் நல்ல நிலையில் உள்ள பேருந்துகளைக் கொண்டு மாற்றம் செய்யப்பட உள்ளன.

34—

அண்ணாசாலையில் நிழற்குடை

வினா எண் 12414—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா----

(அ) சென்னை, அண்ணா சாலையில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ் நிறுத்தங்களில் நிழற்குடை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) உள்ளது.

(ஆ) வேலை ஏற்கெனவே துவங்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

35—

தேவூர் பாலம் வழியாகப் பேருந்து விடல்

வினா எண் 15893—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதி, தேவூர் பாலம் வழியாக பேருந்துவிட சர்வே செய்தும் இன்றுவரை பேருந்து விடவில்லையாதலால் விரைவில் பேருந்துவிட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

தேவூர் பாலம் வழியாக பேருந்து விட கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) நாமக்கல்லிலிருந்து பெறப்பட்ட சாலைத் தகுதிச் சான்றிதழில் தேவூர் பாலம் மிகக் குறுகலாக உள்ளதால் பேருந்துகள் செல்ல இயலாத நிலை பற்றி தெரிவித்துள்ளதால் பேருந்துகள் இயக்குவது சாத்தியப்படாத நிலை உள்ளது.

36—

எல்லப்பாளையத்திற்குப் பேருந்து.

வினா எண் 16290—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானியிலிருந்து ஆலத்தூர் ரெட்டிப்பாளையம் வரை இயங்கும் பேருந்தை எல்லப்பாளையம் வரை நீடித்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ, செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆலத்தூர் ரெட்டிப்பாளையம் முதல் எல்லப்பாளையம் வரை தட நீட்டிப்பு கேட்கப்பட்ட தடம் 5.0. கி.மீ. தூரம் பராமரிக்கப்படாத ஜல்லி சாலையாகும். மேலும்

எல்லப்பாளையம் செல்லும் வழியிலுள்ள கரட்டுப்பாளையம் என்ற ஊருக்கு அருகில் தடம் பாறையின்மீது அமைந்துள்ளது. தட நீட்டிப்பு கேட்கப்பட்ட தடம் பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லாமல் உள்ளது. ஆதலால் பவானியிலிருந்து ஆலத்தூர் ரெட்டிப்பாளையம் வரை இயங்கும் பேருந்தை எல்லப்பாளையம் வரை நீட்டித்து இயக்க சாத்தியமில்லை.

37—

கூட்டுறவு நூற்பாலைகளில் தொழில்நுட்ப நிர்வாக இயக்குநர்கள்

வினா எண் 14228—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் கூட்டுறவு நூற்பாலைகளில் தொழில் நுட்பம் அறிந்தவர்களை நிர்வாக இயக்குநர்களாக நியமிப்பதுபோல், அரசு கூட்டுறவு நூற்பாலைகளிலும் தொழில் நுட்பம் அறிந்தவர்களையே நிர்வாக இயக்குநர்களாக நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித்துறை அமைச்சர்:

1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதி 145-ல் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அல்லது மாவட்ட துணை ஆட்சியர் பதவிக்கு குறையாத அந்தஸ்தில் கூட்டுறவுத் துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை மற்றும் வருவாய்த்துறையில் உள்ள அலுவலர்களை கூட்டுறவு நூற்பாலைகளின் நிர்வாக இயக்குநர்களாக அரசால் நியமிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில், கைத்தறி மற்றும் துணிநூல் துறையைச் சார்ந்த இணை இயக்குநர்/துணை இயக்குநர் 9 பேர்களும், வருவாய்த் துறையைச் சார்ந்த மாவட்ட வருவாய் அலுவலர்கள் 6 பேர்களும், தொழில்நுட்ப அலுவலர்கள் 3 பேர்களும் நிர்வாக இயக்குநர்களாக அரசால் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்கள்.

38—

கூட்டுறவுச் சங்க தள்ளுபடி பாக்கித் தொகை.

வினா எண் 14592—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மற்றும் எமனேஸ்வரத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தள்ளுபடி தொடர்பான பாக்கித் தொகை எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

ஆகஸ்டு 1992 திங்களில் பரமக்குடி-எமனேஸ்வரம் பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் 6–2–1991 முதல் 10–2–1991 தள்ளுபடி காலம் முதல் 6–4–1991 — 10–4–1992 தள்ளுபடி காலம் வரையுள்ள காலங்களுக்கான தள்ளுபடி மானியத் தொகை சுமார் ரூ. 84.91 இலட்சம் வழங்கப்பட வேண்டி நிலுவையாக இருந்தது. இதில் அக்டோபர் 1992 திங்களில் 6–2–1991 — 10–2–1991 தள்ளுபடி காலம் முதல் 12–10–1991 — 5–11–1991 (தீபாவளி 1991 காலம் காலம் வரையுள்ள தள்ளுபடி மான்யத் தொகைகள் சுமார் ரூ. 52.09 இலட்சம் வழங்கப்பட்டு விட்டது. அதன்பின் நடப்பு திங்கள் வரை 6–8–1992 — 10–8–1992 வரையுள்ள காலங்களுக்கான கோரிக்கைகள் ரூ. 20.74 இலட்சம் பெறப்பட்டுள்ளது. எனவே, ஏற்கனவே நிலுவையாக உள்ள கோரிக்கைகள் ரூ. 32.82 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 53.56 இலட்சம் கோரிக்கைகள் தற்போது பாக்கித் தொகையாக உள்ளது. மேற்கொண்டு அரசால் நிதி வழங்கிய உடன், அதற்கேற்ப தள்ளுபடி மான்யத் தொகை உடன் வழங்கப்படும்.

39—

பெரியதத்தூர்-எரவாங்குடி சாலை.

வினா எண் 12996—திரு. ஆர். தங்கராசு: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, பெரியதத்தூரிலிருந்து எரவாங்குடி வரை செல்லும் கப்பிச் சாலைய்ய மராமத்து செய்து அதனை தார்ச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பெரியதத்தூரிலிருந்து எரவாங்குடி வரை செல்லும் கப்பிச் சாலை ஆண்டிமடம் மற்றும் ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்தது. பகுதி 2 திட்டத்தின் கீழ் அதனை தார்ச் சாலையாக மாற்றித்தர சாத்தியக்கூறுகள் இல்லை.

40—

நிலக்கரி இறக்குமதி

வினா எண் 14082—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாடுகளிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்துகொள்வதற்கு மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மின்வாரியத்தில் 3 அனல் மின் நிலையங்களுக்கும் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 9 லட்சம் டன் நிலக்கரி தேவைப்படுகிறது. ஆனால் இந்திய நிலக்கரி நிறுவனத்திடம் இருந்து மாதம் ஒன்றுக்கு சராசரியாக 7 லட்சம் டன் நிலக்கரி மட்டுமே பெறப்படுகிறது. எனவே, நிலக்கரி பற்றாக்குறையின் அளவு சராசரியாக மாதத்திற்கு 2 லட்சம் டன்களாகவும், வருடத்திற்கு 24 லட்சம் டன்களாகவும் இருக்கிறது. ஆகவே உடனடித் தேவையை பூர்த்தி செய்ய முதலில் 10 லட்சம் டன் நிலக்கரியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வது அவசியம் என்று கருதப்பட்டது.

அதன்படி தமிழ்நாடு மின்வாரியம் 85 சதவிகித சுங்க வரியில் (Customs Duty) இருந்து முழுமையாக விலக்கு அளித்து பத்து லட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்ய மத்திய அரசின் ஒப்புதலைக் கோரியது. இதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சரும் மாண்புமிகு பிரதம அமைச்சருக்குக் கடிதம் எழுதினார். மத்திய அரசின் நிதி அமைச்சரும் 20 லட்சம் டன் நிலக்கரியை அதன் விலையில் 30 சதவிகிதம் மட்டுமே சுங்க வரியாக செலுத்தி இறக்குமதி செய்துகொள்ள அனுமதி அளித்துள்ளார்.

1993 அக்டோபர் 26]

41—

பூம்புகார் தொகுதியில் தடுப்புச்சுவர்

வினா எண் 15770—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, கடற்கரை ஓரங்களில ஏற்படும் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச்சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பூம்புகார் கடலோரப்பகுதியில் பூம்புகார் சுற்றுலா மையத்தினை கடலரிப்பில் இருந்து பாதுகாக்க சுமார் 900 மீட்டர் நீளம் கடலரிப்புச் சுவர் அமைக்க ரூ 285.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது. பூம்புகாரில் ஏனைய கடலோரப் பகுதிகளுக்குக் கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைக்கத் தேவையான மதிப்பீடு விரிவான ஆய்வுக்குப்பின் இரண்டாம் கட்டமாகத் தயாரிக்கப்படும்.

42—

வலச்சேரிப்பட்டி பள்ளிக்கட்டிடம்

வினா எண் 7926—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, வராப்பூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட வலச்சேரிபட்டி கிராமத்திற்கு கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

* விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், வராப்பூர் ஊராட்சி, வலச்சேரிப் பட்டி கிராமத்தில் கூடுதல் பள்ளிக்கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பேதும் இல்லை.

* விடை— 9-3-1993 ஆம் நாளிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

43—

வலப்பிரமன்காட்டில் பகுதிநேர அங்காடி.

வினா எண் 13027— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, வரப்பிரமன்காட்டில் அங்காடி இல்லாததால் சொர்ணக்காட்டிலுள்ள அங்காடியைப் பிரித்து வலப்பிரமன்காட்டில் பகுதிநேர அங்காடி தொடங்க 1992-93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தற்போது சொர்ணக்காட்டிலுள்ள அங்காடி 596 குடும்ப அட்டைகளுடன் முழுநேர அங்காடியாக செயல்பட்டு வருகிறது. இவ்வங்காடியின் விவகார எல்லைக்குட்பட்ட வலப்பிரமன்காடு கிராமத்தில் 190 குடும்ப அட்டைகளே உள்ளன. மேலும் மேற்படி அங்காடிக்கு வலப்பிரமன்காடு கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் இரண்டு கிலோ மீட்டருக்கு உட்பட்டே உள்ளது. எனவே, குடும்ப அட்டைகளை பிரித்து வலப்பிரமன்காட்டில் பகுதிநேர அங்காடி அரசு நிர்ணயித்துள்ள அளவுகோல்படி திறக்க வாய்ப்பில்லை.

44—

பிள்ளையார் திடலில் அமுத அங்காடி.

வினா எண் 13393— திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சி பிள்ளையார் திடலுக்கு 1992-93ல் தனியாக அமுதம் அங்காடி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*விடை— 18-3-1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

*விடை—

மாண்புமிகு திரு. ஜி, விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் நாடியம் அங்காடியில் 68 குடும்ப அட்டைகள் உள்ள பிள்ளையார் திடலையும் சேர்த்து 476 குடும்ப அட்டைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அங்காடிக்கும் பிள்ளையார் திடலுக்கும் இடைப்பட்ட தூரம் இரண்டு கிலோ மீட்டருக்குக் குறைவாகவே உள்ளது. எனவே, தற்போதுள்ள அரசு விதிமுறைகளின்படி 68 குடும்ப அட்டைகள் கொண்ட பிள்ளையார் திடலுக்கு தனியாக அங்காடி அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

நியாயவிலைக் கடை விழிப்புப் பணிக்குழு.

வினா எண் 14108— திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் நியாயவிலைக் கடைகளுக்கும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு செயல்படுகிறதா ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தர்மபுரி மாவட்டத்தில் எல்லா வட்டங்களிலும் நியாயவிலைக் கடைகளுக்கு விழிப்பு பணிக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

46—

பரமக்குடி தாலுகா நியாயவிலைக் கடைகள்.

வினா எண் 15754— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*விடை— 18-3-1993 ஆம் நாளிட்டது.

**விடை— 18-3-1993 ஆம் நாளிட்டது.

(அ) பரமக்குடி தாலுகாவில் உள்ள நியாயவிலைக் கடைகள் எத்தனை ?

(ஆ) நியாயவிலைக் கடைகளுக்கும் கட்டிடங்கள் கட்ட நிதி ஒதுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி தாலுகாவில் 111 நியாயவிலைக் கடைகள் உள்ளன.

(ஆ) நியாயவிலைக் கடைகளுக்கு தற்போது கட்டிடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்வதற்கான செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

47—

பரமக்குடி ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி.

வினா எண் 1655— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி ஆதிதிராவிட பெண்கள் விடுதி எந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது ?

(ஆ) அது பழுதுபார்க்கப்பட்டிருந்தால் மீண்டும் அவ் விடுதியில் பெண்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவார்களா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஏப்ரல் 1983-ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

(ஆ) பரமக்குடி மாணவர் விடுதிக்குக் கட்டிடம் கட்ட உயர்நீதிமன்ற தடை ஆணை உள்ளதால் இம்மாணவியர் விடுதி பழுதுபார்க்கப்பட்டு, மாணவர் விடுதியாக இயங்கி வருகிறது. மாணவியர் விடுதி வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

*விடை—18—3—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

48—

மாணவர் விடுதிப் பாத்திரங்கள்.

வினா எண். 5732—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அரசு ஆதிதிராவிட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் 50 பேர் கொண்ட விடுதியில் உள்ள பாத்திரங்களுக்கு ஈயம் பூச ஒதுக்கப்படும் தொகை ரூ. 120-ஐ உயர்த்தி ரூ. 300 ஆக வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தி வழங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆம். இது சம்பந்தமாக ஈயம் பூச ஒதுக்கப்படும் தொகை உயர்த்தப்பட செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

49—

பழைய ஆயக்குடி ஆதிதிராவிட மாணவர் விடுதி.

வினா எண். 6082—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம், பழைய ஆயக்குடியில் இருக்கும் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கான வாடகைப் பணம் பல மாதங்களாகக் கொடுக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவ்வாடகையை உடனே கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பழனி வட்டம் பழைய ஆயக்குடியில் இருக்கும் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கான வாடகைப் பணம் 1993-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் வரை வழங்கப்பட்டு விட்டது.

50—

வரட்டாற்றின் குறுக்கே ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாடு திட்டத்தின் கீழ் பாலம் கட்டுதல்.

வினா எண். 19173—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி வரட்டாற்றின் குறுக்கே ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாடு திட்டத்தின கீழ் பாலம் கட்ட அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி வரட்டாற்றின் குறுக்கே ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் பாலம் கட்டும் திட்டம் இதுவரை ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாடு திட்டத்தில் இடம் பெறவில்லை. இதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(பதினெட்டாம் பட்டியல்)

1—

கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்றுதல்.

வினா எண் 4986—திரு. கே. செல்வராஜ், டாக்டர் அ. ஸ்ரீதரன், திரு. வி.கே. லட்சுமணன்: மாணபுமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரின் மையப் பகுதியிலுள்ள மத்திய சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்றுவது குறித்த செயற்குறிப்பை, அரசு ஏற்கனவே பரிசீலித்து, நிதி நிலை காரணமாக தள்ளிப்போட முடிவு செய்யப்பட்டுள்ளது.

2—

வேதாரண்யத்தை கோட்ட தலைநகரமாக்குதல்.

வினா எண் 8411—திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிதாக அமைந்துள்ள நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் வேதாரண்யத்தை கோட்ட தலைநகராக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

தற்போதைக்கு இல்லை.

3—

பள்ளித் தேர்வில் குறைந்த சதவீத தேர்ச்சி.

வினா எண் 2586—திரு. சு. அர்ச்சுனன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு குறிப்பிட்ட கல்வி நிறுவனத்தில் அரசு பணத்தை செலவழித்தும் மாணவ மாணவிகள் பயன்பெறாத வகையில் தேர்ச்சி பெறவில்லையென்றால் அந்தக் கல்வி நிறுவனத்தின் ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

(ஆ) ஒழுங்காகப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை ஊக்குவிக்கிற வகையில் சம்பள உயர்வு அல்லது நன்னடத்தைச் சான்றிதழ் வழங்கப்படுமா ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) பொதுத் தேர்வில் குறைந்த சதவீதம் தேர்ச்சி காட்டிய பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) ஒழுங்காகப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆசிரியர் தினத்தன்று மாநில மற்றும் தேசீய அளவில் விருதுகள் (ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்கள்) பெற ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

4—

மேல்நிலைப் பள்ளி பணியாளர்களின் ஊதிய விகிதத்தை மாற்றி அமைத்தல்.

வினா எண் 5716—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள பணியாளர்களின் ஊதிய விகித அளவு (Pay Scale of Office Staff) மாற்றி அமைக்க வேண்டும் என அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதனைப் பரிசீலித்து மாற்றி அமைக்க அரசு முன்வருமா ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்;

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

5—

புதிய ஆசிரியர்கள் பணிவாய்ப்பு.

வினா எண் 5717—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*விடை—12—3—1993 ஆம் நாளிட்டது.

** விடை—29—3—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

(அ) 1989-90 ஆம் ஆண்டுகளில் துவக்கப்பள்ளி ஆசிரியர்கள், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் என புதியதாக பணிவாய்ப்பு பெற்றவர்கள் எண்ணிக்கை எவ்வளவு.?

(ஆ) இவர்கள் அனைவரும் ஆசிரியர் தேர்வாணையம் மூலம் அதற்கென நெறி முறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா ?

(இ) அவற்றில் ஏதேனும் முறைகேடு நடந்துள்ளதாக முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளனவா ?

(ஈ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் புதிதாக பணிவாய்ப்பு பெற்றவர்கள் எண்ணிக்கை (மொழியாசிரியர்கள் தவிர்த்து) 756.

(ஆ) இவற்றுள் 164 நபர்கள் பதவி உயர்வு மூலம் நியமிக்கப்பட்டவர்கள். ஏனைய 592 நபர்கள் ஆசிரியர்கள் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

(இ) இல்லை.

(ஈ) எழவில்லை.

6—

ஆசிரியப் பயிற்சிக்கான வயது வரப்பு.

வினா எண் 8157— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆசிரியர்கள் பயிற்சிக்கு தேர்வு செய்யும்போது வயது வரம்பை 30 ஆக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

4—3—1993 ஆம் நாளிட்டது.

18— 3— 1993 ஆம் நாளிட்டது.

7—

துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழகம் மூலம் பயிற்சி.

வினா எண் 12138— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழகம் மூலம் பயிற்சி அளிக்கப்படுமா ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழகம் மூலம் பயிற்சி அளிக்க திட்டம் ஏதுமில்லை.

8—

துவக்கக் கல்வியை ஒரே விதிகளின் கீழ் கொண்டுவருதல்.

வினா எண் 12164— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு துவக்கப்பள்ளிகளில் உள்ள நடைமுறை விதிகளும் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிகளில் உள்ள நடைமுறை விதிகளும் மாறுபட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், துவக்கக்கல்வி ஒரே விதியின் கீழ் கொண்டுவர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) துவக்கக்கல்வியை ஒரே விதிகள்கீழ் கொண்டுவர தற்சமயம் அரசிடம் செய்ற்குறிப்பு இல்லை.

5—3—1993 ஆம் நாளிட்டது.

25—2—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

9—

ஆவணம் அரசு உயர்நிலைப்பள்ளியில் உதவி எழுத்தர், இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்.

வினா எண் 13592— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஆவணம் அரசு உயர்நிலைப்பள்ளியில் உதவி எழுத்தர், இடைநிலை ஆசிரியர் ஆகிய பணியிடங்களை நிரப்ப 1992-93-ல் அரசிட செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் கல்வி அமைச்சர்:

இப்பள்ளிக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட அனைத்து பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன.

10—

பேராவூரணி தொகுதி தொடக்கப்பள்ளிகளில் போதிய ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் 13694— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, துவக்கவிடுதி, கீழத்தோட்டம் வெள்ளாளங்காடு பட்டங்காடு, செல்லப்பிள்ளையார் கோவில், கே. ஆர். புரம், ஆத்தாளூர், கழனிவாசல், நாட்டாணிக் கோட்டை (தெற்கு), கொரட்டூர் மகிழங்கோட்டை ஆகிய தொடக்கப்பள்ளிகளுக்குப் போதிய ஆசிரியர் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இல்லை.

*விடை—4—3—1993 ஆம் நாளிட்டது.

**விடை—25—2—1993 ஆம் நாளிட்டது.

11—

பேராவூரணி தொகுதி தொடக்கப்பள்ளிகளில் போதிய ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் 13705—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பெரியவறத்திக்கோட்டை, சின்னரெட்டவயல், பேராவூரணி, பின்னவாசல், ஆவணம், முஸ்லீம் தெரு, ஆவணம் அகமுடையார் தெரு, பைங்கால், சானாகரை அம்மையாண்டி, தொக்காலிக்காடு ஆகிய தொடக்கப்பள்ளிகளுக்கும் போதிய ஆசிரியர் நியமனம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்நாயகம், கல்வி அமைச்சர்:

செயற் குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை

12—

இடையாத்தி (ஜி) தொடக்கப்பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண். 14222—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி (ஜி) தொடக்கப்பள்ளிக்கு 1992—93ல் கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

13—

காலகம் உயர்நிலைப்பள்ளியில் போதிய ஆசிரியர்களை நியமனம் செய்தல்.

வினா எண் 14578—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

*விடை—5—3—1993 ஆம் நாளிட்டது.
**விடை—5—3—1993 ஆம் நாளிட்டது.

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் உயர்நிலைப்பள்ளிக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் போக்க 1992–93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

***விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இப்பள்ளிக்கு போதுமான ஆசிரியர்கள் உள்ளதால்' பற்றாக்குறையைப் போக்குவது என்ற நிலை எழவில்லை.

14—

காட்டுமன்னார் கோயில் நூல் நிலையம்.

வினா எண் 14693—திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழக்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் பேரூராட்சியில் இயங்கும் நூல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

****விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

தனியார் அல்லது வருவாய்த்துறை அல்லது உள்ளாட்சி நிறுவனம் இலவசமாக காலி மனை வழங்கினால், நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து நிரந்தரக் கட்டிடம் கட்டப்படும்.

15—

ஆலங்குளம் மருத்துவமனைக்கு எக்ஸ்ரே கருவி.

வினா எண் 14178—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி--கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் மருத்துவமனைக்கு எக்ஸ்ரே கருவி வழங்கவும், டி.ஜி.ஓ. பட்டம் பெற்ற மருத்துவர் ஒருவரை நியமிக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

***விடை— 29—3—1993 ஆம் நாளிட்டது.
****விடை—26—3—1993 ஆம் நாளிட்டது.

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுததுறை அமைச்சர் :

திருநெல்வேலி--கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் மேல்நிலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஏற்கெனவே எக்ஸ்ரே கருவி வழங்கப்பட்டு தற்பொழுது செயல்பட்டு வருகிறது. கடந்த 1992 ஆம் ஆண்டில் 172 எக்ஸ்ரே படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், தற்பொழுது இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவ அலுவலர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார். டி.ஜி.ஓ. கல்வித் தகுதி பெற்ற மருத்துவ அலுவலர் கிடைக்கும் தருணத்தில் நியமனம் செய்யப்படும்.

16—

வனத்துறை சமூகக் காடுகளில் தினக்கூலியாக பணிபுரிவோரை நிரந்தரம் செய்தல்.

வினா எண் 14435—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வனத்துறையில் சமூகக் காடுகள் பிரிவில் தினக் கூலிகளாகப் பணியாற்றும் 2,860 பேரையும் நிரந்தரமாக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

சமூக வனப் பிரிவில் தற்காலிகமாக தினக்கூலி/தொகுப்பூதிய முறையில் பணியாற்றும், சமூக வன ஊழியர் மற்றும் தோட்டக் காவலர்களுக்கு அவர்கள் தகுதிக்கேற்ப மாநில அளவிலான முதுநிலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு தற்போது காலியாக உள்ள வனக் காவலர், மாலி, அலுவலக உதவியாளர் மற்றும் அலுவலகக் காவலர் போன்ற நிரந்தரப் பணியிடங்களிலும், அவ்வப்போது காலி ஏற்படும் நிரந்தர பணியிடங்களிலும் ணியமர்த்தப்படுவார்கள்.

1993 அக்டோபர் 26]

17—

அன்னவயல் சி.எம்.பி.வாய்க்கால்

வினா எண் 13657—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, அன்னவயல் சி.எம்.பி. வாய்க்கால் தூர்ந்துபோய் குறுகிவிட்டதால் தூர்வாரி பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

அன்னவயல் சி.எம்.பி. வாய்க்காலில் வரும் அடைப்பு காலத்தில் நிதி நிலைக்கேற்ப தேவையான இடங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும். தற்போது தடையின்றி மேற்காணும் வாய்க்காலில் போதுமான அளவு தண்ணீர் வழங்கப்படுகிறது.

18—

இடையாத்திக் கல்லணைக் கால்வாய்

வினா எண் 13780—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, இடையாத்தி கல்லணைக்கால்வாய் 16 ஆம் நம்பர் வாய்க்காலை தூர் வாரி பராமரிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை

19—

செழியநல்லூர் கிராமத்திலிருந்து வாசகசாலை வரை சாலை வசதி செய்தல்

வினா எண் 4892—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் ஒன்றியம் செழியநல்லூர் கிராமத்திலிருந்து வாசகசாலை வரை சாலை வசதி இல்லாமலிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நெல்லை கட்டபொம்மன் மாவட்ட ஆலங்குளம் ஒன்றியம், செழியநல்லூர் கிராமத்திலிருந்து வாசக சாலை வரை சாலை வசதி செய்ய தோராயமாக ரூ. 3 இலட்சம். தேவைப்படுகிறது. தற்போதுள்ள நிதிநிலையின் காரணமாக இப்பணியை எடுத்து செய்ய செயற்குறிப்பேது மில்லை.

20—

தட்டான் ஓடைக்கு சாலை வசதி அமைத்தல்.

வினா எண் 7763— திரு. கே. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம் தட்டான் ஓடைக்கு சாலை வசதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போழுது ?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தென்னாற்காடு மாவட்டம் மேல் புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தட்டானோடை கிராமத்தில் 1991–92 ஆம் ஆண்டு சாலை வசதி செய்து முடிக்கப் பட்டுவிட்டது.

21—

ஆலங்குளம் தொகுதியில் குறைந்த செலவு கழிப்பிட வசதி

வினா எண் 8588— திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

*விடை—10—3—1993 ஆம் நாளிட்டது.

**விடை—20—2—1993 ஆம் நாளிட்டது.

ஆலங்குளம் தொகுதியின் கிராமங்களில் மானியத் திட்டத்தின் கீழ் Low cost sanitation வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

* விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆலங்குளம் தொகுதியின் கிராமங்களில் மானியத் திட்டத்தின் கீழ் குறைந்த செலவு கழிப்பிட வசதி செய்து கொடுக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

22—

கிள்ளியூர் பேரூராட்சிக்குட்பட்ட இலவுவிளை—காரான்விளை—திட்டவிளை இணைப்புச் சாலை அமைத்தல்.

வினா எண் 870—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் பேரூராட்சிக்குட்பட்ட இலவுவிளை—காரான்விளை—திட்டவிளை இணைப்புச்சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் பேரூராட்சிக்குட்பட்ட இலவுவிளை—காரான்வினள—திட்ட விளை இணைப்புச்சாலை அமைத்துக் கொடுக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

*விடை—10—3—1993 ஆம் நாளிட்டது

**விடை—20—2—1993 ஆம் நாளிட்டது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

23—

சிவகாமிபுரம்-ஆவுடையானூர் கிராமங்களுக்கு இணைப்புச் சாலை

வினா எண் 9651—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை—கட்டபொம்மன் மாவட்டம் கீழ்ப்பாவூர் ஒன்றியத்திலுள்ள சிவகாமிபுரம்— ஆவுடையானூர் கிராமங்களுக்கு இணைப்புச்சாலை போட அரசு ஆவன செய்யுமா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம்—கீழ்ப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் சிவகாமிபுரம் — ஆவுடையானூர் கிராமங்களை இணைக்கும் சாலையின் மொத்த நீளம் 3 கி.மீ. அதில் 2.4 கி.மீ. சாலை நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள 0.6 கி.மீ. சாலை தல சாலை மண்டலதிட்டத்தின் கீழ் சீரமைப்பு செய்யப்பட உள்ளது.

24—

சின்னப்பர் ஆலயம் செல்லுகின்ற சாலையை செப்பனிடுதல்.

வினா எண் 9891— திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி அக்கனேஸ்புரம் கிராமத்தில் இருந்து வடக்கு சின்னப்பர் ஆலயம் செல்லுகின்ற சாலையை செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

*விடை— 10— 3— 1993 ஆம் நாளிட்டது,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1993 அக்டோபர் 26]

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் தொகுதி அக்கனேஸ்புரம் கிராமத்தில் இருந்து வடக்கு சின்னப்பர் ஆலயம் செல்லும் சாலையை செப்பனிட தற்போது செயற்குறிப்பேதுமில்லை.

25—

ஜமீன் காளியாபுரம் செல்லும் சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்.

வினா எண். 11127— திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம் புரவிபாளையத்திலிருந்து களத்தூர் வழியாக ஜமீன் காளியாபுரம் செல்லும் சாலையை தார்ச்சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம் புரவிபாளையம் களத்தூர் வழியாக ஜமீன் காளியாபுரம் செல்லும் சாலையை தார்ச்சாலையாக மாற்ற ரூ. 25.00 இலட்சம் தேவைப்படும். போதிய நிதி ஆதாரமின்மையால் இப்பணியை மேற்கொள்ள தற்போது செயற்குறிப்பேதுமில்லை.

26—

உலக்கொல்லை குடியிருப்பில் தடுப்புச்சுவர் அமைத்தல்.

வினா எண். 12073—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி சேர்லைக்காடு ஊராட்சி உலக்கொல்லை குடியிருப்பில் தடுப்புச்சுவர் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

*விடை— 10— 3— 1993 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி சோலைக் காடு ஊராட்சி உலக்கொல்லை குடியிருப்பில் 1991–92–ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 10,359 செலவில் தடுப்புச்சுவர் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

27—

சேண்டங்காடு ஊராட்சி அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண். 12374—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் சேண்டங்காடு ஊராட்சிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் சேண்டங்காடு ஊராட்சி அலுவலகக் கட்டிடம் 1984–85ல் கட்டப்பட்டுள்ளது. எனவே வேறு கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை.

28—

த. மறவக்காடு ஊராட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்டுதல்

வினா எண். 12375—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் த. மறவக்காடு ஊராட்சி கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*விடை—10—3—1993 ஆம் நாளிட்டது.

**விடை 9—3—1993 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், த. மறவக்காடு ஊராட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்ட தற்போது செயற் குறிப்பு இல்லை.

29—

கொண்டிக்குளம் ஊராட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 12377—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் கொண்டிகுளம் ஊராட்சிக் கட்டிடம் 1992—93-ல் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுகோட்டை ஊராட்சி ஒன்றியம், கொண்டிக்குளம் ஊராட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்ட தற்போது செயற் குறிப்பு இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

30—

கார்வயல் ஊராட்சிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 12384—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா ?

பட்டுக்கோட்டை ஒன்றியம் கார்வயல் ஊராட்சிக்கு கட்டிடம் கட்டிக்கொடுக்க 1992-93ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை— 9—3—1993ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கார்வயல் ஊராட்சிக் கட்டிடம் கட்ட செயற்குறிப்பு இல்லை.

31—

நம்பிவயல் ஊராட்சிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 12389 திரு. ஆர். சிங்காரம் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் நம்பிவயல் ஊராட்சிக்கு கட்டிடம் கட்டிகொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் நம்பிவயல் ஊராட்சிக்கு கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

32—

ராஜாமடம் ஊராட்சிக்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 12390—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு யள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை உளிப்பாரா ?

பட்டுக்கோட்டை ஒன்றியம் ராஜாமடத்திற்கு 1992-93ல் ஊராட்சிக் கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

*விடை—10—3—1993 ஆம் நாளிட்டது.

**விடை— 9—3—1993 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ராஜாமட ஊராட்சிக்குக் கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை.

33

திட்டக்குடி ஊராட்சிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 12392—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் திட்டக்குடிக்கு ஊராட்சிக் கட்டிடம் கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், திட்டக்குடி ஊராட்சிக்கு கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை.

34—

தாமரங்கோட்டை ஊராட்சிக் கட்டிடம்.

வினா எண். 12393—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், தாமரங்கோட்டைக்கு ஊராட்சிக்கு கட்டிடம் கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

*விடை— 9—3—1993 ஆம் நாளிட்டது.

**விடை—10—3—1993 ஆம் நாளிட்டது.

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தாமரங் கோட்டை ஊராட்சிக்கு 1991–92ல் கட்டிடம் கட்டப் பட்டுள்ளது. தற்போது ஊராட்சிக்கு கட்டிடம் கட்ட செயற் குறிப்பு ஏதும் இல்லை.

35—

ஒதியடிக்காடு ஊராட்சிக் கட்டிடம்.

வினா எண் 12395—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஒதியடிக்காடு ஊராட்சிக்கு கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஒதியடிக்காடு ஊராட்சிக்கு கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு இல்லை.

36—

மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கு அதிகாரம்.

வினா எண் 12704—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை உடனுக்குடன் செயற்படுத்த மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கு முழு அதிகாரம் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை 9—3—1993 ஆம் நாளிட்டது.

**விடை 10—3—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டத்தின்படி மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் அரசுக்கு ஆலோசனை வழங்கும் மன்றமாகவும் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்யும் மன்றமாகவும் விளங்குகின்றன. செயற்படுத்தும் அதிகாரம் ஏதும் வழங்கப்படவில்லை. எனவே மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு அதன் தீர்மானங்களை செயல்படுத்தும் அதிகாரம் வழங்குவதற்கு செயற்குறிப்பு ஏதுமில்லை.

37—

ஊராட்சி மன்றங்களுக்கு அரசு சார்பில் ஒரு மிதிவண்டி வழங்கல்.

வினா எண் 12955—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஊராட்சி மன்றங்களுக்கு அரசு சார்பில் ஒரு மிதிவண்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஊராட்சி மன்றங்களுக்கு அரசு சார்பில் ஒரு மிதி வண்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

38—

மருங்கப்பள்ளம் பால் வழங்கு சங்கத்திற்கு கடன்.

வினா எண் 12796—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

*விடை 9—3—1993 ஆம் நாளிட்டது.

பேராவூரணி தொகுதி, மருங்கப்பள்ளம் பால் வழங்கும் சங்கத்திற்கு மாடுகள் வாங்கக் கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, மருங்கப்பள்ளம் பால் கூட்டுறவு சங்க உறுப்பினர்களிடமிருந்து மாடுகள் வாங்க இதுவரை விண்ணப்பங்கள் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பங்கள் பெறப்படின் பரிசிலனை செய்து கடன் வழங்க பாலுற்பத்தித் துறையால் நடவடிக்கை எடுக்கப்படும்.

39—

கூட்டுறவுச் செயலாளர் பதவிக்கு பயிற்சி பெற்றவர்கள்

வினா எண் 13020— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத்துறையால் செயலாளர் பதவிக்கு பயிற்சி பெற்றவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் எத்தனை பேர் ?

(ஆ) இவர்களில் வேலையில் உள்ளவர்கள் எத்தனை பேர் ?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களில் செயலாளர் பதவிக்கு என தனியே பயிற்சி அளிக்கப்படுவது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

*விடை—20—3—1993 ஆம் நாளிட்டது.

**விடை—26—3—1993 ஆம் நாளிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 26]

40—

பழவேனிற்காட்டில் கிராம அங்காடி.

வினா எண் 13026—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம் பழவேனிற்காட்டிற்கு ஒரு கிராம அங்காடி அமைக்க 1992–93-ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

*விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, புதுக்கோட்டை உள்ளூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள புதுக்கோட்டை அங்காடி புதுக்கோட்டை உள்ளூர் கிராமத்தில் உள்ள 478 குடும்ப அட்டைகளுடனும், பழவேனிற்காடு கிராமத்தில் உள்ள 70 குடும்ப அட்டைகளுடனும் இயங்கி வருகிறது. மேற்படி கடைக்கும் 70 குடும்ப அட்டைகள் உள்ள பழவேனிற்காடு குடியிருப்புகளுக்கும் இடையே இரண்டு கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ளதால் தற்போதுள்ள அரசு ஆணைப்படி பழவேனிற்காடு கிராமத்தில் ஒரு அங்காடி அமைக்க வாய்ப்பில்லை.

41—

ரோஸ்மியாபுரத்தில் ரேஷன் பொருட்களை வாங்கும் வசதி செய்தல்.

வினா எண் 14144—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, தெற்கு வள்ளியூரைச் சார்ந்த ரோஸ்மியாபுரம் நடுத்தெரு மக்களும் பனங்குடியைச் சார்ந்த மக்களும் ரோஸ்மியாபுரத்திலேயே ரேஷன் பொருட்களை வாங்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

*விடை—10.3.1993 ஆம் நாளிட்டது.

*வினட—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

ராதாபுரம் தொகுதி தெற்கு வள்ளியூரைச் சார்ந்த ரோஸ்மியாபுரம் நடுத்தெரு மற்றும் பனங்குடியைச் சார்ந்த மக்களும் வள்ளியூர் முதன்மை வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் பனங்குடி முதன்மை கூட்டுறவு பண்டகசாலை ஆகிய இரு நிறுவனங்கள் கீழ் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைகளில் உணவுப் பொருட்கள் பெறுகின்றனர். அதை மாற்றி ரோஸ்மியாபுரம் நடுத்தெரு மக்களும் பனங்குடியைச் சார்ந்த மக்களும் ரோஸ்மியாபுரத்திலேயே ரேஷன் பொருட்களை வாங்க புதிய பகுதிநேர கடை திறக்கப்படின் நிர்வாக ரீதியில் சில சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ரோஸ்மியாபுரத்தில் புதிய பகுதிநேர கடை திறக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

42—

கங்கணாங்கிணறு கிராமத்தில் நியாய விலைக்கடை திறத்தல்.

வினா எண். 14838—திரு. எஸ். எஸ். இராமசுப்பு : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், கங்கணாங்கிணறு கிராமத்தில் ஒரு புதிய நியாய விலைக்கடை திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

தற்போது 156 குடும்ப அட்டைகள் கொண்ட கங்கணாங்கிணறு பொது மக்கள் அவ்வூரிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளான பலபத்திரராமபுரத்திலுள்ள நியாய விலைக்கடையில் அத்தியாவசியப் பொருட்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் மற்ற கிராமங்களுக்கு வசதியாக பலபத்திரராமபுர நியாயவிலைக் கடை நல்ல வசதியான இடத்தில் இருந்து செயல்படுகிறது. எனவே ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள கங்கணாங்கிணறு கிராமத்தில் கிளை நியாயவிலைக் கடை தற்போது திறக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏதுமில்லை.

* 7—4—1993 ஆம் நாளிட்டது.

** 13—4—1993 ஆம் நாளிட்டது.

1993 அக்டோபர் 26]

43—

கீழக்கொள்ளுக்காட்டிலும், அனந்தகோபாலபுரத்திலும் கால் நடை மருத்துவமனைகள் தொடங்குதல்.

வினா எண் 15823—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி கீழக்கொள்ளுக்காட்டிலும், அனந்தகோபாலபுரத்திலும் 1992—93-ல் கால்நடை மருத்துவமனைகள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி கீழ்க்கொள்ளுக்காட்டிலும், அனந்த கோபாலபுரத்திலும் கால்நடை மருத்துவமனைகள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை. வருங் காலத்தில் சாத்தியக்கூறுகள் இருப்பின் தகுதியின் அடிப் படையில் கால்நடை மருத்துவமனைகள் துவக்குவது குறித்து பரிசீலிக்கலாம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

44—

தொக்காளி காட்டிற்கு கால்நடை மருத்துவமனைக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 15849—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம் தொக்காளி காட்டிற்கு 1992–93-ல் மருத்துவமனைக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், தொக்காலிக் காட்டிற்கு கால்நடை மருத்துவமனைக் கட்டிடம் கட்டித்தர தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

45—

தளவாயில் கரும்பு கோட்ட அலுவலகம் அமைத்தல்.

வினா எண் 16317—திரு. ஆர். தங்கராசு: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) ஆண்டிமடம் தொகுதியில் தளவாயில் கரும்பு கோட்ட அலுவலகம் ஒன்று அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

46—

கலப்புத் திருமணம் செய்து கொண்ட அரசு ஊழியர்களுக்கு வாடகை குடியிருப்பு வழங்குவதில் முன்னுரிமை அளித்தல்.

வினா எண். 15301—திரு. கி. சுவாமிநாதன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலப்புத் திருமணம் செய்து கொண்ட அரசு ஊழியர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிப்பதுபோல், வாடகை குடியிருப்பு வழங்குவதிலும் முன்னுரிமை அளிக்கப் படுமா ?

1993 அக்டோபர் 26]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

தற்சமயம் இயலாது.

47 –

செட்டிக்காடு பாலர் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 13392—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிக்கொண்டான் ஊராட்சி, செட்டிக்காடு பாலர் பள்ளிக்கு 1992–93–ல் நிரந்தரக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிபபு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம் பள்ளிகொண்டான் ஊராட்சி—செட்டிக்காடு பாலர்பள்ளி 1991–92-ல் ரூ 70,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது

48—

கணேசபுரத்தில் பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண். 13608—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கணேசபுரத்தில் 1992—93-ல் பாலர் பள்ளி ஒன்று அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் குப்பத்தேவன் ஊராட்சி கணேசபுரத்தில் தற்பொழுது குப்பத்தேவன் குழந்தை நல சத்துணவு மையம் என்ற பெயரில் இயங்கி வருகிறது.

49—

மேட்டுக்கொல்லைக்கு பாலர் பள்ளி அமைத்தல்

வினா எண் 13609—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழக்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் திருத்தேவன் ஊராட்சி பேட்டுக்கொல்லைக்கு 1992–93ல் பாலர் பள்ளி ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் திருவத்தேவன் ஊராட்சியைச் சேர்ந்த மேட்டுகொல்லை கிராமத்தில் 15 குழந்தைகள் மட்டுமே இருக்கின்றனர். மேற்படி கிராமத்திற்கு அருகாமையில் குப்பத்தேவன், சோமநாதன பட்டிணம் ஆகிய இரு குழந்தை நல மையங்கள் (பால்வாடி பள்ளி) தற்பொழுது இயங்கி வருகின்றன. எனவே 1992–93ல் திருவத்தேவன் ஊராட்சியைச் சேர்ந்த மேட்டுக்கொல்லை கிராமத்தில் பாலர் பள்ளி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

50—

நகர்ப்புறப் பகுதியில் தொழிற்பேட்டைகள்

வினா எண் 10615—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சந்தை வசதி கிடைக்கும் வகையில நகரப் பகுதிகளுக்கு அருகிலேயே உள்ள கிராமப்புறங்களில் ஊரகத் தொழிற்சாலைகள் அமையும் வகையில் அரசு வகை செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

ஊரகத் தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு விற்பனை செய்யும் வாய்ப்புகள் உள்ள இடங்களில்

1993 அக்டோபர் 26]

எல்லாம் அவ்வித சிறு மற்றும் ஊரகத் தொழிற்சாலைகள் அமைக்க ஊக்குவிப்பது அரசின் கொள்கையாகும். இதன் அடிப்படையில் பெருநகரங்களுக்கும், நகரங்களுக்கும் அருகாமையில் உள்ள நகர்புறப் பகுதியில் புதிய தொழிற்பேட்டைகளும் மற்றும் ஊரகத்தொழில்களும், அதனைச் சார்ந்தவைகளும் அமைக்கப்பட்டு வருகிறது.

உடுக்குறியிடாத வினாக்கள்—விடைசள் முடிவுற்றன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தஞ்சை, நாகை காயிதே மில்லத் மாவட்டங்களில் நெல் கொள் முதலுக்கு ஊக்கத்தொகை நிறுத்தப்பட்டதால் விவசாயிகள் பாதிப்புக் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வே. தம்புசாமி மற்றும் திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் தஞ்சை, நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டங்களில் விவசாயிகளுக்கு நெல் கொள் முதலுக்காகக் கொடுத்து வந்த ஊக்கத்தொகையை நிறுத்தியதன் மூலமாக அம் மாவட்டங்களில் விவசாயிகளிடையே ஏற் பட்டுள்ள நிலை குறித்து இப்பேரவையின் இன்றைய அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கோரி அறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். இது அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கக்கூடிய அளவுக்கு எவ்வாறு அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மிகச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக் கொள்கிறேன். திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் ஏறத்தாழ 17 ஆண்டுக்காலமாக உற்பத்தி பண்ணக்கூடிய விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக உதவி வழங்கப் பட்டது. அந்த ஊக்கத் தொகை என்பது ஏறத்தாழ 16 ஆண்டுக்காலமாக அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள், இரண்டு மாவட்டங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் தொடர்ந்து பல்வேறு இயக்கங்களை நடத்தி, போராடி, பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு, ஆண்டுதோறும் 10 ரூபாயிலிருந்து

தொடங்கி ஏறத்தாழ 35 ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டு அந்த ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. அந்த ஊக்கத் தொகை வழங்கப்பட்டதை இப்போது இருக்கக்கூடிய அரசு திடீரென்று ரத்து செய்து விட்டது. அப்படி ரத்து செய்ததன் விளைவாக அந்த இரண்டு மாவட்டங்களில் இருக்கக்கூடிய, விவசாய உற்பத்தியில் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் அதை மீண்டும் வழங்கவேண்டுமென்று தொடர்ந்து அரசை வற்புறுத்தியும் இதுவரையில் அரசு அந்த ஊக்கத் தொகையை வழங்குவதற்குத் தயாராக இல்லை.

அதோடுகூட, முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து தங்களுடைய குறைகளைக் கூறவேண்டும் என்பதற்காக, விவசாயிகள் முதலமைச்சரைச் சந்திப்பதற்கு தேதி கூட கேட்டு கடைசியில் அந்தத் தேதி முறையாக அறிவிக்கப்படாமல், முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளைச் சொல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. இதற்குப் பிறகு அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் தொடர்ந்து இயக்கங்கள் நடத்தி இருக்கிறார்கள். கடந்த 12ஆம் தேதி முதல் 14ஆம் தேதி வரையிலும் இந்த மாவட்டம் முழுவதிலும் இருக்கக்கூடிய அந்த விவசாயிகள் அரசு ஊக்கத் தொகை 35 ரூபாய் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து மூன்று நாட்கள் தொடர்ந்து முற்றுகைப் போராட்டம் நடத்தி, சிறை சென்று, விடுதலையாகி இருக்கிறார்கள். இப்படி இரண்டு மாவட்டங்களில் விவசாயிகளுக்கு வழங்கி இருக்கக்கூடிய, அவர்கள் நீண்டகாலமாகப் போராடி பெற்ற அந்த ஊக்கத் தொகையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயிகளுக்கு விரோதமாக திடீரென்று அதை ரத்து செய்துவிட்டது. ஆகவேதான் இதன் விளைவாக இரண்டு மாவட்டங்களில் இருக்கிற விவசாயிகள் ஒரு பதட்ட நிலையை அடைந்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசு மீண்டும் இந்த ஊக்கத் தொகையை வழங்க வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு பிறகுகூட, அரசு அறிவிக்காமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்கது. அந்தவகையில் அரசு அந்த ஊக்கத் தொகையை வழங்கி அந்த இரண்டு மாவட்டங்களில் இருக்கும் பதட்ட நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11.25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை நாகை மாவட்டங்களில் உற்பத்தி செய்யக் கூடிய நெல்லை, தமிழகத்தினுடைய உணவு நிலையைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு அரசாங்கமே நேரடிக் கொள்முதல் மூலமாகக் கொள்முதல் செய்து வந்தது. தமிழகத்தில் உற்பத்தி

ஆகக்கூடிய உணவு தானியங்களில், பெரும்பகுதி, 12 லட்சம் மெட்ரிக் டன் தஞ்சை, நாகை மாவட்டங்களில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஏதோ புதிய கோரிக்கைகளை, புதிய சலுகைகளை அங்கு இருக்கக்கூடிய விவசாயிகள் கேட்கவில்லை, தொடர்ந்து முன்னால் இருந்த அரசுகள் விவசாயிகளுக்கு பல்வேறுவிதமான சலுகைகளை, ஊக்கத் தொகைகளை வழங்கி வந்தன. முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியிலே இருந்தபோதுகூட, விவசாயிகளுக்கு உரமாகக்கூட வழங்கியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோதுகூட, வண்டிச் சத்தம் என்கிற பெயரால் இந்த ஊக்கத் தொகையை வழங்கிவந்தார்கள். அதற்குப் பின்னால், படிப்படியாக ஒரு குவிண்டலுக்கு 35 ரூபாய் ஊக்கத் தொகையாக தமிழக அரசு வழங்கிக்கொண்டு வந்தது. அதோடு மட்டுமல்ல, எந்த ஆண்டும் இல்லாதவகையில், இரண்டு ஆண்டுகளாக தமிழக அரசு ஜூன் மாதம் 12–ந்தேதி தண்ணீர் திறந்து குறுவை விவசாயத்தை தீவிரமாகச் செய்யவேண்டும் என்று சொல்லி அந்த மாவட்டத்தில் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கூட குறுவை விழாவை நடத்தி, புதிய நெல்களை அறிமுகப்படுத்தினார்கள். விவசாயிகளுக்கு ஊக்கம் அளித்தபின் தீவிரமான முறையில், விவசாயிகள் தங்களுடைய குறுவை நெல்லை உற்பத்தி செய்யக் கூடிய இந்த நேரத்தில், தமிழக அரசு திடீரென்று விவசாயிகள் பாதிக்கக்கூடிய சில உத்தரவுகளை, அறிவிப்புகளை, அறிவித்திருக்கிறது. விவசாயிகள் உற்பத்திச் செய்யக்கூடிய நெல்லை, அரசாங்கம் கொள்முதல் செய்ய முடியாது என்கிற ஒரு அதிர்ச்சியான செய்தியை தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு வழங்கி வந்து கொண்டு இருந்த, குவிண்டாலுக்கு 35 ரூபாய் என்கிற ஊக்கத் தொகை நிறுத்தப்பட்டதாக, அதிர்ச்சியான ஒரு செய்தியை விவசாயிகளுக்கு அளித்துள்ளது. விவசாயிகள் இன்றைய தினம், கடுமையான விலைவாசி ஏற்றம், உர விலை, பூச்சி மருந்து, இடு பொருட்களினுடைய விலை ஏற்றம் போன்றவைகளால், பல்வேறு சோதனைகளுக்கு ஆளாகிக் கொண்டு விவசாயம் செய்து கொண்டிருக்கிற வேளையில், விவசாயிகளை தமிழக அரசு பழிவாங்கிவிடக் கூடாது. அதே நேரத்தில், அவர்களுக்கு மேலும் மேலும் நீங்கள் ஊக்கம் அளித்து, விவசாயத்தில், அவர்கள் அதிகமான நெல்லை உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பை அளிப்பதற்கு மாறாக, அரசு இன்றைக்கு ஊக்கத் தொகையை எடுத்திருக்கிறது. விவசாயிகளுடைய கடுமையான கிளர்ச்சிக்குப் பின்னாலும் இன்றைய தினத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறந்து முழுமையாக விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய நெல்லை, இன்றைய தினத்திலே கொள்முதல் செய்யவில்லை. ஒவ்வொரு

நேரடிக் கொள்முதல் நிலையங்களில் 100 குவிண்டாலுக்கு மேல் அவர்கள் கொள்முதல் செய்யவில்லை. பெயரளவுக்குத் தான் கொள்முதல் செய்கிறார்கள். இன்றைக்கு தனியார்கள் நெல்லைக் கொள்முதல் செய்யலாம் என்று அரசு உத்தரவிட்டு பொது மார்க்கெட்டை கொண்டு வந்திருக்கிறது. குறுவை விவசாயிகள், அறுவடை செய்த நெல்லை, பாதுகாத்து வைக்க முடியாத ஒரு அவல நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு குவிண்டால் நெல்லுக்கு அனேகமாக அரசாங்கம் நிர்ணயித்து இருக்கிற 310 ரூபாய் என்று சொன்னால், மத்திய அரசு 40 ரூபாய் குவிண்டாலுக்கு அறிவித்திருக்கிறார்கள். சன்ன ரக நெல்லுக்கு, நடுத்தரமாக இருக்கக்கூடிய சன்ன ரக நெல்லுக்கு 310 என்று அறிவித் திருக்கிறார்கள். மிகச் சன்ன ரக நெல்லுக்கு 360 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு இந்த விலை களினால், விவசாயிகள் படுமோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். தங்கள் இஷ்டம்போல் வாங்கு வதற்கு இன்றைக்கு வியாபாரிகளுக்கு சலுகை அளிக்கக்கூடிய விதத்தில் நம்முடைய அரசு அறிவித்திருக்கிறது. ஆகவே, அரசாங்கமே முழுமையாக கொள்முதல் செய்வதோடு, ஒரு சீரான விலையை இன்றைக்கு நிர்ணயிக்க முடியும். அதேநேரத்தில் இன்றையதினம் தஞ்சை மற்றும் நாகை மாவட்டங்களில் கடுமையாக அரிசி விலை உயர்ந்திருக்கிறது. அங்கே உற்பத்தி செய்யக்கூடிய நெல் அத்தனையுமே, பல்வேறு மாநிலங்களுக்கு கடத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அரசாங்கம், விவசாயிகளுடைய நலனைக் கருதி, உடனடியாக இதை அறிவிக்க வேண்டும். தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் கூட பல்வேறு அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். மத்திய அரசு குவிண்டாலுக்கு 40 ரூபாய் உயர்த்தியிருக்கிறது. ஆகையினால் மாநில அரசு கொடுக்கக்கூடிய ஊக்கத் தொகை நிறுத்தப்பட்டதாகச் சொன்னார்கள். ஏற்கனவே உயர்த்திக் கொடுத்துக் கொண் டிருந்த 40 ரூபாயில், 35 ரூபாயை எடுத்தவுடன்தான் 5 ரூபாய் தான் இன்றையதினம் விவசாயிகளுக்கு கிடைக்கின்றது. இன்றைக்கு நேரடி கொள்முதல் நிலையங்களில், குவிண்டாலுக்கு கிரேட் கட்டி—100 குவிண்டால் கொள்முதல் செய்கிறபோது—அதன் பெயரால், நெல்லுக்குக்கூட 14 ரூபாய், ஈரம், பச்சை என்று சொல்லி, பிடித்துவிடுகிறார்கள். எனவே, விவசாயிகள் மிகப் பெரிய நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். விவசாயி களுடைய நலனைக் கருதி, தமிழக அரசு மீண்டும், இந்த ஊக்கத் தொகையை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், நேரடிக் கொள்முதல் நிலையங் களையும் திறப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும். அந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் மிகவும் கொந்தளிப்பான சூழ்நிலையில், பல்வேறு

முறையில் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். பஸ் மறியல், ரோடு மறியல், ஆங்காங்குள்ள தாலுக்கா அலுவலகம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு மறியல் என்று போராட்டங்களை நடத்தி, கிளர்ச்சியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த மாவட்டங்கள் அமைதியாக இருக்கின்ற முறையில், விவசாயிகள் மீண்டும் ஊக்கத்தோடு உணவு தானிய உற்பத்தியைச் செய்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, இதுகுறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் அமைச்சர்:

*மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், தம்புசாமி அவர்களும், மாண்புமிகுஉறுப்பினர் பழனிசாமி அவர்களும் இந்த ஆண்டு காவிரி டெல்டா பகுதியில் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்காததினால் அங்கே கிளர்ச்சிகளும், கொந்தளிப்புகளும் ஏற்பட்டிருக்கிறது; விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற அடிப்படையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்றும், இந்த பொருள் குறித்து விவாதிக்க வேண்டுமென்றும் இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் இங்கே தவறான தகவல்களின் அடிப்படையில் சில செய்திகளைச் சொல்லி இருக்கிறார்கள், அதை நான் முதலிலே மறுக்கவேண்டுமென்று விரும்புகிறேன். மாண்புமிகு தம்புசாமி அவர்கள் 10,17 ஆண்டுகளாக இந்த ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது; அது விவசாயிகள் நடத்திய போராட்டத்தின் விளைவாக ஏற்படுத்தப்பட்டது. என்று குறிப்பிட்டார்கள். அப்படியெல்லாம் 17 ஆண்டுகளாக இந்த ஊக்கத்தொகை வழங்கப்படவில்லை. 10 ஆண்டுகளாகத்தான் அது வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு முன்னாலே இந்த ஊக்கத்தொகை வழங்கப்படவில்லை. காரணம், ஏகபோக கொள்முதலே அதற்கு முன்னாலே இல்லை. நான் பின்னலே இந்த ஊக்கத்தொகையினுடைய வரலாற்றை சொல்ல விரும்புகிறேன். அதேபோல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் அரசு தனியாருக்கு, தனி வியாபாரிகளுக்கு வர்த்தகத்தைத் திறந்து வைத்துவிட்டு அரசு கொள்முதலை நிறுத்திவிட்டது என்ற ஒரு தவறான தகவலை இந்தச் சபையிலே தெரிவித்திருக்கிறார்கள். எந்த நேரத்திலேயும் அரசு விவசாயிகளுக்குப் பாதகமாக எந்த உத்தரவையும் வழங்கவில்லை என்று நான் குறிப்பிடுகிற அதே நேரத்

தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எத்தனை கோடிகள் செலவானாலும், விவசாயிகளுக்கு ஏதாவது தீங்கு நேர்கிறது. என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இழப்பை எல்லாம் ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு ஆதரவாக நிற்கிற ஒரு முதலமைச்சரைத்தான் இன்று இந்தத் தமிழகம் பெற்றிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) தயவு செய்து தவறான தகவல்களின் அடிப்படையில் இந்த அவையிலே விவாதத்தைத் தொடங்க வேண்டாம் என்று நான் அன்போடு உங்கள் மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஊக்கத்தொகை என்பது 1983-ம் ஆண்டிலிலேயிருந்து வருகிறது. 1983 ஆம் ஆண்டு தொடங்குகின்றபொழுது drought allowance Rs. 15 in cash அதந்குப் பிறகு drought, risk and irrigation allowance 45 ரூபாய் அடுத்த ஆண்டுகளிலேயிருந்து. ஆகவே தொடர்ந்து 1983 ஆம் ஆண்டு தொடங்கி ஏறத்தாழ 1987 ஆம் ஆண்டு வரை விவசாயிகளுக்கு அவர்கள் வறட்சியினாலே மற்ற வகைகளினாலே இழப்பைச் சந்திக்கிறபோது, அவர்களுக்கு உதவித் தொகையாக பூச்சி மருந்து மற்றும் உரம் போன்றவைகளை அரசாங்கம் வழங்கி வந்தது. அதற்குப் பிறகு 1988ஆம் ஆண்டிலேயிருந்துதான் இந்த ஊக்கத்தொகை 35 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம், தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டம், காயிதே மில்லத் மாவட்டம் என்று காவிரி டெல்டா பகுதிகளிலே இருக்கின்ற விவசாயிகளைப் போலவே வட ஆற்காடு மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம் மற்றும் செங்கை-எம். ஜி. ஆர். மாவட்டம் போன்ற மாவட்டங்களிலே எல்லாம் மிகப் பெரிய அளவிலே விவசாயிகள் நெல்லை உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் அரசாங்கம் 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்த காவிரி டெல்டா பகுதியிலே, அதை தஞ்சை, காயிதே மில்லத் என்று இன்றைக்கு இரண்டு மாவட்டங்களாக இருக்கின்ற அந்த மாவட்டங்களிலேயும், அதற்குப் பிறகு, காவிரி பாய்கிற திருச்சியின் ஒரு பகுதியிலேயும், புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதியிலேயும், தென்னாற்காடு மாவட்டதின் ஒரு பகுதியிலேயும். இந்தக் கட்டாயக் கொள்முதலை அமல்படுத்தியது. ஏகபோக கொள் முதல் மொனாப்பலி புரொக்கியூர்மென்ட் என்று சொல்லப்படுகின்ற அந்தக் கொள்முதல் அங்கே விவசாயிகள் உற்பத்தி செய்கிற நெல்லை, வேறு யாருக்குமே விற்பனை செய்யக் கூடாது, அரசாங்கத் திடத்திலேதான் தர வேண்டும் என்று ஆணை பிறப்பித்ததை ஒட்டி, அன்றைக்கு விவசாயிகள் எல்லாம் எல்லா விவசாயிகளிடமும் நீங்கள் கை வைக்கவில்லை, எங்களிடத்திலே மட்டும் இவ்வளவு தொல்லை செய்கிறீர்களே, எங்களிடத்திலே கட்டாயக் கொள் முதல் செய்கிறீர்கள் என்று கேட்டதற்காக இந்த 35 ரூபாய் அவர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்குவது என்கிற நடைமுறையை அரசாங்கம் அமல்படுத்தி வந்தது.

1993 அக்டோபர் 26] [திரு. இராம வீரப்பன்]

முற்பகல் 11-35

அதேபோன்று விவசாயிகள் உற்பத்தி செய்கிற நெல்லுக்கு விலையை மத்திய அரசாங்கம் நிர்ணயிக்கிறது. மத்திய அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் எந்த விலையை நிர்ணயிக்கிறதோ அந்த விலையை நம்முடைய மாநில அரசு ஒரு காசு கூட குறைக்காமல் அப்படியே தந்து வருகிறது. அவர்கள் விலையை நிர்ணயிக்கிறபோதும் அந்த ஆண்டிலே கூலி விவரங்கள் மற்றும் உரம் அல்லது பூச்சி மருந்து போன்றவைகளுக்கு இருக்கும் விலைகளையெல்லாம் கவனத்திலே எடுத்து பொருளாதார சூழ்நிலைகளையெல்லாம் மனத்திலே வைத்துத்தான் நெல்லுக்கு விலையை நிர்ணயம் செய்கிறார்கள். அதே போல இந்த ஆண்டு மத்திய அரசாங்கம் சாதாரண ரகத்திற்கு 40 ரூபாயும் சன்ன ரகத்திற்கு 50 ரூபாயும் மிகச் சன்ன ரகத்திற்கு 60 ரூபாயும் உயர்த்தியிருக்கிறார்கள். ஆகவே சென்ற ஆண்டிலே கொடுத்த விலையைவிட குவிண்டாலுக்கு 40, 50, 60 ரூபாய் என்று விலையை உயர்த்தித் தருகிறோம். அப்படி விலையை உயர்த்தாமல் அரசாங்கம் இன்னறக்கு விலையை வைக்கவில்லை. அப்படி தருகிறபோது என்ன வாங்குகிறார்கள் விவசாயிகள் என்று பார்த்தால், சென்ற ஆண்டைவிட—சென்ற ஆண்டு 305 ரூபாய் வாங்கிய குவிண்டால் நெல்லுக்கு இந்த ஆண்டு 310 ரூபாய் சென்ற ஆண்டு 315 வாங்கிய குவிண்டால் நெல்லுக்கு இந்த ஆண்டு 330 ரூபாய், சென்ற ஆண்டு 325 வாங்கிய குவிண்டால் நெல்லுக்கு இந்த ஆண்டு 350 ரூபாய். ஏன் அந்த 35 ரூபாயையும் நிறுத்தினீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டு, விவசாயிகளுக்கு பாதகமாக அரசாங்கம் முடிவு எடுத்து விட்டது என்று குறிப்பிட்டார்கள். விவசாயிகளுக்கு பாதகமாக அரசாங்கம் முடிவு எடுக்கவில்லை. விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்கிற நெல்லை அரசாங்கத்திடத்திலே தான் கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிற சூழ்நிலையிலேயிருந்து அரசாங்கம் அவர்களை விடுவித்திருக்கிறது. அவர்கள் முடிந்தால் இயன்றால் எவ்வளவு அதிக விலைக்கு வெளி மார்க்கெட்டிலே விற்றுக்கொள்ள முடியுமோ அப்படி விற்றுக் கொள்ளலாம் என்று வெளி சந்தையிலேயும் விற்கலாம் என்று அவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. அப்படி அனுமதி வழங்கியிருக்கிற அதே நேரத்தில் வெளிச் சந்தையிலே வெளி வியாபாரிகள் விவசாயிகளிடத்திலே குறைவாக பேரம் பேசி அந்த நெல்லை எல்லாம் அவர்களிடத்திலே குறைந்த விலைக்கு விற்க வேண்டிய ஒரு அவசியமோ நெருக்கடியோ விவசாயிகளுக்கு நேரிட்டு விடக் கூடாது என்பதினாலே அவர்கள் எந்த நேரத்திலேயும் அவர்களுடைய நெல்லை வெளி சந்தையிலே விற்க முடியவில்லையானால் அரசாங்கத்திடத்திலே கொண்டு வந்து தரலாம்

எவ்வளவு நெல் ஆனாலும் அரசாங்கம் கொள்முதல் செய்யும் என்ற ஆணையைத்தான் முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்திருக்கிறார்களே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) அரசாங்கம் கொள் முதல் செய்யாது என்று எந்த இடத்திலேயும் தெரிவிக்க வில்லை என்பதை நான் இங்கு திட்டவட்டமாக உங்கள் மூலம் இந்த அவைக்கும் நாட்டுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய இரண்டு மாவட்டங்களிலேயும் விவசாயிகள் கொந்தளித்திருக்கிறார்கள், பரபரப்பு அடைந்திருக்கிறார்கள், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைச் சந்திக்க வேண்டும் என்று போரட்டம் நடத்தினோம், மறியல் நடத்தினோம் என்றெல்லா சொன்னார்கள். நடந்தது அதற்காகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கே நேரிடையாகச் சென்று என்ன நடைபெறுகிறது, விவசாயிகளுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பிய காரணத்தாலே, நானே 20ஆம் தேதி 21ஆம் தேதி ஆகிய இரண்டு நாளும் தஞ்சைமாவட்டத்திலேயும், காயிதே மில்லத் மாவட்டத்திலேயும் நேரிடை கொள் முதல் நிலையங்களிலே பலவற்றிற்கு நேரிலேயே சென்று அங்கே விவசாயிகள் எந்தக் கருத்தைச் சொல்லுகிறார்கள், எந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் நேரிலேயே கேட்டு அறிந்து, இரண்டு மாவட்டங்களிலேயும், எந்த பாதிப்பும் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதையும் தெரிந்துகொண்டேன். ஆனால் ஒன்றிரண்டு இடங்களிலே விவசாயிகள் இந்த 35 ரூபாயை கொடுக்கக் கூடாதா என்று கேட்கிற ஒரு நிலைமைதான் இருந்ததே தவிர வேறு எந்த பாதிப்பும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பிலே போராட்டம் நடத்தப்பட்டது. அது விவசாயிகளின் பெயராலே நடத்தப்பட்டது. நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாங்கம் எந்த நேரத்திலேயும், விவசாயிகள் கொண்டு வந்து தருகிற நெல்லை, எவ்வளவு ஆனாலும் அதைக் கொள் முதல் செய்ய வேண்டும் என்ற ஆணை பிறப்பித்திருப்பதை ஒட்டி இன்றைக்கு அந்தப் பகுதியில் சுமார் 373 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இருக்கின்றன. இதுவரை 3 நாட்களுக்கு முன்பு வரை 1,62,000 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 11.40

இன்னும் சொல்லப் போனால் 22% மாய்ஸ்ச்சர் என்று முன்னாலேயே ஆணை பிறப்பிக்கப்பட்டது. அப்போது வெளியிலே இருந்து வியாபாரிகள் கொஞ்சம் அதிக விலை கொடுத்து விவசாயிகளிடத்திலே வாங்கினார்கள்

இன்றைக்கு அரசாங்கத்தினிடத்திலே கூட விவசாயிகள் வரவில்லை. வெளியிலே வியாபாரிகளிடத்திலே விற்றார்கள். கடந்த 10 நாட்களாக மழை தொடர்ந்து பெய்யத் தொடங்கிவிட்டது. மழை பெய்ததற்குப் பிறகு, இந்த அறுவடையாகிற நெல் ஈரமாகிற சூழ்நிலையில் வியாபாரிகள் வாங்கவில்லை. ஆனால் விவசாயிகள் நம்முடைய அரசாங்க கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு வந்து தந்தார்கள். அப்போது 22% மாய்ஸ்ச்சர் என்று இருந்ததை இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு 25% மாய்ஸ்ச்சர் இன்றைக்கு அனுமதிக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே 25% மாய்ஸ்ச்சரோடு எந்த அரசாங்கத்தாலேயும் கொள்முதல் செய்யப்படவில்லை (மேசையைத் தட்டும் ஒலி). 25% மாய்ஸ்ச்சர் என்றால் ஈரமாக இருக்கின்ற நெல்லை வாங்குவது என்று பொருள், மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னார்களே, மழை பெய்து விவசாயிகள் எல்லாம் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள் என்று. அந்தக் கஷ்டத்தை மனதிலே வைத்துதான் இந்த 25% மாய்ஸ்ச்சரிலே நெல்லை வாங்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னும்கூட நான் நேரிலே சென்றபோது சிறிய விவசாயிகள், 1/2 ஏக்கர் 1 ஏக்கர் வைத்திருக்கின்ற விவசாயிகள் 10 மூட்டை 5 மூட்டை என்று நாங்கள் கொண்டு வருகின்ற போது அது ஈரப்பதம் அதிகமாக இருக்கிறது; அதை திருப்பி அனுப்புகிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அப்போது உடனடியாக அவர்கள் அப்படி சிறிய விவசாயிகள் கொண்டு வந்தால் அதை திருப்பி அனுப்பாதீர்கள், அங்கேயே வைத்திருக்கச் சொல்லுங்கள், அடுத்த நாள் வேண்டுமானாலும் வாங்கிகொள்ளுங்கள் என்றேன். அதிலே என்ன கஷ்டம் என்றால் நாம் வாங்குகின்ற நெல்லை வைப்பதற்கே இடமில்லை. சாலைகளிலேதான் வாங்கி அடுக்கி வைத்துக் கொண்டிருக்கிறோம் மழையிலேதான் நாமும் வைத்துக் கொண்டிருக்கிறோம். நமக்கு என்று கொள்முதல் செய்கின்ற அத்தனை இலட்சம் டன் நெல்லையும் உடனே கொண்டுபோய் வைப்பதற்கு கோடவுன் வசதியும் கிடையாது. ஆனால் அரசாங்கம் இவ்வளவையும் பொறுத்துக் கொண்டு தஞ்சை மாவட்ட, காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய விவசாயிகளுடைய நன்மையைக் கருதி, அவர்கள் சிரமப்படக் கூடாது, கஷ்டப்படக் கூடாது, அவர்கள் விளைவித்துக் கொண்டு வருகின்ற நெல்லை அரசாங்கம் வாங்கிக்கொள்ள வேண்டும் என்கின்ற முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஏற்று இன்றைக்கு மிகத் தெளிவாக இந்த கொள்முதல் கொள்கையை அரசாங்கம் வகுத்து இருக்கிறது. சரி, இதற்கு மேலேயும் 35-ஐ கொடுத்தால் என்ன என்றால் இப்போது 35-ஐக் கொடுத்தால் 30 கோடி 40 கோடி இன்னும் அதிகமாக ஆகும். அல்லது 50 கோடி கூட ஆகலாம். ஆனால் இந்தியாவிலேயே நாம்தான் இன்னும் $2\frac{1}{2}$ ரூபாய்க்கு அரிசியை வழங்கிக் கொண்டிருக்கிறோம். $3\frac{1}{2}$ ரூபாய்க்கு

அரிசியை வழங்கிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஆண்டு ஒன்றிற்கு 400 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதித்து, இந்த நாட்டு மக்களுக்கு குறைந்த விலையிலே அரிசியை வழங்கிவருகிறோம். அந்த அரிசியை குறைந்த விலையிலே நிர்ணயித்து இருப்பதற்கே ஒரு காரணம் நாம் $2\frac{1}{2}$ ரூபாய்க்கு விற்றால்தான் வெளிச் சந்தையிலே விலை உயராது. இப்போது தஞ்சை மாவட்டத்திலே விலை எல்லாம் உயர்ந்துவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னார். அப்படி விலை எல்லாம் உயரவில்லை. நானே பார்த்தேன். ஒரு விவசாயி என்னிடத்திலே ஒரு சின்ன கணக்கைச் சொன்னார். இந்த ரேஷன் அரிசி, குடும்ப அட்டைகளுக்காக வழங்கப்படுகிற அரிசி மற்ற மாவட்டங்களை விட அதிகமாக தஞ்சை மாவட்டத்திலேதான் விற்பனை ஆகிறது. ஒரு ஊரிலே 100%ஆப்டேக் விற்பனை ஆகியிருக்கிறது தஞ்சை மாவட்டத்திலே. மற்ற மாவட்டங்களிலே எல்லாம் 80% தான் விற்றுக்கொண்டிருக்கிறது. இது என்ன? தஞ்சை மாவட்டம் நெல்லை உற்பத்தி செய்கின்ற மாவட்டம் ஆயிற்றே, எப்படி 100% என்று கேட்டால் அங்கே சுலபமான ஒரு கணக்கைச் சொன்னார்கள். $3\frac{1}{2}$ ரூபாய்க்கு ஒரு கிலோ நெல்லை கொண்டு வந்து போட்டுவிட்டு 2 ரூபாய் அரிசியை வாங்கிக்கொண்டு விவசாயிகள் செல்லுகிறார்கள் என்று ஒரு மிகப் பெரிய பொருளாதாரக் கணக்கை தஞ்சை மாவட்டத்திலேயிருந்து நான் கற்றுக் கொண்டேன். அதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அரசினுடைய மிகச் சிறந்த இந்த நாட்டு மக்களுக்காகவும் விவசாயிகளுக்காகவும் செய்கின்ற உதவி. (மேசையைத் தட்டும் ஒலி) அது கூட 3-1/2 ரூபாய்க்கு ஒரு கிலோ நெல்லிலே 1 கிலோ அரிசி வராது $1\frac{1}{2}$ கிலோ $1\frac{3}{4}$ கிலோ நெல். அப்படியானால் அதனுடைய மதிப்பு, சுமார் 5 ரூபாய். சுமார் 5 ரூபாய் நெல்லைப் போட்டு $2\frac{1}{3}$ ரூபாய்க்கு வாங்குகிற ஒரு சூழ்நிலையில்தான் இந்த அரசு விவசாயிகளையும் ஒரு கண்ணாக பாவிக்கிறது. அதே நேரத்தில் இந்த நாட்டு மக்களையும் இன்னொரு கண்ணாகப் பாவிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டு மக்களுக்குள்ளேதான் விவசாயிகளும் இருக்கிறார்கள். வெளியிலே விலையை அதிகப்படுத்திவிடக்கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவு கஷ்டமான நடவடிக்கைகளையும் எவ்வளவு பொருளாதார இழப்பு வந்தாலும் அதை ஏற்றுக் கொண்டு செயல்படுவது என்ற திட்டத்தோடு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, எவ்வளவு நெல்லை விவசாயிகள் கொண்டு வந்து தந்தாலும் அதைக் கொள்முதல் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது, மறுக்கவே இல்லை. 100 மூட்டை வாங்குங்கள் என்று சொன்னது எல்லாம் தவறான தகவல். இதை அங்கேயே தெரிவித்தார்கள். அதை யார் பரப்புகிறார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். தயவு செய்து இந்தப் பிரச்சினையிலே அரசியலைக் கலந்து விடாதீர்கள்

என்கிற வேண்டுகோளை வைத்து இப்போது மிகத் தெளிவாக விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே, அங்கே எந்தப் பதட்டமும் இல்லை, எந்த கவலையும் இல்லை. இதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பொருள் குறித்து விவாதிக்க வேண்டாம் என்று நான் அன்போடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் மிக விரிவான விளக்கத்திற்குப் பின் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ரூபாய்க்கு நெல்லைப் போட்டு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் வேண்டாம். (குறுக்கீடு) ஒரு முக்கியமான பிரச்சினை. தமிழகத்தின் (குறுக்கீடு).

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ரூபாய்க்கு நெல்லைப் போட்டு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும் உட்காருங்கள் (குறுக்கீடு) இல்லை, இது முடிந்து விட்டது. முடிந்து போன பிறகு, அதைப்பற்றி பேச வேண்டாம். (குறுக்கீடு) அதைப்பற்றி இப்போது வேண்டாம்; அது முடிந்து விட்டது. விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவு ஆகிவிட்டது. தமிழகத்தின் புகழ்மிக்க (குறுக்கீடு) இல்லை. உட்காருங்கள் (குறுக்கீடு) ஒரு பேரறிஞரான திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் இங்கிலாந்திற்குச் சென்று இருந்த நேரத்தில் திடீரென்று உடல் நலம் குன்றி அங்கு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிற சூழ்நிலையில் அவருடைய உடல்நிலைப் பற்றியும், அவருக்குச் செய்ய வேண்டிய ஏனைய வசதிகள் குறித்தும் அரசாங்கத்திலிருந்து சில விளக்கங்களைக் கேட்க வேண்டுமென்ற ஒரு பொருள் குறித்து திரு. ஞானசேகரன் அவர்கள் என்னிடத்தில் ஒரு அறிவிப்பு கொடுத்திருக்கிறார். அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) தம்புசாமியும், பழனிசாமியும் உட்காருங்கள், அது முடிந்து விட்டது (குறுக்கீடு) இல்லை, ஒத்திவைப்புத் தீர்மானத்தில் நான் தீர்ப்பு சொன்ன பிறகு நீங்கள் பேச முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள். வேறு நேரத்தில் பேசலாம். உட்காருங்கள்.

(குறுக்கீடு) நீங்கள் இருவரும் உட்காருங்கள், நான் திரு. ஞானசேகரனைப் பேச அனுமதித்து இருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை அதை நீங்கள் வேறுவிதமாகக் கொண்டு வாருங்கள். (குறுக்கீடு) இப்போது அமைச்சர் அதுபற்றி பதில் சொல்லி, நான் தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு நீங்கள் பேச முடியாது. (குறுக்கீடு) தம்புசாமியும், பழனிசாமியும் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு இந்தப் பிரச்சினைபற்றிப் பேச முடியாது. (குறுக்கீடு) நீங்கள் விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானத்தில் நீங்களும் பேசி, அமைச்சர் அவர்களும் பதில் சொன்னதற்குப் பிறகு இதே பிரச்சினை பற்றி மீண்டும் பேச முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

*<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்களும்' மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும் மேற்கொண்டு விளக்கங்கள் பெறவேண்டுமென்று, விரும்புவார்களேயானால் கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாக பெறலாம். குறுகிய கால வினா மூலமாகப் பெறலாம். இல்லை சப்ளிமெண்டரி பட்ஜெட் வருகிறபோது பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்போது தாங்கள் கேட்கலாம், அப்போது அமைச்சர் சரியான விளக்கங்களையும், விடைகளையும் தருவார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. சி. ஞானசேகரன் (குறுக்கீடு) திரு. தம்புசாமி இதை நீங்கள் வேறு வகையாகக் கொண்டு வாருங்கள். இதே பிரச்சினையை வேறு வகையில் நீங்கள் எழுப்பலாம். ஒரு குறுகிய கால வினாவாகக் கூட நீங்கள் கொடுக்கலாம். (குறுக்கீடு) இதுபற்றி குறுகிய கால வினா ஒன்று கொடுங்கள், இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, விதிமுறைகளில் இடம் இல்லாததை நீங்கள் வற்புறுத்தக் கூடாது. தயவுசெய்து நீங்கள் இருவரும் உட்காருங்கள். விதிமுறைகளில் இடம் இல்லாததை நீங்கள் வற்புறுத்தக் கூடாது. இதில் தங்களுக்கு மேற்கொண்டு விவரம் வேண்டுமானால் வேறு வகையில் எழுப்ப வேண்டும். இப்போது எழுப்பக் கூடாது. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் இருவரும் உட்காருங்கள். திரு. ஞானசேகரன் பேசுங்கள்.

<u>திரு. வே. தம்புசாமி</u> : நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

<u>திரு. ஜி. பழனிசாமி</u> : நானும் வெளிநடப்புச் செய்கிறேன், (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. வே. தம்புசாமி அவர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்களும் வெளிநடப்புச் செய்தார்கள்).

1993 அக்டோபர் 26]

3. சிறப்புக் குறிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே தெரிவித்தபடி திரு. ஞானசேகரன், அவர் கொடுத்த அறிவிப்பு குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

இலண்டன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள திருமுருக கிருபானந்த வாரியாருக்கு மருத்துவ சிகிச்சை வசதிகள் செய்து வேண்டியதன் அவசியம் குறித்து.

முற்பகல் 11-50

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் வேலூரை அடுத்த காங்கேயநல்லூரில் பிறந்து பாரதி சொன்னபடி தேமதுர தமிழ் ஓசையை உலகம் எல்லாம் பரப்பிக்கொண்டு ''வேலை'' வணங்குவதுதான் என் வேலை என்ற தத்துவத்தைக் கடைப் பிடித்து தமிழ்ப் படிப்பு அறிவு இல்லாத பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் பக்தி சொற்பொழிவிற்காக அல்லும் பகலும் பாடுபட்டு பக்தி சொற்பொழிவாற்றி, சாதனை படைத்து, தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடம் பிடித்து, தமிழ்த் தொண்டாற்றி வரும் தமிழ்க் கடல், திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் இலண்டனிலே தமிழைப் பரப்புவதற்காக 19—10—1993 அன்று நம் தாயகத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். திடீரென்று 21—10—1993 அன்று அந்த உத்தமச் சீலருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு, மயங்கியநிலையிலே இலண்டன் ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அங்கே சிகிச்சைப் பெற்று வருவதாகச் செய்திகள் வருகின்றன. கேட்பார் நெஞ்சுருகும் வண்ணம் சிறப்பு பக்திச் சொற்பொழிவாற்றும் அந்தத் தமிழ் அறிஞர் தொடர்ந்து 5 நாட்களாகப் பேச முடியாமல் மயங்கிய நிலையிலே இலண்டன் ஆஸ்பத்திரியில் உள்ளதால் தமிழகத்தில் உள்ள தமிழ் மக்கள் உள்ளிட்ட, உலகத் தமிழ் மக்கள் அனைவரும் வருத்தத்தில் ஆழ்ந்துள்ளார்கள். தமிழ்க் கடலில் மூழ்கி முத்துக்களையும், இரத்தினங்களையும், அரிய பல கருத்துக்களையும் எடுத்து, வாரி வாரி வழங்கும் திருமுருக கிருபானந்த வாரியாரின் உடல் நலம் இப்போது எப்படி உள்ளது? மயக்கத்திலிருந்து மீண்டு, அவர் உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா? அந்தத் தமிழ்க் கடலுக்கு ஆகும் மருத்துவச் செலவை தமிழக அரசே ஏற்க வேண்டும். அவருக்கு, அரசு சிறப்பான சிகிச்சையை இலண்டனில் அளிக்க ஆவன செய்ய வேண்டுமென்பது தமிழ் கூறும் நல்லுலகத்தின் பேரவா ஆகும். வாரியார் அவர்கள் உடனே குணம் அடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி, அரசு அன்னாரது மருத்துவச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் இங்கிலாந்திலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் சொற்பொழிவுகள் ஆற்றுவதற்காக வரவழைக்கப்பட்டு 19– 10— 1993 அன்று லண்டனுக்குச் சென்றார்கள். ஆனால் அவர்கள் லண்டனுக்குச் சென்ற உடனே உடல்நலம் குன்றி அங்கே மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டார் என்ற உடனேயே தமிழக அரசும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், அவர்கள் உடல்நிலையிலே மிகவும் அக்கறை கொண்டு அவர்களுடைய உலல்நிலை எப்படி இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுகின்ற தகவல்களைப் பெறுவதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் கள். வாரியார் அவர்கள் விமானத்திலே செல்லுகின்ற பொழுதே 3 தடவை வாந்தி எடுக்க வேண்டிய ஒரு நிலைமைக்கு ஆளாகி அவர் லண்டன் போய்ச்சேர்ந்த உடனேயே மயங்கிய நிலையிலே அவரை மருத்துவமனைக்குக் கொண்டுபோய் சேர்க்கவேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டது. திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களோடு அவருக்குத் துணையாக டாக்டர் திருஞானம் என்ற ஒரு டாக்டரும் உடன் போய் இருக்கிறார். அங்கே போய் மருத்துவமனையிலே சேர்த்ததற்குப் பிறகு லண்டனில் வாழுகின்ற தமிழ்ப் பெருங்குடி மக்களின் சார்பாக திரு. ரங்கநாதன் அவர்கள் திருமுருக கிருபானந்த வாரியார் அவர் களுக்கு அருகிலேயே இருந்து ஏற்ற சிகிச்சைகளைச் செய்து கொண்டு வருகின்றார்கள். அவருக்கு வாந்தி மற்றும் அதிக காய்ச்சல் ஆகியவற்றின் காரணமாக மயக்கம் ஏற்பட்டு, பேச முடியாத நிலையிலேயே மருத்துவமனையிலே இருந்தார்கள் என்ற நிலையில் அவர்களுடைய நிலையை கவனித்துக்கொள் ளும்படியாக இந்தியத் தூதுவரகத்திற்கும் நாம் செய்தி அனுப்பி அவர்கள் மூலமாகவும் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று தமிழக அரசின் சார்பாகவும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அங்கே வாரியார் அவர்கள், இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற நிலைமையினுடைய அடிப்படையில் அவரது மயக்கம் தெளிந்து ஓரளவுக்குத் தெளிவுபெற்று இருக்கின்றார்கள். அவர்களுக்கு எக்ஸ்ரே போன்ற சோதனைகளும் நடத்தி, பிற சோதனைகளும் நடத்தியதற்குப் பிறகு, அவர்களுக்கு உடல்நலம் பொதுவாக நன்றாகவே இருக்கிறது என்றும், ஆனால் மார்பிலே எதிர் பாராத வகையிலே சளிக்கட்டு ஏற்பட்டுவிட்டதன் காரணமாக அதனை அகற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்றும், அதனை அகற்றுகின்ற முயற்சியிலேதான் மருத்துவ மனையிலே இருக்கிற டாக்டர்கள் எல்லாம் ஈடுபட்டிருக்கிறார் கள் என்றும் இறுதியாக வந்த செய்தி குறிப்பிடுகிறது. அவர்கள் மயக்கம் தெளிந்து பிறரோடு பேசுகின்ற ஒரு சூழ்நிலையைப் பெற்று லண்டனில் இருக்கின்ற தமிழ் அன்பர்கள் பலபேர் சென்று அவரை நேரிலே கண்டபொழுது, விரைவிலே நான்

குணம் அடைந்துவிடுவேன் என்றும், குணம் அடைந்ததற்குப் பிறகு அங்கு சொற்பொழிவு கட்டாயம் செய்யப் போகிறேன் என்றும், திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தமிழ் அன்பர்களிடத்திலே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். என்றாலும், ஒரு 5, 6 நாட்களில் அவர்கள் மருத்துவமனையிலே இருந்து பூரண சிகிச்சையை அவர்கள் பெற்றதற்குப் பிறகுதான் வெளியேற வேண்டுமென்று டாக்டர்கள் அறிவுறுத்தி இருக்கிறார்கள் என்று இறுதியாகச் செய்தியும் கிடைக்கப் பெற்றிருக்கிறது. திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுடைய உடல் நலம் நல்லமுறையிலே தேறுவதற்கு வேண்டிய வசதிகள் எதை எதைச் தமிழக அரசு செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறதோ அதையெல்லாம் செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள். தேவைப் படுகின்ற செலவுகளையெல்லாம் செய்து எப்படியும் அவர்களுடைய உடல்நலம் தேறி, நல்லமுறையிலே தமிழகத்திற்கு வந்து அவர் தமிழ்த்தொண்டு ஆற்றி, தமிழர்களுடைய பண்பாடு சிறப்பாக வளர்வதற்கு உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கையினுடைய அடிப்படையிலேதான், எல்லாவித முயற்சியையும் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–55

4. அறிவிப்பு.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாற்றுத் தலைவர்கள் பட்டியல். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள் விதி 1–இன்படி கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் ஆறாவது கூட்டத்தொடரில் மாற்றுத் தலைவர்களாக (P nel of Chairman) நியமிக்கிறேன்.

1. திரு. க. அர்ச்சுனன்.
2. திரு. கி. தருமலிங்கம்.
3. திரு. ஆர். சிங்காரம்
4. திரு. ஜி. பழனிசாமி
5. திரு. செ. கு. தமிழரசன்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள். (அறிமுகம் செய்தல்.)

(அ) அடகு பிடிப்போர் (திருத்தச்) சட்டமுன் வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவுகள் அறிமுகம் செய்தல்.

[திரு. பேரவைத் தலைவர்] [1993 அக்டோபர் 26

1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுபிடிப்போர் (திருத்தச்) சட்ட முன்வடிவு இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள அனுமதி கோருவார்கள்,

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுபிடிப்போர் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த சட்ட முன்வடிவு, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக (திருத்தச் சட்ட முன்வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த சட்ட முன்வடிவு 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

* மாண்புமிகு திரு கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''

எனக் கோருகிறேன்.

திரு. ச. அழகிரி : இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம். என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

6. மின்வாரிய நிதிநிலை அறிக்கை 1993-94 மற்றும் திருத்திய மதிப்பீடுகள் 1992-93 மீது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1993-94 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1992-93 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள் ஆகியவற்றை இம்மாமன்றம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென முன் மொழிகின்றேன்.

நான் ஆற்ற வேண்டிய உரையை மாண்புமிகு உறுப்பினர்கள் வசதிக்காக நூல் வடிவமாக இம்மன்றத்திலே வைத்திருக்கின்றேன். இங்கே வைக்கப்பட்டிருக்கும் எனது தமிழ் உரையை சபைக் குறிப்பில் ஏற்றிட அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்முறை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை தமிழக அரசும், தமிழ்நாடு மின்சார வாரியமும் கருத்திற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு மின்சார வாரியத்தின் பணியினை இன்னும் சிறப்பாக ஆற்றிட தங்களது கருத்தினை இம்மாமன்றத்தில் கூறிடுமாறு இந்த அவையின் மாண்புமிகு

1993 அக்டோபர் 26] [திரு. எஸ். கண்ணப்பன்]

உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அவையில் தெரிவிக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் என்னுடைய பதிலுரையைத் தெரிவிக்கின்றேன் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1993-94 ஆம் ஆண்டிற்கான நிதிநிலையினுடைய வரவு அறிக்கையையும். 1992-93 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள் குறித்தும் தமிழ்நாடு சட்டப்பேரவையிலே மின்சார வாரியத்தைப் பற்றிப்பேசுகின்றபொழுது, அனல் மின் நிலையங்கள், புனல் மின் நிலையங்கள் இவைகள் மூலமாக ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சி குறித்து, தொழில் துறையிலேயும் விவசாயத்துறையிலேயும் மின்சாரம் சீராக வழங்கிட அரசாங்கம் மேலும் முனைப்பாகச் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுத் துறையிலே மின்சார உற்பத்தியும், தனியார் துறையிலே மின்சார உற்பத்தியும் இன்னும் அதிகமாகப் பெருக்கி, விவசாயிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் 24 மணி நேரமும் மின்சாரம் தொடர்ந்து கிடைக்கும்படி செய்தால், தமிழ்நாடு இந்தியாவிலே மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தொழில் துறையிலேயும், விவசாயத் துறையிலேயும் மட்டுமின்றி, வேலை வாய்ப்பு வழங்குவதிலேயும் சிறந்து விளங்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

இங்கே குறிப்பிட்டிருக்கின்ற பல்வேறு குறிப்புகளின் அடிப்படையில் நான்கு தனியார் துறைகளுக்கு 11,800 கோடி ரூபாய் முதலீட்டுடன், 3050 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட மின் திட்டங்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள் என்று இங்கே குறிப்பிட்டிருக்கின்றீர்கள். ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம் 7 ஆயிரம் கோடி; கடலூர் அனல் மின் திட்டம் 3 ஆயிரம் கோடி; பிள்ளைப்பெருமாள் நல்லூர் வாயுச்சுழலித் திட்டம் ஆயிரம் கோடி; திருமுட்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம் 800 கோடி என்று இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தனியார் துறைகளில் யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட

@1041-1058 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளன.

வில்லை. அதை அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையிலே, தனியார் துறையில் யார் யாருக்கு மின் திட்டங்களைக் கொடுத்திருக்கின்றீர்கள் என்பதையும் குறிப்பிட வேண்டுமென்று நான் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

பொதுவாக, மின்சாரத் துறை, விவசாயிகளுக்கு இரவிலே மின்சாரம் வழங்குகின்றது. விவசாயிகள் இரவிலே வயல் வெளியிலே போய் வேலை செய்ய முடிவது கிடையாது. எனவே இரவிலே அவர்களுக்கு வழங்கப்படும் மின்சாரம் பகலிலே கொடுக்கப்படுமேயானால் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்னொன்று, பல வருடங்களாக வீட்டு உபயோகத்திற்கு மின்சாரம் வேண்டுமென்று அப்ளை செய்தவர்களுக்கு இரண்டு, மூன்று வருடங்களாகியும்கூட, இன்னும் அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம், மின்சார மீட்டர் கிடைப்பதில்லை. வேண்டுமானால் மின்சார மீட்டரை நீங்களே வாங்கிக் கொள்ளுங்கள் என்று மின்சாரத் துறையிலே சொல்லுகின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமை மின்சாரத் துறையிலே இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இந்த மின்சார மீட்டரை வழங்கி வீடுகளுக்கு மின் இணைப்பு உடன் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இந்த மின்சார மீட்டரைத் தனியாகப் போய் வாங்க வேண்டுமென்று சொன்னால் மூன்று மடங்கு, நான்கு மடங்கு விலை அதிகமாகச் சொல்லுகின்றார்கள். தனிப்பட்டவர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இதில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார உற்பத்தியிலே தனியார் துறையும், பொதுத் துறையும் ஒன்று சேர்ந்து செயல்படுகின்றபொழுது இப்போது நீங்கள் இங்கே நிலக்கரி உற்பத்தி பற்றி 4 திட்டங்களிலே குறிப்பிட்டிருக்கின்றீர்கள்—அந்த நான்கு திட்டங்களிலே நிலக்கரி உற்பத்தித் திறன் எவ்வளவு தூரம் பெருகிவரும் என்பதைக் கணக்கிட்டு, மாநிலத்திலே மொத்தமாக எவ்வளவு மெகா வாட் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்று கணக்கு கொடுக்கப்பட்டிருந்தாலும், அதனுடைய செயல்திறன் பற்றிய குறிப்புகள் எதுவுமே இல்லை. நிலக்கரியைப் பற்றி நான் சொல்லுகிறபோது, பொதுவாக தமிழகத்திலே நிலக்கரி பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆகவே, நிலக்கரி பற்றாக்குறையைப் போக்குவதற்கு வெளிநாடுகளிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்ய வேண்டும் என்று சொல்லி, மைய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் 1992 ஆம் ஆண்டு அணுகியது. மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. நிலக்கரி பற்றாக்குறை காரணமாகத்தான் அந்தப் பற்றாக்குறை வந்திருக்கிறது. ஆகவே, நிலக்கரி பற்றாக்குறையைப் போக்கு

வதற்கு வெளிநாடுகளிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்ய வேண்டுமென்று சொல்லி, மைய அரசாங்கத்திற்கு நீங்கள் மனுச் செய்து இருக்கின்றீர்கள். அந்த மனுவில் இறக்குமதி சலுகையோடு வேண்டுமென்று கேட்டு இருக்கின்றீர்கள். அந்த மனுவின் பேரில் கர்நாடக மாநிலத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் 15—9—1992-ல் மைய அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறது. நிலக்கரி இறக்குமதி செய்ய வேண்டுமென்று சொன்னால் 85 சதவீதம் வரி கட்ட வேண்டும். ஆனால் தமிழ்நாடு அரசாங்கம் கேட்டுக் கொண்டதற்கிணங்க 15—9—1992ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசாங்கம் 20 இலட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கு, மைய அரசாங்கம், 30 சதவீதம் நீங்கள் சுங்க வரி கட்டினால் போதும் என்று சொல்லி அனுமதி அளித்திருக்கிறது.

பிற்பகல் 12-05

ஆனால் உடனடியாக நிலக்கரி இறக்குமதி செய்யாமல் 5 மாதம் கழித்து 15—9—1992-லே கொடுக்கப்பட்டதற்கு பிப்ரவரி மாதம் 1993-லே நீங்கள் டெண்டர் போட்டிருக்கிறீர்கள். டெண்டர் போட்டதிலேயிருந்து எந்தெந்த இடங்களிலே யார் யார் டெண்டர் போட்டிருக்கிறார்கள் என்ற விவரங்களுக்கு நான் வரவில்லை. இரண்டு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு முடிவு செய்திருக்கின்றீர்கள். ஆனால் முடிவு செய்தது மின்சார வாரியம். மின்சார வாரியம் முடிவு செய்திருக்கின்றபோது, அந்த நிலக்கரியினுடைய தராதரம் அதனுடைய எரிசக்தித் திறன் அதாவது கலோரிபிக் வேல்யூ என்பது 6 ஆயிரத்திற்குமேலே இருக்கவேண்டும். அதற்குக் கீழாக இருந்தால் அந்தச் சுங்க வரியினுடைய சலுகைகள் கிடையாது. இப்படிப்பட்ட பல்வேறு terms and conditions களைப் போட்டு தமிழ்நாடு மின்சார வாரியம் அங்கே ஒரு அக்ரிமெண்ட் செய்திருக்கின்றார்கள் நிலக்கரி இறக்குமதி செய்வதற்கு. 5 மாதம் கழித்து டெண்டர் போட்டிருக்கின்றார்கள். ஆனால் முடிவு செய்தது 1—8—1993-ல்தான். முதன்முதலாக நிலக்கரி வாங்குவதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். வெகுநாள் கழித்து 1—8—1993-ல் முடிவு செய்து 20 இலட்சம் டன் நிலக்கரியை 15—9—1993-க்குள்ளாக, ஒரு வருடத்திற்குள்ளாக இறக்குமதி செய்ய வேண்டுமென்று சொல்லி மைய அரசாங்கம் இவர்களுக்குக் குறிப்புகள் கொடுத்திருந்தாலும், மின்சார வாரியம் அதிலே மெத்தனமாக செயல்பட்டு**(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலக்கரி பற்றிய பிரச்சினையைப் பேசுகின்ற போது, அவர் மேலெழுந்த வாரியான விவரங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால் இது சம்பந்தமான

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்திலே ரிட் பெட்டிஷன் நம்பர் 15819/93 என்ற அளவிலே முக்கிய விவாதத்திற்கு நாளை எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. அதிலுள்ள சாதக, பாதகங்களை, (merits n demerits) இவைகளையெல்லாம் வழக்கு மன்றத்திலே நாளை விவாதிப்பதற்கு சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்களும் நம்முடைய மின்சார வாரியத்தினுடைய வழக்கறிஞர்களும் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, நிலக்கரி இறக்குமதியைப் பொறுத்தமட்டில் என்னென்ன குறைபாடுகள் அல்லது என்னென்ன முறையிலே பிரச்சினைகள் இருந்தன என்பதை வழக்கு மன்றத்திலே விவாதிக்கின்ற ஒரு வாய்ப்பு இருக்கின்ற நேரத்திலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ** என்று சுட்டிக்காட்டுவதை நான் ஆட்சேபிக்கிறேன். அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் அதற்காகத்தான் கவனித்துக் கொண்டிருந்தேன். இது பற்றி அரசாங்கமும் ஒரு நீதி விசாரணைக்கு உத்தரவிட்டு அது சம்பந்தமான இன்னொரு பிரச்சினை இன்றைக்கு உயர் நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கிறது

நம்முடைய பேரவை விதி 92(1) 'A member, while speaking must not give his opinion about or refer to any matter on which a judicial decision is pending' என்று இருக்கிறது. ஆகவே, நீங்கள் மேலெழுந்தவாரியாக மத்திய அரசு அனுமதி கொடுத்திருந்தது. அந்த அனுமதியை ஓராண்டுக்குள்ளே முடிக்க வேண்டுமென்று இருக்கிறபோது 5, 6 மாதங்கள் காலதாமதம் செய்தார்கள் என்று பேசுவதைப் பொறுத்தவரையிலும் சரி. அதற்கு அமைச்சர் பதில் அளிப்பார். அதையும் மீறி ** என்று வருகிறபோது அதைப் பற்றிதான் இப்பொழுது பிரச்சினை வழக்குமன்றத்திலே இருக்கிறது. எனவே, அதைப் பற்றி நீங்கள் குறிப்பிடாமல் இதைப்பொறுத்தவரையிலும், ஓர் ஆண்டுக்குள்ளே முடிக்க வேண்டிய இறக்குமதிக்கு 5, 6 மாதம் தாமதம் செய்தார்கள் என்று கேட்டிருப்பது வரையிலும் இருக்கலாம். ** என்று வருவதிலேயிருந்து வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வழக்கு மன்றத்திலே இருக்கிறது என்றும் சொன்னீர்கள். நீதி விசாரணை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொன்னீர்கள். இன்றைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தினம் நீதி விசாரணையைப் பொறுத்தவரையில், விசாரணைக் கமிஷன், இது வரை விசாரணையைத் துவங்கவில்லை. நீதி மன்றத்திலே இருக்கின்ற பிரச்சினை விசாரணைக் கமிஷனைப் பற்றியதே தவிர, இந்தப் பிரச்சனைக்கு முழுமையான முடிவு காணுகின்ற வழக்கு கிடையாது. எனவே, அந்தப் பிரச்சினை குறித்து அவர் தாராளமாகப் பேசலாம். விதி 92(i)-ல் தெளிவாக இருக்கிறது.

It says, ". give his opinion about or refer to any matter on which a judicial decision is pending" There is no judicial decision pending regarding the import of coal. எனவே, தாராளமாக அவர் பேசலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவரே சொன்னார் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டு அது சம்பந்தமான பிரச்சனைதான் இன்றைக்கு (குறுக்கீடு) விசாரிக்கலாம் என்று வந்து விட்டால் அது விசாரணைதான். (குறுக்கீடு) அது பற்றிய பிரச்சினையே இதுவும். இப்பொழுது ஐகோர்ட்டிலே இருக்கிறது என்பதுதான். (குறுக்கீடு) அவர் சொல்கிறார். இந்த ** என்று வருவதையே விசாரிப்பதற்குத்தான் ஒரு நீதி விசாரணை. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-10.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இறக்குமதி சம்பந்தமாக தொடுக்கப்பட்ட வழக்கும் நிலுவையில் இருக்கிறது. இந்த வழக்கும் நாளைக்கு, 27-ந்தேதி அன்று விசாரணைக்கு வருகிறது, உயர் நீதிமன்றத்திலே. ஆகவே, வழக்கு நிலுவையிலே இருக்கிறது. விசாரணைக் கமிஷன் சம்பந்தமாகப் போடப்பட்ட ஒரு 'ஸ்டே பெட்டிஷனும்' நிலுவையில் இருக்கிறது. ஆகவே இந்த வழக்கு இன்னும் முடியவில்லை. 'இன்ஜெங்ஷன்' பெட்டிஷன் போடப்பட்டு அதுதான் வெக்கேட் ஆகியிருக்கிறது. முழுமையான தீர்ப்பு வருவதற்கு, நாளைய விவாதத்திற்கு இந்த வழக்கும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதனுடைய 'மெரிட் அண்ட் டிமெரிட்' அடிப்படையிலே இந்த வழக்கு நாளை உயர்நீதி மன்றத்திலே விவாதத்திற்கு வருகிறது. ஆகவே, இந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறது? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டதுதானே! அதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன்.

THIRU S. PETER ALPHONSE: Mr. Speaker Sir, the judicial aspect of the matter is different, Now the Electricity Budget is in question. We are here to discuss about what all had happened for the past 2-1/2 years in the Electricity Board. It is not connected with the judicial proceedings pending before any court. Now the learned member points out the defects. According to us that had happened in the administration of the electricity board for the past 2-1/2 years and no courts.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதுவரையிலும் அவரை அனுமதித்திருக்கிறேன். அவர் எந்த அளவு வரையில் பேசலாமோ அந்த அளவு வரையிலும் அனுமதித்து இருக்கிறேன். அதன் பிறகு, ** என்று வருகிறபோதுதான், அதிலிருந்துதான் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி இருக்கிறேன். இது ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. திரு. தண்டாயுதபாணி, பேசுங்கள்.

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதைப் போல ** பற்றி வழக்கு மன்றங்கள் விசாரணை நடத்திக்கொள்ளட்டும். அதிலே நான் தலையிடவில்லை. ஆனால் நான் சொல்ல வருவது, இந்த மின்சார வாரியத்திலே ஏற்பட்டிருக்கிற பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக 29—8—1993-ல் அமைச்சரவை கூடி, ஒரு நீதி விசாரணைக் கமிஷன் போட்டது. நீதி விசாரணை என்பது என்ன? உண்மையைக் கண்டறிவதற்காகப் போடப்படுவது. அது நீதிமன்றம் அல்ல. அங்கே பிளேயின்டிஃபோ, டிஃபன்டன்டோ, அக்யூஸ்டோ, பனிஷ்மென்டோ கிடையாது. நீதி விசாரணை என்பது உண்மையைக் கண்டறிவதற்காகப் போடப்படுவதுதான். அது ஒரு ஃபாக்ட் ஃபைண்டிங் கமிஷன்தான். அதுபற்றி பேசுவதற்கு இங்கே 'சப் ஜூடிஸ்' கிடையாது. உச்ச நீதிமன்றத்திலே இந்த மாதிரிப் பேசக்கூடாது என்று தீர்ப்பும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது கோர்ட்டிலே இருக்கிறது. எந்தப் பிரச்சனையான லும் கோர்ட்டிலே இருப்பதால் தான் சொன்னேன். (குறுக்கீடு) மாண்புமிகு சட்ட அமைச்சர்.

** மாண்புமிகுபேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலே இன்றைக்கு நிலுவையில் இருப்பது, இந்த நீதி விசாரணைக் கமிஷன் போடுவதற்கு தமிழக அரசுக்கு அதிகாரமா டெல்லி அரசுக்கு அதிகாரமா என்ற பிரச்சனையைக் கிளப்பி, தமிழக அரசுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது என்ற அடிப்படையில் நாங்கள் விசாரணைக் கமிஷன் போட்டிருக்கிறோம். அதை ஆட்சேபித்து ஒருவர் கோர்ட்டுக்குப் போயிருக்கிற நேரத்திலே அது 'சப் ஜூடிஸ்' ஆகத்தான் இருக்கிறது. அது முடிந்த பிறகு மற்ற பிரச்சினைகளை விவாதிக்கலாம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக் கமிஷன் வேண்டுமா, வேண்டாமா என்பது வேறு. இது விசாரணைக் கமிஷனிலே இல்லை. விசாரணைக் கமிஷனிலே இல்லாத நிலைமையில் இன்றையதினம் இந்த அவையிலே விவாதிப்பதற்கு என்ன தடை என்றுதான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் கோர்ட் தீர்ப்பில் இருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக் கமிஷன் வேண்டுமா, வேண்டாமா என்பது வேறு. ஆனால் இந்த நிலக்கரி இறக்குமதி மீது அதனுடைய தன்மைகள் மீது போடப்பட்ட வழக்கு இன்னும் நிலுவையில் இருக்கிறது. அது வேறு. இந்த ரிட் பெட்டிஷன் நம்பர் 15819/93 என்ற வழக்கு நாளைக்கு நம்முடைய உயர் நீதிமன்றத்திலே விசாரணைக்கு வருகிறது. ஆகவே, அது சம்பந்தப்பட்ட வழக்கு நிலுவையில் இருக்கிறது. அதிலே தவறு இருக்கிறதா, இல்லையா என்று அவர்களே தொடுத்த வழக்கு. அந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது. ஆகவேதான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக் கமிஷன் இருக்கிறதா, இல்லையா என்று சொன்னார்கள். விசாரணைக் கமிஷன்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

போடப்பட்டு, அதற்கு திரு. செந்தூர்கர், ஃபார்மர் சீப் ஜஸ்டிஸ் ஆஃப் மெட்ராஸ், ஹைகோர்ட் அவர்கள் போடப்பட்டு, விசாரணைக் கமிஷன் ஏற்கனவே போடப்பட்டு இருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி அவர்கள் பேசுகின்ற போது ** பற்றி நீதிமன்றங்கள் விவாதித்துக் கொள்ளட்டும்; அதில் நான் தலையிடவில்லை என்று சொன்னார்கள் ** என்று சொன்னால் ** அவர் சொல்வது போல்தான் ஆகிறது. **என்பதை நீதிமன்றங்கள் இனிமேல்தான் விசாரித்துச் சொல்ல வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் **என்று மாற்றிக்கொள்ளவேண்டுமென்று உங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12–15.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 92 (i)-இல் நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருளின் மீதும் கருத்தைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவோ கூடாது என்று இருக்கிறது நீதி விசாரணை இப்போது இல்லை. நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்கிறேன், என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த நீதிவிசாரணைக் கமிஷன் செல்லுமா, செல்லாதா, மாநில அரசாங்கம் நீதி விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டுமா அல்லது மத்திய அரசாங்கம் நீதி விசாரணைக் கமிஷன் வைக்கவேண்டுமா என்பதற்கான பரிசீலனைக்குத்தான் இன்றைய தினம் உயர் நீதிமன்றத்தில் வழக்கில் இருக்கிறது. எனவே தற்போது நீதி விசாரணை என்ற ஒன்று கிடையாது. நீதி விசாரணை இல்லாத நிலையில் தாராளமாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே இதுபோன்ற ஒரு பிரச்சினையில் — நம்முடைய விதிகளைப் பொறுத்தவரையில் சில நேரங்களில் மொழி பெயர்த்து இருக்கிற போது பல்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வேறு விதிகளில்— இன்னொரு விதியிலே கூட அதாவது "Not more than 15" என்று இருக்கிற விதியில், தமிழில் என்ன மொழி பெயர்க்கப்பட்டு இருக்கிறது என்றால் 15-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் என்றே கூட மொழி பெயர்க்கப்பட்டு இருக்கிறது. அப்படி ஏதோ கிளாரிட்டி இல்லை என்று வருகிறபோது ஆங்கிலத்திலே இருப்பதைத்தான் நாம் அடிப்படையாக எடுத்துக் கொள்ளவேண்டும். ஆங்கிலத்திலே இருப்பதிலே

'....Give his openion about or refer to any matter on which a Judicial decision is pending என்று வருகிறபோது அது வழக்கு மன்றத்தில் இருப்பதையும் சேர்த்தே குறிக்கும். நீங்கள் சொல்வதைப்போல நீதி விசாரணையில் இருப்பதையும் குறிக்கும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே மேற்கொண்டு விவாதம் வேண்டாம். நீங்கள் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து கேட்டீர்கள். அதுவரையிலும் நான் அனுமதிக்கிறேன். அதற்கு மேற்கொண்டு பேசுவது என்பது இந்த விதிக்கு முரணாக இருக்கும். எனவே அதைப்பற்றி எதுவும் குறிப்பிட வேண்டாம். மற்ற பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிடுங்கள்.

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றங்களில் உள்ளதைப் பற்றிச் சொல்லாமல் மற்றவைகளைப் பற்றிப் பேசவேண்டுமென்று சொல்கிறபோது மொத்தம் வந்திருக்கிற கப்பல்கள் 8. இந்த 8 கப்பல்களில் 4 கப்பல்கள் இந்தோனேஷியாவிலிருந்து வந்தன. 4 கப்பல்கள் ஆஸ்திரேலியாவிலேயிருந்து வந்தன. மொத்தம் 8 கப்பல்கள்தான் வந்தன. அதோடு இறக்குமதியை நிறுத்தியாகிவிட்டது. 4 கப்பல்கள், அதாவது இந்தோனேசியாவிலிருந்து வந்த கப்பல்களினுடைய தரம் குறைந்து போயிற்று என்று சொல்லி மின்சார வாரியமே 85 சதவீதம் சுங்கவரி கட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு யார் ஆலோசனை சொன்னார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் அதை 'கன்டெஸ்ட்' செய்திருக்க வேண்டும். (குறுக்கீடு) நான் சொல்லி முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆஸ்திரேலியாவிலிருந்து வந்த 4 கப்பல்களுக்கு மட்டும் 30 சதவீதம் சுங்கவரி செலுத்தி அதை எடுத்து விட்டார்கள். ஆனால் இந்தோனேசியாவிலிருந்து வந்த அந்த நிலக்கரியினுடைய தரம் குறைந்திருக்கிறது என்று சுங்க இலாகா சொன்னதற்குப் பிறகு அந்த நிலக்கரிக்கு 85 சதவீதம் கட்டி — அந்த 4 கப்பல்களினுடைய நிலக்கரியினுடைய விலை 17,72,82,000

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

ரூபாய். அதற்கு இவர்கள் கட்டி இருக்கிற வரி 15,06,89,000 ரூபாய். ஆனால் கட்ட வேண்டிய வரி 5,09,94,000 ரூபாய் தான். அதுதான் கட்டி இருக்கவேண்டும். ஆனால் எக்சஸ்-ஆக 9 கோடி ரூபாய் தமிழ்நாட்டு மக்களுடைய வரிப் பணத்தை சுங்க இலாகாவிற்குக் கட்டி இருக்கிறார்களே, இதற்கு யார் பொறுப்பு?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் ஏற்கனவே சொன்னேன். இந்த 'கலோரிக் வேல்யூ' பற்றிக் குறிப்பிடுகிறபோது அவர்கள் ஒரு இடத்திலே சோதனை செய்கிறார்கள். உலகத்திலே இருக்கிற இரண்டு பெரிய நிறுவனங்களிலிருந்து சான்றிதழ் பெற்று நாம் கொண்டு வருகிறோம். அதற்குப் பின்னால் நம்முடைய அனல் மின் நிலையத்தில் இருக்கிற சோதனைச் சாலையில் நாமும் சோதனை செய்திருக்கிறோம். அதிலே அவர்கள் சொல்வதற்கும், நம்முடைய சோதனைக்கும் வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து சொல்கிற சோதனைக்கும் வேறுபாடு இருக்கிற காரணத்தால்தான் இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் வந்ததன் காரணமாகத்தான் இன்றைக்கு அந்த விவாதம் நீதிமன்றத்திலே வைக்கப்பட்டு இருக்கிறது. நான் விரிவாகச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குற்றச் சாட்டுக்கள் அத்தனையும் மறுக்கப்படுகின்றன. மின்சார வாரியம் என்பது எந்த நாட்டிலே இருந்து நிலக்கரி வாங்க வேண்டும் என்று மத்திய அரசோ அல்லது யாரோ எங்களை நிர்ப்பந்திக்கவில்லை. நிலக்கரியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளலாம் என்றுதான் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இறக்குமதி செய்தோம். அதிலே 6,000 கலோரிக் வேல்யூ என்று நிர்ணயித்ததே நம்முடைய மின்சார வாரியம்தான். அதற்குக் கீழே குறைவாக இருப்பவர்களுக்கு 'பெனாலிட்டி க்ளாஸ்' போடலாம் என்று நிர்ணயித்தது நம்முடைய மின்சார வாரியம்தான். அதைக் கூட, நான் சொல்வது, நீதிமன்றத்திலே இந்த 14 நடைமுறைகளும் மிக அழகாகப் பின்பற்றப்பட்டிருக்கின்றன. என்று நீதிமன்றம் தீர்ப்பிலே இந்த இடைக்காலத் தடையாணையை ரத்து செய்திருக்கின்றபோது குறிப்பிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய நீதிபதி அவர்கள் தெரிவித்தக் கருத்துக்களைச் சொல்வதிலே தவறு இல்லை. இடைக்காலத் தடையாணையை ரத்து செய்கின்றபோது, மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் இந்த 14 காரணங்களும் முறையாக நம்முடைய மின்சார வாரியத்தினால் இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் தடை ஆணையை ரத்து செய்கிறேன் என்று சொல்லி அந்த இடைக்கால தடையாணையை ரத்து செய்தார்கள். அதற்குப் பின்னாலேதான் இன்றைக்கு அந்த ஒரிஜினல் பெட்டிஷன்

என்ற அந்த வழக்கு, அந்த மனு நாளைக்கு வருகிறது. ஆகவே இந்த கலோரிக் வேல்யூ பற்றி எங்களுடைய வாதம் ஒன்று, குற்றச்சாட்டை சுமத்தியவர்களுடைய வாதம் ஒன்று ஆகவே அதை இந்த மன்றத்திலே விவாதித்தால் யார் சொல்வதை ஏற்றுக்கொள்வது என்ற பிரச்சினை இங்கே எழும். ஆக எங்களுடைய தரப்பிலே நாங்கள் 6 ஆயிரம் கலோரிக் வேல்யூ இருக்கிறது என்று எங்களுடைய சோதனைச் சாலையிலே சொல்கிறோம். அதே நேரத்திலே கஸ்டம்ஸ் டிப்பார்ட்மெண்டிலே இருக்கின்றவர்கள் ஒரு அறிவிப்பைச் சொல்கிறார்கள். இதற்காகத்தான் இன்றைக்கு நாம் நீதி மன்றத்திற்குப் போய் இருக்கிறோம். ஆகவே இதை செய்ய வேண்டிய பொறுப்பு நீதிமன்றத்தின் கரங்களிலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நம்மிடத்திலே இல்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே எங்களுடைய சோதனையில் 6 ஆயிரம் கலோரிக் வேல்யூ இருக்கிறது என்று நான் ஆணித்தரமாகச் சொல்கிறேன். குறைந்த அளவுக்கு கலோரிக் வேல்யூ உள்ள எந்த நிலக்கரியையும் நம்முடைய மின்சார வாரியம் இறக்குமதி செய்யவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனாலே இந்தப் பிரச்சினை இன்னும் போயிற்றென்றால், அந்த கலோரிக் வேல்யூ எல்லாம்தான் இங்கே இருக்கிறதே, நீங்கள் இன்னும் வேண்டாம், நீங்கள் வேறு பிரச்சினைக்கு வாருங்கள். நேரமும் ஆகிவிட்டது.

திரு. வி. தண்டாயுதபாணி: நான் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இப்போது இந்தப் பிரச்சினை வேண்டாம்.

திரு. வி. தண்டாயுதபாணி: மின்சார வாரியம் கட்டிய பணத்தைப் பற்றித்தான் நான் சொன்னேன். அதை இவர்கள், ஏன் இப்போது 6 ஆயிரம் கலோரிதான் என்று அமைச்சர் அவர்கள் சொன்ன உடனே, ஏன் அப்போது இந்த அதிகமான சுங்க வரியைக் கட்டினார்கள் என்பதற்கு அவர் பதில் சொல்லவில்லை. பின்னாலே பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்,: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய நீதிமன்றத்தின் சார்பிலே இந்த கலோரிக் வேல்யூ பிரச்சினை வருகின்றபோது ஒரு உத்தரவைப் பிறப்பித்தார்கள். நீங்கள் அதற்குரிய 'ஃபுல் டியூட்டி' யையும் கட்டிவிட்டு நீங்கள் அப்பீல் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அந்த நீதிமன்றத்தினுடைய கருத்துக்கு நாங்கள் விவாதம் செய்திருக்கிறோம். நாங்கள் மறுத்திருக்கிறோம். மறுக்கின்றபோது நீதிமன்றத்திலே ஒரு உத்தரவு வருகின்றது. நீங்கள் அந்த 'ஃபுல் டியூட்டி' யையும் கட்டியதற்குப் பின்னாலே இந்த அப்பீலை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னதற்குப் பிறகு கோர்ட்டினுடைய உத்தரவுப்படி அதை நாங்கள் கட்டியிருக்கிறோம். நாளைத் தீர்ப்பிலே எங்கள் பக்கம் நியாயம் இருக்கிறது என்று சொன்னால் அந்த பணம் திருப்பி வரப்போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே கோர்ட்டினுடைய தீர்ப்பை மதித்து அந்த கோர்ட் தீர்ப்பின் அடிப்படையிலே அந்த பணம் கட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் வரிப்பணத்தை ஏமாற்றுகின்ற வேலை எங்களுக்குக் கிடையாது. அது யாருக்கு என்பதை காலம் உணர்த்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் நிலக்கரி இறக்குமதி செய்வதிலே எந்த நாட்டிலேயிருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கம் ஒன்றும் எங்களை நிர்பந்திக்கவில்லை என்று சொன்னார். அதற்காக மிக்க நன்றி. இந்த இறக்குமதியிலே பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடியுங்கள். நேரம் ஆயிற்று, வேறு பிரச்சினை இருந்தால் சொல்லி முடியுங்கள். 24 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. வி. தண்டாயுதபாணி: இறக்குமதியிலே, இப்போது இங்கே நீதி விசாரணை என்றெல்லாம் சொன்னார்கள். தமிழ்நாடு அரசாங்கம் நீதி விசாரணைப் போட்டிருக்கிறது. வழக்கு மன்றத்திலே இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள்.

இம்மாதிரி புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்திலே எரி சாராய ஊழல் விசாரணை கமிஷன் எம். ஜி. ஆர். அவர்கள் போட்டபோது, சதாசிவம் கமிஷன் போட்டார்கள். அவர் அந்த கமிஷன் போட்டபோது

யார் யார் எல்லாம் அந்த நிர்வாகத்திலே இருந்தார்களோ அந்த அதிகாரிகளை எல்லாம் மாற்றினார். யார் அந்த பொறுப்பை வகித்து இருந்தாரோ அந்த அமைச்சர் அவர்களுடைய போர்ட்போலியோவையும் மாற்றினார். அப்படி ஒரு நீதி விசாரணை கமிஷன் போடுகிறபோது, அதிலே சம்பந்தப்பட்டவர்கள் யார் யார் என்று, எந்த எந்த அதிகாரிகள் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் மாற்றிவிட்டு அந்த கமிஷன் போட்டிருக்கவேண்டும். இப்போதுகூட ஒன்றும் நாளாகிவிடவில்லை. யார் யார் அந்த அதிகாரிகள், அந்த மின்சாரத் துறையில், இன்னும்கூட**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **இது எல்லாம் வேறு வேறு வகையான விவகாரம். அது எல்லாம் அவைக் குறிப்பிலே வேண்டாம்** இந்த பிரச்சினையை இத்தோடு முடிக்கவேண்டும். இதற்குள்ளே, ரொம்ப உள்ளே போனால் நீதி (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது யார் அமைச்சராக இருந்தாரோ அவரை மாற்றிவிட்டார் என்ற தவறான செய்தியைச் சொல்கிறார்கள். தொடர்ந்து நான்தான் அமைச்சராக இருந்தேன். (சிரிப்பு)

திரு. வி. தண்டாயுதபாணி: போர்ட்போலியோ மாற்றப்பட்டது.

பிற்பகல் 12.25

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, போர்ட்போலியோ என்பதற்கும், அமைச்சர் என்பதற்கும் வித்தியாசம் தெரியாமல் எனக்கு இல்லை. நீங்கள் சொன்னதற்கு நானும்—தொடர்ந்து நான் தான் இருந்தேன் என்றால்-நீங்கள் சொன்ன போர்ட்போலியோவுக்கு அமைச்சராக இருந்தேன் என்று அர்த்தம். (மேசை தட்டும் ஒலி)

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு பிரச்சினைகள் வந்ததற்குப் பின்னால், இதிலே வெளிநாட்டுச் செலாவணி, கோல் என்கிற நிலக்கரி, இறக்குமதி என்கிற சொல், இவை எல்லாம் சென்ட்ரல் லிஸ்டில் இருக்கிற காரணத்தால், நீங்கள் நீதி விசா

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

ரணை போட்டால் மட்டும் போதாது. இதிலே அந்நியச் செலாவணியும், இறக்குமதியும், பல மாநிலங்கள் மட்டு மல்லாமல் வெளிநாடும் சம்பந்தப்பட்டிருக்கின்ற காரணத் தினால், மத்திய புலனாய்வுத் துறை விசாரணைக்கு உத்தர விட வேண்டுமென்று நான் இங்கே அன்பாக கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நிலக்கரி என்பது ஓ.ஜி.எல். அதாவது ஓபன் ஜெனரல் லைசன்ஸ் அதிலே டியூட்டி கன் செசன் கொடுப்பதிலே வேண்டுமானால் மத்திய அரசிலே கேட்கலாமே தவிர, நிலக்கரியை இறக்குமதி செய்வதிலே எந்த மாநிலத்திற்கும் தனிப்பட்ட உரிமை இருக்கிறது. ஆகவே, இது ஓபன் ஜெனரல் லைசன்ஸ் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிற உறுப்பினர்களில், முன்வரிசைத் தலை வர்கள் யாரும் இல்லை. நாளையதினம் எதிர்க்கட்சித் தலை வர் அல்லது அவர்கள் கட்சி சார்பில் பேசுகிற உறுப்பினர் ஒருவர் பேசி, அமைச்சர் பதில் சொல்வதற்குத்தான் நேரம் இருக்கும். எனவே, இன்றைக்கே, பேச விரும்புகிற முன் வரிசைத் தலைவர்களும் பேசிக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

*டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1993-94 ஆம் ஆண்டு நிதிநிலை விவர அறிக்கை குறித்தும் 1992-93 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு குறித்தும் இப்பேரவையில் விவாதிக்க வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றி யினை காணிக்கையாக்கிக் கொள்கின்றேன்.

இந்த அரசு பதவிப் பொறுப்பேற்றபொழுது இருந்த மின் வழங்கல் நிலையை எண்ணிப் பார்க்கிறேன். உயர் அழுத்த தொழிற்சாலைகள் மின்சக்தியைப் பயன்படுத்துவதில் 25 சதவிகிதம் வெட்டும், மின் தேவையில் 30 சதவிகிதம் வெட்டும் இருந்தது. மதிநுட்பம் மிக்க மாண்புமிகு முதல்வர் அவர் களுடைய சீரிய திட்டங்களினால் உயர் அழுத்த தொழிற்சாலை களுக்கான மின் வெட்டு படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இன்று அடியோடு நீக்கப்பட்டிருக்கிறது என்பது பாராட்டுவதற்குரியது, மற்ற மாநிலங்களிலுள்ள மின்நிலையோடு ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் மின் நிலைமை நல்ல நிலையில் உள்ளது என்பது, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர் களுடைய நிர்வாகத் திறமைக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக் கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

1993 அக்டோபர் 26] [டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்]

அதேபோல, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட வளாகத்திலுள்ள காடம்பாறை மின் நிலையம் 1990-ஆம் ஆண்டு தீவிபத்திற்கு உட்பட்டபொழுது எந்த அரசு இந்த மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்தது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த சேதம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் சரி செய்யப்பட்டது என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, 1992—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பருவ மழையின்போது தண்ணீரில் மூழ்கிப்போன சேர்வலாறு மின் உற்பத்தி நிலையம் முழுமையாக 9-8-1993, அதாவது 8 மாதங்களுக்குள்ளாக முடிக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

தூத்துக்குடி அனல் மின் நிலையமும், மேட்டூர் அனல் மின் நிலையமும் உற்பத்தித் திறனுக்காக பரிசைப் பெற தகுதி பெற்றுள்ளதையும் பாராட்ட வேண்டும். மின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக மேற்கொள்ள இருக்கும் கூடுதல் திட்டங்கள் அனைத்தும் பாராட்டுவதற்குரியன.

இப்படி பாராட்டுதல்களைப் பெறுகின்ற நேரத்தில், தமிழ்நாட்டில் பல்வேறு மத்திய அரசு மின் திட்டங்களை செயலாக்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதை குறித்து நம்முடைய அரசு பெரிதும் கவலை கொண்டுள்ளது.

மக்களுடைய வரிப் பணத்தை வீணாக்குகிறார்கள் என்று சொன்னவர்கள், இங்கே, தமிழ்நாட்டிலே மத்திய அரசினுடைய மின் திட்டங்களை செயலாக்குவதில் காலதாமதம் ஏற்படுவதை மத்திய அரசுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டவர்கள் என்பதை நான் இந்த மன்றத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தென்னக எரிவாயு மின்தொகுப்புத் திட்டம் விரைவில் முடிக்கப்பட வேண்டுமானால், தென்னக மாநிலங்கள் ஒன்று சேர்ந்து நிதி பங்கேற்பு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்தை ஏற்று, இதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாக வற்புறுத்துகிறேன். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே மின்சக்தி எந்தத் தொழிலுக்கும் பயன்படக்கூடிய ஒரு எரிசக்தி ஆதாரம் என்பதோடுகூட இது ஏனைய எரிசக்தியை காட்டிலும் மிகச் சிறந்த வணிக எரிசக்தி என்று கூறியிருக்கிறார்கள். இது மறுக்கமுடியாத

உண்மைதான். மாநிலத்தின் வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியமான இடுபொருள் என்று கூறி இருக்கிறார்கள். அதுவும் மறுக்க முடியாத உண்மைதான். விவசாயப் பணிகளை அதிக அளவில் இயந்திர மயமாக்குதல் மூலை முடுக்குகளிலும் உள்ள மக்களுக்கும் இதன் பயன்களை நீட்டித்தல் ஆகியவற்றின் காரணமாக மின் சக்தியின் பயன்பாடு அதிக அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மைதான். மிகச் சிறந்த முறையிலும், சிக்கனமாகவும் இம்மாநிலத்தின் மின் உற்பத்தி, மின் அனுப்புகை, மின் பங்கீடு ஆகிய பணிகளை ஒருங்கிணைந்த முறையில் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மைதான் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைப் பேரவைக்கு நல்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, எனது சில கருத்துக்களை இந்த மாமன்றத்திற்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

பிற்பகல் 12–30

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை)

தேவைக்கு மிகுதியான இடுபொருள் ஒன்றை உற்பத்தி செய்கிறபோது, சில விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. இதிலே முக்கியமாக வருவது உற்பத்தி; அடுத்து உற்பத்தி செய்த பொருளை பங்கீடு செய்வது; அப்படி பங்கீடு செய்யும்போது ஏற்படுகிற இழப்பைச் சரிக்கட்டுவது என்பது பற்றி எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உரையில் இருக்கிறது. இவற்றோடு சேர்த்து, இப்படி ஒரு இடுபொருளை உற்பத்தி செய்யும்போது அதை எவ்வாறு மிச்சப்படுத்த வேண்டுமென்பது பற்றிய கருத்து எதுவும் அதில் இல்லை. ஆகவே மின் வாரியத்திற்கு என்னுடைய கருத்தாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பொருளை எவ்வளவுதான் உற்பத்தி செய்தாலும், அந்தப் பொருளை மிச்சப்படுத்துகின்ற ஒரு முறையையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். மின்சாரத்தை மிச்சப்படுத்தல் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். இதிலே முதலாவதாக நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் இதை உபயோகிப்பவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட வழிவகைளைச் செய்ய வேண்டும். மின்சாரத்தைக் குறைந்த அளவுக்கு எடுத்துக்கொண்டு, மிச்சப்படுத்தும் கருவிகளை நாம் உபயோகப்படுத்த வேண்டும். இதுபோன்ற கருவிகளைக் கண்டுப்பிடித்தவர்களைக்கூட நாம் பாராட்ட வேண்டும். ஊக்குவிக்க வேண்டும். உதாரணத்திற்கு குழல் விளக்கு பற்றிய ஒரு கண்டுபிடிப்பை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இதை நான் கூறும்போது, பல பேருக்கு இது அதிசயமாகக்கூட இருக்கலாம். ஆனால் உண்மை இன்றைக்கு ஒரு நிறுவனம் ப்யூஸ் போன டியூப் லைட்டுகள்

எரியக்கூடிய ஒரு கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்திருக்கிறது. அப்படிக் கண்டுபிடித்ததோடு மட்டுமல்லாமல், புதிய கண்டு பிடிப்புக்கும், ஏற்கனவே இருக்கும் விளக்குக்கும் எவ்வளவு வித்தியாசம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு கன்வென்ஷனல் சிஸ்டத்தில் ஒரு குழல் விளக்கு 60 வாட்ஸ் மின்சாரம் எடுக்கிறதென்றால், புதிதாகக் கண்டுபிடித்துள்ள புதிய குழல் விளக்கு—இதற்கு பிளாஸ்மா சோக்லஸ் சிஸ்டம் என்று பெயர்—50 வாட்ஸ் மின்சாரத்தைத்தான் எடுத்துக் கொள்ளும். ப்யூஸ் போன பல்பைப் போட்டால்கூட எரியும். அடுத்து பவர் லாஸ் என்றுபார்க்கும்போது கன்வென்ஷனல் சிஸ்டத்திலே 20 வாட்ஸ் என்று சொன்னால் புதிய கண்டு பிடிப்பான பிளாஸ்மா சிஸ்டத்திலே 15 வாட்ஸ்தான். ஆப் பரேடிங் வோல்டேஜ் என்று எடுத்துக்கொண்டால், இன்றைக்கு கன்வென்ஷனல் சிஸ்டத்தில் இருக்கும் குழல் விளக்கு எரிய 190 வோல்ட்ஸ் மின்சாரம் வேண்டுமென்றால், பிளாஸ்மா சிஸ்டத்தில் 140 வோல்ட்ஸ் போதும். இன்றைக்குப் பல கிராமங்களுக்குச் செல்லும்போது அங்கே இருக்கும் பொது மக்கள் குழல் விளக்கே எரியவில்லை என்று சொல்லு கிறார்கள். காரணம், மின் அழுத்தம் சரியாக இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே 140 வோல்ட்ஸ் மின்சாரம் வந்தால்கூட குழல் விளக்குகள் எரியும். மேலும் இந்தப் புதிய கண்டுபிடிப்புகளைப் பொருத்துவதன் மூலம் ப்யூஸ் போன குழல்விளக்குகள்கூட எரியும் தன்மை இருக்கிறது. எனவே இந்தப் பிளாஸ்மா சிஸ்டம் எப்படி வேலை செய்கிறது என்பதைச் சுருக்கமாகக் கூற விரும்பு கிறேன்.

The flourescent tubes are filled with a particular gas and inside walls are coated with a powder which will emit light when electrons are thrown on it on both sides. The ionisation has been done in ordinary tube light systems by heating two filaments provided on both sides of the tubes. In Plasma system, this is done by generating high frequency electrons. This has been designed based on the Surface Mount Technology. Because of this technology, the Plasma System operates by the high frequency electrons and so this system does not need any filament continuity. Because of this, the fused tubelights are working with this system,

பிற்பகல் 12-35

இதுபோன்ற நவீன கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடிப் பதன் மூலமாக இன்றைக்கு மின்சாரம் அதிகமாகச் செல வாவதை நம்மால் மிச்சப்படுத்த முடியும். இதுபோன்ற எல்லாத் துறைகளிலும் சிறியது முதல் பெரியது வரை நவீ

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த சட்ட முன்வடிவு 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

* மாண்புமிகு திரு கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''
எனக் கோருகிறேன்.

திரு. ச. அழகிரி : இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம். என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

6. மின்வாரிய நிதிநிலை அறிக்கை 1993–94 மற்றும் திருத்திய மதிப்பீடுகள் 1992-93 மீது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1993–94 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1992-93 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள் ஆகியவற்றை இம்மாமன்றம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென முன்மொழிகின்றேன்.

நான் ஆற்ற வேண்டிய உரையை மாண்புமிகு உறுப்பினர்கள் வசதிக்காக நூல் வடிவமாக இம்மன்றத்திலே வைத்திருக்கின்றேன். இங்கே வைக்கப்பட்டிருக்கும் எனது தமிழ் உரையை சபைக் குறிப்பில் ஏற்றிட அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்முறை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை தமிழக அரசும், தமிழ்நாடு மின்சார வாரியமும் கருத்திற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு மின்சார வாரியத்தின் பணியினை இன்னும் சிறப்பாக ஆற்றிட தங்களது கருத்தினை இம்மாமன்றத்தில் கூறிடுமாறு இந்த அவையின் மாண்புமிகு

1993 அக்டோபர் 26] [திரு. எஸ். கண்ணப்பன்]

உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அவையில் தெரிவிக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் என்னுடைய பதிலுரையைத் தெரிவிக்கின்றேன் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1993-94 ஆம் ஆண்டிற்கான நிதிநிலையினுடைய வரவு அறிக்கையையும், 1992-93 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள் குறித்தும் தமிழ்நாடு சட்டப்பேரவையிலே மின்சார வாரியத்தைப் பற்றிப்பேசுகின்றபொழுது, அனல் மின் நிலையங்கள், புனல் மின் நிலையங்கள் இவைகள் மூலமாக ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சி குறித்து, தொழில் துறையிலேயும் விவசாயத்துறையிலேயும் மின்சாரம் சீராக வழங்கிட அரசாங்கம் மேலும் முனைப்பாகச் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுத் துறையிலே மின்சார உற்பத்தியும், தனியார் துறையிலே மின்சார உற்பத்தியும் இன்னும் அதிகமாகப் பெருக்கி, விவசாயிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் 24 மணி நேரமும் மின்சாரம் தொடர்ந்து கிடைக்கும்படி செய்தால், தமிழ்நாடு இந்தியாவிலே மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தொழில் துறையிலேயும், விவசாயத் துறையிலேயும் மட்டுமின்றி, வேலை வாய்ப்பு வழங்குவதிலேயும் சிறந்து விளங்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

இங்கே குறிப்பிட்டிருக்கின்ற பல்வேறு குறிப்புகளின் அடிப்படையில் நான்கு தனியார் துறைகளுக்கு 11,800 கோடி ரூபாய் முதலீட்டுடன், 3050 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட மின் திட்டங்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள் என்று இங்கே குறிப்பிட்டிருக்கின்றீர்கள். ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம் 7 ஆயிரம் கோடி; கடலூர் அனல் மின் திட்டம் 3 ஆயிரம் கோடி; பிள்ளைப்பெருமாள் நல்லூர் வாயுச்சுழலித் திட்டம் ஆயிரம் கோடி; திருமுட்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம் 800 கோடி என்று இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தனியார் துறைகளில் யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட:

@1041-1058 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளன.

வில்லை. அந்த அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையிலே, தனியார் துறையில் யார் யாருக்கு மின் திட்டங்களைக் கொடுத்திருக்கின்றீர்கள் என்பதையும் குறிப்பிட வேண்டுமென்று நான் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

பொதுவாக, மின்சாரத் துறை, விவசாயிகளுக்கு இரவிலே மின்சாரம் வழங்குகின்றது. விவசாயிகள் இரவிலே வயல் வெளியிலே போய் வேலை செய்ய முடிவது கிடையாது. எனவே இரவிலே அவர்களுக்கு வழங்கப்படும் மின்சாரம் பகலிலே கொடுக்கப்படுமேயானால் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்னொன்று, பல வருடங்களாக வீட்டு உபயோகத்திற்கு மின்சாரம் வேண்டுமென்று அப்ளை செய்தவர்களுக்கு இரண்டு, மூன்று வருடங்களாகியும்கூட, இன்னும் அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம், மின்சார மீட்டர் கிடைப்பதில்லை. வேண்டுமானால் மின்சார மீட்டரை நீங்களே வாங்கிக் கொள்ளுங்கள் என்று மின்சாரத் துறையிலே சொல்லுகின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமை மின்சாரத் துறையிலே இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இந்த மின்சார மீட்டரை வழங்கி வீடுகளுக்கு மின் இணைப்பு உடன் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இந்த மின்சார மீட்டரைத் தனியாகப் போய் வாங்க வேண்டுமென்று சொன்னால் மூன்று மடங்கு, நான்கு மடங்கு விலை அதிகமாகச் சொல்லுகின்றார்கள். தனிப்பட்டவர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இதில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார உற்பத்தியிலே தனியார் துறையும், பொதுத் துறையும் ஒன்று சேர்ந்து செயல்படுகின்றபொழுது இப்போது நீங்கள் இங்கே நிலக்கரி உற்பத்தி பற்றி 4 திட்டங்களிலே குறிப்பிட்டிருக்கின்றீர்கள்—அந்த நான்கு திட்டங்களிலே நிலக்கரி உற்பத்தித் திறன் எவ்வளவு தூரம் பெருகிவரும் என்பதைக் கணக்கிட்டு, மாநிலத்திலே மொத்தமாக எவ்வளவு மெகா வாட் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்று கணக்கு கொடுக்கப்பட்டிருந்தாலும், அதனுடைய செயல்திறன் பற்றிய குறிப்புகள் எதுவுமே இல்லை. நிலக்கரியைப் பற்றி நான் சொல்லுகிறபோது, பொதுவாக தமிழகத்திலே நிலக்கரி பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆகவே, நிலக்கரி பற்றாக்குறையைப் போக்குவதற்கு வெளிநாடுகளிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்ய வேண்டும் என்று சொல்லி, மைய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் 1992 ஆம் ஆண்டு அணுகியது. மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. நிலக்கரி பற்றாக்குறை காரணமாகத்தான் அந்தப் பற்றாக்குறை வந்திருக்கிறது. ஆகவே, நிலக்கரி பற்றாக்குறையைப் போக்கு

வதற்கு வெளிநாடுகளிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்ய வேண்டுமென்று சொல்லி, மைய அரசாங்கத்திற்கு நீங்கள் மனுச் செய்து இருக்கின்றீர்கள். அந்த மனுவில் இறக்குமதி சலுகையோடு வேண்டுமென்று கேட்டு இருக்கின்றீர்கள். அந்த மனுவின் பேரில் கர்நாடக மாநிலத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் 15—9—1992-ல் மைய அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறது. நிலக்கரி இறக்குமதி செய்ய வேண்டுமென்று சொன்னால் 85 சதவீதம் வரி கட்ட வேண்டும். ஆனால் தமிழ்நாடு அரசாங்கம் கேட்டுக் கொண்டதற்கிணங்க 15—9—1992ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசாங்கம் 20 இலட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கு, மைய அரசாங்கம், 30 சதவீதம் நீங்கள் சுங்க வரி கட்டினால் போதும் என்று சொல்லி அனுமதி அளித்திருக்கிறது.

பிற்பகல் 12-05

ஆனால் உடனடியாக நிலக்கரி இறக்குமதி செய்யாமல் 5 மாதம் கழித்து 15—9—1992-லே கொடுக்கப்பட்டதற்கு பிப்ரவரி மாதம் 1993-லே நீங்கள் டெண்டர் போட்டிருக்கிறீர்கள். டெண்டர் போட்டதிலேயிருந்து எந்தெந்த இடங்களிலே யார் யார் டெண்டர் போட்டிருக்கிறார்கள் என்ற விவரங்களுக்கு நான் வரவில்லை. இரண்டு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு முடிவு செய்திருக்கின்றீர்கள். ஆனால் முடிவு செய்தது மின்சார வாரியம். மின்சார வாரியம் முடிவு செய்திருக்கின்றபோது, அந்த நிலக்கரியினுடைய தராதரம் அதனுடைய எரிசக்தித் திறன் அதாவது கலோரிபிக் வேல்யூ என்பது 6 ஆயிரத்திற்குமேலே இருக்கவேண்டும். அதற்குக் கீழாக இருந்தால் அந்தச் சுங்க வரியினுடைய சலுகைகள் கிடையாது. இப்படிப்பட்ட பல்வேறு terms and conditions களைப் போட்டு தமிழ்நாடு மின்சார வாரியம் அங்கே ஒரு அக்கிரிமெண்ட் செய்திருக்கின்றார்கள் நிலக்கரி இறக்குமதி செய்வதற்கு. 5 மாதம் கழித்து டெண்டர் போட்டிருக்கின்றார்கள். ஆனால் முடிவு செய்தது 1—8—1993-ல்தான். முதன்முதலாக நிலக்கரி வாங்குவதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். வெகுநாள் கழித்து 1—8—1993-ல் முடிவு செய்து 20 இலட்சம் டன் நிலக்கரியை 15—9—1993-க்குள்ளாக, ஒரு வருடத்திற்குள்ளாக இறக்குமதி செய்ய வேண்டுமென்று சொல்லி மைய அரசாங்கம் இவர்களுக்குக் குறிப்புகள் கொடுத்திருந்தாலும், மின்சார வாரியம் அதிலே மெத்தனமாக செயல்பட்டு**(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலக்கரி பற்றிய பிரச்சினையைப் பேசுகின்ற போது, அவர் மேலெழுந்தவாரியான விவரங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால் இது சம்பந்தமான

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்திலே ரிட் பெட்டிஷன் நம்பர் 15819/93 என்ற அளவிலே முக்கிய விவாதத்திற்கு நாளை எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. அதிலுள்ள சாதக, பாதகங்களை, (merits n demerits) இவைகளையெல்லாம் வழக்கு மன்றத்திலே நாளை விவாதிப்பதற்கு சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்களும் நம்முடைய மின்சார வாரியத்தினுடைய வழக்கறிஞர்களும் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, நிலக்கரி இறக்குமதியைப் பொறுத்தமட்டில் என்னென்ன குறைபாடுகள் அல்லது என்னென்ன முறையிலே பிரச்சினைகள் இருந்தன என்பதை வழக்கு மன்றத்திலே விவாதிக்கின்ற ஒரு வாய்ப்பு இருக்கின்ற நேரத்திலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ** என்று சுட்டிக்காட்டுவதை நான் ஆட்சேபிக்கிறேன். அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் அதற்காகத்தான் கவனித்துக் கொண்டிருந்தேன். இது பற்றி அரசாங்கமும் ஒரு நீதி விசாரணைக்கு உத்தரவிட்டு அது சம்பந்தமான இன்னொரு பிரச்சினை இன்றைக்கு உயர் நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கிறது

நம்முடைய பேரவை விதி 92(1) 'A member, while speaking must not give his opinion about or refer to any matter on which a judicial decision is pending' என்று இருக்கிறது. ஆகவே, நீங்கள் மேலெழுந்தவாரியாக மத்திய அரசு அனுமதி கொடுத்திருந்தது. அந்த அனுமதியை ஓராண்டுக்குள்ளே முடிக்க வேண்டுமென்று இருக்கிறபோது 5, 6 மாதங்கள் காலதாமதம் செய்தார்கள் என்று பேசுவதைப் பொறுத்தவரையிலும் சரி. அதற்கு அமைச்சர் பதில்அளிப்பார். அதையும் மீறி ** என்று வருகிறபோது அதைப் பற்றிதான் இப்பொழுது பிரச்சினை வழக்குமன்றத்திலே இருக்கிறது. எனவே, அதைப் பற்றி நீங்கள் குறிப்பிடாமல் இதைப்பொறுத்தவரையிலும், ஓர் ஆண்டுக்குள்ளே முடிக்க வேண்டிய இறக்குமதிக்கு 5, 6 மாதம் தாமதம் செய்தார்கள் என்று கேட்டிருப்பது வரையிலும் இருக்கலாம். ** என்று வருவதிலேயிருந்து வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வழக்கு மன்றத்திலே இருக்கிறது என்றும் சொன்னீர்கள். நீதி விசாரணை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொன்னீர்கள். இன்றைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1993 அக்டோபர் 26] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

தினம் நீதி விசாரணையைப் பொறுத்தவரையில், விசாரணைக் கமிஷன், இது வரை விசாரணையைத் துவங்கவில்லை. நீதி மன்றத்திலே இருக்கின்ற பிரச்சினை விசாரணைக் கமிஷனைப் பற்றியதே தவிர, இந்தப் பிரச்சனைக்கு முழுமையான முடிவு காணுகின்ற வழக்கு கிடையாது. எனவே, அந்தப் பிரச்சினை குறித்து அவர் தாராளமாகப் பேசலாம். விதி 92(i)-ல் தெளிவாக இருக்கிறது.

It says, ". give his opinion about or refer to any matter on which a judicial decision is pending" There is no judicial decision pending regarding the import of coal. எனவே, தாராளமாக அவர் பேசலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவரே சொன்னார் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டு அது சம்பந்தமான பிரச்சனைதான் இன்றைக்கு (குறுக்கீடு) விசாரிக்கலாம் என்று வந்து விட்டால் அது விசாரணைதான். (குறுக்கீடு) அது பற்றிய பிரச்சினையே இதுவும். இப்பொழுது ஐகோர்ட்டிலே இருக்கிறது என்பதுதான். (குறுக்கீடு) அவர் சொல்கிறார். இந்த ** என்று வருவதையே விசாரிப்பதற்குத்தான் ஒரு நீதி விசாரணை. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-10.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இறக்குமதி சம்பந்தமாக தொடுக்கப்பட்ட வழக்கும் நிலுவையில் இருக்கிறது. இந்த வழக்கும் நாளைக்கு, 27-ந்தேதி அன்று விசாரணைக்கு வருகிறது, உயர் நீதிமன்றத்திலே. ஆகவே, வழக்கு நிலுவையிலே இருக்கிறது. விசாரணைக் கமிஷன் சம்பந்தமாகப் போடப்பட்ட ஒரு 'ஸ்டே பெட்டிஷனும்' நிலுவையில் இருக்கிறது. ஆகவே இந்த வழக்கு இன்னும் முடியவில்லை. 'இன்ஜெங்ஷன்' பெட்டிஷன் போடப்பட்டு அதுதான் வெக்கேட் ஆகியிருக்கிறது. முழுமையான தீர்ப்பு வருவதற்கு, நாளைய விவாதத்திற்கு இந்த வழக்கும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதனுடைய 'மெரிட் அண்ட் டிமெரிட்' அடிப்படையிலே இந்த வழக்கு நாளை உயர்நீதி மன்றத்திலே விவாதத்திற்கு வருகிறது. ஆகவே, இந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறது? மாணபுமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டதுதானே! அதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன்.

THIRU S. PETER ALPHONSE: Mr. Speaker Sir, the judicial aspect of the matter is different, Now the Electricity Budget is in question. We are here to discuss about what all had happened for the past 2-1/2 years in the Electricity Board. It is not connected with the judicial proceedings pending before any court. Now the learned member points out the defects. According to us that had happened in the administration of the electricity board for the past 2-1/2 years and no courts.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதுவரையிலும் அவரை அனுமதித்திருக்கிறேன். அவர் எந்த அளவு வரையில் பேசலாமோ அந்த அளவு வரையிலும் அனுமதித்து இருக்கிறேன். அதன் பிறகு, ** என்று வருகிறபோதுதான், அதிலிருந்துதான் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி இருக்கிறேன். இது ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. திரு. தண்டாயுதபாணி, பேசுங்கள்.

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதைப் போல ** பற்றி வழக்கு மன்றங்கள் விசாரணை நடத்திக்கொள்ளட்டும். அதிலே நான் தலையிடவில்லை. ஆனால் நான் சொல்ல வருவது, இந்த மின்சார வாரியத்திலே ஏற்பட்டிருக்கிற பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக 29—8—1993-ல் அமைச்சரவை கூடி, ஒரு நீதி விசாரணைக் கமிஷன் போட்டது. நீதி விசாரணை என்பது என்ன? உண்மையைக் கண்டறிவதற்காகப் போடப்படுவது. அது நீதிமன்றம் அல்ல. அங்கே பிளேயின்டிஃபோ, டிஃபன்டன்டோ, அக்யூஸ்டோ, பனிஷ்மென்டோ கிடையாது. நீதி விசாரணை என்பது உண்மையைக் கண்டறிவதற்காகப் போடப்படுவதுதான். அது ஒரு ஃபாக்ட் ஃபைண்டிங் கமிஷன்தான். அதுபற்றி பேசுவதற்கு இங்கே 'சப் ஜுடிஸ்' கிடையாது. உச்ச நீதிமன்றத்திலே இந்த மாதிரிப் பேசக்கூடாது என்று தீர்ப்பும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது கோர்ட்டிலே இருக்கிறது. எந்தப் பிரச்சனையானாலும் கோர்ட்டிலே இருப்பதால் தான் சொன்னேன். (குறுக்கீடு) மாண்புமிகு சட்ட அமைச்சர்.

** மாண்புமிகுபேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலே இன்றைக்கு நிலுவையில் இருப்பது, இந்த நீதி விசாரணைக் கமிஷன் போடுவதற்கு தமிழக அரசுக்கு அதிகாரமா டெல்லி அரசுக்கு அதிகாரமா என்ற பிரச்சனையைக் கிளப்பி, தமிழக அரசுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது என்ற அடிப்படையில் நாங்கள் விசாரணைக் கமிஷன் போட்டிருக்கிறோம். அதை ஆட்சேபித்து ஒருவர் கோர்ட்டுக்குப் போயிருக்கிற நேரத்திலே அது 'சப் ஜுடிஸ்' ஆகத்தான் இருக்கிறது. அது முடிந்த பிறகு மற்ற பிரச்சினைகளை விவாதிக்கலாம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக் கமிஷன் வேண்டுமா, வேண்டாமா என்பது வேறு. இது விசாரணைக் கமிஷனிலே இல்லை. விசாரணைக் கமிஷனிலே இல்லாத நிலைமையில் இன்றையதினம் இந்த அவையிலே விவாதிப்பதற்கு என்ன தடை என்றுதான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் கோர்ட் தீர்ப்பில் இருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக் கமிஷன் வேண்டுமா, வேண்டாமா என்பது வேறு. ஆனால் இந்த நிலக்கரி இறக்குமதி மீது அதனுடைய தன்மைகள் மீது போடப்பட்ட வழக்கு இன்னும் நிலுவையில் இருக்கிறது. அது வேறு. இந்த ரிட் பெட்டிஷன் நம்பர் 15819/93 என்ற வழக்கு நாளைக்கு நம்முடைய உயர் நீதிமன்றத்திலே விசாரணைக்கு வருகிறது. ஆகவே, அது சம்பந்தப்பட்ட வழக்கு நிலுவையில் இருக்கிறது. அதிலே தவறு இருக்கிறதா, இல்லையா என்று அவர்களே தொடுத்த வழக்கு. அந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது. ஆகவேதான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக் கமிஷன் இருக்கிறதா, இல்லையா என்று சொன்னார்கள். விசாரணைக் கமிஷன்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

போடப்பட்டு, அதற்கு திரு. செந்தூர்கர், ஃபார்மர் சீப் ஜஸ்டிஸ் ஆஃப் மெட்ராஸ், ஹைகோர்ட் அவர்கள் போடப்பட்டு, விசாரணைக் கமிஷன் ஏற்கனவே போடப்பட்டு இருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி அவர்கள் பேசுகின்ற போது ** பற்றி நீதிமன்றங்கள் விவாதித்துக் கொள்ளட்டும்; அதில் நான் தலையிடவில்லை என்று சொன்னார்கள் ** என்று சொன்னால் ** அவர் சொல்வது போல்தான் ஆகிறது. **என்பதை நீதிமன்றங்கள் இனிமேல்தான் விசாரித்துச் சொல்ல வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் **என்று மாற்றிக்கொள்ளவேண்டுமென்று உங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12–15.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 92 (i)-இல் நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருளின் மீதும் கருத்தைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவோ கூடாது என்று இருக்கிறது நீதி விசாரணை இப்போது இல்லை. நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்கிறேன், என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த நீதிவிசாரணைக் கமிஷன் செல்லுமா, செல்லாதா, மாநில அரசாங்கம் நீதி விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டுமா அல்லது மத்திய அரசாங்கம் நீதி விசாரணைக் கமிஷன் வைக்கவேண்டுமா என்பதற்கான பரிசீலனைக்குத்தான் இன்றைய தினம் உயர் நீதிமன்றத்தில் வழக்கில் இருக்கிறது. எனவே தற்போது நீதி விசாரணை என்ற ஒன்று கிடையாது. நீதி விசாரணை இல்லாத நிலையில் தாராளமாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே இதுபோன்ற ஒரு பிரச்சினையில் — நம்முடைய விதிகளைப் பொறுத்தவரையில் சில நேரங்களில் மொழி பெயர்த்து இருக்கிற போது பல்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வேறு விதிகளில்— இன்னொரு விதியிலே கூட அதாவது "Not more than 15" என்று இருக்கிற விதியில், தமிழில் என்ன மொழி பெயர்க்கப்பட்டு இருக்கிறது என்றால் 15-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் என்றே கூட மொழி பெயர்க்கப்பட்டு இருக்கிறது. அப்படி ஏதோ கிளாரிட்டி இல்லை என்று வருகிறபோது ஆங்கிலத்திலே இருப்பதைத்தான் நாம் அடிப்படையாக எடுத்துக் கொள்ளவேண்டும். ஆங்கிலத்திலே இருப்பதிலே

'....Give his openion about or refer to any matter on which a Judicial decision is pending என்று வருகிறபோது அது வழக்கு மன்றத்தில் இருப்பதையும் சேர்த்தே குறிக்கும். நீங்கள் சொல்வதைப்போல நீதி விசாரணையில் இருப்பதையும் குறிக்கும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே மேற்கொண்டு விவாதம் வேண்டாம். நீங்கள் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து கேட்டீர்கள். அதுவரையிலும் நான் அனுமதிக்கிறேன். அதற்கு மேற்கொண்டு பேசுவது என்பது இந்த விதிக்கு முரணாக இருக்கும். எனவே அதைப்பற்றி எதுவும் குறிப்பிட வேண்டாம். மற்ற பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிடுங்கள்.

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றங்களில் உள்ளதைப் பற்றிச் சொல்லாமல் மற்றவைகளைப் பற்றிப் பேசவேண்டுமென்று சொல்கிற போது மொத்தம் வந்திருக்கிற கப்பல்கள் 8. இந்த 8 கப்பல்களில் 4 கப்பல்கள் இந்தோனேஷியாவிலிருந்து வந்தன. 4 கப்பல்கள் ஆஸ்திரேலியாவிலேயிருந்து வந்தன. மொத்தம் 8 கப்பல்கள்தான் வந்தன. அதோடு இறக்குமதியை நிறுத்தியாகிவிட்டது. 4 கப்பல்கள், அதாவது இந்தோனேசியாவிலிருந்து வந்த கப்பல்களினுடைய தரம் குறைந்து போயிற்று என்று சொல்லி மின்சார வாரியமே 85 சதவீதம் சுங்கவரி கட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு யார் ஆலோசனை சொன்னார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் அதை 'கன்டெஸ்ட்' செய்திருக்க வேண்டும். (குறுக்கீடு) நான் சொல்லி முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆஸ்திரேலியாவிலிருந்து வந்த 4 கப்பல்களுக்கு மட்டும் 30 சதவீதம் சுங்கவரி செலுத்தி அதை எடுத்து விட்டார்கள். ஆனால் இந்தோனேசியாவிலிருந்து வந்த அந்த நிலக்கரியினுடைய தரம் குறைந்திருக்கிறது என்று சுங்க இலாகா சொன்னதற்குப் பிறகு அந்த நிலக்கரிக்கு 85 சதவீதம் கட்டி — அந்த 4 கப்பல்களினுடைய நிலக்கரியினுடைய விலை 17,72,82,000

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

ரூபாய். அதற்கு இவர்கள் கட்டி இருக்கிற வரி 15,06,89,000 ரூபாய். ஆனால் கட்ட வேண்டிய வரி 5,09,94,000 ரூபாய் தான். அதுதான் கட்டி இருக்கவேண்டும். ஆனால் எக்சஸ்-ஆக 9 கோடி ரூபாய் தமிழ்நாட்டு மக்களுடைய வரிப் பணத்தை சுங்க இலாகாவிற்குக் கட்டி இருக்கிறார்களே, இதற்கு யார் பொறுப்பு?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் ஏற்கனவே சொன்னேன். இந்த 'கலோரிக் வேல்யூ' பற்றிக் குறிப்பிடுகிறபோது அவர்கள் ஒரு இடத்திலே சோதனை செய்கிறார்கள். உலகத்திலே இருக்கிற இரண்டு பெரிய நிறுவனங்களிலிருந்து சான்றிதழ் பெற்று நாம் கொண்டு வருகிறோம். அதற்குப் பின்னால் நம்முடைய அனல் மின் நிலையத்தில் இருக்கிற சோதனைச் சாலையில் நாமும் சோதனை செய்திருக்கிறோம். அதிலே அவர்கள் சொல்வதற்கும், நம்முடைய சோதனைக்கும், வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து சொல்கிற சோதனைக்கும் வேறுபாடு இருக்கிற காரணத்தால்தான் இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் வந்ததன் காரணமாகத்தான் இன்றைக்கு அந்த விவாதம் நீதிமன்றத்திலே வைக்கப்பட்டு இருக்கிறது. நான் விரிவாகச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குற்றச் சாட்டுக்கள் அத்தனையும் மறுக்கப்படுகின்றன. மின்சார வாரியம் என்பது எந்த நாட்டிலே இருந்து நிலக்கரி வாங்க வேண்டும் என்று மத்திய அரசோ அல்லது யாரோ எங்களை நிர்ப்பந்திக்கவில்லை. நிலக்கரியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளலாம் என்றுதான் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இறக்குமதி செய்தோம். அதிலே 6,000 கலோரிக் வேல்யூ என்று நிர்ணயித்ததே நம்முடைய மின்சார வாரியம்தான். அதற்குக் கீழே குறைவாக இருப்பவர்களுக்கு 'பெனாலிட்டி க்ளாஸ்' போடலாம் என்று நிர்ணயித்தது நம்முடைய மின்சார வாரியம்தான். அதைக் கூட, நான் சொல்வது, நீதிமன்றத்திலே இந்த 14 நடைமுறைகளும் மிக அழகாகப் பின்பற்றப்பட்டிருக்கின்றன. என்று நீதிமன்றம் தீர்ப்பிலே இந்த இடைக்காலத் தடையாணையை ரத்து செய்திருக்கின்றபோது குறிப்பிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய நீதிபதி அவர்கள் தெரிவித்தக் கருத்துக்களைச் சொல்வதிலே தவறு இல்லை. இடைக்காலத் தடையாணையை ரத்து செய்கின்றபோது, மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் இந்த 14 காரணங்களும் முறையாக நம்முடைய மின்சார வாரியத்தினால் இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் தடையாணையை ரத்து செய்கிறேன் என்று சொல்லி அந்த இடைக்கால தடையாணையை ரத்து செய்தார்கள். அதற்குப் பின்னாலேதான் இன்றைக்கு அந்த ஒரிஜினல் பெட்டிஷன்

என்ற அந்த வழக்கு, அந்த மனு நாளைக்கு வருகிறது. ஆகவே இந்த கலோரிக் வேல்யூ பற்றி எங்களுடைய வாதம் ஒன்று, குற்றச்சாட்டை சுமத்தியவர்களுடைய வாதம் ஒன்று ஆகவே அதை இந்த மன்றத்திலே விவாதித்தால் யார் சொல்வதை ஏற்றுக்கொள்வது என்ற பிரச்சினை இங்கே எழும். ஆக எங்களுடைய தரப்பிலே நாங்கள் 6 ஆயிரம் கலோரிக் வேல்யூ இருக்கிறது என்று எங்களுடைய சோதனைச் சாலையிலே சொல்கிறோம். அதே நேரத்திலே கஸ்டம்ஸ் டிப்பார்ட்மெண்டிலே இருக்கின்றவர்கள் ஒரு அறிவிப்பைச் சொல்கிறார்கள். இதற்காகத்தான் இன்றைக்கு நாம் நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறோம். ஆகவே இதை செய்ய வேண்டிய பொறுப்பு நீதிமன்றத்தின் கரங்களிலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நம்மிடத்திலே இல்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே எங்களுடைய சோதனையில் 6 ஆயிரம் கலோரிக் வேல்யூ இருக்கிறது என்று நான் ஆணித்தரமாகச் சொல்கிறேன். குறைந்த அளவுக்கு கலோரிக் வேல்யூ உள்ள எந்த நிலக்கரியையும் நம்முடைய மின்சார வாரியம் இறக்குமதி செய்யவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனாலே இந்தப் பிரச்சினை இன்னும் போயிற்றென்றால், அந்த கலோரிக் வேல்யூ எல்லாம்தான் இங்கே இருக்கிறதே, நீங்கள் இன்னும் வேண்டாம், நீங்கள் வேறு பிரச்சினைக்கு வாருங்கள். நேரமும் ஆகிவிட்டது.

திரு. வி. தண்டாயுதபாணி: நான் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இப்போது இந்தப் பிரச்சினை வேண்டாம்.

திரு. வி. தண்டாயுதபாணி: மின்சார வாரியம் கட்டிய பணத்தைப் பற்றித்தான் நான் சொன்னேன். அதை இவர்கள், ஏன் இப்போது 6 ஆயிரம் கலோரிதான் என்று அமைச்சர் அவர்கள் சொன்ன உடனே, ஏன் அப்போது இந்த அதிகமான சுங்க வரியைக் கட்டினார்கள் என்பதற்கு அவர் பதில் சொல்லவில்லை. பின்னாலே பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்,: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய நீதிமன்றத்தின் சார்பிலே இந்த கலோரிக் வேல்யூ பிரச்சினை வருகின்றபோது ஒரு உத்தரவைப் பிறப்பித்தார்கள். நீங்கள் அதற்குரிய 'ஃபுல் டியூட்டி'யையும் கட்டிவிட்டு நீங்கள் அப்பீல் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அந்த நீதிமன்றத்தினுடைய கருத்துக்கு நாங்கள் விவாதம் செய்திருக்கிறோம். நாங்கள் மறுத்திருக்கிறோம். மறுக்கின்றபோது நீதிமன்றத்திலே ஒரு உத்தரவு வருகின்றது. நீங்கள் அந்த 'ஃபுல் டியூட்டி' யையும் கட்டியதற்குப் பின்னாலே இந்த அப்பீலை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னதற்குப் பிறகு கோர்ட்டினுடைய உத்தரவுப்படி அதை நாங்கள் கட்டியிருக்கிறோம். நாளைத் தீர்ப்பிலே எங்கள் பக்கம் நியாயம் இருக்கிறது என்று சொன்னால் அந்த பணம் திருப்பி வரப்போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே கோர்ட்டினுடைய தீர்ப்பை மதித்து அந்த கோர்ட் தீர்ப்பின் அடிப்படையிலே அந்த பணம் கட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் வரிப்பணத்தை ஏமாற்றுகின்ற வேலை எங்களுக்குக் கிடையாது. அது யாருக்கு என்பதை காலம் உணர்த்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் நிலக்கரி இறக்குமதி செய்வதிலே எந்த நாட்டிலேயிருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கம் ஒன்றும் எங்களை நிர்பந்திக்கவில்லை என்று சொன்னார். அதற்காக மிக்க நன்றி. இந்த இறக்குமதியிலே பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடியுங்கள். நேரம் ஆயிற்று, வேறு பிரச்சினை இருந்தால் சொல்லி முடியுங்கள். 24 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. வி. தண்டாயுதபாணி: இறக்குமதியிலே, இப்போது இங்கே நீதி விசாரணை என்றெல்லாம் சொன்னார்கள். தமிழ்நாடு அரசாங்கம் நீதி விசாரணைப் போட்டிருக்கிறது. வழக்கு மன்றத்திலே இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள்.

இம்மாதிரி புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்திலே எரி சாராய ஊழல் விசாரணை கமிஷன் எம். ஜி. ஆர். அவர்கள் போட்டபோது, சதாசிவம் கமிஷன் போட்டார்கள். அவர் அந்த கமிஷன் போட்டபோது

யார் யார் எல்லாம் அந்த நிர்வாகத்திலே இருந்தார்களோ அந்த அதிகாரிகளை எல்லாம் மாற்றினார். யார் அந்த பொறுப்பை வகித்து இருந்தாரோ அந்த அமைச்சர் அவர்களுடைய போர்ட்போலியோவையும் மாற்றினார். அப்படி ஒரு நீதி விசாரணை கமிஷன் போடுகிறபோது, அதிலே சம்பந்தப்பட்டவர்கள் யார் யார் என்று, எந்த எந்த அதிகாரிகள் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் மாற்றிவிட்டு அந்த கமிஷன் போட்டிருக்கவேண்டும். இப்போதுகூட ஒன்றும் நாளாகிவிடவில்லை. யார் யார் அந்த அதிகாரிகள், அந்த மின்சாரத் துறையில், இன்னும்கூட**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **இது எல்லாம் வேறு வேறு வகையான விவகாரம். அது எல்லாம் அவைக் குறிப்பிலே வேண்டாம்** இந்த பிரச்சினையை இத்தோடு முடிக்கவேண்டும். இதற்குள்ளே, ரொம்ப உள்ளே போனால் நீதி (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது யார் அமைச்சராக இருந்தாரோ அவரை மாற்றிவிட்டார் என்ற தவறான செய்தியைச் சொல்கிறார்கள். தொடர்ந்து நான்தான் அமைச்சராக இருந்தேன். (சிரிப்பு)

திரு. வி. தண்டாயுதபாணி: போர்ட்போலியோ மாற்றப்பட்டது.

பிற்பகல் 12.25

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, போர்ட்போலியோ என்பதற்கும், அமைச்சர் என்பதற்கும் வித்தியாசம் தெரியாமல் எனக்கு இல்லை. நீங்கள் சொன்னதற்கு நானும்—தொடர்ந்து நான் தான் இருந்தேன் என்றால்-நீங்கள் சொன்ன போர்ட்போலியோவுக்கு அமைச்சராக இருந்தேன் என்று அர்த்தம். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு பிரச்சினைகள் வந்ததற்குப் பின்னால், இதிலே வெளிநாட்டுச் செலாவணி, கோல் என்கிற நிலக்கரி, இறக்குமதி என்கிற சொல், இவை எல்லாம் சென்ட்ரல் லிஸ்டில் இருக்கிற காரணத்தால், நீங்கள் நீதி விசா

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

ரணை போட்டால் மட்டும் போதாது. இதிலே அந்நியச் செலாவணியும், இறக்குமதியும், பல மாநிலங்கள் மட்டுமல்லாமல் வெளிநாடும் சம்பந்தப்பட்டிருக்கின்ற காரணத்தினால், மத்திய புலனாய்வுத் துறை விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்று நான் இங்கே அன்பாக கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கரி என்பது ஓ.ஜி.எல். அதாவது ஓபன் ஜெனரல் லைசன்ஸ் அதிலே டியூட்டி கன்செசன் கொடுப்பதிலே வேண்டுமானால் மத்திய அரசிலே கேட்கலாமே தவிர, நிலக்கரியை இறக்குமதி செய்வதிலே எந்த மாநிலத்திற்கும் தனிப்பட்ட உரிமை இருக்கிறது. ஆகவே, இது ஓபன் ஜெனரல் லைசன்ஸ் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிற உறுப்பினர்களில், முன்வரிசைத் தலைவர்கள் யாரும் இல்லை. நாளையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அல்லது அவர்கள் கட்சி சார்பில் பேசுகிற உறுப்பினர் ஒருவர் பேசி, அமைச்சர் பதில் சொல்வதற்குத்தான் நேரம் இருக்கும். எனவே, இன்றைக்கே, பேச விரும்புகிற முன்வரிசைத் தலைவர்களும் பேசிக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

*டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1993-94 ஆம் ஆண்டு நிதிநிலை விவர அறிக்கை குறித்தும் 1992-93 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு குறித்தும் இப்பேரவையில் விவாதிக்க வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியினை காணிக்கையாக்கிக் கொள்கின்றேன்.

இந்த அரசு பதவிப் பொறுப்பேற்றபொழுது இருந்த மின் வழங்கல் நிலையை எண்ணிப் பார்க்கிறேன். உயர் அழுத்த தொழிற்சாலைகள் மின்சக்தியைப் பயன்படுத்துவதில் 25 சதவிகிதம் வெட்டும், மின் தேவையில் 30 சதவிகிதம் வெட்டும் இருந்தது. மதிநுட்பம் மிக்க மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சீரிய திட்டங்களினால் உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கான மின் வெட்டு படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இன்று அடியோடு நீக்கப்பட்டிருக்கிறது என்பது பாராட்டுவதற்குரியது, மற்ற மாநிலங்களிலுள்ள மின்நிலையோடு ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் மின் நிலைமை நல்ல நிலையில் உள்ளது என்பது, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நிர்வாகத் திறமைக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

1993 அக்டோபர் 26] [டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்]

அதேபோல, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட வளாகத்தி லுள்ள காடம்பாறை மின் நிலையம் 1990-ஆம் ஆண்டு தீவிபத் திற்கு உட்பட்டபொழுது எந்த அரசு இந்த மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்தது என்பது உங்களுக்கு நன்றா கத் தெரியும். அந்த சேதம் புரட்சித் தலைவி அவர் களுடைய ஆட்சியில்தான் சரி செய்யப்பட்டது என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, 1992—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பருவ மழையின்போது தண்ணீரில் மூழ்கிப்போன சேர்வலாறு மின் உற்பத்தி நிலையம் முழுமையாக 9-8-1993, அதாவது 8 மாதங்களுக்குள்ளாக முடிக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

தூத்துக்குடி அனல் மின் நிலையமும், மேட்டூர் அனல் மின் நிலையமும் உற்பத்தித் திறனுக்காக பரிசைப் பெற தகுதி பெற்றுள்ளதையும் பாராட்ட வேண்டும். மின் உற் பத்தித் திறனை உயர்த்துவதற்காக மேற்கொள்ள இருக்கும் கூடுதல் திட்டங்கள் அனைத்தும் பாராட்டுவதற்குரியன.

இப்படி பாராட்டுதல்களைப் பெறுகின்ற நேரத்தில், தமிழ்நாட்டில் பல்வேறு மத்திய அரசு மின் திட்டங்களை செயலாக்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதை குறித்து நம்முடைய அரசு பெரிதும் கவலை கொண்டுள்ளது.

மக்களுடைய வரிப் பணத்தை வீணாக்குகிறார்கள் என்று சொன்னவர்கள், இங்கே, தமிழ்நாட்டிலே மத்திய அரசி னுடைய மின் திட்டங்களை செயலாக்குவதில் காலதாமதம் ஏற்படுவதை மத்திய அரசுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டவர்கள் என்பதை நான் இந்த மன்றத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தென்னக எரிவாயு மின்தொகுப்புத் திட்டம் விரைவில் முடிக்கப்பட வேண்டுமானால், தென்னக மாநிலங் கள் ஒன்று சேர்ந்து நிதி பங்கேற்பு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்தை ஏற்று, இதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற் கொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாக வற்புறுத்துகிறேன். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே மின்சக்தி எந்தத் தொழிலுக்கும் பயன்படக்கூடிய ஒரு எரிசக்தி ஆதாரம் என்பதோடுகூட இது ஏனைய எரிசக்தியை காட்டிலும் மிகச் சிறந்த வணிக எரிசக்தி என்று கூறியிருக்கிறார்கள். இது மறுக்கமுடியாத

உண்மைதான். மாநிலத்தின் வளர்ச்சிக்கு இதுமிகவும் அவசியமான இடுபொருள் என்று கூறி இருக்கிறார்கள். அதுவும் மறுக்க முடியாத உண்மைதான். விவசாயப் பணிகளை அதிக அளவில் இயந்திர மயமாக்குதல் மூலை முடுக்குகளிலும் உள்ள மக்களுக்கும் இதன் பயன்களை நீட்டித்தல் ஆகியவற்றின் காரணமாக மின் சக்தியின் பயன்பாடு அதிக அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மைதான். மிகச் சிறந்த முறையிலும், சிக்கனமாகவும் இம்மாநிலத்தின் மின் உற்பத்தி, மின் அனுப்புகை, மின் பங்கீடு ஆகிய பணிகளை ஒருங்கிணைந்த முறையில் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மைதான் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைப் பேரவைக்கு நல்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, எனது சில கருத்துக்களை இந்த மாமன்றத்திற்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

பிற்பகல் 12-30

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை)

தேவைக்கு மிகுதியான இடுபொருள் ஒன்றை உற்பத்தி செய்கிறபோது, சில விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. இதிலே முக்கியமாக வருவது உற்பத்தி; அடுத்து உற்பத்தி செய்த பொருளை பங்கீடு செய்வது; அப்படி பங்கீடு செய்யும்போது ஏற்படுகிற இழப்பைச் சரிக்கட்டுவது என்பது பற்றி எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உரையில் இருக்கிறது. இவற்றோடு சேர்த்து, இப்படி ஒரு இடுபொருளை உற்பத்தி செய்யும்போது அதை எவ்வாறு மிச்சப்படுத்த வேண்டுமென்பது பற்றிய கருத்து எதுவும் அதில் இல்லை. ஆகவே மின் வாரியத்திற்கு என்னுடைய கருத்தாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பொருளை எவ்வளவுதான் உற்பத்தி செய்தாலும், அந்தப் பொருளை மிச்சப்படுத்துகின்ற ஒரு முறையையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். மின்சாரத்தை மிச்சப்படுத்தல் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். இதிலே முதலாவதாக நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் இதை உபயோகிப்பவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட வழிவகைளைச் செய்ய வேண்டும். மின்சாரத்தைக் குறைந்த அளவுக்கு எடுத்துக்கொண்டு, மிச்சப்படுத்தும் கருவிகளை நாம் உபயோகப்படுத்த வேண்டும். இதுபோன்ற கருவிகளைக் கண்டுப்பிடித்தவர்களைக்கூட நாம் பாராட்ட வேண்டும். ஊக்குவிக்க வேண்டும். உதாரணத்திற்கு குழல் விளக்கு பற்றிய ஒரு கண்டுபிடிப்பை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இதை நான் கூறும்போது, பல பேருக்கு இது அதிசயமாகக்கூட இருக்கலாம். ஆனால் உண்மை இன்றைக்கு ஒரு நிறுவனம் ப்யூஸ் போன டியூப் லைட்டுகள்

எரியக்கூடிய ஒரு கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்திருக்கிறது. அப்படிக் கண்டுபிடித்ததோடு மட்டுமல்லாமல், புதிய கண்டு பிடிப்புக்கும், ஏற்கனவே இருக்கும் விளக்குக்கும் எவ்வளவு வித்தியாசம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு கன்வென்ஷனல் சிஸ்டத்தில் ஒரு குழல் விளக்கு 60 வாட்ஸ் மின்சாரம் எடுக்கிறதென்றால், புதிதாகக் கண்டுபிடித்துள்ள புதிய குழல் விளக்கு—இதற்கு பிளாஸ்மா சோக்லஸ் சிஸ்டம் என்று பெயர்—50 வாட்ஸ் மின்சாரத்தைத்தான் எடுத்துக் கொள்ளும். ப்யூஸ் போன பல்பைப் போட்டால்கூட எரியும். அடுத்து பவர் லாஸ் என்றுபார்க்கும்போது கன்வென்ஷனல் சிஸ்டத்திலே 20 வாட்ஸ் என்று சொன்னால் புதிய கண்டு பிடிப்பான பிளாஸ்மா சிஸ்டத்திலே 15 வாட்ஸ்தான். ஆப் பரேடிங் வோல்டேஜ் என்று எடுத்துக்கொண்டால், இன்றைக்கு கன்வென்ஷனல் சிஸ்டத்தில் இருக்கும் குழல் விளக்கு எரிய 190 வோல்ட்ஸ் மின்சாரம் வேண்டுமென்றால், பிளாஸ்மா சிஸ்டத்தில் 140 வோல்ட்ஸ் போதும். இன்றைக்குப் பல கிராமங்களுக்குச் செல்லும்போது அங்கே இருக்கும் பொது மக்கள் குழல் விளக்கே எரியவில்லை என்று சொல்லு கிறார்கள். காரணம், மின் அழுத்தம் சரியாக இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே 140 வோல்ட்ஸ் மின்சாரம் வந்தால்கூட குழல் விளக்குகள் எரியும். மேலும் இந்தப் புதிய கண்டுபிடிப்புகளைப் பொருத்துவதன் மூலம் ப்யூஸ் போன குழல்விளக்குகள்கூட எரியும் தன்மை இருக்கிறது. எனவே இந்தப் பிளாஸ்மா சிஸ்டம் எப்படி வேலை செய்கிறது என்பதைச் சுருக்கமாகக் கூற விரும்பு கிறேன்.

The flourescent tubes are filled with a particular gas and inside walls are coated with a powder which will emit light when electrons are thrown on it on both sides. The ionisation has been done in ordinary tube light systems by heating two filaments provided on both sides of the tubes. In Plasma system, this is done by generating high frequency electrons. This has been designed based on the Surface Mount Technology. Because of this technology, the Plasma System operates by the high frequency electrons and so this system does not need any filament continuity. Because of this, the fused tubelights are working with this system,

பிற்பகல் 12-35

இதுபோன்ற நவீன கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடிப் பதன் மூலமாக இன்றைக்கு மின்சாரம் அதிகமாகச் செல வாவதை நம்மால் மிச்சப்படுத்த முடியும். இதுபோன்ற எல்லாத் துறைகளிலும் சிறியது முதல் பெரியது வரை நவீ

னக் கண்டுபிடிப்புகளுக்கு இடமளித்து, மின்சாரத்தைச் சேமிப்பதன் மூலம், அப்படிச் சேமிக்கப்படும் மின்சாரத்தை மற்ற வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம் என்ற கருத்தைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி. வணக்கம்

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ச்சுனன்): திரு. கே.பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1993-94-ஆம் ஆண்டு நிதி நிலை விவர அறிக்கை குறித்தும், 1993-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு குறித்தும் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நான் வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் பெரிதும் மகிழ்வு கொள்கிறேன்

தமிழ்நாடு மின்சார வாரியம் பற்றி இங்கே எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுகின்றபோது குறைகளைச் சொன்னார்கள். ஆனால் அது எவ்வளவு நிறைவாகச் செய்து கொண்டிருக்கிறது என்பது இந்த நாட்டு மக்களுக்கும் தெரியும், இந்த நாட்டை ஆண்டுகொண்டிருக்கின்ற எங்களுடைய புரட்சி தலைவி அவர்களுக்கும் தெரியும். இதே குற்றச்சாட்டைத்தான் பழனி பாராளுமன்றத் தொகுதி தேர்தலிலும். ராணிப்பேட்டை தொகுதி தேர்தலின் போதும் அவர்கள் எடுத்து வைத்தார்கள். குற்றச்சாட்டைச் சொன்னவர்களுக்கு மக்கள் மன்றமே எப்படித் தீர்ப்பு வழங்கியிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே பழனி பாராளுமன்றத் தொகுதியிலும், ராணிப்பேட்டை தொகுதியிலும் வெற்றி பெற்று இன்று வெற்றி நாயகியாக அமர்ந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய ஆட்சி இப்போது இலவச மின்சாரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினருடைய கட்சி தான் டெல்லியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. அந்த ஆட்சிதான் இங்கே ஏழைகளுக்கு நாங்கள் தந்துகொண்டிருக்கிற இலவச மின்சாரத்தை ரத்துச் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள் அப்படி இலவச மின்சாரத்தை ரத்துச் செய்யுங்கள் என்று சொல்கிற ஆட்சியை வைத்துக்கொண்டு இருக்கிறவர்கள்தான் இங்கே கண்ணாடி வீட்டுக்குள் அமர்ந்து கொண்டு கல்லை எறிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் நாங்கள் சொல்கிறோம். எத்தனை கோடி நஷ்டம் ஆனாலும் பரவாயில்லை. எவ்வளவு இழப்புகள் ஏற்பட்டாலும் பரவாயில்லை. எவ்வளவு சோதனைகள் வந்தாலும் பரவாயில்லை. இந்த நாட்டு மக்களுக்கு இலவச மின்சாரத்

1993 அக்டோபர் 26] [திரு. கே. பி. ராஜு]

தை நாங்கள் தந்தே தீருவோம் என்று புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் நாங்கள் சொல்கிறோம். நீங்கள் எவ்வளவு குற்றச்சாட்டைச் சொன்னாலும், எவ்வளவு குறைகளைச் சொன்னாலும், இந்தச் சட்டமன்றத்தில் இருக்கிற நீங்கள் வேண்டுமானால் பேசிக் கொண்டிருக்கலாமே தவிர, இந்த நாட்டு மக்கள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுமார் 500 முதல் 700 கோடி ரூபாய் வரை மின்சார வாரியம் நஷ்டத்தில் இயங்குவதாக அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். இதிலே என்னுடைய தனிப்பட்ட கருத்து என்னவென்றால், மின்சார வாரியமும் இவ்வளவு நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது, சிவில் சப்ளைஸ் - ரேஷன் பொருட்கள் வழங்குவதிலும் கிட்டத்தட்ட ரூ. 400 கோடி நஷ்டம். போக்குவரத்துத் துறையிலும் நஷ்டம். சத்துணவு போடுவதிலும் நமக்கு 400, 500 கோடி ரூபாய் நஷ்டம், இப்படி 500 கோடி, 1000 கோடி, 2000 கோடி ரூபாய் மானியமாகவே போய்க் கொண்டிருந்தால் இந்த நாட்டினுடைய நிதி நிலைமை என்னவாகும்? ஆகவே நஷ்டத்தில் ஓடுகின்ற மின்சார வாரியத்தின் ஒரு சில நிலையங்களையோ அல்லது சில மின்சார வசதிகளையோ ஏன் தனியாருக்குக் கொடுக்கக் கூடாது என்பதை இந்த நேரத்தில் அரசு பரிசீலிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன் ஏனென்று கேட்டால், மற்ற ஒரு சில மாநிலங்களில் மின்சாரத்தை தனியாருக்குக் கொடுத்து அதை அங்கே லாபகரமாக நடத்துவதாகக் கூடச் சொல்கிறார்கள். ஆனால், இங்கே அது அரசாங்கத்தில் இருக்கிற காரணத்தால்தான் யாரைப் பார்த்தாலும் இலவசமாக மின்சாரத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் லைட் போடுவதற்கு மட்டும் தான் மின்சாரம் இருந்தது. இப்போது எதற்கெடுத்தாலும் மின்சாரம்தான். வீட்டிலே இருக்கிற அத்தனைக்கும் மின்சாரம். மிக்சிக்கு மின்சாரம், கிரைண்டருக்கு மின்சாரம், ஷேவிங் செட்டுக்குக் கூட மின்சாரம்தான் பயன்படுகின்ற அளவுக்கு நவீன காலமாக இருக்கிறது ஆகவே மின்சாரம் இல்லாத இடமே இங்கே இருக்காது. எங்கே எடுத்துக் கொண்டாலும் மின்சாரம். அதுவும் இப்போது மின்சாரத்தில் குளிர் சாதனங்கள் வேறு வருகின்றன? இப்போதெல்லாம் சமையல் பொருள்களை எல்லாம் மாதத்திற்கு ஒருமுறை மொத்தமாக சமைத்து ஃபிரிஜ்-ல் வைத்துக் கொண்டு அவ்வப்போது எடுத்துக் கொள்கிறார்கள். இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் மின்சாரம் அந்த அளவுக்குத் தேவையாக இருக்கிறது. நாட்டு

[திரு. கே. பி. ராஜு] [1993 அக்டோபர் 26

மக்களுக்கு ஆனால் குறை சொல்கிறவர்கள் நிறைகளை சொல்ல மறுக்கிறார்கள். இந்தியாவிலே எத்தனையோ மாநிலங்கள் இருக்கின்றன. அதில் பெருவாரியான மாநிலங்களை காங்கிரஸ் கட்சிதான் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. ஆனால் மின்சார வெட்டு இல்லாத மாநிலம் இந்தியாவிலே தமிழ்நாடு ஒன்றுதான் இருக்கிறது. இதற்கு முன்பு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலும் சரி, அதற்கு முன்பிருந்த ஆட்சிக் காலத்திலும் சரி, நீங்கள் ஒன்றை எண்ணிப் பார்க்கவேண்டும்.

பிற்பகல் 12-40

அப்போதெல்லாம் 3 மாதம் மின்சார வெட்டு இருக்கும், 4 மாதம் மின்சார வெட்டு இருக்கும்; 5 மாதம் மின்சார வெட்டு இருக்கும்; வருடத்திற்கு 6 மாதம் கூட மின்சார வெட்டு இருந்து இருக்கிறது, இப்பொழுது பத்திரிக்கையில் நாங்களும் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். 'மின்சார வெட்டு' என்றே அமைச்சர் வாயிலாக வருவது கிடையாது. ஆகவே எந்த நேரத்திலும் மின்சாரம் தந்து கொண்டிருக்கிற இந்த ஆட்சியை, புரட்சித்தலைவியினுடைய ஆட்சியை நாங்கள் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். ஆகவே தான் சொல்கிறேன், நஷ்டமாகின்ற பொருட்களை தாராளமாகத் தனியாருக்குக் கொடுப்பதில் எந்தவிதமான சிரமமும் இல்லாமல் இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில்தான் இலவச மின்சாரம் தந்து கொண்டு இருக்கிறோம். தமிழ்நாட்டில்தான் சாராயக் கடைகள், கள்ளுக் கடைகள் எல்லாம் மூடிவிட்டோம். ஆகவே, இதையெல்லாம் காரணமாகக் காட்டி மத்திய அரசிடம், மாநில அரசு இலவச மின்சாரம் தருவதற்காக ஏதாவது மானியம் அவர்கள் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே அமைச்சர் அவர்கள் இந்த அரசின் வாயிலாக மத்திய சர்க்காரைக் கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே பேசுகின்ற அருமை காங்கிரஸ் சகோதரர்கள் அத்தனைபேரும் மத்திய சர்க்காரிடம் எடுத்துக் கூறி எங்களுடைய மாநில சர்க்கார் ஏழை விவசாயிகளுக்காக இலவச மின்சாரம் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. ஆகவே மத்தியிலே ஆளுகின்ற காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டிலே இருந்து வரிப் பணத்தை எல்லாம் வாங்கிக் கொண்டு இருக்கிறது; மத்திய சர்க்காருக்கு தமிழ்நாட்டிலே இருந்துதான் வரிப் பணம் வந்து கொண்டிருக்கிறது; அந்த வரிப் பணத்திலேதான் மத்திய சர்க்கார் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது; ஆகவே தமிழ்நாட்டுக்கு கொஞ்சம் மானியம் தாருங்கள் என்று டில்லிக்குச் சென்று காங்கிரஸ் சகோதரர்கள் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

1993 அக்டோபர் 26] [திரு. கே. பி. ராஜு]

அதேபோல்தான் புரட்சித் தலைவி அவர்களின் நேர் கொண்ட பார்வையையும் நிமிர்ந்த நடையையும், அறிவாற்றல் மிக்க திறமையையும், அவர் ஆட்சி செய்கின்ற திறனையும் கண்டு இந்த நாட்டு மக்கள் போற்றுகிறார்கள். இங்கே பேசுகிறவர்கள் சொன்னார்கள், தனியார் துறையில் தொழில் தொடங்க வாய்ப்பே இங்கு கிடையாது என்று சொன்னார்கள். இங்கே அமைச்சருடைய அறிக்கையிலே நான் பார்த்தேன். ஜெயங்கொண்டம் மின்சார நிலையம் மட்டும் 1500 கோடி ரூபாயில் 1500 கோடி மெகா வாட் மின்சாரம் தயாரிக்கின்ற ஒரு மாபெரும் மின்சார நிலையம் வெளி நாட்டினரோடு தொடர்பு கொண்டு புரட்சித் தலைவி அவர்கள் அந்தத் திட்டத்தை ஆரம்பித்து இருக்கிறார்கள். ஆகவே, எதிலும் குறை சொல்கிறவர்கள் இதிலும் குறை சொல்வார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எவ்வளவு திறமையாக ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்—இந்த நாடே ஒளி மயமாக இருக்க வேண்டும்; தமிழ்நாடு இருளில் மூழ்கக் கூடாது; தமிழ்நாடு வெளிச்சமாக இருக்க வேண்டும் என்ற சிந்தனையோடு செயல்படுகிறார்கள். அருமையான அமைச்சர்களை வைத்துக் கொண்டு ஆட்சியை திறம்பட நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, ஜெயங்கொண்டம் மின்சார நிலையம் என்பது 1500 கோடி ரூபாயில் வெளி நாட்டு உதவியோடு செய்கின்ற அந்தத் திட்டத்தை நாங்கள் மனதார வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். ஆகவே, அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு எந்தத் தடைகள் இருந்தாலும், அதை நீங்கள் அகற்றி அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

அதேசமயத்தில் கோவை மாவட்டம் என்பது வளர்ந்து வருகிற மாவட்டம். அது இண்டஸ்ட்ரியல் மாவட்டம். அங்கே விவசாயிகளுக்கு 6 மாதம் தான் மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. அந்த மாவட்டத்தை இண்டஸ்ட்ரியல் மாவட்டமாக மாற்றி அங்கே 24 மணி நேரமும் மின்சாரம் கிடைக்க நீங்கள் வழி செய்வீர்களேயானால், இந்த நாட்டிற்குத் தேவையான வரிப் பணத்தை அத்தனையையும் நாங்களே கட்டுவோம். ஏனென்றால் கோவை மாவட்டத்தில் இப்போது எந்த வீட்டை எடுத்துக் கொண்டாலும் அங்கே ஒரு ஓர்க்ஷாப் இருக்கிறது. எந்த வீட்டை எடுத்துக்கொண்டாலும் ஒரு சிறு தொழில் இருக்கும்; குடிசையை எடுத்துக் கொண்டாலும் கூட அங்கே சின்ன சின்ன தொழிலைச் செய்து கொண்டு இருப்பார்கள். பிளாட்பாரங்களிலே கூட சின்ன சின்ன தொழிலைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் மின்சாரம் தேவை. ஆகவே, அந்த மின்சாரத்தை நீங்கள் கோவை மாவட்டத்திற்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அதேபோல், போரூர் தொகுதி செட்டிபாளையம், மலமிச்சம்பட்டி போன்ற பகுதிகளில் சிட்கோ இருக்கிறது. அந்த சிட்கோவிற்கு பக்கத்தில் ஆயிரக் கணக்கான தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கே எல்லாம் மின்சாரம் இல்லாமல் தவிக்கின்றார்கள். அவர்களுக்கு மின்சாரத்தை 24 மணி நேரமும் நீங்கள் கொடுத்து உதவ வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டம் என்பது ஒரு வரப்பிரசாதம். தமிழ்நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை அந்தத் தண்ணீரிலேயே நாம் தயாரித்து விடலாம். மேற்கே சுமார் 2000 ஏக்கர் நிலங்களிலே நீர்வீழ்ச்சியாக விழுகிறது. அதாவது காடுகளிலே நீர்வீழ்ச்சியாகக் கொட்டிக்கொண்டு இருக்கின்றது. தமிழ்நாட்டிலே விழுகின்ற அந்த நீர்வீழ்ச்சியானது ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பாசனத் திரவியங்களைப் பயிராக்கி விட்டு—மிளகு, கிராம்பு போன்ற வாசனைத் திரவியங்களை எல்லாம் பயிராக்கி விட்டு, மேற்கே சென்று தேவாலா என்ற ஆற்றோடு கலந்து கடலில் வீணாகிறது. எனவே, அந்த பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றுவீர்களேயானால் அந்த ஆற்றுத் தண்ணீரிலிருந்து 2 ஆயிரம், 3 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை தயாரித்து நான்கு, ஐந்து மாவட்டங்களுக்குத் தேவையான மின்சாரத்தை உடனடியாகத் தயாரிக்க முடியும்; அது ஒரு சிறப்பான திட்டம். அதற்கு ஒன்றும் பெரிய செலவு கூடத் தேவையில்லை, ஐந்து ஆண்டுகள் கழித்து அந்தத் திட்டத்தைப் போட்டால், நமது புரட்சித் தலைவி அவர்கள் நினைத்தால் ஒவ்வொரு பட்ஜெட்டிலேயும் 200 கோடி ஒதுக்கினால் போதும்.

பிற்பகல் 12-45

ஆகவே அப்படி ஒதுக்குகிற பட்ஜெட்டை வைத்து நீங்கள் திட்டத்தை நிறைவேற்றலாம். ஆகவே தான் சொல்கிறேன். பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றுவீர்களானால் கோவை மாவட்டம், பெரியார் மாவட்டம், சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் போன்ற அத்தனை மாவட்டங்களுக்கும் தேவையான மின்சாரத்தை அங்கேயே உற்பத்தி செய்து கொள்ளலாம். அது ஒரு அருமையான இயற்கையான வரப்பிரசாதம். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன் ஆகவே தான் சொல்கிறேன். மின்சார வாரியம் 700 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் ஒரு கணக்கைச் சொன்னார்கள் 700 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும்

1993 அக்டோபர் 26] [திரு. கே. பி. ராஜு]

இருண்ட வீட்டிற்கு ஒரு விளக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இருந்து கொண்டு அத்தனை பேருக்கும் வெளிச்சம் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே மின்சார வாரியத்தில் 700 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும் இலவச மின்சாரத்தை நீங்கள் கொடுத்து கொண்டிருக்கிறீர்கள். அந்த இலவச மின்சாரம் என்பது ஏழைகளுக்கு தேவைதான். ஏழை விவசாயிகளுக்கு தேவை தான். கூலி விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தேவை தான். ஆனால் கோடீஸ்வரர்களுக்கு தேவையா? ஆயிரம் ஏக்கர், இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இலவச மின்சாரம் தேவையா? 5,000 வேலி நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிற தஞ்சாவூர்காரர்களுக்கு இலவச மின்சாரம் தேவையா? இது நியாயம் தானா? ஆகவே ஏழையும் ஒரு வேளை தான் உண்கிறான் கோடீஸ்வரனும் ஒரே சாப்பாடு தான் சாப்பிடுகிறான். ஆயிரம் ஏக்கர், இரண்டாயிரம் ஏக்கர், மூவாயிரம் ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஆற்றிலேயிருந்து, கிணற்றிலேயிருந்து தனியாக மின்சாரத்தை திருடி, அவர்கள் தனியாக ஆண்டு ஒன்றுக்கு கோடிக்கணக்கான, இலட்சக்கணக்கான ரூபாய்க்கு மின்சாரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்களே, அந்த கோடீஸ்வரர்களுக்கு ஒரு கட்டுப்பாடு விதிக்க வேண்டாமா? ஆகவே அதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மின்சாரத்தைத் தாருங்கள் ஆனால் கோடீஸ்வர விவசாயிகள், ஆயிரம் ஏக்கர், இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைத் தர வேண்டுமா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே. இந்த நிதிநிலை அறிக்கையில் அருமையான ஏற்பாடுகளைச் செய்து தமிழகத்தை தொழில் மயமாக்கிக் கொண்டிருக்கிற இந்த ஆட்சியின் திட்டங்களை வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். சண்முகநாதன்.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கலந்து கொண்டு பேசுவதற்கான வாய்ப்பை அளித்து இருக்கிற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்து, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அனைத்திந்திய

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்தில் மலர்ந்த போது விவசாயிகள் பயன்பெறத்தக்க வகையில் மத்திய அரசாங்கம் சப்சிடியாக இலவச மின்சாரம் தர முடியாது என்று கைவிரித்த போதிலும், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய ஏழையெளிய விவசாயிகளை கருத்திற்கொண்டு. இன்றைக்கு கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் அளவுக்கு இலவச மின் சாரத்தை வழங்கி இருக்கிறார்கள் என்றால் எந்த அளவுக்கு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களிடத்தில் நீங் காத அன்பையும் நட்பையும் பெற்று இருக்கிறார்கள் என்பது கண்கூடு.

இன்றைக்கு இந்த மின்சார வாரியம் மிகச் சிறப்பாக மாண்பு மிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் நிர் வகிக்கப்படுகிறது என்றால் அது ஒரு மிகப் பெரிய சாதனை யாகும். இன்றைக்கு பல்வேறு திட்டங்களை மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே அளித்து இருக்கிறார்கள். நிலக்கரி என்பது அத்தியாவசியத் தேவை என்ற காரணத்தால் இன்றைக்கு நிலக்கரியை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்து மின் சாரத்தைப் பெருக்குவதில் நம்முடைய அரசாங்கம் மிகச் சிறப்பாக இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது தமிழக கத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இந்த மின்சாரத்தை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதில் அரசாங்கம் முன்னுரிமை தர வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் என்னுடைய ஆலங்குடி தொகுதியில் கிணற்றுப் பாசனத்தை நம்பி யிருக்கிற மக்கள் கிட்டத்தட்ட 400 அடி, 450 அடி ஆழ முள்ள கிணற்றிலிருந்து விவசாயம் செய்யக் கூடிய சூழ் நிலை இருக்கிற காரணத்தால், பக்கத்தில் இருக்கிற தஞ்சை மாவட்டத்தில் சிறப்பு முன்னுரிமை அளிப்பதைப் போல. புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் முன்னுரிமை அளித்து தேங்கிக் கிடக்கிற அந்த விண்ணப்பங்களுக்கு நீங்கள் அனு மதி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

பிற்பகல் 12-50

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஏழை விவசாயிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், கூடுதல் மின் இணைப்பு கேட்டு இருக்கிறார்கள். அந்த கூடுதல் மின்சாரத் தை அளிப்பதிலே காலதாமதமாகி இருக்கிற காரணத்தாலே, அங்கேயுள்ள விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு கூடுதல் மின்சாரம் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1993 அக்டோபர் 26] [திரு. எஸ். சண்முகநாதன்]

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், குறைந்த மின் அழுத்தம் இருக்கின்ற காரணத்தால், ஆங்காங்கே உள்ள மின் மோட்டார்கள் அடிக்கடி பழுதடைந்து, அங்கேயுள்ள விவசாயிகள், பாதிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே 230 கிலோ வாட் புதியதுணை மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்காக திட்டம் தீட்டப்பட்டு புதுக்கோட்டை மாவட்டம், கிள்ளனூரிலே, துவங்க இருக்கிற துணை நிலையத்தை மிக விரைவாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிப்காட் என்பது, புதுக்கோட்டை மாவட்டத்திலே மிகச் சிறப்பாக இயங்கி வந்தது. ஆனால், அங்கே உள்ள மின் சாரப் பற்றாக்குறை காரணமாக, நலிவு அடைந்திருக்கிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், புதுக்கோட்டை மாவட்டம் பயன் பெறுகிற வகையில், 230 கிலோ வாட் துணை மின் நிலையத்தை விரைவிலேயே அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்திலே ஒப்பந்த அடிப்படையிலே இருக்கிற மின்சார ஊழியர்கள், மின்சார கம்பங்களை நடுகின்றவர்கள் இன்றைக்கு மிகச் சிறப்பாக இந்த அரசாங்கத்திற்கு பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் நிரந்தரம் ஆக்கப்படாத சூழ்நிலையிலே இன்றைக்கு அரசாங்கத்திலே கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் ஆகவே, இந்த அரசாங்கம், 10, 15 ஆண்டுகாலமாக மிக் மிகச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிற ஒப்பந்தத் தொழிலாளர்களை அரசுப் பணியில் நிரந்தரமாக ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். போக்கு வரத்துக் கழகங்களிலே உள்ள தொழிலாளர்களுக்கு இருக்கக் கூடிய நன்மையைப் போல, இந்த மின்சார வாரியத்திலே பணியாற்றுகின்றவர்களும், பயன் பெறக்கூடிய வகையில் அவர்களுக்கு எல்லாம் இலவச மின்சாரம் தருவதற்கான ஒரு சிறப்புமிக்க திட்டத்தை தீட்டி, மின்சார ஊழியர்களும் பயன் பெறுகின்ற வகையில் இலவச மின்சாரம் அளிப்பதற்கான ஒரு சிறப்பான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்திலே ஒரே ஊரிலே இருக்கிற மின் மோட்டார்களை பக்கத்திலே இருக்கிற கிணறுகளுக்கு மாற்றி அமைப்பதற்கான, திட்டம் மினசார வாரியத்திலே செயல் படுத்தப்படுகின்றது. அதற்கான மனுக்களை மின்சார வாரியத்

திலே அளிக்கின்றபோது, காலதாமதம் ஆகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், இதில் ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்க்கின்ற வகையில், அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுத்து, ஏழை எளிய விவசாயிகளுக்கு வாழ்வு பெற்றுத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது கலந்து கொண்டு பேசுவதிலே நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து, இங்கே பேசுகின்றபோது, **பற்றிச் சொன்னார்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழக்கு மன்றத்திலும் சரி, தன்னுடைய

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **என்பதையே அவைக் குறிப்பிலிருந்து நீக்கி இருக்கிறேன். பிறகு **என்று சொன்னார் என்று நீங்களாக ஏன் வலியப் போய் பேசுகிறீர்கள்? அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எஸ். சண்முகநாதன்: ஆகவே, இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மக்கள் மன்றத்திற்குச் சென்ற போது, ராணிப்பேட்டையிலும் சரி, பழனி நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்கின்றபோதும் சரி, நானே இந்த அரசாங்கத்தினுடைய, என்னுடைய நிர்வாகத்தின் கீழே ஒரு நீதி விசாரணையை இட்டிருக்கிறேன், ஆகவே இரண்டு ஆண்டுக் காலம் மிக சிறப்பாக ஆட்சிசெய்து கொண்டிருக்கிற, தமிழக அரசாங்கத்திற்கும், என்னுடைய அரசாங்கத்திற்கும், நற்சான்றிதழ் வழங்குகின்ற வகையிலே நீங்கள் வாக்களிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். தமிழக மக்கள் அதிகமான வாக்கு வித்தியாசத்திலே வெற்றி பெறச் செய்து இன்றைக்கு இந்த அரசாங்கத்தினுடைய பணிகளைப் பாராட்டுகின்ற வகையிலே இந்த அரசாங்கம் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்ற வகையிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தொடர்ந்து இந்த ஆட்சியிலே அமர்ந்து நிரந்தர முதலமைச்சராக இருக்க வேண்டும் என்ற கருத்தோடு இன்றைக்கு வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய பணி தொடருவதற்கு, அவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்று, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியை மிகச் சிறப்பாக நடத்திச் செல்வதற்கு அவர்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்து, இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

பிற்பகல் 12-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்:

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1993-94ஆம் ஆண்டு நிதி நிலை விவர அறிக்கை குறித்தும், 1992-93ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு குறித்தும் நடைபெறும் விவாதத்தில் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் என்னைப் பேச அனுமதித்த தங்களுக்கும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். சம்சாரம் அது மின்சாரம் என்பர். சம்சாரம் இன்றி கூட மனிதன் வாழ்ந்து விட முடியும். ஆனால் மின்சாரம் இன்றி மனிதன் வாழ முடியாது என்கிற அளவுக்கு மின்சாரம் இன்றைக்கு நவீன வாழ்க்கைக்கு நலம் பொருந்திய வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகத் திகழ் கின்றது. மின்சாரம் தொட்டால்தான் ஷாக் அடிக்கும். அதற்கு மாறாக 1—3—1993முதல் தமிழகத்திலே உயர்த்தப் பட்ட மின் கட்டணத்தை நினைத்தாலே தமிழ்நாட்டு மக்களுக்கு ஷாக் அடிக்கிறது. நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் வீடுகளுக்கு பயன்படுத்தும் மின் கட்டணம் உயர்த்தப் பட்டதாலே மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மின்சாரம் இன்றியமையாத ஒன்று என்ற காரணத்தால் மின் கட்டணத்தை எவ்வளவு உயர்த்தினாலும் மக்கள் கட்டி விடுவார்கள் என்ற எதிர்பார்ப்போடு அரசு கட்டணத்தை உயர்த்தியதோ என்ற எண்ணம் தோன்றுகிறது. மின் கட்டணத்தை, விலை வாசியை அரசு குறைக்குமோ என்ற ஏக்கத்தோடு வாக்களித்த மக்களுக்கு இது ஒரு பெருத்த ஏமாற்றம். கரண்ட் பில் வந்தவுடன் காதில் மூக்கில் உள்ள நகைகளை அடகு வைத்து, அல்லது கடன் வாங்கி கரண்ட் பில் கட்ட வேண்டிய நிலை பல குடும்பங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அரசு இழப்பை ஈடு செய்வதாகச் சொல்லி, மின் கட்டணத்தை உயர்த்தியது, ஏழை எளிய மக்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது. எனவே அரசு இதைக் கருத்தில் கொண்டு வீடுகளுக்கான மின் கட்டணத்தை உடனே குறைக்க வேண்டும். ஏழை எளிய மக்களை ஷாக்கிலிருந்து மீட்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாடு சுதந்திரம் அடைந்து 46 ஆண்டுகள் ஆகியும், இன்னும் பல நகரங்கள், ஊர்கள், இரவில் இருளிலே மூழ்கிக் கிடப்பதை எண்ணும்போது, இருளைப் பயன்படுத்தி, பல கொள்ளைக் குற்றங்கள், விபத்துக்கள் நடப்பதை நினைக்கும் போது, மிகவும் வருத்தமாக உள்ளது. குறிப்பாக வேலூர் நகராட்சியை எடுத்துக் கொண்டால், பல பகுதிகளிலே 'லோ வோல்டேஜ்'

கரண்ட் ஏற்பட்டு அதனால் தெரு விளக்குகள் ஏரிவதில்லை. தெரு விளக்குகள் பல சமயங்களிலே ஃபியூஸ் போகின்றன. மின் மோட்டார்களிலே காயில் போகின்றன. நகராட்சிகளுக்குச் சொந்தமான பல மோட்டார்களிலே கூட காயில் போய், ஓடவில்லை. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னாலே கரன்ட் கம்பங்களிலே போட்ட பிட்டிங்ஸ் தேய்ந்து துருப் பிடித்து, ஜம்பர் கட்டாகி, தெரு விளக்குகள் எரிவதில்லை. தேவையான சாமான்களை நகராட்சியினர் வாங்கி வைத்துக் கொண்டு, மின் வாரியத்தினர் அழைக்கும்போது அவர்கள் உடனே வருவதில்லை. இந்த இரு துறையினருக்கும் சரியான ''கோ-ஆர்டினேஸன்'' இல்லாத காரணத்தினால் உடனே லைட்டுகளை தெருக்களிலே எரிய வைக்க முடியவில்லை. புதிதாக வாங்கிப் போடும் பல்புகள் 2, 3 நாட்களிலே பியூஸ் போய் விடுகின்றன. கேட்டால் நகராட்சியினர் ''லோ வோல்டேஜ்'' தான் காரணம் என்கிறார்கள். மின் வாரியத்தினரைக் கேட்டால் மட்டமான பல்புகள் என்கிறார்கள். எனவே, நடுவில் வீண் விரயமாவது மக்கள் வரிப்பணம். அரசு இதைத் தவிர்க்க தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பை தமிழகம் முழுவதும் மின் வாரியமே ஏற்க வேண்டும் என்று உடனே உத்தரவிட வேண்டும். லோ வோல்டேஜைத் தவிர்க்க, புதிய துணை மின் நிலையங்கள், டிரான்ஸ்பார்மர்களை மின் வாரியம், தேவைப் படும் இடங்களிலே பொருத்த வேண்டும். தேய்ந்து போன துருப் பிடித்த பிட்டிங்ஸ்களை மின் வாரியம் உடனே மாற்றவேண்டும். இரவில் எல்லா நகராட்சிகளிலும், ஊராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் உள்ள எல்லா தெரு விளக்குக் கம்பங்களிலும் தவறாமல் தெரு விளக்குகள் எரிய அரசு வழி வகை செய்ய வேண்டும். தெரு விளக்குகள் எரியவில்லையென்றால் சம்பந்தப்பட்ட நகராட்சி மின் வாரிய ஊழியர்களை வேலை நீக்கம் செய்ய உத்தரவிட வேண்டும். புதிய மின் இணைப்பு கோருகின்றபோது, மின் வாரியத்தில் மீட்டர் இல்லை என்று கூறுகிறார்கள். வேலூர் சத்துவாச்சாரியில் என் வீட்டிற்கு கரன்ட் சப்ளையாகும் மின் கம்பத்தில் கூட பியூஸ் கேரியர் ஸ்டாக் இல்லாத காரணத்தினாலே டைரக்டாக கம்பியில் இணைத்துள்ளார்கள். கம்பி தேய்ந்து விடுவதால் காற்று அடித்தால், காற்றின் சுழற்சிக்குத் தக்கவாறு விட்டு விட்டு கரண்ட் வருகிறது. இதுபோன்று பல வீடுகளுக்கு கம்பத்தில் பியூஸ் கேரியர் இல்லாமல் ''த்ரூ லைனில் கனெக்ஷன்'' வைத்திருக்கின்ற காரணத்தினால் இன்றைக்கு கரன்ட் சீராக விநியோகம் ஆகவில்லை. அதனால், பல வீடுகளில் அடிக்கடி லைட் பியூஸ் போகின்றன. டி.வி., ரேடியோ, மோட்டார் போன்ற பொருட்கள் எல்லாம் பழுதாகின்றன. பொது மக்களின் டி.வி., ரேடியோ, பம்ப் செட் மோட்டார்களை பழுதாகா வண்ணம் ஒரே சீராக கரண்டை மின் வாரியம் வழங்க ஆவன செய்தல் வேண்டும். போதிய மீட்டர்களை மின் வாரியமே இல்லையென்று கூறாமல் சப்ளை செய்யவேண்டும். தப்பித்தவறி எல்லாம்

பிற்பகல் 1—00

சரியாக அமைந்து, தெரு விளக்குகள் சரியாக எரியும் நிலையை அடைகின்றபோது உள்ளாட்சித் துறையினர் கரண்ட் பில் கட்டவில்லை என்று மின் வாரியம் பல ஊர்களில் எல்லாம் பியூஸ் பிடுங்கி விடுகிறார்கள். அரசின் இரு துறைகள் மோதுவதால் இருளில் சிக்கித் தவிப்பவர்கள் அப்பாவி மக்கள் என்பதை அரசு கவனத்திலே கொள்ள வேண்டும். பல நாட்களிலே வசூலாகும் வரிப் பணம் சம்பளத்திற்கே போதுவதில்லை. அதனால் அவர்கள் கரன்ட் பில் கட்ட கால தாமதம் ஆகின்றபோது, பியூஸ் பிடுங்கி விடுவதால், குடிநீர் சப்ளை இல்லாமல்கூட, மக்கள் அவதியுறுகின்ற அவலநிலை தமிழகத்திலே பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. கரன்ட் பில்லை உள்ளாட்சி கட்டாததால் பியூஸ் பிடுங்கும் போக்கை மின் வாரியம் உடனே தவிர்த்தாக வேண்டும். மின் கட்டணத்தைத் தவறாமல் கட்டி விடவேண்டும் என்று அரசு கடுமையான உத்தரவுகளை வேண்டுமானால் உள்ளாட்சித் துறை ஆணையருக்கு வழங்க வேண்டும். இல்லையென்றால், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவது போல், சம்பளம் கொடுக்க முடியாமல் திண்டாடும் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளுக்கும் இலவச மின்சாரத்தை உடனே வழங்க உத்தரவிடவேண்டுமென்று நான் அவையின் சார்பாக கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1993—94ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அரசு, தமிழகம் மின் வெட்டிலிருந்து அறவே விடுபட்ட மாநிலமாகத் திகழ்கிறது என்று அறிவித்திருக்கிறது. ஆனால், எங்கள் வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம் முதல் குமரி மாவட்டம் வரை பல மாவட்டங்களிலே அடிக்கடி மின் வெட்டு இருக்கிறதே, அது ஏன் என்று எங்களுக்கே புரியவில்லை. அரசு தொடர்ந்து கொடுக்கும்மின்சாரத்தை நடுவிலேவெட்டுவது யார்என்று தெரிந்தாக வேண்டும். அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்று அதிகாரிகள் மின்சாரத்தை வெட்டிவிடுகிறார்களா ? வேலூர் அரசு மருத்துவ மனையிலேகூட மின் வெட்டு ஏற்படுவதால் ஆப்பரேஷன் செய்யும்போது மருத்துவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். பெண் நோயாளிகள் பலர் பல மணி நேரம் இருளிலே சிக்கித் தவிக்கின்றார்கள்.

பல ஊர்களிலே இன்று குடிதண்ணீர் சப்ளை கூட செய்ய மோட்டார் ஓட்டுகின்ற நிலை இல்லை. மின் வெட்டு எப்பொழுது ஏற்படும் என்று தெரியாத காரணத்தினாலே எச்சரிக்கையோடு இருக்க முடிவது இல்லை. மின்வெட்டை உருவாக்கும் அதிகாரிகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இருளிலே மக்களை மூழ்கடிக்கும் நிலை மாற வேண்டும். இருளிலே தான் குற்றங்கள் பெருகுகின்றன என்ற உண்மையை அரசு உணர்ந்து இரவு நேரங்களிலே தெரு விளக்குகள் தவறாமல் எரிய ஆணைகள் பிறப்பிக்க வேண்டும்.

[திரு. சி. ஞானசேகரன்] [1993 அக்டோபர் 26

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1,37,280 தெரு விளக்குகள் பொருத்தப் போவதாக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. பல ஊராட்சி, நகராட்சிகளிலெல்லாம் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பணம் செலுத்திய சில பேருக்கு மின் இணைப்புத் தரப்பட வில்லை. தன்னிறைவுத் திட்டத்திற்கான தொகையும் அதிகமாக உள்ளதால் நடுத்தர விவசாயிகள் அதைக் கட்டி மின் இணைப்பு பெற முடியாமல் தவிக்கின்றார்கள். அதற்கான தொகையைப் பாதியாகக் குறைத்தால் விவசாயிகள் இன்று அந்தத் திட்டத்தின் கீழ் மின் விசையைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ள முடியும்.

மின் வாரியத்தில் சில பேர் மட்டுமே வேலைக்கு அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, பல ஆண்டுகளாக பணிபுரிந்து வந்த தொழிலாளர்கள், தங்களுக்கு நிரந்தரப் பணி வேண்டும் என்று போராடி வருகிறார்கள். அவர்களை மின் வாரியம் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்க வேண்டும்.

மின் வாரியத்திலே விளையாட்டுத் துறைக்கு இயக்குநராக யாரும் நியமிக்கப்படவில்லை. சிறப்பாக பல ஆண்டுகளாகப் பணியாற்றி, விளையாட்டுத் துறையிலும் சாதனை படைத்து வரும் டெபுடி டைரக்டராக இருக்கக் கூடியவரை அரசு மின் வாரியத்திற்கு டைரக்டராக நியமிப்பதற்கான உத்தரவைப் பிறப் பிக்க வேண்டும்.

மின்சாரத் தடை ஏற்படுகிறபோது மின் வாரிய அலுவலகத்தில் உள்ள போனை, பொது மக்கள் கேள்விக்கு பதில் சொல்ல மனம் இல்லாமல் ரிசிவரை ஆஃப் செய்து விடுகிறார்கள். ஏன் கரண்ட் கட் ஆனது என்று எப்போதாவது மக்கள் அறிய விரும்பினாலும் கூட அந்த அலுவலகத்தோடு தொடர்பு கொள்ள முடியவில்லை. இரவு நேரத்திலே பியூஸ் போனாலும், பியூஸ் போட பணியாளர் கள் வருவதே இல்லை. இப்படி கடமையை ஆற்றத் தவறும் பணியாளர்கள் மீது மின்சார வாரியம் கடுமையான நடவடிக் கையை எடுத்து, பொது மக்களுக்கு உரிய நேரத்தில் உரிய மின் வசதியை செய்து தரவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்த அரசு பல சாதனைகளைச் செய்ததாக எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன் னார்கள். இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே எங் காவது அணை கட்டி இருக்கிறதா என்ற மாபெரும் கேள்வியை நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அணைகள் இருந்தால் தான்........(குறுக்கீடு).

1993 அக்டோபர் 26] [திரு. சி. ஞானசேகரன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பொதுப் பணித்துறை மானியத்தின் மீது பேசுகிறாரா அல்லது மின்சார வாரிய நிதிநிலை விவாதத்தின் மீது பேசுகிறாரா என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் இது வரையில் பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சொன்னார். நான் எழுந்து குறுக்கிட்டு பல்வேறு விளக்கங்களைத் தந்திருக்க முடியும். ஆனால், வீணான கால தாமதத்தைத் தவிர்ப்பதற்காக பதிலுரையிலே சொல்லலாம் என்றிருந்தேன். ஆகவே, சம்பந்தப்பட்ட சப்ஜெக்ட்டை விட்டுவிட்டுப் பேச வேண்டாம். அவர் படித்த வழக்கறிஞர். வேறு துறைகளுக்குச் செல்ல வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காலத்தை வீணாக்காமல் உரிய விவரங்களை அவர் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவற்றை நான் நீர்ப்பாசன விவாதத்தின்போது குறிப்பிட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், இங்கே நீர்ப்பாசனமும் மின்சாரமும் இரண்டறக் கலந்திருக்கிற காரணத்தினாலேதான் இங்கே அணையைப் பற்றி நான் பேச வேண்டியிருக்கிறது. நீங்கள் அனல் மின் உற்பத்திக்காக பல கோடி ரூபாய் நிலக்கரியை இறக்குமதி செய்திருக்கிறீர்கள். அதற்கு மாறாக இயற்கையாகக் கிடைக்கக் கூடிய நீர் வளத்தை வைத்துக்கொண்டு புனல் மின் திட்டத்தின் வாயிலாக மின்சாரத்தை தமிழக மக்களுக்கு வழங்க முடியும். அதற்காக நீங்கள் அணை கட்டுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். எங்கள் மாவட்டத்திலே கூட ராஜாத் தோப்பு அணை மற்றும் மோர்தானா அணைகளைக் கட்டுவதற்காக, முயற்சிகள் எடுக்கப்பட்டு வேலைகள் மிகத் தொய்வாக நடந்து வருகின்றன. அதை நீங்கள் உடனடியாக முடிக்க வேண்டும். ஒகேனக்கல்லிலே, தர்மபுரி மாவட்டத்திலே கூட நீங்கள் ஒரு அணையை கட்டுவீர்களேயானால் நிச்சயமாக நமக்கு அதிகமாக மின்சாரம் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அணைகள் அதிகமாக இருந்தால் தாராளமாக மின்சாரம் கிடைக்கும். சட்டியிலே இருந்தால்தானே அகப்பையிலே வரும் என்பார்கள். அணை இங்கே சட்டியாகவும் மின்சாரம் அகப்பையாகவும் பயன்படுகிற காரணத்தாலேதான், அதை இரண்டையும் கலந்து பேசுகிற

கட்டாயத்திற்கு நான் ஆளாக்கப்பட்டிருக்கிறேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அணைகளைக் கட்டி விரைவிலே மிகுந்த மின்சாரத்தைக் குறைந்த செலவிலே தமிழக மக்களுக்கு அளிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன் :

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஒகேனக்கல்லிலே ஒரு அணையைக் கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். காவிரியிலிருந்து தண்ணீரே அவர்கள் விடுவது இல்லை. எனவே, அணையைக் கட்ட வேண்டிய பிரச்சினையே எழவில்லை. அதற்கு மத்திய அரசு, மாநில அரசு மற்றும் பல்வேறு பக்கத்திலே உள்ள அரசுகளும் தான் இதற்கு ஒப்புதல் கொடுக்க வேண்டும் என்பதை உறுப்பினர் அவர்கள் தெரியாமல் தவறான தகவல்களை அவைக்குத் தருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கேயும் ஒரு அணையைக் கட்டுங்கள் என்று இவர் சொல்லியிருக்கிறார். அதற்கு இப்போது தண்ணீரே இல்லை என்பதாக இவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) மேட்டூருக்கே தண்ணீர் பற்றவில்லை. இன்னொரு அணைக்கு எங்கே போவது என்றுதான் அவர் கேட்கிறாரே தவிர வேறு ஒன்றும் குற்றச்சாட்டு அல்ல. திரு. ம. தனபால்.

பிற்பகல் 1-05

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத நிலையிலே ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் பல்வேறு துறைகளிலே இன்றைக்கு பல்வேறு வகையிலே சாதனை படைத்துக்கொண்டிருக்கிறார்கள். சாதனைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறதே, மக்களுடைய செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறதே, நம்முடைய இயக்கம் இந்த தமிழகத்திலே டெப்பாசிட் இழந்துக் கொண்டிருக்கிறதே, இப்படிப்பட்ட ஒரு நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறதே என்ற ஒரு ஷாக் அடித்துக் கொண்டிருப்பதால்தான் ஷாக்கைப்பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஏங்கள் ஆட்சியில், இதய

சத்தியமேவ ஜயதே LEGISLATIVE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தெய்வம், தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில், இன்றைக்கு மின்சாரத் துறையை எடுத்துக்கொள்கின்றபோது பல்வேறு சாதனைகளைப் படைத்து இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் பல்வேறு வகைகளில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான சாதனையைப் படைத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பு ஏற்கின்றபோது இந்த தமிழகத்தினுடைய நிலைமை மின்சாரத் துறையில் எப்படி இருந்தது என்பது நமக்கு எல்லாம் தெரியும். மின்வெட்டு அதிகரித்துக் கொண்டிருந்த நிலைமை 30 சதவீதம், 40 சதவீதம் வரை மின்சார வெட்டு இந்த தமிழகத்தில் இருந்த நிலைமையை மாற்றி இன்றைக்கு மின்சார வெட்டு என்ற பேச்சிற்கே இடம் இல்லாத வகையில் ஆட்சி நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வகையில் இந்த அரசு சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

இந்தத் தமிழகத்திலே தமிழகம் முழுவதும் மின்சார வெட்டு ஏற்பட்ட போதுகூட, அண்டை மாநிலத்திலே கூட மின்சார வெட்டு ஏற்பட்ட போதுகூட நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறையிலே தன்னுடைய சிந்தனையைச் செயல்படுத்தி, தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அன்றைக்கு உடனடியாக இரவு 12 மணிக்கு இந்த நாட்டிலே மின்சாரத்தை உருவாக்கித் தந்தார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. இன்றைக்கு மின்சாரத் துறையில் பல்வேறு வகையில் உற்பத்தியை இந்த அரசு பெருக்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஜெயங்கொண்டம் மின்சாரத் திட்டம் 7,000 கோடி ரூபாயில் உருவாக்கி, இந்தத் தமிழகத்திலே மின்சார வெட்டு இல்லை என்ற ஒரு நிலைமையை உருவாக்குகின்ற வகையில் இன்றைக்கு இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் பார்க்கின்றபோது இன்றைக்கு, இந்தத் தமிழகத்தில் தூத்துக்குடி மின்சார நிலையம் ஏழாவது முறையாக பரிசு பெறுகின்ற ஒரு நிலைமை உருவாகியிருக்கிறது.

அதே போன்று மேட்டூர் அனல் மின் நிலையம் கூட இன்றைக்கு முதல் பரிசு பெறுகின்ற ஒரு நிலைமையை இந்தத் தமிழகம் பெற்றிருக்கிறது. இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது தமிழகம் மின்சாரத் துறையில் எந்த அளவிற்கு சரித்திரம் படைத்திருக்கிறது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். அந்த வகையிலே தான், இன்றைக்கு ஏழைகளுக்காக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற இந்த அரசு கிட்டத்தட்ட 65 கோடி ரூபாய் அளவுக்கு மின்சாரத் துறையிலே இலவச மின்சாரத்தை இன்றைக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. அத்தகைய ஒரு சாதனையைப் படைத்துக் கொண்டிருக்

கிறது. மத்திய அரசு கூட பல்வேறு வகையிலே அறிவுறுத்திக் கொண்டிருக்கிறது. பல்வேறு வகைகளிலே இந்த இலவச மின் சாரத்தை நீங்கள் கொடுக்கக் கூடாது என்று தடை பிறப்பித்து கொண்டிருக்கிறது என்பதை இந்த மக்கள் மறந்துவிட முடியாது. அந்த வகையில் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் மத்திய அரசு கேட்கின்ற கேள்விகளைக் கூட பொருட்படுத்தாமல் இந்தத் தமிழகம் இன்றைக்கு 65 கோடி ரூபாய் அளவுக்கு இலவச மின்சாரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

தொழில் துறையை ஒளிமயமாக்கிக் கொண்டிருக்கின்ற இந்த தமிழக அரசு இன்றைக்கு தொழில் துறையிலே புதிய தொழிலைத் தொடங்குவதற்குக் கூட அவர்களுக்கு மின்சாரக் கட்டணத்திலே சலுகை கொடுக்கின்ற ஒரு நிலைமையை உருவாக்கி இன்றைக்கு சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கிறது. பல்வேறு வகையில் சாதனை படைத்துக் கொண்டிருக்கின்ற எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மின்சாரத் துறை ஒரு ஒளி மயமானத் துறையாக இந்த தமிழகத்திலே வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற துறையாக விளங்கிக்கொண்டிருக்கிறது. ஏழை எளியவர்களுடைய குடும்பங் களிலே வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற ஒரு துறையாக இந்தத் துறை இன்றைக்கு செயல்பட்டுக்கொண்டிருக் கிறது என்பதை நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். அந்த வகையில் சில கோரிக்கைகளை இந்த நேரத் திலே, இந்தத் சந்தர்ப்பத்திலே எடுத்து வைக்க விழைகிறேன். புதிய தெரு விளக்குகளை பொருத்துவதற்காக அந்தந்த ஊராட்சி யிலே தீர்மானங்கள் போடுகின்ற போது, அந்தத் தீர்மானங்களை போட்டு அனுப்புகின்றபோது அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து முதற் பணியாக அந்த தெரு விளக்குகளை உடனடியாக பொருத்து வதற்கு அனுமதி அளிக்க மின்சாரத் துறை ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத் திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோல் தெரு விளக்குகளை ஊராட்சி மன்றங்கள் பராமரிக்கின்றன. ஆனால் தெரு விளக்குகளைப் பொருத்து வதற்கு அந்தந்த ஊராட்சி மன்றங்களின் நிதியிலிருந்து வழங்க வேண்டுமென்ற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. அப்படி இருக்கின்றபோது மின்சாரத் துறை இவற்றிற்கு உதவும் வகை யில் மின்சார வாரியத்தின் மூலம் லைன்மேன்களை அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்கு நியமித்துத் தர வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல் தாம்பரம் கோட்டத்தில் இருக்கின்ற மேடவாக்கம் பிரிவில் இருக்கின்ற நத்தஞ்சேரி, மேடவாக்கம் ஆகிய இரண்டு பகுதிகளில் மின் அழுத்தம் மிகவும் குறைவாக இருப்பதால் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களால் தெரு விளக்குகள் எரிய விட முடியாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை நான் அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்த நேரத்தில் நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நேரிடையாகச் சொன்னாலே அவர்கள் நேரடியாக தொலைபேசி மூலம் அதிகாரிகளைத் தொடர்புகொண்டு அந்தச் செயலை உடனுக்குடன் செய்கின்ற ஆற்றல் படைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களை நாம் பெற்றிருக்கிறோம். அந்த வகையில் மக்களுக்கு உணர்த்த வேண்டும்; நாங்கள் செய்கின்றோம். நாங்கள் கேட்கின்றோம் என்பதை மக்களுக்கு உணர்த்தவேண்டும் என்பதற்காக இந்த நேரத்தில் நான் இவற்றை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற வண்டலூர், மண்ணிவாக்கம் பகுதிகளில் இருக்கின்ற பல்வேறு நகர்ப் பகுதிகளில் இதுபோன்ற மின் அழுத்தம் இருக்கிறது. அங்கெல்லாம் புதிய டிரான்ஸ்பார்மர்களை அமைத்துத் தர இந்த நேரத்தில் ஆவன செய்யவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இன்னொரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். 20, 30 ஆண்டு காலமாக குடியிருந்து கொண்டிருப்பவர்கள் தாசில்தார் மூலம் என். ஓ. சி. பெற்று விடுகிறார்கள். அப்படி என்.ஓ.சி. பெற்றவர்களுக்கு மின்சாரம் கிடைக்கின்ற வகையில் அரசு ஆவன செய்யவேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் வைத்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன் நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு

*திரு எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒரு மாநிலத்தின் வளர்ச்சி, குறிப்பாக தொழில் துறையின் வளர்ச்சி, விவசாய உற்பத்தி, மக்களின் அன்றாட வாழ்வு. இவை அனைத்தும் மின்சார உற்பத்தி சீரான வினியோகம் ஆகியவற்றைப் பொருத்தே இருக்கிறது. இந்த மின்சார வாரிய பட்ஜெட்டின் மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்கின்ற வாய்ப்புப் பெற்றதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

1991–92-ல் வருவாய் இன வரவுகள் 2027 கோடி ரூபாய்; வருவாய் இனச் செலவுகள் 1774 கோடி ரூபாய். இதிலே ஏறக்குறைய 250 கோடி ரூபாய்க்கு வருவாய் இனத்தில் வரவு அதிகமாக இருந்த நிலை மாறி 1992–93ல் வருவாய் இனச்செலவுகள் 2,500 கோடி ரூபாயாகவும் .வருவாய் இன வரவுகள் 2,067 கோடி ரூபாயாகவும், இடைவெளி சுமார் 450 கோடி ரூபாயாகவும் ஆகியிருக்கிறது. 1993–94ல் வருவாய் இனச்செலவுகள் ஏறக்குறைய 3,030 கோடி ரூபாயாகவும், வரவு 2,173 கோடி ரூபாயாகவும் ஏற்படப்போகிற பற்றாக்குறை ஏறக்குறைய 857 கோடி ரூபாயாகவும் உள்ளது. இதிலே ஆண்டுதோறும் அரசு வழங்கி வருகிற உதவித் தொகை 350 கோடி ரூபாய் போக மீதம் பற்றாக்குறை சுமார் 507 கோடி ரூபாயாகவும் இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1—3—1993-க்கு பின்னால் மின்சாரக் கட்டணம் பெரிய அளவில் தமிழகத்தில் உயர்த்தப்பட்டுள்ளது. அது நேரிடையாக அறிவிக்கப்பட்டு பொது மக்களுக்குத் தெரிகிற விதத்தில் உயர்த்தப்படவில்லை என்றாலும் 1—3—1993-க்கு பின்னர் ஏறக்குறைய 325 கோடி ரூபாய் அளவுக்கு மின் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது பொதுமக்கள் பாதிக்கப்படும் அளவுக்கு இருந்தும் கூட பற்றாக்குறை. இந்த மின்கட்டண உயர்வுகளுக்குப் பின்னாலேகூட பற்றாக்குறை சுமார் 150 கோடியாக இருக்கும். அதை மின்வாரியம் எப்படி சரிக்கட்டப் போகிறது என்று தெரியாது. அதுபற்றி எந்தக் குறிப்புகளும் இல்லை. இதிலே மின் விநியோகத்தைப் பொறுத்தவரை மின் கம்பித் தொடரில் ஏற்படும் இழப்புகள் ஏறக்குறைய 17.5 சதவீதமாக இருக்கிறது இது அனைத்திந்திய அளவிலே பார்த்தால் சற்றுக் குறைவு என்றாலும்கூட இன்னும் இந்த இழப்புக்கள் குறைக்கப்படுவதன் மூலம் மின்சார வாரியத்திற்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தைக் குறைக்க முடியும். அதிலே மின்சார வாரியம் அதிகமான கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

அதுபோல பெரிய தொழிற்சாலைகளிலேயிருந்து அரசுக்கு வரவேண்டிய, மின்சார இலாகாவிற்கு வரவேண்டிய பாக்கிகளை அரசு அல்லது மின்சார வாரியம் அதிகக் கவனம் எடுத்து, சிறிய தொழிலதிபர்கள், சிறிய தொழிற்கூடங்களுக்கு இடையூறு தருவதற்குப் பதிலாக, பெருமளவிலே பலகோடி ரூபாய் பாக்கி வரவேண்டிய தொழிலதிபர்களிடத்திலே வசூலிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மின் தேவையினுடைய அளவு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறக்குறைய 1351 மெகாவாட்டாக இருக்கும், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அதாவது 2002இல் ஏறக்குறைய 7,230 மெகாவாட். பத்தாவது ஐந்தாண்டுத்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திட்டத்தில் சுமார் 10 ஆயிரம் மெகாவாட் தேவைப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு தனியார் துறைக்கு, இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னாலே அதிகமான முக்கியத்துவமும் சலுகையும் அளிக்கப்பட்டு வருகிறது ஏறக்குறைய நான்கு திட்டங்களில் மட்டும் சுமார் 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் ஏறக்குறைய 3,050 மெகா வாட் உற்பத்திச் செய்யக்கூடிய அளவிற்கு தனியார்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது இதிலே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல அந்தத் தனியார்கள் யார் யார் என்கிற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். இது ஒன்று.

இரண்டாவது. நீங்கள் அறிவித்து இருப்பதைப் போலவே ஏறக்குறைய ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று வைத்துக் கொண்டால். அதாவது 2002 இலே நீங்கள் அறிவித்திருககிற திட்டங்கள்கூட இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ வருவதற்கு வாய்ப்பு இல்லை இன்னும் படிப்படியாக ஏழு ஆண்டுகள். எட்டு ஆண்டுகள் ஆகலாம் அல்லது 2002-இலே நீங்கள் அந்தத் திட்டங்களை. தனியார் திட்டங்கள் நிறை வேற்றப்படும் என்று எடுத்துக்கொண்டாலும்கூட அப்போதைய தேவை அல்லது உற்பத்தி 7,230 மெகாவாட் என்று எடுத்துக் கொண்டால் இதிலே தனியாருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற உற் பத்திக்கான அளவு ஏறக்குறைய பாதிக்கு வருகிறது. இன்னும் இரண்டு மூன்று திட்டங்களைக் கூட தனியாருக்கு விடுவதற்கு யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிலே கூறப்பட் டிருக்கிறது அதாவது ஏறக்குறைய 1,570 மெகா வாட் உற்பத்தி அளவிற்கு இன்னமும் சில திட்டங்களை தனியாருக்கு நாங்கள் வழங்க இருக்கிறோம் என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். அப்படிப் பார்த்தால் ஏறக்குடைய 7000 மெகாவாட் 2002 இலே உற்பத்தியாகும் என்று சொன்னால் அதிலே ஏறக்குறைய 60 சதவீதம், சொல்லப்போனால் ஏறக்குறைய 4600 மெகாவாட் அளவிற்கு தனியாரின் உற்பத்தியை தமிழகம் நம்பியிருக்கவேண் டிய அந்தச் சூழ்நிலை உருவாகும் இந்தப் போக்கு நல்லதல்ல தனியாரை ஓரளவிற்குஉற்சாகப்படுத்த வேண்டியதுதான். ஆனால் எந்தெந்தத் துறைகளிலே அவர்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். உற்சாகப்படுத்த வேண்டும் என்பதைக் கணக்கு பார்த்து அரசாங்கம் தனியார்களுக்கு சலுகைகளோ அல்லது வாய்ப்புகளோ தர வேண்டும் மின் உற்பத்தியைப் பொறுத்த வரை ஏறக்குறைய 60 சதவீத மின் உற்பத்தியைத் தனியார் களுக்கு தருகின்ற அந்தப் போக்கு நல்லது அல்ல. ஏனென்றால் தமிழகம் தனியாரை, அவர்களின் உற்பத்தியை வருங்காலத் திலே நம்பி இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

மேலும், ஒரு மெகாவாட் உற்பத்திக்கு ஏறக்குறைய 3 கோடி ரூபாய் ஆகும் என்று நீங்கள் கணக்கு சொல்லுகிறீர்கள். டோட்டல் இன்வஸ்ட்மெண்ட், ஒரு மெகா வாட் உற்பத்தியாவதற்கு 3 கோடி ரூபாய் என்று நீங்களே அரசுக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். ஆனால் ஜெயங்கொண்டத்திலே 1,500 மெகா வாட் உற்பத்திச் செய்யக்கூடிய அந்தத் திட்டத்திற்கு 7,000 கோடி ரூபாய் முதலீடு என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அரசாங்கத்தினுடைய கணக்குப்படியே பார்த்தால்கூட ஏறக்குறைய 4,500 கோடி ரூபாய்தான் வரவேண்டும். ஆனால், தனியாருக்குத் தரப்படுகிற அந்த மின் உற்பத்தி நிலையத்திற்கு 7000 கோடி ரூபாய் என்று சொன்னால் ஏறக்குறைய இந்த அரசாங்கக் கணக்குப்படியே....

பிற்பகல் 1-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பல்வேறு விவரங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் அவைகளுக்கெல்லாம் நாளை பதிலுரையிலே நல்ல விளக்கங்களைச் சொல்லலாம் என்று நினைத்த நேரத்தில், ஒரு மிகப்பெரிய சந்தேகத்தை அவர்கள் கிளப்புகின்றதாலே இதற்கு மட்டும் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜெயங்கொண்டத்திலே ஏற்படுத்தப்பட இருக்கின்ற அந்த மின் திட்டம், அங்கே இருக்கின்ற பழுப்பு நிலக்கரியை எடுத்து (Lignite Based Project) அதற்கும் சேர்த்து, சுரங்கத்தைத் தோண்டுகின்ற பணி. வெறும் நம்முடைய தெர்மல் ஸ்டேஷனை நிறுவும் பணி மாத்திரமல்ல; சுரங்கங்களை தோண்டுகின்ற பணிக்கும், அதற்கான இடங்கள், ஆக அந்த மொத்தச் செலவுகளைச் சேர்த்துத்தான் 7500 கோடியே தவிர சுரங்கம் தோண்டுகின்ற பணிக்கு இது போக 3 கோடி என்றால், ஒரு மெகாவாட்டுக்கு 3 கோடி என்றால், அந்த அளவுதான் என்றால் 4,500 கோடி வரும். மீதம் இருக்கின்ற 3,000 கோடி ரூபாய் சுரங்கம் தோண்டுகின்ற பணிக்குள்ள மதிப்பீடு என்பதை உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பக்கம் 9-இல் ''புதிதாக ஒரு மெகாவாட் மின் உற்பத்தித் திறனுக்கான மின் உற்பத்தி சாதனங்களை நிறுவ, சராசரியாக சுமார் ரு. 3 கோடி முதலீடு தேவைப்படுகிறது'' என்று இருக்கிறது.

அதுபோல, கடலூர் அனல் மின்திட்டம்; அதற்கு 1000 மெகாவாட், 3,000 கோடி. அதுபோல பழுப்பு நிலக்கரி மின் திட்டம், திருமுட்டம். 250 மெகாவாட், ஏறக்குறைய 800 கோடி.

இதைப்போலவே நீங்கள் கணக்கிட்டுப் பார்த்தால் இந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறது என்பதற்காகத்தான் இதை நான் சுட்டிக்காட்டினேன்.

இன்னொன்று, சென்ற தடவைஇதுகுறித்து சட்டமன்றத்திலே விவாதம் நடந்தபொழுது ஜெயங்கொண்டத்திலே கொடுக்கப் படுகிற தனியாருக்கு வழங்கப்படுகிற இந்தத் திட்டம் ஜாயின்ட் செக்டாரிலே இருக்கும், கூட்டுத் துறையிலே இருக்கும், தனி யாருக்கு விடப்படாது என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே வாக்குறுதி தந்தார்கள். ஆனால் நீங்கள் இன்றைக்குப் பார்க்கின்றபொழுது இந்த எல்லாத் திட்ட டங்களுமே தனியார் துறையிடம் ஒப்படைக்கப்படுகிறது என்று இருக்கிறது. வழங்கப்படுகிற இந்தத் திட்டங்கள் எல்லாம் முழுமை யாகத் தனியார் துறைக்கு விடப்படுகிறதா அல்லது அரசும் சேர்ந்து ஜாயின்ட் செக்டாரிலே கூட்டுத் துறையிலே துவங்கப் படுகிறதா என்பதற்கான விளக்கங்களையும் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆக மொத்தத்தில், மின்சார உற்பத்தியைப் பொறுத்த வரையில், இதிலே தனியாருக்கு அதிகமான ஒதுக்கீடுகள் அல்லது அனுமதிகள் வழங்கக் கூடாது என்பது என்னுடைய அபிப்பிராய மாகும். ஏனென்றால் இதிலே அவர்கள் அதிகமான தொகையை ஒன்றும் முதலீடு செய்து விடப் போவதில்லை. எந்தத் தனி யாருக்குக் கொடுத்தாலும் அவர்கள் அந்த இடத்தினுடைய மதிப்பு, இயந்திரங்களினுடைய விலை, இவற்றையெல்லாம் கூட்டி ஒட்டுமொத்தமாக நீங்கள் பார்த்தால் 7,000 கோடிக்குத் தொழில் துவங்கப்போகிற அந்த முதலாளி மொத்தத்திலே 70 கோடி முதலீடு செய்வாரா என்பதே சந்தேகத்திற்குரியதுதான்.

அதுபோல 1,000 கோடியிலே தொழில் துவங்கப்போகிற அந்த முதலாளி மொத்தத்திலே ஒரு 50 கோடி அவர் கையிலே யிருந்து முதலீடு செய்வாரா என்பதும் சந்தேகம்தான். (மணி யடிக்கப்பெற்றது.) இன்னும் பேசவே இல்லையே. இப்பொழுது தான் ஆரம்பித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 11 நிமிடம் ஆயிற்று.

திரு. எஸ். திருநாவுக்கரசு : இன்னும் இரண்டு நிமிஷங்கள். ஆக, இதிலே பல்வேறுவிதமான தவறுகள் நடப்பதற்கும் வழி வகுக்கும். இவற்றையெல்லாம் கவனத்திலே கொண்டு அரசாங்கமே அல்லது தமிழ்நாடு மின்சார வாரியமே இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல இன்னொன்று. இந்த விவசாயிகளுக்கு மின்சாரம் இலவசமாக பம்பு செட்டுகளுக்கு வழங்குவது என்ற அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டு ரூ. 25,000 கட்டினால் முன்னுரிமை

அடிப்படையிலே வழங்கப்பட்டு வருகிறது. அதிலே நீங்கள் எதிர்பார்ப்பதே 2000 அப்ளிகேஷன்கள் தான்; 5 கோடி ரூபாய் தான் எதிர்பார்க்கிறீர்கள். இந்த ஆண்டு பற்றாக்குறை 850 கோடி வர இருக்கிறது. 850 கோடி ஒரு ஆண்டுக்கு மின்சார வாரியத்திலே பற்றாக்குறை வருகிறபொழுது விவசாயிகளிடத்திலே 2000 மனுக்கள் வரப் போகின்றன, அதிலே 5 கோடி ரூபாய் எங்களுக்குக் கிடைக்குமென்று சொல்லி, முன்னுரிமை அடிப்படையிலே கொடுக்கின்றபொழுது, அதிலே வசதியான விவசாயிகள் பயன் அடைவார்கள், ஏழை எளிய விவசாயிகளுக்கு முன்னுரிமை கிடைக்காது; ஆகவே, இந்த அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டும். 5 கோடி என்பது ஒரு பெரிய தொகை அல்ல என்பதை இந்த நேரத்திலே-1000 கோடி பற்றாக்குறையோடு ஒப்பிடுகின்ற பொழுது அது ஒன்றும் பெரிய தொகை அல்ல. எனவே மீண்டும் இலவச மின்னிணைப்பு தருவதற்கு 25000 கட்ட வேண்டுமென்ற அந்த நிபந்தனையைத் தளர்த்துவதற்கு அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 40,000பேருக்கு வருஷத்திற்கு நாம் இலக்கு நிர்ணயம் செய்து, அவர்களுக்கு இலவசமாக மின்னிணைப்பு வழங்கிக் கொண்டிருக்கிறோம். அது தவிர, சிலபேர் ஐந்தாண்டுகள், ஆறு ஆண்டுகள், ஏழு ஆண்டுகள் நிலுவையிலே இருக்கின்ற மனுக்களுக்கு—தனக்கு வசதி வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே தானே அந்தச் செலவுகளை ஏற்க முடியும் என்று முன் வந்த காரணத்தினாலே தான் இப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டு வந்தோம். இதை மத்தியிலே இருக்கின்ற மின் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே பேசுகின்றபொழுதுகூட, மற்ற மாநிலங்களெல்லாம் இந்தத் திட்டத்தைப் பின்பற்ற வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய திட்டத்தை மிகவும் அங்கே பாராட்டிப் பேசினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ஏற்கனவே இருக்கின்ற இலக்கிலே குறை இல்லை, ஏழைகளுக்கு, மற்றவர்களுக்கு, விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற மின்சாரத்தினுடைய இலக்கிலே குறைக்கப்பட மாட்டாது. தனியாகப் பணம் கொடுத்து வாங்குகிறவர்களுக்கு மின்சார வாரியத்தினுடைய இழப்பிலே பங்கு கொள்கிறவர்களுக்கு அந்த வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும் என்றுதான் நாம் அந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். இதன் மூலம் ஏறத்தாழ 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்து இருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

1993 அக்டோபர் 26]
பிற்பகல் 1—25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்னர் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பேசுகின்றபோது, ஜெயங் கொண்டம் லிக்னைட் ப்ராஜெக்டைப் பற்றி ஏற்கனவே முதலமைச்சர் இந்த அவையில் பேசும்போது, அது கூட்டுத் துறையில் இருக்கும் என்று அறிவித்தார்கள், இப்போது முற்றிலுமாகத் தனியார் துறையிலும் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறதே, அது எப்படி என்று கேட்டார். இத்திட்டம் இப்போதும் கூட்டுத் துறையில்தான் அமல்படுத்தப்பட இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது 'அசோசியேட் செக்டாரில்' செயல்படுத்துவதாக ஒப்பந்தமும் கையெழுத்தாகி இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) எனவே ஏற்கனவே அறிவித்ததில் எந்த மாற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பக்கம் 10-ல் குறிப்பிட்டுள்ளது. ''மேற்கூறிய கொள்கையின் அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் (குறுக்கீடு) தனியார் துறையிலும் ஒப்படை (குறுக்கீடு) நீங்கள் சொல்கிறீர்களே அது போதும். மாண்புமிகு முதலமைச்சர் தனியார் துறையிடம் ஒப்படைத்ததற்காக மொத்தம் (குறுக்கீடு) ஆமாம் அன்றைக்குச் சொன்னதாலே தான் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள் நீங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதில் இருப்பதைப் படியுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, அதில் இருப்பதைத்தான் படிக்கிறேன். ''தனியார் துறையிடம் ஒப்படைத்ததற்காக மொத்தம் ரூ. 11,800 கோடி முதலீட்டுடன் 3050 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்'' என்றுதான் குறிப்பிலே வந்துள்ளது. தனியார் துறை என்று போட்டிருக்கிறதே தவிர ''அஸோஸியேட் செக்டார்'' என்று சொல்லியோ. ''ஜயின்ட் செக்டார்'' என்று சொல்லியோ இதில் குறிப்பிடப்படவில்லை அப்படி என்றால் திருத்த வேண்டும். திருத்தி வாசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தம் வேண்டுமானால் செய்து கொள்ளலாம், அச்சடிக்கப்பட்ட அந்த பாலிசி நோட்டில். ஆனால் எந்தவிதமான சந்தேகமும் வேண்டியது இல்லை. இத்

திட்டம் Associate Sector-இல் கூட்டுத் துறையில்தான் நிறுவப்பட உள்ளது என்பதை மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல இத்தகைய பெரிய மின்சாரத் திட்டங்களையெல்லாம், மின் உற்பத்தித் திட்டங்களையெல்லாம் தனியார் துறையிடம் ஒப்படைத்தால் இது நன்மை பயக்குமா? நாளை இத்தனை ஆயிரம் மெகாவாட் மின்சார உற்பத்திக்கு இந்த மாநிலம் தனியார் துறையை நம்பி இருக்க வேண்டியிருக்குமே; இது ஒரு நல்ல முறையல்ல என்பதைப் போல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கருத்துத் தெரிவித்தார்கள். Privatisation என்பது இன்று national policy மாநில அரசின் தனிப்பட்ட கொள்கையல்ல. இன்று தேசியக் கொள்கையே அதுதான். அதுமட்டுமல்ல ஒரு மாநில அரசு தன்னுடைய நிதி ஆதாரங்களை மட்டுமே நம்பியிருந்தால் இத்தகைய பெரிய பெரிய Major Projects களை எப்படி நிறுவ முடியும்? எப்படி செயல்படுத்த முடியும்? எனவே 7 ஆயிரம் கோடி அளவுக்கு ஒரு ப்ராஜெகட் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கிறது என்று சொன்னால் அதை நாம் மகிழ்ச்சியோடு வரவேற்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட பெரிய திட்டங்களைச் செயல்படுத்த ஆர்வத்தோடு தனியார் துறையிலிருந்து முனைவர்கள் வருகிறார்கள் Promoters வருகிறார்கள் என்று சொன்னால் அவர்களுடைய Strength ஐப்பற்றி அவர்களுடைய Capacity ஐப்பற்றி, திறமையைப் பற்றி இந்த அரசு நன்கு அறிந்து, பரிசீலித்த பின்னர்தான் அவர்களை Co-promoter ஆக கூட்டுத் துறையில் ஏற்றுக் கொள்கிறது. எனவே, இத்தகைய பெரிய பெரிய முதலீடுகளை, 7 ஆயிரம் கோடி, 5 ஆயிரம்கோடி, 3 ஆயிரம் கோடி என்று ஒரு மாநில அரசே முதலீடு செய்து திட்டங்களைத் தொடங்க வேண்டுமென்று சொன்னால் அது இந்த 5 ஆண்டு காலத் திட்டத்தில் மட்டுமல்ல, இனி எத்தனை 5 ஆண்டு காலத் திட்டங்கள் வந்தாலும் இது நடைமுறையில் சாத்தியமல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நமக்கு எதிர்காலத்தைப் பற்றி ஒரு Grand Vision ஒன்று இருக்கிறது. இந்த மாநிலம் முன்னேற வேண்டும் என்பதற்கான ஒரு தொலைநோக்குப் பார்வையோடு தனியார் துறையிலிருந்து Promoters வந்தால் அவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு இத்தகைய வாய்ப்புகளைக் கொடுத்து, அதனால் மாநிலத்திற்கு இத்தகைய ஆயிரம் மெகா வாட், மின்சாரம் கிடைக்கிறது என்று சொன்னால் இதில் என்ன தவறு இருக்கிறது. எனவே, இதில் எந்தவிதமான தவறும் இல்லை. இதற்கான சில கேரண்டிகளும் ஒப்பந்தத்தில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டு அவர்களும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். எனவே இதில் எந்தவிதமான வீணான சர்ச்சைகளுக்கோ, சந்தேகங்களுக்கோ இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களுக்கு கொடுப்பது என்பது எந்தெந்தத் துறைகளிலே தனியாருக்கு முக்கியத்துவம் கொடுப்பது, ஊக்குவிப்பது என்பதைக் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும். கொள்கை ரீதியாக மின் உற்பத்தியை பொறுத்தவரையில் தனியாருக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுப்பது தமிழ் நாட்டில் உற்பத்தி ஆகப்போகிற மொத்த மின்சார உற்பத்தியில் ஏறக்குறைய 60 சதவிகிதம் மின்சார உற்பத்தி அல்லது 70 சதவிகிதம் மின்சார உற்பத்தி தனியாரிடம் போய்ச் சேர்கின்ற விதத்திலே தனியாருக்கு சலுகைகள் தருவது தமிழ்நாட்டில் வருங்காலத்தில் தொலை நோக்கோடு பார்ப்பதாகச் சொன்னார்கள் தொலை நோக்கிலே சிக்கல் ஏற்படும். மொத்தமாக விவசாயம்......

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் புராஜெக்ட்டை மட்டும் ஒரு உதாரணத்திற்காக எடுத்துக் கொள்லோம். 7 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,500 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பதற்கான ஒரு திட்டம் இது. இது Iniegerated Mining-cum-Generati on Project இதை தனியார் துறையிடம் ஒப்படைக்கலாமா என்ற கேள்வியை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார். தனியார் துறையிடம் ஒப்படைக்கவில்லையென்று சொன்னால் வேறு யார் அதை செய்யமுடியும். இதுவரை மைனிங், it was only within the Powers of the Cent al Government. மத்திய அரசின் அதிகார வரம்பிற்குள் மட்டும்தான் இதுவரை மைனிங் என்பது இருந்தது. இதை மத்திய அரசே எடுத்து செயல்படுத்த வேண்டுமென்று நாம் கேட்போமேயானால், இன்னும் 10 ஆண்டுகள் ஆனாலும் அவை தொடங்க முடியாது இன்னும் நெல்வேலி first mining expeansi n-யே அவர்களால் செய்ய முடியவில்லை. Fi st mining expeansiod-ஐ அவர்களால் செயல்படுத்த முடியவில்லை. மூன்றாவது mining ஐ நீங்கள் இந்த எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று நாங்கள் திரும்பத் திரும்ப விண்ணப்பம் செய்தும் அவர்களால் இன்னும் அதைச் சேர்த்துக் கொள்ளக் கூட முடியவில்லை. வேறு யார் அதைச் செய்ய முடியும் ஆகவேதான், இந்தப் புராஜெக்ட்டுக்காக போராடி, திரு. பிரணாப் முகர்ஜி, பிளானிங் கமிஷன் துணைத் தலைவர் அவர்களிடம் பலமுறை வாதாடி இந்த மைனிங் என்பதை மாநில அரசும் செய்யலாம் கூட்டுத் துறையிலும் செய்யலாம் தனியாரும் செய்யலாம் என்று கேட்டு இந்த உரிமையைப் பெற்று அதனால்தான் இன்று இந்தப் புராஜெக்ட் நடைமுறைக்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைன்கட்டிங்குக்கு தனியாருக்கு அனுமதி தருகிற மத்திய அரசாங்கம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அனுமதி தராதா? ஏன் தமிழ்நாடு மின்சார வாரியம் தனித்தெடுத்து செய்யக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி. 7 ஆயிரம் கோடி என்பது நான் ஏற்கெனவே சொல்ல வந்தது.....

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அல்லது தமிழ்நாடு மின்சார வாரியம் இந்த மைனிங் புராஜெக்ட்டை எடுத்து நடத்துவது என்று சொன்னால் மைனிங் எக்யூப்மெண்ட் எங்களிடம் இல்லையே. அதற்கான Infruastructure யாரிடம் இருக்கிறது? மத்திய அரசுக்குச் சொந்தமான நெய்வேலி லிக்னைட் கார்ப்புரேஷன் இடம் இருக்கிறது. அவர்களுக்கு ஏற்கனவே குறிக்கப்பட்டிருக்கிற எக்ஸ்டென்ஷனையே நிறைவேற்ற முடியவில்லை. அப்படியிருக்கும்போது ஜெயங்கொண்டத்தில் இருக்கின்றக் லிக்னெயிட் டெப்பாசிட்ஸ் பயன் படுத்தப் படாமல் வீணாகப் போகின்றன. அவற்றை எடுத்து பயன்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் அதைத் துரிதமாகச் செயல்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த உரிமையை நாங்கள் கேட்டுப் பெற்றிருக்கிறோம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் சொல்ல வந்தது என்னவென்றால் இதை மாநில அரசோ தமிழ்நாடுமின்சார வாரியமோ எடுத்துச் செய்வதென்றால் ஏற்கெனவே சொன்னபடி அந்த இக்யூப்மெண்டும் Infrastructure நம்மிடம் இல்லை. அதைப் பெற வேண்டுமென்று சொன்னால் இத்தனை ஆயிரம் கோடி ரூபாய் அதற்குச் செலவிட வேண்டும். அந்தப் பணம் எங்கிருந்து வரும்? மாநில அரசிடம் அத்தகைய நிதி வசதி இல்லை என்பதால் தான் இந்தப் புராஜெக்ட்டைக் கூட்டுத் துறையில் செயல்படுத்த வேண்டுமென்று முடிவு எடுத்து ஒரு கோ புரோமோட்டரை அழைத்து நாங்கள் இன்றைக்குத் திட்டமிட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மைன் கட் செய்வதற்கு எக்யூப்மெண்ட் கிடைக்காது என்றால் அந்த கோ புரோமோட்டராக இருக்கிற இன்டஸ்ட்ரியலிஸ்ட்டுக்கு மட்டும் எப்படிக் கிடைக்கும்?)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோ புரோமோட்டராக இருக்கின்ற தொழில் நிறுவனம் ஒரு Collaberation வைத்துக் கொண்டு வெளிநாடுகளிலிருந்து அதற்கான எக்யூப்மெண்ட இறக்குமதி செய்கிறது. இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்பமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் Collaboration ஐ ஏன் தமிழ்நாடு மின்சார வாரியம் வெளிநாட்டோடு செய்து கொள்ளக் கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி.

பிற்பகல் 1.35

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஏன் செய்யக்கூடாது ? மாநில அரசோ மின்சார வாரியமோ ஏன் செய்யக்கூடாது என்றால் பணம் இல்லை. அதனால்தான் நாங்கள் செய்ய முடியவில்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இந்த 7000 கோடி அல்லது 5000 கோடி அல்லது 3000 கோடி என்று வருகிறபோது தனியார் யாரும் ஆயிரம் கோடி, 2000 கோடி இதிலே முதலீடு செய்யப்போவதில்லை. அசோசியேட் அல்லது ஜாயின்ட் செக்டார் என்று வருகிறபோது அரசாங்கமும் முதலீட்டிலே ஒரு பகுதியைப் போட வேண்டும். அதைத் தவிர நிதிநிறுவனங்கள் மற்றும் பைனான்ஸ் இன்ஸ்டிடியூஷன்களிலே அவர்கள் வாங்கிச் செய்யப்போகிறார்கள். ஆக ஒட்டுமொத்தமாக நீங்கள் பார்த்தால் அவர்கள் செய்கிற முதலீடு பெரிய அளவிலே இருக்காது. 3000 கோடிக்கு தொழில் என்று சொன்னால் 50 கோடி அல்லது 100 கோடிக்கு அந்தத் தனியார் முதலீடு செய்வாரா என்றால் அதுவே சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. 7000 கோடியில் அந்தப் பிரைவேட் கோ-பிரமோட்டார் எத்தனை கோடி போடுவார் ? உண்மையிலே அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று அரசாங்கம் சொல்ல முடியுமா? எத்தனை கோடி மொத்த முதலீடு என்று நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஜெயங்கொண்டம் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாகச்

சொல்லி இருக்கிறார்கள், இன்றைக்கு இந்தியா அத்தனை மாநிலங்களிலும் இப்படிப்பட்ட மின் திட்டங்கள் கோரப்பட்டு மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்ற ஒரே திட்டம், நம்முடைய ஜெயங்கொண்டம் திட்டம்தான்(மேசையைத் தட்டும் ஒலி). நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுத்தான் எந்த ஒரு தனியார் திட்டத்திற்கும் அவர்களால் கொடுக்க முடியவில்லை. எல்லாவிதமான முறைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டு இன்றைக்குத் தமிழகத்திற்குத் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால் நம்முடைய அணுகுமுறைதான். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசிலே வற்புறுத்தி இத்தகைய பெரிய திட்டத்தை எடுத்து வெற்றிப்பெற்றிருக்கிறார்கள். அதிலே என்ன பிரச்சினை என்றால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏன் மின்சார வாரியம் இதைச் செய்யக்கூடாது என்று கேட்டார்கள் இதிலே ஒரு கட்டுப்பாடு வைத்திருக்கிறோம். அதற்கு நான் பின்னாலே விளக்கம் தருகிறேன். பவர் பர்ச்சஸ் அக்ரிமெண்ட் இருக்கிறது. அவர்கள் எவ்வளவு மின் உற்பத்தி செய்தாலும் அந்த மின்சாரத்தை நம்முடைய மின்சார வாரியத்தில்தான் விற்க வேண்டும் தனியாக அவர்கள் விற்க முடியாது. யாரிடத்திலும் தனியாக விற்க உரிமை கிடையாது. அவர்கள் திட்டங்களைப் போட்டாலும், பணத்தைக் கொண்டு வந்தாலும், வெளிநாடுகளிலிருந்து முதலீடு பெற்றாலும் எத்தனையோ வங்கிகளிலே முதலீடு பெற்றாலும் அவர்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை நம்மிடத்திலே தான் விற்க வேண்டும். நாம்தான் அதை 'டிஸ்டிரிபியூட்' செய்கிறோம். ஆகவே அந்த கண்ட்ரோல் நம்மிடத்தில் இருக்கிறது,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 7000 கோடி ரூபாயை நீங்கள் போடக்கூடாதா என்று கேட்டார்கள். எப்படி முடியும் தனியார் என்று சொன்னால் வெளிநாடுகளிலே இருக்கிற சீமென்ஸ் போன்ற கம்பெனிகள் பெரிய பெரிய கம்பெனிகளோடு அவர்கள் தொடர்பு வைத்திருக்கிறார்கள். பைனான்ஸ் இன்ஸ்டிடியூஷன்களை அவர்கள் போய் பார்க்கின்றார்கள் இப்படி பல்வேறு நிறுவனங்களோடு, பன்னாட்டு நிறுவனங்களோடு தொடர்பு கொள்கிறார்கள் அவர்கள் ஏற்கனவே நிதி நிறுவனங்களோடு தொடர்பு வைதது் கொண்டு பலவேறு தொழில்களைச்செய்கிறார்கள். ஆகவே அவர்களை நம்பி கடன் தருகிறார்கள். நம்முடைய அரசு நிறுவனம் என்று வருகிறபோது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் எந்த ஒரு பன்னாட்டு நிறுவனமும் பணம் தர மாட்டார்கள். அரசாங்க நிறுவனத்திற்கு பணம் தருகின்றபோது பல்வேறு நிபந்தனைகள் விதிக்கிறார்கள். ஒரு மின்சார வாரியம் என்பது குறுகிய வரம்புகளுக்குள்ளே செயல்படுவது. ஆகவே அதற்கு இருக்கிற இலக்கிலே இப்படிப்பட்ட பன்னாட்டு நிறுவனம் அந்த அளவுக்கு தொகை தரமாட்டார்கள். அந்த அடிப்படையிலே தான் நம்மால் முடிந்த அளவுக்கு சிறிய மின்

1993 அக்டோபர் 26] [திரு. எஸ். கண்ணப்பன்]

திட்டங்களை அரசின் சார்பிலே, மின்சார வாரியத்தின் சார்பிலே நிறைவேற்றுகிறோம். பெரிய மின்திட்டங்களை தனியார் முதலீட்டோடு மின்சார வாரியத்தின் கட்டுப்பாட்டுக்குள் வைத்து கொண்டுவருவதற்கான திட்டம்தான் இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, நான் கேட்டதற்கு (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல் இந்தத் திட்டத்தை எடுத்துச்செயல்படுத்தப்போகிற 'கோ-பிரமோட்டார் ஃபாரின் கொலாபரேஷனோடு செய்கிறார். இந்த ஃபாரின் கொலாபரேட்டார்ஸ் யார் என்று சொன்னால் சீமென்ஸ் தலைமையில் 'Consortium of Companies' அந்த விளக்கங்களை பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பின்னால் தெரிவிப்பார்கள். இந்தக் கம்பெனி யாருடையது? இந்தக் கம்பெனியினுடைய அனுபவம் என்ன? இதனுடைய தராதரம் என்ன என்று எடுத்துப் பார்த்தால் They are world experts in their fields அவர்களுக்கு இத்தகைய Mining cum power generation projectல் நீண்ட அனுபவம் இருக்கிறது. எத்தனையோ திட்டங்களை அவர்கள் உலகெங்கும் செயல்படுத்தி இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு என்று ஒரு 'ரெப்யூட்டேஷன்' இருக்கிறது. ஒரு பெயர் இருக்கிறது. அதை வைத்துதான் பன்னாட்டு நிதி நிறுவனங்கள் நிதி கொடுக்க, கடன் கொடுக்க முன்வருகிறார்கள் இந்த Technical expertise and knowhow நம்முடைய மாநிலத்திற்கு எப்படி வரும்? இதுவரை இந்தியாவுக்குள்ளே மைனிங் செய்வதற்கு மாநிலத்திற்கு இந்த அதிகாரம் வழங்கப்படவில்லை. தமிழ்நாடு மின்சார வாரியமும் இத்தகையப் பணிகளை இதுவரை மேற்கொண்டதில்லை. எனவே உலக அளவில் International Standardக்கு இத்தகைய International Standard Technical knowledge expertise நமக்கு எவ்வாறு கிடைக்கும்?

அது மட்டுமல்ல. இந்த ஜெயங்கொண்டம் Integrated Mining cum Power Generaion Project என்பது இந்தியாவில் மட்டுமல்ல, ஆசியாவிலேயே முன்னோடித் திட்டம். உலகெங்கிலும் வியக்கிறார்கள். இவ்வளவு பெரிய திட்டத்தை தமிழ்நாட்டில் எடுத்துச் செயல்படுத்துகிறார்களே என்று உலகெங்கிலும் வியப்பு அடைந்திருக்கிறார்கள். German Chancellor Helmut Kol அவ்வப்போது இங்கே தொடர்பு கொண்டு இதனுடைய பிராகிரஸ் என்ன? எப்படி திட்டம் வளர்ந்து வருகிறது என்று அவ்வளவு ஆர்வம் காட்டுகிறார். அதாவது ஒரு மாபெரும் மகத்

தான, முன்னோடித் திட்டம் தமிழ்நாட்டிற்குக் கிடைத்திருக்கிறதே என்று கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு பெருமைப்படுவதை விட்டுவிட்டு, இதை ஏன் செய்கிறீர்கள், இதை ஏன் செய்கிறீர்கள் என்று கேட்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று எனக்கு உண்மையிலேயே புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி.)

பிற்பகல்

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் வருத்தப்படுவதற்கோ கோபப்படுவதற்கோ ஒன்றும் இல்லை. நான் சொல்லவந்தது தனியாருக்குக் கிடைக்க வேண்டிய வசதிகள் ஏன் அரசுக்குக் கிடைக்காது? இது ஒன்று. இரண்டாவது இதில் 7,000 கோடி அல்லது 3,000 கோடி என்று சொன்னால், வெளியே பார்ப்பதற்கு ஏதோ 7,000 கோடி தனியார் முதலீடு செய்கிறார்கள் என்று தோன்றும், ஆனால் உண்மை என்ன? 7,000 கோடி தனியார் முதலீடு செய்யவில்லை. அசோசியேட் செக்டார் ஜாயிண்ட் செக்டார் என்கிறபோது அவர்கள் என்ன போடுகிறார்களோ அதையே நீங்களும் போட வேண்டும். அதாவது அரசாங்கமும் போட வேண்டும். அது தவிர வங்கிகளிடமிருந்து.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் அதாவது டிட்கோ 11 சத வீதம் தான் முதலீடு செய்கிறது. கோப்ரமோட்டர் 40 சத வீதம் முதலீடு செய்கிறார்கள். இது கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் புரியவில்லையே என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சின்னப்பன் அந்தத் தொகுதியின் எம்.எல்.ஏ. அவர் ஏதோ சொல்ல வருகிறார்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரித் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசு ஆராய்ச்சி செய்கிறப்போது கூட மத்திய அரசினுடைய நிறுவனமான நெய்வேலி நிறுவனங்கள் அந்தப் பகுதியில் அதைச் சரியான முறையில் ஆராய்ச்சி செய்ய முடியவில்லை என்ற காரணத்தாலே பன்னாட்டு நிறுவனங்களான போலந்து சர்வீசஸ் இடம் ஒப்பந்தம் செய்து, அவர்கள் தான் அங்கே வந்து நிலக்கரி இருக்கிறது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். இப்போதும் மேற்கொண்டு அவர்கள் அந்தப் பகுதியில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஒரு நல்ல திட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசு தனியார் நிறுவனம் மூலமாக மின் உற்பத்தி செய்யலாம், அதன் மூலம் மைனிங் செய்யலாம்

1993 அக்டோபர் 26] [திரு. கே. கே. சின்னப்பன்]

என்று அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இந்த அருமையான திட்டத்தை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பயன்படுத்தி ஆசியாவிலேயே முதல் திட்டமாக அதை அறிவித்தார்கள். அவர்கள் அறிவித்த பிறகு அந்தத் திட்டத்தை தனியாரிடத்திலே கொடுத்து விட்டார்கள் என்றுகூட அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் எதிர்த்தார்கள். இருந்தாலும் கூட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகச் சாமர்த்தியமாக அந்தத் திட்டத்தைப் பெற்று இன்றையதினம் நமது தமிழக மக்களுக்கு வழங்க இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தினைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு குழப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் பகுதியிலே இருக்கிற மக்கள் மிக நல்ல முறையிலே அதை வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் எப்படியாவது வந்தாக வேண்டும் என்ற உணர்விலே அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் இருக்கிறார்கள். இதற்கு முன்புகூட இந்தத் திட்டத்தைப் பற்றி இங்கே நீங்கள் குறிப்பிட்டது போன்று அந்தப் பகுதியிலே துவங்கக் கூடாது என்றும் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் பயன்பட்டு விடுவார்கள் என்றும் அதாவது அந்த உணர்வுகளோடு இங்கே இருக்கிற அரசியல் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் அந்தத் திட்டத்தைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டம் மிகத் தெளிவான முறையில் அந்தப் பகுதி மக்களுக்கே பயன்பட வேண்டுமென்ற உணர்வோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்துள்ள திட்டத்தை அந்தத் தொகுதி மக்களின் சார்பாக வரவேற்பதோடு, இது ஆசியாவிலேயே ஒரு மிகப் பெரிய திட்டம். இந்தத் திட்டத்தைத் தமிழகத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனை அந்தப் பகுதி மக்கள் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைச் சரியாகப் படித்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அந்த நிலக்கரித் திட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற அந்த மேப்-ஐ வாங்கிப் பாருங்கள். அனேகமாக இன்னும் 3, 4 பவர் ஸ்டேஷன்கள் கூட அங்கே வைப்பதற்கு உரிய வகையில் அங்கே நிலக்கரி டெப்பாசிட் இருப்பதாக அங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று அவர்கள் மீண்டும் ஒரு முதல்வராக இந்த மன்றத்திலே வருவார்களேயானால் தனியாகவோ, அல்லது அரசாங்கத்தின் மூலமாகவோ அதை எடுக்கலாம். அப்போது அங்கே இருக்கிற மக்கள் யாரும் அதைத் தடுக்க மாட்டார்கள் அப்போது நீங்கள் எடுத்துச் செயல்படுத்துங்கள் எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைய தினம் மிக அருமையான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே இதை தயவுசெய்து நீங்கள் குழப்ப வேண்டாம் என்று அன்போடு அவரைக் கேட்டுக் கொள்வதோடு (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தொகுதி மக்களுக்காகப் மிகப் பெரிய

இந்தத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் அன்போடு வேண்டிக் கொள்வதெல்லாம் இந்தத் திட்டத்தை அந்தப் பகுதியிலே எப்படி, எப்படி செயல்படுத்த இருக்கிறோம் என்பதைப் பற்றி இந்த மாமன்றத்திலே ஒரு அறிக்கையாக வைக்க வேண்டும் என்பதுதான். காரணம், இந்தத் திட்டத்தைப் பற்றி பரவலாக பல்வேறு வகையான சந்தேகங் களை ஒருசில அரசியல் குழப்பவாதிகள் மக்களிடத்திலே எழுப்பி குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த மாமன்றத்தில், அந்தத் திட்டத்தை எப்படிச் செயல்படுத்த இருக்கிறோம், அரசினுடைய பங்கு என்ன என்ற விவரத்துடன் அறிக்கை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தைத் தனியாருக்கு விற்று விட்டார்கள் என்று அந்தப் பகுதியிலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது போன்ற நிலைமை இல்லாமல் மக்களுக்காகத்தான் அந்த மின் உற்பத்தித் திட்டமே அங்கே கொடுத்திருக்கிறோம் அரசின் மூலமாகத்தான் அந்த மின் உற்பத்தியினை வினியோகம் செய்ய இருக்கிறோம் என்ற பல்வேறு வகையான திட்டங்களையும், அங்கே நிலம் எடுக்கிறபோது அங்கே இருக்கிற மக்களுக்கு, அதற்குத் தேவையான அளவுக்கு சரியான நட்டயீடு மற்றும் பல்வேறு வகையான உதவிகளைச் செய்வோம் என்ற உறுதி மொழியையும் இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொண்டு அமர் கிறேன். வணக்கம்.

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் திரும்பவும், மீண்டும் முதலமைச்சர் ஆவீர்களானால் என்று சொல்லியிருக் கிறீர்கள். உறுப்பினர் அவர்கள் எப்போதும் முதலமைச் சராகவே இல்லை. அவர் வேறு எங்கு ஆனார் என்று தெரிய வில்லை.

திரு. கே. கே. சின்னப்பன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்தை நல்லபடியாக செய்யலாம் என்பதால், இதை குழப்பவேண்டாம் என்றுதான் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சரி உட்காருங்கள்

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய விளக்கம். அந்தப் பகுதியிலே அந்த மின் திட்டம் வருவதை நான் எதிர்க்கவில்லை அந்த மக்களுக்கு விரோதமாக

பேசவில்லை. கொள்கை ரீதியாக தனியாரிடம் தராமல் அரசாங்கம் செய்யவேண்டும் என்று நான் கேட்டேனே தவிர, அதைப் புரிந்துகொள்ளாமல் நான் குழப்புகிறேன் என்று அவர் ஏதோ சொல்லிக்கொண்டிருக்கிறார். தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையிலே, அங்கே வரவேண்டும் என்று அவர் ஆர்வம் காட்டுவதிலே, எனக்கு ஒன்றும்(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் முடித்துவிடட்டும்.

திரு எஸ். திருநாவுக்கரசு: முடித்து விடுகிறேன். ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்தோடு முடித்து விடட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னப்பன் அவர்கள் சொல்வது அந்தத் திட்டம் உடனே வரவேண்டும் என்று கருதுகிறார்கள். நீங்கள் சொல்கிற கருத்து, உங்களுடைய கொள்ளுப்பேரன் காலத்தில் வந்தால் போதும் என்ற நிலையிலே நீங்கள் சொல்கிறீர்கள். இதுதான் உங்களுக்கும் அவருக்கும் உள்ள வித்தியாசம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஆக ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையிலே அவர் உடனே வர வேண்டும் என்ற அடிப்படையிலே தனியாரிடத்திலே கொடுத்தாலும் சரி வேறு யாரிடத்திலே கொடுத்தாலும் சரி, அது வந்தால் சரி என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார். அந்தத் திட்டம் வருவது குறித்து நானும் எந்த ஆட்சேபணையும் சொல்லவில்லை. சீக்கிரமே வரட்டும். ஆனால் கொள்கை ரீதியாக இவ்வளவு பெரிய திட்டங்களை, அதுவும் தமிழ்நாட்டினுடைய மின் உற்பத்தியிலே, இந்தத் திட்டம் மட்டுமல்ல, மொத்தத்திலே 7,500 மெகாவாட், 8-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் தேவை என்று சொன்னால், அதிலே ஏறத்தாழ 60 சதவிகிதம், 4,600 மெகாவாட் உற்பத்தி தரப்படுகிறது மொத்தத்தில். எனவே இது ஒரு நல்ல 'டிரென்ட்' அல்ல என்பதற்காக நான் கொள்கை ரீதியாகத்தான் அதைச் சுட்டிக் காட்டினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்துவிடுங்கள். இன்னும் 3 பேர் பேச வேண்டும். உங்கள் கோரிக்கையை வைத்து பதில் வாங்கிவிட்டீர்கள் அல்லவா? அரை மணி நேரம் ஆயிற்று. போதும். திரு. நா. சா. பழனிசாமி.

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஒரே ஒரு நிமிடம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, வேண்டாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஒரே ஒரு நிமிடம். அதாவது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கருத்தைச் சொன்னீர்கள். முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாகிவிட்டது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஒரே ஒரு நிமிடம்.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டின் மின்சாரத் துறை வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி உட்காருங்கள். ஒரு கோரிக்கையை மட்டும் வைத்துவிடுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: அதாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் இடத்திலே இருக்கிறார். அதனாலே, முதலமைச்சர் என்ற காரணத்தாலே** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் எதற்கு அவ்வாறு சொன்னார். அதாவது இப்போது நீங்கள் என்னிடம் ஒரு நிமிடம் எனக் கேட்டு வாங்கிவிட்டு, இந்த மாதிரி விவாதத்திற்குப் போவது சரியல்ல (குறுக்கீடு) இல்லை, இல்லை. புரியாமல் பேசுகிறார் என்று அவர் சொன்னதிலே உங்கள் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. தகவல்களைக் கூறுகிறார்கள். உங்களிடம் தகவல் இல்லாமல் இருக்கலாம். உங்களுக்குப் புரியாமல் இருக்கிற, தகவலை முதலமைச்சர் சொல்கிறார் என்று சொன்னால், அதை நீங்கள் பெருந்தன்மையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை: உட்காருங்கள் உட்காருங்கள், முடியுங்கள். அதாவது நீங்கள் ஒரு நிமிடம் என்று கேட்டதற்கு வேறு ஏதோ விவரத்தைச் சொல்ல வருகிறீர்கள் என்பதற்காக நானும் திரு. பழனிசாமி அவர்களை உட்காரச் சொல்லிவிட்டு அனுமதித்தேன். (குறுக்கீடு) எனவே அதற்குப் பிறகு, நான் கொடுத்த அந்த அனுமதியை தவறாகப் பயன்படுத்திய காரணத்தால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. நா. சா. பழனிசாமி.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை முன் வைக்க சந்தர்ப்பம் அளித்தமைக்கு உழவர்-உழைப்பாளி கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக அரசு மின்சாரத்தை தொழில் துறைக்கு வழங்குவதிலும் சரி, வேளாண்மைத் துறைக்கு வழங்குவதிலும் சரி, இன்றைக்கு மற்ற எந்த மாநிலத்தையும் விட சிறப்பான முறையிலே மின் தட்டுப்பாடு இல்லாத வகையில் மின்சாரத்தை வழங்கிக் கொண்டு வருகிறது. எதிர்காலத்திலே தமிழகம், தொழில் துறையிலே, வேளாண்மைத் துறையிலே வியக்கத்தக்க முன்னேற்றம் அடைய வேண்டுமென்பதற்காக இன்றைக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் அளவிலே ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரித் திட்டத்தை ஒரு பெரிய திட்டமாக நிறைவேற்றி வருவதை, தனியாரிடம் விட வேண்டுமா அரசாங்கத்திடம் விட வேண்டுமா என்ற விவாதத்தினை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்தார்கள். அரசாங்கத்திடம் விட்டு, பல நிறுவனங்கள் நஷ்டத்திலே நலிவுற்று இருக்கின்றன. தனியாரிடம் விட்டால்தான் இன்றைக்கு தொழில் துறையில் முன்னேற்றம் அடையமுடியும் என்ற ஒரு கொள்கை உலகளாவிய கொள்கையாக வளர்ந்துக் கொண்டிருக்கிற நேரத்தில் பொதுவுடைமை நாடுகளில் அரசாங்கத்திடம் விடப்பட்ட தொழில் துறைகள் எல்லாம் இன்றைக்கு நலிவுற்று, அரசாங்கம் தொழிலை நடத்துவது என்ற கொள்கை இன்று உலகளாவிய அளவிலே நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-50

இன்றைக்குத் தனியாரிடம் தொழில் துறையை விட்டால் தான் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும் என்ற ஒரு கொள்கையை உலகளாவிய அளவில் ஏற்றபிறகு, இந்திய அளவிலேயும் ஏற்றுக் கொண்ட தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முன்னேற வேண்டும் தமிழகம் தொழில் துறையிலே பயனடைய வேண்டும், அதைத் தனியார் செய்கிறார்களா அல்லது அரசாங்கம் செய்கிறதா என்பதைவிட தமிழகத்தினுடைய மக்கள் அதிலே பயனடைகிறார்களா என்பதை மட்டுமே கருத்திலே கொண்டு, தமிழக தொழில் துறையினுடைய வளர்ச்சியிலும், வேளாண் துறையிலும் வளர்ச்சியையும் கருத்திலே கொண்டு இன்றைக்கு இந்த மாபெரும் திட்டத்தை, வேறு எந்த மாநிலமும் பெறாத திட்டத்தை அவர்கள் பெற்றிருப்பதை மனமார மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் இன்றைக்கு வரவேற்க வேண்டுமேயல்லாமல், அதை யார் செய்கிறார்கள் என்பது நமக்கு முக்கியம் அல்ல. அதைத் தனியார் செய்கிறார்கள் என்றால் அவர்களும் நம்முடைய நாட்டைச் சேர்ந்தவர்கள் தான். தமிழகத்தைச்

சேர்ந்தவர்கள்தான். இதைத்தான் அவர்கள் செய்கிறார்கள். வேறு நாட்டுக்கு அதை விற்றுவிடவில்லை. நம்முடைய தமிழக மக்கள் பயனடைவதற்காகத்தான், தமிழக தொழில் துறையும், வேளாண் துறையும் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்திலே தான் அதைத் தனியார் செய்கிறார்களேயல்லாமல் அதை விநியோகிக்கின்ற உரிமையை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல மின்சார வாரியம் தன்னுடைய கையிலே வைத்துக்கொண்டிருக்கிறது. எனவே இதிலே மின்சார வாரியம் பயனடைகிறது. தமிழக மக்கள் பயனடைகிறார்கள். தமிழக தொழில் துறை பயனடைகிறது. வேளாண் துறை பயனடைகிறது. வருங்கால சந்ததியினர் இந்தத் திட்டத்தை தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்ததற்காக அவர்களை வாழ்த்திக்கொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் மனதார சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு வேளாண் துறை 850 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பை ஏற்றிருக்கிறது. தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இலவசமாக மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இலவசமாக மின்சாரத்தை வழங்கக் கூடாது. ஒரு யூனிட்டுக்கு 50 பைசா மின் கட்டணம் விதிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை யார் கொடுக்கிறார்கள்? அந்த நிர்ப்பந்தத்தைக் கொடுத்தவர்கள் இராணிப்பேட்டையிலும் பழனியிலும் கண்டது என்ன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ராணிப்பேட்டையில் பேசுகின்றபோது என்ன நிர்ப்பந்தங்கள் வந்தாலும், என்ன இழப்பீடுகள் ஏற்பட்டாலும், என்ன துன்பங்கள் வந்தாலும், இலவச மின்சாரத்தை வேளாண் பெருங்குடி மக்களுக்கு வழங்குவதை இந்த அரசு தொடரும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்று அவர்கள் வாயார வாக்குறுதி வழங்கியதை தமிழகத்திலே இருக்கிற வேளாண் பெருமக்கள் நன்றியோடு அவர்களைப் பாராட்டுகின்ற வகையிலேதான் ராணிப்பேட்டையினுடைய ராணியாக அவர்களை முடிசூடி வைத்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

பழனி பாராளுமன்றத் தொகுதி தங்களுக்கு பரம்பரை பாத்தியதை என்று சொன்னவர்கள் மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படியெல்லாம் இன்றைக்கு தமிழகத்திலே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் விவசாயப் பெருமக்களுக்குச் செய்திருக்கின்ற சலுகைகளை இன்றைக்கு வேளாண் பெருமக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

விவசாயத் தொழில் இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்த வரையிலே நிலத்தடி நீரையே பெரிதும் நம்பியிருக்கின்ற ஒரு தொழிலாக மாறிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் மழை பெய்வது ஆண்டுக்காண்டு குறைந்து வருகிறது. அதுமட்டுமல்ல தமிழகத்திற்கு உரிமையாகக் கிடைக்க வேண்டிய காவிரி தண்ணீரை யாரோ ஒருவர் அனுமதியின்றி அணையைக் கட்டி வைத்து நமக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். அந்தத் தண்ணீரை தன்னுடைய உயிரைக்கூடப் பணயமாக வைத்து, தமிழக மக்களுக்குப் பெற்றுத் தர வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உண்ணாவிரதம் இருந்த காரணத்தினாலதான் இன்றைக்கு வேளாண் பெருமக்கள் அவர்களை வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தண்ணீரை இங்கே பெற்றுத் தருவதற்கு யாருமே இவ்வளவு வாதாடவில்லை. காவிரித் தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைக்கவில்லையே என்று யாரும் அந்த வாதாட்டத்தைச் செய்யவில்லை. ஆனால், திட்டங்களை— தமிழகம் கொண்டு வருகின்ற திட்டங்களைக் குலைப்பதற்கும், அதுபற்றி குழப்பங்களை ஏற்படுத்துவதற்கும்தான் இங்கே விவாதத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இன்றைக்கு தமிழக விவசாயப் பெருமக்களுக்கு கர்நாடகத்திலேயிருந்து காவிரிக்குக் கிடைக்க வேண்டிய உரிமைத் தண்ணீரை பெற்றுக் கொடுப்பதிலும் சரி, தமிழக வேளாண் பெருமக்களுக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதற்கு ஊக்கம் கொடுப்பதிலும் சரி, தமிழக முதல்வரவர்கள் இந்த வேளாண் பெருமக்களுடைய நம்பிக்கையின் சின்னமாக (மேசையைத் தட்டும் ஒலி) தெய்வமாக இன்றைக்குக் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை 15 இலட்சம் விவசாய பம்பு செட்டு விவசாயிகளின் சார்பாக, இலவச மின்சாரத்திற்கு அவர்கள் என்றென்றைக்கும் நன்றிக்கடன் பட்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-55

இன்றைக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற மின் இணைப்புகளைப் பொறுத்தவரையில், ஆண்டுக்கு 40,000 மின் இணைப்புகளை சீனியாரிட்டி அடிப்படையில் கொடுத்து வந்தாலும் கூட, சுய நிதி அடிப்படையிலே 4,419 மின் இணைப்புகள் இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சுய நிதி அடிப்படையிலே மின் இணைப்புகள் குறித்து ஒரு கருத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஆழ் குழாய்க் கிணறுகளை அதிகமாகப் போட்டு பயன்படுத்த வேண்டிய நிலைமையில் விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒப்பன் வெல் என்பது மாறி

ஆழ் குழாய்க் கிணறுகளை, பயிர்களின் தேவையை அடிப்படையாகக் கொண்டு, அமைக்க வேண்டியிருக்கிறது. திடீரென்று பயிர் காய்கிறது என்றால் ஆழ் குழாய்க் கிணறுகளைப் போட்டுத்தான் பயிர்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. அத்தகைய ஆழ் குழாய்க் கிணறுகளுக்கு உடனடியாக மின்னிணைப்பு கொடுப்பதில் ஒரு தனிச் சலுகையை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆற்றுக்கால் பகுதிகளில்—குறிப்பாக எங்களுடைய பொள்ளாச்சிப் பகுதியிலே அம்பராம்பாளையம், ஆளியாற்றுப் பகுதிகளில் ஆற்றினுடைய எல்லையிலிருந்து 200 அடிக்கு அப்பால் மின்சார இணைப்பு கேட்டால் சுய நிதி அடிப்படையிலே உடனடியாகக் கொடுத்து விடுகிறார்கள். ஆனால், ஆற்று ஓரத்திலே, ஆற்று எல்லையிலிருந்து 200 அடிக்கு அப்பால் பூமி இல்லாத ஒருவர், ஆற்றுக்கு அருகிலேயே மின் இணைப்பு கேட்டால் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அவர்கள் இன்றைக்கும் ஆயில் என்ஜின் பயன்படுத்தித்தான் தண்ணீரைப் பாய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் சுய நிதி அடிப்படையிலே மின் இணைப்பு கொடுத்தால் நிச்சயமாக நிறைய விவசாயிகள் முன் வந்து சுய நிதி அடிப்படையில் மின் இணைப்பை எடுத்துக்கொள்வார்கள். எனவே, சுயநிதி அடிப்படையில் அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆற்றுப் படுகையிலே தண்ணீர் எடுப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தனியாருடைய கிணறுகளுக்குத்தான் மின் இணைப்பு வழங்குகிறோமே தவிர, ஆற்றுப் படுகை அல்லது ஆற்றிலே இருந்து தண்ணீர் எடுப்பதற்கு இந்த அரசு அனுமதிப்பது இல்லை. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல தூரம் நிர்ணயித்திருந்தாலும், தனிப்பட்டவர்களுடைய பட்டா நிலங்களில் உள்ள கிணறுகளுக்குத்தான் மின் இணைப்பு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு நிலங்களிலோ அல்லது ஆற்றுப் படுகையிலோ யாருக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. நா. சா. பழனிசாமி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிலங்கள், ஆற்றுக்கு அருகிலேயே, 200 அடிக்கு உட்பட்டிருந்தால் அதற்கு மின்சார இணைப்பு வழங்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இத்தனை அடி தூரத்தில் இருக்க வேண்டுமென்று நம்முடைய நிலத்தடி நீர் துறையின் மூலமாக நாம் முடிவு செய்திருக்கிறோம். ஆகவே, அந்த முடிவை எதிர்த்து நாம் செல்ல முடியாது. ஏனென்றால், நிலத்தடி நீரைக் காப்பாற்ற வேண்டியது நம்முடைய பொறுப்பு. ஆகவே, 200 அடி என்று நிர்ணயித்திருந்தால், 200 அடிக்கு அப்பால் இருந்தால்தான் கொடுக்க முடியும். அந்த விதியைத் தளர்த்துவதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு என்னுடைய தொகுதியிலே கோப்பனூர் புதூர் என்ற கிராமத்தில், செட்டிப் புதூர் என்ற கிராமத்தில் புகையிலையைப் பதப்படுத்துகின்ற, பாடம் செய்கின்ற தொழிலைச் செய்து வருபவர்கள் தங்களுடைய வீட்டிலே பகல் நேரத்திலே மின்சாரத்தை உபயோகிக்காமல் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வீட்டிலேயே தொழில் செய்யக் கூடியவர்களுக்கு வீட்டுக் கட்டண முறை இல்லாமல், டாரிப்-9 என்ற அடிப்படையில் ஒரு யூனிட்டுக்கு ரூ. 2.40 என்ற கட்டணம் விதிக்கப்படுகிறது. பட்டுப்புழு வளர்த்தல், புகையிலையை பாடம் செய்தல் போன்று கிராமப் பகுதிகளில் வீடுகளிலே செய்கின்ற தொழில்களுக்கு வீட்டுக்கு உபயோகப்படுத்துகின்றவர்களுக்கு விதிக்கின்ற கட்டணத்தையே விதிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். அந்தத் தொழில்களுக்காக அவர்கள் தனியாக அதிகமான மின்சாரத்தையோ, கூடுதலான மின்சாரத்தையோ பயன்படுத்தவில்லை. (மணி அடிக்கப்பெற்றது.) எனவே, அந்த டாரிப்—9 கட்டணத்திற்குப் பதிலாக வீட்டு உபயோக மின் கட்டணத்தை அந்த சாதாரண, கிராமத்திலே செய்கின்ற சிறு தொழில்களுக்கு, வீட்டிலே தனியாகச் செய்கின்ற தொழில்களுக்குக் கொடுத்து உதவ வேண்டுமென்ற வேண்டுகோளை அமைச்சர் அவர்களுக்கு வைக்கின்றேன்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகின்றது. முடித்துக் கொள்ளுங்கள். இன்னொரு உறுப்பினர் பேச வேண்டும்.

திரு. நா. சா. பழனிசாமி : ஆகவே, இந்த வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு.

*திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1993–94ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும் 1992–93 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு குறித்தும் எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்காகத் தங்களுககு நன்றி கூறிக் கொள்கிறேன்.

நமது நீலகிரி மாவட்டத்திற்கு மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் (சிஸ்டம் ஆபீஸ்) அமைத்ததற்காக அரசுக்கு மாவட்ட மக்கள் சார்பாக முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தைப் பற்றித் தெரிவித்தார்கள். நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீலகிரி மாவட்டத்திற்குச் சென்றபோது அவர்களிடத்திலே கொடுதத கோரிக்கையின் அடிப்படையிலே உடனடியாக அதை அமைக்கவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டதால்தான் அது அமைந்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு அவர் நன்றிதானே சொன்னார்.

திரு. எச். எம். ராஜு : அந்த அலுவலகத்திற்குத் தேவைப்பட்ட அதிகாரிகளையும், இதர பணியாளர்களையும் இன்னும் அரசு நியமிக்கவில்லை. உடனடியாக அந்தப் பணியாளர்களை நியமிக்க வேண்டுகிறேன். மேலும் கோத்தகிரி தாலுக்காவிலும் கூடலூர் தாலுக்காவிலும் இரண்டு கோட்டப் பொறியாளர்கள் அலுவலகம் அமைக்க வேண்டுகிறேன். நீலகிரியின் மின்சாரம் உற்பத்தி செய்தும், மற்ற மாவட்டங்களுக்கு நாம் விநியோகம் செய்யும் நேரத்தில், எங்கள் மாவட்டத்தின் அநேக பகுதிகளிலும் முக்கியமாக கன்னேரி, மந்தனை, ஓரக்குட்டி, தங்காடு, ஹோரநள்ளி, கட்டபெட்டு, நடுஹட்டி போன்ற பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக—வோல்டேஜ் டிராப்—உள்ளதால் விளக்குகள் சரிவர எரிவதில்லை. பொதுமக்களும், பள்ளி, கல்லூரி மாணவர்களும் சிரமப்படுகிறார்கள். ஆகவே எங்கள் மாவட்டத்திற்கு மேலும் அதிக அளவில் டிரான்ஸ்பார்மர்களை அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்

அடுத்ததாக, 110 கிலோவாட் ஸ்டேஷன்களை உதகையிலும், குன்னூர் தாலுக்காவில் உள்ள அதிகரட்டியிலும் அமைப்பதற்கு அரசு உத்தரவு ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இக்கோப்புகள் இன்னும் அரசுத்துறையில் நிலுவையில் உள்ளன. மேற்கண்ட இடங்களில் உடனடியாக இந்த ஸ்டேஷன்களை அமைப்பதற்குத் துரித ஏற்பாடு செய்ய கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தில் மின்சார வசதியில்லாமல் துன்பப்படும் குடியிருப்புகளுக்கும் மின்சாரம் விரைவில் வழங்க வேண்டிக் கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தில் பல குடிநீர்த் திட்டங் களுக்கு மின் இணைப்பு வழங்குவதில் சற்று தாமதம் ஏற் பட்டுக் கொண்டு இருக்கிறது. அந்தக் குடிநீர் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து உடனடியாக மின் இணைப்பு வழங்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் மேற்பார்வைப் பொறியாளர் அலு வலகம், உதகை கோட்டப்பொறியாளர் அலுவலகம், உதகை மின்சார ரெவின்யூ யூனிட் போன்ற அலுவலகங்களை ஒன்று சேர்க்கும் வகையில் ஒரே வளாகத்தில் கட்டிடம் கட்டும் கோப்பும் அரசுத் துறைகளில் நிலுவையில் உள்ளது. இந்தக் கோப்பைப் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏற் பாடு செய்ய கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தில் மின்சாரத் துறையில் பணிபுரியும் அதிகாரிகளும் ஊழியர் களும் குடியிருப்புகள் இல்லாமல் துன்பப்படுகிறார்கள். ஆகவே அங்கு அவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தில் மின்வாரியத்தில் பணிபுரியும் அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் மற்ற அரசுத்துறை பணியாளர்களுக்கும் சேர்த்து ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் சீசன் அலவன்ஸ் கொடுத்து உதவ வேண்டுகிறேன்.

எங்கள் மாவட்டத்தில் உள்ள கெத்தையில் சுமார் இரண்டு வருடங்களாக உயிர்ச்சேதம். பொருள் சேதம், முக்கியமாக மின்சாரப் பொருள்கள் சேதங்கள் அதிக அளவிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இனிமேல் எந்தவித சேதங்களும் ஏற் படாமல் இதிலே கவனம் செலுத்தி (Prevention is better than cure) என்ற வகையில் சேதங்கள் ஏற்படாமல் தவிர்ப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மின் கட்டணத்தை உயர்த்தியதை மக்கள் பொதுவாக விரும்ப வில்லை. அதை அரசு மீண்டும் பரிசீலனை செய்து, அந்தக் கட்டண உயர்வைக் குறைக்கவும் வேண்டிக் கொள்கிறேன். எங்கள் மாட்டத்தில் மின்சாரக் கம்பிகள் எல்லாம் பழமை அடைந்து பழுதாகி இருக்கின்றன. அந்தப் பழைய கம்பிகளை எல்லாம் மாற்றி புதிய கம்பிகளை கொடுத்தால் மின் விநியோகம் இன்னும் நல்லவகையிலே செயல்படும் என்ற கருத்தைத் தெரி விக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. எச். எம். ராஜு] [1993 அக்டோபர் 26

பிற்பகல் 2–05

மேலும் எங்கள் மாவட்டத்தில் புயல், வெள்ளம், மழைக் காலங்களில் மிகவும் துன்பப்பட்டு பணிபுரியும் மின்சார ஊழியர் களுக்கு இன்னும் மேலும் பல விசேஷ சலுகைகளை அளிக்க வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன், எங்களுடைய மாவட்டத்தில் பொதுவான ஒரு முக்கியமான பிரச்சினை இருப்பதினால்—ஒரே ஒரு நிமிடம் தங்களுடைய அனுமதியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இருப்ப தால் ஒரு நிமிடம் மட்டும் எடுத்துக்கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன். கடந்த கூட்டத் தொடரில் புதிதாக திருத்தப்பட்டு நிறைவேறிய சட்டத்தினால் எங்கள் மாவட்டத்தில் வீடுகள் கட்ட முடியாமல் பொதுமக்களும், கட்டிடத் தொழிலாளர்களும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அரசு 30-9-1993 வரை பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகளை கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான ஆட்சேபணைகள் நமது அரசுக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் அந்தச் சட்டத்தை தயவுச்செய்து மறுபரிசீலனை செய்து, மக்கள் அங்கே வீடுகள் கட்டக்கூடிய வகையில் அவர்களுக்கு ஒரு நல்ல உத்தரவை இயற்றித்தருமாறு கே டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். ஜெய் ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27-10-1993) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

93. வேளாண்மைத்துறையின் 29—3—1976 ஆம் நாளிட்ட அறிவிக்கை எண் I 2/AG/1950/76-ல் திருத்தம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 18—6—1993 ஆம் நாளிட்ட 356 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடி கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

94. வேடசந்தூர் வட்டத்தில் சில கிராமங்களை பூதான கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 27—5—1993 நாளிட்ட 112 ஆம் எண் அரசாணையில் வெளி

யிடப்பட்ட அறிக்கை [1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

95. உள்துறையின் 23—8—1989 ஆம் நாளிட்ட அறிவிக்கை எண் II (2)HO/14795/89 நாள் 23—8—1989-ல் திருத்தம் ஒன்று செய்வது குறித்து, உள் (போ.) துறையின் 21—7—1993 ஆம் நாளிட்ட 1122 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

96. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீஆகோபில மடத்திற்கு சொந்தமான இ. டி. TN/45H–5454 மற்றும் TN 45F 5454 ஆகிய எண் கொண்ட இரண்டு வாகனங்கள் அறப்பணிக்காக பயன்படுத்தும்வரை 11—6—1993 முதல் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து 11—6—1993 ஆம் நாளிட்ட 797 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்த்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

97. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறு பேழைப் பதிவுக் கருவிகளின் மூலமாக மற்றும் கம்பி வடத் தொலைக் காட்சி கோர்வையின் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (சினிமா-2) துறையின் 28–6–1993 நாளிட்ட 935 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறு பேழைப் பதிவுக் கருவிகளின் மூலமாக மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி கோர்வையின் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/1984) 22 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பட்டது].

98. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்), விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, உள் (சி. II) துறையின், 9—7—1993 நாளிட்ட 1044 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

99. 1991-92 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் வாணிபக்கழகத்தின் ஏழாம் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்) (1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

100. 1990-91 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

101. தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் 1992-93 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

102. 1991-92 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை தொழில்கள் கழகத்தின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956). 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

103. 1990-91 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956). 919-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

TRUTH ALONE TRIUMPHS

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

16. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1991-92 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை—ஆண்டு கணக்குகள் (தமிழ், ஆங்கிலம்).

17. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (11 பட்டியல்கள்) (ஒவ்வொரு பட்டியலும் வரிசை எண் 1 முதல் 100 வரை. 9ஆம் பட்டியலில் மட்டும் 1 முதல் 99 வரை.

18. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (7 பட்டியல்கள்) (ஒவ்வொரு பட்டியலும் வரிசை, எண் 1 முதல் 50 வரை.)

இணைப்பு.

(979ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

தமிழ்நாடு மின் வாரியத்தின் 1993-94 ஆம் ஆண்டு நிதிநிலை விவர அறிக்கை குறித்தும், 1992-93 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு குறித்தும் தமிழ்நாடு சட்டப் பேரவையில் விவாதத்தைத் தொடக்கி வைத்து மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் ஆற்றும் உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு சட்டப் பேரவையில் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாடு மின் வாரியத்தின் 1993-94 ஆம் ஆண்டு நிதிநிலை விவர அறிக்கையையும், 1992-93 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

2. தமிழ்நாடு மின் வாரியம், தமிழ்நாடு மின் ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன், 1948ஆம் ஆண்டு மின் (வழங்கல்) சட்டத்தின் 61ஆம் பிரிவின்படி இந்த நிதிநிலை விவர அறிக்கைகளை அனுப்பியுள்ளது. மின் வாரியத்தின் செயல்பாடு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்தை, அரசும், மின் வாரியமும் உரியவாறு கவனத்தில் கொள்ளும்.

3. மின் சக்தி, எந்தத் தொழிலுக்கும் பயன்படக்கூடிய ஓர் எரிசக்தி ஆதாரம் என்பதோடு, இது ஏனைய எரிசக்தியைக் காட்டிலும் மிகச் சிறந்த வணிக எரிசக்தி ஆகும். ஒரு நாட்டின்/மாநிலத்தின் வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியமான இடுபொருளாகும். விரைவான தொழில்மயமாக்கம், விவசாயப் பணிகளை அதிக அளவில் இயந்திரமயமாக்குதல், அதிகப் பகுதிகளுக்கும், மூலைமுடுக்குகளிலும் உள்ள மக்களுக்கும் இதன் பயன்களைத் நீட்டித்தல் ஆகியவற்றின் காரணமாக, மின் சக்தியின் பயன்பாடு அதிக அளவிற்கு உயர்ந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில், அனைவருக்கும் போதுமான அளவில், சிறந்த தரமான மின் சக்தியைக் கிடைக்கச் செய்வது அவசியமானதாகிறது. மிகச் சிறந்த முறையிலும், சிக்கனமாகவும் இம் மாநிலத்தின் மின் உற்பத்தி, மின் அனுப்புகை, மின் பங்கீடு ஆகிய பணிகளை ஒருங்கிணைந்த முறையில் மேற்கொள்வதற்காக, 1948 ஆம் ஆண்டு மின் (வழங்கல்) சட்டத்தின்படி 1957 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் வாரியம் அமைக்கப்பட்டது. மின் வாரியத்தின் ஆண்டு நிதிநிலை விவர அறிக்கை குறித்த தற்போதைய விவாதம், மின் வாரியத்தின் செயல்பாடு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தீவிரமாக விவாதிக்கவும், இம் மாநிலத்தின் மின் வாரியத்தின் செயல்பாட்டை மேம்படுத்தி, மின் வளங்களை அதிகரிக்க மேற்

கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்துக் கருத்துத் தெரிவிப்பதற்கும் ஒரு வாய்ப்பளிக்கும். முதற்கண், நான் இம் மாநிலத்தில் மின் வழங்கல் நிலையைச் சுருக்கமாக எடுத்துரைத்து, இதுவரை, இவ்வரசு எய்திய சாதனைகளை விளக்கவுள்ளேன். அதன் பின்னர், நம்மை எதிர்நோக்கியுள்ள பணிகளையும், எதிர்காலத்தில் செயல்படுத்த வேண்டிய திட்டங்களையும் எடுத்துக்கூற விழைகிறேன்.

மின் வழங்கல் நிலைமை.

4. இவ்வரசு பதவிப் பொறுப்பை ஏற்றபோது உயரழுத்த தொழிற்சாலைகள் மின்சக்தியைப் பயன்படுத்துவதில் 25 சதவீத வெட்டும், மின் தேவையில் 30 சதவீத வெட்டும் இருந்தது. மதிநுட்ப செயல்திறன் மிக்க மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி தொடங்கிய பல்வேறு திட்டங்களினால் நம்முடைய அனல் மின் நிலையங்களின் செயல்பாடு கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது; புனல்மின் நீர்த்தேக்கங்களுக்குக் குறிப்பிடத் தக்க அளவிற்கு நீர் வரத்து இருந்ததால், உயரழுத்தத் தொழிற்சாலைகளுக்கான மின் வெட்டு படிப்படியாகக் குறைக்கப்பட்டு, 26-3-1992 அன்று அடியோடு நீக்கப்பட்டது. தற்பொழுது வழக்கமான மழையளவு குறைந்ததன் காரணமாக, புனல்மின் நீர்த்தேக்கங்களில் நீரைச் சேமிக்கும் பொருட்டு மின் உச்சத்தேவை நேரங்களில், 15-10-1993 அன்று முதல் மின் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. இதைத் தவிர, மற்றபடி, உயரழுத்த தொழிற்சாலைகள் மின் சக்தியைப் பயன்படுத்துவதிலும், மின் தேவையிலும் மின் வெட்டு ஏதும் இல்லாத மகிழ்ச்சியான சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். மற்ற மாநிலங்களில் உள்ள மின் நிலைமையோடு ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் மின் நிலைமை நன் நிலையிலுள்ளது. இந்நிலையைத் தொடர்ந்து நீடிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது.

5. இம் மாநிலத்தில், 1992-93ஆம் ஆண்டில் மின் சக்தி பயன்பாடு 10.88 சதவீதம் அதிகரித்துள்ளது. இம்மாநிலத்தில் கிடைக்கும் மொத்த மின் சக்தியின் அளவு 24.909 மில்லியன் யூனிட்டுகளாக அதிகரித்துள்ளது. புனல் மின் நீர்த்தேக்கங்களை சிறந்த முறையில் நிர்வகித்ததன் மூலம் இச் சாதனையை எய்த முடிந்தது.

6. மேட்டூர் நீங்கலாக ஏனைய நீர்த்தேக்கங்களின் சேமிப்பு அளவு 15-10-1993 ஆம் நாள் நிலவரப்படி, 1,174 மில்லியன் யூனிட்டுகளாகும்; கடந்த ஆண்டு இதேநாளில் இருந்த சேமிப்பு அளவு 2,064 மில்லியன் யூனிட்டுகளாகும். 15-10-1993ஆம் நாள் நிலவரப்படி, மேட்டூரில் சேமிப்பு அளவு 31 மில்லியன் யூனிட்டுகளாகும்; கடந்த ஆண்டு இதேநாளில் சேமிப்பு அளவு 209

ல்லியன் யூனிட்டுகளாகும். தென் மேற்கு பருவமழை 1993-94 ம் ஆண்டில் சாதகமாக இல்லாதபோதும், நம்முடைய அனல் ன் நிலையங்களின் சிறந்த சாதனையினாலும், மத்திய மின் ற்பத்தி நிலையங்களிலிருந்து அதிக அளவு கிடைக்கக்கூடிய ன் சக்தியினாலும் வரும் கோடை மாதங்களை மின் வெட் ல்லாமல் சமாளிக்க முடியும் என்று நாம் நம்புகிறோம். மின் லைமை குறித்து 1993 நவம்பர் இறுதியில் மேலும் ஆய்வு செய் ப்படும்; அதற்குள் வடகிழக்கு பருவ மழையின் அளவு பற்றித் தரிந்துவிடும்.

7. பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட வளாகத்திலுள்ள காடம் றை மின் நிலையம் 19-10-1990 ஆம் நாளன்று தீவிபத்தினால் சதமடைந்தது. முதலாம் இயந்திரம் 22-2-1993 ஆம் நாளன்று ண்டும் இயங்கத் தொடங்கியது என்பதை இம் மாமன்றத்திற்குத் தரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். III, IV ஆம் பிரிவுகளுக் ான மாற்று இயந்திரங்களும், கம்பி வடங்களும் பணியிடத்திற்கு ந்து சேர்ந்துள்ளன. இந்தப் பிரிவுகள் 1993 டிசம்பர்/1994 னவரியில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப் டுகின்றன. அதன் பின்னர் II ஆம் பிரிவின் பணி முடிக்கப்படும்.

8. 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாத பருவ மழையின்போது ழுவதும் தண்ணீரில் மூழ்கிய சேர்வலாறு மின் உற்பத்தி நிலை ம் முழுவதுமாக சீரமைக்கப்பட வேண்டியிருந்தது. முதன்மை ழலியும், ஏனைய துணைக் கருவிகள் அனைத்தும் முழுவதுமாக ரமைக்கப்பட்டு, 9-8-1993 ஆம் நாளன்று சோதனை முறையில் யங்கும் பணி முடிக்கப்பட்டது. ஜெனரேட்டரும் இந்த மாதத் ற்குள் பழுதுபார்க்கப்படக்கூடும்; இந்த இயந்திரமும்கூட 993 நவம்பர் தொடக்கத்தில் இயங்கத் துவங்கும் என்று நான் ம்மாமன்றத்தில் உறுதி கூறுகிறேன்.

. அனல் மின் உற்பத்தி நிலையங்கள் மூன்றிலும் 0-1993 ஆம் நாளில் உள்ளபடி உள்ள நிலக்கரி இருப்பு றிய விவரங்கள் வருமாறு :—

		இருப்பு (இலட்சம் டன்னில்).	இருப்பு போதுமான நாட்கள்.
தூத்துக்குடி	..	1.82	15
ண்ணூர்	..	0.23	3
மட்டூர்	..	2.61	19
மொத்தம்		4.66	14

அனல் மின் நிலையங்களின் செயல்பாடு.

10. முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 1992-93ஆம் ஆண்டில் எண்ணூர், மேட்டூர். தூத்துக்குடி ஆகிய மூன்று அனல் மின் நிலையங்களின் செயல்பாடு மேற்கொண்டும் மேம்பட்டுள்ளது. அனல் மின் நிலையங்களின் சராசரி செயல்பாட்டுத் திறன் தேசிய அளவான 56 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், இந்த மூன்று அனல் மின் நிலையங்களின் சேர்ந்த செயல்பாட்டுத்திறன் 65.2 சதவீதமாக இருந்தது.

11. தூத்துக்குடி அனல் மின் நிலையம், 1991 ஆம் ஆண்டிலும் மைய அரசின் உற்பத்தித் திறனுக்கான பரிசை பெற்றுள்ளது என்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். இந்த அனல் மின் நிலையம் இதுவரையிலும் தொடர்ந்து ஆறு முறை இப்பரிசினைப் பெற்றுள்ளது. இந்த மின் நிலையம் 1992-93 ஆம் ஆண்டில் 76 சதவீத மின் செயல்பாட்டு திறனை எய்தியுள்ளது. இவ்வாறாக, இம்மின் நிலையம் ஏழாவது முறையாக உற்பத்தித் திறனுக்கான பரிசைப் பெற தகுதி பெற்றுள்ளது.

12. மேட்டூர் அனல் மின் நிலையம் 1992-93 ஆம் ஆண்டில் 64.2 சதவீதம் மின் செயல்பாட்டுத் திறனை எய்தியுள்ளது. இது, இந்நிலையம் இதுவரையிலும் எய்தியதைவிட மிக அதிக அளவாகும். இவ்வாறாக இந்நிலையம் முதன்முறையாக உற்பத்தித் திறனுக்கான பரிசைப் பெறத் தகுதி பெற்றுள்ளது.

13. இந்த மூன்று அனல் மின் நிலையங்களிலும், குறிப்பிட்ட எரிபொருள்-எண்ணெய் பயன்பாட்டு அளவு குறைந்துள்ளது; அதன்மூலம், விலையுயர்ந்த எரி எண்ணெய் சேமிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று அனல் மின் நிலையங்களும் 1992 ஆம் ஆண்டில் குறைந்த அளவு எரி எண்ணெய் பயன்படுத்தியதற்கான/எண்ணெய் பயன்பாட்டைக் குறைத்ததற்கான பரிசைப் பெறத் தகுதி பெற்றுள்ளன.

14. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் துணை இயந்திரங்களின் மின் சக்தி பயன்பாடு 1991 ஆம் ஆண்டு அளவான 8.1 சதவீதத்திலேயே பராமரிக்கப்பட்டது; இந்நிலையம், 1992 ஆம் ஆண்டில் குறைந்த அளவு மின்சக்தியைப் பயன்படுத்தியதற்கான பரிசைப் பெறத் தகுதி பெற்றுள்ளது.

மின் துறையில் எய்தப்பட்ட சாதனைகள்.

15. மின்சார கட்டமைப்பின் மின் உச்சத் தேவை, அதிக அளவான 3,717 மெகாவாட்டை எட்டியுள்ளது. மின்சார கட்டமைப்பின் அன்றாட மின்சக்தி பயன்பாடு 1-4-1993ஆம் நாளன்று முன் எப்போதும் இருந்திராத உயர் அளவான 80.65 மில்லியன் யூனிட்டுகளை எட்டியது.

16. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், கீழே குறிப்பிட்டுள்ளபடி 1993 ஆகஸ்டு வரையில் இவ்வரசு 228.02 மெகாவாட் புதிய உற்பத்தித் திறனை நிறுவியதோடு 8.79 இலட்சம் புதிய மின் இணைப்புகளையும் வழங்கியுள்ளது :—

உற்பத்தித்திறன்.	(மெகாவாட்)
தூத்துக்குடி அனல் மின் நிலையம்— பிரிவு-IV	2.10
நரிமணம் வாயுச் சுழலித் திட்டம் ..	10
புளியங்குளத்திலுள்ள காற்றாலைகள் ..	1.5
கயத்தாறு காற்றாலைகள் விரிவாக்கம் ..	1.55
கயத்தாறு சாலையோர காற்றாலை ..	0.22
மறவக்கண்டி புனல் மின் திட்டம் ..	0.75
பூனாச்சி புனல் மின் திட்டம் ..	2.00
கேத்தனூர் காற்றாலைகள் ..	2.00

வழங்கப்பட்ட மின் புதிய இணைப்புகள்	(இலட்சத்தில்)
வீடுகளுக்கு ..	5.73
வணிகம் சார்ந்தவை ..	0.86
தொழில்களுக்கு ..	0.31
வேளாண்மைக்கு ..	0.83
குடிசைகளுக்கு ..	0.86
ஏனையவற்றிற்கு ..	0.20

17. இவை தவிர, 23.215 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைகள் தனியார் துறையில் தொடங்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மின்சக்தித் தேவை குறித்த முன் கணிப்பு.

18. மைய அரசின் மின் ஆணைக்குழு நடத்திய 14வது மின் சக்தி ஆய்வின்படி, எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதியில் தமிழ்நாட்டில், மின் உச்சத் தேவையும், மின் சக்தித் தேவையும் பின்வருமாறு இருக்கும்:—

காலஅளவு	மின் உச்சத்தேவை (மெகாவாட்)	மின் சக்தித்தேவை (மி. யூனிட்)
எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (1997) ..	5351	30528
ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (2002) ..	7230	41434
பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (2007) ..	9768	56237

19. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலல்லாது, இனி வரும் ஐந்தாண்டுத் திட்ட காலங்களிலும் மின் உச்சத்தேவை மற்றும் மின்சக்தி தேவைகளை நிறைவு செய்ய அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளோம்.

மின் உற்பத்தித்திறனை உயர்த்துவதற்காக மேற்கொள்ளவிருக்கும் கூடுதல் திட்டங்கள்.

20. மின்திட்டங்களை வகுப்பதில் பெரும்பாலும். நிலக்கரி/பழுப்பு நிலக்கரி/வாயு ஆகியவற்றைப் பயன்படுத்தும் அனல் மின்சக்தியையும், மரபுசாரா ஆதாரங்களையும் பெரிதும் நம்பியுள்ளோம். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சிய கால அளவில், கூடுதலாக 785.50 மெகாவாட் நிறுவுத்திறனைப் பெறக் கருதப்பட்டுள்ளது. இதே கால அளவில், மைய அரசு மின் திட்டங்களிலிருந்து இம்மாநிலம் சுமார் 149 மெகாவாட் மின்சாரத்தைப் பெறக்கூடும். அது குறித்த விவரங்கள் பின் வருமாறு:—

மாநில அரசுத்துறை.	உற்பத்தித்திறன் (மெகாவாட்டில்)
வடசென்னை அனல் மின் திட்டம் (நிலை I)	630
பேசின்பாலம் வாயுச்சுழலி மின் திட்டம் ..	120

காற்றாலைப் பண்ணைகள்	..	20
சாத்தனூர் புனல் மின் திட்டம்	..	7.5
கீழ் பவானி புனல் மின் திட்டம்	..	8.0
மைய அரசு மின் நிலையங்களிலிருந்து மாநில அரசின் பங்கு		
நெய்வேலி அனல் மின் நிலையம் II விரிவாக்கம் II	..	59
'கைகா' அணு மின் திட்டம்	..	90

21. இப்பொழுது நடந்தேறிவரும் மின் திட்டங்களைக் குறித்து இங்கே சுருக்கமாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

வட-சென்னை அனல் மின்திட்டம்.

22. இத்திட்டம், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் எண்ணூர் கிராமத்தில் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகளை ஏற்படுத்த வகை செய்கிறது. இத்திட்டத்திற்கான நிலக்கரி ஒரிசா மாநிலத்திலுள்ள கலிங்கா சுரங்கத்திலிருந்து கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிலக்கரியைக் கையாள்வதற்கான புற ஏற்பாடு குறித்த (external coal handling system) செலவு உட்பட, இதற்கு ரூ. 1405 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கான கட்டுமானப் பணிகள் முழு வேகத்தில் நடைபெற்று வருகிறது. முதல் பிரிவு 1994 மார்ச்சில் செயல்படவும் ஏனைய இரு பிரிவுகள் அதன் பின்னர் செயல்படும் வண்ணம் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

23. இத்திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி மொத்தம் 240 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிற்கான இரு கடன்கள் வழங்க அனுமதியளித்து வழங்கி வருகின்றது.

24. இத்திட்டத்தை, நிலை II-ன் கீழ் 500 மெகாவாட் யூனிட் ஒன்றுடனும், நிலை II-ன் கீழ் ஒவ்வொன்றும் 500 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு யூனிட்டுகளுடனும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ. 943 கோடி செலவில் (1991-ஆம் ஆண்டு விலை அடிப்படையில்) II-ஆம் நிலைப் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை மைய மின் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. நிலக்கரி கிடைக்க ஏற்பாடு செய்வதும், சுற்றுச் சூழல் பாதுகாப்புத் துறையின் இசைவைப் பெறுவதும் நிலுவையாக உள்ளன.

பேசின்பாலம் வாயு சுழலி மின்உற்பத்தித் திட்டம்.

25. இத்திட்டம், பேசின்பாலம் மின்உற்பத்தி நிலையத்தில் ஒவ்வொன்றும் 30 மெகாவாட் திறன் கொண்ட நான்கு வாயு சுழலிகள் நிறுவ வகை செய்கிறது. இத்திட்டத்திற்கான தற்போதைய நிலவரப்படியான மதிப்பீட்டுச் செலவு ரூ. 376 கோடி ஆகும். இத்திட்டத்திற்கு 14450 மில்லியன் யென் (yens)-களைக் கடனாக வழங்க ஜப்பானிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. முதலிரண்டு யூனிட்டுகள் ஜப்பானில் உள்ள சுமிடோமா (sumitomo) கார்ப்பரேஷனிடமிருந்தும், மற்ற இரண்டு யூனிட்டுகள் பெல் நிறுவனத்திடமிருந்தும் பெற ஒப்புதல் கடிதம் 1993 மார்ச்சில் வழங்கப்பட்டுள்ளது. முதற்கண் அளிக்கப்பட வேண்டிய முன்பணமும் வழங்கப்பட்டுள்ளது. இந்த யூனிட்டுகள் 1995-96-ல் உற்பத்தியைத் தொடங்கும்.

புனல் மின் திட்டங்கள்.

26. நான்கு புனல்மின் திட்டங்களுக்கான, அதாவது, கீழ் பவானி வலது பக்கக்கரை கால்வாய் (2×4 மெகாவாட்) சாத்தனூர் (1×7.5 மெகாவாட்) பைக்காரா இறுதி நிலை (3×50 மெகாவாட்) பார்சன் பள்ளத்தாக்கு (1×30 மெகாவாட்) கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. கீழ்பவானி வலது பக்கக்கரை கால்வாய்த் திட்டமும், சாத்தனூர் திட்டமும் 1995-96 ஆம் ஆண்டில் மின் உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பைக்காரா இறுதி நிலைத் திட்டமும், பார்சன் பள்ளத்தாக்கு திட்டமும், ஒன்பதாம் திட்ட காலத்தின் முதல் பகுதியில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணூர் துணைத் துறைமுகம்.

27. வடசென்னை அனல்மின் திட்டத்திற்குத் தேவையான நிலக்கரியை ஒரிசா மாநிலத்தில் உள்ள தால்சர் பகுதியிலிருந்து கொண்டு வரவேண்டியுள்ளது. ரூ. 307.58 கோடி அந்நிய செலாவணியுடன் ரூ. 593.90 கோடி செலவில் துணைத்துறைமுகம் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 150.15 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவிற்கு இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க ஆசிய வளர்ச்சி வங்கி ஒப்புக்கொண்டுள்ளது. இந்தத் துறைமுகத்தை அமைக்க ஏற்கெனவே இந்த வாரியம் வாங்கியிருந்த நிலத்தின் ஒரு பகுதி, துறைமுகக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு மாற்றிக் கொடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்தத் துறைமுகம் கட்டி முடிக்கப்படும்போது எண்ணூர், மேட்டூர் அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலக்கரியைக் கையாள இயலும். இந்தப் புதிய துறைமுகம் 1998-99 ஆம்

ஆண்டுவாக்கில் செயல்படக்கூடும். இந்தத் துறைமுகம் செயல்படத் தொடங்கும் வரை வடசென்னை அனல் மின் திட்டத்திற்குத் தேவையான நிலக்கரி, சென்னை துறைமுகம் மூலமாகவும் அனைத்து ரயில் பாதைகள் மூலமாகவும் கொண்டு செல்லப்படும்.

28. வடசென்னை அனல்மின்திட்டத்திற்கும், எண்ணூர், மேட்டூர் அனல் மின் நிலையங்களுக்கும், எண்ணூர் துணைத் துறைமுகத்திலிருந்து நிலக்கரியைக் கொண்டு செல்ல, நிலக்கரியைக் கையாள்வதற்கான புற ஏற்பாடுகள் ரூ. 194 கோடி மதிப்பீட்டில் திட்டம் வகுக்கப்பட்டு, ஒப்புதலுக்கு மைய மின் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

காற்றிலிருந்து மின் உற்பத்தி.

29. தமிழ்நாட்டில் காற்று விசையிலிருந்து மின் உற்பத்தி செய்வதற்கான வளவாய்ப்புகள் அதிகமாக உள்ளன. கன்னியாகுமரி, திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டங்களில் உள்ள ஆரல்வாய்மொழி, கணவாய், திருநெல்வேலி—கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் உள்ள செங்கோட்டை கணவாய், திண்டுக்கல்—அண்ணா, கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் உள்ள பாலக்காடு கணவாய் ஆகிய பகுதிகளில் காற்று விசை வளவாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இம்மாநிலத்தின் இந்தக் காற்றுவிசை வள—வாய்ப்புகளைப் பயன்படுத்தி, குறைந்தது சுமார் 2000 மெகாவாட் மின் உற்பத்தி மேற்கொள்ள இயலும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள அடிப்படை வசதிகளைக் கொண்டு, உடனடியாக 300 மெகாவாட் திறனளவுக்கு மின்சக்தியைப் பெற இயலும். 31—3—1993ஆம் நாள் நிலவரப்படி, தமிழ்நாடு மின்வாரியம் இம்மாநிலத்தில் நிறுவியுள்ள காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்களின் மொத்த திறன் 17.355 மெகாவாட் ஆகும்.

30. 1993–94-ஆம் ஆண்டில் கேத்தனூரில் (கோயம்புத்தூர் மாவட்டம்) 2 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலை மின் உற்பத்தி நிலையம் இயக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்நாள் நிலவரப்படி மாநிலத்தின் மொத்த திறன் 19.355 மெகாவாட் ஆகும்.

31. தமிழ்நாட்டில்தான் காற்று விசை மூலம் அதிக அளவில் மின் சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது என்பதையும், அதற்காக மூன்றாம் முறையாக இவ்வாண்டும் சிறப்பு விருதை அடைய உள்ளோம் என்பதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

32. தனியார் துறையினர், காற்றுமூலம் மின் உற்பத்தி செய்ய ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்நாள் நிலவரப்படி உள்ள மொத்தத் தனியார் காற்றாலைகள் 114 ஆகும். இவற்றின் மொத்த உற்பத்தித் திறன் 28 மெகாவாட் ஆகும்.

33. 1993-94 ஆம் ஆண்டு இறுதிவாக்கில் அரசுத்துறை, தனியார்துறை ஆகிய இரு துறைகளிலும், மொத்தம் 75 மெகாவாட் மின்சக்தி காற்றுவிசை மூலம் உற்பத்தி செய்யப்படும்.

மின் உற்பத்தியில் தனியார் துறையினர் பங்கு.

34. மின் உற்பத்திக்கு பெரிய அளவில் மூலதன முதலீடு செய்யவேண்டியுள்ளது. புதிதாக ஒரு மெகாவாட் மின் உற்பத்தித் திறனுக்கான மின் உற்பத்தி சாதனங்களை நிறுவ, சராசரியாக சுமார் ரூ. 3 கோடி முதலீடு தேவைப்படுகிறது மிகப்பெருமளவில் முதலீடுகள் தேவைப்படுவதைக் கருதிப்பார்க்கையில், மின் உற்பத்திப் பணியில் தனியார் துறையினரைப் பங்கு பெறச் செய்வது தவிர்க்க முடியாததாக ஆகியுள்ளது. மின் உற்பத்தித் துறையில், தனியார் பங்கு பெற வகை செய்வதற்காக, நிதி, சட்ட விதிமுறைகளைத் தளர்த்தி மத்திய அரசு 1991 செப்டம்பரில், 1910 ஆம் ஆண்டு இந்திய மின்சார சட்டத்தையும், 1948ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தையும் திருத்தியது. மின் உற்பத்தியில் தனியார் துறையினருக்கு ஊக்கம் அளிக்க, மத்திய அரசும், மாநில அரசுகளும் பல்வேறு ஊக்கச் சலுகைகளை அறிவித்துள்ளன.

மேற்கூறிய கொள்கையின் அடிப்படையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி, தனியார் துறையிடம் ஒப்படைப்பதற்காக, மொத்தம் ரூ. 11,800 கோடி முதலீட்டுடன், 3,050 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட பின்வரும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

திட்டம்.	திறனளவு (மெ. வா.)	மதிப்பீட்டுச் செலவு (ரூ.கோடியில்)
(i) ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்திட்டம்	1500	7000
(ii) கடலூர் அனல் மின்திட்டம் ..	1000	3000
(iii) பிள்ளைப்பெருமாள் நல்லூர் வாயுச் சுழலித் திட்டம் ..	300	1000
(iv) திருமுட்டம் பழுப்பு நிலக்கரி மின்திட்டம்	250	800

35. தமிழ்நாட்டில் மின் திட்டங்களை மேற்கொள்ள தனியார் துறை ஆர்வம் காட்டுவதால் அரசு, நிலக்கரியை அடிப்படையாகக்கொண்ட மேலும் இரண்டு அனல்மின் நிலையங்களை, அதாவது தூத்துக்குடி அனல்மின் திட்டம் நிலை IV (1 x 500 மெ. வா.) வடசென்னை அனல் மின் திட்டம் நிலை III (2 x 500 மெ. வா.) ஆகிய இரண்டையும் தனியார் துறையிடம் ஒப்படைக்கக் கருதியுள்ளது. இவைதவிர, 77.35 மெகாவாட் திறன் கொண்ட சிறிய/மிகச் சிறிய 10 புனல் மின் திட்டங்களை தனியார் துறையிடம் ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, எங்கள் அரசு, 9 ஆம், 10 ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலங்களுக்கான புதிய திட்டப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

புதிய மத்திய அரசுத் திட்டங்கள்.

36. தமிழ்நாட்டில் பல்வேறு மத்திய அரசு மின்திட்டங்களைச் செயலாக்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது குறித்து நம்முடைய அரசு பெரிதும் கவலை கொண்டுள்ளது. நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டும் பணியைத் தொடங்குவது குறித்தும் அதோடு இணைந்த மின் உற்பத்தித் திட்டத்தைத் தொடங்குவது குறித்தும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம்.

37. கூடங்குளம் அணு மின் திட்டத்தில் நிதி பங்கேற்பதற்காக இவ்வரசு ஏற்கெனவே இசைவு தெரிவித்துள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்குவது குறித்து மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

38. தென்னக எரிவாயு மின் தொகுப்புத் திட்டம் விரைவில் முடிக்கப்படவேண்டுமானால், தென்னக மாநிலங்கள் ஒன்று சேர்ந்து நிதி பங்கேற்பு செய்ய வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி கருத்துத் தெரிவித்துள்ளார்.

மின் அனுப்புகை.

39. மின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது மட்டும் போதுமானதல்ல என்பதையும், மின் பயனீட்டாளர்களுக்கு தரமான முறையில் மின் சக்தி வழங்கப்படவேண்டுமானால், மின் அனுப்புகை-வழங்கல் அமைப்பு விரிவாக்கப்பட வேண்டியதும் அவசியம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இக்கருத்தை மனத்திற் கொண்டு, நம்முடைய அரசு, இதன் பொருட்டு போதிய அளவு நிதி ஒதுக்க, உரிய முக்கியத்துவம் அளித்துள்ளது.

40. 1992-93-ல், 30 புதிய துணை மின் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. 482 கி. மீ. புதிய வெகு உயரழுத்த மின் கம்பித் தொடர்களுக்கு மின்விசையூட்டப்பட்டுள்ளது. மேலும், 93 துணை மின்நிலையங்களில், மின் அழுத்த மாற்றி 667 எம்.வி.ஏ. (M.V.A.) கூடுதல் திறனுடன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

41. நடப்பாண்டில், 41 புதிய துணைமின் நிலையங்களை அமைக்கவும், 823 கி. மீ. வெகு உயரழுத்த மின்கம்பித் தொடர்கள் நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

42. மின்கம்பித் தொடர் இழப்பைக் குறைப்பதற்காகவும், மின் வழங்கல் அமைப்பில், மின்னழுத்த நிலையைச் சீராக்கவும் வாரியம் துணை மின் நிலையங்களிலும், மின் கம்பித் தொடர்களிலும் ஷண்ட் கெபாசிட்டர்களை (Shunt Capacitors) நிறுவும் பணியினை விரிவான முறையில் மேற்கொண்டுள்ளது. இந்த ஆண்டில், 279 எம்.வி. ஏ.ஆர்.(MVAR) திறன் கொண்ட ஷண்ட் கெபாசிட்டர்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

மின் பகிர்வு.

43. புதிய மின் இணைப்புகள் கொடுப்பதில், 1992-93ல், பல்வேறு வகைகளின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கிற்கும் மிகையாக மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

	இலக்கு	சாதனை
விவசாய மின் இணைப்புகள்	40,000	40,055
குடிசைகளுக்கான மின் இணைப்புகள்	40,000	40,109
புதிய தொழிற்சாலைகள் (உயர் மற்றும் தாழ் மின் அழுத்தம்)	14,100	14,375
கிராம மின் மயமாக்கம்	31-3-92 அன்று உள்ளவாறு கிராமங்கள் அனைத்திற்கும் ஏற்கெனவே மின்னிணைப்பு கொடுக்கப்பட்டு விட்டது.	

1993-94 ஆம் ஆண்டிற்கான திட்டப்பணிகள் வருமாறு :

விவசாய மின் இணைப்புகள்	40,000

குடிசைகளுக்கான மின் இணைப்புகள்	40,000
தொழிற்சாலைகள் (உயர் மற்றும் தாழ் மின் அழுத்தம்)	14,200
தெரு விளக்குகள் (தன்னிறைவுத்திட்டம்)	1,37,280
சிற்றூர்கள் மின்மயமாக்கம்	20

44. சுய நிதியுதவித் திட்டத்தின்கீழ், இதுவரையில் 4,419 வேளாண் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 4,377 விண்ணப்பங்களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளன.

தொழில்கள்.

45. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்த புதிய தொழில் கொள்கைக்கிணங்க, பின் வரும் சலுகைகள், புதிய தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப் படுகின்றன.

(அ) மின் கட்டணத்தில்

முதலாண்டு ..	40 சதவீதம்.
இரண்டாம் ஆண்டு ..	30 சதவீதம்.
மூன்றாம் ஆண்டு ..	20 சதவீதம்.

(ஆ) மேலும் விரிவாக்கப் பிரிவுகளும் புதிய தொழிற்சாலைகளுக்குண்டான மின்கட்டண சலுகைகளைப் பெறத் தகுதியுடையவையாகும்.

(இ) முற்றிலும் ஏற்றுமதியை (100 சதவீதம்) நோக்கமாகக் கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு வருங்காலத்தில் செயலுக்குக் கொண்டுவரப்படும் மின்வெட்டுகளிலிருந்து முழு விலக்குப் பெறும்.

(ஈ) புதிய தொழிற்சாலை உரிமையாளர்கள் மின் இணைப்பிற்கான மதிப்பீட்டுத் தொகையினை செலுத்த முன்வருவார்களேயானால் அப்புதிய தொழில் பிரிவுகளுக்கு 3 மாத காலத்திற்குள் மின் இணைப்புகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

46. சர்க்கரை ஆலைகளிலும் இரசாயனத் தொழிற்சாலைகளிலும் மின் உற்பத்தி செய்வதற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. சேத்தியா தோப்பு மற்றும் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ஒவ்வொன்றும் 5 மெ. வா. திறன் கொண்ட மின் உற்பத்தி சாதனங்கள் செயல்படுகின்றன. அவை உற்பத்தி செய்யும் மின்சாரம் மின் கட்டமைப்பிற்கு வழங்கப்படுகிறது. இந்த சர்க்கரை ஆலைகள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை வாரியம் மின்சக்தியில் 2 சதவீதம் மின்சாரம் கொண்டு செல்லும் செலவாகக் கழித்த பிறகு, உயரழுத்த மின் கட்டணம் 1 வீதத்தில் வாங்கப்படுகிறது. மின் உற்பத்தி செய்யும் இந்த சர்க்கரை ஆலைகளுக்கு மின் உற்பத்தி வரிவிதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. அவை மின்சக்தியை சேமித்து வைத்து, மின் கட்டமைப்பு மூலமாக ஏனைய மின் பயனீட்டாளர்களுக்கு விற்பனை செய்ய அனுமதிக்கப்படுகின்றன. வருங்காலத்தில் மேலும் சில சர்க்கரை ஆலைகள் 25 மெ. வாட் திறன் கொண்ட மின் உற்பத்தி சாதனங்களை நிறுவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னைப் பெருநகர் மின் உற்பத்திப் பெருக்கம் மற்றும் தர மேம்பாட்டுத் திட்டம்.

47. சென்னைப் பெருநகர் பகுதியில் மின் உற்பத்தியைப் பெருக்கி, மின்சாரத்தை எடுத்து செல்லுதல் மற்றும் வழங்குதல் பணியின் நிலை உயர்த்தும் பொருட்டு ரூ. 225 கோடி மதிப்பீட்டுச் செலவில் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி, ரூ. 150 கோடி நிதியுதவி வழங்குகிறது. முதல் கட்டமாக 230 கே. வி. எக்ஸ்.எல்.பி.இ. நிலத்தடி புதை வடங்களை அமைத்தல், 230 கே. வி. வாயு காப்பிடப்பட்ட துணை மின் நிலையம் அமைத்தல், அதிநவீன விநியோகக் கட்டுப்பாட்டு மையம் ஒன்றை ஏற்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் சில சிறப்பு அம்சங்களாகும். இத்திட்டம் 1994-95இல் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மின்கம்பித் தொடரில் ஏற்படும் இழப்பு.

48. 1992-93ஆம் ஆண்டில் அரசும், வாரியமும் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக இம்மாநிலத்தில் மின் கம்பித் தொடரில் ஏற்படும் மின்சார இழப்பு 17.5 சதவீதகமாகக் குறைந்துள்ளது என்பதை அறிவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இது, தேசிய சராசரியான 22 சதவீதத்தைவிடவும் குறைவு ஆகும். மின்கம்பித் தொடரில் ஏற்படுகிற மின் இழப்புகளை 15 சதவீத அளவிற்குக் குறைக்க, வாரியம் திட்டம் ஒன்றை வரைந்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவி அளிப்பது முக்கிய தடையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும், நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1993 அக்டோபர் 26]

1992-93 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத்திட்டச் சாதனைகள்.

49. மத்திய திட்டக்குழு ரூ. 457.90 கோடி திட்ட முதலீட்டிற்கு அனுமதி வழங்கியது. இதனைத் தவிர, இந்திய அரசின் மின் நிதி கழகத்திடமிருந்து ரூ. 121.43 கோடி கடனுதவி பெறவும் திட்டமிடப்பட்டது. இதில் மின் நிதிக் கழகத்திடமிருந்து பெற்ற கடன் தொகையும் சேர்ந்து ரூ. 582.50 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டவற்றுடன் ஊரக மின் வசதிக் கழகத்தின் உதவியுடன், திட்ட முதலீட்டிற்கு அப்பாற்பட்டு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும் திட்டத்தை வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 41.70 கோடி செலவிடப்பட்டுள்ளது. சிறப்பு ''தன்னிறைவுத் திட்டத்தின் கீழ்'' தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்க, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அரசு ரூ. 13.82 கோடி நிதி உதவி வழங்கியுள்ளது. அத்தொகை முழுவதும் செலவிடப்பட்டு விட்டது. வாரியத்தின் திட்டப்பணிகள், மற்றும் திட்டம் சாராப் பணிகள் அனைத்தையும் சேர்த்து மொத்தம் ரூ. 647.90 கோடி மூலதனச் செலவு செய்யப்பட்டது. இது எந்த ஆண்டிலும் இல்லாத உயரளவாகும்.

1993-94 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத்திட்டம்.

50. 1993-94 ஆம் ஆண்டிற்கான திட்டத்தின்கீழ் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ. 541.50 கோடியாகும். மின் நிதி கழகத்திடமிருந்து ரூ. 88.19 கோடி கடனுதவி பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர, வாரியம், வேளாண் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக திட்டம் சாராப் பணிகளின் கீழ் ஊரக மின் வசதிக் கழகம், தேசிய வேளாண் ஊரக வளர்ச்சி வங்கிகளிடமிருந்து ரூ. 39.00 கோடி நிதி உதவி பெற உத்தேசித்துள்ளது. ''சுய நிதித்திட்டத்தின்'' கீழ் சுமார் 2,000 வேளாண் பெருமக்கள் மின் இணைப்பு வசதியினைப்பெற முன் வருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக ரூ. 5 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. சிறப்பு ''தன்னிறைவுத் திட்டத்தின்'' கீழ் தெருவிளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ரூ. 3 கோடி நிதி உதவி வழங்கும். தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், மரபுசாரா மின்சக்தி ஆதார அமைச்சகம் ஆகியவற்றிடம் மொத்தம் ரூ. 11 கோடி நிதியுதவி பெற்று காற்றாலை பண்ணைப் பணிகள் நிறைவேற்றப்படும். மொத்த மூலதனச் செலவு 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 647.90 கோடியாக இருந்ததற்கு மாறாக 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 687.69 கோடியாக இருக்கும்.

வருவாயும்-வருவாய் இனச் செலவுகளும்.

51. 1991-92 ஆண்டில் வருவாய் இனச் செலவுகள் ரூ. 1774.15 கோடியாக இருந்தது. வருவாய் இன வரவுகள் ரூ. 2027.04 கோடியாகும்; அரசிடமிருந்து பெற்ற உதவித்தொகை ரூ. 350 கோடியாகும்.

52. 1992-93 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வருவாய் இனச் செலவுகள் ரூ. 2500.24 கோடியாகும். வருவாய் இன வரவுகள் ரூ. 2067.16 கோடியாகும். 1992-93ஆம் ஆண்டில் வருவாய் இனவரவுகளுக்கும் வருவாய் இனச்செலவுகளுக்குமிடையேயான இடைவெளி அரசு உதவித்தொகையைச் சேர்க்காமல் ரூ. 433.08 கோடியாகும்.

53. 1993-94 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் படியான வருவாய் இன செலவுகள் ரூ. 3029.96 கோடியாகும்; வருவாய் இனவரவுகள் ரூ. 2173.00 கோடியாகும். அரசு உதவித்தொகையைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் ரூ. 856.96 கோடி பற்றாக்குறை ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசு மின்கட்டண இழப்பீட்டுத் தொகையாக வழங்கும் ரூ. 350 கோடி, மற்றும் 1-3-93 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்த திருத்த மின்கட்டணங்கள் மூலம் கிடைக்கும் கூடுதல் வருவாய் ஆகியவற்றால் இந்தப் பற்றாக்குறை ரூ. 181.26 கோடியாகக் குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பருவமழை சாதகமாக இருந்து மேட்டூர் அணைக்கு போதுமான தண்ணீர் திறந்து விடப்படுமானால், புனல் மின் உற்பத்தி அதிகரித்து அதன் காரணமாக வருவாய் பற்றாக்குறை மேலும் குறையலாம்.

மின்கட்டண திருத்தம்

54. மத்திய அரசு, 17-2-93 முதல் நிலக்கரியின் விலையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 35 முதல் ரூ. 68 வரை உயர்த்தியுள்ளது. இரயில்வேயும், 1-4-93 முதல் சரக்குக் கட்டணத்தை உயர்த்தியுள்ளது. மேற்குறிப்பிட்ட உயர்வுகள் காரணமாக வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 74 கோடி கூடுதலாகச் செலவிட வேண்டியுள்ளது. மின்சக்தியினை வாங்கும் வகையிலான செலவும், ஏனைய வருவாய் இனச் செலவுகளும் அதிகரித்துள்ளது. மேற்குறிப்பிட்ட கூடுதல் செலவுகளைச் சரிக்கட்டவும், வாரியத்தின் வருவாய் இன வரவிற்கும் செலவுக்குமிடையேயான இடைவெளியைக் குறைக்கவும், வேளாண்மை, மற்றும் குடிசைகளுக்கான மின் இணைப்புகள் தவிர ஏனைய இனங்கள் அனைத்திற்குமான மின் கட்டணங்கள் 1—3—93 முதல் திருத்தியமைக்கப்பட்டன. வேளாண்மை பணிகளுக்கும் குடிசைகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். ஒரு யூனிட் தாழ்வழுத்த மின்சாரம் உற்பத்தி செய்ய ரூ. 1.62 செலவாகிறது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. வேளாண்மைப் பணிகளுக்கு இலவசமாக மின்சக்தி வழங்குவதன் காரணமாக மட்டும் 1993-94 ஆம் ஆண்டு ரூ. 865 கோடி வருவாய் இழப்பு ஏற்படுகிறது. மின்கட்டண இழப்பீட்டுத் தொகையாக ரூ. 350 கோடி வழங்குவதன் மூலம் இந்த இழப்பின் ஒரு பகுதியை அரசு சரிகட்டுகிறது.

1993 அக்டோபர் 26]

பணியாளர்.

55. வாரியம், தொழிலாளர்களுடன் நல்லுறவினைப் பேணி வருகின்றது. 1991-92 ஆம் ஆண்டில், வாரியம் 100 ரூபாய் அல்லது சம்பளத்தில் 8.33 சதவீதம் இதில் எத்தொகை கூடுதலோ அதனை ஊதியக் கொடையாகவும், சம்பளத்தில் 6.42% அல்லது 825 ரூபாய் இதில் எத்தொகை கூடுதலோ அதனை கருணைத் தொகையாகவும் வழங்கியது. வாரியத்தின் சுமார் 66,000 பணியாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட தொகைகள் வழங்கப்பட்டன. 1992-93 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை, கருணைத் தொகை விரைவில் அறிவிக்கப்படும்.

56. வாரியப்பணியாளர் சம்பளவீதம், படிகள் 1-12-92 முதல் திருத்தியமைக்கப்பட வேண்டியுள்ளன. சில வகைப் பணிகளில் பணிப்பளுவையும் திருத்தியமைக்க வேண்டியுள்ளது. வாரியம் தொழிற்சங்கங்கள்/பணியாளர் சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றது. அவை விரைவில் தீர்த்து வைக்கப்படும் என்று நான் உறுப்பினர்களுக்கு உறுதியளிக்கிறேன்.

57. 1992-93 ஆம் ஆண்டில், 488 ஒப்பந்த தொழிலாளர்கள் வாரியத்தில் உதவியாளர்களாக (Helpers) நியமிக்கப்பட்டனர். இவர்களைத் தவிர, 36 உதவிப் பொறியாளர்கள் (மின்சாரம்) 3 உதவிப் பொறியாளர்கள் (இயந்திரவியல்) 146 தட்டச்சர்கள், 23 சுருக்கெழுத்து தட்டச்சர்கள்; 76 தொழில்நுட்ப உதவியாளர்கள் II நிலை/மின் பிரிவு, 24 தொழில் நுட்ப உதவியாளர்கள்/நிலை II இயந்திரவியல் பிரிவு, 5 மின்பளுதூக்கி பணியாளர்கள் (உடல் ஊனமுற்றோர்) நியமிக்கப்பட்டுள்ளனர். இறந்துபோன பணியாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 599 பேர் பல்வேறு நிலைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். வடசென்னை அனல் மின் திட்டம், கீழ் மேட்டூர் புனல் மின்திட்டம் ஆகியவற்றிற்கு நிலம் கையகப்படுத்தியதன் காரணமாக இடம் பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த 115 பேருக்கு வேலை கொடுக்கப்பட்டது.

58. பல்வேறு அலுவலகங்களில், பல்வேறு துறைகளில் பணியாற்றும் வாரியத்தின் அதிகாரிகளும், பணியாளர்களும் நேர்மையுடனும், கடமைப் பற்றுடனும், மெச்சத்தக்க வகையிலும் பணியாற்ற வேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றார்கள். இவ்வாறு பணியாற்றுவோரை பாராட்ட வேண்டியது அவசியமாகும். இந்த நோக்கத்திற்காக வாரியம் மெச்சத்தகும் சிறப்பான பணிகளுக்கு பதக்கம் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. 1992 ஆம் ஆண்டிற்கு பதக்கங்கள் பெறுவோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். விரைவில் பதக்கங்கள் வழங்கப்படும்.

59. பெரும் நோயினால் பாதிக்கப்படும் வாரியப் பணியாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் உதவுவதற்காக பணியாளர் சுகாதார நிதி ஒன்றை வாரியம் ஏற்படுத்தியுள்ளது. இதற்கு வாரியம் ரூ. 10 இலட்சம் வழங்கும். ஒவ்வொரு பணியாளர்களிடமிருந்தும் ஆண்டு தோறும் 5 ரூபாய் வசூலிக்கப்படும்.

60. 1-7-86 ஆம் ஆண்டுக்கு முன்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற, நிர்வாகம் சமபங்கு வழங்கும் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ்வரும் பணியாளர்களுக்கும் (சாதாரணமாக ஓய்வூதியச் சலுகை பெறத் தகுதியற்றவர்கள்) வாரியம் ஓய்வூதிய சலுகைகளை நீட்டித்துள்ளது. இத்திட்டத்தின்படி, இறந்து போனவரின் குடும்பத்தைச் சார்ந்துள்ளவருக்கு மாதந்தோறும் 150 ரூபாய் ஓய்வூதியம் படியுடன் வழங்கப்படும்.

61. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்முறை பற்றியும் மின்வெட்டு இல்லாத தமிழகத்தை உருவாக்குவதற்கான எதிர்காலத்திட்டங்களைப் பற்றியும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தொட்டுக் காட்டியுள்ளேன். மேற்குறிப்பிட்ட இலக்கை அடைதவற்கு தூண்டுகோலாய் அமையக் கூடிய நல்ல பல கருத்துரைகளை இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்கிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS